2 [illegible]

[illegible]

[illegible]

திருச்சிற்றம்பலம்

[illegible]

[illegible]

திருவாய்மலர்ந்தருளிய

தெளிவிலக்கம் மூலமும்,

திருப்போரூர்ச்

சிதம்பர சுவாமிகள்

அருளிச்செய்த உரையும்.

M.A.

திருவருட்பிரகாச வள்ளலாரகிய

சிதம்பரம். இராமலிங்க சுவாமிகளின்

நிரம்பிய அகவற்பா முறை பதிப்பித்து.

B. இராஜரத்தினம் பிள்ளை, எம்.ஏ.,

திருமகள் விலாசம் அச்சுக் கூடிலையம்,

கும்பகோணம்.

கும்பகோணம்] 1952 [விலை ரூ. 3.

உள்ளடக்கம்

எண்	அதிகாரம்	பக்கம்
1	சிறப்புப்பாயிரம் உரை ...	... 1
2	காப்புச் செய்யுள்கள் ...	... 25
3	கைதாகமப் பொதுவிலுபதேசம் ...	27
4	சத்திரிபாதத் துய்கும ரொழிலி	... 114
5	பேதகக் கூற்றி	... 153
6	வினையக் கூற்றி	... 191
7	சரியைக் கூற்றி	... 214
8	கிரந்தி விளக்கம்	... 233
9	துறவு	... 254
10	அருளைத்தன்னை	... 290
11	வாதனைமலங்களிற்றன்னை ...	... 349
12	நிலை யியல்பு	... 361
13	செய்யுள் முதற்குறிப்பகராதி	... 381

தழிவிலொடுக்கம்

சிறப்புப்பாயிரம்

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன் [ளத்
வள்ளன்மலர்த் தாடலேமேல் வைத்துரைத்தான்-உள்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண
வொழிவி லொடுக்கநூ லோர்ந்து.

உரை

இச்செய்யுள் கருதிற்றியாதோ வெனின், இந்நூன் முகத்து ஆசிரியர் பெயர் முதலியவற்றைக் குறித்து நிற்றலிற் சிறப்புப்பாயிர வொழுக்க முணர்த்தல் கருதிற் றென்க.

"வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த்தாடலேமேல் வைத்து" —வள்ளலார் என்னுந் திருப்பெயருடையவர் ஞாநாசாரிய நிருபராகிச் சமயவாதிகள் தருக்கச் செருக்குகள் பிற்பட்டொழியப் போருணறியான் வெற்றிக்கொண்டு சீகாழியென்னுந் திருநகர்க் கண்ணே மெய்ந்நெறி விளங்க வீற்றிருந்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையாரது வள்ளற்றன்மைபுடைய மலர்போலுந் திருவடிகளைத் தமது தன்முடிக்கண் ஓர் பொன்முடியாக வணிந்து,

"ஓர்ந்து உள்ளத் தழிவிலடுக்குந் தேனை யன்பரெலா
மூன்ன வொழிவிலொடுக்க நூலுரைத்தான்"—அத்திரு
வடிகளின் அருட்டுணையால் தத்துவங்களனைத்துஞ் சட
மென்றோர்ந்து உணர்ந்து அவற்றைக் கடந்து தற்காட்சி
போடு திருவருட் காட்சியுஞ் செய்து அங்ஙனம் வாதனை
யான் அசைந்தெழும் போதம் தோற்றுது அதனை அத்திரு
வரு ளொளியின் அடக்கி ஆண்டு மேன்மேலும் எழாநின்ற
சிவானந்தத் தேனைத் தாம் அநுபவஞ் செய்தவாறு அதன்
கண் அன்புள்ள பக்குவருஞ் செய்தற்பொருட்டு அச் சிவா
னந்தாநுபவ அந்தரங்கமெல்லாம் வெளிப்பட்டு விளங்க
ஒழிவிலொடுக்க மென்று ஓர் உபதேச முறையை யுரைத்
தருளினர்—என்பது பொருள்.

வள்ளல் என்னும் பெயர் ஆசிரியர்க்குத் தாம் முன்
னிருந்த கிரியாசாரிய நிலைக்கண் அவ்வாசிரிய மரபின்
வழித்தாய் வந்த காரண அபிடேகச் சிறப்புப் பெயரென்க.
அல்லதூஉம் பின்னர் ஞாநாசாரிய நிலைக்கண் தமதருள்
ஞான நோக்கான் இயைந்த கண்ணுடைய னென்னுங் காரண
விசேடணை மேற்கொண்டு நின்ற இவ்வள்ள லென்னும்
பெயர் சண்டு அவ்விசேடணம் இசையெச்ச நிலையினிற்ப
நின்றதெனினு மமையு மென்க. இஃது வினை பண்பு
முதலிய அடுத்த தொகை நிலைச்சொற் றொடராகாது
தொகா நிலையாய்த் தனைத்தொடர் பயனிலை அண்மைப்
பொரு ளுணர்ச்சியின்றி இடையிட்டு நிற்கத்தான் செய்
யுண் முதற்கண் தனித்திருந்தமையின் ஆற்றலின்றாலோ
வெனின், அற்றன்று; கொடை மடங் குறித்த குணங்
காரணமாகவந்த இவ் வள்ளலென்னும் பெயர் தன்னுறுப்பு
களுட் கொடை குணம் புகழ் அழகு வளமென்னும் நல்

வகை குறித்த பல்பொருட் பகுதியான வண்மையென்னு முதலுறுப்பான் ஆசிரியர்க் குளவாய அக்கொடை முதலிய அருட்குணங்களைக் குறிப்பிற் புலப்பட விரித்தலின் பொருளாற்ற லுண்டென்க. அல்லதூஉம் இப்பெயர் உயர்பொருட் கிடனு யுடனிலைக்கூட்டாய் ஒரு தெறியசைத்தா யோரினந்தழுவிப் பல்வகைக் குறிப்பிற் படர்ந்து முற்றியையு வண்ணப் பெருஞ்சொல்லாக நிற்றலின் சொல்லாற்றலு முண்டென்க.

ஆயின் இவ்வாசிரியர் பெயர் இச்செய்யுளின் இடைகடைகளின் ஒன்றில் நிறுத்தாது முதலடி முதற்சீர் எதுகைத் தொடைக்கண் நிறுத்தற்குறித்தது யாதோவெனின், ஒன்றிரண்டெனக்கொண்டு உறுமறை யாகமென்றிரு மூடின் கடுநிலை கடாஅய்ப் பலம்பெறு தத்துவ நியதியிற் போந்து உண்மலர்தெறு மறிஞர் வாழ்த்திப்பாவும் ஆசிரியர் சன்மார்க்க முதலிய மார்க்க நான்கனுள் தலைமையிற் றலைமையாய் உத்தம சன்மார்க்கத்தினை யென்பது குறித்தவென்க. இங்ஙனம் உத்தம சன்மார்க்கத்தினர் என்பதை ஆசிரியர் கூறிய * "இது வென்றதெல்லாம் பொய்யென்று" னென்னுந் திருவெண்பாவாற் காண்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

தருமனென்பது திருஞான சம்பந்தப் பிள்ளையார்க்குச் சிறப்பிற் சிறப்பாய காணப்பெயராய் நின்று, ஓதியுணர்ந்து பன்னுட் பல சாதனக்களின் முயன்று முயன்று ஆசாரியத் தன்மை யொருவாறு அநிதிற்கிடைப்பப் பெற்றும் ஓரோர் காலங்களில் அவத்தை வயப்பட்டு

* ஒழிவிலொடுக்கம் : பொதுவிலுபதேசம் - சச.

மயங்கும் மற்றையாசாரியர் போலாது ஓதாமல் வேதாக மாதிகளை முற்று முணர்ந்து இறைப்போதும் ஓர் சாத னங்களின் முயன்றதின்றி ஞாநாசாரிய அருளிலக்கணங்க ளனைத்தும் தாமே தம் பால் நிரம்பி நிற்ப அமர்ந்த னென்பதூஉம், ஓதிபுணர்ந்த அவ்வாசாரியர்க்கெல்லாம் அவ ராவ றிவின்கண் அருளுருவாய் நின் றறிவித்தும் ஆசாரிய வுருவாய் வெளிநின் றநுக்கிரகித்தும் நின்றனை யென்பதூ உம், திருநோக்கஞ் செய்தல் முதலிய அறுவகைத் தீக்கை யானு மன்றித் தமது திருவுருவைக் காண்டல் நினைத்தன் மாத்திரையே பக்குவமில்லாரும் பக்குவமாய்ப் பயன்பெற நின்ற திருவருட் பெருமைய னென்பதூஉங் குறித்தவதென் றுணர்க. இங்ஙனம் ஓதாமல் வேதாகமாதி யுணர்ந்தமை முதலியவற்றை ஆசிரியர் கூறிய * "தன்மையு முன்னிலையு" மென்னுந் திருவெண்பாவாற் காண்க.

அல்லதூஉம், குருராயனென்பது வாதுவென்ற சம் பந்தனென்பதற்குமே னிற்கவைத்த விதப்புக் குறிப்பாற் பிள்ளையார் இவ் வவதாரத்தின்மேனின்ற வவதாரத்தினுங் குமாரசற்குருவாய் அனுக்கும் அகத்தியனுர்க்கும் உபதே சித்தருளிய ஆசாரியத் தலைமையுங் குறித்தனைக் கொள்க.

அருணகிரிநாதர்

தென்ன வனங்கனுஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்ன வனங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
றென்ன வனங்கதன் னீற்றும் நிருத்திய தென்ன வின்னங்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே.

* ஒழிவிலொடுக்கம் : பொதுவிலுபதேசம் - சூ.

என்றதனுற் பிள்ளையார் இவ்வவதாரத்திற்கு மேனின்ற அவதாரத்தில் குமார சற்குருவென்பது காண்க.

கல்லாடம்

"உழன்மதிற் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கின்ன் றேறத்தக் குருபொழி லைவத்தோய்.
குறுமுனி தேற வெடுமறை விரித்தோய்."

சித்தியார்

"அருமறையா கமங்க ளருங்கலை நூ றெரிந்த
வகத்தியனுக் கோதத்துணைக்கு மருட்குருவாங் குருவை."

என்பவைகளா லாளர்க்கு மகத்தியனர்க்கு மூபதேசித்த ஆசாரியத் தலைமையை யுணர்க.

ஆயின் குருவேவ்தனென்றது குராயனென்றது எது குறித்தற்கோவெனின், கான்கன் வேற்றுமையா னடுத்து மிக்குயர் நெறிப்பொருண்மையின் வந்த காரணச் சிறப்பொருதலைத் தொடர்மொழிப் பெயராய இக்குராய னென்பதன்கட் குருவென்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும், ராயனென்ப தன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதியின்றி ஆரிய வியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் வந்து இருவகை யியலுங் கோடலின் இதனைத் தம்பெயராக வுடைய பிள்ளை யாருந் தமிழ்நூல் வடநூலென்னு மிருவகை நூற்கு மூரியா ரென்பது குறித்தற்கென்க. ஆசிரியர் * "மறைப்புலவன் றமிழ்க்குரிசில் சீகாழிச் சம்பந்த" னென்றதனு மிருவகை நூற்கு மூரியாரென்பது காண்கவென்க. அல்லதூஉம்,

* ஒழிவிலொடுக்கம்: பொதுவியற்பதேசம் - கக.

பொருள் வேறுபடாது சிறிதே வடிவம் வேறுபட்டு நின்ற குருராயினென்பது தன்னை உள்ளுணர்ந்து நோக்கினார்க்கு இலுப்பை காய்போல் ஐ வென்னும் உயிர்மெய்யோடிருந்த தன் முன்வடிவம் உட்கொண்டு விளங்கக்காட்டி நிற்கின்ற தாகலின், இதனையுடைய பிள்ளையாருந் தமதுகடவுட் டன்மை வேறுபடாது உத்தமபுருட வுருவங்கொண்டு நின்ற தம்மை அன்பான் உள்ளுணர்ந்து நோக்கினோர்க்குக் குமார சற்குருவென்னும் பெயர்கொண்டு அளவிறந்த சூரியருதயம் போன்று ஒளி வீசுந் தம் மூன்றுருவாய தெய்வத் திருவுரு உட்கொண்டு விளங்கக்காட்டி நின்றனரென்று குறித்தற் கென்பதுமாமென்க.

ஆனைமுகப்பிள்ளையார் புராணம்

மறையவர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியினொளியே வெளியேயவர்
நிறையவ ணமையா ருடனரு டாவெய் தினனென்பார்.

என்று மூவாண்டிற் பிள்ளையார் திருவருள் வடிவைக் கண்டு சீகாழி யுள்ளார் வியந்து கூறியவாறுய இச்செய்யு ளால் உள்ளுணர்ந்து நோக்கினர்க்குத் தம் முன்னுருவைக் காட்டி நின்றனரென்பது காண்க வென்க.

இனி இன்றியமையாக் * காட்டினைதேற் காட்டுவதன்றி மற்றைய விரிக்கிற் பெருகுமென்க.

அல்லதூஉம், குருவென்பதன் ஈற்றுயிர் மெய்யோடு ராயினென்பதின் முதலுயிர்மெய் புணராப் புணர்க்கையாய்

* காட்டு - உதாரணம்.

நின்ற தாகலின் இங்ஙணம் ஆனந்தவடிவாகிய பிள்ளையாரும் தாங்கொண்டருளிய மானிடத்திருவுருவோடு புணராப் புணர்க்கையாய் நின்றனவொனக் குறித்தற் கென்பது மாமென்க.

அல்லதூஉம், குறிலிணைக்கெதிர் நெடில்குறி லெண்ணீடாக நிற்பவும் ஈற்றின் அவ்வெண்ணீடின்றி யொற்று நிற்பவுந் தொடர்ந்து மொழியாகலிற் பிள்ளையாரும் பக்குவர்க்கு மறைபடு பொருளாயும், அதிபக்குவர்க்கு அநுபவப் பொருளாயும் நின்றனவென்று குறித்தற்கென்பது மாமென்க. இங்ஙனங் குருவாய வனென்பதிற் குவ்வென்பது இருள்; குவ்வென்பது அருள்; ராயவனென்பது விளக்கச் செய்கின்றோன் பொருளாம். இதனால் குவ்வென்னும் அசுத்தாவத்தையில் நின்றோரை குவ்வென்னுஞ் சுத்தாவத்தையில் தாம் நின்றவண்ண நிறுத்துகின்றோர் குருவாவர். இச்சுத்தாவத்தைக்கு ஆதாரமாகியும் அதீதமாகியும் விளங்கி இவ்வவத்தையினின்றும் அக்குருவாயினோர் தயாநிதி வண்ணம் அருள்செய்து நின்று அதீதப்படுத்துகின்றோன் ராயனுவன். ஆகலின் இதனாலு மூணர்க்கவென்க.

எழுத்தாதி பல்வகைக் குறிப்பிற் பொருணிறைப் பற்றிநின்ற சோக்கம் செறிவு நுட்பம் இங்கிதம் இன்பம் கம்பீரஞ் சிறப்பு உறுதி முதலிய நற்குணஞ் சிறீ இய சொற் புணர் ஈதென்றோ றுரியருரும் † "சரிதாதி நான்கிலுக்கு" மென்னுங் திரு ஙெண்பாவி னிடைக்கண் குருராயனென்று இதன்பெருமை சோன்ற வைத்தனரென்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

---

† ஒழிவிலொடுக்கம்: சத்திநிபாதத்துத்தமமொழிவு - க.

வாதுவென்ற சம்பந்த னென்பதிற் பொதுவானே வாதுவென்ற என்றது என்குறித்தோவெனின், எண் வகைக் குன்றத் தெண்ணாயிரவராய பாயுடுக்கைப்பறிதலைச் சமணர்கள் ஒருங்கேகூடித் தென்மதுரைக்கண் செந்தமிழ்ப் பாண்டியனை முன்னிட்டுச் செருக்காற் செய்த சுரவாதம் அனல்வாதம் புனல்வாதங்கள் பிற்படத் திருநீற்றானும் திருவாக்கானும் வென்று திறல்கொண்டமை யன்றியும், பாசமயகோளரி யென்று தானே யொலித்த திருச்சின னத்தின் தெய்வப்பேரொலி கேட்டு உளம்பொருது எதிரிட்டு மறித்த போதமங்கைப் புத்தநந்தியின் பொய்த் தருக்கமும் புழுத்தலையும் பொடிபட்டழியவும், பின்னர் உள்ளதுபோன்று இல்லதைப்பற்றிச் சாக்கியக் குழுவுட் டலைவனை சாரிப்பத்தன் சிற்சில வகையாற் செய்த சமய வாதந் தலைதடுமாறவுஞ் செந்தமிழ் வேதத் திருமுறை தாங்கி மேம்படும் அறிஞரான் வெற்றிகொண்டமையும் திருவோத் தூரின்கண் அரனுக் கிடுபலி யாண்பலி யாயிற்றேயென்று அசதியாடிய அமணக்குழுஉக்களின் வாய்வாதங்கள் மண்பட் டொழியத் தாம் திருவாய்மலர்ந்த திருக்கடைக்காப்புள் ஓர் மொழியானே அவ்வாண்பலி பெண்பலியாகச் செய்து விறல்கொண்டமையுங் குறித்ததென்க.

அல்லதூஉம், வாதென்பது இலக்கணையாகக் கொண்டு பெருமண நல்லூரின்கண் திருமணநல்விழாவைத் தரிசிப் பான் வந்த மக்கட் கெல்லாந் தொன்றுதொட்டு இடைவிடாது உடல் நிழற்போற் சூழ்ந்துவள பிறவிப்பெரு வாதகளனைத் தும் வென்றதூஉம், திருப்பாச்சிலாச்சிரமத்தின்கண் மழவன் மகளார்க்கடுத்த மூயலகவாது வென்றதூஉம், மருகற்கண்

ஓர் வசியனுக்கடுத்த விடவாது வென்றதூஉம், இவை முத லியவுங் குறித்த தெனினுமாமென்க.

வெற்றிகொண்ட பொருட்டிறன் முதலியவற்று ளொன்றேறனுங் தோன்றக் கூறுது இலேசானே வாது வென்றது என்றது என்குறித்தோ வெனின், பிறர்க்கு இங்ஙனம் வேறல் தம்மானுக் துணைமையானும் பற்பல காட் பற்பல வகையின் முயற்சி செயினும் முற்றுதெனினும் பிள்ளையார்க்குச் செந்தமிழ் பொழிபுந் திருவாக்கானே ஆண் டாண்டு அவ்வேறல் முற்றிய தென்பது குறித்தென்க.

வாது என்பது குருராய னென்பதனேடுஞ் சம்பந்த னென்பதனேடுஞ் சாராது நடுநின்றமையின் அத்துவித நெறியினுஞ் சேராது துவிதநெறியினுஞ் சாராது நின்ற பதிதவாதிகளது பயனில்வாத மெனினும் அமைபுமென்க.

எதிரேற்கப்பட்டு எதிர்வினை கீழ்ப்பட மேற்கொள் வினையெழுச்சிப் பொருளின் வந்த வெல்லென்னும் பிறவி னைப் பகுதியானெடுத்த வென்ற என்னும் பெயரெச்சம் சம் பந்தனென்னும் பெயர்கொண்டு முடிந்து இங்ஙனம் வெற்றிகொண்ட பருவம் பிள்ளையார்க்கு இளங்குமாரப் பருவமெனக் குறித்தென்க. என்னை? எச்சமென்ப தினஞ்சேய் மேற்றாகலின்.

சம்பந்த னென்பது பிள்ளையார்க்கு மூவகணவக்கண் மூவுலகும் புகழப் பொற்பொடு புணர்ந்த அற்புதத் திருப் பெயராகலின், ஆண்டுப் பெருமான் அருளப் பிராட்டியா ரளித்த சிவஞானக் தெள்ளமுதருந்தி அச்சிவஞானத்திற் குரிமை பூண்டமை குறித்தென்றுணர்க. ஆயின், சிவ ஞானசம்பந்தனென்றலுது சம்பந்தனென வைத்தது என்

கொலோ வெனின், சிவஞானத்திற்கும் அன்றிச் சிவனைத் தம் ஆனந்தாதீத மென்பவைக்கு மூலமலமாண்டை தலைமை பற்றியும், அவற்றை உலகுயிர்க்கு இங்ஙனமென் றுணர்த்தி உளமை செய்விக்கும் மாட்சிபற்றியும் அங்ஙனம் வைத்தென்க. அல்லதூஉம், சுருங்கச்சொல்லுதல் வனப்பிலுற் சம்பந்தனெனவே சிவஞான சம்பந்தனென உளமைச் சிறப்பு வழக்கால் தானே தோன்றுமென வைத்ததெனினுமாமென்க. எங்ஙனமெனின், இந்திரனென்பது பொருட் சிறப்பு வழக்காற் பொன்னுலையாயினுங் குறிக்குமாகலி னென்க.

வள்ளன் மலர்த்தா ளென்னும் ஒருவகை வனப் பிருவகைச்சந்தி மூவகை மொழித்தொகைச் சொற்றொடர்க் கண் வள்ளலென்னுங் குணிப்பெயர் விளைமுதற் றொழிற் பயனுறப்படு மூலமைக் குணப்பெயராய் நின்று பிள்ளை யாதது திருவடிகள் தம்மை யடைந்தோர்க்கு வையாது ஆனந்தப்பேற்றை யளித்து அவரைத் தாங்கிக் கோடலைக் குறித்த தென்றுணர்க.

அஃதேல் ஆனந்தப் பேற்றைத் தருதற்குந் தாங்கிக் கோடற்குங் கருத்தர் பிள்ளையாரென்றே றை. அங்ஙனமிருப்பத் திருவடிகட்கு இங்ஙனங்கூற லெங்ஙனமெனின், திருவடி கள் தம்மை வழிபடுவோர்க் கிரங்கி இன்பமீதற் பொருட் டெழுந்தருளும் பிள்ளையாதது படர்ச்சி நிகழ்ச்சிக்கருவியா நின்று அவரை அவ்வழி படுவோர்பால் வருவித்தலாலும் ஞானதீக்கை பண்ணுங்கால் அவர் சென்னியிற் சூட்டப்பட்டு ஐக்கியம் வருவித்தலாலும் பிள்ளையானந்தப் பேறாய்க்குமாகலி னிங்ஙனமென்க.

அல்லதூஉம், வாட்டமி லருளுங் கோட்டமில் குணனும் அசையாநிலையு நசையாபணனும் வெகுளாப்பண்புஞ் விடாப் போன்புங் செவ்வியின் மாறு எவ்வவ. வென்வகை வேட்டன ரவ்வகை விருப்பொடு குறிப்பின் வரையாதீதல் வள்ளற்றன்மை என்பவாகலின் இவ்வள்ளற் றன்மையைத் தம்பால் அடைந்தோரிடை அடைவித் தருளுங் கருணைப்பற்றி அங்ஙனங் கூறியதெனினு மமையுமென்க.

அஃதேல் வள்ளற்றன்மை வழங்கும் மலர்போலுந் திருவடியென்றன்றே உரைவிரித்தல் வேண்டும்; அங்ஙனமின்றி வள்ளற்றன்மையுடைய மலர்போலுந் தாளென விரித்திருக்கின்றதே யெனின், அங்ஙனம் அடைவித்தலும் வள்ளற் றன்மையே யாகலினும் உடைய தொன்றன்றே உதவப்படுமாகலினும் இங்ஙனம் விரித்தல் அங்ஙனங் கூறற்கும் அமையுமியாமென்க.

அல்லதூஉம், அருளின்றிமையாத வள்ளற்றன்மைக்கு அவ்வருளே மூதற்காரணமாகலின் ஆனந்தவடிவாகிய பிள்ளையார் அவ்வானந்தப் பேற்றையளிக்கும் வள்ளற்றன்மைக்கு மூதற்காரணமாகிய திருவருட் சத்தியே திருவடியென்று குறித்ததற்குக் காரணத்தைக் காரியமாக எண்டு உபசரித்ததெனினு மமையுமென்க.

அல்லதூஉம், எமது திருவடிகளை வழிபடின் வீட்டின்பம் எளிதிற் றருமேவமென்று பிள்ளையார் விதித்தருளியது அருள் விதிப்படி யறிந்து வழிபடின் அவ்வழிபாட்டான் அவ்வீட்டின்பந் தாப்பெறுதலுண்மையாகலின் அவ்வுண்மை நோக்கி எண்டுக் கூறியதெனினு மமையுமென்க. பிள்ளையார் திருமேனி முற்றுந் தெய்வத்தன்மை பூணுமாகலின் அதனை யறிவிக்க எண்டுக் கூறியதெனினு மமையுமென்க. திருவடிகட்கு

அடையாய வள்ள லென்பதூஉம், ஆசிரியர் பெயராயவள்ள லென்பதூஉம், அடியினை எதுகைத் தொடையாய் எழுத் தசை சீரொலி பொருளாதிகளா லெற்றுமைகொண்டு நின்று பிள்ளையாரது திருவடித்தீக்கைக்கும், ஆசிரிய ரதி பக்குவத் தன்மைக்கு முள்ள ஒற்றுமைப் பொருத்தம் விளக்கின வென்க.

வள்ளலென்பது (இரண்டாவதடியில்) பிள்ளையார்க் குக் காரணச் சிறப்புப் பெயராகக்கொண்டு பொருள் கூறு வாறு முளர். அங்ஙனங்கூறின் இத்துணைச் சிறப்பின் றென்று மறுக்க என்னெனின், அவயவச் சிறப்பான அவ யவிக்குணம் வெளிப்படுத்தலே பெரும்பாலும் இன்ப மாகலி னென்க. இதனைப் * "போற்றிமா னென்முகத்துக் காணுதற் புண்டரிகம்" என்பதனுற் காண்கவென்க.

வள்ளமலர்த்தாள் எனப் பாடமோதி வள்ளம்போலுங் குவிந்தவாய் மலரென மலர்க்கு அடையாக உரை விரிப் பாரு முளர்; அங்ஙனம் விரித்தல் இத்துணைப் பெரும்பய னின்றென மறுக்க. இங்ஙனம் இன்னும் விரிக்கிற் பெருகு மென்க.

மலர் என்பது வள்ளற்றன்மையின் அருகு வைத்த மையின் ஈண்டு நிலைதளுங் குலைதளுமாயுள்ள நீர் நிலைக் கண் தோன்றியு மழிந்தும் விரிந்தும் குவிந்தும் வாடியு நின்று வண்ணமு நறையு வாசமுஞ் சிறிதே சிறுபோது கொண்டு பறித்தலாகிய சிறுதொழிற்படு மலர்களை நீக்கி ஆண்டுத் தெளிபிலாத் தெய்வத்தெண்ணீர் நிலைக்கண் ஒரியா மலர்ச்சியும் அழியா மணமும் பொன்னிறப் பொலிவும்

---

* திருவாசகம்: திருவெம்பாவை - உ0.

இன்னறவொழுக்கும் மென்மையுந் தண்மையும் வியப்புறு முருவும் கண்டோர் கண்கவர் காட்சியும் மாட்சியுங் கொண்டு முக்காலமுங் குன்ற மலைக் குறித்தமை காண்க. என்னெனின், பிள்ளையார் திருவடிகள் மெய்ஞ் ஞான விளக்கமாய் அருண்மணம் வீசிப் பொன்னிறம் பொலிந்து ஆனந்தமொழுக்கி மெல்லெனவுற்றுத் தண் ணெனக் குளிர்ந்து தரிசிக்கின்றோர் வியப்புறு முருவாய் அவாது விருப்பநோக்கம் பாவ என்றும் ஒரு தன்மையா யிருக்கின்றமையி னென்க.

ஆயின் மலர்போலுந் தாளென்று உவமை விரித்தபடி நிற்றற்கிடங்கொடாது மலர்த்தாளென்கிற தென்னெனின், அத்தெய்வத் திருமலர் தனைக் கண்டோர்க்குச் சிறிய விடையாகந்தந் தருதலே யன்றித் திருவடிபோற் சிவாகந்தச் சாமாட்டாச் சிறுமைநோக்கி யென்க.

அல்லதூஉம், சுபவழிவாய் எவ்வகைச் சுபங்கட்கும் முன்னின்று அதனை விளக்குறச் செய்வதால் மகிழ்வுடை யோர் யாரும் மேற்கொண் டணியப்படுவதாய் நிற்கு தன் மலர்போலு மெனக் கூறினுமமையும். என்னெனின், திரு வடிகள் அருள்வழிவாய் ஆனந்தப் பேற்றிற்கு முன்னின் றளிப்பதாய் அறிவுடையோர் தங்கலேமேற் கொண்டணி யப்படுவதாய் நிற்றலினென்க.

அல்லதூஉம், மலரையடைந்த வண்டுகள் அதனது தேனுண்டு களிகொள்ளுதல்போல் திருவடிகளை யடைந் தோரும் அருளானந்தம் பெற்று இறுமாத்தலின் இங்ஙனங் கூறியதெனினு மமையுமென்க. இதனைத் தொகையுவமை யணியாகக்கொண்டு பொருள் கூறுவாருமுளர். அவற்

கூறுங் கூற்றிற் பெரும்பயனின்றென மறுக்க. இஃதின்
றும் விரிக்கிற் பெருகுமென்க.

தானீ என்பது அடிகட்கன்றியும் முயலுதற்கும், உண்
ணின்ற பொருள் வெளிப்படாமைக்கு மதனை வெளிநின்
றோர் உட்சென்று கவரப்படாமைக்குங் காப்பாகக் காப்பி
னிற்குங் கருவிக்கும், அணிதற்கு அணியின் இருகடையு
மிணைத்து நிற்கும் இடைப்பூட்டிற்கும் இடனாகி வந்த பல
பொருளொரு சொல்லாகலின், திருவடிகள் தம்மை யடைந்
தோரை ஆனந்தநிலையுட் சேர்த்தலும், அங்ஙனஞ் சேர்ந்
தோர் மீட்டும் அவ்வானந்த நிலையினின்றும் போதவணைவு
தோற்றி வெளிப்படாமைக்கும் அவத்தைகளுட் சென்று
தாக்கிக் கவராப்படாமைக்குங் காப்பாக அருளுருவா யதன்
முன்னிற்றலும், சிவத்துடன் சீவனை யிடைநின்று கூட்டு
வித்தலுங் குறித்தது காண்க. இக் குறிப்புணர்ந்தவன்றே
மலர்க்காலென்னுது மலத்தாளென்றதென் றுணர்க.

தலைமேல்வைத்து என்பது ஆசிரியர் தம்மாசாரியரா
கிய பிள்ளையார் திருவடித்தீக்கை செய்யத் தாம் பெற்
றமை குறித்தது காண்க. அஃதேல் வைக்கப்பட்டு எனச்
செயப்பாட்டு வினையெச்சத்தானிறுத்தற் பாலதன்றே
வெனின், ஆசிரியர்க்கு அத்திருவடிக்கண்ணேயுள்ள பிரி
யத்தொடர்ச்சியின் பெருமைதோன்ற இங்ஙனம் நின்று
அங்ஙனங் குறித்தென்க.

இதற்கு இவ்வாறன்றித் தலைமேற் பாவனையான்
வைத்தெனக் குறித்த தென்று கூறுவாரு முளராலேலா
வெனின், அவ்வாறு கூறிற் பிள்ளையார் இந்நூலாசிரியர்க்கு
ஞானாசாரிய ரென்பதும், இவர் ஞானதீக்கை யுடையா

ரென்பதும் விளக்குதலின்றி மற்றை யாசிரியர்போல் எடுத்தநூல் இனிது முடிதற்பொருட்டுப் பாவினையான் வழிபடு கடவுட் பழிச்சினரென்று இலேசிற் கருதப்படு மாகலின் அங்ஙனங் கூறல் மாபன்றென்க.

தலையில்வைத்து என்றது தலைமேல்வைத்து என்ற மையான் மறை முடிக்கண்ணே வயங்குகின்ற அச்செல்வத் திருவடியின் சீர்மை தோன்றிற்றென்க.

ஓர்ந்து என்பதில் ஓர் என்னும் பிறவினை முதனிலை, அறிவு தனக்கெதிரிட்ட உணர்ச்சிப்பொருட்கண் எதிரிடு வது போன்று எதிரிடாது உள்ளாழ்ந்த அப்பொருட்டிறன் எதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியும் எதிரிட்ட பின்னர் விகற்பியாது எதிர்க்குந்தொறு மெதிரிடப்பெயரும் புடை பெயர்ச்சியுங் கோடலிற் கருவித்திறனுந் தன்றிறனும் அருட்டிறனும் உற்றுணர்ந்து அவ்வுணர்ச்சி விகற்பியாது தேறி நின்றமையைக் குறித்தது காண்க. இக்குறிப்புத் தோன்றவன்றே திருவள்ளுவநாயனரும் * "ஓர்த்துள்ள மூள்ளதுணரி" னென்றுரைத்தன்றறிக.

உள்ளத்துழிவி லென்பதில் உள்ளமென்பதன் பகாப் பதமிற்றுப் பகுபதப் பொருளினிடவாகு பெயராய் அணுப்பொருட்கண் வந்த உள்ளென்னும் பகுதி உட்புறத் தும் அப்போதம் எழுந்நிற்றலைவும் போலைவுங் குறித்தது காண்க.

உள்ளம் என்பது வாதனையான் உள் எழும்போதத் திற்கு ஆகுபெயராயது. வள்ளலென்பது போன்று ஒழு நிசையாய் வரு உள்ளவழிவி லென்னுது பொறுத்திசையாய்

* திருக்குறள் - நடுநில.

வா உள்ளத் தழுவிலென்ற தென்கொலோவெனின், வேற்
றுமை வழி யாகலினும் போதவணைவு சார்பின்றி அமை
யாமை குறிக்கவேண்டுமாகலினும் சாரியையோடு புணர்த்தி
அங்ஙனங்கூறிய தென்க. அழிவு என்பதில் அழி யென்
னும் பொதுவினைப்பகுதி முன்னர்த் தோற்ற நிகழ்ச்சிப்
பின்னரோர் காலத்து மோரிடத்து மின்றிக் கெடுதற்
பெயர்ச்சிக்கண் வந்ததாகலின், அப்போத நிகழ்ச்சி யின்
னர் எக்காலத்தும் உட்புறமென்னும் எவ்விடத்தும்
தோற்ற நிகழ்ச்சியின்றி யொடுங்கியவாறு குறித்த தென்
றுணர்க. இங்ஙனமன்றி உள்ளத்தழுவி லென்பதற்கு மனத்
தின் அணைவு அற்ற இடத்து எனப் பொருள் கூறுவாருமுண்
டெனிலோவெனின், மனத்தினணைவு போத அணைவு
அறின் தானே யறுமாகலினும், அஃது அருகுவிடத்து
இஃது எவ்வாற்றானும் அருகாகலினும் அது பொருந்தா
தென்க. இதனை ஆசிரியர் கூறிய * "பற்றுதோபாதும்
பதுமு" மென்னுந் திருவெண்பாவாற் காண்க வென்க.

அடுத்துநீதென் என்பதில் அடுக்கும் என்பது அடுத்த
லென்னுங் தொழிற்பெயற்க்கண் தல் விகுதி தன்னொற்
றுச் சந்தியொடு நீங்க எதிர்காலப் பெயரெச்ச இடைநிலை
யும்மை ககரமெய்ச்சாரியை யூர்ந்து தன்னொற்றுச் சந்தி
பெற்றுண்டு நின்று இறையுமிடப்பாடு தோற்றுது செறி
தற் பெயற்சியும், அடுக்கலென்னுங் தொழிற்பெயர்க்கண்
அல் விகுதி நீங்க அவ் வெதிர்காலப் பெயரெச்ச இடைநிலை
யும்மை விகுதி நீங்க நின்று தன் வரவு கண்டோடிய குற்று
கர மூர்ந்த மெய்க்கண்ணேறி நின்று இறையுமிடைப்போ
தின்மை படாது பன்முறை மேன்மே லுறுதற்பெயற்சியும்

* ஒழிவிலொடுக்கம் : யோகக்கழற்றி - கஞ.

பொருளாகக்கொண்டு இருவகைப்பகுதி யொருவகை யெச்ச மாக நிற்றலின், சிறிதும் இடத்தாலுங் காலத்தாலும் பிரிவு தோன்றாது செறிந்து பன்முறை மேன்மேலெழும் ஆனந்தத் தேனென்று குறித்த தென்றுணர்க.

உள்ளத்தழிவில் அடுப்பது ஆனந்தமாகலின் தேனென் பதை உவமைக் குறிப்பாற் சிவானந்தத் தேனென்ற தென் றுணர்க.

தேனுண்ட வண்டு அசைவின்றி அத்தேன் மயமா யிருத்தல்போல ஆனந்தாநுபவத்தர் போதவசைவின்றி இவ்வானந்த மயமாயிருத்தலின் உவமையாகக் குறிக்கப்பட்ட தென்றுணர்க. இதனை ஒப்புவமைக் கூட்டு ஒட்டு துதிக ளாகக் கூறுவாருமுளராலோ எனின், அவ்வாறு கூறினும் பொருள் சிதையாமையின் ஒருவாறு அமையுமென்க.

போத அசைவின்கண் தோற்றல் விடயாநந்தமாகவிற் போத வொழிவின்கண் தோற்றல் சிவாநந்தமெனக் குறித் தற்கு உள்ளத்தழிவிலடுக்குந் தேனென்ற தென்றுணர்க. எங்ஙன மெனின், உள்ளத் தழியாமையின் அடாத்தேன் என்று எதிர் மறுக்கப்படுதலி னென்க.

மதுரம்பற்றித் தேனையாநந்தத்திற் குவமை கூறுவா ரும் உளராலோவெனின், அதுநாமிடையமாய் இறைப்போது நிற்றலின் இத்துணைச் சிறப்பின்றென்க

அன்பரோலா மூன்னை என்பதில் அன்பர் என்பது பொருள்புகழாதினையைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவா னந்தம் எந்நாள் அடைதுமென்று இடைவிடாது அதனையே விரும்பிப் பயில்வோரைக் குறித்த தென்றுணர்க. லாலா மென்பது சாரியையாதி கன்ம மார்க்கங்களைக் கூறும் பிற

நூல்களெல்லாம் பருவ நோக்காது சாதி சமயாசார விகற்பங் கஞ்ச நோக்கிச் சிலரை நீக்கியுஞ் சிலரை நிறுவியு மதிகரித்தல் தீதோலாது அச்சாது சமயாதிகளி னுயர்ந்தோர் தாழ்ந்தோர் யாரேனும் பருவத்தாயின் இந்நூற்கு உரியராவ ரென்பது தெரித்ததென் றுணர்க.

உட்கொள என்னும் பொருள் உட்கொண்டு பொருட் டுப் பொருளிற் போந்த உண்ண என்னும் வினையெச்சம் ஆனந்தாநுபவத்திற்கு விடாத இலக்கணை யாயிற்றென் றுணர்க. என்னையெனின், உண்ணலிற் பரிசீலிக்கல்போல் ஆனந்தாநுபவத்திற் பரத்துவ நீங்கலி னென்க.

பயன் காரணம் பற்றிவந்த ஒழிவிலொடுக்க நூலென் பது ஒழிவிலொடுக்க மென்னு நூல் ஒழிவிலொடுக்கத்தரு நூலென இருவழிக்கும் பொதுவாய சந்நியான் வஞ்சமை யின், தன்னை வேதாந்தத்திற்குஞ் சித்தாந்தத்திற்கும் பொது வென்று குறித்த தென் றுணர்க.

ஒழிவிலொடுக்க நூலுணர்ந்தான் என்பதில் வேற்று மை சாரியை யுருபு முதலிய வொன்றும் விரியாது நிற்றலின், ஞாதாசாரமன்றிக் கருமாசாரமொன்றும் விரியாத இந்நூலின் நிஷ்பலத்தன்மை தோன்றி நின்ற தென் றுணர்க.

உணர்ந்தான் என்பது ஒருவர் மநிநுட்பத்தால் தாம் கண்டறிந்த மாற்றுயர்ந்த பொன்னின் கன்மையைப் பிறரு மறிந்து பயன்கோடற்குக் கட்டளைக் கல்லி னுரைத்துக் காட்டல் போற் சுருதி குரு அனுபவத்தால் தாம் அனுப விக்கறிந்த சிவாகந்தப் பேற்றின் கன்மையைப் பக்குவரு மறிந்து பயன்கோடற்பொருட்டு நூற்கண் உரைத்துக் காட்டினரென்று குறிப்புறுத்திற் றென் றுணர்க. என்

னெனின், உரையென்பது பொன்னுரையும் பொருளாகக் கோடலி னென்க.

உரைத்தான் என்னும் பயனிலை செயப்படு பொருளின் இறுதியின் இயையாது செயப்படு பொருட்கும் கருவிப்பொருட்கும்மேல் காடலுமேல் வைத்து என்பதன் இறுதியில் தொடர்ந்து நின்றது என்னெனின், சிவஞானத் தீக்கை யுடையராய் உரைத்தார் என்பது பன்றித் தமது ஆசாரியர் திருவடி சான்முகத் தாங்கண்ட அநுபவத்தை விளங்க உரைத்தார் என்பதுங் குறித்தற்கென்க. என்னை? காடலுமேல் வைத்து எனவே சான்முகவைத்து என்பது தானே அமையுமாகலின்,

தலைமேல் வைத்து என்பதன் பின் நிற்கக் கடவதாயு ளோர்ந்து என்பது செயப்படு பொருட்பின் இறுதிநிலையாய் நின்றது என்னெனின், இந்நூல் கற்போர்க்குக் கருமங் குறைந்து ஞானம் மேலிடுத லுண்மை குறித்தற்கென்க. எங்ஙன மெனின், அவ்வோர்ந்து என்பது வினைக்குறை யாகலின் என்க.

உள்ளத் தழிவி லடுக்குந்தினை அன்பரெலா மூண்ணை ஒழிவிலொடுக்க நூ லோர்ந்துரைத்தான் எனக்கொண்டு போத ஒழிவின்கண் அடுப்பதாய ஆனந்தத்தை அன்பரெலாம் அநுபவிக்கும்பொருட்டு வேதாகம மூடபான ஞானவநியை ஆராய்ந்து ஒழிவிலொடுக்கமென்று நூலை யுரைத்தார் எனப்பொருள் கூறுவாயுமுளர். அங்ஙனங் கூறின் ஆசிரியர் பரஞான மூடையார் என்பது தோற்றாது அபரஞான மூடையாராகப் பொருள்படுமாக லிறும் அபரஞானத்தாற் கூறப்பட்ட நூல் மிகச் சிறவாமை யாலும் அது பொருந்தா தென்க.

இந்நூலியற்றற் கேற்ற கற்பொருளுடைமையும், சிறப்புப்பாயிர இலக்கணத்துள் ஆக்கியோன் பெயரே யென முதல் நிறுத்தப்பட்ட நிமித்த காரணச் சிறப்புடை மையும் இச்செய்யுண் முடிபுக்கு எழுவாயாக நிலைமை யுடைமையும் பற்றி வள்ளல் என முதல் நிறுத்திய தென்க. இந் நூலாசிரியர்க்கு ஆசாரியர் இவர் என்பது தோன்றற்கு அவ் வள்ளல் என்பதன்புடை குருநாயன் என்பதை நிறுத்தியதென்க. இங்ஙனம் ஆசாரிய னென்பவர் பிள்ளா யார் என்பது தோன்றற்கு ஞானசம்பந்தனென வைத்தல் வேண்டுமாகலின், அந்த ஞானத்தைக் குறிக்கும் பாசவெற்றி யாய வாதுவென்ற என்பது முன் கூட்டுச் சம்பந்தனென அதன்புடை நிறுத்தியதென்க.

இரண்டாமடிக்கண் பிள்ளையார் தாள்கள் நிறுத்தத் தொடங்கி, முன்னர் அத்தாள்களின் இயற்கை அரு வினன்று குறிக்க வள்ளலென்றும், அதன் வடிவம் நிலந்த மென்று குறிக்க மலரென்றும் முறையே வைத்து வள்ள மலர்த்தாளென நிறுத்தியதென்க. தாள்களின் நிடமும் பிள்ளை யாரும் அருளியற்கையரே யென்பது குறிக்கச் சம்பந்த னென்னுஞ் சத்தம் சோற்றியவுடன் வள்ளற் சத்தம் கோன்ற நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொற்பொருண் முறைநிலை. தாளென்பதற்குச் சிலையென்ப தற்கு முள்ள சொற்பொருட் சம்பந்த இன்பம் பற்றித் தாடலை யென்றும், கலையென்பதற்கும் மேலென்பதற்கு முள்ள உரிமை நோக்கம்பற்றிக் கலைமேலென்றும், மேலென் னும் இடப்பொருட்குவைத்தற்றொழில் சிறந்தது பற்றி மேல் வைத்த என்றும், வைத்து என்பதற்கும் உரைத்தாவென்ப, தற்கும் இறுதியும் முதலும் இணைமாதல் பற்றி வைத்தலை

தான் என்றும், முறையே நிறுத்தியதென்க இங்ஙனம் நிறுத்தியவை சென்முறை நிலையும், சொற்பொருண்முறை நிலையுமாம்.

இங்ஙனம் முற்றும் முறைநிலை கூறப்புகின் மிகப் பெருகுமாகலின் ஒருவாறு காட்டினம்; மற்றையவும் இவை கொண் டுணர்கவென்க.

இச்செய்யுட் பொருள் ஆசிரியரது அருளறிவின் மாட்சிமையை வெளிப்படையாலுங் குறிப்பாலும் விளக்க விரித்தலின், வாகைத்திணையுட் சால்புமுல்லைப் பொருளின்பாற் பட்டதென்க. என்னை? * "சால்புமுல்லை: வான்றோய் மலையன்ன, சான்றோர்த்தந் சால்புரைத்தன்று" என்பவாகலின்.

இச்செய்யுள் தன்னுள் செயப்படு பொருளாய் நின்ற நூற்சிறப்பைத் தன்னுளுந் தன்னுறுப்புக்களாலுங் குறிப் பாற் குறித்து நின்றதன்மேனிலைக்குடைச் செய்யுளென்றுணர்க. அங்ஙனம் குறித்தவை எங்ஙனமெனின், இச்செய்யுள் தான் கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியப்பா என்னும் மூப்பாவினுஞ் சிறந்த வெண்பாவாகலின் இக்குறிப்பால் இந்நூல் சரியை நூல் கிரியையநூல் யோகநூல் என்னும் மூந்நூலினுஞ் சிறந்த ஞானநூலென்று குறித்ததென்க. தான் ஈசானசியான் ஆசிட்டு இருவகைத் தலைதழீஇ ஒழுகிசைச் செப்ப லோசையான் வந்ததாகலின், இக்குறிப்பால் இந்நூல் ஆகம முடிவும் வேத முடிவுங் கூறும் இருவகை நெறியும் ஒரு வகை நெறியாத்தழீ இக்கொண் டிருந்தலை குறித்ததென்க.

---

* "சால்புமுல்லை வான்றோய் மலையன்ன, சான்றோர்த்தந் சால்புரைத்தன்று" - நூற்.

தான் என்றும், முறையே நிறுத்தியதென்க இங்ஙனம் நிறுத்தியவை சென்முறை நிலையும், சொற்பொருண்முறை நிலையுமாம்.

இங்ஙனம் முற்றும் முறைநிலை கூறப்புகின் மிகப் பெருகுமாகலின் ஒருவாறு காட்டினம்; மற்றையவும் இனைகொண்டு ணர்க்கவென்க.

இச்செய்யுட் பொருள் ஆசிரியரது அருளறிவின் மாட்சிமையை வெளிப்படையாலுங் குறிப்பாலும் விளக்க விரித்தலின், வாகைத்திணையுட் சால்புமுல்லைப் பொருளின்பாற் பட்டதென்க. என்னை? * "சால்புமுல்லை: வான்சிறுமை மலையன்ன, சான்சிறார்தங் சால்புரைத்தன்று" என்பவாகலின்.

இச்செய்யுள் தன்னுள் செயப்படு பொருளாய் நின்ற நூற்சிறப்பைத் தன்னுளுங் தன்னுறப்புக்க ளாலுங் குறிப்பாற் குறித்து நின்ற நன்மைக்குடைச் செய்யுளென்றுணர்க. அங்ஙனம் குறித்தவை எங்ஙனமெனின், இச்செய்யுள் தான் கலிப்பா வுந்சிப்பா ஆசிரியப்பா என்னும் மூப்பாவினுஞ் சிறந்த வெண்பாவாகலின் இக்குறிப்பால் இந்நூல் சரியை நூல் கிரியைநூல் யோகநூல் என்னும் மூந்நூலினுஞ் சிறந்த ஞானநூலென்று குறித்ததென்க. தான் ஈரசையான் ஆகிட்டு இருவகைத் தளைதழீஇ ஒழுகிசைச் செப்ப லோசையான் வந்ததாகலின், இக்குறிப்பால் இந்நூல் ஆகம மூடிவும் வேத முடிவுங் கூறும் இருவகை நெறியும் ஒரு வகை நெறியாத்தழீ இக்கொண்டுருந்தலை குறித்ததென்க.

---

* புறப்பொருள் வெண்பாமாலை: வாகைப்படலம் - 5ஆ.

தான் ஒன்றடுத்த இரட்டை முப்பத்தாறடுத்துக் கூவக்கொண்டு நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் பாசமொன்றடுத்த சத்துவ முப்பத்தாறென்றும், அம் முப்பத்தாறன் தன்மை யிவை யென்று பகுத்தறிதல் வகையும் உணர்த்துவதெனக் குறித்த தென்க.

தான் தான்கு அடுத்த முப்பத்தாறனைசகளை அனைத்து நிற்றலின் இக்குறிப்பான் இந்நூல் அத் தத்துவ முப்பத்தாறனையும் நியதிகளை தன் முறைமையுணர்த்துவதெனக் குறித்த தென்க. அஃதேன் முப்பத்தாறன்மேல் தான் கடந்த தென்னெனின், ஆன்ம தத்துவத்தின் வன்மையும் தோன்றற்கு ஓரணையும், வித்தியா தத்துவத்தின் வலி தோன்றற்கு ஓரணையும், காத தத்துவத்தின் பெருமை தோன்றற்கு ஈரணையும் இருந்தன வென்க.

தான் பதினைந்து சீர் சீர்கொள நிற்றலின், இக்குறிப்பால் இந்நூல் ஆசாரியத்தன்மை சீடத்தன்மை பதித்தன்மை பசுத்தன்மை பாசத்தன்மை உபதேசத்தன்மை டக்குவத் தன்மை யோக நிவர்த்தி கிரியை நிவர்த்தி சரியை நிவர்த்தி விரத்தி வினக்கம் துறவுத் தன்மை அருளவத்தைத் தன்மை வாதனை மாண்டார் தன்மை நிலையிலவு என்னும் இப் பதினைந்தினையுஞ் சீர்பெறக் கொண்டதெனக் குறித்த தென்க.

தான் எழுவகைத் தோயின் இயைந்ததாகலின், இக் குறிப்பான் இந்நூல் ஆன்மதரிசனம் அருட்டரிசனம் பரை தரிசனம் பரையோகம் பரையோகநீக்கம் போதவொழிவு இன்பட்பேறு என்னும் எழுவகை நிலையும் அறிவிப்பதெனக் குறித்த தென்க.

தான் தனிச்சொல் பெற்று தான்கு அடியுடன் தொடந்து தாகலின், இக்குறிப்பால் இந்நூல் கூறும் ஒப்பற்ற ஞானமும் சுத்தசரியை சுத்தகிரியை சுத்தயோகம் சுத்தஞானம் என தான்கு பாதத்தோடு தொடப்படுதலைக் குறித்ததென்க.

தான் ஒருஉத்தொடையொடு மூத்தொடையான் இயன்ற தாகலின், இக்குறிப்பான் இந்நூல் சுருதி குரு அனுபவமென்னு மூன்றும் ஒத்தியன்றதெனக் குறித்ததென்க.

அல்லதூஉம், இச்செய்யுள் அடி தோறும் எழுத்தெல்லையின் இருவாறு நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் பெய்வீட்டின் நெறித்தாய் அவ்வீட்டின் நெறிக்கு எல்லையாய ஞானத்தின் இருவாறு நின்ற தன்மையுமென்க. எல்லை என்னெனின், * "பத்தெழுத்தென்பவே தோறுக்கள வே, யொத்தநாவெழுத்தொற்றலவ் வுண்டே யே" யென்பவென்க. இந்நூல் குறித்தற்கண்ணே இச்செய்யுளீற்றடியில் நாற்பெயரை வேறு வேறு தொடர்ந்தது சனிமையின் நிறுத்திய தென்க.

இச் செய்யுள் சிறப்புப் பாயிரத்ததாயின் அப் பாயிரத் திலக்கணம் இதனை னிருந்தவாறு என்னையெனின், வள்ளு வனென்பதனை தெய்வப்புலவர், குருவாயவன் வாதூலனென்று சம்பந்தன் வள்ளன் மலர்த்தாடலேமல் வைத்தலைத் தான் என்பதனன் ஞானசரியையாகிய பிள்ளையார் அருளை தேச வழித்தென வுடன்தொளிப்பதனின் வழியர், இந்நூற் றொடர் தமிழ்த் தொடராகலின் இத்தகைத்தும் வழங்கும் நிலமே இந்நூல் வழங்கு நிலமெனக் கருதப்படுதலின்

* தொல்காப்பியம் : செய்யுளியல் - நூசு.

எல்லையும், ஒழிவிலொடுக்க நூல் என்பதனுல் நூற்பெய
நீர், ஒழிவிலொடுக்க மென அன்மொழித் தொகைப்பெயர்
மாத்திரையின் நில்லாது நூலென விரித்தமையின் இந்
நூலுக் தொகை விரியுடையதெனக் கருதப்படுதலின்
யாப்பும், உள்ளத்தினெழிலென்பதனுற் கருதிய பொருளும்,
அன்பிலாலா முண்ண வென்பதனுல் அன்பிலாலாம் உணற்
பொருட்டு இம்மியற்றுக என்னு உள்ளெழுந்து எதிரிட்டு
நின்றது ஆகியாது பெருங் கருணையெனக் கருதப்படுத
லிற் கேட்போரும், உள்ளத்தழிவிலடுக்குந் தேனென்ப
தனுற் பயனும் புலப்படுமாகலின் அவை யிருந்தவாறு
இங்ஙனமென்க.

☞ இச் சிறப்புப்பாயிரச் செய்யுள் முற்காலத்தது.
இவ் வுரை செய்தார் சீதம்பரம் - இராமலிங்கப்பிள்ளை
யென்பவர்.

ஏழிலிலொதக்கம்

காப்பு

விநாயகர் தோத்திரம்

நிதம்ப நிழற்டா லும்டன் முகத்தார்
செம்பது மத்தா ணம்டு கருத்தே.

சரஸ்வதியார் தோத்திரம்

ஏழிலி லொடுக்கத் துரைவர நாயேற்குச்
செழுவிலொடுங் கருணை சேர்க்கு—முழுதின்டப்
பண்டைவள நாட்டும் பரமகுருப் போலூரன்
றண்டைவள நாட்டுதிருத் தான்.

திருஞான சம்டந்த சுவாமிகள் தோத்திரம்

வள்ள லுரைத்த வழுவிலொழி வில்லொடுக்கத்
* தெள்ளருமுரை யெல்லாந் தெரிவிக்கு—முள்ளமே
யெம்டந்த நீக்கு மினறவன் றமிழ்க்காழிச்
சம்டந்தன் டூந்சதங்ணகத் தான்.
† ஆனைமுக ணறைமுக ணம்டியைபொன் னம்டலவன்
ஞானகுரு வாணியையுன்ன ணெ.

☞ இத் தோத்திரச் செய்யுட்கள் உரையாசிரியரால் இந்நூற்கு உரை இனிது முடிதற்பொருட்டு இயற்றப் பட்டன.

---

* "துள்ளவுரை காயேற்குறச்செய்யும்" என்றும் பாடம்.

† சில உரைப்பிரதிகளில் இது காணப்படவில்லை.

சிவமயம்

தெளிவிலக்கம்

உரைபாடம்

மூதலதிகாரம்

வேதாகமப் பொதுவிலுபதேசம்

ஆசாரியர் அநாசாரிய நிலக்கண முதலியவற்றையுமும் இந்நூலிற் கூறிய கருத் தெல்லாவற்றையும் தொகுத்துப் பொதுவான் உபதேசமாகக் கூறினமையான், இவ்வதிகாரத்திற்குப் பொதுவி லுபதேசம் என்று பெயராயிற்று.

வேண்பா

வேதா கமப்பவுரி வீசுங் கனாகதியே
ஆதார வெற்பி லடிதேடகம்—போதத்
திருளிலெழு பாறு வினைதொடுவி வின்படக்
கருணைபொழி வானைதுந்த னை.

(உரை.) எனது தெளிவில் இன்பத்தருணை பொழிவான் எடுத்த கை—எனது போதகாசத்தில் இன்பகன்னே அருளாகத் தத்தைப் பொழியாநின்ற பிடி னோயான் உயர எடுத்துச் சட்டோடு மெய்ப்பொருளைக் காட்டிய திருக் காமானது.

வேதாகமப் பதி வீசும் களாசலே—வேதாகமங்களி னது * பதிக்கூத்தினைப் பிரம்போதஞ் சைவாரஞ்கொண்டு வீசி நிறுத்தும் ஓர் உண்மைநிலை;

ஆதாவெற்பில் அபிடேகம்—ஆறுதாரங்க ளாகிய பொருப்பரையன் முடியிற்சூட்டும் ஓர் மகுடம்;

போதத்து இருளில் எழு பாநு—ஆன்மபோதத்தின் கண்ணதாகிய ஆணவ இருளைக்கிழித்து எழுகின்ற ஞான சூரியன்.

(தறிப்பு). அரங்கிக்கண் நடிக்கின்ற கூத்தர் பலருக் கும் முதல்வனாகிய கூத்தன் வந்து கூத்தைக் கைவாரங் கொண்டு நிறுத்தி, அவ்வரங்கின்கண் உள்ள † தறுமன்னீ யிகட் கெல்லாம் முதல்வனாகிய ‡ மகாமன்னியனீயை புகழ்ந்து சூட்டினின்றதுபோல, வேதாகமங்கள் கூறிய பல சமய நெறிகளையும், அச்சமயங்கட்குரிய கடவுளரையும் கடந்துநின்று, அக்கடவுளருக் கெல்லாம் முதல்வனேயே பிஞ்ஞையார் பரஞானக்கண்ணினால் உணர்ந்து புகழ்ந்து சூட்டினின்றமையால் "வேதாகமப்பதி வீசுங் களாசலே" என்றும், நிராதாரமாகிய அருளினின்று மீதான மாகிய மெய்ப்பொருளில் சூட்டோடும் அதீதப்பட்டு நின் றமையால் "ஆதாரவெற்பிலபிடேகம்" என்றும், ஆன்ம போதத்தை மறைத்த ஆணவ இருளை நீக்கிச் சிவத்தை அறிவிக்குந் திருவருளைப்போல் இறைவனைப் பிறருக் கறி வித்தமையால் "போதத்திருளி லெழுபாநு" என்றுங் கூறினர்.

---

* வலபிடமாகச் சூழ்ந்தாடுங்கூத்து.

† சிலாலறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவமுடையோர்.

‡ பலாலுமறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவமுடையோன்.

"தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக், காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன், ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த, பீடுடையபிர மாபுர மேவிய பெம்மா னிவ னன்றே"

என்னுங் * திருக்கடைக்காப்பான் மெய்ப்பொருளைத் தரிசித்துச் சுட்டிப்புகழ்ந்து நின்றபோது திருவுள்ளம் மெய்ப்பொருள் கிருபாநோக்கம் வைக்க அக்கிருபாநோக் கத்தின் வழித்தாய்ச் சென்று சிவத்தில் அதீதப்பட்டு நின்றார் என்பதும், பிறர்க்கறிவித்தார் என்பதும், முறையே "எனதுள்ளங் கவர்கள்வன்" என்பதனாலும், "பெம்மா னிவனன்றே" என்பதனாலுங் காண்க. இத்திருக்கடைக் காப்பு பிள்ளையார் ஞான போனகம் உண்டருளியபோது அருளிச்செய்யப்பட்டது.

† பிரளயாகலர்க் கருக்கிரகித்தலும் இது.

வேதாகமங்களை முதற்பொருளாக்கி அவை ஒன்றே டொன்று ஒவ்வாது கூறும் பல பேத சமயநெறிகளைக் கூத்தாக்கினர்.

ஆதாரம் ஆறையும் ஊடுருவிநின்ற சுழிமுனையை மேரு வென்றும், இடை பிங்கலைகளை அரவின வலம்வருஞ் சூரிய சந்திரரென்றும் யோகிகள் கூறுவர்; ஆகவின் "ஆதார வெற்பு" என்றார். முடிகூடினமையால் வெற்பென்னும் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டது.

---

* திருஞானசம்பந்தர் தேவாரம்.

† மும்மலங்களை யொருமலநீக்கினார். நீத்தமலம் மாயா மலம் மாயையும் கன்மமும் நீத்தோர் விஞ்ஞானகலர். ஆணவம், கன்மம், மாயை மூன்றையு முடையோர் சகலர்.

"கை" என்பதை மூன்றிடத்துங் கூட்டுக.

கைவாரங்கொள்ளுதல் - கூத்தை நிறுத்தற் பொருட்டு தோகோ என்னும் அடுக்குமொழி கூறிக் கரம் உயர எடுத்து வீசுதல்.

களாசம்-பிரம்பு. பிரம்போடும் வீசுமெனக் கூட்டுக.

இத்திருவெண்பா குருதோத்திரம். (க)

தன்னிழப்பை யென்னகற்றுச் சாதிப்பான் சற்குரு
மன்னுபெருஞ் சீய மதயானை-தன்னடைமேற் [வாம்
சொற்பனத்தே தோன்றித் துடிப்பற்றுக் கேவலமாய்
நிற்பதுபோற் பாரா னெனின்.

(உரை.) சற்குருவாம் மன்னு பெரும் சீயம் மதயானை தன் நடைமேல் சொற்பனத்தே தோன்றி—ஞாலஞானிய ரெனிய அருள்நிலை பெற்ற பெரிய சிங்கம்போல்வான் சீடரெனிய மதயானையினது மேலாம் பக்குவத்தால் பிரபஞ்சமாகிய சொப்பனத்தின்கண் தோன்றி,

துடிப்பு அற்றுக் கேவலமாய் நிற்பதுபோல்—மதம் பொருதியான்ற யானையினது சொப்பனத்தின்கண் சிங்கந் தோன்ற அதனது மதவிகர்விதம் யாவுங் கெட்டு மருட்கேவலப்பட்டு நின்றாற்போலச் சீடரெனிய யானையினது உட்புறவெய்ச் சீவியான்ற போதப் பதைப்பெல்லாம் அற்று அருட் கேவலமாய் நிற்கும்படி,

பாரான் எனின்—அப்போதத்திற்கும் உட்புறரெனிய திருபாதோக்கஞ் செய்யாரெயின்,

தன்னிறப்பை என்ன கற்றுச் சாதிப்பான்—ஒருவன் தற்போத ஒழிவைச் சாத்திரங்களைக் கற்று அவற்றுள் கூறிய

வாறே தனது போதத்தால் கிட்டைகூடி எங்ஙனஞ் சாதிக் கலைவானன் ?

(நிறுப்பு.) போத ஒழிவின்கண் மெய்ப்பொருள் இருக் கலின், மெய்ப்பொருளைக் "கண்ணிழப்பு" என்றார்.

மெய்ப்போதத்தாற் பொய்ப்போதம் அழிவதன்றி இதனை இதலைழிக்கத் தொடங்கின் மேன்மேல் வளர்ச்சி யாய் அழிவுகூடாமையின், "கண்ணிழப்பை யென்ன கற்றுச் சாதிப்பான்" என்றார்.

யானையைச் சிங்கம் கொல்வதுபோல ஞானத்தால் அஞ் ஞானத்தைக் கெடுத்தலின், "சற்குருவா மன்று பெருஞ் தியம்" என்றும், * ஞாதுரு ஞான ஞேயமாய இவைகள் ஒன்றுந் தோன்றுது ஆன்மா அப் பார்வையால் சிவத்தில் அதிதப்படுதலின், "கேவலமாய் நிற்பதுபோற் பாராவெ னின்" என்றுங் கூறினார்.

"குருவாற்சியம்" என்றமையால், சிடனும் யானை என்று வருவிக்கப்பட்டது. "தடிப்பற்றுக் கேவலமாய் நிற்பதுபோல்" என்று உவமையாகக் கூறினமையால், சிங் கமும் யானையும் சிங்கமும் வருவிக்கப்பட்டன.

சிங்கம் போல்வான் பாராதலையின் எங்ஙனஞ் சாதிப்பா னென முடிக்க.

கலை, பக்குவம், மலபக்குவம் என மாறுக.

சியம் பாராவெனினின் என முடிந்தது, இராசசிங்கம் வந்தான் என்பதுபோலக் கொள்க.

---

* காண்பான் காட்சி காட்சிப்பொருள்.

இத் திருவெண்பாவால் அதிதீவிர பக்குவர்க்காயினும் ஞானசாரியரால் அன்றிப் போதநாசங் கூடாதென்ற கூறிய வாறு காண்க. (உ)

கூலித் தொழிலாளர் கொண்டுவிற்போர் போன்ற
வேலைப் பகடிகளை மேவாதே-காலம்போற் [குரு
பார்த்திருக்க வைத்த பரமகுரு வைப்பரவ
வார்த்தையிலை தீண்டா மனம்.

(உரை.) கூலித் தொழிலாளர் கொண்டுவிற்போர் போன்ற குரு வேலைப் பகடிகளை மேவாதே—வேலை செய்து கூலிவாங்கிக்கொள்ளுங் கூலித் தொழிலாளரையும், ஓர் பொருளைக்கொண்டு ஓர் பொருளைவிற்கும் வணிகரையும் போன்று, பிறர்க்குக் கிரியைகளைச்செய்து காட்டியும், உபதேசங்களைக் கூறியும், அவர் கையில் அருத்தம் பறிக்கும் தமக்கியையாத குருவென்னும் பெயர்கொண்ட தொழில் செய்யும் * பகடுக்கூத்தாடிகளை, மாணை, நீமெய்க்குருவென்று அடையாதே;

காலம்போல் பார்த்திருக்க வைத்த பரமகுருவைப் பரவ வார்த்தை இலை தீண்டா மனம்—கதிர் வலம் வருதலால் கணம், காழிகை, நாள், மாதம், இருது வருடம், யுகம் முதலிய காலங்களும், அக்காலங்கள்தோறும் தோன்றும் பிரபஞ்சங்களும் அநந்தபேதமாய்த் திரியவும், தனக்கோர் திரிவின்றி அவற்றோடும் தாக்கற்றிருந்த காலதத்துவம் போல, மாயையில் தோற்றிய கருவிகளும் இக் கருவிகளால் காரியப்பட்ட பிரபஞ்சங்களும் அநந்தபேதமாய்த் திரியவும்

* உள்ளதுபோன் றில்லாததைக் காட்டும் வெளி வேடம் அல்லது அகசியக் கூத்து.

தனக்கோர் திரிவின்றி இவற்றோடும் தாக்கற்றிருந்த அருளை வடிவாகக் கிருபாநோக்கம் வைத்து மாணாக்கனைச் சுட்டற் றிருக்கவைத்த மேலாகிய ஞானாசாரியனைத் தோத்திரம் பண்ண ஓர் வசனமும் இல்லை, தியானிக்க எனின் மனமும் அவனைத் தீண்டாது, ஆதலின் அக்குருவை அடைதி.

(தெளிப்பு.) கதிர் வலம் வருதலால், கண முதலிய கால பேதங்களும் பிரபஞ்ச பேதங்களும் காரணவாய்த் தோற்றி னும், அவைகள் தோற்றற்கும் துது வலம் வருதற்கும் கால தத்துவம் ஏதுவாதற்போல, மாயையிற் சூக்குமிகளும் பிரபஞ் சங்களும் காரணவாய்த் தோற்றினும், இவை தொழிற்படு தற்கும், இவை மாயையில் தோற்றுதற்கும் திருவருள் ஏது வாயிற்றென்பது காண்க.

பாமகுரு * சூக்குமைவாக்கும் தற்போதமும் கடந்த சிவமென் றறிவிக்கவேண்டி "வார்த்தையிலை தீண்டா மனம்" என்றார்.

இத் திருவெண்பாவால் ஆசாரியனையும் அநாசாரியனை யும் மாணாக்கனுக்கு அறிவித்தவாறு காண்க. (கூ)

குட்டித் திரட்சரடி யாமெருமுகக் கோன்முதித்துக்
கட்டிட் புனைந்த கதையாகுட் - துட்டமலப்
பித்திலே மூத்தவர்கள் பேய்பிதற்றும் பேதையர்க்
புத்திபோற் காட்டும் பொருள். [குப்

(உரை) துட்ட மலப் பித்திலே மூத்தவர்கள் பேய் பிதற்று ஆம் பேதையர்க்குப் புத்திபோல் காட்டும் பொருள்—

* வார்த்தை தோன்றற்கு மூதற்காரணமாய் உந்தியிலே காதவடிவாய் நிற்குமொரு சக்தி.

கொடிதாகிய மும்மலப் பைத்தியத்தால் முதிர்ந்த ஆசாரிய ரல்லார், ஓர்காற் கூறியது ஓர்காற் கூறுது பேய்பிடித்தாற் போலும் பிதற்று கின்ற அபக்குவர்க்கு உபதேசம் போலுங் கூறிய அருத்தம்,

குட்டித்திரட் காடி ஆறுழுகக் கோன் குதித்து சட்டிப் புதைந்த கதை ஆகும்—பல குட்டிகளோடும் காடி யானது கடலெல்லைத்தோடுஞ் செல்ல, அதனது கரைக் கண் நின்ற ஓரிடையன் அதனை ஆடென்னக் கருதி அந் நீரிற் குதித்து அதனைப் பற்ற, அதுவும் இவனைப் பற்ற, அதுவும் இவனும் அவ்வெள்ளத்து ஆழ்ந்தனரென்று உலகத்தார் கூறுங் கதைபோல ஆகும்.

(குறிப்பு.) * பாஞானம் என்பது சிறிதும் இல்லா தார் † அபாஞானங்களைக் கற்றுக்கொண்டு, மனைவி முத லிய குடும்ப வெள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கின்றபேர் சிலர் இடைப்பிறவித்தைக் கேட்க, அவர்க்கு அருத்த நிமித்தம் உபதேசிக்க, அந்த உபதேசப்பொருளால் இருவருக்குந் தோஷமேவிட்டுப் பிறவிச்சாகரத்து ஆழ்வர் ஆகலின், அக்கதையை இப்பொருளுக்கு உவமையாகக் கூறினர்.

இடையன் காமனை ஆடென்றும், காடி அவனை கதி கடத்தும் புனையென்றும் கருதினதுபோல அபக்குவனைப் பக்குவனென்றும், அநாசாரியனை ஆசாரியனென்றும் இரு வரு மாறுபாடாகக் கருதினர் என்பதுமாம்

இத் திருவெண்பாவால் அநாசாரியனுக்கும் அவ னிடத்து உபதேசங்கேட்ட அபக்குவனுக்கும் குற்றம் வருமென்று அறிவித்தவாறு காண்க. (சு)

---

* பாஞானம்-அநுபவஞானம். † அபாஞானம்-வாசகஞானம்.

குருட்டரிப்ப னர்க்குங் குபேரனென் று பேரோ
கருப்பிரத மோத்தையோ காட்டு - மருட்டரித்த
வாசானைப் போல்வாரோ வாரூறுக் கப்புறத்தே
பேசா திருத்தவல்லாப் பேர்.

(உரை.) குருட்டு அரிப்பனர்க்கும் குபேரன் என்று பேரோ கருப்பிரசம் மோத்தையோ காட்டும்—பிறவி அந்தகனுகிய * அரிப்பாளனுக்கும் குபேரனென்று பெய ருண்டு கொலோ? கரும்பினை இரசத்தை மோந்தை ஆதி அறிந்து கூறுமோ? அவைபோலும்;

ஆறுக்கு அப்புறத்தே பேசாத இருத்த அல்லாப் பேர் அருள்தரித்த ஆசானைப் போல்வரோ—அருள் வடிவம் அல்லாத மாயா வடிவங்கொண்ட அநாசாரியரானர் பூப்பத் தாறு தத்துவங்களையும் கடந்து நின்ற சிவத்தோடு மானைக் கனை இரண்டறக் கலப்பித்து மௌனமாய் வைக்க அருளே திருமேனியாகக்கொன்ன டைழுந்தருளி வந்து ஞானசாரிய ரைப்போலு மாவரோ?

(குறிப்பு.) குருட்டரிப்பனுக்குக் கைப்பாசமே அன் றிக் கட்பார்வை இன்மையால் பொற்பொடியே தான்றுதை, அங்ஙனம் இருப்ப அவனையும் செல்வத்தால் அளகேசன் என்று கூறக்கூடுமோ? அதுபோல அநாசாரியருக்குக் கிரியைத் தொழிலன்றி ஞானமேயில்லை, அங்ஙனம் இருப்ப அவரையுங் குரு என்று கூறப்படுமோ? என்றும்; மோத்தை யாடு † "கொழுந்தாடை தின்பதே அன்றிக் கரும்புதின்னை

---

* குப்பை மூதலியவற்றில் பொன் முதலிய அரித் தெடுக்கின்றோன்.

† கரும்பின் - நனிக்கழை.

அறியாதாதலின், அதனது இரசத்தை அறிந்து இங்ஙனமென்று தனது குட்டிக்குக்காட்ட அறியுமோ? அதுபோல அநாசாரியர் ஆகமங்கள் கூறும் மந்திரகலை, தந்திரகலை, உபதேசகலைகளுள் உபதேசகலையைவிட்டு இருவகைக் கலைகளை ஆராய்ந்து அவற்றுள் கூறிய சரியாதிகளைச் செய்து அவற்றுள் வரும் விடயாகந்தானுபவம் பெறுவதே அன்றிச் சிவாகந்தானுபவம் அணுவளவேனும் அறியார். அங்ஙனமிருப்பப் பிறர்க்கு அச் சிவாகந்தானுபவம் எங்ஙனங் கூறுவார்? என்றும், இந்த உவமைகளால் அறிவித்தவாறுங் காண்க.

ஆசிதன்றியும், ஆடோகாட்டும் என்னும் எதிர்மறை ஓகாரம் அவ்வாட்டை மறுத்து யானையைக் காட்டி நின்றதாகலின், கருப்பந்தோட்டத்தைப்போல் சிவாகமம், அதனுட்புகுதும் ஆடு யானைபோல் இதனுட்புகுதும் கிரியாகுரு ஞானகுரு.

ஆடு கரும்பைவிட்டு இலையைத்தின்று அதனது சுவையைத் தானும் அறிந்து தனது குட்டிக்குங் காட்டுதல்போலவும், யானை இலையைவிட்டுக் கரும்பைத் தின்று அதனது சுவையைத் தானும் அறிந்து தனது கன்றுக்குங் காட்டுதல் போலவும், கிரியாகுரு மந்திர தந்திரகலைகளை ஆராய்ந்து அவற்றுள் கூறிய சரியாதிகளை அநுஷ்டித்து அவற்றுள் வரும் விடயாகந்தத்தைதத் தானு மனுபவித்துத் தன்னை அடைந்த சீடனுக்கும் அவ் வுபதேசங்களால் அவ்வாகந்தத்தை வருவிப்பனென்பதும், ஞானகுரு மந்திர தந்திரகலைகளைவிட்டு உபதேசகலையை ஆராய்ந்து அதனுள் கூறிய ஞாகாகந்தத்தைதத் தானும் பெற்றுத் தன்னை அடைந்த

பக்குவனுக்தும் அந்த ஞாகாகந்தத்தை வருவிப்ப னென்பதாங் காண்க.

* " புறம்பு காண்குமன் பல்லிய னீசனை
அறிந்த ஞானி யகபுறக் காண்பலால்
எழும்பி காதலறி வின்கரும் பேதகாரணம்
செறிந்த வாடிலை தின்பன வென்பவே "

என்பது பிரபுலிங்கலீலை. அதுகஜாந்தாட் என்னும் கிரந்த சமாதியும் அது.

குருட்டாரிப்பனென்பதை " குருட்டாரிப்பனர் " என்று திரிபின்கட் பன்மையாகக் கூறினர்.

கட்பார்வை இன்மைபோல் ஞானமின்மை, கைப்பாரிசம் அறிதல் போல் கிரியைகளைச் செய்தல் என்பதாங் காண்க.

இத் திருவெண்பாவால் அகாசாரியர் இலக்கணமும் ஆசாரியர் இலக்கணமுங் கூறியவாறு காண்க. (ரு)

தன்னறிவு சாட்சியல்லாற் சாயுச்சி யப்படியனைச்
சொன்னாடினை கெட்டேன் றொலைப்பதோ-முன்
நடவா வழியியாருவன் சொல்ல நடந்து | னை
தடுமாறி னொந்தறியா தார்.

(உரை.) தன் அறிவு சாட்சி அல்லால் சாயுச்சியப் பட னைச் சொன்ன பிழை கெட்டேன் தொலைப்பதோ—சிவாநு பவம் நன்றாய் விளங்கிற்று என்பதற்கும் அஃது இன்றென் பதற்கும் தனக்குத் தன்னறிவுதானே சாட்சியா யிருக்கவும், யனைக் குறித்து மயக்கத்தால் அந்த அநுபவத் தனக்குண்டு

* சாதகாங்கதி - எ.

போந் காட்டிப் பிறருக்கு வீட்டையும் தெறியான உபதேசம் பொருளைக் கூறிய பாவக்கனை, கெட்டேன்! எந்தக்காலம் நீக்கிக்கொள்வதோ?

மூன்னே கடவாவழி ஒருவன் சொல்ல கடந்து தடுமாறி னோக்கு அறியாதார்—அஃதன்றியும் தாம் முன்செல்லாத ஒருவர்க்குச் செல்லுக்கால் அவ்வூரையும் தெறியாதென்று அங்ஙனறிக்கண் தான் மூன்ன கடவா ஒருவனைக்கேட்ப, அவன் அதன்கட் சென்றூன்போன்று தெறி அல்லா தெறிகூற, சூது உண்மையெனக் கருதி அங்ஙனறிக்கட்சென்று, மூன்னிருந்த வூரும் பின்னையடையும் வூரும் அன்றி கடவிலைத் தடுமாறி மனம் உடல் வருந்தி அறிந்தவரலர்.

(தறிப்பு.) ஜயன், தானி சந்திதனில் அசத்தியக் கூறி னுக்கும் இம்மைக்கண்ணே தன்பம் வருதலின், பூரண சுவத்தின் சந்தியில் அசத்தியக் கூறிய பாவத்தொலையாது ஆகவின், "கெட்டேன் ரூலப்பரோ" என்றும், வாக்காவ் கேட்டறிந்த காயத்தால் சென்றடையும் வூர்க்கு தெறி அறியா ஒருவன் தெறி கூறக்கேட்டு அதன்கட் சென்ற தனுன் வரும் இடர் அனுபவித் தறிந்தவர் மனத்தானுஞ் சென்று கூடுதற்கரிய வீடடையு தெறியைத் தாம் அறியா திருந்தும் அறிந்தார்போன்று பிறர்க்குக் கூறூர் ஆகவின், இன்னம் உவமித்துக் கூறினர்.

செறலின்கண் 'தம்' என்னும் பன்மை 'தன்' என் னும் ஒருமையாய் வந்தது.

"தவ்வால்" என்பதை மயக்கத்தா லெனக் கொள்க.

"மூன்னே" என்பதை இரண்டிடத்தும் கூட்டுக.

"கெட்டேன்" என்பது இரக்கக் குறிப்பின்கண் வந்த வழக்கச்சொல்.

இத் திருவெண்பாவால் சாத்தியனே அன்றி சாதகன் ஞாபேதகசம் பண்ணுதல் குற்றமென்று அறிவித்தவாறு காண்க. (சு)

பொய்போகப் போகப் பொருந்திப் பொருடானுஞ்
சையோக போக தரங்கத்தி—னையும்
பரிபாகங் கண்டு பதையாமற் பார்க்குங்
குருவேகாண் ஞானக் குரு.

(உரை.) பொய்போகப் போகப்பொருந்தி—பொய் யாகிய கருவிகள் மூப்பத்தாறும் நீங்க நீக்கவே அவைகளைப் பகுத்தறிந்து நீங்கி நின்ற அறிவு தானென்று தன்னை அருளால் உள்ளபடி கண்டு, பின்பு அருள் தரிசனம், பரை தரிசனம், பரையோகம் என்னும் இவற்றை அடைந்து,

பொருள் தான் ஆம் சையோக போக சரங்கத்தில் னையும் பரிபாகம் கண்டு பதையாமல் பார்க்கும் குரவே ஞானக் குரு—மெய்ப்பொருள் தாளுகிய அநுபவசத்தியில் தோன்றும் ஆகந்த போக சமுத்திரத்து அலையில் அவன் கரைந்துபோகுந் தீவிரதர பக்குவம் ஈதென்று கண்டு மாளுக் கனது போதம் அணுவளவேனும் பதையாது அடங்கக திருபாதோக்கம் வைக்கும் ஆசாரியனே ஞானசாரியனுவான்.

(குறிப்பு.) சீவகாரணம் பரையோகமளவுந் தொடர்த லின், "பொய்ப்போகப்போக" என்றார்.

"சையோகம்" என்றது அனுபவசத்தி. அது பரா யோகத்திற்கும் சுகாதீதத்திற்கும் இடையே தோன்றும் ஆகந்தப் பேற்றிற் கிடம்.

"போக தாங்கத்து" என்றமையால் சமுத்திரம் வருவிக்கப்பட்டது. தாங்கம் ஆகந்தமேவிடல். அவ்விடத்து ஆன்மபோதங் கெடுமாகலின், "கைவும்" என்றார்.

அடிதொடங்கி அநுபவ முற்றுங் கூறினமையால், இவ் வநுபவமுற்றும் பெறுமவன் அநிதீவிர பக்குவன் என்பது காண்க.

காண் - அசை.

இத் திருவெண்பாவால் ஞானசாரியராயினும் பக்குவரை அறிந்து போதியாராயின் அவரையும் ஆசாரியரல்' என்று கூறியவாறு காண்க. (எ)

தேனுண் டுமிழுந் திறம்போற் சிவாநந்த
மோனந் துளும்பி மொழிகாலத்—தேநின்று
தோன்றிருது போலுமொன்றைச் சுட்டாது கேட்
கான்றதவம் வேத மது. [பவர்கட்

(உரை.) தேன் உண்டு உமிழும் திறம்போல் சிவாநந்த மோனம் துளும்பி மொழிகாலத்தே—தேனை நிறைய உண்டு அதனை மீட்டும் கக்குந்தன்மைமேபால், உட்புறஞ்ய் எங்கும் நிறைந்து மௌனமாயிருந்த சிவாநந்த வெள்ளம் காருணியத்தால் ததும்பி ஞானசாரியர் உபதேசமொழிகளைக் கூறுங் காலத்தளவும்,

நின்று தோன்று இருதுபோலும் ஒன்றைச் சுட்டாது கேட்பவர்கட்கு ஆன்ற தவம் வேதம் அது—பணிவிடை செய்து நின்று, தோன்றப்பட்ட இருதுகாலம் போலும் அது இது என்று ஒன்றையுஞ் சுட்டாது பதைப்பற இருந்து அதனைக் கேட்பவர்களுக்கு, மாட்சிமைப்பட்ட தவமுடிவும் வேதமுடிவும் அங்ஙனம் நின்று கேட்குங் கேள்வியாம்.

(தறிப்பு.) ஆசாரியர் மாலைக்கண்ணது பக்குவம் அறிந்து வலியக் கூறுதலே அன்றி அவரை இவன் வலியக் கேட்க வாகாது ஆகலின், "மோனந் தலைநம்பி மொழிகாலத்தே" என்றும், இருதயவில் பதிந்த புட்ப பலாதிகள் தோற்றிலும் அவ்விருது விகாரம் இன்றி இருந்தாற்போலக் கருவிக ளோடுங் கூடியிருந்தும் அவற்றுள் தாக்கற்றுநின்று கேட்க வேண்டும் ஆகலின், "இருதயபோலுஞ் சுட்டாது கேட்ப வர்கள்" என்றுங் கூறினர்.

மோனந்தலைநம்பி மொழிகாலத் தென்றலையாலும், ஒன்றைச் சுட்டாது கேட்பவர்க ளென்றலையாலும், சொல் லாமற் சொன்னதென்றும், கேளாமற் கேட்டதென்றும் ஆயிற்று.

சுட்டறிற்க வந்தது தவப்பயன் ஆகலின், அதனைத் தவம் என்றும், "அங்ஙனம் நின்று கேட்கும் மொழியாக வின், அதனை தேவதம் என்றுங் கூறினர். அங்ஙனஞ் சொல்லுவதும், இங்ஙனங் கேட்பதும் சாம்பிரதாயம்

இதற் கிருவினாபோலல் ஆசாரியன் உபதேசங்கூறு மாறும் மாலைக்கண் வற்புறுத்தொள்ளுமாறும் அறிவித்தவாறு (அ)
காண்க.

இருளிற் சுடரென்ன விந்திரவி யென்ன
வருளாக் கடந்தபரா நந்தர்— திருவாக்
கழுதமனை யம்பரத்தொ னன்னளிமிந்த மாங்கே
மமனதையிரா தென்றே மதி.

* 'அங்ஙனம் நின்றுகேட்கும் மொழி பிரமோபதேச மொழியாகலின்' என்பதும் பாடம்.

(உரை.) இருளில் சுடர் என்ன இத்து இரவி என்ன அருளைக் கடந்த பராகந்தர் திருவாக்கு—பூத இருளின்கண் தோற்றும் விளக்குப்போலும் சந்திரன்போலும் சூரியன் போலும் பிரகாசித்து, ஆணவ இருளை நீக்குந் திருவருளை யுங் கடந்து, சிவாகந்தமயமாய் எங்கும் நிறைந்துள்ள ஞானை சாரியாது அழகிய வசனம்,

அமுத மழை அம்பாச்சொல் நல் நிமித்தம் ஆங்கே மமதை இராது என்றே மதி—அமுதமழைபோலும் ஆகாச வாக்குப்போலும் நல்ல நிமித்தம்போலுமாம், அன்றி அதன் கண் சிறிதேனும் அகங்காரம் உண்டாகாதென்று அறிந்தி.

(குறிப்பு.) அருள் தோற்றங்கால் மூவிதமாய்த் தோற்ற வானும், ஒன்றற்கொன்று அதிகமாய்ப் பிரகாசிக்கையானும், விளக்காதி மூச்சுடரையும் உவமையாகக் கூறினர்.

இதனைத் தத்துவப்பிரகாசம் 'பொறிகாணங்களை யிர்ப்போற் போதம்போ தத்தைப் பொருந்திநடத் திடுஞ் செயலாற் போதவுணர் உணர்ந்தே, அறிவினது செயலோ காமென வுணர்வுற் றிருப்ப வப்போது விளக்கெனவு மருணன் மதியெனவும், கரைவிடியுங்காலமென வொளிவந் தற்பவிக்கும்' என்பதனானுங் காண்க.

நீர்மழை கைம்மாறின்றிப், பொழியினும் உற்பத்தி காசம் உளவாகலின், அம்மழையை உவமை கூறாமல் அமுத மழை என்றும், 'ஆகாசவாக்கு உண்மை அறிவித்தல்போல் உண்மையாகிய சிவத்தை அறிவித்தலின், அப்பாச்சொல் என்றும், நல்ல நிமித்தங் கேட்டோர்க்குத் தாங் கருதிய பொருள் கைக்கூடல்போல் இதனைக் கேட்டோர்க்குத் தாம் கருதிய வீடு கைகூடுதலின், நன்னிமித்தமும் என்றுங் கூறினர்.

சற்போதத்தாற் கூறும் சொற்கட்கெல்லாம் மமதை இருத்தலின், "ஆங்கே மமதையிராது" என்றார். (க)

சாயா புருடனைப்போ லாநந்த மேதடித்த
மாயா வயிரி மனமாண்ட—நேயவுரை
ஆவேசர் வீர ரரசர் மடலாளர்
சாவாநந் தர்க்குச் சரி.

உரை.) * சாயா புருடனைப்போல் ஆநந்தமே தடித்த மாயா வயிரி மனம் மாண்ட நேய உரை—வடிவம் இன்றியா ஆகாயத்தில் வடிவம்போல் தடித்த சாயாபுருடனைப்போல், வடிவம் இன்றிய போராநந்தத்தானே காருணியத்தால் வடிவம்போற் காட்டி எழுந்தருளிவந்த மாயைக்கு ஓர் வயிரியானை ஞானசாரியாது மனதிதமான திருபா வசனம்,

ஆவேசர் வீர அரசர் மடலாளர் சாவாநந்தர்க்குச் சரி—ஆவேசம் எறினர் மாவீராயினர் ஓருகுடைக்கீழ் ஆளும் அரசர் மடலெடுத்தவர் தாம் சாவது இன்பமாக் கருதினோர் ஆகிய இவர்களது மொழிகட்குச் சரியாம்.

(குறிப்பு.) ஆரோகணமெறினர் தற்செயல் இன்றிக் கூறுதல்போல மூக்கரணங்களையும் தமதிடத்து அடக்கிக்கொண்டு அருளாய்நின்று கூறினமையாலும், மாவீராயினோர் எதிர்த்தாரைக் கொல்வதே கருத்தாகக் கூறுதல்போல் அறிவுக்கு எதிரீடாய்த் தோற்றுவன எல்லாம் அகலற்கொல்வதே கருத்தாகக் கூறுதலானும், ஒரு குடைக்கீழ் ஆளும் அரசர்

---

* தம் நிழலைப்பார்த்துப் பின்னகாயத்தையுற்று நோக்குகின்றார்க்கு அவ்வாகாயத்தின்கண் புருடவடிவம் போல் தோன்றும் அந் நிழற்காட்சி.

கூறிய மொழிப்படி இம்மைப் பயனுகுதல்போல் இவர் கூறிய மொழிப்படி மறுமைப்பயனுகுதலானும், மடலாளர் மற்றொன்றையுங் கூருது தாம் கச்சிய மாதினையே புகழ்ந்து கூறுதல் போலச் சரியாதிகளைக் கூருது தமது ஞாலுநந்தத்தையே புகழ்ந்து கூறுதலானும், சாவாநந்தர் தாம் சாவதே இன்பமாகக் கூறுதல்போலத் தற்போத வொழிவையே இன்பமாகக் கூறுதலானும், ஆசிரியர் முதலிய ஐவர் மொழியையும் உவமையாகக் கூறினர். அவரது மொழிக்கு உவமை கூறினமையால் 'இவரது மொழி' வருவிக்கப்பட்டது.

இவ்விரண்டு திருவெண்பாவாலும் ஞாலசாரியரது திருவாக்குச் சிறப்புக் கூறியவாறு காண்க. (கo)

சத்தியனிர் வாணத்தாற் றற்போதத் தாக்கறுத்து
வைத்தவழி காட்டு மறைப்புலவன்—சுத்தன்
றமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்த னென்பா
னெமக்கருளிச் செய்த தித.

(உரை) சத்தி: நிர்வாணத்தால் தற்போதத் தாக்கு அறுத்து வைத்த வழிகாட்டும்—சத்திய நிர்வாணத் தீக்கையால் எனது போதத்தை ஒன்றேறும் பற்றுது ஒழித்துச் சிவத்தோடு இரண்டறக் கலக்கவைத்து என்பால் வந்தடைந் தோர்க்கும் எனதுள்ளே தாமே நிறைந்திருந்து முத்தி நெறியை அறிவிக்கும்,

மறைப்புலவன் சுத்தன் தமிழ்க்குரிசில் சீகாழிச் சம்பந் தன் என்பான் எமக்கு அருளிச்செய்தது இது—வேதங்களெல்லாம் ஓதாமல் உணர்ந்த ஞானப்புலவர், மும்மலங்களையுங் கடந்து நின்ற நின்மலர், தமிழினது இலக்கணமெல்லாம் அளவிட்டறிந்த தமிழ்வேந்தர், சீகாழி யென்னுந் திருப்பதி

யில் எழுந்தருளியிருந்து திருஞான சம்பந்தப் பிள்ளையாரென்ற யாவரும் புகழ்ந்தின்ற சுவாமிகள், எம்மே பால்வார் வீடனைடந்து உய்யும் நிமித்தம் அருளிச்செய்தருளிய இந்நூலின் அருத்தம்.

(தறிப்படி.) இந்நூல் பிறர்க்கு உபகாரமாகக் கூறினமையால், "வழிகாட்டும்" என்பது பிறர்க்கெனைக் கொள்க. "மறைப்புலவன்" "தமிழ்க்குரிசில்" என்றமையால், உபய கலைகளையும் உடையானென்றறிக.

இத் திருவெண்பாவால் நூன்மாபு கூறியவாறு காண்க. ()

தாக்கற்ற பூரணத்திற் சார்தற்ற தம்மைமலம்
நீக்குந் துயரகல நேசித்தோர்—பார்க்கும்
வழிடலாநாம் னைபடறிந்த வாறுநீ மாளா
வொழிவி லொடுக்க பூராய்ப்போம்.

(உரை.) தாக்கு அற்ற பூரணத்தில் சார்து அற்ற தன்னைமல மம் நீக்கும் துயர் அகல நேசித்தோர்—எல்லா வற்றோறும் கூடி நின்றும் அவைகள் தன்றோறும் தாக்கற்றிருந்த பரிபூரண சிவத்தோடு ஆணவம் நீங்கியவிடத்து இரண்டறக் கலந்து விளங்காநின்ற தம்மை அந்த ஐக்கியத்தைத் தெரியவொட்டாது மறைத்து இரண்டுபடுக்கும் அவ்வானவமலத் தன்பம் அகன்றவுடன் அன்பு கொண்டோர்;

பார்க்கும் வழி பல காம் னைபமறிந்த ஆறு நீ மாளா ஒழிவில் ஒடுக்கம் உரைப்போம்—ஆராய்ந்தறியும் சாத்திரநெறிகள் பற்பல உளவாம், அவைபோலவும் மறைத்துக் கூறுது காம் னைபயவிரித்து அதனுள் இருந்த பொருள் சதென்று காட்டுமாறு, மாணாக்கனே! * நீ ஒழியாமல் ஒழியுமிடத்து ஒடுங்கும் நினையைக் கூறுவாம்.

* 'ஒழியாமல் நீயறுதியென ஒழியுமிடத்து' என்பதுபாடம்.

(தற்பிடி.) ஆன்மாவிற்குச் சிவத்தோடு ஐக்கியம் மல மறைப்பால் தெரியாதிருத்தலின், "கீக்குந் தயாகல தேசித் தோர்" என்றார்.

"பார்க்கும் வழிபல" என்றது பேதம் அபேதம் பேதா பேதங்களாய்க் கூறு தெறிகளை.

அநுபவ ரகசியமெல்லா மறையாமல் கூறினமையால், † "யைமறித்தவாறு" என்றார்.

ஆன்மா கெடாது அதனதுபோதங் கெடுதலின், "மாளா வொழிவில்" என்றார் அவ்விடஞ் சுகாதீதம்; அதனுள் ஒடுங்கும்தெறி இதனுள் கூறினமையால், "ஒழிவி லொடுக்க மூரைப்போம்" என்றார்.

இத்திருவெண்பாவால் நூற்பயன் கூறியவாறு காண்க.()

சுருதி குருவாக்குச் சுவாநுபவ மூன்றும்
சரியொத்த போதமூனைச் சார்வைத்—தெரிய
உரைத்தநூற் போர்கே ளொழிவி லொடுக்கம்
விரித்தநூற் கெல்லாம் விதை.

(உரை.) குருவாக்கு சுருதி சுவாநுபவம் மூன்றும் சரி ஒத்த போதமூனைச் சார்வை—ஞானாசாரியர் அருளிச்செய்த உபதேச மொழிகளும், இம்மொழிகள்மேல் ஐயம் பிறவாது இவற்றைத் தெளிவிக்கும் வேதாகமங்களும், இவ் விருவகை மொழிகளின் அருத்தப்படியே தம்மூள் தோன்றுஞ் சுவாநுபவமும் ஆகிய மூவகையுஞ் சரியொத்த இடத்தில் தோன்றும் போதிவாகிய பதியையும், அவற்றுன் இப்பதியை அறி

† உள்ளிருந்த சரக்கு வெளிப்படப்பையாய்த் தொட்டு உப்புற மேற்பட்டும் வெளிப்புற முட்பட்டு மடங்கமடக்கல்.

யும் பசுவையும், இப்பதினையைப் பசுவிற்கு அறியவொட்டாது மறைத்து நின்ற பாசத்தையும்;

தெரிய உரைத்த நால்வேர் கேள் ஒழிவிலொடுக்கம் விரித்த நூற்கு எல்லாம் விதை—உள்ளபடி விளங்கக்கூறிய இந்நூற்பெயரை, மாணைக்கனே! நீ கேட்டி, ஒழிவிலொடுக்கம் என்பதாம்; இம் மூப்பொருளையும் பற்பலவாய் விரித்துக் கூறிய நூல்கட்கெல்லாம் இஃது ஓர் வித்தாம்.

(குறிப்பு.) குருமொழியே அமையும் எனினும் தீவிர தர பக்குவம் இன்றிய மற்றைய * மூவர்க்கும் அதன்மேல் ஐயம் பிறக்கும் ஆகலின் சுருதி வேண்டிற்று. குருவும் சுருதியும் உண்டாய்ச் சுவாநுபவம் இன்றாயின் அது பாஷாணமன்று. ஆகலின், இம் மூன்றுஞ் "சரியொத்த போதம்" என்றார். இக் குறிப்பால் இந்நூலும் இம் மூன்றும் ஒத்துக் கூறிய தென்பது ஆயிற்று.

மூப்பொருளினது இலக்கண விரிவையெல்லாம் சுருக்கித் தற்போத ஒழிவிற்கு உபாயமே விரித்துக் கூறலாலும், போதவொழிவில் யாவுமொடுக்கிப் போதவிரிவில் யாவும் விரித்தலாலும், இதனை "விரித்த நூற்கெல்லாம் விதை" என்றார்.

இத் திருவெண்பாவால் நூற்பெயர் கூறியவாறு காண்க. (கm)

தந்த்ரகலை மந்த்ரகலை சார்படுந்தச் சாற்றுமது
மந்த்ர சரியாதி டார்க்கமிது—மூன்றைத்
தபதி விரத்தியரைச் சார்படியச் சாற்று
முபதேச மென்றே யுணர்.

* மந்தம் மந்ததரம் தீவிரமென்னும் பக்குவத்தினர்.

(உரை.) தந்திரகலை மந்திரகலை சார்பு அழுந்தச் சாதனும் அது மந்திர சரியையாதி மார்க்கம்—குண்டமண்டலவேதிகாதிகளைக் கூறுந் தந்திரகலைகளும், கிரியைகட்கு உரியவாகிய மந்திரங்களைக் கூறும் மந்திரகலைகளும். ஆன்மாவை மேன்மேலும் மலச்சார்போடு அழுந்தக் கூறும் அக்கலைகள் மந்திர தந்திர கிரியா பாவனைகளாற் செய்யும் சரியை கிரியா யோக நெறிகளாகும்;

இது மூன்றைத் தபதி விரத்தியரைச் சார்பு அழியச் சாற்றும் உபதேசம் என்றே உணர்—இந்நூல் மூற்பவங்களில் நிட்காமிய தவம்பண்ணின தபோதனர்க்கும், அந்நவத்தால் ஊட்பற் றறுதியுடையோர்க்கும் மலச்சார்பு அறும்படி கூறும் ஞானோபதேசம் என்று நீ அறிந்தி.

(குறிப்பு.) அக்கலைகளால் போதவிரிவே அன்றி ஒழிவின்மையால், "சார்பழுந்தச் சாற்றும்" என்றார்.

இது "தபதிவிரத்தியரைச் சார்பழியச் சாற்றும்" என்றமையால், மற்றையர்க்கு ஆகாதென்பது ஆயிற்று.

இத் திருவெண்பாவால் இந்நூல் உபதேசகலையென்று அறிவித்தவாறு காண்க. (கச)

உடற்குயிர்போற் கட்கிமைபோ லூசிநூ லொத்து
விடற்புலிதீ பாம்பினில்வீழ் வார்க்காம்-சுடச்சுடலை
வாழைக்கா காவேதி மட்கலத்துக் காகாவா
றேழைக்கா காத திது.

(உரை.) உடற்கு உயிர்போல் கட்கு இமைபோல் ஊசிநூல் ஒத்து விடன் புலி தீபாம்பினில் வீழ்வார்க்கு ஆம்—உடம்பை உயிர் அபிமானித்தல்போலும், கண்ணை

இளையானது காதற்செல்போதும், ஊரகஞ் சென்ற இடத்தோறும் சாடு பின் சேறல்போதும், ஞாஞைசாரியனைப் பிரியாது நின்று, அவர் திருமேனியை அபிமானித்தும் பாதுகாத்தும் அவர் திருவுள்ளக் குறிப்பின்படியே சென்றும் வழிபட்டு அவர் பார்த்தும் புலி, தீ, பாம்பாதிகளிற் செல்லத்திலும் பின்னிடையாது அவைமேல் விழும் அதிபக்குவர்க்கே இந்நூல் கொடுக்கலாகும்;

சுடச்சுடலும் வாழைக்கு ஆகா வேறி மட்கலத்துக்கு ஆகா ஆயு வழைக்கு ஆகாதது இது—மிகுந்த அக்கினிபாற் சுடலும் வாழைத்தண்டைச் சுடக்கூடாதவாறு போலும், பரிசனவேறி மட்கலத்திற் பரிசித்துப் பொன்னுக்கக் கூடாதவாறுபோலும், அங்ஙனம் ஆசாரியனை வழிபடமாட்டாத அபக்குவர்க்கு இந்நூல் கொடுப்பினும் அநுபவஞ் சித்தியாது.

(குறிப்பு.) உயிரானது உடம்பைத் தானும் அபிமானித்துத் தன்பந்துவைடத்தல் ஒப்பனைசெய்தல் முதலிய உபசாரங்களை அதற்குச் செய்வது போலும், அவர் திருமேனியைத் தம் தேகமாய் அபிமானித்துச் செய்யவேண்டும் உபசாரமெல்லாஞ் செய்யவேண்டும் ஆகலின், "உடற் குயிர் போல்" என்றும், இளையானது கண்ணிணைவிட்டு நீங்காதிருந்து அதன்கண் துரும்பாதி வந்துசார்வதற்கு முன்னே நின்று பாதுகாத்தல்போலும், இரவும் பகலும் விட்டு நீங்காதிருந்து அவனைத் தட்டமிருகமுதலிய வந்து சார்வதற்கு முன்னேநின்று பாதுகாக்கவேண்டும் ஆகலின், "கட்கிளைபோல்" என்றும் கூறினர்.

அதிபக்குவர் தேகாபிமானம்விட்டு அவரை மெய்ப் பொருளாகக் கருதினவர் ஆகலின், புலியாதிகண்மேற் செலுத்தினும் வீழ்வாரென்பது ஆயிற்று.

அக்கினிக்கும் பரிசனவேதிக்கும் விறகைச் சுடுதற் கும் உலோகங்களைப் பொன்னுக்குதற்குங் கூடுமேயன்றி வாழைத்தண்டையும் பட்சுலத்தையும் அங்ஙனஞ் செய்யக் கூடாததுபோல், இந்நூலால் பக்குவர்க்கு ஞானம் விளங் குமே அன்றி அபக்குவர்க்கு விளங்காதென்பது அறிக.

இத் திருவெண்பாவால் இந்நூற்கு அதிகாரிகளின் இலக்கணம் அறிவித்தவாறு காண்க. (கஞ)

ஆலிங் கனத்திலே யைந்தினையும் பாடுவோன்
மாலின்ப வாரி மறிதிரைபோற்—காலப்பூக்
கிண்கிணிவாய்ச் செய்ததுபோற் கின்னரிப்பாட் டுல்
கொண்டவர்போற் கண்டவர்க்கா கும். [லாசம்

(உரை) ஆலிங்கனத்திலே ஐந்தினையும் பாடுவோன் மால் இன்ப வாரிமறி திரைபோல்—மாதர் கூட்டுரவிற் செய்யும் ஐவகை ஆலிங்கனத்தால் வரும் இன்பம் ஐந்தினை யும் அநுபவித்தறிந்து ஒருவன் கூறிய பாட்டினைப் பாடும் ஓர் விடயுக்கு அக்கவி அருத்தத்தான் அவ்வின்பம் பெற் றான்போன்று உளத்தின்கண் அம்மயக்க இன்பவாரி எழுந்து அலை மறிவதுபோலும்;

காலப்பூக் கிண்கிணிவாய்ச் செய்ததுபோல்—உதய காலத்துத் தாமரை அரும்பு கிண்கிணிவாய்ச்செய்து அலர்ந் தாற் போலும்;

கின்னரிப்பாட்டு உல்லாசம் கொண்டவர்போல் கண் டவர்க்கு ஆகும்—மற்றொன்றினையுங் கேளாது ஒருவன்

பாடும் கின்னரிப்பாட் டோணையையே உல்லாசமாய் உட்
கொண்டவர்போலும் இந்நூலைக் கேட்டறிந்தோர்க்கே
ஞானகந்தம் உளதாம்.

(குறிப்பு) ஐந்தினையும் பாடுவோனுக்கு அதனைப்
பாடுந்தோறும் அவ்வின்பம் பெற்றான் போன்று உளத்து
இன்பம் மேன்மே லெழுதலின், "மறிதினை" என்றார். அவ
னைப்போல் இந்நூல் கேட்குந்தோறும் இவர்க்கும் சிவாநந்தம்
பெற்றார்போன்று உள்ளத்தில் மேன்மேல் சந்தோஷம்
தோன்றவேண்டும். ஆகலின் "மாலின்பவாரி மறிதினை
போல்" என்றும், முகமலர்ச்சி தோன்றல்வேண்டும் ஆக
லின், "காலப்பூக் * கிண்கிணிவாய்ச் செய்ததுபோல்"
என்றும், மற்றொன்றையுங் கேளாது இதனையே கேட்க
வேண்டும் ஆகலின், "கின்னரிப்பாட்டுல்லாசங் கொண்ட
வர்போல்" என்றும் இங்ஙனம் உவமை கூறினர்.

ஆலிங்கன பரிசபேதத்தால் சுகமும் ஐந்து பேதப்பட்ட
தெனக் கொள்க. அஃது ஐந்தென்பது "ஆலிங்கனமைந்து
மிகழ் பானம் பதிவென்றும்" என்னுங் காம நூலிற்
காண்க.

இத் திருவெண்பாவால் இந்நூல் கேட்கும் இலக்கணங்
கூறியவாறு காண்க. (கசு)

வணங்கா வுரைக்கு வணக்கமிலை தீங்கை
வணங்கிவாழ்த் தென்னில் வளமியா—வணங்குகிலும்
எல்லார்க்கு நன்று யிருப்பதிலை யாதொன்றும்
எல்லார்க்கும் பொல்லா திலை.

* வட்டவடிவாய் முகம்கொண்டு மலர்தல்.

(உரை.) வணங்கா உரைக்கு வணக்கம் இலை தீங்கை வணங்கி வாழ்த்து என்னில் வளம் யா—போதம் அடங்காது ஏமாப்பாற் கூறும் நூலுக்கு அடக்கமே இல்லை, தீமைகளைச் செறித்து ஓர் நூலாக்கி அதற்கு அடக்கங் கூறி இதனை இகழாது புகழுங்கள் எனின், அதனல் வரும் நன்மை யாதொன்றும் இல்லை;

வணக்குகிறும் எல்லார்க்கும் நன்றாய் இருப்பது இலை யாது ஒன்றும் எல்லார்க்கும் பொல்லாது இலை—நன்மை களைச் செறித்து ஓர் நூலாக்கி அதற்கு அடக்கங் கூறிலும் யாவர்க்கும் நன்றாயிருப்பது இல்லை, தீமைகள் அன்றி மற்றி யாதோர் நூலாயினும் யாவர்க்கும் பொல்லாங்காய் இருப்பதும் இல்லை.

(குறிப்பு.) *அடங்காவனையெனவே அவன் அடக்கங் கூறிலும் அடக்கம் அற்றென்பது ஆயிற்று.

தீங்கினைச்செறித்து அடக்கங்கூறிப் புகழச் சொன்ன மையால் வரும் நன்மை ஒன்றும் இன்றாயிற்று. நன்மைகள் யாவுஞ்செறித்து அடக்கங்கூறிலும் பொருமை முதலிய வற்றால் சிலரால் இகழப்படுதலின், "எல்லார்க்கும் நன்றா யிருப்பது இலை" என்றும், பயன் இன்றாய்க் கூறும் யாதோர் நூலாயினுஞ் சிலர் அங்கீகரித்தலின், "எல்லார்க்கும் பொல் லாதிலை" என்றுங் கூறினர்.

தீமை நன்மைகளை முற்கூறினமையால், "யாதொன் றும்" என்பது இவைகட்குப் பொதுவாயிருந்த உலக வனைக் கூறும் நூல் எனக் கொள்க.

---

*'வணங்காவனை' யென்றிருத்தல் வேண்டும்.

'உரை' என்பதும் 'தீங்கு' என்பதும் ஒருபொயர்.

'தீங்கு' என்றமையான் நன்மை என்று வருவிக்கப்பட்டது.

'வணக்கம்' = அடக்கம்.

'வளமியர்' என்பது இகரக்குறுக்கம் ஆகலின் தளை தட்டாது என்பது காண்க.

இத் திருவெண்பாவால் இலைகள் இங்ஙனம் இருப்பது யாம் எங்ஙனம் அவையடக்கம் கூறுமாறென்று குறிப்பால் அவையடக்கம் கூறியவாறு காண்க. (கஎ)

அறைந்த பனைகுழற்கு மாடினர்க்கு மேற்க
மறந்தழுவார் வாய்ப்பாட்டு வாரா—திறங்கேளீர்
கூடக் கரைவதலாற் கூறிற் பயனில்லாப்
பாடற்கார் பார்ப்பார் பயன்.

(உரை.) அறைந்த பனை குழற்கும் ஆடினர்க்கும் ஏற்க மறந்து அழுவார் வாய்ப்பாட்டு வாரா—கரத்தால் அறையப் பட்ட மத்தளத் தொனிக்கும், இத் தொனிக்கு ஏற்ப ஊதுங் குழல் ஓசைக்கும், இவைகட்கு ஏற்ப நடனம் மிடுவோர்க்கும் ஏற்பத் தம்மை மறந்து அழும் மகளிரது அவ் வழுகையாகிய வாய்ப்பாட்டு ஒத்துவாராது (அதுபோலும்) இந்நூல் தற்போதம் இழந்து நின்று கூறியது ஆகலின் எழுத்து முத லிய ஐந்து இலக்கணங்களோடு ஒத்துவாராது அஃது அங்ஙனம் ஆயினும் அதன்கட் கூறிய பொருள் தான் கண்குளதோ எனின் ;

திறம் கேளீர் கூடக்கரைவது அலால் கூறின் பயன் இல்லாப் பாடற்கு ஆர் பயன் பார்ப்பார்— இந்நூலின் பொருள் திறமையை நீர் கேட்பீராக, (அஃதெங்ஙனம்

எனின்,) இப்பொருளைக் கேட்போர் இப்பொருளோடுங் கூடத்தாமும் கரைந்துபோவதே யன்றிச் சொல்லுமிடத்துத் தாமுந் தமக்குவரும் இம்மை மறுமைப் பயன்களும் இல்லாத பாடற்கு யாவர் அருத்தம் பார்ப்பார்?

(குறிப்பு.) தாளமும் ஓசையுஞ் சரியொத்த கடனத்தோடு, தன்பமேலிட்டால் தம்மை மறந்து அதன் மயமாயிருந்து அழுவார் அழும் ஓசை ஒவ்வாததுபோல், இன்ப மேலிட்டால் தம்மை மறந்து இதன் மயமாயிருந்து கூறிய இப்பாடல் இலக்கணத்தோடு ஒவ்வாது என்பது குறிப்பால் அறியும்படி கூறினர்.

இதனது அருத்தம் போதவொழிவும் சிவாநந்தப் பேறும் ஆகலிலும், இதனைக்கேட்ட அதிபக்குவர் அக்கணமே போதம் அழிந்து ஆநந்த மயமாவர் ஆகலிலும், "கூடக்கரைவது" என்றும், பயன் பெறும் போதம் ஒழிவதலால், "பயனில்லாப்பாடல்" என்றுங் கூறினர்.

இத் திருவெண்பாவால் சத்தத்திற்குப் பஞ்சவதிகார வழுவுண்டாயிலும் அருத்தம் எல்லா நூல்களினது, அருத்தங்கட்கும் முடிவென்று கூறியவாறு காண்க. (கஅ)

போத வொழிவையுரை போய்த்தீண்டா பூதலத்
பாதமனங்கண்போலப்பற்றுமோ-நீதெள்ளியின்[1] தோர்
கண்ணுடியிற்கடலைக் கைவசமாக் காட்டுதல்போற்
கண்ணுரி சன்னனையப்போற் காண்.

(உரை.) போத ஒழிவை உரை போய்த் தீண்டா பூதவத்தோர் பாதம் மனம் கண்போலப் பற்றுமோ—ஆன்மபோத ஒழிவில் தானுய் இருந்துள்ள சிவத்தை வேதாகமம்

சாத்திரக்களால் அளவிட்டறியக் கூடாது. அஃதன்றிக் காலால் நடந்து சென்றும் பாணத்தால் கினைத்தும் கண் ணேர்பார்த்தும் இப் பூதலத்தோர் ஒவ்வோர் பொருளை அறிந்து பிடிப்பதுபோல் கருவிகளாலும் அதனை அறிந்து பிடிக்கக்கூடாது (ஆதலின், அங்ஙனம் அறிந்து பற்றுவது அன்றி,)

நீதெளியின் கண்ணுறையில் கடலைக் கைவசமாகக் காட்டு தல்போல் கண் காரி சன்னலையப்போல் காண்—நீ அச் சிவத்தை அறியுமிடத்துச் சிறிதாகிய கண்ணுறையில் பொரி தாகிய கடலை மகவுக்குப் பிரத்தியகூமாகக் காட்டுமாறு போலும், ஓர் காரி ஓர் புருடனுக்குக் கண் சைகையால் கலவிக்கு இடங்காட்டுமாறுபோலும் யாம் அதனை அறிவிக் குங் குறிப்பால் நீ அறிதி.

(தெளிப்பு.) போத ஒளிவை அப்போதத்தான் அறியும் கலைகளாலும் கருவிகளாலும் அறியக்கூடாதாகலின் "உரை போய்த்தீண்டா" என்றும், "பாதமணங்கண்போலப் பற்றுமோ" என்றும் கூறினர்.

பரிபூரண சிவத்தின் இலக்கணமெல்லாம் கன்றாய் விளங்கும்படி வேதாகமம் முடிவிற் கூறிய சில உபதேச மொழிகளை யெடுத்து இந்நூலிற் கூறுதலின் "கண்ணுறை யிற் கடலைக் கைவசமாகக் காட்டுதல்போல்" என்றும், பூரண நோக்கம், மௌனமுத்திரை முதலிய குறிப்பான் அச் சிவத்தை அடைதற்கு உபாயம் அறிவித்தலால், "கண்ணுறைச் சன்னலையப்போல்" என்றும் கூறினர். (கக)

• ஆனைக்கை போலடினை யுற்றுணிதா நற்றமாம்
மோனத்தை வாக்குமன முட்டுமோ—ஞானத்தூற்

காக்கை யிருந்தமனை கைமேற் பிறையென்ற வாற்கருதி னீசிவமா வை.

(உரை.) ஆனைக்கை போல் அபின அத்வி தாகத்தம் ஆம் மோனத்தை வாக்கு மனம் முட்டுமோ—பரிசம் அறியுங் கையும் கந்தம் அறியும் காசியும் ஒன்றுயிருக்கின்ற யானையினது தந்திக்கைபோன்று, பின்னம் இன்றிச் சிவமும் ஆன்மாவும் இரண்டற்றிருந்த அத்துவிதமாகிய மோனநந் தத்தை வாக்காற் கூறுங் கலைகளும் மனோபாவனைகளுந் தீண்டுமோ?

காக்கை இருந்த மனை கைமேல் பிறை என்றலால் ஞானத்தால் கருதின் நீ சிவம் ஆவை—ஓர் மனையையும் பிறையையும் ஒருவனுக்கு ஒருவன் அறிவிக்குங்கால், காக்கையிருந்த மனையென்றும் கைவிரல்மேற் பிறையென் றும் இங்ஙனம் அறிவித்தலான், அவன் அறிவதுபோலும், யாம் சிவத்தைக் குறிப்பான் அறிவிக்கும் உபதேசங்களை ஞானத்தால் கூர்ந்து விசாரித்து அறிதியெனின் நீயும் அச்சிவம் ஆவை.

(குறிப்பு.) கை காசி என்று இரண்டுறப்பாய் இரண்டு வியங்களையும் வேறுபிரித்து அறிவதாயிருந்தும் பிரிபடாது அதுவே இதுவாய் இதுவே அதுவாய் இருப்பதுபோல, சிவ மென்றும் ஆன்மாவென்றும் இரண்டு பொருளாய். இரண்டு ஞானங்களும் வேறுயிருந்தும் ஐக்கியத்துப் பிரிபடாது அதுவே இதுவாய்இதுவே அதுவாய் இருத்தலின், "ஆனைக்கைபோ லபினவத்துவிதம்" என்றார்.

மனைகள் பலவற்றையுங் கடந்து சென்று காக்கை யிருந்த மனையை நீ யடைதி என்று ஒருவன் அறிவிக்க அறி

தல்போல், குருகிகள் பலவற்றையுங் கடந்துசென்று நாக
தத்துவத்தின் முடிவில் நின்ற வைகுண்டியம் நீ என்று அறி
விக்க அறிதலால் "நாக்கையிருந்தமனை" என்றும், ஒரு
வனுக்கு ஒருவன் பிறரையை அறிவிக்குங்கால் விரல்மேற்
பிறை என்று சுட்டிக்காட்டி அறிவிக்க அவ்விரல் நோ
நோக்கி அப்பிறையைத் தரிசித்தல்போல், நாதாக்குத்தின்
முடிவில் நின்று நீ நிருவிருதேவ முன்னரிட்டுக்கொண்டு சிவத்
தைத் தரிசிக்கவேண்டும் என்று அறிவிக்க அம்முறைபே
சென்று சிவத்தைத் தரிசித்தலால், "கைமேற்பிறை" என்
றும் கூறினர்.

கண்போலும் ஆன்மா, விரல்போலுஞ் நிருவருள்.
பிறை போலுஞ் சிவம் எனக் கொள்க.

இவ்விரண்டு நிருவெண்பாவாலும் மெய்ப்பொருளை
அறிவித்தற்கு உபாயம் கூறியவாறு கண்க. (உ0)

முலையுண்ணி நீருண்ணை மோட்டெருமை மூடர்
சலமின்றிச் சாந்துணைப்பார் தர்க்கர்—பலநாளை
வட்டிலே போதுமவர் மாதேபோக வாசகத்தைநீ
கிட்டி னரகங் கிடர்.

(உரை.) முலை உண்ணாணி நீர் உண்ணாலும் மோட்டெருமை
மூடர் சலம் இன்றிச் சாந்து உரைப்பார் தர்க்கர்—பலநாளை
விம்மிச்சாகக் முலையிற்கடித்த உன்னாணிபோலும், தடாகத்
தில் நீர் அருந்தும் முதிர்ந்த எருமைபோலும், அறிவேதும்
இன்றிய மூடர்போலும், நீர் இன்றிச் சந்தனம் உரைப்பார்
போலும் ஆவார் நரகாயிரனர்;

பல நாளை வட்டிலே போதும் அவர் மாயோக வாசகத்
தைக் கிட்டின் நரகம் கிடர்—பல்லிதாளை வட்டிலைப் போலும்

லடைக் கூருநின்ற அவாதது மாயைக் கூட்டாவாகிய மொழி
ளைக் கேட்பினும் நிரயம் என்று அறிவீர்.

(குறிப்பு.) முலை உண்ணி பால் உண்ண அறியாது
உதிரம் அருந்தல்போல், நூலாற் சிவாகந்தப்பேறு அடை
யாது இம்மைப் பயன் கோடலின், முலையுண்ணி என்றும்,
டாகத்தில் தன் தாகந்தீர்க்கும் நீர் அருந்தாது அதனுள்
ழ்ந்து சேறுக்கிச்செல்லும் எருமைபோல், ஞானிகள் பாற்
செல்வினும் அவர் கூறும் ஞானமொழிகளைக் கொள்ளாது
கருக்கமாடி அவர் சித்தத்தைக் கலக்கிச் சேறலின், எருமை
என்றும், மூடர் யாவர் எது தன்கு கூறினும் தாம் பிடித்த
பிடி விடாது நிற்றல்போல், தீதாயினும் தருக்க வலியால்
தாம் பிடித்த பிடியை முற்றுஞ் சாதித்தலின், மூடர் என்றும்,
சமம் இன்றிச் சந்துரைப்பார்க்குக் கை வருத்தமே அன்றிப்
பயன் இன்றுவதுபோல், இவர் பலரோடுந் தருக்கமாடலான்
வருதல் வாய்வருத்தமே அன்றிப் பயன் வேறு இன்றுக
லின். "சலம் இன்றிச் சந்துரைப்பார்" என்றும், பல
தாரை வட்டிலின் நீர் தாரைகள் தோறுஞ் சேறல்போல் ஓர்
நெறி கூறுங்கால் அதனை முற்றுப்பெறக் கூறாது பல்நெறி
யாய் மலைவுபெறக் கூறலின், "பலதாரை வட்டில்" என்
றும், திருவருட்போதம் அன்றி மாயாபோதத்தால் கூறலின்,
"மாயோக வாசகம்" என்றுங் கூறினர்.

இதனால் கல்வி உடையோரோனும் பிரபஞ்சிகளினும்
கேடென்பது ஆயிற்று. கல்வி பொருள் என்னும் இரண்டு
செல்வதகளும் நல்லோர்பால் வின் நன்மையும், தீயோர்
பால் வின் தீமையும் மேன்மேல் வளர்தலின், தீயர்
என்பது ஆயிற்று.

இவாது மொழிகளை உண்மையாகக் கொள்வோர்க்
கும் தீதுவரும் ஆகலின், "திட்டிணாகம்" என்றார்.
இத்திருவெண்பாவால் தருக்கவாதிகள் தர்க்குணரும்,
அவாது மொழிகளைக் கேட்கல் ஆகாது என்பதும் அறி
(உக)
விக்கவாறு காண்க.

குன்றழலி னெய்துநீர் தேடுங் குருடரைப்போற்
கன்றுபசு வைப்பார்க்குங் காலம்போ-லொன்றுணர்
றில், வேட்டவுதி மோதி விடயம்போற் சற்குரு
தேட்டமதி பக்குவமாய்ந் தோர். [வைத்

(உரை.) குன்று அழலின் கொந்து நீர் தேடும் குரு
ரைப்போல் கன்று பசுவைப் பார்க்கும் காலம்போல் ஒன்று
ன்றில் வேட்ட அதிமோகி விடயம்போல்—மூதிர்வெளிற்
காலத்து மலைக்கட்படும் தீவெப்பத்தால் மெய்வருந்தி நீர் எங்
குளதென்று தேடும் அந்தகரைப்போலும், ஆவின் கன்று
தன் தாயைத் தேடும் காலம்போலும், விடயங்கள் பலவற்
றுள்ளும் ஓரோர் விடயத்தை கச்சிய மிகுந்த அந்தவிடய
மோகிபோலும்,

சற்குருவைத் தேட்டம் அதிபக்குவம் ஆய்த்தோர்—
ஞானசாரியர் எங்குளர் என்று தேடும் தேட்டமே அதி
தீவிரதர பக்குவம் என்று அறிந்தி.

(குறிப்பு.) அழலின் கொந்த குருடர் வெப்பத்தன்பங்
தணிப்பான் நீர் தெரியாது தேடுமாறுபோல், மிகுந்த
பக்குவர்க்குப் பிறவி தன்படமாய்த் தோற்றலின், இத்தன்
பந் துடைப்பான் ஆசாரியனைத் தெரியாது தேடலின்,
"நீர்தேடுங் குருடரைப்போல்" என்றும், கன்று காலை
மாலை யாகிய காலத்துத் தன் தாயை மிகுந்த அன்போடுந்

தேடல்போல், மூற்காலம்போல் அன்றி இக்காலத்தில் பிர பந்தம் பொய்யாய்த்தோற்றி மிருந்த அன்போடு நூலைசாரி யனைத் தேடினான், "கன்று பசுவைப் பார்க்நுங்காலம்போல்" என்றும், ஓர் விடயத்தை நச்சிய அதிதோகி அதனல் வரும் இன்பத்தைக் கருதிக்கருதி அவ்விடயம் என்று கிடைக் நுமோ என்று அதனையே தேடல்போல், போன்பத்தைக் கருதிக்கருதி இதனைக் கொடுக்கும் நூலைசாரியனை என் னைக்கு அடைவோம் என்று அவனையே தேடலான், "அதி தோகிவிடயம்போல்" என்றுங் கூறினர்.

விடயதோகிதோல் என்று கூட்டுக.

இத் திருவெண்பாவால் பக்குவ இலக்கணங் கூறிய வாறு காண்க. (உஉ)

பதி நிச்சயங் கூறல்.

பெண்ணை ணலியாய்ப் பிறந்துவளர்ந் தேயழியு
மென்ணுத பேத மியல்பின்றிப்—பண்ணுங்காற்
காரணகத் தாவொருவ னுண்டவனைக் காட்டுநூ
லாரணமு மாகமமு மாம்.

(உரை.) இயல்பு இன்றி என்னுத பேதம் பெண் ஆன் அலியாய்ப் பிறந்து வளர்ந்தே அழியும் பண்ணுங் கால் காரண கத்தா ஒருவன் உண்டு—ஓர் இயல்பு இன்றி அநந்த பேதங்களாயும், பெண் வடிவமாயும், ஆண்வடிவமா யும், இவ்விருவகையும் கூடிய அலிவடிவமாகியும் தோன்றி நின்று அழியப்பட்ட இத்தேகாதி பிரபஞ்சத்திற்குத் தற் சுதந்திரம் இன்மையால் தானே காரியப்பட மாட்டாது. ஆகலின், இதனை ஆகமத்திலே படைத்தற்கு நிமித்த

காரணமுகிய கருத்தன் ஒருத்தன் உண்டு ; (அவ்வாறு எங்ஙனம் எனின்,)

அவனைக் காட்டும் நூல் ஆராய்ச்சியும் ஆகமமும் ஆம்— அக்கருத்தினை அறிவிக்கும் நூல்கள் வேதாகமங்கள் ஆகும். (இவற்றுள் அறிந்துகொள்ளுதல்.)

(குறிப்பு) காரியங்கள் உண்டாவதற்குக் காரணம், முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என மூன்றுவகையாயிருக்கும். இவற்றுள், முதற்காரணம் மண், துணைக்காரணம் தண்டச் சக்கரம், நிமித்தகாரணம் குலாலன். நிமித்தகாரணமுகிய குலாலன் முதற் காரணமாகிய மண்ணினின்றும் துணைக் காரணமாகிய தண்டச் சக்கரம் கொண்டு, கடா குலாசாதி காரியங்களை உண்டாக்குவன். அதுபோல, குலாலன் போலும் நிமித்த காரணமுகிய சிவன், மண்போலும் முதற்காரணமாகிய மாயையினின்றும் தண்டச் சக்கரம் போலும் துணைக்காரணமாகிய தனது கிரியாசத்தியால், அநு காரண புவன போகங்களாகிய காரியங்களை உண்டாக்குவ ரெகலினும், கடா குலாசாதி காரியங்களைக் கண்டு இவற்றைக் காரியப்படுத்தும் குலாலன் ஒருவன் உளனென்று அறிவதுபோலும் அநுகாரண நிகழ்வைக் கண்டு இவற்றைக் காரியப்படுத்தும் கருத்தா ஒருத்தன் உளனென்று அறியலாமென்றுமாகலினும், "பண்ணுங்காற் காரணகர்த்தா வொருவனுண்டு" என்றார்.

மற்றைய நூல்கள் இவற்றைப்போல் உண்மையாய் அவனை அறிவிக்கமாட்டாவாகலின், "ஆவனைக் காட்டுநூ லாரணமு மாகமமாம்" என்றார்.

பெண் ஆண் என்னும் பண்மைபோல் ஆவியையும் பண்மையாகக் கூறினமையாற் பெண்ணுயிர்க்குரிய குறிகள்

காரணமுகிய கருத்தன் ஒருத்தன் உண்டு ; (அவ்வாறு எங்ஙனம் எனின்,)

அவனைக் காட்டும் நூல் ஆராய்ச்சியும் ஆகமமும் ஆம்— அக்கருத்தினை அறிவிக்கும் நூல்கள் வேதாகமங்கள் ஆகும். (இவற்றுள் அறிந்துகொள்ளுதல்.)

(குறிப்பு) காரியங்கள் உண்டாவதற்குக் காரணம், முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என மூன்றுவகையாயிருக்கும். இவற்றுள், முதற்காரணம் மண், துணைக்காரணம் தண்டச் சக்கரம், நிமித்தகாரணம் குலாலன். நிமித்தகாரணமுகிய குலாலன் முதற் காரணமாகிய மண்ணினின்றும் துணைக் காரணமாகிய தண்டச் சக்கரம் கொண்டு, கடா குலாசாதி காரியங்களை உண்டாக்குவன். அதுபோல, குலாலன் போலும் நிமித்த காரணமுகிய சிவன், மண்போலும் முதற்காரணமாகிய மாயையினின்றும் தண்டச் சக்கரம் போலும் துணைக்காரணமாகிய தனது கிரியாசத்தியால், அநு காரண புவன போகங்களாகிய காரியங்களை உண்டாக்குவ ரெகலினும், கடா குலாசாதி காரியங்களைக் கண்டு இவற்றைக் காரியப்படுத்தும் குலாலன் ஒருவன் உளனென்று அறிவதுபோலும் அநுகாரண நிகழ்வைக் கண்டு இவற்றைக் காரியப்படுத்தும் கருத்தா ஒருத்தன் உளனென்று அறியலாமென்றுமாகலினும், "பண்ணுங்காற் காரணகர்த்தா வொருவனுண்டு" என்றார்.

மற்றைய நூல்கள் இவற்றைப்போல் உண்மையாய் அவனை அறிவிக்கமாட்டாவாகலின், "ஆவனைக் காட்டுநூ லாரணமு மாகமமாம்" என்றார்.

பெண் ஆண் என்னும் பண்மைபோல் ஆவியையும் பண்மையாகக் கூறினமையாற் பெண்ணுயிர்க்குரிய குறிகள்

இருவகையும் இன்றிய புல் முதலியனவும் புழு முதலியனவும் அலியெனக் கொள்க.

'பண்ணுங்கால்' என்னும் ஏழனுருபை தான்கனுருபாகக் கொள்க.

"காரியங் காரணங்கண் முதற்றினை நிமித்தங் கண்டாய்
பாரின்மண் டிரிகை பண்ணு மவன்முத றுணைநி மித்தங்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக
வாரியன் குலால னுய்ந்நின் றூக்குவ னகில மெல்லாம்"

என்பது சித்தியார்.

இத் திருவெண்பாவால் பதி ஒன்று உளதென்று அறிவித்தவாறு காண்க. (உக)

தன்னை யறியாது வேறுண்டாய்த் தானறியா
துன்னிலொழி வாமுதிப்பீ ரொன்றுமிலைச்—சந்நிதிக்
யஞ்சுதொழி லாமதனையாந்த வாக்காலே [கே
கிஞ்சளவு கேட்கலுமா கும்.

(உரை.) தன்னை அறியாது வேறு உண்டாய்த் தான் அறியாது உன்னில் ஒழிவதும் உதிப்பு சிறு ஒன்றும் இலை—நீர் கூறிய சிவம் தன்னை அறிந்துகொண்டு இருக்குமோ எனின், மலாகிதமா யிருத்தலின், அது தன்னை அறியாது. மற்றோர் பொருளைத்தான் அறிந்துகொண்டு இருக்குமோ எனின், தனது ஞானத்தில் சகலமும் அடங்கியிருக்கும் ஆகலின், தனக்கு வேறாய் ஓர் பொருளுண்டாய் அதனை அறியாது நினைவோடுதான் கூடியிருக்குமோ எனின், நினைப்பு உண்டெனின் மறப்பு உண்டு ஆகலின், அது நினைப்

* சிவஞான சித்தியார். சுபக்கம் : முதற் சூத்திரம் - கஅ.

பும் மறப்பும் இன்றிய நிருவிகாரி அதுதான் ஓர் காலத்து உண்டாயதோ எனின், உற்பத்தி உண்டெனின் காசமும் உண்டு. அஃது அநாதி நித்தியம் ஆகவின், உற்பத்தி காசங்கள் ஒன்றும் இல்லை.

(இங்ஙனம் மலாகிதமாய்ப் பரிபூரணமாய் நிருவிகாரியாய் அநாதி நித்தியமாய் இருந்துள்ள அச்சிவம் எங்ஙனம் மாயையைக் காரியப்படுத்தும் எனின்,)

சந்நிதிக்கே அஞ்சு தொழில் ஆம் அதனை ஆகந்தவாக்காலே கிஞ்சு அளவு கேட்கலும் ஆகும்—அச்சிவத்தின் சந்நிதிக்கண்ணே பஞ்சகிருத்தியங்கள் உளவாம். அக்கிருத்தியத்தை ஆன்மாக்கண்மேல் வைத்த காருண்ணியத்தால் மௌலாகந்தந் தூண்டி அதுசூடூம் ஆகந்தவாக்கால் சிறிதளவு கேட்கலும் ஆகும்.

(தூண்டு.) சூரியன் இச்சாயத்தனம் இன்றி இருக்கவும் அவன் சந்நிதியில் ஒன்று முகையாயும், ஒன்று அலர்ந்தும், ஒன்று உலர்ந்தும், காமனை முத்தொழிற் படல்போல், சிவ சந்நிதானத்திலே மாயையில் சிருட்டியாதி தோற்றலால், "சந்நிதிக்கே அஞ்சுதொழிலாம்" என்றார்.

ஆகந்தவாக்கு, வேதாகமங்கள்.

"கிஞ்சளவு கேட்கலுமாகும்" என்றமையால், பஞ்சகிருத்தியத்தின் பெருமையை அளவிடக்கூடாதென்பது (உ-ம்) ஆயிற்று.

உதியா துளதாகி யோங்கிப்பே ராம
லதிசூக்கு மங்குறைந்தா காமற்—பதையாத
வாகாய மூங்காலும் போல வசைவற்ற
தேகாண் பரிபூ ரணம்.

(உரை.) உதியாது உளது ஆகி ஒங்கிப் போராமல் அதி சூக்குமம் குறைந்து ஆகாமல்—தான் ஒன்றிலுல் உற்பத்தி யாகாது எக்காலமும் உள்ளதாய், கருவிகள் மூப்பத்தாறையும் கடந்திருப்பதாய், போக்குவாவு அற்றதாய், நுண்ணிய பொருள்கட்கெல்லாம் நுண்ணிதாய், ஓர் காலத்திற் குறைந்து ஓர் காலத்தில் வளராததாய்,

பதையாத ஆகாயமும் காலும்போல அசைவு அற்றதே பரிபூரணம்—மூடிவகாலத்தில் சலனம் இன்றாய், வாயுவும் ஆகாயமும் பிரிவற்று ஒன்று யிருப்பதுபோலச் சடசித்துக் களாயுள்ள பிரபஞ்சமும் தானும் பிரிபடாது ஒன்றாய் அசைவற்று இருப்பதே அச்சிவத்தினது பரிபூரண சொரூபம்.

(குறிப்பு.) தநுவாதிகளை மாயையில் தோற்றவிப்பதும் ஆன்மாக்களை அவற்றிற் கூட்டுவிப்பதும் அந்தாகலிலும் அதற்குமேல் மற்றொன்று இன்மையாலும், "உதியாதுள தாகி" என்றும், அசலம் ஆகலின், "போராமல்" என்றும் யாவைக்கும் தாரகமாய் உட்புறம்பாய் இருந்தும் ஒன்றோடும் தாக்கற்றிருத்தலின், "அதிசூக்குமம்" என்றும், அகண்டகாரமாய் இருத்தலின், "குறைந்தாகாமல்" என்றும்; ஆகாயத்தில் வாயு சரிக்கும்போது அவ்வாகாயத்தையும் வாயுவையும் இவ்வாயுக்கட் டோன்றும் சீதள உட்டண முதலியவற்றையும் பிரித்துக் காணப்படும்; அவற்றின் நடுநின்றவாயு அந்த ஆகாயத்தில் அசைவற நிற்பின் முன்தோன்றிய பகுப்புக்கள் இன்றி அவ்வாகாயந் தானேயிருக்கும் அதுபோல, பெத்தகாலத்து மூப்பொருள்கட்கும், நடுநின்ற ஆன்மபோதம் சீவிக்கு மிடத்துச் சிவம் என்றும். பசு என்றும், பாசம் என்றும் பிரித்தாயப்படும்; முத்திகாலத்து அவ்வான்மபோதம் சீவியாது சிவத்துள் அடங்கின், முன்தோற்றிய பகுப்புக்கள்

ன்றுங் தோற்றுத கிவங்காணுய்ப் இருக்கும் ஆகலின்,
"ஆகாயமுங் காலுமபோல அலைசவற்றதேதகாண் பாரிபூரணம்"
என்றுங் கூறினர்.

காண் - முன்னிலை அசை.

இவ்வாண்டு திருவெண்பாவாலும் பதி இலக்கணங்
கூறியவாறு காண்க.

பதியானது சடசித்துக்கட்கெல்லாம் இடங்கொடுத்துக்
கொண்டு எல்லாம் காணுயிருக்கும் என்றீர்; ஆனால், அட்ட
மூர்த்த முதலிய வடிவங்களும் அத்திருமேனிகளை வழிபடு
வோர்க்கு அது கொடுக்கும் பயன் முதலியவும் யாவை
எனின், மேற்கூறுகின்றார்.

எட்டுருவு மைந்தொழிலுமிச்சைவடி வும்பயனுஞ்
சுட்டிய பூரணமுஞ் சுட்டுதலு—நிட்டைகளுந்
முன்னிழப்பி லின்ப முதிர்ந்தொடுங்கு மொன்றிரண்டு
தன்னருட்கே யாமத் தவை. [டம்

(உரை,) எட்டு உருவும் ஐந் தொழிலும் இச்சை வடிவும்
பயனும் சுட்ட அரிய பூரணமும் சுட்டுதலும்—பிரபஞ்சம்
எல்லாம் ஓர் வடிவமாய்க் கொண்டருளிய அட்டமூர்த்தமும்,
ரூபாரூபமாகிய சதாசிவமும் செய்யும் ஐந்தொழில்களும், சுமன
சுதந்திர இச்சையால் திருமேனிகொண்ட உருவமாகிய மகேய
சுர வடிவும், இவ்வடிவுகளை வழிபடுவோர்க்கு இவரால்
கொடுக்கப்படும் பதப்பிராப்தியாகாணங்களும், இவ்வடிவங்கள்
எல்லாம் கடந்து நின்ற மகேசுரதத்தால் சுட்டி அறிதற்கு அரிய
அரூபமாகிய பரிபூரண சொரூபமும், சுட்டி அறியும்படி
எழுந்தருளிவந்த குருவடிவும்,

நீட்டைகளுஞ் உன் இழப்பில் இன்பம் உதித்து ஒடுங்
குஞ் ஒன்று இரண்டும் அத்தனை தன் அருட்கே ஆம்—வீட
டையும் தெறியாகக்கூறிய உபாய நிட்டைகளில் தோற்று
வனவும், உனது போதஒழிவில் ஆநக்தந் தோற்ற அதனை
துறந்து அதனுள் அதீதப்படும் அத்துவிதம் என்பதும், இங்
ஙனம் அதீதப்படுவதன்முன் தோற்றும் துவிதம் என்பதும்,
ஆகிய இவை அத்தனையும் அச்சிவத்தினது அருட்சத்தியால்
உண்டாம்.

(குறிப்பு.) "எட்டுரு" என்றது பஞ்ச பூதங்களும்
சந்திர சூரியரும் ஆன்மாவும் எனக்கொள்க.

இத் திரு வெண்பாவால் பதியினது அருட்சத்தி (உசு)
இலக்கணங் கூறியவாறு காண்க.

உனையுணர்த்திற் பாச முதவி யுடையோன்
றனையுணர்த்தி னீயே தலமாங்—கனலே
விறகிடமாய்க் காணிலதன் வெம்மையை வேறுக்கி
யறியகிலாப் போலதுநீ யாம்.

(உரை.) உனை உணர்த்தின் பாசம் உதவி உடையோன்
தனை உணர்த்தின் நீயேதலம் ஆம்—பசுவாகிய உன்னை அறி
விக்குமிடத்தும், உன்னை அநாதியிலே மறைத்து நின்ற
பாசத்தை அறிவிக்கு மிடத்தும், பெத்தமுத்தி என்னும்
இரண்டு காலத்தும் உயிர்த் துணையாய் இருந்து உனக்கு உப
காரிக்கும் பதியை அறிவிக்கு மிடத்தும், நீயே மற்றைய
னிரண்டிற்கும் இடமாகும்; (அஃதெங்ஙனமெனில்.)

கனலே விறகு இடம் ஆய்க் காணில் அதன் வெம்மை
யை வேறு ஆக்கி அறியகிலாப்போல் அது நீ ஆம்—அக்கினி

யைக் காட்டத்தினிடமாய்க் கடைந்தகாணின், அவ்வக்கினி வேறு உட்டணம் வேறுய்ப் பிரித்து அறியக்கூடாதது போலச் சுவாநுபவத்தால் மலத்தினை நீக்கி உன்னை உள்ள படி அறியின், நீவேறு சிவம்வேறுய்த் தோற்றுது ஆகலின், அச்சிவம் நீயாகும்.

(குறிப்பு.) காட்டத்தில் அடங்கியிருந்த தீ கடைந்த போது தோற்றிறற்போல், முன் மலபந்தத்தால் தோன்று திருந்த ஆன்மா இப்போது சுருதி குரு சுவாநுபவத்தால் தோற்றவின் "கனலே விறகிடமாய்க்காணில்" என்றும், அதில் தோற்றிய தீயில் உட்டணமும் பிரகாசமும் இருத்தல் போல், தன்னை உள்ளபடி கண்ட ஆன்மாவினிடத்து ஆநந்த மும் அவ்வாநந்தம் மேன்மேல் விளைவதும் இருத்தலின், "அதன் வெம்மையை வேறுக்கி றறியகிலாப்போல்" என் றும், இரண்டிற்கும் "தீயே கலம்" என்றுங் கூறினர்.

அக்கினியைப்போல் பசு, சூடுபோல் சிவம், பிரகாசம் போல் பாசம் என அறிக. ஆநந்தம் சிவம், ஆநந்தத்தை யநுபவிப்பது ஆன்மா, ஆநந்தத்தை விளைப்பது மலம் என அறிக.

தத்துவமசி வாக்கியார்த்தமும் இங்ஙனம் காண்க என்று "அதுநீயாம்" என்றார்.

இத் திருவெண்பாவால் மூத்தியிலும் மும்மூர்த்திலும் பிரிவற்றிருக்கும் என்று அறிவித்தவாறு காண்க. (2 எ)

விடாதவத்தை மூடி விடம்புரிந்தாற் போலச்
செடாதிகளுஞ் சேதனனுஞ் சேர்ந்து—படாதுடம்
மச்சைக் கழற்றி னருள்வரு நீ யவ்வழியு
னிச்சைப் பொருண்மலமென் றெண்.

வற்றையுங்கூட்டி "அவ்வழி யுன்னிச்சைசப்பொருள்" என்றார்.

யாதேகாவத்தை அடுத்தது அந்த அவத்தை வடிவாய் ஆன்மா இருத்தலின், அதனை "அச்சு" என்றார்.

இத் திருவெண்பாவால் ஆன்மா சார்போதன் என்பதம், இச் சார்போதத்தால் தன்பமே அன்றி இன்பம் இன்று என்பதும் தெரிவித்தவாறு காண்க. (உஅ)

தன்னையறி வார்க்கெதிருந் தாணும் பயனுடமிலை
யென்னிற் சிவனையறி வென்போமோ—சின்னுத
தேதகற்று மாற்றெளிபோற் றேய்ந்துசிவ மாயிருக்கப்
போதகத்தை நாமொழிவிப் போம்.

(உனை.) தன்னை யறிவார்க்கு எதிரும் தாணும் பயனும் இலை என்னின் சிவனை அறிவு என்போமோ—கருவி கரணம் இல்லை, தேகமாகியதாணும் இல்லை, இத்தேகத்தால் அநுபவிக்கும் விடயப்படாணும் இல்லை என்று வேதாகமங்கள் கூறும் எனின், உவ்வான்மாவில் பக்குவனிக்கு உட்டணம்போல் பிரிபடாதிருந்த சிவத்தை எதிரிட்டு அறியத் தொடங்கின் என்ன விபரீதமாய்ப் போமோ? (யாம் அறிகிலோம்;)

சின்னுத தேது அகற்றும் மாற்று ஒளிபோல் தேய்ந்து சிவம் ஆய் இருக்கப் போதகத்தை நாம் ஒழிவிப்போம்—ஞானநாதனை, புடம்போட்டுக் கருமசம் அகற்றும் பொன்னுக்கு மாற்றெளி திருத்தல்போல், உன் போதங்குணறந்து சிவப்பிரகாசந் தாணுயிருக்க நாண உபாயங்களாணும் அப்

வற்றையுங்கூட்டி "அவ்வழி யுன்னிச்சைசப்பொருள்" என்றார்.

யாதேகாவத்தை அடுத்தது அந்த அவத்தை வடிவாய் ஆன்மா இருத்தலின், அதனை "அச்சு" என்றார்.

இத் திருவெண்பாவால் ஆன்மா சார்போதன் என்பதம், இச் சார்போதத்தால் தன்பமே அன்றி இன்பம் இன்று என்பதும் தெரிவித்தவாறு காண்க. (உஅ)

தன்னையறி வார்க்கெதிருந் தாணும் பயனுடமிலை
யென்னிற் சிவனையறி வென்போமோ—சின்னுத
தேதகற்று மாற்றெளிபோற் றேய்ந்துசிவ மாயிருக்கப்
போதகத்தை நாமொழிவிப் போம்.

(உனை.) தன்னை யறிவார்க்கு எதிரும் தாணும் பயனும் இலை என்னின் சிவனை அறிவு என்போமோ—கருவி கரணம் இல்லை, தேகமாகியதாணும் இல்லை, இத்தேகத்தால் அநுபவிக்கும் விடயப்படாணும் இல்லை என்று வேதாகமங்கள் கூறும் எனின், உவ்வான்மாவில் பக்குவனிக்கு உட்டணம்போல் பிரிபடாதிருந்த சிவத்தை எதிரிட்டு அறியத் தொடங்கின் என்ன விபரீதமாய்ப் போமோ? (யாம் அறிகிலோம்;)

சின்னுத தேது அகற்றும் மாற்று ஒளிபோல் தேய்ந்து சிவம் ஆய் இருக்கப் போதகத்தை நாம் ஒழிவிப்போம்—ஞானநாதனை, புடம்போட்டுக் கருமசம் அகற்றும் பொன்னுக்கு மாற்றெளி திருத்தல்போல், உன் போதங்குணறந்து சிவப்பிரகாசந் தாணுயிருக்க நாண உபாயங்களாணும் அப்

போதத்தையாம் ஒழிவிப்போம், (யாம் ஒழிவித்தபடியே நீ ஒழிந்துபோதி.)

(குறிப்பு.) பொன்னும்கல்லும் சரியொத்தபோது இரு புறனும் சாயாது மேல்மூள் நேரோநிற்கும் தீழ்மூள் போல, தன்னை உள்ளபடி உணர்ந்தோனுக்குக் கேவல சகலங்களிற் சென்று அதன் அதன் மயமாய் இருந்த அறிவு அவைகளைச் சாராது பிரிந்து அருள்நாட்டத்தில் அசைவற நிற்றலால், "தன்னையறிவார்க் கெதிருமில்லை" என்றும், தேகம் தானே யிருந்த அறிவு அதனைப்பிரிந்து அறிவாய் நிற்றலால், "தானே மிலை" என்றும், அருட்பூரணம் என்றைக்கு விளங்குமோ என்று அவ்வருள்மேல் இச்சையை வைத்து விடய இச்சையை நீக்கி நிற்றலால், "பயலுமில்லை" என்றும் கூறினர்.

புடம் போடுந்தோறும் இடைகுறைந்து மாற்று உயர் தல்போல, தற்போதத்தால் சிவத்தை எதிரிட்டு அறியாது அறிந்து அசைவற நிற்குந்தோறும் அப்போதங் குறைந்து சிவப்பிரகாசம் மேலிடலால், "நீதகற்றுமாற்றெளிபோல்" என்று உவமை கூறினர்.

இத் திருவெண்பாவால் சிவத்தை எதிரிட்டு அறியக் கூடாதென்று அறிவித்தவாறு காண்க. (உகூ)

பூரணவா நந்தமாந் தானே புறம்புபால்
வாரியின்மீன் போன்ற மலவாழ்வைப்—பாரீ
ருதியாது நின்ற வொளியையிரு ளாக்கு
மதுகாணு மக்கினித்தம் பம்.

(உரை.) பூரண ஆநந்தம் ஆம் தானே புறம்பு பால் வாரியில் மீன்போன்ற மல வாழ்வைப் பாரீர்—உள் புறம்

நடு கீழ் மேல் பக்கம் என்று கூறப்பட்ட எவ்விடத்தும் நிறைந்துள்ள பரிபூரண சுகமாகிய சிவந்தானே அசனவிட்டு நீங்காத ஆன்மாவிற்குப் புறம்பு? பாற்கடலிற் சஞ்சரித்தும் அப்பாலேப்புசிக்க அறியாது ஜந்துக்களைப் புசிக்கும் மீன் போலும் அப் பூரணாநந்தத் திருந்தும் அதனை அநுபவிக்க அறியாது மாயா மலமாகிய விஷயங்களை அநுபவிக்கும் இந்த ஆன்மாக்களினது மலவாழ்க்கையைக் கண்டோ கொலோ!
(அஃதன்றி.)

உதியாது நின்ற ஒளியை இருள் ஆக்கும் அது அக்கினித்தம்பம்—உதய அத்தமனம் இன்றி எக்காலத்தும் ஒன் இயல்பாய் நின்ற ஞானசூரியனைத் தெரியவொட்டாது இருள் போற்காட்டும் அது அக்கினித் தம்ப மந்திரம்போலும் ஆன் மாவை அநாதியே மறைத்திருந்த ஆணவமானது.

(குறிப்பு.) கூகைக்கு விழிக்கண் இருந்த குற்றத்தால் சூரியப் பிரகாசம் இருளாய்த் தோற்றியதுபோல் ஆணவமலக் குற்றத்தால் ஆன்மாவிற்கு ஞானவொளி இருளாய்த் தோன் றினமையால், "ஒளியை யிருளாக்கும்" என்றும், அக்கினி யோடு மந்திரம் அபின்னமா யிருந்து அவ் வக்கினி முழுதா மறையாது அதனது சூட்டை மறைத்ததுபோல், ஆன்மா வோடு ஆணவம் அபின்னமா யிருந்து அவ்வான்மா முழுதா மறையாது அதனது ஞானத்தை மறைத்தலான், "அது காணு மக்கினித் தம்பம்" என்றுங் கூறினர்.

காணும் - அசை

இத்திருவெண்பாவால் மலத்தடையால் ஆன்மாவிற்கு ஆநந்தமும் திருவருளும் தோற்றாதிருந்தன என்று அறிவித்த
(நடு)
வாறு காண்க.

சுடல்சிவநீ ராஎன்மா வுப்புமலங் சுன்ம
மடர்வாயுப் போத மலிகா—ணிலைடைவிடா
தவ்வாதி யுட்கரண மைம்பொறியிற் பம்பரம்போ
லிவ்வா றுனைச்சுழற்று மென்.

(உரை.) கடல் சிவம் நீர் ஆன்மா உப்பு மலம் அடர் வாயு சன்மம் அலைபோதம்—கடல்போலுஞ் சிவம், அதனுள் நீர்போலும் ஆன்மா, அந்நீருள் பிரிவடாதிருந்த உப்புப் போலும் ஆணவம், அந்நீரின்மேல் வீசுங் காற்றுப்போலும் சன்மம், அக்காற்றுன் எழும் அலைபோலும் போதம்; (ஆகிய இவற்றுள்,

இடைவிடாது அவ்வாதி உட்கரணம் ஐம்பொறியில் பம்பரம்போல் இவ்வாறு உனைச்சுழற்றும் என்—காற்றைப் போன்ற சன்மத்துக் கீடாய் இச்சா ஞானக் கிரியைகள் பஞ்சமூர்த்திகளைச் செலுத்த, இப்பஞ்ச மூர்த்திகள் அகார முதலிய அக்காரங்களைச் செலுத்த, இந்த அக்காரங்கள் மன முதலிய உட்கரணங்களைச் செலுத்த, இவ்வுட்கரணங்கள் ஐம்பொறிகளிடத்து இடைவிடாது உன்னைப் பம்பரச் சுழல் போலும் இங்ஙனம் எக்காலும் சுழற்றும் என்று அறிந்தி.

(குறிப்பு.) அவ்வாதிகளைக் கூறினமையால் இவற்றிற்கு முதற்காரணமாகிய இச்சா ஞானக்கிரியை முதலிய வருவிக்கப்பட்டன.

காற்றுன அலை எழல்போல் ஆன்மாக்கள் சன்மத்துக் கீடாய்ப் போதம் பலபட விரிதலின் அங்ஙனங் கூறினர்.

கான் - அளை.

இத்திரு வெண்பாவால் திருவருள் ஆன்மாக்களைக் கன்மத்துக்கீடாய் கடத்துமாறும், அவ் வான்மாக்கள் கா

ணங்களோடுங்கூடி இந்நிய வழிச்சென்று விடயங்களைப் புசிக்குமாறும் இங்ஙனம் என்று அறிவித்தவாறு காண்க. ()

மண்ணுதி சத்தாதி வாக்கு மனமாதி
கண்ணுதி நாதாந்தங் கண்டகன்ற—வுண்மைம
தனையணுவென் றுயுணர்ந்துந் சார்பினையுங்கண்ட
வுனையறிவென் றுள்ளே யுணர்.

(உரை.) மண் ஆதி சத்தாதி வாக்கு மனம் ஆதி கண் ஆதி நாதாந்தம் கண்டு அகன்ற உண்மைதனை—பிருதிவி முதலிய பஞ்சபூதங்களும், சத்தாதி விடயங்களும், வாக்காதி கன்மேந்திரியங்களும். மனமாதி அந்தக் காணங்களும், சட்சுவாதி ஞானேந்திரியங்களும், காலமாதி நித்தியாதத்துவங்களும், சுத்தவித்தை ஆதிநாதம் ஈறுபட்சொல்லப்பட்ட சிவதத்துவங்களும், ஆகிய இம் முப்பத்தாறையும் அடி தொடங்கி வேறு வேறாய் ரூபதரிசனம்பண்ணி அறிந்து, அவையெல்லாம் தான் அன்றென்று நீங்கி, அவற்றின் முடிவில்நின்ற சைதன்னியத்தை,

அணு என்றே உணர்த்தும் சார்பினையும் கண்ட உனை அறிவு என்று உள்ளே உணர்—என்மனா என்று உனக்கு அறிவிக்கும் நிருவருளையும், அவ்வருளால் முன்கண்டு நீங்கிய கருவிகள் இவை என்றும், கண்ட உன்னை அறிவென்று உனக்குள்ளே அறி.

(குறிப்பு.) கருவிகள் முப்பத்தாறும் ஒன்றை ஒன்று அறியாமையாலும், தத்தம் குணங்களைத் தாம் அறியாமையாலும், காட்சி கண்ணென அறியாததுபோல் அவைகள் ஆன்மாவை அறியா ஆகலாலும், கண் காட்சிகளை அறிவதுபோல கருவிகளை சுத்த சிதென்ற பகுத்து அறிந்து நீங்கி நின்றது

ஆன்மா ஆகலானும், "காதாத்தங் கண்டகன்ற உண்மை
கனை" என்றார்.

தன்னால் அறியப்பட்ட கருவிகளைச் சடமென்றும்,
அவற்றைத் தனக்கு அறிவித்தது அருளென்றும், அக்கருவி
கள்போல் சடமும் அன்றித் திருவருளைப்போல் போதிவும்
அன்றி நின்று அறிந்த அறிவு சான் என்றும், தன்னையும்
பாசத்தையும் திருவருளையும் அவ்வருளால் கண்டமையால்,
"உணர்த்துஞ் சார்பினையும்" என்றார்.

தத்துவங்களை எல்லாம் பகுத்துக் கூறினமையால்
வித்தியாதத்துவம் வருவிக்கப்பட்டது.

அறிவோடுங்கூடி அறிவாயிருத்தலின் ஆன்மாவையும்
அறிவென்றார்.

இத் திருவெண்பாவால் ஆன்மா ஈதென்று அறிவித்த
(கூ உ)
வாறு காண்க.

அஞ்சுதொழி லாவதுவே யஞ்சவத்தை கிஞ்சலிலா
வஞ்சிடத்துங் கொள்ளிவட்ட மாகவே—பஞ்சவன்
வைத்த படிகம்போன் மாறுதலை மயக்கல் [னம்
சித்திரக்கூத் தாகத் தெளி.

(உரை.) அஞ்சுதொழில் ஆவதுவே அஞ்சு அவத்தை
கிஞ்சல் இலா அஞ்சு இடத்தும் கொள்ளிவட்டம் ஆகவே—
சிவனது பஞ்சகிருத்தியங்கள் யாவை எனின், சாக்கிரமுத
லிய அஞ்சவத்தைகளுமாம். சுருக்கமில்லாத இவ் வஞ்சவத்
தைகளிடத்தும் கொள்ளிவட்டம் போலாக அதி சீக்கிரமாய்
மாறிமாறிவரச் சுழற்றி,

பஞ்சவன்னம் வைத்த படிகம்போல் மாறுதல உன
மயக்கல் சித்திரக் கூத்து ஆகத்தெளி—வைக்கப்பட்ட பஞ்

வன்னத்தின் மயமாம் படிகம்போல நீ சேர்ந்த அவத்தை யாது அதன் மயமாக்கி இடையறாது உன்னை மயக்குதல் அவனது அழகிய திருக்கூத்தாக அறிதி.

(குறிப்பு.) மூப்பத்தாறு கருவிகளோடும் ஆன்மா தேக போகங்களை அறிதலின், சாக்கிரத்தைச் சிருட்டியாயும், இச் சாக்கிரத்தில் புசித்த வாசனை சொப்பனத்தும் அறிந்து நிற்றலான், இதனைத் திதியாயும், இச் சொப்பனம் போல் சிறிது நிழலெனத்தோன்றி மறைதலால், சுழுத்தியைச் சங்காரமாயும், பிராணவாயு இயக்கம் இன்றி ஒன்றுந் தோன்றாது இருத்தலால், தூரியத்தைத் திரோபாவமாயும், அதீதம் கருவிகள் எதும் இன்றி ஆணவ இருளாயிருத்தாயினும் அதன் நிமித்தமாய் மாயையில் சதாவாதி கொடுத்தல், இருவினை ஒப்பு வருவித்தல், ஆசாரிய மூர்த்தமாய் வந்து உபதேசித்தல் முதலிய அநுக்கிரகம் பெறுதலின், இவ்வதீதத்தை அநுக்கிரகமாயுங் கூறினர்.

"கிஞ்சலிலா" என்கிற விதப்பான், உடல் தோன்றி நின்று அழிவது, சிருஷ்டி திதி சங்காரம். உயிருள் மயக்கமும் தெளிவும் வருவன திரோபவ அநுக்கிரகம் இங்ஙனம் உடலின் மூன்றும், உயிரின் இரண்டுமாக வருவனவும்,

ஓர் இந்திரியத்தில் ஆன்மா பிரவேசித்தால் சிருஷ்டி; அதனால் அறியும் விஷயதனை அநுபவித்தல் திதி; அவ் விஷயமயமாய் அழுந்துதல் சங்காரம்; அதனில் மூழ்விப்பித்தல் திரோபவம்; அதனைத் தெளிந்து கோடல் அநுக்கிரகம். இங்ஙனம் இந்திரியங்கள் தோறும் வருவனவும்,

மனத்தான் ஓர் பொருளை நினைத்தல் சிருஷ்டி, அப் பொருளில் பிரியம் பிறத்தல் திதி, அழிந்து எப்போது வரு-

மென்று திணைத்து நிற்றல் சங்காரம், அப்பொருளில் மயங்குதல் திரோபவம், அதனைத் தெளிந்துகோடல் அநுக்கிரகம், இங்ஙனம் காலத்தில் வருவனவும் ; இவை முதலிய பெத்தத்தில் வரும் பஞ்ச கிருத்தியங்களும்,

ஞத்தியில் அருள் வடிவமாதல் சிருஷ்டி, ஆகந்தப்பேறு திதி, இதில் அதீதப்படுதல் சங்காரம், ஞாதிரு ஞானேயமென்னும் மூன்றுந் தோன்றுதிருத்தல் திரோபவம். இவை கான்கும் எக்காலமும் விளங்கல் அநுக்கிரகம். ஆகிய இம்முறையே வருவனவுங் கொள்க.

இத் திருவெண்பாவால் பஞ்சகிருத்தியத்தால் அவத்தைகள் நிகழ்வன என்று அறிவித்தவாறு காண்க. (கூ)

மாயா விகார மதுபானம் போன்றுமயக்
கோயாது துன்று லொழியுமோ—நீயதுவாய்ப்
போகாம லாடும் பவுரியவன் பொய்க்காட்சி
யாகாது போலே யறி

(உரை.) மாயாவிகாரம் மதுபானம் போன்று மயக்குஞ்சியாது அது உன்னல் ஒழியுமோ—மூற்கூறிய அவத்தை மாயாகாரியமாகிய கருவிக் கூட்டங்களினது சேட்டை. அது, மதுபானங் கொண்டவனது கற்குணத்தை மாறுபடுத்திக் தனது வகிரிமேலிட்டு அவனை மயக்குதல் போன்று, உனது ஞானகுணத்தை மாறுபடுத்திக் தனது குணமேலிட்டு உன்னை ஒழிவற நின்று மயக்கும் ; அதனை உன்னல் ஒழியக்கூடுமோ ?

(ஆயல் நீர் இங்ஙனங் கூறிய ஆற்றான் அதனை ஒழிக்க வேண்டாவேவா எனின், அதனை ஒழியாது ஒழிக்கற்கு உபாயம் உண்டு, அஃது எங்ஙனம் எனின்,)

நீ அது ஆய்ப்போகாமல் ஆடும் பவுரியவன் பொய்க் காட்சி ஆகாதுபோலே அறி—ஆடப்பட்ட ஓர் பாய்ப்பணைக் கூத்தன் கோட்டிவேடம் போட்டான் ஆயினும், அப்பொய் வேடக்காட்சி தான் ஆகாது தன்னை வேறு கண்டு நின்றற் போல், அவத்தையுள் இருத்தி எனினும் நீ அதன் மயமாய்ப் போகாது உன்னை வேறு பிரித்து அறிதி எனின், அஃது உன்னை மயக்காது என்று அறிதி.

(தறிப்பு.) இங்ஙனம் பிரித்து நிற்றல் சாக்கிராவத்தையில் அன்றிச் சொப்பனாதிகளில் கூடாதெனினும், அச்சாக்கிராவத்தையைப் பிரித்து நிற்பின் திருவருள் தோற்றமும், இத் தோற்றம் மேலிடின் அச்சாக்கிராவத்தை மலறையும், அது மறையவே அதனது வாசனையான சொப்பனாதிகள் தோன்றா; ஆகலின், பொதுப்படக் கூறினர்.

இத் திருவெண்பாவால் அவத்தை நீங்கி நிற்றற்கு உபாயங் கூறியவாறு காண்க. (கூ)

பஞ்ச கிருத்தியத்தான் உண்டாம் அஞ்சவத்தையுங் கடந்து சிவத்தில் அதிதப்பட்டு நின்றார்க்கு ஓராண் காலத்து ஓராவத்தைகள் தோன்றுவோ எனின், மேற் கூறுகின்றார்.

பழுதையைப் பாம்பென்ற பயம்போலுற் பாவித்
தழுதுடம்பை யாட்டுகினு மாமோ-தொழுதிலொழிவி
னின்றசிவ யோகி நினைத்தொருகா னீவாரா
யென்றணைத்தா லும்படனதையா தென்.

(உரை.) பழுதையைப் பாம்பு என்ற பயம் போலவ் பாவித்து அழுது உடம்பை ஆட்டுகினும் ஆமோ—இருளாவ்

பழுதையைப் பாம்பென்று கண்ட பயகம்பறுதிகள் சுடாால் பழுதையென்று அறிந்து போலல் இப்போது சுடாால் அறிந்த பழுதையில் முன்னிருளால் தோற்றிய பாம்பு இருப் பதாய்ப் பாவித்துப் பயந்ததுபோல் அழுது உடலை நடுக் கிலும் முன்போலும் பயகம்பறுதிகள் உண்டாகா; (அதுபோலும்,)

தொழில் ஒழிவில்நின்ற சிவயோகி நினைத்து ஒருகால் நீ வாராய் என்று அழைத்தாலும் பதையாது என்—முன் மல இருளால் மெய்போல் தோற்றிய அவத்தைகளை எல்லாம் இப்போது ஞானசூரியனல் பொய்யாகக்கண்டு அவ்வவத்தை களை நடத்தும் பஞ்ச கிருத்தியங்களையும் கடந்து மேல்நின்ற சிவத்தில் அதீதப்பட்ட சிவயோகி கருதி, அவத்தாய்! ஒரு தரம் மீட்டு இங்கு நீ வருதி என்று அழைப்பினும். (முன் அழையாதிருக்கவும் தானே வந்து கொள்ளிவட்டம்போல் நழன்றது) இப்போது அணுவளவேனும் அசையாதிருந்தது ஏதென்கொலோ! (யாம் அறிகிலோம்.)

(குறிப்பு.) சிவயோகிக்குச் சீவகாருணிய முதலிய வற்றல் மௌனுகந்தம் கதும்பிற்றாயினும், திருவருள் வடி வாய் நிற்பதன்றி மாயாவடிவம் ஆகான் ஆகலினும், சூரியப் பிரகாசத்து இருள் சோற்றுது. அதுபோல ஞானப்பிர காசத்தில் மாயாந்தகாரம் தோற்றமாட்டாது ஆகலினும், "அழைத்தாலும்" என்றும், "பதையாது" என்றுங் கூறினர்.

இத் திருவெண்பாவால் சிவயோகியை அவத்தைகள் சாராமாட்டா என்று அறிவித்தவாறு காண்க. (கூடு)

இங்ஙனம் இருந்த சிவயோகிக்கு உபதேசித்தல் முதலிய வற்றுல் தான் பிறர் என்று தோற்றுவது என்னெனின், மேற் கூறுகின்றுர்.

கன்னிக் கதலிதனை நார்கழிப்பான் கண்போலத்
தன்னையறி யாவறிவே தான்மீளச்—சொன்னலு
நாவென்ற நாவேவோ ணனென்ற சொல்லளவே
யாமன்றித் தானெதிரா கா.

(உரை.) கன்னிக் கதலிதனை நார் கழிப்பான் கண் போலத் தன்னை அறியா அறிவே தான்மீளச் சொன்ன லும்—ஈரைவாழையினது மட்டைநார் கழிக்கத் தொடங்கி ஞன் கண் அம்மட்டை— உளது உளதென்று சுட்டிப் பார்க் குந் தோறும் அவனது கை மட்டைகளை எல்லாம் கழித்துச் சென்று அதனுள் இருந்த குருத்தையும் விரித்து விடுத்த போது ஆண்டு முன்போற் சுட்டுதற்கு வேருன்றும் இன் றிச் சும்மா இருந்த அக் கண்போலும், ஆசாரியன் விவேகத் தால் மூப்பத்தாறு கருவிகளையும் விடுவிக்கத் தான் கடந்து சென்று அவற்றின் முடிவில் நின்ற அருளையும் பரையையும் கடந்து அதன்மேல் தோன்றும் ஆநந்தத்தையும் எதிரிடாது அதனுள் அதீதப்பட்டு இருந்த சிவயோகி தன்னை அறியா அறியவே ஆவன், அவ்வறிவாயிருந்தான் மீட்டும் நீ கான் என்று பிரித்து அவ்வறிவு எற்றற்பொருட்டு மாணைக்கணுக்கு அறிவித்தான் எனினும்,

கா என்ற காவே போல் கான் என்ற சொல் அளவே ஆம் அன்றித் தான் எதிர் ஆகா—காவானது தன் பெயரை காவென்று கூறினும் அப் பெயர்க்கு உரியபொருள் வேறின் றித் தானுயிருந்த அந் காவைப்போலும், நீ கான் என்று

சொல் மாத்திரமே ஆம் அன்றித் தானும் எதிரும் அவனுக்கு உண்டாகா.

(தெளிப்பு.) தன்னை யறியா அறிவு சிவம், இதனைத் * "தன்னை யறியாது வேறுண்டாய்த் தானறியா" தென்றும் மேற்கூறிய பாட்டானும் காண்க.

சிவயோகி தற்போதம்போய்ச் சிவமாய் இருத்தலின், தானென்பதும், அச் சிவப்பிரகாசத்திற் பிரபஞ்ச மறைதலின், பிறவென்பதும் அவனுக்கில்லை ஆகலின், "தானெதிராகா" என்றார்.

இத் திருவெண்பாவால் சிவயோகி தான் பிறர்போற் கூறினும் இவை அவனுக்கு இல்லையென்று அறிவித்தவாறு காண்க. (கசு)

தன்னைத்தான் உள்ளபடி அறிவது எங்ஙனம் எனின் மேற் கூறுகின்றார்.

தம்மா லறிந்ததெல்லாந் தாமல்ல வென்றுரைத்தாற்
சும்மா திருப்பதுவாய்த் தோன்றுதோ—விம்மி
யிரிந்ததலை வாயடங்கு மவ்வளவே யல்லாற்
றெரிந்திடுமோ நீயே தெளி.

(உரை.) தம்மால் அறிந்தது எல்லாம் தாம் அல்ல என்று உரைத்தால் சும்மாது இருப்பது ஆய்த் தோன்றுதோ—தமது போதத்தால் ஈது ஈதென்று பகுத்தறிந்து நீங்கிய கருவிகள் எல்லாம் தாம் அல்ல என்று வேதாகமங்கள் கூறும் எனில், அவற்றைப் பகுத்தறிந்து நீங்கி நின்ற அறிவு தானெனை அருளால் அறிந்து மௌனமா யிருப்பதாய்த் தோற்

* பொதுவிலுபதேசம் - உசு.

ருதோ? (ஆனல் தம்மை அறிந்த அநுபவஞ் சொல்வது எங்ஙனம் எனின்,)

அரிந்த தலை வாய் விம்மி அடங்கும் அவ்வளவே அல்லால் தெரிந்திடுமோ நீயே தெளி—உறுப்புக்கட்கெல்லாம் முதலாய தலையை அரிந்தபோது அவ்வாய் திறந்தடங்கும் அவ்வளவே அன்றித் தலைபோயிற்றென்று கூற அறியாது; அதுபோலும், கருவிகள் மூப்பத்தாறையும்நீங்கி அவற்றின் மேல் நின்ற மூத்திச் சகலமும் மூத்திக் கேவலமும் நீங்கி ஆன்மா அருளால் தம்மை மாத்திரம் அறிந்திருக்குமிடத்து ஆண்டு வேறோர் அநுபவம் தெரிந்திடுமோ? நீயே இதனைத் தெளிந்தறிதி.

(குறிப்பு.) தத்துவங்கள் முடிவில் தோன்றும் மூத்திச் சகலம் மூத்திக்கேவலம் இன்மையால், "அரிந்ததலை" என்றும், இங்ஙனம் நின்ற அறிவுக்கு வடிவு இன்மையால் சொல்லக்கூடாது ஆகலின், "வாயடங்கும்" என்றும் கூறினர். தத்துவங்களை அங்கமாயும் மூத்திச்சகல கேவலங்களைத் தலையாயும் வைத்து, இத்தலை போயவிடத்து ஆன்மா அவ்வாறு பவங்கள் ஒன்றும் இன்றிச் சும்மா இருத்தலின், "அரிந்ததலை வாயடங்கு மவ்வளவே யன்றித் தெரிந்திடுமோ நீயேதெளி" என்றார்.

அரிந்ததலை விம்மி யடங்குமெனக் கூட்டுக. (உ)

மறவாத தம்மை யறிவார் மருளோ
வறிவோ விடையம்போ லாகி—லறிவை
யறிவதறி வாகையினு லாருறுந் தத்த
மறிவையறி யாபோ லறி.

(உரை.) மறவாத தம்மை அறிவார் விடயம்போல் ஆகில் மருளோ அறிவோ—சகல கேவலங்களாகிய நினைப்பும் மறப்பும் கடந்து அறிவாய் மறவாதிருந்த தம்மை மறந்ததுபோல் நினைத்து அறியத்தொடங்குவோர்க்கு எதிரிட்டறியும் விடயம்போல் தம்மைத் தமக்குத் தோற்றுமாலல் அது மருட்போதமோ அருட்போதமோ?

அறிவை அறிவது அறிவு ஆகையிலல் ஆறாறும் தத்தம் அறிவை அறியாபோல் அறி—அறிவாயிருந்த தம்மை அறிவதைத் தொடங்குவது தம் அறிவைக் கொண்டு ஆகலின், முப்பதத்தாறு தத்துவங்களும் தத்தம் அறிவைத் தாம் அறியாதிருப்பனபோல் தம்மைப் பிரித்தறியாது சும்மா இருப்பதுவே தம்மை அறிவதென்று அறி நீ.

(குறிப்பு.) முன் சகல கேவலமாயிருந்த ஆன்மா தன்னை யாரென்று பார்த்தபோது தான் வேறு அவை வேறாய்ப் பிரிந்தாற்போல், இப்போது சுத்தமாயிருந்த ஆன்மா தன்னை எதிரிட்டுப் பார்ப்பின் இச் சுத்தம் பிரிந்து கேவல சகலங்களிற் செல்லும் ஆகலின், "ஆறாறந்தத்த மறிவை யறியா போலறி" என்றார். நினைப்பு மறப்பு இன்றி அறிவாயிருத்தலின், "மறவாத தம்மை" என்றார்.

இவை யிரண்டு திருவெண்பாவாலும் தம்மை அறிவது இங்ஙனம் என்று அறிவித்தவாறு காண்க. (சுஅ)

ஆன்றி னில்மனையி றுத மொழிந்தசிவந் [ன்
தோன்றுத் துணையுனக்குத் தோன்றுமோ-தோன்றி
நிறுதியைத் தீண்டுவபோல் வாய்முகத்தைமென்
றிப்பதுபோற் பார்த்துத் தெளி. [று.

(உரை.) ஊன்றின் நிலம் அசையின் நாதம் ஒழிந்த சிவம் தோன்றுத் துணை உணக்குத் தோன்றுமோ தோன்றில்—ஓர் கண்டால் ஊன்றின் சடமாய் உள்ள நிலமும் அசையும் எனின், எல்லாத் தத்துவங்களுக்கும் மூடிவாகிய நாத தத்துவத்தையுங் கடந்து உனதுயிர்க்குள் தோன்றுத் துணையாயிருந்த சிவத்தை உன் போதத்தை ஊன்றி நின்று அறிவேன் எனின், அம்துணக்குத் தோன்றுமோ? உன் போதத்துக்கு அது தோற்றும் எனின்,

விரல் நுதியைத் தீண்டுவபோல் வாய்முகத்தை மென்று சிரிப்பதுபோல் பார்த்துத் தெளி—ஓர்விரல் தன் னுனியைத் தான் தொடல்போலும், முகத்தின்கண் இருந்த வாய் அம் முகத்தை எதிரிட்டுக் கறித்து மென்று சிரிப்பது போலும் ஆம், இதனை ஆராய்ந்து தெரிந்து அறிதி.

(குறிப்பு.) நட்பத்தான் ஆன்மாவுள்ளும், பூரணத்தால் அதற்குப் புறம்புமாய்ப் பிரிபடாது சிவம் இருத்தலின், ஆன் மாவால் அதனைப் பிரித்தறியக் கூடாது ஆகலின், இங்ஙனம் உவமை கூறினர்.

"சிரிப்பது" யான் சிவத்தை அறிந்தேன் என்று பிற ருக்குக் கூறி மகிழ்தல். (கூக)

பற்றியது தாளும் படிகந் பற்றுவிடட்
பற்றை யெதிரிட்டுப் பார்த்தாலென்—சற்றும்
பிறியாச் சிவனைப் பிறித்தறியத் தேடு
மறியாமை காணு னவம்.

(உரை.) பற்றியது தான் ஆம் படிகம் நீ பற்றுவிடம் பற்றை எதிரிட்டுப் பார்த்தால் என்—தன்னைச் சார்ந்த நிறம் யாது அந்நிறம் தாளையிருக்கும் படிகம்போலும், யாதொன்

கருவி அடுத்தது அதன் மயமானவை நீ, அக் கருவிகள் நீங்கு தற்பொருட்டு உனக்குள் இருந்த சிவமாகிய பற்றை எதிரிட்டுப் பார்த்ததனால் பயன் என்னை யுளது?

சற்றும் பிரியாச் சிவனைப் பிரித்து அறியத்தேடும் அறியாமை ஆணவம்—ஓராணவள்ளவேனும் உன்னை விட்டுப் பிரியாதிருந்த சிவத்தை உன் போதத்தாற் பிரித்து உன்னை விட அஃதோர் முதலாய்க்கண்டு அதனை அறியத்தேடும் பேதைமை ஆணவமாவது.

(குறிப்பு.) கேவல சகலங்களை நீங்கி அருளால் தன்னை உள்ளபடி அறிந்த ஆன்மா தனக்கு வேறாக இருந்த சிவத்தையும் அவ் வருளால் அறியவேண்டும். அதனைக் குரு உபதேசத்தால் அறிந்து கொள்க. அருளால் அறியவேண்டுமென்பதனை, * "அறியாமை யறிவகற்றி யறிவினுள்ளே யறிவுதனை யருளினு லறியாதே யறிந்து" என்னும் சித்தியாருள்ளங் காண்க.

சிவத்தைப் பிரியாது அதனுள் அடங்கின் கருவிகள் தொடரா, அதனைப் பிரிக்கின் தொடரும், ஆகலின், "பற்றுவிடப் பற்றை எதிரிட்டுப் பார்த்தாலென்" என்றார்.

ஆங்கு மலம் இன்றாயினும் அதனது வாசனையால் போதம் எழுதலின், "அறியாமைமகா ணவம்" என்றார்.

ஆன்மாவைப் பற்றவிடா திருத்தலின், சிவத்தைப் "பற்று" என்றார்.

காண் - அசை.

---

* எட்டாஞ்சூத்திரம் - உரை.

இவ் வினண்டு திருவெண்பாவானும் திருவருளாவ் சிவத்தைத அறியும்போதும் சிறிதும் போதஞ் சீவியாது கின்று அறியவேண்டுமென்று கூறியவாறு காண்க. (சு0)

அந்தச் சிவத்தைதச் சென்று அடையும் இடம் எவ்விடம் எனின், மேற் கூறுகின்றார்.

அருளாலே தம்மை யறிந்தருளா யந்தப்
பரிபூ ரணமே பரையாய்ப்—பரையொழிவி
லானந்தா தீதமா மத்துவித சித்தாந்த
மோனம்வே தாந்த முடிவு

(உரை.) அருளாலே தம்மை யறிந்து அருள் ஆய் அந் தப் பரிபூரணமே பரை ஆய்—மூப்பதத்தாரு தத்துவங்களை யுங் கடந்து நின்ற இடத்துப் பாசம் ஈது அருள் ஈது என்று பகுத்தறிந்த அறிவு தானம் என்று தம்மை அருளால் அறிந்து, பின்னர்த் தம்மையும் அவ் வருளையும் பிரித்துப் பாராது அவ்வருள் தானமாயிருந்து, பின்னர்த் தம்மைச் சிறிதுங் தோற்றாது அந்தப் * பரிபூரணமாகிய பரையே ஆகி,

பரை ஒழிவில் ஆனந்தாதீதம் ஆம் அத்துவித சித்தாந்த மோனம் வேதாந்த முடிவு—பின்னர் அப்பரை நீக்கத்தில் தோன்றும் ஆநந்த மயமாகி, அவ்வானந்தத்தையும் இங்ஙனம் என்று அறியாது அதனுள் அதீதப்படுவதாதும் அத்துவித மான ஆகம முடிவாகிய மௌனம் வேதமுடிவிற்கு முடிவாம்.

---

* பரிபூரணமே பரையாய் என்பது பரிபூரணப் பரை யேயாய் எனக் கூறப்பட்டது.

(தறிப்பு.) தனது இச்சைப்படி ஆன்மா இச்சையைச் செலுத்தியும், தனது ஞானத்தால் அதன் ஞானத்தை மறைத்தும், அதனது கிரியையால் அதனது கிரியையை அடக்கியும், இங்ஙனம் அவ்வான்மபோதஞ் சீவியா தடக்குவது அருள். அங்ஙனம் அதனது போதம் அடங்கின விட்டத்து முன்தோற்றிய இச்சா ஞானக் கிரியைகள் விரியாது நீங்கினவிடம் பரை. ஆகலின், "அருள்" என்றும், "பரை" என்றும் கூறினர்.

வேதாந்திக்குப் பெத்தநிசைபோல் முத்தியிலும் தானென்பது தொடர்தலின், "வேதாந்தமுடிவு" என்றார்.

இத் திருவெண்பாவால் ஆன்மா சிவத்தோடு இரண்டறக்கலந்த அத்துவிதம் இவ்விடம் என்பதும், இது வேதாந்த முடிவு என்பதும் அறிவித்தவாறு காண்க. (சக)

தன்மையு முன்னிலையுந் தாழுய்ப் படர்க்கையுமா
யென்னெழிவி லின்புமா யின்புமிது—வென்னுத
வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்று
மேதாமல் வேதமுணர்ந் தோன்.

(உரை) தன்மையும் முன்னிலையும் தான் ஆய்ப் படர்க்கையும் ஆய் என் ஒழிவில் இன்பும் ஆய் இன்பும் இது என்னுத—உயிருக்கு உயிராயிருந்து அறிவிக்கும் திருவருளாகிய தன்மையும் தானாகி, அவ்வருளே திருமேனியாகக்கொண்டு வழுந்தருளிவந்த ஆசாரியராகிய முன்னிலையும் தானாகி, அவ்வருள் மிகுந்து கூறப்பட்ட வேதாகமங்களாகிய படர்க்கையும் தானாகி, இச் சுருதி குரு சுவாநுபவங்களால் எனது போதவொழிவில் தோன்றும் ஆநந்தமும் தானாகி, அவ்வாநந்

தம் இதுவென்றும் கூறக்கூடாத ஆநந்தாதீதமும் தாமாகி எழுந்தருளியிருந்த,

ஓதாமல் வேதம் உணர்ந்தோன் வேதாந்த சித்தாந் தமே பிறவாவீடு என்றான்—ஓதி அறியாமல் தமது இரு வருள் ஞானத்தால் நான்கு வேதங்களையும் முழுதுணர்ந்த திருஞான சம்பந்தப் பிள்ளையார் இந்த அநுபவ முற்றும் உண்டான வேதத்தின் முடிவாகிய சித்தாந்தமே மீண்டு வாரா முத்தி என்று அருளிச்செய்தார்.

(குறிப்பு.) எல்லாம் தாமாகி என்றது அவரது சுதந் திரம் அறிவித்தது.

ஓதி உணர்ந்தோரைப் பற்ற ஓதாமல் உணர்ந்தோர்க்கு உண்மை யெல்லாம் உள்ளபடி தெரியும். இங்ஙனம் ஓதாமல் உணர்ந்தோரே இதுவே பிறவா வீடென்று கூறினமையால் இஃது உண்மை முத்தியென்று அறிந்துகொள்க.

வியாசர் முதலியோர் ஓதாமல் உணர்வும் அவர்க்கு விட்டுணு பரமென்றும் அகம் பிரமம் என்றும் பின்னர் மலைவு பிறந்தது ஆகலின், இவரைப்போலும் அவர் சுதந்திர அறிவிலர் எனக்கொள்க.

இங்ஙனம் செய்யுட்கண் "தாஞய்" என்னும் ஒரு மையை உரைக்கண் "தாமாகி" யெனப் பன்மையாகக் கூறியது என்னை யெனின், பிள்ளையார் என்னுந் திரு வருட் பெயரின் பெருமை நோக்கி யென்க. (கூ)

மலையேறிப் போவார்க்கு மாநிலமாய்த் தோன்றிக் கலையாதி யைக்கழற்றிக் காட்டிடத்—தொலைவிலே

காட்சியொழித் தென்னைக் கரந்தகலா வாதனையின்
மாட்சிசொலின் மோனமாம் வந்து.

(உரை.) மலை ஏறிப்போவார்க்கு மாநிலமாய்த் தோன்
றிக் கலை ஆதியைக் கழற்றிக் காட்டித் தொலைவிலே காட்சி
ஒழித்து—மாநிலத்திலிருந்து மலைமேல் ஏறிச் செல்வோர்க்கு
ஆண்டு மாநிலமாய்த் தோற்றி அம்மலை முடிமேல் ஏறின்று
மீண்டு பார்க்குமிடத்து முன்னிருந்த மாநிலமும் பின்வந்த
மலையிடமும் தாம் நின்ற இடத்திற்குக் கீழ்ப்பட்டு அருகில்
தோற்றமாப்போலும், கலை முதலிய ஆறத்து வாலையுஞ்
சாதனைபண்ணி நீக்கி இவற்றின் முடிவில் நின்ற ஆன்
மாவை அறிதல் முதலிய அநுபவங்களைக் காட்டி, இவ் வநு
பவ முடிவிலே முன்தோன்றிய கருவிகளும் பின்தோன்றிய
அநுபவங்களும் ஆகிய காட்சிகள் எனக்குத் தோற்றுவாறு
ஒழித்து,

வாதனையில் என்னைக் கரந்து அகலா மாட்சிசொலின்
வந்து மோனம் ஆம்—எனக்கு ஓர் வாதனையும் இல்லாது
என்னைத் தமது பூரணசந்தத்து ஒளித்து உள்ளும் புறம்புமாய்
எழுந்தருளியிருந்த எனது ஆசாரியரது பெருமையைச்
சொல்லுமிடத்து அதனைச் சொல்லவொட்டாது என்னைப்
போராகந்தம் வந்து மௌனம் ஆக்கும், (இதென்கொலோ
அறிகிலேன்.)

(குறிப்பு.) "தொலைவிலே காட்சியொழித்து" என்ற
மையால், மலைமுடிமேல் ஏறின்று பார்க்குமிடத்து என்
னும் வருவிக்கப்பட்டது.

கலையாதி ஆறு அத்துவா வாவன மந்திரம் பதினென்
னும், பதம் எண்பத்தொன்றும், வன்னம் ஐம்பத்தொன்றும்,

புவனம் இருநூற்றிருபத்துநாலும், தத்துவம் முப்பத்தாறும், கலை ஐந்தும் எனக்கொள்க.

அநுபவ முடிவு சொல்லக் கூடாமையின், "மோன மாம் வந்து" எனறார். (சக)

இதுவென்ற தெல்லாம்பொய் யென்ற னெனக்குப் பொதுவன்றித் தங்குமிடம் போச்சு—வதுநாங்கா னென்ற னதன்பே ரிரவைப் பகலாக்கு மொன்றே பரமசுக மோ.

(உரை.) இது என்றது எல்லாம் பொய் என்றான் எனக்குப் பொது அன்றித் தங்கும் இடம் போச்சு—எது எதென்றி உன் போதத்தால் சுட்டி அறிந்தது யாது அஃதெல்லாம் பொய் என்றார். இங்ஙனம் அருளிச்செய்த வாற்றான் என் போதத்தால் சுட்டி அறிதற்கு அரிதாய் எல்லாவற்றுள்ளும் பொதுவாய் இருந்த திருவருளிடமே அன்றி முன்னர்க் கருவிகள்தோறும் அதனதன் மயமாய்த் தங்கும் இடமெல் லாம் இப்போது போயிற்று.

அது காம் என்றான் அதன் பேர் இரவைப் பகல் ஆக்கும் ஒன்றே பரமசுகமோ—(முன் கருவிக ளோடுங் கூடிக் கருவி மயமாயும், இப்போது அருளோடுங் கூடி அருள் மயமா யும், அவற்றைறப் பாசமென்றும் இதனை அருளென்றும் இருந்தறிந்த ஓரறிவு உண்டே) அவ் வறிவு எம்மைவிட வேறோர் முதல் அன்று, அதுவே காம் என்று எமதாசாரியர் அருளிச்செய்தார். அங்ஙனம் அருளிச்செய்த திருப்பெய ருக்கு அருத்தம் என்னை? இற்றைவரையும் மறைத்திருந்த ஆணவ இரவைப் பகலாக்கும் ஞானசூரியனே? அஃதன்றி என்னுல் ஓதிக்கூடாதிருந்த தற்போதத்தை விழுங்கி எழுந்த பரமாகந்த சாகரமோ? (யான் அறிகிலேன்.)

(குறிப்பு.) பகுப்பின்றி எல்லாவற்றுள்ளும் பொதுவாய் இருத்தலின், அருளைப் "பொது" என்றார்.

"அது நாங்காண்" என்றது ஆண்மாவைச் சிவத்தோடு இரண்டற்ற ஐக்கியங் கூட்டியது எனக்கொள்க. (சக)

அறிவித்தா லன்றி யறியாய்நீ யென்றுன்
மறவைக் கதுவே மருந்தா—யறியவெனி
லாகாய மெய்யவைத்த வம்பா மறிவெனிலு
மாகாய வாக்கா மது.

(உரை.) அறிவித்தால் அன்றி அறியாய் நீ என்றுன் மறவைக்கு அதுவே மருந்து ஆய் அறிய எனில் ஆகாயம் எய்யவைத்த அம்பு ஆம்—உனது உயிருக்கு உயிராயிருந்து யாம் ஒன்றினை அறிவித்தால் நீ அறிவதே அன்றி உன் சுதந்திரமாய் ஒன்றினையும் அறியாய் என்று அருளிச்செய்தார். யான் எனது என்று எழும் மலப்பிணியை நீக்குதற்கு அத்திருவாக்கே மருந்தால் இங்ஙனம் அறிவிக்குந் தம்மை யான் அறியத் தொடங்கின், யான் இருத்தற்கு இடமும் தம்மை அறிதற்கு எழும் போதத்திற்கு இடமும் தமதிடமே அன்றி வேறு காணேன் ஆகலின், ஆகாயம் இலக்காய் அதனை எய்யவைத்த அம்புபோலும் ஆகும்;

(இங்ஙனம் உயிர்க் குயிராயிருந்து அறிவிப்பதாம் எதிரிட்டு அறியக் கூடாததாய் இருந்த அறிவின்கண் வாக்குத் தோற்றுவது எங்ஙனம் எனின்,)

அறிவு எனினும் ஆகாயவாக்கு ஆம் அது—அவர் அங்ஙனம் இருந்த அறிவே எனினும் அவ்வறிவின்கண் நின்ற காருண்ணியத்தால் தோற்றும் வாக்கும் அவ் வாகாய வாக்குப்போலும்.

(குறிப்பு.) அம்பிற்கு எய்யாமுன் நிற்பதற்கு இடமும் எய்தபின் சேறற்கு இடமும் அவ் வாகாயமே அன்றி வேறு இன்மையால், இதனை அதற்கு உவமையாகக் கூறினர்.

வாக்காற் கூறியதுபோற் பிறர்க்குத் தோற்றுவதே அன்றி அவர்க்குத் தோற்றாது ஆகலின், "ஆகாய வாக்கா மது" என்றார்.

"தன்மையும் முன்னிலையும்" என்னுந் திருவெண்பா முதல் இந் நான்கு திருவெண்பாவானும் தமது ஆசாரியர் தமக்கு அருளிச்செய்த நிலை கூறியவாறு காண்க. (சு)

மலமாயை கன்ம மயக்க விகற்ப
நிலைபோகப் பேயொழிந்த நிட்டை—பலவோ
வறிவுக் கெதிரில்லை யாகாய நீழ
லறநிற்கு மாபோனிற் பாய்.

(உரை.) மலமயக்கம் மாயை விகற்பம் கன்ம நிலை போகப்போய் ஒழிந்த நிட்டை பலவோ—ஆணவமலமாகிய மயக்கத்தைக் கேவலாவத்தையாற் போகச்செய்து, மாயையாகிய விகற்பத்தைக் குருலிங்க சங்கம வழிபாட்டாற் போகச்செய்து, ஆன்மா இந்த அருள் வழிச் சென்று சிவா நந்தத்தில் தற்போதம் அற்ற உண்மை நிட்டை பலவிதமோ?

அறிவுக்கு எதிர் இல்லை ஆகாய நீழல் அறநிற்குமா போல் நிற்பாய்—இங்ஙனம் தற்போதம் அற்றுச் சிவம் என்றும் தான் என்றும் இரண்டற இருந்த அறிவிற்கு எதிர் நீடாய்த் தோற்றுவது ஒன்றும் இல்லை; ஆகாயம் எல்லாப் பொருள்களோடுங் கூடியிருப்பினும் அப் பொருள்களின் சாயை தன்னுள் தாக்காது நின்றாற்போல், எல்லாக் கருவிகளு

னோடுங் கூடி யிருப்பினும் அக்கருவிகளின் குணம் உள்ளனைச் சாராது நீ நிற்றி.

(குறிப்பு.) கேவலாவத்தையைத் தரிசிக்கவே ஆணவம் நீக்கும் ஆகலானும், மனவாக்குக் காயங்களாற் குருலிங்க சங்கமத்தை வழிபடவே அம் மனவாக்குக் காயங்களாய்ப் விரிந்த விகற்பரூபமாகிய மாயை நீங்கும் ஆகலானும், இவற்றை நீங்கிச் சுத்த நிலையில் தோன்றுந் திருவருளைத் தரிசித்து அந்தத் திருவருளே பெத்த முத்தியிலும் எமக்கு உபகரிப்பது என்று அறிந்து தான் பிறர் என்னும் முன்னிலைச் சுட்டொழிந்து நிற்கவே கன்மம்நீங்கும் ஆகலானும், "மலமாயை கன்ம மயக்க விகற்ப நிலமோக" என்றார்

சகல கேவலங்கள் நீங்கி ஆன்மபோதமும் ஒழிந்த கிட்டைக்குமேல் வேறு கிட்டை இன்மையின், "பலவே" என்றார்.

ஆகாயம் தனது நுண்ணிய குணத்தில் திரிவு இன்றி இருந்தமையால் மற்றைப் பொருள்களின் நிழல் தாக்காது இருந்ததுபோல், ஆன்மா தனது போதஞ் சீவியாது நுட்ப குணத்தோடு இருந்தது எனின் சிவத்தோடு கலப்புக்கூடும். தூலமாகிய கருவிகளும் அதனைத் தாக்கமாட்டா என்பது அறிக. (கசு)

போதம் பதைப்பறவே பூரணமாம் பூரணமும்
போதம் பதைத்தளவே பொய்யாகு—மீது
விழித்திமைப்பா நின்றூல் வெளியசைந்தாற் காற்றும்
பழக்கமதைச் சாட்சியைப்போற் பார்.

(உரை.) போதம் பதைப்பு அறவே பூரணம் ஆம் பூரணமும் போதம் பதைத்த அளவே பொய் ஆகும் ஈது

நின்றால் விழித்து இமைப்பு ஆம்—ஆன்மபோதம் சீவியாது அடங்கின் அவ்வான்மா தோற்றுமல் அருட்பூரணம் தானேயிருக்கும், அப்பூரணமும் அப்போதம் சீவித்தமாத்திரத்தில் தான் தோற்றுது மறையும், அவ்வான்மாவா யிருக்கும், இங்ஙனம் இப்போதம் அடங்கியும் விரிந்தும் நின்றால் அப்பூரணம் ஓர்கால் தோற்றியும் ஓர்கால் மறைந்தும் விழித்தல்போலும் இமைத்தல்போலும் ஆம்; (அஃது எங்ஙனம் எனின்,)

வெளி அணைசந்தால் காற்று ஆம் பழக்கமனைத்தச் சாட்சியைப் போல் பார்—வெளியில் அடங்கிய காற்றுத் தான் வேறொரு பொருளாய்த் தோற்றுமல் வெளியே ஆம், அவ்வெளியில் நின்றும் அணைந்தால் அதனைவிடத் தான் ஒரு பொருளாய்க் காற்றென்பதாம். இக்காற்றுகிய சாட்சியைப் போல் உணர்போதம் அருளில் அடங்கியும் விரிந்தும் நின்ற பழக்கமனைதயும் பார்த்து அறிதி.

(தெறிப்பு.) போதம் அடங்கின் அருளாகியும், அஃது அணையின் ஆன்மாவாகியும், இங்ஙனம் வருதலின், அதனைச் சிறிதுந் தோன்றுது அடக்கவேண்டுமென்பது கருத்து.

இவையிரண்டு திருவெண்பாவாலும் மும்மலங்களை நீக்கி அவ்வான்மா சற்போதமுமுங் கெட்டு ஆசுத்தாதீதப்பட்டால் அதற்குமேல் வேறுநிட்டை இன்றென்பதும், ஆன்மாக் கருவிகள் தாக்காது நிற்றற்கு உபாயமும், அடக்கிய போதம் மீட்டும் விரியாது அடக்கவேண்டும் என்பதும் அறிவித்தவாறு காண்க. (சன).

வேதாந்தம் போலிருக்கும் வேதாந்த சித்தாந்த
நாதாந்த போத நழுவினர்க்கு—நேதி

பூரணமும் போதம் பதைத்த அளவே பொய் ஆகும் எது

தனைக்கழன்று தற்போதஞ் சார்பழியுஞ் சந்தி
னுனக்கறிவா நந்தமுதிக் கும்.

(உரை.) காதாந்த போதம் கழுவினர்க்கு வேதாந்தம்
போல் இருக்கும் வேதாந்த சித்தாந்தம்—நாத தத்துவத்தின்
முடிவாயிருந்த அருளையுங் கடந்த மெய்ஞ்ஞானிகட்கு
வேதாந்தம்போல் துவிதகாட்டம் இன்றி இருக்கும் வேதா
தின் முடிவாகிய இச் சித்தாந்த நூல் ஆகலின்,

நேதிதனைக் கழன்று தற்போதம் சார்பு அழியும் சந்
தில் உனக்கு அறிவு ஆநந்தம் உதிக்கும்—நீக்குவதாய் உள்ள
தத்துவ முப்பத்தாறையுங் கழன்று அவற்றின் முடிவில்
நின்ற அருளையும் பராயையும் துவிதகாட்டம் இன்றிக்
கழன்று நிற்றி எனின், நின் தற்போதமும் ஆணவ வாசனை
யாகிய சார்பும் ஒழியும், இவை ஒழிந்த இடத்திற்கும்
அதீதத்திற்கும் இடையாகிய சந்நிதியில் உனக்கு ஞானா
நந்தம் தோன்றும்.

(குறிப்பு.) முப்பத்தாறு தத்துவங்களையும் நீங்குமளவும்
ஆன்மபோதஞ் சிவித்தறிவது. அருள்தரிசன முதல் ஆநந்தா
தீதப் படுமளவும் அப்போதஞ் சீவியாதடங்கி அவ் வநுபவங்
களைப் பெறவேண்டும் ஆகலின், "வேதாந்தம்போ விருக்
கும்" என்றார்.

இத் திருவெண்பாவால் ஆநந்தம் தோன்றுமிடம்
அறிவித்தவாறு காண்க. (அ

தத்துவா தீதத் திமிர்ப்படங்கித் தற்சிலவு
மத்தின் வரத்து மசையாத—சுத்தத்தை
யொன்றென்றூ னீசற் றுளதாவை யாதலினு
லன்றென்ற தென்றே யறி.

(உரை.) தத்துவாதீதத் திமிர்ப்பு அடங்கித் தன் செலவும் அத்தின் வாத்துவம் அனையாத—மூப்பத்தாறு தத்துவத்திற்கும் அதீதமாயிருந்த ஆணவமல வாசனை எல்லாம் நீங்கிய விடத்து ஆன்மா சிவத்தைச் சென்று கூடுதலும், சிவம் ஆன்மாவை வந்துபொருந்துதலும் ஆகிய இருவகை அனைவும் இன்றி இரண்டற்று இருந்த,

சுத்தத்தை ஒன்று என்றால் நீ சற்று உளது ஆவை ஆதலில் அன்று என்றது என்றே அறி—முத்திக்கண் சிவம் ஒன்றுமே என்று கூறுதி எனின், அச்சிவம் ஒன்றென்று அறிந்து கூறிய நீயும் சிறிது உண்டாவை ஆகலின், அம்முத்திக்கண் அங்ஙனம் கூறுவதும் அன்றென்றது என்று அறிதி.

(தறிப்பு.) உடம்பின் குணம் அன்றி அதன்கண் எறியிருந்தமையால், ஆணவத்தைத் "திமிர்ப்பு" என்றார். திமிர்ப்பு அடங்காவிடத்துக் கூடினது போன்றும் பிரிந்தது போன்றும் அநுபவம் தோன்றலின், அங்ஙனங் கூறினர். ()

வெற்றவெறு மாநந்த மேலீடே கேவலத்தி
னிற்பதுபோ லந்த நிலைகழன்றோர்—சிற்போத
வண்டங் கடந்த வழுதத்தி னேடுலவும்
வெண்டிங்க ளுருங்கிரணை முழம்.

(உரை.) வெற்ற வெறும் ஆகந்த மேல் ஈடே கேவலத்தில் நிற்பதுபோல் அந்த நிலை கழன்றோர்—நியதியிட்ட இடமெல்லாங் கழன்று சென்று சற்போதம் ஒழிந்தவெல்லாம் ஆநந்தமயமாய்த் தோற்றம் ஆகலின், வெற்றவெறும் ஆகந்த மேலீடாகிய இடமே கேவலாபத்தைப்பட்டு நிற்பதுபோலத்

தோன்றும், இங்ஙனந் தோற்றும் அவ்வாகந்த மேலீடாகி நிலையும் நீங்கிநேரும்,

நிற்போத அண்டம் கடந்த அழுதத்திரேடு உலவு வெள் திங்களும் கிரணமும்—அருளும் பரையும் ஆகி ஞானகாசத்தைதக் கடந்துநின்ற ஆநந்தாமிர்தத்தோ விளங்காகின்ற சிவசந்திரேடும் தாம் அதனைவிட் நீங்காத அந்த ஆநந்தாமிர்த கிரணமாகி நிற்பர்.

(குறிப்பு.) ஆகந்தம் மேலிட்டபோது பிரபஞ்சமெ லாம் ஆநந்தமயமாய்த் தோற்றும் ஆகலின், 'வெற்ற வெ மாகந்தம்" என்றார். ஆநந்த மேலீடு விட்டுதியாம தோற்றுவது.

கேவலாவத்தை அநுபவத்தை அறிந்து ஒன்று தோன்றுதிருந்ததென்று சொல்ல வருதல்போல், ஆநந்தா பவம் சொல்லவருவதலால், 'கேவலத்தினிற்பதுபோல் என்றார். அநாதியில் ஆணவமலத்தால் மறைபட்டிருந் உயிர்க்கு அநுபவஞ் சொல்லக்கூடாததுபோல், சிவத்தி இரண்டறக் கலந்துநின்ற அநுபவஞ் சொல்லக்கூடாது ஆ லின், ஆநந்தாநுபவத்திற்கு உவமை கேவலாவத்தையை கூறினர்.

"வெண்டிங்களுங் கிரணமும்" என்று உவமை கூறி மையால் சந்திரனைப்போலச் சிவம், அவனைவிட்டு நீங்கா அழுதம்போல் ஆநந்தம், அவனையும் அழுதத்தையும்விட் நீங்காத கிரணம்போல் ஆன்மா சிவத்தோடு இரண்டற கலந்து நின்றநிலை எனக்கொள்க.

இவையிரண்டு திருவெண்பாவாலும் முத்தியில் ஒ றென்றும் இரண்டென்றுங் கூறக்கூடாதென்று அறிவி வாறு காண்க.

(நு

நினைப்பு மறப்பறுத்து நீயறலை நீக்கா
துனைக்கரைய நில்லங்க னங்க—னெனக்கதற்றல்
விப்பிரட்ட மந்திரட்டம் வேலையிலே போட்டசு
செப்படித்தன் ஞானச் சிறை. [ரை

(உரை.) நினைப்பு மறப்பு அறுத்து நீ அறலை நீக்காது உனைக் கரைய நில் அங்ன் அங்ன் எனக் * கதற்றல்—முன்னர் நினைப்பு மறப்பு ஆகிய சகல கேவலங்களை அறிவித்து நீக்கி, தன்னை அறிவித்து, பின்னர்த் தனக்கு உயிர்க்குயிராய்ப் நின்ற திருவருளைத் தரிசிப்பித்து, இத்திருவருளோடுங்கூடி அறிகின்ற போதம் தற்சுதந்திரமாய் ஒன்றைப் பகுத்தறியாது ஆகலின், அருளை முன்னிட்டுக் கொண்டு தற்போத ஒழிவைப் பெறுதற்கு உபாயங்கூறி, அதனை நீக்காது, அந்நினைப்பு மறப்பு ஆகிய சகல கேவலங் களுள் வைத்து, உன் போதங்கரைய நீ அப்படிநில் அப்படி நில் என்று மாணைக்கலுக்கு ஓர் நிட்டைபோலுங் கூறுதல்.

விப்பிரட்டம் மந்திரட்டம் வேலையிலே போட்ட சுரை செப்படித்தல் ஞானச்சிறை—மிகவும் பிரட்டமும், மந்திரத்தால் ஒருவனுக்கு விகோதங்காட்டலும், கடற்கண் போட்ட சுரை ஓடும், செப்படி வித்தையும், ஞானத்திற்குத் தடையாய் உள்ள மலபோதமும் ஆம்.

(குறிப்பு.) அந்த நிட்டை கூடுவோர் ஞானமும் அன்றி முதற்செய்த கிரியை யாதிகளும் அன்றி உபய பிரஷ்டராயும் கருவிகளோடும் மயங்கலின். "விப்பிரட்டம்" என்றும், ஒருவன் மந்திரத்தால் விகோதவித்தை தோற்றுவதுபோல், உள்ளே காரணவாகிய மாயா விகோதங்கள் தோற்றலின்,

* கதறல் கதற்றலென விகாரமாயிற்று.

"மந்திரட்டம்" என்றும், சுரை ஓடு ஓர் திறைக்கண் சேராது அலையோடு மறிதல்போல், அறிவு ஓர் நிலை நில்லா நினைவோடுந் சுழல்வதனால், "வேலையிலை போட்ட சுரை" என்றும், ஓர் பந்து முன் தோற்றிப் பின் அதில் பற்பல பந்து தோற்றுதல்போல், ஓர் காட்சிபோல் முன் தோற்றி அது முற்றும் நில்லாது பற்பல காட்சியாய் விரிந்வின், "செப்படித்தல்" என்றும், இங்ஙனந் தோற்றுவன சகல கேவலமோதும் ஆகலின், "ஞானச்சிறை" என்றுங் கூறினர். அங்ஙனங் கூறியது நிட்டை அன்று ஆகலின் கதற்றல் என்றார்.

இத் திருவெண்பாவால் மாணாக்கனுக்குச் சகல கேவலங் களை முன்னர் அறிவித்து நீக்கி, பின்னர்ப் போதம் ஒழித் தற்கு உபாயங் கூறுது அச்சகல கேவலங்களுள் அந் நிட்டை கூறுதல் ஆகாதென்று அறிவித்தவாறு காண்க. (நக)

சத்தாதி தத்துவம்போய்த் தானுமெதி ருங்கழன்றுல்
சித்தாந்த வேதாந்தச் சீர்மையிலை—முத்தி
யிசீவசன மின்ப வதீதமெனி லாங்கே
யினைமிடுதல் கன்மம் பிளாய்

(உரை.) சத்தாதி தத்துவம்போய்த் தானும் எதிரும் கழன்றுல் சித்தாந்த வேதாந்தச் சீர்மை இலை—சத்த முதலிய மூப்பத்தாறு தத்துவங்களையும் நீக்கி அவற்றின் முடிவில் நின்ற தானும் திருவருள் தரிசனமுதல் ஆகந்தாநுபவம் சிறுப் அவ் வருளால் தான் அறியாது அறியும் அநுபவங்க ளாகிய எதிரும் கழன்று, ஆகந்தாதீதப்பட்டால் இரண் டென்று கூறும் சித்தாந்தச் சிறப்பும் ஒன்றென்று கூறும் வேதாந்தச் சிறப்பும் அங்கு இல்லை;

முத்தி அறிர்வசனமை இன்ப அதீதம் எனின் ஆங்கே பினம் இடதல் கன்மம் பிளாய்—அங்ஙனம் அதீதப்பட்ட முத்திசொல் இறந்த சுகாதீதம் என்றல், பிள்ளாய்! ஒன் றென்றும் இரண்டென்றும் அம்முத்திணையப் பின்னப்படக் கூறுதல் போதச்சேட்டை ஆம்.

(குறிப்பு.) சத்தாதி விடயங்களின்மேல் ஆன்மாவுக்கு அந்நாள பிறந்தபோது சோத்திராதி பஞ்சேந்திரியங்களும் விடயங்களை அபகரியாது நீங்கும். இவை நீங்கவே, முன் அபகரித்தபோது வசன கமன தான விசர்க்காதந்தங்களை விடபீகரிக்கும் வாக்காதி கன்மேந்திரியங்கள் ஐந்தும் நீங் கும். இவை நீங்கவே, அப்பதத்து இந்திரியங்கட்கும் இடமாய் நின்ற பூதங்கள் நீங்கும். இவை நீங்கவே, விடயங்களைப் பற்றி நிச்சயித்து அபிமானித்துச் சிந்தித்து நிற்கும் அந்தக் கரண வாசனை நீங்கும். இது நீங்கவே, விடயங்களைப் புசித் தற்கு ஓரெல்லையும், அவ்வெல்லையில் உண்டாம் விடயப்பய னும், அவ் விடயத்தைப் புசிக்கும்போது ஓர் காலங்களினையும் அறியாததுபோலப் புதுமையும், மேலும் இவ்விடயம் அனைய விக்கவேண்டும் என்னும் கருத்தும் உண்டாக்குங் காலதத் துவமும் நீங்கும். இது நீங்கவே விடயங்களைப் புசிக்கும் போது இவனுக்கு இவ்வளவு புசிப்பென்னும் மட்டறிந்து வகுத்து நிற்கும் நியதி நீங்கும். இது நீங்கவே, ஆன்மா விட யங்களை இச்சித்துப் பகுத்தறிந்து பற்றி அநுபவிக்க அவ் வான்மாவுக்கு இச்சாஞானக் கிரியைகளை எழுப்பும் இராகம் வித்தை கலை என்னும் இம் மூன்றும் நீங்கும். இவை நீங்கவே, ஆன்மாவைப் பஞ்சேந்திரியங்களினின்றும் கயங்குபோற்கொண்டு சுழற்றும் புருடன் நீங்கும். இது நீங்கவே, அவ் விடயங்களைப் புசிக்குமிடத்து அவ்விடயம் என்றுந் தானென்றும் இரண்டற

மயக்கி நிற்கும் மாயை நீங்கும். இங்ஙனம் விச்தியாதத்தி வங்கள் நீங்கவே, இவற்றைப் * பிரோகம் பண்ணுகிற சுத்த த்துவங்கள் ஐந்தும் நீங்கும்.

இங்ஙனம் தத்துவம் முப்பத்தாறும் நீங்கினவிடத்து ஆன்மாவின் இச்சை, பெத்தத்தில் விடயத்தின்மேல் சனித்த துபோல், சிவத்தின்மேல் சனிக்கும், ஞானம், விடயா நந்தம் அசுத்தம் தக்கம் அநித்தியம் என்றும், சிவானந்தம் சுத்தம் சுகம் நித்தியம் என்றும், பகுத்தறிந்துகொண்டு நிற் கும். கிரியை பழைய பழக்கத்தால் விடயங்கண்மேற் செல்லி னும் அவற்றிற் செல்லாது மறுத்து நீங்கிச் சிவத்தையே நாடி நிற்கும்.

ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகள் சிவன் ஆன் மாக்களை முத்தியிலே * அடைவிக்க வேண்டும் என்னும் இச்சைப்படி நிற்பது ஆகலின், திருவருள் பதியும். இத் திருவருளை முன்னிட்டுக்கொண்டு அறியும் பலவாகிய முதலிய அநுபவங்களாகிய எதிரும், அவைகளை அறிந்த ஞானமும் கழன்று ஆனந்தாதீதப்பட்டான், இரண்டென்றும் ஒன்றென்றும் கூறக்கூடாது ஆகலின், "சித்தாந்த வேதாந் தச் சீர்மையிலே" என்றார்.

கன்மம் என்பது சேட்டைமே லேறிற்று.

ஆன்மா சத்தாதிகளைத் தரிசற விடுத்தபோது மற் றைத் தத்துவம் முப்பத்தொன்றும் இங்ஙனம் நீங்கலின், சத்தாதிகளை முன் வைத்துக் கூறினர்.

முத்தியை அறிவிப்பது வேதாகமம் முடிவாகலின், "சீர்மை" என்றும், அம்முத்தியில் அதனை அறிந்து

---

* காரியப்படுத்துகை.

கூறும்போதம் இன்மையால், "அநிர்வசனம்" என்றுங் கூறினர்.

* "மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றுங்
கருவிக ணான்கு தீர்க்காக் கலந்திக ளொந்துங் கூடி
யொருபுல னுணர்ந்த வொழுங்கொழிந்தயிரு மொன்றைறத்
தெறிவுறு கவனெ ழிந்தத் திரள்களுஞ் செயலி லாவே"

என்னும் சிவப்பிரகாசத்தாலும்,

† "சுவையொளி யூறோசை காற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு."

என்னும் திருவள்ளுவராலும் மற்றும் வருவனவற்றாலுங் காண்க.

இத் திருவிண்பாவால் சித்தாந்த முத்தியோ வேதாந்த முத்தியோ உண்மை என்று ஐயுறுகின்ற மாணாக்கருக்குக் காண்பானும் காட்சியும் அற்றவிடத்து இரண்டுஞ் சரியென்று அறிவித்தவாறு காண்க. (நிஉ)

சிந்தை பயமிலச்சை சீல மருவருப்பு
அந்தைவிடுஞ் சாந்திகுல மாசார—மிந்தவழி
யெட்டுஞ் சிவயோகிக் கில்லையென மாமறைக
ளட்டும் பெருமுரசந் தான்.

(உஅ.) சிந்தை பயம் இலச்சை சீலம் அருவருப்பு ‡ அந்தைவிடும் சாந்தி குலம் ஆசாரம் இந்த வழி எட்டும்—எனக்கு இன்னது வேண்டும் என்னுஞ் சிந்தனையும், தவிட்டிருகாதி தோன்றியக்கால் அச்சமும், இன்னர் இன்னது

* ஐந்தாஞ் சூத்திரம் - க. † திருக்குறள் - உஎ.
‡ அகந்தை அந்தை யென்றிடைக் குறையாயிற்று.

சொல்லட்போகிறார் என்னும் நாணமும், சாந்திராயண விரதமுதலிய சீலமும், சுத்த அசுத்தமென்னும் அருவருப்பும், அகந்தையாற் செய்த பாவந்தீர்க்கும் புண்ணியம் நிதென்னுஞ் செய்யுஞ் சாந்தியும், குலாசாரமும் சமயாசாரமும் ஆகிய இந்த மார்க்கம் எண்வகையும்,

சிவயோகிக்கு இல்லை என மாமறைகள் பெருமூசம் கட்டும் — சிவத்தோடு இரண்டறக்கூடி நின்ற சிவயோகிக்கு இல்லையென்று மாமறைகளாகிய பெரிய போரிகை முழக்கும்.

(குறிப்பு.) "மாமறைகள் தட்டும் பெருமூசம்" என்றது அவர்க்கில்லை என்று பலபடக்கூறுதல். இவை வட்டும் சிவத்திற்கு இன்மையின், அதனை அடைந்த சிவயோகிக்கும் இன்மென்பது ஆயிற்று. தான் - அசை. ()

தத்துவத்தா ரல்லார் சலசந் திரனெப்பார்
தத்துவத்தார் செய்யுந் தவாதவங்கள்—சுத்தக்
கானமழை யாற்சழுவிக் காற்றைக் கனலாற்
றானஞ் செயல்போற் றெளி.

(உரை) தத்துவத்தார் அல்லார் சலசந்திரன் ஒப்பார் தத்துவத்தார் செய்யும் தவாதவங்கள்—மெய்ப்பொருளாகிய தத்துவத்தை அடையாதார் தற்போதத்தால் செய்யும் தவாதவங்களினையும், இவற்றின் பயன்களினையும், உயர்ந்தும் தாழ்ந்தும் சலத்தில் பிரதிபலிதமான சந்திரனைப்போலும் ஆவர்; அப்பரதத்துவத்தை அடைந்தோர் அருள் வடிவாயிருந்து செய்யும் தவங்களும் அவங்களும் இவற்றுன் வரும் பயன்களும் இவர்க்கு எந்நாளும் ஆம் எனின்,

சுத்தக் ககனம் மழையால் கழுவிக் காற்றைக் கனலால் தகனம் செயல்போல் தெளி—நிர்மலமாய் உள்ள ஆகாயத்தை மழையாற் கழுவிக் காற்றைக் கனலாற் சுடுவதனாலும் ஆம் என்று அறிந்தி.

(குறிப்பு.) ககனத்தை மழையாற் கழுவுதலும் காற்றைக் கனலாற் சுடுதலும் இன்ரூயினவாறுபோல், கற்போகம் போய்ப் பேய் பிடியுண்டவரைப்போலும் திருவருளே வடிவாயிருந்த மெய்ஞ்ஞானிகள் திருமேனியில் நிகழும் தவாதவங்கள், அவ்வருள் விளையாட்டே அன்றி, அவர் அவற்றைச் செய்வதும் அவற்றின், பயன் அவரைச் சார்வதும் இன்மையான் அறிந்தி.

தவாதவங்கள் தத்துவத்தார் அல்லார்க்கு வருவிக்கப்பட்டன. தத்துவம் என்றது ஈண்டுச் சிவத்தை. (நி-ை)

காலனுக்குப் பாவமென்றுங் காற்றுங் கதிரவனும் சீலமிலா ரென்றுஞ் சிவயோகி—மேலொன்றைச் சுட்டுவதுந் தம்மைச் சுழற்றிவிடா தாட்டுமலக் கட்டின் பிராந்திவலுக் காண்.

(உரை.) காலனுக்குப் பாவம் என்றும் காற்றும் கதிரவனும் சீலம் இலார் என்றும் சிவயோகி மேல் ஒன்றைச் சுட்டுவதும்—உயிர்களைக் கோறலால் காலனுக்குப் பாவம் உண்டென்றும், அசுத்த நிலத்தில் சஞ்சரிக்கலானும் அந்நிலத்து எறிதலானும் காற்றுங் கதிரவனும் ஆசாரம் இலர் என்றுங் கூறுதல்போல், சிவபூசையாதி கன்மார்க்கங்களைச் செய்திலர் என்றும் நீராடலாதி ஆசாரம் இலரென்றும், இவை முதலிய குணதோஷங்களைச் சிவயோகிகள் மேற்சுட்டிக் கூறுவது,

தம்மை சுழற்றிவிடாது ஆட்டும் மலக்கட்டுடன் பிராந் திவலு—தம்மைவிடாது பற்றின்று அவத்தைகள் தோறும் சுழற்றி ஆட்டப்பட்ட மலபந்தத்திறல் தோற்றும் பிராந்தியி னது சாமர்த்தியமாம்.

(குறிப்பு.) சரியை கிரியை யோக ஞானங்களுள் ஞானம் ஒன்றுமே முத்திக்கு ஏதுவாகலின், இஞ்ஞானத் தால் முத்தியை அடைந்திருத்தலாற் சரியாதிகளும், உடம் பாதி அசுத்தங்களை எல்லாங் கடந்து சுத்தமாபுள்ள ஆநந்த வெள்ளத்தில் மூழ்கியிருத்தலால் நீராடலாதி ஆசாரங்களுஞ் செய்வது இன்றிச் சிவயோகி சும்மா இருப்பன். அங்ஙனம் இருப்பது சரியாதிகளைச் செய்வோர்க்கு மலமறைப்பால் தெரியாது, தம்மைப்போல் பார்த்து அவனை அவர் இகழ்த லான், "மலக்கட்டுடன் பிராந்திவலுக்காண்" என்றார்.

காலலுக்குப் பாவமும், காற்றிற்கும் கதிரவனுக்கும் அசுத்தமும் இன்றுயதுபோல், நன்மார்க்கஞ் செய்யாமை யால் பாவமும், ஆசாரம் இன்மையால் அசுத்தமும் அவர்க்கு இன்றென்பதுங் காண்க.

காண் - அசை. (நந)

நாயேறி வீழ்ந்தென் னடாத்துகிலென் ஞானிக்குப் பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்—மேலோர் பெருமை சிறுமையிலை பின்னுமுன்னு மில்லை வரைவற்று வேண்டியசெய் வார்.

(உரை) நாய் ஏறி வீழ்ந்து என் கடாத்துகில் என் ஞானிக்குப் பேய் ஆம் சகம் பழித்து என் பேணுகில் என் மேலோர்—நாய்மேல் இவர்ந்தான் அதில் நின்றும் வீழ்ந்த தலல் இகழ்ச்சி என்னை? வீழாதிருந்து அதனை கடாத்திய

தால் புகழ்ச்சி என்னை? அதுபோல் ஞானிகட்குப் பேய்க் கூத்தப்போல் தோற்றும் இச்சகத்திலுள்ளார் இகழ்ந்தால் அவர்க்கோர் சேதம் என்னை? புகழ்ந்தால் ஓர் இலாபம் என்னை? அவர் ஒன்றோடுந் தோயார்;

பெருமை சிறுமை இலை பின்னும் முன்னும் இல்லை வரைவு அற்று வேண்டிய செய்வார்—அஃதன்றி உயர்ச்சி வந்ததென்று பெருமையும் தாழ்ச்சி வந்ததென்று சிறுமையும் அவர்க்கில்லை, பின்னுகிய சகலமும் முன்னுகிய கேவலமும் இல்லை, ஆகலின் சுத்தமாகிய அருள் வடிவாயிருந்து அளவின்றித் தாம் வேண்டியவாறே திருவிளையாட்டு ஆடுவார்.

(குறிப்பு.) இகழ்ச்சியாய் உள்ள காய் எறி வீழ்ந்தாலும் கடாத்திறலும் இகழ்ச்சி புகழ்ச்சி இன்றுயதுபோல், ஞானிகள் தமக்கு இகழ்ச்சியாயிருந்த உடம்பை இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் அவை அவர்க்கு இன்றென்பது ஆயிற்று.

செம்பிற் காளிதம்போன்று உயிரை அநாதியிற் பற்றியிருந்த சகசமலம் நீக்கற்பொருட்டு மாயையில் தனுவாதி கொடுத்தலின், சகலத்தைப் பின்னென்றும் ஆணவசம்பந்தமான கேவலத்தை முன்னென்றுங் கூறினர்.

"சிந்தை பயமிலச்சை" என்னுந் திருவெண்பாமுதல் இந்தான்கு திருவெண்பாவானும் சிவஞானி மகிமையை அறிவித்தவாறு காண்க. (நகூ)

சன்மார்க்க மேழுதலாத் தாதமார்க் கத்தளவுந்
தன்மார்க்க மானவெங்கள் சம்பந்தன்—றன்னைத்
துறவி யரசு சுகியோகி போகி
அறவன் மறவனென லாம்.

(உரை.) சன்மார்க்கமே முதலாத் தாதமார்க்கத்தி னளவும் தன்மார்க்கம் ஆனை எங்கள் சம்பந்தன் தன்னை—ஞான முதல் சரியை ஈறுய்ச் சொல்லப்பட்ட நான்கு பாதத்திற்கும் உரித்தாகிய சன்மார்க்க முதல் தாதமார்க்கம் ஈறுய்ச் சொல்லப்பட்ட இந்நான்கினையும் தமது அருள்நெறியால் எமக்குண்டாகச் செய்தருளிய எமது சுவாமிகளாகிய திருஞான சம்பந்தப்பிள்ளையாரை,

தவறி அரசு சுகி யோகி போகி அறவன் மறவன் எனல் ஆம்—எல்லாவற்றோடுங் கூடியிருந்தும் அவற்றோடு சாக்கற்று நிற்றலின் துறவி என்றும், சகல புவனங்களையுந் தாமேயிருந்து நடத்தலின் அரசு என்றும், ஆனந்தமயமே யிருத்தலின் சுகி என்றும், சிவயோகத்தை அநுக்கிரகத்தலின் யோகி என்றும், ஆன்மபோதங்களை விழுங்கிக் கோடலின் போகி என்றும், சகல கர்மங்களும் ஓர் வடிவாயிருத்தலின் அறவன் என்றும், அடைந்தோர் மும்மலங்களைக் கோறலான் மறவன் என்றுஞ் சொல்லலாம்.

(குறிப்பு.) சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திரமார்க்கம் தாதமார்க்கம் என நான்கு. இவற்றுள், சன்மார்க்கமாவது, நீயே நான் நானே நீ என்பது. சகமார்க்கமாவது, தோழனும் தோழனும் என்பது. சற்புத்திர மார்க்கமாவது, பிதாவும் புத்திரனும் என்பது. தாதமார்க்கமாவது, ஆண்டவனும் அடியானும் என்பது.

ஞானம் பெற்றோரைப் புகழ்ந்து கூறிய பின்னர், இத்திருவெண்பாவால் அந்த ஞானத்தை அருளிச்செய்தற்குக் காலவாகிய பிள்ளையாரைப் புகழ்ந்து கூறியவாறு காண்க.

தானல்லர் தன்னதல்லர் தத்துவசா லத்தலைவர்
மேனிசதா நந்தம் விளையுமிடம்—யானைக்கை
போலே யிவருடம்பிற் போசமெலாம் பூசையித
லுலே சகம்பிழைக்கு மென்.

(உரை.) தான் அல்லர் தன்னது அல்லர் தத்துவ சாலத்*
தலைவ மேனி சதாநந்தம் விளையும் இடம்—தலைகரண புவன
போகங்களாய் உள்ள தத்துவங்கள் எல்லாம் தமக்கு அயல்
ஆகலின், அவை தாமும் அல்லாமல், அசுத்தம் தூக்கம் அறித்
தியமாயிருத்தலின், அவை தமதும் அல்லாமல், அத்தத்துவங்
களோடு கூடியும் கூடாத * சாலத்தோடும் அவற்றிற்குத்
தலைவராயிருந்த மெய்ஞ்ஞானிகள் திருமேனி சதாநந்தம்
மென்மேலும் உண்டாகும் ஓரிடம்; (ஆகலின்,)

ஆனைக்கைப்போலே இவர் உடம்பின் போகம் எல்
லாம் பூசை இதனுலே சகம் பிழைக்கும் என்—எதற்கு
பொருளின் பரிசமறிவதுபோல் தோற்றித்தன்னுள் இருந்த
காசிக்குக் கந்தவிடயமுமாக இருந்த யானைக்கைபோல், இந்த
ஞானிகளது திருமேனியால் அநுபவிக்கும் போகமெல்லாம்
இத்திருமேனி அநுபவிப்பதுபோல் இருந்து இத்திருமேனி
யுள் இருந்த பரிபூரண சிவத்திற்கும் பூசை ஆம், இப்பூசையி
னுலே சகத்திலுள்ளார் பிறவித் துன்பத்திற்குத் தப்பி
வீட்டின்பத்தை எய்துவர் என்று அறிந்தி.

(குறிப்பு) முன் தலைகரணைக்களை யாம் என்றும், புவன
போகங்களை எமது என்றும் கருதின்ற தற்போதங் கெட்டு

* தத்துவசாலம் தத்துவக் கூட்டமெனக்கொள்ளினும்
அவற்றிற்குத் தலைவரெனப் பொருள் விரித்தலுமாம்.

இப்போது அறிவு தாமாய் ஆநந்தம் சமதாயிருத்தலின் "தானல்லர் தன்னதல்லர்" என்றார்.

தேகத்திருந்த போதத்தையும் கருவிகளையும் விழுங்கிக் கொண்டு அதனுள் சிவங் குடியா யிருத்தலின், "மேனி சதா நந்தம் வினையுமிடம்" என்றும், "போகமெலாம் பூசை" என்றுங் கூறினர்.

இத் திருவெண்பாவால் ஞானிகட்குப் பத்திசெய்வார் வீடடைவார் என்று அறிவித்தவாறு காண்க. (நி அ)

பூசி முடிப்பனவும் பூண்பனவும் பொற்றுகிலு
மாசை மிகுந்த வரசியர்க்காங்—காசிற்ற
மூண்டையர்க்காகாசீவன் முத்தனுக்குப்போகமலாற்
குண்டையொப்பார்க் கேனிதுவா கும்.

(உரை.) பூசிமுடிப்பனவும் பூண்பனவும் பொன்தகி லும் ஆசை மிகுந்த அரசியர்க்கு ஆம்—சந்தனமாதி பூசப்படு வனவும், மல்லிகையாதி முடிக்கப்படுவனவும், கொந்தளப் பொன்தோலையாதி பூணப்படுவனவும், பொற்சரிகைச் சேலை யாதி உடுக்கப்படுவனவும், ஆகிய இவை முதலிய போகங்க ளெல்லாம் அனையனுல் மிகவும் இச்சிக்கப்பட்ட சுமங்கலக ளாகிய அரசியர்க்கே ஆகும்; (அதுபோலும்)

சீவன் முத்தனுக்குப் போகம் அல்லால் காசு இற்ற மூண்டையர்க்கு ஆகா குண்டை ஒப்பார்க்கு என் இது ஆகும்—சிவனது இச்சைப்படியே அவனது திருவடிசேர்ந்த சீவன் முத்தனுக்கே போகம் அன்றி, மங்கல நீங்கிய அமங் கலக்குப் போகங்களில் ஒன்றேனும் ஆகாவாறுபோலும்; சிவனடி சேராது தவம் பண்ணுவோர்க்கும் அத் தவத்திற்கு உரிய விரதஞ்செய்து முடிப்பதே அன்றிப் போகங்களில்

ஒன்றேனும் அநுபவிக்கலாகாது, அஃதன்றிக் குண்டை யைப்போலும் சரியையாதி தொழில் செய்வோர்க்கும் இப் போகம் அநுபவிப்பது என் ஆகும்?

(குறிப்பு.) தம் முதலாகிய சிவத்தை இழந்து தவம் பண்ணுவோனை மூண்டையர் என்று குறிப்பாற் கூறினர்.

குண்டைக்குத் தொழில்செய்வதே அன்றி அரையன் ஏடுங் கூட்டுறவு இன்மைபோல், சரியையாதிகளைச் செய் வோர்க்கு இத்தொழில் செய்வதே அன்றிச் சிவத்தோடும் கூட்டுறவு இன்மையால், இவரைக் "குண்டையொப்பார்" என்றார்.

இத் திருவெண்பாவால் திருவடியை அடைந்தோர்க்கே போகம் அநுபவிப்பது ஆம், மற்றையர் தடக்குச் சொன்னெறி நிற்பதே அன்றிப் போகம் அநுபவிக்க லாகாது என்று அறிவித்தவாறு காண்க. (நகை)

ஆனைமதப் பட்டா லலங்கார மன்றிநாய்
தானுமதப் பட்டாற் சரியாமோ—ஞானி
தடைமீறி னுலுஞ் சதுராகுங் கன்மி
கடைமீற லாகாது காண்.

(உரை,) ஆனை மதப்பட்டால் அலங்காரம் அன்றி நாய் தானும் மதப்பட்டால் சரி ஆமோ—மதமேறி மூன்னும் சிறப் புள்ள யானை பின் மதமேறித் தன் தடை கடந்து சேறினும் சிறப்பேயாம், அன்றிப் பேய் எறி மூன்னும் இழியுள்ள நாய் தானும் தன் பேய் எறிதல் அதுபோலும் சிறப்பாமோ? (அவைபோலும்,)

ஞானி தடைமீறினுலும் சதுர் ஆகும் கன்மி கடை மீறல் ஆகாது—மூன் நின்றநிலை கடவாதிருந்தபோதும்

சிறப்புள்ள மெய்ஞ்ஞானி பின் ஆந்த மேலீட்டால் அந் நிலை கடந்து சேறினும் சிறப்பே ஆகும், கருமி நிலைகடவா மென்னும் அம்மெய்ஞ்ஞானிகட்கு இழிவாவன். தற்போதத் தால் அந்நிலைகடந்த போதும் இழிவாவன். ஆகலின், தன் னிலை கடக்கலாகாது.

(தறிப்பு.) ஆனை மதமேறினால் மிகவுஞ் சிறப்பு; காய்ப் பேயேறினால் மிகவும் இழிவு; அவைபோல, ஞானி தலை மீறினால் மிகவும் சிறப்பு; கன்மி கலைமீறினால் மிகவும் இழிவென்பதாங் காண்க.

காண் - ஆசை,

இத் திருவெண்பாவால் ஞானி கிரியை செய்யினும் செய்யாவிடின் மிகவும் இழிவாவன் என்பதும் அறிவித்த வாறு காண்க. (சுo)

அதிபக்கு வத்தாற் கருக்கிரகஞ் செய்யும்
பூதுணைமக்குச் சாத்திரங்கள் போதா—திதுவென்னுப்
பேறே யநந்தம் பிரகாரம் வந்தாலும்
வேறே யாந்த விதம்.

(உரை.) அதிபக்குவத்தாற்கு அநுக்கிரகம் செய்யும் பூதுணைமக்குச் சாத்திரங்கள் போதாது—திவிரதர பக்குவம் உடையானுக்கு ஞானுநுக்கிரகம் பண்ணும் அதிசயத்திற்கு வெவ்வேறு வகுக்கப்பட்ட சாத்திரங்கள் எல்லாம் போதா; (அஃது எங்ஙனம் எனின்,)

இது என்னும் பேறே அநந்தம் பிரகாரம் வந்தாலும் வேறே அநந்தவிதம்—இது என்று ஒன்றைச் சுட்டுதற்கு இடம் வைக்காது கூறும் உபதேசப்பேறே அவனுக்கு

அநந்தவிதமாய்க் கூறும் சாத்திரங்கள் ஆகும், இங்ஙனம் வந்த பக்குவனும் அநந்தம் பெயர்களுள்ளும் வேறு, இவனை ஒழிந்த பக்குவர்களும் அநந்தவிதம் ஆவார்கள்.

(தெளிப்பு.) தீவிரதர பக்குவனுக்கு அறிவு சிவத்தையே அன்றி மற்றொன்றையும் பகுத்து நாடாது ஆகலின், "சாத்திரங்கள் போதாது" என்றார்.

மந்தம், மந்ததரம், தீவிரம் என்னும் இம்மூன்று பக்குவரும் நாலுபேதமாய் வருதலினும், இவர்க்கு உபதேசம் நாலுபேதமாகக் கூறிப் பக்குவப் படுத்தவேண்டும் ஆகலினும், "அநந்தவிதம்" என்றார்.

இத் திருவெண்பாவால் தீவிரதர பக்குவனுக்குக் கூறும் உபதேசமே போதுமென்பதும் மற்றைய மூவர்க்கும் அவர் கூறும் உபதேசவொழுங்கையும் அன்றி வேதாகமங்களால் உணர்த்த வேண்டும் என்பதும் அறிவித்தவாறு காண்க. (சுக)

அறியாமை நீங்கி யறிவா யறிவே
யறியாம லாயிரண்டு மற்றுப்—பிறியாதார்
தன்னிழப்பின் ஞான சமாதிக்குச் சாதகரா
மங்கிலைக்கே கீவன்முத்த ராம்

(உரை.) அறியாமை நீங்கி அறிவாய் அறிவே அறியாமல் ஆய் இரண்டும் அற்றுப் பிறியாதார் — சகல கேவலம் ஆகிய அறியாமை நீங்கித் தம்மை அருளாற்கண்டு அவ்வருளறிவாகி, மூன்மலமாகிய அறியாமையில் மறைந்திருந்தாற் போல் அவ்வறிவு தானே அறியாமையாகி அதனுள் மறைந்து இவ்வறிவென்பதும் தானென்பதும் ஆகிய இரண்டும் அற்று இதனைப் பிரியாதிருப்போர்.

தன் இழப்பில் ஞானசமாதிக்குச் சாதகர் ஆம் அந்நிலைக்கே சீவன்முத்தர் ஆம்—அங்ஙனம் இருக்கவே தற் சுதந்திரபோதம் அறும், அஃது அறவே பரைதானகிய ஞான சமாதிக்குச் சாதகர் ஆவர், இச்சாதகம் வந்த அக்கணமே சீவன் முத்தரும் ஆவர்.

(குறிப்பு.) இம்முறைவந்து பரையோகத்தில் நின் ஊர்க்குச் சுகப்பேறும் சுகாதீதமும் தாமே கிடைக்கும் ஆகலின், "அந்நிலைக்கே சீவன் முத்தராம்" என்றார்.

இத் திருவெண்பாவால் பரையோகத்தில் நிற்போரும் சீவன்முத்தராவர் என்று அறிவித்தவாறு காண்க. (சுஉ)

மகவான்கண் பார்த்தவர்க்கு மாண்பாய்த் தனக்குப்
பகமா யிலச்சைவிடாப் பண்பாய்ச்—சகமாணைக்
கண்ணுரி போல்வேடக் கண்ணுடி காட்டுதவ
மெண்ணூரு காலமிருந் தென்.

(உரை.) மகவான் கண் பார்த்தவர்க்கு மாண்பு ஆய்த் தனக்குப் பகம் ஆய் இலச்சை விடாப் பண்பு ஆய்—இந்திரனது கண்களைப் பார்த்தபெயருக்கு மாட்சிமையாய் அவ்விந்திரனுக்கு அல்குலாய் இவனது உள்ளே ஞானம் விடாமுறைமையா யிருந்ததுபோல,

சகம் மாணைக் கண்ணுரிபோல் வேடக்கண்ணுடி காட்டுதவம் எண் ஊழிகாலம் இருந்து என்—தவவேடத்தைப் பார்க்கின்ற சகத்தோர்க்கு மாட்சிமையாயிருப்ப இவ்வேடத்திற்கு உரிய ஞானம் தமக்கு இன்றென்று தம்முள்ளே ஞானமுற வேசிபோல் மிளிக்கிய வேடமாகிய கண்ணுடி காட்டப்பட்ட தவத்தார் அளவிறந்த காலம் இருப்பினும் அவ்வேடத்தால் பயன் அவர்க்கு என்னை உளது?

(குறிப்பு.) அவனுக்குக் கண்களைப் பார்க்குந்தோறும் இலச்சைவரலால், "இலச்சைவிடா" என்றார். அவனை இவர்க்கு உவமை கூறினமையால், இவர்க்கும் இவ்வேடத்தைப் பார்க்குந்தோறும் இலச்சைவரும் என்பது ஆயிற்று.

தவத்தோர்க்கு உரிய உள்ளொழுக்கமான ஞானசாரம் ஒன்றும் தோற்றாது வடிவமாத்திரையே தோற்றினமையால் "வேடக்கண்ணுடி காட்டுதவம்" என்றார்.

இத் திருவெண்பாவால் சிவஞானம் இல்லார்க்குச் சிவ வேடத்தால் பயன் இன்று என்று அறிவித்தவாறு காண்க.

•

முதலதிகாரம் வேதாகமப் போதுவிலுபதேசம்

மூற்றும்.

சத்திநிபாதத் துத்தம ரொழிவு

கால்வகைச் சத்திநிடாதத்து உத்தமர்களது பிரபஞ் சப் பற்ரொழிவை முறையே கூறினமையால் இவ்வதி காரத்திற்குச் சத்திநிபாதத் தத்தமரொழிவு என்னு பெயர் ஆயிற்று.

இவர் இந்நூற்கு உரிமவர் ஆகலின் வேதாகமப் பொதுவிலுபதேச வதிகாரத்தின்பின் இவ்வதிகாரம் வைக் கப்பட்டது.

சரியாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல்—குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ணல்வர்க் குபதேச
மானத் தையுநிகழ்த்தி னன்.

(உரை.) சரியாதி நான்கினுக்கும் சாலோகம் ஆதிவரும் ஆற்று எனக்கு அளித்த வள்ளல் குருராயன்—சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் இந்நான்கு பாதத்திற்கும் சாலோ கம் சாமீபம் சாரூபம் சாயுச்சியம் என்னும் இந்நான்கு பத மும் வரும் முறைமையை எனக்கு அருளிச்செய்த வள்ளல் குருராயனாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார்,

ஞானத்தில் பக்குவர்கள் நால்வர்க்கு உபதேசம் னைத் தையும் நிகழ்த்தினன்—ஞானபாதத்திற்கு உரிய மந்தம், மத்தமம், தீவிரம், தீவிரதரம் என்னும் இப்பக்குவம் உடை

யார் நால்வாது இலக்கணமும், அவர்க்கு உபதேசிக்கு முறை மையும் அருளிச்செய்தார்.

1 (குறிப்பு.) மூப்பத்தாறு தத்துவங்களையும் நியதிகளை வது சரியை; அவற்றை அறிந்து நீங்கியே தன்னை அருளால் அறிந்து அவற்றின் முடிவில் நிற்பது சாலோக பதம். ஆங் குத் தனக்கு அறிவித்த அவ்வருளைத் தரிசித்துப் பின் அருள் என்றும் தான் என்றும் பிரித்து நோக்காது தற்போதத்தை அடக்குவது கிரியை; அவ் வருளே வடிவாயிருப்பது சாமீப பதம். அங்ஙனம் இருந்து தற்போதஞ் சிறிதும் தோன்றாது ஒழிப்பது யோகம்; ஆக்குப் பராதாரையிருப்பது சாரூப பதம். அப்பரை நீக்கத்தில் தோன்றும் ஞானாந்தத்தைப் பெறுவது ஞானம்; அந்த ஆநந்தத்தில் அதீதப்படுவது சாயுச்சிய பதம். ஆகவின், "சரியாதி நான்கினுக்குஞ் சாலோகமாதி வருமாறு" இங்ஙனம் வினக்கொள்க. (க)

கின்னரியைத் தொட்டவர்போற் கேட்டவளவுக்கள சொன்னதல வெங்கள் சுவாமியுரை-மன்னடத்தி [வு லானந்த மூர்ச்சிதர்கை யாடகவாழ் தன்னிலே தானுணலட் போலமொழிந் தான்.

(உரை.) கின்னரியைத் தொட்டவர்போல் கேட்ட அளவுக்கு அளவு சொன்னது அல எங்கள் சுவாமி உரை— வருடி வாசிப்பார் தாம் நினைத்துக் கேட்ட பாட்டின் அள வுக்கு அளவு கூறும் கின்னரியைப் போன்று யான் நினைத்து வினவியமட்டிற்கு இம்மட்டு விடைகூறியது அன்று, எமது சுவாமிகளாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் திரு வாக்கு; (அஃது எங்ஙனம் எனின்,)

மன் நடத்தில் ஆகந்த பூர்ச்சிதர் கை ஆடக யாழ் தன்னினிலே தாணும் நலம்போல மொழிந்தான்—பரமேசுரன் திருநடனத்தில் அந்நடன அதிசயத்தைப்பார்த்து ஆகந்த பாவசாயி நிற்போர் கைப்பிடித்த பொன்னிலை இயற்றப்பட்ட யாழ் தன்னிலே தான் வசிக்கும் நலம்போல் யான் கேளாது கேட்க எனக்கு உபதேச மொழிகளை அருளிச்செய்தார்.

(குறிப்பு.) அவர் ஆகந்த பாவசாயி நிற்கவும் தெய்வ யாழ் வருடாது வாசித்தல்போல, பிள்ளையார் ஆகந்தாதி தாயி எழுந்தருளியிருக்கவும் அவரது தெய்வவாக்கு நினையாது கூறிற்றென்பது அறிக.

"கின்னரியைத் தொட்டவர்போற் கேட்ட அளவுக்கனவு சொன்னதல" என்றமையால், கடாவும் விடையுந்தாமே அருளிச்செய்தார் என்பது ஆயிற்று.

தெய்வயாழிற்குமேல் வேறுயாழ் இன்மைபோல் இந்த ஆசாரியர்க்குமேல் வேறு ஆசாரியர் இலர் என்பதும் காண்க.

யாழ் உன்னி வாசியாதிருக்கவும் பிறர்க்கு அங்ஙனம் செய்ததுபோல் தோற்றலின். "தாணுநலம்போல மொழிந்தான்" என்று திருவாக்குக்கு அதனை உவமையாகக் கூறினர்.

இவையிரண்டு திருவெண்பாவாலும் தமது ஆசிரியர் ஞானபக்குவர் கால்வர்க்கும் உபதேசிக்கு முறைமையைத் தமக்கு அருளிச்செய்யும்போதும் ஆகந்தாதி தாயி எழுந்தருளியிருந்தே அருளிச்செய்தாரென்று அறிவித்தவாறு காண்க.

சும்மாதே பார்த்திருக்கச் சுத்தியா முத்தமர்க்குத்
தும்மாய்வார்க் கோருரையே சஞ்சீவ—மென்மேலு

மாற்றஞ் சகுனப்புள் வாக்கு மதுவுண்ட
போற்றும்பி யின்பாட்டுப் போல்.

(உரை.) உத்தமர்க்குச் சம்மாதே பார்த்து இருக்கச் சுத்தி ஆம் தம் ஆய்வார்க்கு ஓர் உரையே சஞ்சீவம்—தீவிர சுத்தி ஆம் தம் ஆய்வார்க்கு ஓர் உரையே சஞ்சீவம்—தீவிர சுத்தி பக்குவர்க்கு ஓர் மொழியும் கூறாது ஞானசாரியர் மௌனஞ்ச நோக்கால் பார்த்திருக்கவே ஆன்மசுத்தியாம், தீவிரபக்குவ முடையராய்த் தற்போதம் ஒழிப்போர்க்கு அப்போதஞ் சிறிதேனும் பதையாது ஒழிதற்கு ஏதுவாய்க் கூறும் ஓர் மொழியே சஞ்சீவம் போன்று சுத்தி ஆம்;

மென்மேலும் மாற்றலும் சகுனப்புள் வாக்குபோல் மது உண்ட தும்பியின் பாட்டுப்போல்—மந்தர பக்குவர்க்கு * விட்டு இசையாது இசைக்கும் சகுனப்புள் வாக்குபோலச் சிற்சில சொற்களால் தெளிவிக்கச் சுத்தியாம். மந்த பக்குவர்க்கு மதுவை நிறைய உண்ட தும்பி இடையறாது பாடும் பாட்டுப்போல வேகாகம சாத்திரங்களாலும் காலவுபாய யுத்திகளாலும் இடையறாது அறிவிக்கச் சுத்தியாம்.

(குறிப்பு.) திருநோக்கக் குறிப்பால் அங்கிலே தெரிந்து கோடலின், "சும்மாதே பார்த்திருக்க" என்றும், சஞ்சீவத்தால் உடலம் சுத்தியாவதுபோல ஓர் உரையால் ஆன்ம சுத்தி பெறுதலின், "சஞ்சீவம்" என்றும், சகுனப்புள் நோக்கால் தான் நினைத்தவொருள் கிடைத்தல்போல் சிற்சில சொற்களால் மெய்ப்பொருளைத் தெரிந்து கோடலின், "சகுனப்புள் வாக்குப்போல்" என்றும், மூர்ச்சித்துக் கிடந்த பெண் தும்பியை ஆண் தும்பி சூழ்ந்துகொண்டு இடையறாது பாடி ஊடலே அதற்கு அம்மூர்ச்சை தெளிந்து

* நந்தவே நில்லாமை யொழித்தல்.

இசனேடு பறந்து கூடல்போல, காலை வுபாய யுத்திகளாவ
இடைவிடாத அறிவித்து அறிவினது ஆணவமூர்ச்சையை
நீக்கித் தம்மோடு சேர்த்தலான், "தும்பின் பாட்டு
போல்" என்றுங் கூறினர்.

சுத்தியாவது சகல கேவலங்களை நீங்கி அவற்றின்
வாசனையோடு எழுந்த தற்போதமும் ஒழிதல்.

"மென்மேலு மாற்றஞ் சகுனப்புள்" என்றதனால்
ஆந்தை என்பதாயிற்று.

சகுனப்புள் வாக்குப்போல் என்றும் மதுவுண்ட தும்பி
யின் பாட்டுப்போல் என்றுங் கூட்டுக.

இத் திருவெண்பாவால் ஞானசாரியர் உபதேசத்தால்
கால்வகைப் பக்குவரும் தெளிந்துகொள்ளு முறைமையை
அறிவித்தவாறு காண்க. (நே

மூலைமுதிர நாண முதிர்ந்தடங்கி மூடிக்
கலவியிலே நக்கினத்தைக் காட்டல்—சலனடைய
ணைலுந் தம்டினசெய் தாநந்த மாக்குவது
போலைலா மிந்தப் பொருள்

(உரை.) மூலை முதிர நாணம் முதிர்ந்து அடங்கி மூடிக்
கலவியிலே நக்கினத்தைக் காட்டல்—ஓர் பேதைப் பெண்
ணனது மூலை முதிரமுதிர நாணம் மேன்மேலும் முதிர்ந்து
பிறபுருடரோடு முன்போல் நகையாடலாதி செய்யாது
அடங்கி, அம்மூலையினை மறைத்துத் தனது சுய புருடனுக்
குக் கூட்டுறவின்கண் * நக்கினத்தைக் காட்டுவதுபோலும்
குருவன் அறிவு முதிரமுதிர முன்போல விடயங்களிற் செல்

* நிருவாணம்.

வசற்கு காணமுதிர்ந்து அவ்விடையங்களிற் செல்லும் போதத்தை உள்ளடக்கித் திருவருளில் மறைத்து ஆநந்தத் திற் கொப்பித்து நிற்றல்; (அப்போதத்தை ஆநந்தத்திற்கு ஒப்பிக்க எனின் அங்ஙனம் ஒப்பிக்குமாறே நில்லாமல்,)

சலனை பயன் ஆனலும் தம்பனைசெய்து ஆநந்தம் ஆக்குவதுபோனல் இந்தப்பொருள் ஆம்—போதச்சலனை ஆனலும் விடையப்பயனை அநுபவிப்பதானலும், இவ்விடையப் பயனை நீக்கி அப்போதச் சலனையை அடக்கி அப்போதத்தை ஆநந்தமய மாக்குவதானலும், இவ் வாநந்தப்பொருள் ஓர் இயல்பிற் ருய்த் தோற்றுது, அங்ஙனம் செய்வன போம்ஆயின், இப் பொருள் ஓர் இயல்பிற்ருய்த் தோற்றுவதாம்.

(குறிப்பு.) முலைமுதிர்ந்த பெண் அம் முலையையும் அல்குலையும் பிறபுருடருக்குக் காட்டாது மறைத்துச் சுய புருடனுக்குக் காட்டுதல்போல், அறிவு முதிர்ந்தோர் தம் போதத்தை விடையங்களிற் செல்லவொட்டாது மீட்டு உள் ளடக்கி அதனைச் சிவாநந்தத்திற்கு ஒப்பிக்கவேண்டும், ஆகலின், அங்ஙனம் உவமை கூறினர்.

போதம் விடையங்களிற் சென்று அழுந்தியும் ஆநந்தத் திற் சென்று அழுந்தியும் இங்ஙனம் மாறிநிற்கும் எனின் ஆநந்தமும் மாறித்தோன்றும் ஆகலின்: " ஆநந்தமாக்குவது போனலா மிந்தப்பொருள் " என்றார்.

" ஆனலும் " என்பதனைச் சலனை என்பதனேடும் ஆநந்தமாக்குவ தென்பதனேடுங் கூட்டுக.

இத் திருவெண்பாவால் அறிவாநந்தத்து அழுந்திய போதம் விரிந்து விடயாநந்தத்திற் செல்லாது ஓரியல்பிற்ருய்

ன்சோர்க்கே அவ்வாகந்தம் மாறுது கிடைக்கும் என்று
றிவித்தவாறு காண்க. (சு)

ஞ்ச மலமும் பசுவாந்த மும்பதியு
ஞ்சு தொழிலு மவத்தைகளுங்—கிஞ்சறிவுங்
கேட்டுச் சரியாதி செய்துகிலே சங்கெடாக்
காட்சிமெழு கிற் கனகங் காண்.

(உரை.) பஞ்சமலமும் பசு அகந்தமும் பதியும் அஞ்சு
சாழிலும் அவத்தைகளும் கிஞ்சு அறிவும் கேட்டு—ஆணை
ம், மாயை, காமியம், திரோதை, மாமாயை என்று கூறப்
ட்ட பஞ்சமலங்களினது இலக்கணமும், இம்மலங்களால்
றைபட்டிருந்த ஆகேகயாயுள்ள பசுவினது இலக்கணமும்,
இப்பசுபாசங்கட்கு மூதன்மையாய் ஏகமாயிருந்த பதியி
னது இலக்கணமும், அப்பதி செய்யாநின்ற பஞ்சகிருத்திய
இலக்கணமும், இப்பஞ்சகிருத்தியத்தால் கடக்கும் சாக்கி
ாதி அஞ்சவத்தையினது இலக்கணமும், இவ் அஞ்சவத்
தைகள்தோறும் சூழலும் ஆன்மபோது இலக்கணமுங் கேட்
றிந்தும்,

சரியாதி செய்த கிலேசம் கொடாக் காட்சி மெழுகில்
ணகம்—சரியை கிரியை யோகங்களைச் செய்தும், அப்
ாசத்தை நீக்கிப் பதியை அடைந்து பிறவித்துன்பத்தைத்
க்கமாட்டாதார் அறிவு மாற்று அறி மெழுகில் அடங்கிய
ணகம்போலும் ஆம்.

(குறிப்பு.) உரைத்து ஓட்ட ஏறிய கனகம் உருக்கி
டானமையின் மெழுகில் மறைந்தாற்போலத் திரி பதார்த்தங்
ளினது உண்மையைக் கேட்டறிந்த அறிவு சுவாநுபவத்

தால் வெளியாகாது மலத்தால் மறைந்தமையால், "மெழு
திற் கணகங்காண்" என்றார்.

அவ்வறிவு பிறர்க்குக் காட்சியாய்த் தோற்றலான்,
அதனைக் "காட்சி" என்றார்.

காண் - அனை.

இத் திருவெண்பாவால் பதி பசு பாசங்களினது உண்
மையை வேதாகமங்களால் உணர்ந்தாலும் அப்பதியைச்
சுவாநுபவத்தால் உணராார்க்குப் பயனில்லை என்று அறிவித்த
வாறு காண்க. (ந)

வாதி வடத்தினமு மாமருத்து வன்பிணியும்
சாதித்த வீரன்மேற் றம்பலமுங்—தீத்துபோல்
ஞானத்தி லின்பை நசிப்பித்து நானதுவா
மூனத்தை யாரொழிவிப் போர்.

(உரை.) வாதி வடத்தினமும் மா மருத்துவன் பிணி
யும் சாதித்த வீரன்மேல் தம்பலமும் தீது அதுபோல்—
பஞ்சலோகங்களையும் பொன்னாக்கினேன் என்று கூறும்
இரசவாதி பிடியனையிருத்தலும், பிறர்பிணிகளை எல்லாம்
போக்கினேன் என்று கூறும் மகாவயித்தியன் பிணியனை
யிருத்தலும், பகைகளை எல்லாம் வென்று சாதித்தேன்
என்று கூறும் மகா வீரன்மேற் பிறர்போட்ட தம்பலம்
இருத்தலுங் குற்றமாம். அதுபோல,

ஞானத்தில் இன்பை நசிப்பித்து நான் அது ஆம்
ஊனத்தை யார் ஒழிவிப்போர்—சுவாநுபவத்தால் * ஞான

* ஞானனந்தத்தைப் பெறுது அதனை விடயச் சேற்
றம் கெடுப்பித்து இவ்விடயச்சேற்றில் அழுந்தினின்று அவ்

கந்தத்தை அடைதற்கு ஏதுவாகக் கூறும் ஞானசாத்திரங் களைக் கேட்டறிந்தமாத்திரத்தில் அவ்வானந்தம் பெறுதல் அதனை விடயச்சேற்றில் கெடுப்பித்து இவ்விடயத்தோசம்றில் அழுந்தினின்று நான் அவ்வானந்தத்தின் மயமானேனென்று கூறுங் குற்றத்தை யாவர் நீக்குகிற்பார்.

(குறிப்பு.) மிடி பிணி தம்பலம் அவரிடத்திருத்தலால் தாம் சொன்னவாறு செய்பவர் அலர் என்று அறிந்தாற் போல, விடயப்பற்று விடாமையால் இவர் இங்ஙனங் கூறுதலே அன்றி அதனை அடைந்திலர் என்பதறிக.

மிடியால் அவர்க்குக் கூறினமையால் விடயம் இவர்க்கு வருவிக்கப்பட்டது,

இங்ஙனங் கூறுதல் மிகவுந் தோஷமாகலின், "ஊனத்தை யாரொழிவிப்போர்" என்றார்.

இத் திருவெண்பாவால் சிவாகந்தத்தைப் பெறுதிருந்தம் பெற்றேமென்று அசத்தியங் கூறல் மிகவும் பாவமென்று அறிவித்தவாறு காண்க. (கூ)

மயலற்றார் கேட்க மகிழ்ந்துரைத்த வார்த்தைதா
அயலுக் குபதேச மாகுந்—துயிலாத்
தொறுவனைப்போ னின்றுகே டுசழுக்கு தோயு
மறுமுரைத்தோ நாமுரைப்ப தை.

(உரை.) மயல் அற்றார் கேட்க மகிழ்ந்து உரைத்த வார்த்தை அயலுக்கு உபதேசம் ஆகும்—தேகாதி பிரபஞ்

ஞானந்தத்தை அடைதற்கு ஏதுவாகக்கூறும் ஞானசாத்திரங் களைக் கேட்டறிந்த மாத்திரத்தில் நான் அவ்வானந்த மயமானேன்—பாடபேதம்.

சகலை யான் எனது என்று கருதும் மயக்கம் அற்ற அதி பக்குவத்தாற் கேட்க ஞாஞசாரியர் ஆநந்த மகிழ்ச்சியால் ருளிச்செய்த உபதேசமொழிகள் அப்பக்குவர்க்கு அன்றி அயலில் இருந்தோர்க்கும் உபதேசமாகும்; (ஆகவின் அம் மொழிகளை,)

துயிலாத் தொறுவனைப்போல் நின்றுகேள் தூசு அழுக்கு நோயும் அறும் நாம் உரைப்பதை உளத்தோம்— சாக்கிரத்தில் நில்லாது சொப்பனத்துஞ்செல்லாது இடை யான தன்மையாய்த் துயிற்றும் துயிலாத இடையனைப் போன்று கேவல சகலங்களில் தாக்கற்று நின்று கேட்டி, இங்ஙனங் கேட்டி எனின், தூசின்மேல் எறும் அழுக்குப் போன்று எறுவதாய ஆகாமிய துன்பமும் ஒழியும், யாம் உனக்குச் சொல்லவேண்டிய புத்திணையச் சொன்மேனும், (இதனை நீ அறிதி.)

(குறிப்பு.) இடையன் கோற்கண் துயிலாது துயின்று மாட்டுமணி அரவத்தைக் கேளாது கேட்கும் முறைமை போல், இப்போது ஞாஞ்ஞைபதேசம் கேட்கும்போதே சகல கேவலங்கள் தாக்காது கேட்போன் அநுபவமுற்றும் பெற்று முன்னிலைச் சுட்டும் ஒழிந்து நிற்பன் ஆகலின், "தூசழுக்கு நோயுமறும்" என்றார்.

தூசழுக்கு நோயுமறும் என்ற உம்மையால் சஞ்சித பிராரத்தமும் அறும் என்பதாயிற்று. அஃது எங்ஙனம் எனில், கருவிகள் சடமாகலின் அவைகள் ஆன்மாவை அறிந்து கூடமாட்டா, ஆன்மா கேவலத்தில் மறைபட்டுக் கிடத்தலின் அவைகளைச் சென்று கூடமாட்டேன். கருவி களை பிரோகம்பண்ணி இக்கேவல மறைப்பை நீக்கிச் சக லத்தில் வைத்துப் பெத்தத்தில் நாகாதி பிரபஞ்சங்களை

அறிவிப்பதுபோலவும், நிழலவத்தைப்படுத்திக் கேவலத்தில் வைப்பதுபோலவும், முத்தியில் இக்கேவல சகலங்கள் காக்காது வைத்துச் சுத்தாவத்தையிற் செலுத்திச் சுத்தத்தில் வைப்பதும் நிருவருளே என்றும், இம்தன்றிக் கருவிகளைக் கூட்டுவித்தபோது ஆன்மாவிற்குச் சுதந்திர அறிவு தோன்றித் தான் அல்லாத தேகத்தைத் தானெனக் கருதி நின்று யானே எல்லாவற்றையும் அறிவேன், எல்லாவற்றையுஞ் செய்து முடிப்பேன், எனக்கு எதிரொருவரும் இன்றென நிற்கும், இங்ஙனம் நிற்பதனல் இதாகிதங்களும் இவற்றன் வரும் இருவினைகளும் தொடரும், இத் தொடர்ச்சியால் ஓளவிறந்த பிறவிகளில் நெடுங்காலம் சுழல்வது இங்ஙனம் என்று அந்தப் புல்லறிவைவிட்டு நீங்கி, கானலை நீரென்று மயங்கிக் கண்டபோதும் நீரை நீரென்று உள்ளபடி கண்டபோதும் தனக்குக் காட்டின்றது கதிரொளி என்று கண்கண்டு நின்றுர்போல், ஆன்மா பொய்யை மெய்யென்று மயங்கிநின்று அறிந்தபோதும், மெய்யை மெய்யென்று தெளிந்துநின்று அறிந்தபோதும், திரோபவித்தும் அநுக்கிரகித்தும் அறிவித்து நின்றதும் திருவருளே என்றும் உள்ளபடி அறியில் தானென்பதும், இந்த முறையே அவன் அவள் அது என்னும் முன்னிலைக்கண்ணும் திருவருள் நடப்பிக்கின்றது என்று கண்டு அம்முன்னிலைகளால் தனக்கோர் இதாகிதங்கள் வந்தகாலை அம்முன்னிலையை நாடாது வினைக்கீடாய்த் திருவருள் நடப்பிக்கின்றதென்று அத்திருவருளை நாடிநிற்றலான், பிறரென்பதும் போய், எங்குந் திருவருளாய்க் காண்டலால் ஆகாமியம் அறும் என்பதும், ஞானசிரிய! திருபாதோக்கத்தால் சஞ்சிதம் அறும் என்பதும் உண்மை,

மூற்சனனம் புரிந்த வல்வினை உடலுடன் அகலும் என்றும், * "வினைப்போகமேயுறுத் தேகங் கண்டாய் வினைதானெழித் தால், தினைப்போதளவு நில்லாது கண்டாய்" என்றும் இக் ஙனம் ஈசுவரவாக்கியம் ஞானிகள் வாக்கியங்கள் இருக்க, நீர் பிராரத்தவினையும் போம் என்றது என்னை எனின், ஈண்டுக் கூறிய முறையே நின்றுயான் பிறர் என்பது ஒழித்து திருவருளேகண்ணுகைச் சென்று சிவதரிசனம் பண்ணி அதில் அதீதப் பட்டு நின்ற சிவயோகி பஞ்சகிருத்தியங்களையுங் கடந்து பரமுத்தனைப்போல் இருப்பன் ஆகலின், அவன் பிராரத்தம் வருவதுபோல் தோன்றி அறிவதே அன்றி அவனை வதியாது ஆகலினும், அவனுக்குப் பிராரத்தம் இன்றென்பதறிக. இன்னும் அப்பர் மாணிக்கவாசகர் முதலாயினோர் சரித்திரக் களிலுணர்க.

மான் பிறர் என்பதனுல் வினை எறும் என்பது,

"தானலாதொன்று தன்னைத் தானெனக்கருதிக்கொண்டே
யானெலாஞ் செய்தே னென்னு ஞானமஞ் ஞான மத்தா
லீனமாம் வினைவி ரண்டா மிருவினை யாலு டம்பா
லூனமா ருடம்பா லூழா ழூழிலுலகா ரண்டோ டா"

என்னுந் தீயட்டாலும்.

† "யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியா னென்னு
மிக்கோனை ஞானவெரியால் வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்று னேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட் டோ
தான்செய்தே னெனுமவர்க்குத் தானந் கின்றி [டும்
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்கும் கண்மம்

* பட்டினத்துப் பிள்ளையார். † பத்தாம் சூத்திரம் - உ.

ஊரன்செய்யா ஞானந்தா னுதிப்பினல்லா
லொருவருக்கும் யாவனைதிங் கொழியா தன்றே"

என்னும் கீர்த்தியாராலும்.

* "யான் செய்தேதன் பிறர்செய்தா ரெனுங்கோ ணீங்கி"

என்னும் சிவஞானதீபத்தாலும் மற்றும் வருவனவற்
றாலுங் காண்க.

பிராரத்தம் இன்றென்பதனை,

† "மும்மைமதரும் வினைகண் மூளாவா மூதறிவார்க்
கம்மையு மிம்மையே யாம்"

என்னும் திருவருட்பயனுற் காண்க.

இத் திருவெண்பாவால் ஆசாரியர் உபதேசங் கூறி
டுதற்கு மாணாக்கன் சகல கேவலங்களில் தாக்கற்று
நின்று கேட்பின் மூவகை வினைகளும் அறுமென்று அறி
வித்தவாறு காண்க. (எ)

அண்ட முதலா யநந்தம் பிறப்பின்விதங்
கொண்டுநர ராய்வினைகள் கூருருத்துத்—தொண்டிற்
சரியாதி செய்து தவச்சார்பி னிற்போர்க்
கரிதான படக்குவரா லாம்.

(உரை.) அண்டம் முதல் ஆய் அநந்தம் பிறப்பின்
விதம் கொண்டு நார் ஆய்த் தொண்டில் சரியாதி செய்து
வினைகள் கூறு ஒத்து—அண்டசம் சுவேதசம் உற்பீசம்
சராயுசம் என்னும் இந் நான்கினில் தோற்றும் எழுவகைப்
பிறவியில் உண்டாகிய எண்பத்துநான்கு நூறுயிர யோனி

* உண்மை - அ. † அணைந்தோர்கண்மை - கூ

பேதங்களிலும் அநந்தம் உருக்கொண்டு மாறிமாறிச் சுழன்று அலை தொலைத்துப் பின்பு நரவடிவுகொண்டு இவ் வடிவு அநந்தங் கோடியில் சிவபுண்ணிய கோடிட்டு தீச்சிவ புண்ணியத்தால் சிவத்தொண்டு பூண்டு இச் சிவத்தொண் டிலுல் சரியை கிரியை யோகங்களைச் செய்து இச் சரியை கிரியை யோகங்களால் இருவினை ஒப்பு மலபரிபாகம் பிறந்து,

தவச்சார்பில் நிற்போர்க்கு அரிது ஆன பக்குவம் நாலாம்—உயிர்ச்சார்பு பொருட்சார்புகளை நீத்துத் தவச் சார்பில் நிற்போர்க்குக் கிடைத்தற்கு அரிதாகிய மந்தம் மந்த தரம் தீவிரம் தீவிரதரம் எனப் பக்குவம் நான்கு உள.

இத் திருவெண்பாவால் இருவினையொப்பு மலபரி பாகம் உடையோர்க்குப் பக்குவம் நால்வகையா யிருக்கும் என்று அறிவித்தவாறு காண்க. (அ)

மேலைச் சுகம்வெறுத்து மேலொடுகீ ழற்றுவெறுஞ் சாலப்பொய் யாயுடலார் தாணுர்தன்—மூலமார் என்றுதெரி விப்பாரை யெய்துவோ மென்றிரண்டா யொன்றுபடத் தேட்டமுதிக் கும்.

(உரை.) மேலைச் சுகம் வெறுத்து மேலொடு கீழ் அற்று வெறும் சாலப் பொய் ஆய் உடல் ஆர் தான் ஆர் தன் மூலம் ஆர் என்று—மேலாகிய வனிதாதி சுகங்களை வெறுத்து, இனிமேல் தடையும் பத முத்திகளிலும் பூலோக போகத்திலும் விருப்புற்று, அவைகளை எல்லாம் மிகவும் வெறும் பொய்யாய்க்கண்டு, இவ்வுடல்தான் யாது? இதனுள் இருந்த நான் யாவன்? எனக்கு முதலாய் உள்ள

பதி யாது? என்று விசாரித்து, (இவை எம்மால் அறியக் கூடுவதில்லை ஆகலின்,)

தெரிவிப்பாரை எய்துவோம் என்று இரண்டு ஆய் ஒன்று படத் தேட்டம் உதிக்கும்—இவற்றை அறிவிக்கும் ஞானசாரியரை அடைவோம் என்று கருதித் தான் என்றும் சிவம் என்றும் இரண்டாய்ப் பகுத்தறிவது ஆய் பின்னர் அச்சிவத் தோடு ஒன்றுக இங்ஙனம் பகுத்தறிவது ஒன்றுக்கும் அந்த ஞானசாரியர் எங்குளர் என்று தேடுந்தேட்டம் பிறக்கும்.

(தறிப்பு.) முன்போல் மெய்யாய்த் தோன்றுமையின், "வெறுஞ்சாலப் பொய்யாய்" என்றார்.

இத் திருவெண்பாவால் பக்குவர்க்கு ஞானசாரியரைத் தேடுந்தேட்டம் இங்ஙனம் பிறக்கும் என்று அறிவித்தவாறு காண்க. (க)

வேர்க்குங்கண் ணீர்த்ததும்புங் கம்பிக்கு மெய்ங்நடுங்
வார்த்தை நழுவு மனட்பதறும்-கார்க்கதமாய்க் [கும்
காந்து முரோமாஞ் சலியாகுங் காதலித்தார்க்
கேய்ந்தகுணங் காணிலையெட் டும்

(உரை.) வேர்க்கும் கண்ணீர் ததும்பும் கம்பிக்கும் மெய் நடுங்கும் வார்த்தை நழுவும் மனம் பதறும் கார்க்கதம் ஆய் காந்தும் உரோமாஞ்சலி ஆகும்—உடற்கண் வேர்வை அரும்பும், கண்களில் ஆனந்தநீர் பெருகும், உள் நடுங்கும், உடல் நடுங்கும், வசனம் குழறும், ஆசாரியரை என்றைக்கு அடைவோம் என்று மனம் விரைந்து நாடும், மேகம்போல் உள்ளே குமுறி உளமெல்லாம் வெதும்பும், உடல் மயிர்க் குச் செறியும்;

இவை எட்டும் காதலித்தார்க்கு வெய்த குணம்—ஆகிய இவை என்வகையும் ஞாஞசாரியரை விரும்பித் தேடு வோர்க்கு இயைந்த குணங்களாம்.

கான் - அசை.

இத் திருவெண்பாவால் ஞாஞசாரியரைத் தேடும் போது பிறக்குங் குணம் அறிவித்தவாறு காண்க. (கூ)

அரைநோட்டடுஞ் சிந்தை பெருமூச் சறியாச்
சுரமூமட்ட மெல்லாந் துறத்த—லுறைதோற்ரு
மான மவுனம் விகள மறவைசா
வானவிவை பத்துமவத் தை.

(உரை.) அரைநோட்டம் சிந்தை பெருமூச்சு அறி யாச் சுரம் ஊட்டம் எல்லாம் துறத்தல் உரை தோற்று மானம்—மனம் சக முகத்தைவிட்டு அகமுகமாய் நிற்ற லின் அருகிய நோக்கமும், எப்போது ஞாஞசாரியரை அறிந்து அடைவோம் என்னும் சிந்தனையும், அவரை நினைக்குந்தோறும் நெட்டுயிர்ப்பெறிதலும், இந் நினைவு மேலிட்டால் பிறரால் அறியக்கூடாத சுரம் மேலெழுதலும், இதனால் ஊண் உறக்க முதலிய எல்லாம் துறத்தலும், இத னைப் பிறருக்கு யாதென்று சொல்லோம் என்று சொல்வ தடக்கும் மானமும்,

மவுனம் விகளம் மறவை சாவு ஆன இவை பத்தும் அவத்தை—இம் மானத்தால் ஒருவரோடு ஒன்றுஞ் சொல்லா திருக்கும் மௌனமும், இங்ஙனங் கூறும் விசார மேலீட் டாற் பித்தமேறலும். இந்த அவத்தைகள் படுகாலத்தும் அந்த ஞாஞசாரியர் எதிர்ப்படாராயின் மூர்ச்சித்தலும், இறத்

சதுமம் ஆகிய இவை பத்தும் பக்குவர்க்குத் தோற்றும் அவத் தைகளாம்.

(தநிப்பு.) மறவை சாவு என்னும் இரண்டவத்தையும் நீங்காத பக்குவர்க் கெனக் கொள்க.

இத் திருவெண்பாவால் ஞானசாரியர் எதிர்ப்படாத போது அவர்க்கு இங்ஙனம் அவத்தைகள் தோற்றும் என்று அறிவித்தவாறு காண்க. (கக)

தேட்டந் திரண்ட திருமேனி யுட்புறம்பாய்க்
காட்டு மளவே கரைபுரண்டு—கேட்ட
திதிபக் குவத்தார்க் ககம்புறமென் றூறு
விதிவைத்த தீக்கையா மென்.

(உரை.) தேட்டம் திரண்ட திருமேனி உள் புறம்பு தூய் காட்டும் அளவே—தமது உயிருள் இருந்தும் தெரியாது தனைத் தேடும் தேட்டமாகிய போராகந்தானே திரண்ட ஞானசாரியர் தமது திருமேனியை அவர் கண்ணாரக் காணும் உட் புறம்பாய்க் காட்டு மாத்திரத்திலே,

கரைபுரண்டு கேட்ட அதிபக்குவத்தார்க்கு அகம் புறம் என்று ஆறு விதிவைத்த தீக்கை ஆம் என்—அன்பென்னும் தூது கரைபுரண்டெழுந்து உந்த அவ் ஆசாரியரைப் பலதரம் வலம்வந்து அட்டாங்க முதலிய வணக்கஞ்செய்து பின் னெழுந்து அஞ்சலியத்தராய் நின்று ஆநந்தக்கண்ணீர் ஒழுக ஆகே தோத்திரம்பண்ணி, எமது சுவாமிகளே! அடியேங் கட்கு இவ்வுடல் வந்தவாறு யாது? இவற்றுள் இருந்த வாம் ஆர்? எமக்கு முதலாயுள்ள மெய்ப்பொருள்யாது? என்று கேட்ட அதிபக்குவ முடையோர்க்கு வேதாக

மங்களில் விதித்தூவைத்தபடி அவர் பண்ணுந் தீக்கை அகத் தீக்கை மூன்று புறத்தீக்கை மூன்று என்று ஆறுவகையா யிருக்கும் என்று அறுதி.

(குறிப்பு.) தீக்கைகள் ஆருவன: திருநோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம் என்பன; இவற்றுள் திரு நோக்கம், பாவனை, யோகம் என்னும் இம்மூன்றும் அகத் தீக்கை; பரிசம், வாக்கு, நூல் என்னும் இம்மூன்றும் புறத் தீக்கை எனக் கொள்க.

உள்ளென்பதை உயிருள்ளிருந்தும் எனக் கொள்க.

இத் திருவெண்பாவால் குருசாரியர் தமக்கு எதிரே எழுந்தருளியபோது பக்குவர் வணங்கி விரவு முறைமை யும், இவர்க்கு அவர் பண்ணுந் தீக்கை இவை என்பதும் அறிவித்தவாறு காண்க. (கஉ)

பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்து மலமாயை
கருமத்தை யெல்லாங் கழற்றிச்—சரியாதி
வாதனையாம் போத மயக்கத்தை வாக்காலே
போதைசெய்து போக்கிவிடப் போம்.

(உரை.) பரிசித்தும் சிந்தித்தும் பார்த்தும் மலம் மாயை கருமத்தை எல்லாம் கழற்றி—பறவை முட்டை யைச் செட்டையாற் * பரிசித்தல்போல் மாணாக்கனைக் கர சரணங்களால் பரிசித்தும், ஆமை கரைக்கண் இருந்த முட் டையைத் தன் மனத்திற் பாவித்தல்போல் அவனைத் தமது அருளுருவாய் பாவித்தும் மீன் தனது சினையைப் பார்த்

* செட்டையாற் பரிசித்தல் முதலியன அவ்வம் முட்டை தத்தம் பருவம் அடைதற் கென்றறிக.

தல்போல் அவனைத் தமது கிருபைப் பார்வையாற் பார்த்
கும், ஆணவமலம் மாயாமலம் கன்மமலமாகிய இவையெல்
லாம் நீக்கி,

சரியாதி வாதனை ஆம் போதமயக்கத்தை வாக்காலே
போதை செய்து போக்கிவிடப்போம்—சரியை கிரியை
யோகங்களைச் செய்யும் வாசனை ஆகிய தற்போத மயக்
கத்தை நீக்குதற்கு ஏதுவாகிய உபதேசமொழிகளைத் திரு
வாக்கால் போதித்து நீக்கப்போம்.

(தறிப்பு.) யோகத்தைப் பாவனையுள் அடக்கி ஞான
வாக்கில் அடக்கி தீக்கை அறையும் சண்டி கான்காய்க்
கூறினர்.

இத் திருவெண்பாவால் ஞானசாரியர் மாணாக்கருக்
குத் தீக்கையால் மும்மலங்களையும் தற்போதத்தையும்
நீக்கு முறைமையை அறிவித்தவாறு காண்க. (கக)

காலமறை தேசமறை கன்மறைபோர் காண்டாரும்
பாலுணும்புள் எிட்டிமீன் பக்கிதிக்—காலு
மிருட்பினீர் மின்னலிலே யேற்றவணம் பார்ப்பார்
தருட்பொருளைக் கொள்ளுவார் தாம்.

(உரை) காலமறை தேசமறை கல்மறைபோல் காண்
பாரும்—முன் ஓர்காலத்து ஓர்பொருளை அறியாதிருந்து
பின் ஓர்காலத்து அதனை அறிந்துகொள்ளும் காலமறை
போலும், ஓர் தேசத்து அறியாதிருந்த பொருளை ஓர்
தேசத்து அறிந்துகொள்ளும் தேசமறைபோலும், முன்
மணலென்று அறியாதிருந்தும் பின் அதின் நோட்டம்
அறிவாரோடும் பழகி மணல் என்று அறிந்துகொள்ளுட் கல்

முறைமோலும், ஆசாரியர் அநுக்கிரகித்த பொருளை அறிந்து கொள்ளுவாரும் உளர் ; (அஃதன்றி ;)

பால் உண்ணும் புள் இப்பி மீன் பக்தி தீக்காலும் இரும் பின் நீர் பின்னலிலே எற்றபணம் பார்ப்பார் தரும்பொரு ளைக் கொள்ளுவார் தாம்—பாலுண்ணுமன்னப் புள்போலும், இப்பிபோலும், மீன் உண்ணுங் கொக்குப்போலும், உலையில் நெருப்பெழக் காய்ந்த இரும்பின் நீர்போலும், பின்னலொளியில் எற்கப்பட்ட பணநோட்டம் அறிவார் போலும், அவாருளிச்செய்த பொருளை அங்ஙனம் எற்றுக் கொள்ளும் பக்குவரும் உளர்.

(குறிப்பு.) ஆசாரியர் அநுக்கிரகித்த பொருள் அக்கா லத்துத் தோற்றுதிருந்து சின்னெட்குப்பின்னர் தம்முள்ளே தெரிந்து கோடலால், காலமறை என்றும், அவர் கொடுத்த நூலில் தெரியாதிருந்து அந்நூற்பொருளைக் கூறும் மற்றைநூலில் தெரிந்து கோடலால், தேசமறை என்றும், தாம் நூலில் தெரிந்து கோடலால், தேசகாலத்தற்ற நூல்கற்றோரோடும் பழகித் தெரிந்து கோடலால் கண்மறைபோல் என்றும் உவமை கூறினர்.

அன்னம் நீரை நீக்கிப் பாலை உண்டாற்போல் சரியாதி கனை நீக்கி ஞானமொழியைக் கோடலான், பாலுண்ணும் புள் என்றும், இப்பி சோதிமழைக்கு அங்காத்திருந்து தெளி விழுந்த மாத்திரத்தில் வாய்மூடிக் கொள்ளுதல்போல் எப் போது கூறுவார் என்று இதயம் மலர்ந்துகேட்டு அங்ஙனங் கேட்டபொருளை உள்ளடக்கிப் பயன்படுத்திக் கோடலான், இப்பி என்றும், கொக்குத் துறைக்கண் அசைவற நின்று மீன் வந்துழிக் கவருதல்போல் சித்திரபாணிபோல் அசை வற இருந்து பயன் தருமொழி வருந்தோறும் எற்றுக்கோட

லான், மீன்படிக்கி என்றும், இரும்பு தான் எற்கும் நீர் மாத்திரம் எடுத்துக்கொண்டு அதனை மீள விடாதிருத்தல்போலத் தமக்கு வேண்டிய உபதேச மொழிகளை எற்றுக்கொண்டு மீளவிடாதிருத்தலான், இரும்பினீர் என்றும், கட்கூர்மையால் விரைந்து மின்னல் ஒளியில் பணம் பார்ப்பதுபோல் அறிவுக்கூர்மையால் அதிசீக்கிரத்தில் கூறிய மொழிகளின் அருத்தமெல்லாம் அறிந்து கோடலின், மின்னலிலே யேற்ற பணம் பாரீப்பாரீ என்றுங் கூறினர்.

காலமறையாதி மூன்றற்கும் இன்ன காலத்து இன்ன பொருள் உளதென்றும், இன்ன தேசத்தில் இன்ன பொருள் உளதென்றும், இன்ன மலைக்கு அப்பால் இன்ன பொருள் உளதென்றும், தமக்கு ஆப்தரையுள்ளவன் கூற அம்மொழியை உண்மையாகக் காண்பார்போற் காண்பாரும் உளரென்றும் பொருளுரைத்தலும் ஆம்

இத் திருவெண்பாவால் ஆசாரியர் உபதேசித்த பொருள்களை மாணைக்கர் இம்மூன்றணைமகளாய் எற்றுக் கொள்வார் என்று அறிவித்தவாறு காண்க. (கச)

பதியிறக்கக் கேட்டிறந்த பத்தினிபோற் பால்போ
லதிமோகி தீப்புகல்போ லன்பாம்-விதவையர்போற்
கன்னன் சுடையிற் கொடைபோலக் காணலாந்
தன்னையிழ வாதிழத்த ருன்.

(உரை.) பதி இறக்கக் கேட்டு இறந்த பத்தினிபோல் பால்போல் அதிமோகி தீப்புகல்போல்—பதி இறந்தான் என்ற பிறர் கூறக்கேட்ட அக்கணத்தில் காலும் இறந்த பதிவிரதைபோலும், கடைகாலில் இருந்து கவிழ்ந்த பால் போலும், தனது புருடன்மேல் அதிமோகியாயிருந்தவான்

சத்திநிபாதத் துத்தம போழ்வி 1கூ

அவன் இறந்தகாலத்து அவலேடும் அக்கினிப் பிரவேச மாதல் போலும்,

அன்பு ஆம் விதவைவயர்போல் கன்னன் கடைபிற் கொடைபோலத் தன்னை இழவாது இழுத்தல் காணல் ஆம்— புருடன் இறந்துபோய பின்னரும் மூன்னர் அன்புவிடா திருந்த விதவையர்போலும், மறுமை குறித்து ஈட்டிய புண் ணியமெல்லாம் அந்தணனுக்குக் கன்னன் தன் தேகாந்தத்தி திற் கொடுத்த கொடைபோலும், ஆசானியர் உபதேசித்த மொழிகளை உட்கொண்ட பக்குவர் தம்மை ஒழியாதொழுகும் முறைமை காணப்படும்.

(குறிப்பு.) கேட்ட அக்கணத்து இறந்தாளைப்போன் உபதேசமொழியைக் கேட்ட அக்கணத்தில் போதமிறந்த வின், "பதியிறக்கக் கேட்டிறந்த பத்தினிபோல்" என்றும் பால் பல்லாங் கவிந்தது ஆயினும் அதனுள் வாசனை இருத் தல்போல் போதம் இறந்தது ஆயினும் அப்போத வாசனை யிருத்தலின், "பால்போல்" என்றும், சிலநாழிகை சென்ற பின்னர்த் தீப்புகல்போல் சிலநாளில் போதம் இறத்தலின் "அதிமோகி தீப்புகல்போல்" என்றும், புருடனேடு இரு வாதிருந்து தேகபோகங்களை வெறுத்து இருத்தல்போன் யான் எனது என்று எழும்போத எழுச்சியை அடங்கி யிருத் தலின், "விதவையர்போல்" என்றும், ஒன்றையுங் குறி யாது கொடுத்தல்போல் ஒன்றையுங் கருதாது எல்லாவற்றை யும் விடுத்தலின், "கன்னன் கடையிற் கொடைபோல்" என்றும் கூறினர்.

தான் - அணை.

இத் திருவெண்பாவால் ஆசாரியர் உபதேசித்த பொருளை உட்கொண்ட பக்குவர் தற்போதம் ஒழிக்கும் மூன்றணுமையை இங்ஙனமென்று அறிவித்தவாறு காண்க. ()

மூற்றுப்படிலவகையாம்பொன்றேடலைவப்பான்போ
றேற்றிச் சிவாகமத்தாற்செப்புகிறை—மேற்ற [ற்
மரிபாகத் தாலே பழுப்பாம் பலவும்
மொருபாக மன்றென் றுணர்.

(உரை.) பலவகை ஆம் பொன்மாற்று ஓட லைவப்பான் போல் சிவாகமத்தால் தேற்றிச் செப்புகிறைம்—பலவகை யாய்த் தோற்றும் மாற்றுப்பொன்களைப் பத்தமாற்று ஆக்கு தற்பொருட்டுப் புடம் போதும் ஒருவனைப்போலும், பக்குவர் ஞான்வர்க்கும் ஓர் படிதத்தாற் சிவாகமத்தாற் றெளிவித்துக் கூறிறைம்,

ஏற்ற பரிபாகத்தாலே பழுப்பு ஆம் பலவும் ஒருபாகம் அன்று என்று உணர்—மாற்று ஏற்றமாயிருந்த பொன் பரி பாகத்தால் மூன் பழுப்பாகும் அன்றிக் குறைந்த மாற்று உயர்ந்த மாற்றுக்களாகிய பல பொன்களும் ஒருபாகமாய்ப் பழுப்பாகுவதன்று. அதுபோல, உயர்ந்த பக்குவனுக்கு மூன்னர் ஞானம் எறுமன்றி எல்லார்க்கும் ஓர் பிரகாரமாய் ஞானம் எறுதென்று அறிதி.

(குறிப்பு.) தாழ்ந்த மாற்றுப் பொன்களைப் புடம்போதுந் தோறும் எடை குறைந்து மாற்றுயர்தல்போல, தாழ்ந்த பக்கு வர்க்குச் சிவாகமத்திற் கூறும் காரண உபாய யுத்திகளை உப தேசிக்குந்தோறும் பாசம் குறைந்து ஞானமேறும் என்பதுங் காண்க.

இதற் றிருவெண்பாவால் ஆசானியர் உபதேசிக்கும் மொழி ஓர் பிரகாரம் ஆயினும் பக்குவ உயர்ச்சி தாழ்ச்சிப்படி ஞானம் எறுவதன்றி ஓர் படித்தாய் ஞானம் எறுதென்று அறிவித்தவாறு காண்க. (கசு)

கல்லையடரு வாக்குங் கழற்றியிலே யில்வாழ்க்கை
சில்லநீர் போலத் தெளிந்துவருந் —தொல்லுலகங்
கான்றசோ றூகுங் கதலித்தண் டைடக்கனலி
லூன்றல்போன் ஞானமுதிக் கும்.

(உரை) கல்லை உரு ஆக்கும் கழற்றியிலே இல் வாழ்க்கை சில்லம் நீ போலத் தெளிந்துவரும்—கல்லினை ஓர் பாவை வடிவாக்கும் முறைமைபோல், அருள் வடிவாக்கு தற் பொருட்டு மந்த பக்குவர்க்கு உபதேச மொழிகளால் பாசத்தை நீக்குமிடத்துத் * தேற்றிட்ட நீர் தெளிந்து வருதல் போல், அவர்க்கு இல்வாழ்க்கை இந்த ஆர் யாம் ஆர் என்று தெளிவு பிறந்துவரும்;

தொல் உலகம் கான்ற சோறு ஆகும் கதலித்தண்டைக் கனலில் ஊன்றல்போல் ஞானம் உதிக்கும்—பழையதாக வரும் இப் பிரபஞ்சம் கக்கின சோறுபோல் அருவருப்பாகத் தோற்றும், வாழைத்தண்டை— அக்கினியிற் சுடுதல்போல் அவர்க்கு ஞானந்தோன்றும்.

(குறிப்பு.) பிரிந்த சோறும் தெளிந்த நீரும் கலந்து வரு கல்போல் இல்வாழ்க்கையில் பற்றும் பற்றின்மையும் கலந்து வருதலின், "தெளிந்துவரும்" என்றார்.

* தேற்றுங்கொட்டையால் தெளிவிக்கப்பட்டநீர்.

வாழைத்தண்டைடப் பன்னுள் பலகாட்டத்தால் சடல்போல் இவர்க்குப் பன்னுளில் பற்பல உபதேச மொழிகளால் ஏறும் என்பதறிக. (கஎ)

இரும்பை வடிவாக்கு மியல்பினர்க்குப் பச்சை
மரஞ்சுடுமா போன்ஞானம் வாய்க்கு—மிருந்தவிட
நீர்த்தா மரையிலைபோ னீங்கு முலகமெலாம்
பேய்த்தேர்போற் றோன்றும் பிரிந்து.

(உரை.) இரும்பை வடிவு ஆக்கும் இயல்பினர்க்குப் பச்சைமரம் சுடுமாறுபோல் ஞானம் வாய்க்கும்—இரும்பினை ஓர்பாவை வடிவாக்கும் முறைமைபோல் பாசத்தை நீக்கி அருள் வடிவாக்கப்பட்ட மந்தரா பக்குவர்க்குப் பச்சைமரத்தை அக்கினியால் சுடுமாறுபோல் ஞானம் பலிக்கும்;

இருந்த இடம் தாமரையிலை நீர்போல் நீங்கும் உலகம் எலாம் பிரிந்து பேய்த்தேர்போல் தோன்றும்—தாம் இருந்த இல்வாழ்க்கையில் தாமரையிலை நீர்போல் கூடியிருந்தும் அதிற் கூடாது நீங்குவர், பிரபஞ்சமெல்லாம் அவர்க்கு அந்தியமாகக் கானற் சலம்போல் தோன்றும்.

(குறிப்பு) சில காட்டத்தால் பச்சைமரம் சுடல்போல் சில உபதேச மொழிகளால் இவர்க்கு ஞானம் ஏறும் என்பதறிக. (கஅ)

மரப்பாலை போலுடம்பின் வாதனையை மாற்றிக்
கரித்தீர்க் கவர்வதுவாங் காமித்—திருத்த
மனைபொதுவின் மண்டபமாம் வானோர்கள் வாழ்வுங்
கனவெனவே தோன்றியிடுங் காண்.

(உரை.) மாப்பாவைவபோல் உடம்பின் வாதனையை மாற்றிக் காத்தீக் கவர்வது ஆம்—மாத்தினை ஓர் பாவை வடிவாக்குதல்போல், அருள் வடிவாக்குதற் பொருட்டுத் தீவிர பக்குவர்க்கு உடம்பின் வாதனையாய பொறிகரண முதலியவற்றை நீக்கி ஞானத்தை உணர்த்தக் காரீ ரூக்கொள்ளல்போல் ஞானம் உண்டாம்;

காமித்து இருந்த மனை பொதுவின் மண்டபம் ஆம் வாழ்நர்கள் வாழ்வும் கனவு எனவே தோன்றிடும்—தான் இச்சித்திருந்த மனை வாழ்க்கை காலைபோருங் கூடி யிருக்கும் பொதுமண்டபம் போலாகும், கேள்வியால் அறியப்பட்ட இந்திராதி தேவர்கள் செல்வமும் சொப்பனம்போல் தோற்றும்,

(குறிப்பு.) உடம்பின் வாதனையை மாற்றி என்றமை யான், இவர்க்குப் போகவாதனை மாற்ற வேண்டுவது இன் றென்பது ஆயிற்று. "வாழ்நர்கள் வாழ்வுங் கனவெனவே தோன்றும்" என்றமையான், நார்வாழ்வு சுழுத்திக்காட்சி போல் தோன்றும் என்பதாயிற்று.

இருந்த என்பது இருத்த என்று வலித்தல் விகாரமாய் வந்தது. காண் - அசை.

(கக)

வெண்ணெயுறு பாவையர்க்கு ஞானம் விளக்கின்மே
லெண்ணின்மயிர் பஞ்சாகு மாசையிலை—கண்ணீ
ரொழுகும் பொழுதறியா துள்ளுருகி விம்மி
யழுதுசிரிப் டார்புளக மாம்.

(உரை.) வெண்ணெய் உறு பாவையர்க்கு ஞானம் விளக்கின்மேல் அணில் மயிர் பஞ்சு ஆகும் அசை இலை—வெண்ணெயினைப் பொருந்தாநின்ற ஓர் பாவை ஆக்குதல்

போல் அருள் வடிவாக்கப்பட்ட தீவிதர பக்குவர்க்கு விளக்கின் கொழுந்திற் பிடித்த அனலின் மயிர்போலும் பன்னிய பருகுபோலும் பாசஞ்சீத்தி ஞானம் உண்டாம், அவர்க்கு ஒன்றி லும் ஆசை இன்று;

கண் நீர் ஒழுகும்பொழுது அறியாது உள் உருகி விம்மி அழுது சிரிப்பார் புளகம் ஆம்—ஆகக்கண்ணீர் ஓடும்போது காமறியாது உள்ளமெல்லாம் நெக்கு நெக்குருகி விம்மி விம்மி அழுது சிரிப்பார், அவர்க்கு உடம்பெல்லாம் உரோ மாஞ்சலி ஆம்.

(குறிப்பு-) அழுவது முன்பட்ட பிறவித் தொடர்பங்களை நோக்கி; சிரிப்பது தொடர்பங்களை எல்லாம் ஒரு கணத்தில் மாற்றிய ஆசாரியரது அதிசயத்தை நோக்கி எனக் கொள்க.

பிரபஞ்சத்தின்மேல் இல் வாழ்க்கைமேல் உடம்பின் மேல் ஆகிய மூன்றிடத்தும் அவர்க்கு ஆசை இன்மையால், பொதுப்பட "ஆசையிலை" என்றார்.

கல்லை என்னும் திருவெண்பா முதல் இக்கான்று நிரு வெண்பாவானும் பத்து முதலிய தான்கு பக்குவங்களையும் உடையோரை ஞானாசாரியர் பக்குவப்படுத்தி அவர்க்கு ஞானம் எற்றும் முறைமை இங்ஙனம் என்று அறிவித்தவாறு கான்க. (உ0)

இங்ஙனம் கூறும் பக்குவர்க்கே அன்றி மற்றையர்க்கு ஞானம் போதித்தால் வருதோ எனின், மேற் கூறுகின்றார்.

புளிசேர் புழுமாறற் போற்புறம்போ நல்லின்
முளைதானும் வேரூய் முளைபோய்த்—துளைமானிட
ஆநிக்குப் பாச மொழிந்ததுபோ லொப்பாருக்
கானைசக்கே டாநந்த மாம்.

(உரை.) புளி சேர் பழம் ஆனல் போல் புறம்போடு உள்ளின் முளைதாழும் வேறு ஆய் முளைபோய்—முன்னர்ப் பிஞ்சாய் இருந்தபோது ஓடும் வித்தும் பிரிபடாது ஒன்றுபட்ச் சேர்ந்த புளி அவ் வோடும் வித்தும் பிரிபடும் பழம் ஆனற்போல், முன்னர் அறிவு முதிராமையின் பிரிபடாதிருந்த மும்மலங்களும் இப்போது அவ் வறிவு முதிர்ச்சியால் மாயை கன்மம் ஆகிய புறம்போடு உயிருள் இருந்த முளையாகிய ஆணவமும் தமக்கு அந்நியமாய் நீங்கி இவற்றுன் எறிவதாய ஆகாமிய முளையும்போய்;

தயிளமானிட ஊறிக்குப் பாசம் ஒழிந்ததுபோல் ஒப்பாருக்கு ஆசைக்கேடு ஆகந்தம் ஆம்—காதற்ற ஊசிக்குச் சாடு ஒழிந்ததுபோல் சற்போதத்தோடு எல்லாப் பாசங்களையும் இங்ஙனம் ஒழிந்தோர்க்கு அப்போதத்தால் தோற்றும் ஆசை காசமேம சிவாகந்தப்போருள்.

(குறிப்பு.) மாயையும் கன்மமும் புறம்பாய்க் காணப்படுதலின், "புறம்பு" என்றும், அவை நீங்கியபோதும் தான் நீங்காது உயிருள் இருத்தலின், ஆணவத்தை "உள்ளின் முளை" என்றும், ஆகாமியம் பிறவிக்கு ஏது ஆகலின், இதனையும் "முளை" என்றுங் கூறினர்.

காதது அறுதுன் தொடர்ந்த பாசம் அற்றபோது ஒழிந்தாற்போல், போதம் அறு முன்தொடர்ந்த பாசம் அற்றபோது ஒழிதலின், "ஊறிக்குப் பாச மொழிந்தாற்போலொப்பாருக்கு" என்றார்.

தேகபோகங்களாகிய தன்பத்தை இன்பம்போல் மாறுபாடாய்த் தோற்றுவிக்கு உயிர்க்கு ஆசை உண்டாக்குவது ஆணவம். அதனது வாசனை போதம் ஒழியும் அளவும் இருத்

கலின் அதன் காரியமாகிய ஆணை கெடவே காரணமாகிய அவ் வாணவ வாசனையும் அவ் வாசனையால் எழும்போத முமம் கெடும் ஆகலின், " ஆணைக்கேடாகந்தமாம் " என்றார்.

இத் திருவெண்பாவால் பக்குவம் உடையோர்க்கே ஞானம் போதித்தால் பாசநீங்கி ஆநந்தப்பேறு உளதாம் அன்றி, மற்றையர்க்கு அங்ஙனம் உண்டாகாதென்று அறிவித்தவாறு காண்க. (உக)

அருண னுதயம்போற் ரும்வீழ்வா ராணை
பெருகுவபோற் கப்பல் பிழைத்துக்—கரைகாணு
மாபோற் சிறையு மரும்பினியு நீங்கியிடு
மாபோ லதிசயம் போலாம்.

(உரை.) அருணன் உதயம்போல் தாம் வீழ்வார் ஆணை பெருகுவபோல் கப்பல் பிழைத்துக் கரைகாணும் ஆறு போல்—மழையிருளில் தெரிதெரியாது உழல்வோர்க்குச் சூரியன் உதயமானதுபோலும், தம்மால் விரும்பப்பட்ட மாதர்மேல் ஆசை உள்ளமும் மறைய மேன்மேல் வளர்தல் போலும், திசைதவறிய கப்பல் தப்பித் துறை சேரக் காணுமாறு போலும் ;

சிறையும் அரும்பினியும் நீங்கியிடுமாப்போல் அதிசயம் போல் ஆம்—விடாச்சிறை இருந்தோர்க்கு அச்சிறை நீங்கிய வாறு போலும், மாரு நோயர்க்கு அந்நோய் நீங்கியவாறு போலும். ஓர்காலமுங் காணுத அதிசயம் கண்டதுபோலும், திருவருள் ஞானம் பெற்றோர்க்குத் தோற்றும்.

(குறிப்பு.) முன்னர் ஆணவ இருளால் பொய் இது மெய் இது என்று ஒன்றுந் தோன்றுதிருந்தோர்க்கு இப்

போது அருளொளியால் எல்லாம் சிவமாய்த் தோற்றலின், "அருணோதயம்போல்" என்றும், அவ்வருள் ஞானத்தால் தோன்றும் ஆநந்தத்தில் தாம் மேன்மேல் மறைதலின், "தாழ்வீழ்வா ராசை பெருகுவபோல்" என்றும், இந்த ஞானாநந்தத்தை என்றைக்கு அடைவோம் என்று இருந்த தமக்கு இப்போது கிடைத்தலின், "கப்பல் கரைகாணுமா போல்" என்றும், முன் உடலாயிருந்த தாம் இப்போது அதற்கு உட்புறனுய் விளங்கும் சிவமாயிருத்தலின், "சிறை நீங்குமாபோல்" என்றும், முன் இருந்த பிறவித் துன்பம் இப்போது நீங்கலின், "பிணிநீங்குமாபோல்" என்றும், ஓர் காலத்தானிலும் கண்டறியாத காட்சியாகலின், "அதிசயம் போல்" என்றும் கூறினர்.

இத் திருவெண்பாவால் பக்குவர்க்குப் பாசநீக்கி ஞானேகையமானபோது தோற்றும் அதிசயகுணம் இவை என்று அறிவித்தவாறு காண்க. (உஉ)

பாசநீங்கி ஞானந்தான்றிலல் அவர்க்கு இக்குணங் கள் தோற்றுவது என்னை எனின், மேற்கூறுகின்றார்.

உடல்பொறிகு ளுட்கரணத் தோடுகுணம் வாயு
விடவிடமே நாதாந்த வீடும்—நடுநிலையாய்த்
தன்னெழுதிவும் போன்ப சாகரமுஞ் சந்ததிவா
ரென்னபடார் கண்டறியா ரே.

(உஎ.) உடல் பொறிகள் உட்காணத்தோடு குணம் வாயு விடவிடமே நாதாந்த வீடும்—உடலமும் பொறிகளும் அந்தக்காணங்களும் அவற்றுடனே குணங்களும் பிராண வாயுவும் ஆகிய இவ்வைவகையும் ஒன்றென்றாய் அறிந்து

நீங்க நீங்கவே வரும் காத சத்துவத்தின் மூடிவாகிய விடுதலை யையும்,

கடுநிலை ஆய்த் தன் ஒழிவும்பேர் இன்ப சாகாரமும் சந் தழிவார் என்ன படார் கண்டு அறியார்—அவ்விடுதலைக்கும் சுகாதீதத்திற்கும் கடுநிலையாய்த் தோன்றும் தன் தரிசனம், திருவருள் தரிசனம், பராதரிசனம், பராயோகம், பரா யோக நீக்கத்தையும், அவற்றின்மேல் தற்போத ஒழிவை யும், அதன்மேல் ஆநந்தசாகாரத்தையும், அநுபவமாகக்கண்டு அதன்மேல் சிவத்தோடு இரண்டற்று இருக்கின்றார் என்ன ஆச்சரியப்பட்டார் முன்னோர் காலங்களிலும் அவற்றைக் கண்டறியாதார்.

(தெளிப்பு.) உடலத்தை உள்ளபடி அறிந்து நீங்கவே பஞ்சபூத காரியமாகிய புறக்கருவிகள் இருபத்தைந்தும், சிட்டனைத்திரியங்களும் தசநாடிகளும் நீங்கும், ஞானேந்திரி யங்களை உள்ளபடி அறிந்து நீங்கவே அவற்றின் அபகரிக் கப்பட்ட சத்தாதிகள் ஐந்தும், அவ்விந்திரியங்கள் அவ்விட யங்களை அபகரித்தபோது தொழிற்படும் கன்மேந்திரியங்கள் ஐந்தும், விடயீகரிக்கப்பட்ட வசநாதிகள் ஐந்தும் இவ்விரு வகை இந்திரியங்கட்கும் இடமாய்நின்ற பூதங்கள் ஐந்தும் நீங்கும். அந்தக்காரணங்களை உள்ளபடி அறிந்து நீங்கவே சூக்குமையாதி வாக்கு கான்கும் நீங்கும். மூக்குணைக்களை உள்ளபடி அறிந்து நீங்கவே இம் மூக்குணைகாரமான மூல்ப் பிரகிருதி நீங்கும். மூலப்பிரகிருதி நீங்கவே இதாகிதங்களாய்ப் வரும் கன்மம் சீவணமின்றி நிற்குமாதலின், அக்கன்மத்தைக் கூட்டாநின்ற காலமும் அதனை வளர்த்து நிற்கின்ற நியதி யும் நீங்கும். இவை நீங்கவே ஆன்மாவிற்குப் புசிப்பின்மை யால் இச்சா ஞானக்கிரியை சீவியாது. ஆகலின், கிரியையையை

எழுப்பும் கலையும் அறிவை எழுப்பும் வித்தையும் ஆசையை எழுப்பும் இராகமும் ஆசைப்பட்ட பதார்த்தத்தில் மயங்கும் புருடனும் நீங்கும். இங்ஙனம் கலாதிகள் நீங்கவே காலத் தையும் நியதியையும் கலையையும் பிரேரித்த சத்திதத்துவமும், வித்தையைப் பிரேரித்த சுத்தவித்தையும், இராகத்தைப் பிரே ரித்த ஈச்சுர தத்துவமும், புருடனைப் பிரேரித்த சிவதத்துவ மும், மூலப்பிரகிருதியைப் பிரேரித்த சாதாக்கிய தத்துவமும் நீங்கும். இங்ஙனம் சுத்த தத்துவங்கள் நீங்கவே பிராணவாயு மாத்திரம் இயங்கும் இப்பிராணவாயுவை உள்ளபடி அறிந்து நீங்கவே தசவாயுக்களும் அசனைபாதமும் நீங்கும் இம் முறையே தத்துவம் தொண்ணூற்றாறும் நீங்கும். ஆகவின், "விடவிடவே நாதாந்தமீடும்" என்றார்.

"கடநிலையாய்" என்றதனாலும், "பேரின்பச்சாகரமும்" என்றதனாலும், கற்றிசன முதலிய வருவிக்கப்பட்டன.

கண்டத்தானத்தில் அந்தக்காரணங்களோடுங் கூடி மத் திமை வாக்கு தன்முய் அறியப்படுதலின், மத்திமைவாக்குக் காரணமாகிய சூக்குமை பைசந்தியும், மத்திமையால் காரியப்பட்ட வைகரியும் அந்தக் காரணங்கள் நீங்கவே நீங்கும் ஆகலின், அந்தக்காரணங்களை நீங்கவே சூக்குமையாதி வாக்கு கள் நீங்கும் என்று சொல்லப்பட்டது.

பிராணவாயு இயக்கத்தை அடக்கத்தொடங்கின் அடங் காது மேன்மேலியங்கும் ஆகலின் அவ்வியக்கம் தன்னால் அறியப்படுதலானும், தன்னை அஃது அறியாமையானும், அதனைச் சடம் என்றும், அதனை அறிந்த அறிவுதான் என் றும், தனைக்கறிவித்தது நிருவருளென்றும் அறிந்து தான் நிருவருள் காட்டத்தில் நிற்கவே அது நீங்கும் எனக் கொள்க. எ - ற்றனை.

யால [illegible]

"கண்டறியாதே" என்றதனால், இப்போது கண்டென்பது வருவிக்கப்பட்டது.

உடல் பொறிகரண முதலிய கருவிகளை உள்ளபடி அறிந்து நீங்குதலே, * "ஐம்புலனுலா மந்தக்கரண, மும்குண மிருவளி யொருங்கிய வாழ்வை, நோக்தகின்றனை" என்னும் திருவெழுகூற்றிருக்கையாற் காண்க.

இத்திருவெண்பாவால் முன் ஓர் காலங்களினும் கண்டறியார் ஆகலின். இப்போது அக்குணங்கள் அவர்க்குத் தோற்றுமென்று அறிவித்தவாறு காண்க. (உசு)

இங்ஙனம் ஞானத்தால் பாசத்தை நீங்கிப் பதியை அடைந்தோரை மீட்டும் அப்பாசம் மயக்காதோ எனின், மேற்கூறுகின்றார்.

அறிவுமறி வாணு மறியா மலையு
மறியிற் றடையே தவர்க்குப்—பிறிவதோ
வாகாயஞ் சூறைகொளி லஞ்சி யடுக்களைக்குட்
போகாது போலாம் பொருள்.

(உஅ.) அறிவும் அறிவாணும் அறியாமலையும் அறியின் அவர்க்குத் தடை ஏது பிறிவதோ—உயிர்க்குயிராய் உள்ளும்புறம்பும் ஓரணுவளவேனும் விட்டு நீங்காதிருந்து அறிவிக்கும் அறிவாகிய பதியையும், தற் சுதந்தரமாய் ஒன்றினையுமறியாது அப்பதி அறிவிக்க அறிவதாகிய பசுவையும், இங்ஙனம் அறியும் பசுவிற்குத் தன்னையும் தனக் கறியும், இங்ஙனம் அறியும் பசுவிற்குத் தன்னையும் தனக் கறிவிக்கும் பதியையும் அறியவொட்டாது மறைத்திருந்த அறியாமையாகிய பாசத்தையும் அப்பதியால் உள்ளபடி அறி

* ஞானசம்பந்தர் தேவாரம்.

யின், அவர்க்கு முன்போலும் தடை யாது? அஃதன்றி அப்பதியை ஓர் கணமேலும் பிரிவரோ? (ஆலல் அப் பதியை அவர் பிரியாது காடிக்கொண்டு நிற்பரோ எனின்.)

ஆகாயம் சூறைகாளில் அஞ்சி அடுக்களைக்குள் போகாதுபோல் ஆம் பொருள்—எல்லாப் பொருள்கட்கும் இடங்கொடுத்திருந்த ஆகாயந் தானே அப்பொருள்களைக் கொள்ளைகொள்ளும் எனின், அதற்கு அஞ்சி அடுக்களை வீட் டில் புகுந்தொளிக்கக்கூடாது; அதுபோல், அவ்வாகாய முத லிய எப்பொருள்கட்கும் ஆதாரமாகியிருந்துள்ள மெய்ப் பொருள் தன்னை அறிந்தோர்க்கு இடம் வேறின்மையான் அவரை விழுங்கிக்கொள்வதாம்.

(குறிப்பு.) பாசத்தை அறியும்போது மூப்பத்தாறு கருவிகளையும் இஃது ஈதென்று அறிந்துசென்று அவற்றின் முடிவில் நின்ற தன்னுல் அவை அறியப்படலாலும், தன்னை அவை அறியாமையாலும், தனக்கு அந்நியமென் றும் சடமென்றும் அறியப்படும். தன்னை அறியும்போது அக்கருவிகளை எல்லாம் அறிந்து அவற்றை நீங்கிநின்ற அறிவு தான் என்றும், திருவருளால் அன்றித் தற் சுதந்தி மாய் அறிவதிலன் என்றும், தான் கருவிகளோடு கூடியப் போது அவை மயமாயும் அவற்றை நீங்கித் திருவருளோடு கூடியபோது இதன் மயமாயும் இருத்தலின், தான் பாச அறிவும் அன்று, பதி அறிவும் அன்று என்று அறியப்படும்.

பதியை அறியும்போது பெத்தமுத்தி காலத்திலும் தன்னைவிட்டு நீங்காதிருப்பதென்றும், தனக்கு அறிவிப்ப தென்றும், பாசத்தைப் பிரோகம் பண்ணுவதென்றும், ஞானசொரூபமென்றும் அறியப்படும்.

இங்ஙனம் கடுகின்று அறிந்த பசுபாசத்தை நீங்கிப் பரிபூரணமாகிய பதியை அடைந்து அப் பூரணமெல்லாங் காணுயிருத்தலின், "அறியிற் றடையே தவர்க்கு" என்றும், பிரிதற்கு ஏதுவாயபோதம் இறத்தலின், "பிரிவரோ" என்றும் இங்ஙனம் பிரியாதிருக்தோரை மெய்ப்பொருள் தன் மயமாய்க் கோடலின், "அடக்களைக்குட்போகாது போலாம் பொருள்" என்றுங் கூறினர். (உ)

பொய்போல மெய்யு மறியப் பெறுப்போக
னைபோகர்க் கொன்றேறுதற் சார்பில்லை—துய்ய
விழிக்கு ளுதித்த விரிகதிர்போற் றம்மை
யழித்ததுவே யாச்சரிய மாம்.

(உரை.) பொய்போல மெய்யும் அறியப்பெறுப் போக
னைபோகர்க்கு ஒன்றேறும் சார்பு இல்லை—முன்னர்ப்
பொய்யாகிய உடலத்தோடுங் கூடியபோது அவ்வுடலமென்
றும் தானமென்றும் பிரிக்தறியாது தன் மயமாயிருந்தது
போல், இப்போது மெய்ப்பொருளையும் தம்மையும் பிரிக்கப்
பெறுது இம் மெய்ப்பொருள் ஞானத்தோடுங் கூடிக் கலந்
திருந்தோர்க்கு ஒருபொருளாலும் சார்பில்லை; (அஃதா
வதுபோலும்,)

துய்ய விழிக்குள் உதித்த விரி கதிர்போல் தம்மை
அழித்ததுவே ஆச்சரியம் ஆம்—எல்லாவற்றையும் எதிர்ப்
படியும் மாசற்ற விழிக்குள்ளே முன்போல் எதிரிட ஓட்
டாது உதித்த சூரியனைப்போல், ஞாதுரு ஞான ஞேயம்
என்னும் மூப்பொருளையும் எதிரிட்டறிந்த ஆன்ம போதத்தை
அங்ஙனம் எதிரிடவொட்டாது இதனுள் சிவ சூரியன்

உதித்தது அப்போதத்தை அழித்துத் தானையிருந்ததுவே மிகவும் அதிசயமாம்.

(தனிப்பு.) கதிர்ப்பிறம்பு உதித்தபோது கண்ட கண்ணுள் உதித்தபோது காண்டற்கு இடமின்மைபோல், போதத்தால் புறம்புபோல் தோற்றிய ஞானசூரியன் இப்போத ஒளியையத் தன் ஒளியால் மறைத்து உயிர்க்குள் உதித்தமையான் இதற்கும் எதிரிதற்கு இடம் இன்றென்பதறிக. (உரு)

தன்னையிழப் பார்க்கென்ன சார்வுழி சங்கார
மென்னிலொளித் தெங்கே யிருக்கலா—முன்னை
புலிபார்க்கப் போனகதை போலிமையா நாட்டஞ்
சலியாமன் மூடுந் தனை.

(உரை.) தன்னை இழப்பார்க்குச் சார்வு என்ன உளதி சங்காரம் என்னில் ஒளித்து எங்கே இருக்கல் ஆம்—தற்போதம் ஒழிப்பார்க்கு மற்றைச் சார்புகள் என்னை உள்ளன? மூப்பதக்காறு தத்துவம் என்பதும், அவற்றின் முடிவில் நின்றதாம் என்பதும், தமக்கு அறிவித்த அருள் என்பதும்; இதனைக் கடந்த ஆநந்தம் என்பதும் இன்றி ஆநந்தாதீ தாயிருத்தலின், அவர்க்கு இதுவே சர்வ சங்கார காலமென்று மெய்ஞ் ஞானிகள் சொல்லுவார் எனின், அவர்க்கு எவ்விடத்து ஒளித்திருக்கலாகும்? (ஆதலால் சிவத்தை அருளால் அறிந்து அடையவேண்டும் என்பது என்னை எனின்,)

முன்னை புலிபார்க்கப்போன கதைபோல் தனை இமையாநாட்டம் சலியாமல் மூடும்—முன்னை புலியினைப் பார்த்து அறியச்சென்று ஓர் புருடன் அஞ்சிருந்த முழைக்கு எதிர்ப்படும் தறுவாயில் அவன் தேகப் பதைப்பற அது பிடித்துக்கொண்டதென்று கூறும் கதைபோல், சிவத்தை அறியா

வேண்டும் என்று மூப்பத்தாறு கருவிகளையும் கடந்து சென்று அருள் சேர் நிற்கும் தருவாயில் இவன் றன்னை இமையா காட்டமாகிய அச் சிவந்தானே இவனது போதப் பதைப்பு அறும்படி மூடிக்கொள்ளும்.

(குறிப்பு.) இமைத்தல் விழித்தல் இன்றிய இமையா காட்டம்போல் மறப்பு நினைப்பு இன்றிய போறிவு ஆகலின், சிவத்தை "இமையாகாட்டம்" என்றார். புலி மூழைவாய் நின்றோரை அது மூடிக்கொள்போல், அருள் சேர் நின்றோரைச் சிவம் மூடிக்கோடலான், அங்ஙனம் உவமை கூறினர்.

"அறிவு மறிவாலும்" என்னுந் திருவெண்பா முதல் இரண்டு திருவெண்பாவாலும் கற்போதம் இழந்த ஞானிகள் சிவமயமா யிருப்பாரே அன்றி அவரை மீட்டும் போசம் மயக்காது என்று அறிவித்தவாறு காண்க. (உசு)

அறிந்ததுவாய் நின்ற வறியாமை கண்டு
மறந்தறியார் வாழாது வாழ்ந்த—வெறும்பாழ்
விளைந்தசுகஞ் சொல்லில் வெளியைப்படியா
ளைந்தறியு மாபோல வாம்.

(உரை.) அறிந்து அதுவாய் நின்ற அறியாமை கண்டு மறந்து அறியார் வாழாது வாழ்ந்த—மூப்பத்தாறு கருவிகளையும் நீங்கி அவற்றின் மூடியில் நின்ற சும்மை அருளால் அறிந்து; அவ்வருள் சாரிசனம் பரை சாரிசனம் ஆகந்தப் போறு ஆகிய இவற்றையும் கடந்து சிவமயமாய் மூன் நீங்கி நின்ற கருவிகளை மீட்டுங் கண்டு அச் சிவத்தை மறந்து பின்னும் இக் கருவிகளை நீக்கி அச்சிவத்தை அறியாதார் இப் பிரபஞ்சம் சிறிதும் தோன்றாது அச் சிவத்தோடும் வாழ்வுற வாழ்ந்த.

வெறும் பாழ் விளைந்த சுகம் சொல்லில் வெளியைப் படியால் அளந்து அறியுமாறுபோல ஆம்—ஓர் பொருளோடும் தொடர்வு இன்றிய வெற்றவெறுஞ் சூனியத்தில் உண்டாகிய பேராநந்தத்தைச் சொல்கோம் எனின், ஆகாயத்தை தாழியால் அளந்து அளவிடுமாறு போலுமாம்.

(குறிப்பு.) "அறியாமை கண்டு மறந்தறியார்" என்றமையால் கருவிகளின் மீளாது சிவமயமாய் எக்காலமும் இருப்பார் என்பதாயிற்று. வெளியை அளக்கும் படிக்குள் அவ் வெளி நிறைந்திருத்தலின், அதனை அளக்கக்கூடாதது போல், கருதிக் கூறும் மனவாக்கெல்லாம் அவ் வாகந்தம் நிறைந்திருத்தலின், அதனைக் கூறக்கூடாதென்பது அறிக.

இத் திருவெண்பாவால் அங்ஙனம் இருந்த ஞானிகள் பெற்ற இன்பத்தை இங்ஙனம் இருக்குமென்று அவரால் கூறக் கூடாதென்று அறிவித்தவாறு காண்க. (உ எ)

அறிவுக் கறிவென்னு மாகமங்கள் சுத்த
வறிவென்னு மெம் வேதத்தி னந்தம்—பிறியா
நிலைக்குச் சாயாகு நீயென்று ணினென்
றலைக்கு மாயிரம ரை.

(உரை.) அறிவுக்கு அறிவ என்னும் ஆகமங்கள் வேதத்தின் அந்தம் சுத்த அறிவ என்னும் பிறியா நிலைக்குச் சாயாகும்—சச்சிதானந்த சிவத்தை உயிராகிய அறிவிக்கு அறிவுக்கும் அறிவென்று கூறும் ஆகமாந்தங்கள்; வேதாந்தங்கள் அறியும் அறிவும் அறிவிக்கும் அறிவும் சுத்த அறிவ தானே என்று கூறும்; சற்போதம்போய்ச் சிவத்தைப் பிரியாத நிலைக்கும், சீவத்துவம் போய்ப் பிரமத்தைப் பிரியாத

நிலைக்கும், அவ்வாகம வேதங்கள் கூறிய வாக்கியஞ் சரியே ஆகும்;

நீ என்றால் நான் என்று அரி பிரமனை அலைக்கும்— அந் நிலை நில்லாது வாசகஞானமாக நீ அது என்றால் அது நான் என்று இங்ஙனம் விஷ்ணு பிரமாதிகளையும் அலைக்கும்.

(தநிப்படி.) நீ அது என்பது ஆகமம். அது நான் என்பது வேதம்.

இத் திருவெண்பாவால் பாஞானத்தால் சிவத்தைக் கூடப் பிரியாதிருந்தோர்க்கு வேதாகமங்கள் கூறும் ஞானம் இரண்டும் சரியென்பதும் அபர ஞானிகட்குச் சரியின்றென்பதும் அறிவித்தவாறு காண்க. (உஅ)

இரண்டாம் அதிகாரம்.

சத்திநி பாதத் துத்தம மொழிவு

முற்றும்.

மூன்றும் அதிகாரம்

யோகக்கழற்றி

சரியாதியில் நிற்போர்களுன் ஒவொருவர் முன்விட்ட குறையால் ஞானத்திற்குப் பக்குவராய் வருவார்கள், அவர் கட்குத் தற்போதத்தை ஒழித்து ஞானம் வருவித்தற் பொருட்டு அத் தற்போதத்தால் செய்யும் சரியாதிகளைப் போதனைகளால் நீக்கவேண்டும். ஆகவின், அவ்வதிகாரத் தின் பின்னர் இவ்வதிகாரங்கள் வைக்கப்பட்டன. ஆயின், முறையே வைத்துக்கூறுது யோகக்கழற்சியை முதற்கண் வைத்தது என்னை எனின், யோகம் ஞானத்திற் கருகமாக விலும், இவ் யோகத்தினின்ற ஞானபக்குவன் அதிபக்குவ னாகவிலும் முதற்கண் வைக்கப்பட்டது.

இவ்வதிகாரம் யோகத்தைக் கழலப் பண்ணினமை யான் இதற்கு யோகக்கழற்றி என்று பெயராயிற்று. இதன் பின்னர்க் கூறும் இரண்டதிகாரத்திற்கும் அதிகார வனை வும் பெயரும் இம்முறையே கொள்க.

சரியை கிரியைகளைச் சற்றுக்கிச் சாகாக் கருமம் யோகத்தைக் கழற்ற—வரிதவர்க்குத் தோன்றியதுபொய்யாகக் காண்கையிலேதோன்றுத லுன்றியபோ தங்கழலு மோ.

(உரை.) சரியை கிரியைகளைச் சற்று ஆக்கிச் சாகாக் கருமம் யோகத்தைக் கழற்ற அரிது—சரியை கிரியைகளைச் செய்வது அற்பமெனைக் கருதி உடல் நாசமாகாவகை செய்

யும் யோகிகளது கிரியாயோகத்தை யாவராலும் நீக்குதற்கு அரிது ;

அவர்க்குத் தோன்றியது பொய்யாகக் காண்கையிலே தோன்றுத வுன்றிய போதம் கழலுமோ—அக் கிரியா யோகி களுக்கு ஆறுதாரக்களிலும் ஓர் மூர்த்திணையத் தியானித்து அதனைவிட்டு மற்றோர் மூர்த்திணையத் தியானிக்கும்போது மூன்று தியானித்தது பொய்ப்பொருளாய்ப்போகத் தமக்கு அநுபவமாகக் காணுமிடத்தும் தெரியாது அதனை மெய்ப் பொருளாய்ப் பிடித்த போதம் எங்ஙனம் கழலும் ?

இத் திருவெண்பாவால் போதம் யாதென்றினைப் பற்றிலும் விடாதென்பதும், அப்பற்றைறப் பிறராலும் விடு வித்தல் அறிதென்பதும் அறிவித்தவாறு காண்க. (க).

அட்டமா சித்திகளு மத்துவா மூர்த்திகளுங்
கிட்டிலதற் கங்கங்கே கீழ்மேலாய்—விட்டு
வரும்போ துந் துக்கமாய் வந்துவந்து மாய்ந்து
பெரும்பாவஞ் செய்யப் பெறும்.

(உரை.) அட்டமாசித்திகளும், அத்துவாமூர்த்திகளும் கிட்டில்—அக் கிரியா யோகத்தால் அணிமா முதலிய அட் டமா சித்திகளும் தமக்குக் கைவல்லியமாகக் கிடைப்பினும், விநாயகன் முதலிய ஆறு அத்துவா மூர்த்திகளையும் சடா தாரங்களில் வழுவுறத் தியானிக்கக் கிடைப்பினும்,

அதற்கு அங்கு அங்கே கீழ்மேல் ஆய்விட்டு வரும் போதும் துக்கம் ஆய் வந்துவந்து மாய்ந்து பெரும்பாவம் செய்யப்பெறும்—அச்சித்திகளால் எடுக்கும் உருவுகளுள் ஒரு ருவிற்கு ஒருருவு. தாழ்ந்தும் உயர்ந்தும் தோற்ற அவ்வுருவு களை ஆங்காங்கு விடுத்து வரும்போது துக்கமாயும், மூர்த்தி

களை ஆறுதானங்களினும் வெவ்வேறாய் ஆங்காங்குக் கீழ் மேலுமாய்த் தியானித்து விடுத்து வரும்போதும் தக்கமாய், அவ்வாறுவெடுக்கும்போதும் அதனை விடுக்கும்போதும் அம் மூர்த்திகளைத் தியானிக்கும்போதும் விடுக்கும்போதும் பிறந்து பிறந்து இறந்து இறந்து இவற்றால் மிகுந்த பாவங்கள் செய்யப்படும்.

(குறிப்பு.) சித்தியால் ஒருருவை மறைத்து ஒருருவைக் காட்டலும், தியானத்தால் ஓராதாரம் விடுத்து ஓராதாரஞ் சேறலும், ஓர் பிறவியை நீங்கி ஓர் பிறவியை எய்தலும், ஓர் வர்ணத்தை நீங்கி ஓர் வர்ணத்தை எய்தலும்போல் இருத்தலின், "வந்து வந்து மாய்ந்து" என்றும், சித்தியால் சாபானுக்கிரகம் உளவாகலின் மூனிவ பிறந்தபோது பிறரைச் சபித்தலானும், தம்மைமப் படைத்தழிக்கும் மூர்த்தியைத் தாம்படைத்தலானும், பாவம் வருதலின், "பெரும்பாவஞ் செய்யப்பெறும்" என்றுங் கூறினர்.

"வரும்போதும் தக்கம்" என்பதனை ஆக்ஞாசக்கிரமாவுஞ்சென்று மீண்டுவரும்போதும் எனக்கொள்க. சகமுகத்தில் செய்யும் தொழில்போன்று அகமுகத்துஞ் செய்தலால் தக்கம் என்றார்.

அட்டமா சித்திகளாவன: அணிமா, இலகிமா, காரிமா, மகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய இவை எண்வகையும் எனக்கொள்க.

அதற்கென்னும் கான்கனுருபை அதனுலென்று மூன்றனுருபாகக் கொள்க. (உ)

அறிவடங்கா வாயு வடங்கவசை வற்றுத
றியிருந்தாற் போலச் சமாதி—பெறுகி

னடைந்த குருட்டுமை னஞ்சருந்திப் பாழூர்க்
கிடைந்தகுழிப் புக்கதிறுங் கேடு

(உரை.) அறிவு அடங்கா வாயு அடங்க ஆவைசவு அற்
றுக்கறி இருந்தாற்போலச் சமாதி பெறுகில்—தமது கரி
வால் அதன் இணைப்படி சென்று அடங்காத பிராணவாயு
வைத் தமது இச்சைப்படி இழோசித்தும் பூரித்தும் கும்பித்
தும் உள்ளடங்கச்செய்து தாழ்மை அதிதீவிர ஆவைசவற்றுக்
கம்பம் இருந்தது போல் சமாதி பெறுவர் ஆயின், (இச்
சமாதி,)

கடந்த குருட்டு மனமன் நஞ்சு அருந்தி பாழ் வாய்கிடந்த
குழிபுக்க அதிதீவும் கேடு—கடந்தப்பட்ட பிறவி அந்தகரெகிய
ஞானமையின் விடத்தினைப் புசித்தலுக் குடனேடாகிய மயக்கண்
உள்ள பாழுடங்கினைற்றில் எடுப்பாராற்று வீழ்ந்து கிடந்த அத
னிதீவும் கேடாம்.

(குறிப்பு.) வாயு அடக்கல் முதலிய தொழில் செய்த
லின், "கடந்த" என்றும், அதற்கு மேலாய ஞானமின்மை
யால், "குருடு" என்றும், அந்த ஞானங் கூறும் சாத்திரம்
அறியாமையால், "மனமன்" என்றும், சடமாயுள்ள வாயு
வுடன் கூடினமையால், "நஞ்சருந்தி" என்றும் முன்
செய்த தொழில் மறந்தமையாலும் ஆண்டுத் திருவருள் விழைக்
காமையாலும், "பாழூர்க் கிடந்த குழிப்புக்கு" என்றும்,
இங்ஙனம் உவமை கூறினர், இவற்றுள், "கடந்த குருட்
டுமன்" என்பது அவர்க்கு உவமையும், "நஞ்சருந்திப்
பாழூர்க்கிடந்த குழிப்புக்கு" என்பது அவர் சமாதிக்கு உவ
மையும் எனக்கொள்க. அவன் அறியாது வீழ்ந்தவன் இவர்
அறிந்து வீழ்ந்தவர் ஆகலின், "அனிதிலைங் கேடு" என்றார்.

இவ்விரண்டு திருவெண்பாவானும் கிரியாயோகஞ் செய்வது தன்பமென்றும், அங்ஙனம் தன்பப்பட்டுச் செய்யிலும் ஆன்மலாபம் இன்றென்றும், தனது கருத்தை யெடுத்து அறிவித்து அவ் யோகத்தை மறுத்தவாறு காண்க.

கவிப்படையறு மாதனமுங் கண்சிமிட்டா நோக்குந்
தவப்பகடி யாட்டங்காண் சார்வைத்—தவிர்க்கின்
மறந்தறிய லாகா மலட்டறிவாய் வான்போ
னினைறந்து துரும்பாமை னில்.

(உரை.) கவிப்பயறும் ஆதனமும் கண் சிமிட்டா நோக்குந் தவப்பகடி ஆட்டம் சார்வைத் தவிர்க்கின்—யோக நூலைக் கற்றுக்கொண்டு பிறர்க்கு அதன் அருத்தங் கூறுதலும், பதுமாதன முதலிய ஆசனங் கட்டலும், மனத்தை ஓர் தானத்தில் நிறுத்தி இலையா காட்டமாய்ப் பார்த்திருத்தலும், இவை முதலிய நீ செய்யும் தொழில்கள் ஞான தபோதனர் முன்னர்த் தவப்பகடிக் கூத்தாட்டி ஆடுவதாம்; இனி இவ் யோக வாசனையை நீங்குதி னானின் மோட்டைதற்கு ஏதுபாயமுண்டு; (அஃது எங்ஙனம் எனின்,)

மறந்து அறியல் ஆகா மலட்டறிவு ஆய்வான் போல் நினைறந்து துரும்பாமல் நில்—நீ யோகசமாதி கூடும்போது ஓர்கால் நினைந்தும் ஓர்கால் மறந்தும் முன்னர் அறிந்தது போல் அறியாது, இப்போது அந் நினைப்பு மறப்பு முதலிய ஒன்றும் தோன்றாத அறிவாய் எங்கும் பூரணமாய் ஒன்றாடும் காக்கற்று அசைவற்றிருந்த ஆகாயம்போல் நீயும் எங்கும் பூரணமாய் ஒன்றாடும் காக்கற்று அசைவற்று நிற்றி.

(குறிப்பு) "கண்சிமிட்டாநோக்கும்" என்றது, காகினி புருவமத்தியங்களில் பார்த்துக்கொண்டிருத்தல்.

மறந்து விழுகவான ஆகலான, "அனாலுவ்வகு" எனறார்.

கல்ல கூத்தாடுவான் முன்னர் அவன் வேடம் தானும் போட்டுக்கொண்டு அக்கூத்திற்கு மாறுய அகசியக்கூத்து ஆடுவானைப்போல ஞானிகளைப்போலும் வேடமும் நடையும் காட்டி, அவாது பூரண அறிவுக்கு மாருகக் கிஞ்சிக்கிய அறிவுயிருத்தலின், "தவப்பகடியாட்டம்" என்றார்.

மலட்டறிவு - ஒன்றுங் கலவாத அறிவு. கான்ன - அசை.

இத் திருவெண்பாவால் கேவல சகலங்கள் தாக்காது அருள்வடிவாய் நிற்றற்கு உபாயங் கூறியவாறு காண்க. (சு)

இங்ஙனம் இருவருக்கும் சமாதி கூடுதல் சரியெனின் யோகியை ஞானிகள் இகழ்ந்து கூறுவது என்னை எனின், மேற்கூறுகின்றார்.

தத்துமுழுட் டாக்காய்ச் சமாதியினைச் சார்போதப் பித்தனென்பார் பேரிற் பிழையுண்டோ—புத்திபோ கம்பக் களிறுகட்டக் கல்லினர் காணுமிவ [ய்க் ரம்பரத்தை வந்துபிடிப் பார்.

(உரை.) தத்துவம் முட்டாக்கு ஆய்ச் சமாதியினை சார்போதப் பித்தன் என்பார் பேரில் பிழை உண்டோ—தத்துவங்களை எல்லாம் நியதிபண்ணி நீக்கித் தம்மை அருளால் அறியும் அறிவின்றி, அத் தத்துவங்களைத் தன்மேல் மூட்டாக்காய் மூடிக்கொண்டு, சமாதி கூடும் கிரியாயோகியைச் சார்போதனெகிய பித்தன் என்று கூறும் ஞானிகள் மேல் குற்றம் யாது?

புத்திபோய்க் கம்பக் களிறு கட்டக் கல்வில் கார் காணும் அம்பரத்தை வந்து பிடிப்பார் இவர்—யூகபுத்தி இன்றிக் கம்பத்தின்கண் அடங்கா மதகளிற்றைக் கட்டுதற்குக்

ல்லின் கண் நார் உரிப்பாரும், தாம் இருத்தற்கு இடங் கொடுத்திருந்த ஆகாயத்தைச் சென்று பிடிப்பாரும் இவர்.

(குறிப்பு.) "தத்துவ முட்டாக்காய்ச் சமாதி" என்றது மனத்தால் வாயுவை வாங்கி உள் நிறுத்தி அதனுள் தாம் மறைந்திருத்தலின், இங்ஙனம் இருப்போர்க்கு அறிவிக்க அறியும் போதமே இன்மையால், எங்ஙனம் சிவத்தை அறிவார் என்பது குறித்து, "கும்பக்களிறு கட்டக் கல்லிலர்" என்றும், தம் உயிருள் பூரணமாயிருந்த சிவத்தை அறியாது மற்றோரிடத்து இருப்பதாய்க் கருதி அதனைப் பிடிக்கச் சேறலின், "அம்பாத்தை வந்துபிடிப்பார்" என்றுங் கூறினர்.

சார்போதம் சேர்ந்த கருவிமயமா யிருத்தல்.

மனமும் பிராணவாயுவும் இருந்த இடத்து எல்லாக் கருவிகளும் இரக்கும் ஆகலின், "தத்துவம்" என்று பொதுபடக் கூறினர்.

இத் திருவெண்பாவால் சமாதி கூடுதல் இருவருக்கும் ஒத்ததாயினும், யோகி இங்ஙனம் செய்தலால் ஞானிகளால் இகழ்ந்து கூறப்பட்டான் என்று அறிவித்தவாறு காண்க.

நெய்யி னிழல்போ னிழலிற் புருடனைப்போல்
பொய்யில் விகற்பம் புகுவதுவுந்—துய்ய
வொலியோசை யாகி யொடுங்குவதுந் தம்மைத்
தெளியாதார் செய்யுஞ் செயல்.

(உரை.) நெய்யில் நிழல்போல் நிழலில் புருடனைப் போல் பொய்யில் விகற்பம் புகுவதும்—நெய்யின்கண் தோற்றமும் நிழலைப்போதலும், அந்நிழலைப் பார்த்து ஆகாயத்தைத்

பார்க்கில் அந் நிழல்போல் தோற்றம் சாயா புருடனைப்போலும், கருவிகளாகிய பொய்யிற் கூறிய கற்போத விகற்பத்தால் தாழும் கம்மால் நியானிக்கப்பட்ட மூர்த்திகளுமாய் ஆறுதாரங்களில் தோற்றுவதும்,

கய்ய ஒளி ஓலை ஆதி ஒடுங்குவதும் தம்மைத் தெரியாதார் செய்யும் செயல்—நிருமலமாகிய விந்து தரிசனமும் நாத தரிசனமுமாய்த் தோற்றி, அங்ஙனம் தோற்றியவாறே நில்லாது, மீட்டும் ஒடுங்குவதும் ஆகிய இச் செயல்கள் எல்லாம் தம்மை அருளால் தெளிந்து அறியாதார் செய்யும் செயல்களாம்.

(நிரோ.) வெய்போல் கருவிகள்; அதில் தோற்றும் நிழலும், அந் நிழல்போல் ஆகாயத்தில் தோற்றும் சாயா புருடனும்போல் தாழும், தம்மால் நியானிக்கப்படும் மூர்த்தியும் என்பதறிக.

விந்துநாத தரிசனம் மாயையுள் தோற்றுவது ஆகலின், அது பொருளன்று என்பதுணர்க. (சு)

சாக்கிரத்தே கேவலத்தைச் சார்ந்துவிடத் தத்துவாதீதனை நோக்கி ஒழிப்பார்போல் நனைழவனையும்—சாக்கிரத்தில் அதீதத்தைப் பெறும்பொருட்டுத் தத்துவங்களைத் தள்ளி ஒழிப்பார் போன்று, அவற்றுள் தாம் மறைந்திரும்பலையும்,

கண்ணுடி பார்த்த குரங்கு அறிவாய்க் காண்பதையும் அவத்தை அறியில் நீக்கி என்னுர்—கண்ணுடி பார்த்த குரங்கு அதனுள் தோற்றிய நிழலைத் தன் நிழல் என்னு என்னுது, மற்றூர் குரங்கென்று அதனை மெய்யாகக் கருதும் அதன் அறிவுபோல, தற்போதத்தால் தியானித் தறியும் பொருளை அத் தியானத்தின்படி கருவிகளில் தோற்றுவதென்று அறியாது, அதனை மெய்ப்பொருளாய்க் காண்பதையும், சுத்தாவத்தையின் இலக்கணம் அறிவார் எனின், அவர் பொய்யென நீக்கி ஓர் பொருளாய் என்னுர்.

(குறிப்பு.) ஆதாரம் ஆறையும் ஊடுருவி நிற்கின்றும், தத்துவங்களை எல்லாம் கடந்தோம் என்று கருதிப் பிராண வாயுவில் மறைந்திருத்தலின், "நாக்கி யொழிப்பார்போ னுணர்வதையும்" என்றூர்.

சுத்தாவத்தையில் அருள் மயமாய் நிற்போர்க்கு எதி ரிட்டவை எல்லாம் பொய்யாகலின், "அவத்தையறியி லென்னுர்" என்றூர்.

ஏ - அசை.

இவ்விரண்டு திருவெண்பாவானும் சகல கேவலங்களை நீக்கித் தம்மை அருளால் அறிந்து சுத்தாவத்தையிற் நிற்போர் யோகி கருதிய பொருளை எண்ணுவென்று அறிவித்தவாறு (எ) காண்க.

உபதேசப் பித்தோ வுபமானப் பித்தோ
விபரீத மோபழக்கோ வேறு—தபசிநீ
சுண்மூடா வின்மூடத் தேடுங் கவுசனேபோ
லெண்மூடா யோக மிதுவென்.

(உரை.) உபதேசப் பித்தோ உபமானப் பித்தோ விபரீதமோ பழக்கோ வேறு தபரி நீ—உனக்குக் குரு இன்னை உபதேசப் பித்துமோ ? சாத்திரங் கூறிய உபமானப் பித்துமோ ? உனது விபரீத புத்திதானே ? மூற் சனனங்களில் தொன்றுவதொட்டு நீ செய்துவந்த பழக்கந் தானே ? அஃதன்றிப் பிறர் செய்வது கண்டு பாவனையாகச் செய்தல் முதலிய மற்று யாதோ ? தவவேடம் பூண்டு தவத்தைப் பண்ணுதின்ற நீ, (அத்தவத்திற்கு உரிய ஞான யோகம் புரியாது,)

கண்மூடின விண் முடத்தோடும் கவுசினப்போல் என் மூடின யோகம் இது என்—விண்ணின மூடவண்டினென் றதனின நாடுங் கண்ணின மூட்டாது வைத்து, அவ் விண்ணின மூடுதற்குக் * கவுசினை சேறுதல்போன்று, என்னுணின்ற மூடனே ! பஞ்ச பூதாதி கருவிகளை ஒடுக்கத்தொடங்கிய நீ அவற்றை நாடும் சற்போதத்தைத் கண்ணுறுக்கு இமைபோல் உனது உயிரைவிட்டு நீங்காதிருக்க புருவத்தில் மறைந்து அடக் காது, இத் சற்போதத்தால் அப் பஞ்ச பூதாதி கருவிகளை நோடிப்பல் என்ற கருதிப் பிராணவாயுவை உள் மறித்து, இதமேலும் போராடி நீ செய்யும் யோகம் இதன்னை கொல் ?

(குறிப்பு.) புருவத்தில் மறைந்து அனைசந்தோஷத்துக்கு அவ் வுருவே தோன்றும்; கருவியில் மறைந்து அனைசந்தோஷத்துக்கு அக்கருவியே தோன்றும்; ஆகலின், அவ் யோகத்திற்கும் இவ் யோகத்திற்கும் பேதம் இவ் வநுபவத்தாலுங் காண்க.

* யாதாயினுமோர் பொருளை உள்ளவைத்து மறைய மேன்மூடிக் கட்டும் மேற்கட்டி.

ஓகாரம் அடுக்கி வந்து இது என் என முடிந்தது. (அ)

வாலே முகமாய் வரவானை யேறினுன்
போலேயுன் போதமோ போய்த்தீண்டும்—சாலப்
பெருஞ் சிரிப்பாந்தன்னைப் பிடித்தாட்டும் பேயைத்
தெரிஞ்சிருக்கத் தேடுஞ் செயல்.

(உரை.) வாலே முகமாய் வர ஆனை ஏறினுன்போலே உன் போதமோ போய்த் தீண்டும்—தான் கருதிய ஊருக்குச் செல்லத் தலைப்புறத்தைப் பின்னிட்டு வாற்புற முகமாய் ஆனை யேறினுனைப்போலும், நீ கருதிய சிவத்தை அடைதற்கு அருளைப் பின்னிட்டு உன் போதத்தை முன்னிட்டுச் சென்றால், உன்போதமோ அச்சிவத்தைப்போய்த் தீண்டுவது? (ஆயின், அவ்வருளைத் தான் அடையவேண்டாவோவெனின்,)

தன்னைப் பிடித்து ஆட்டும் பேயைத் தெரிஞ்சி இருக்கத் தேடும் செயல் சால பெருஞ் சிரிப்பு ஆம்—தன்னை விடாது பற்றிநின்று அதனது இச்சைப்படி ஆட்டும் பேயை எதிரிட்டு அறிந்திருக்க, அஃது எங்குளதென்று தேடும் ஒருவனது அறியாமைபோல, பெத்தமுத்திகளிலும் உனது உயிரைவிட்டு நீங்காதிருந்து ஊட்டி உறக்கி உபகரித்து வீட்டைக் கொடுக்கும் திருவருளை வேறுபிரித்து, இஃது எங்குளதென்று தேடுவது இத் திருவருள்ஞானம் பெற் றோர்க்கு மிகவும் நகையாம்.

(குறிப்பு.) வாசற்புறமுகமாய் ஏறினுனை அவன் கருதிய ஊருக்கு மாறுகிய ஊரைச்சார்விக்கும், தலைப்புறமுகமாய் ஏறினுனை அவன் கருதிய ஊருக்கு நேரே சார்விக்கும்; அதுபோல், அருளைப்பின்னிட்டுப் போதத்தை முன்னிட்டுச்

சென்றுனைக் கருவிகளைச் சார்விக்கும், அத் திருவருளை முன்னிட்டுப் போதத்தைப் பின்னிட்டுச் சென்றுனைச் சிவத்தைச் சார்விக்கும் என்பதறிக. (க)

குறங்கு குத்திக்கொண்டு குரூரக்கைகத்திக்கூட்டை மறந்தழைத்தாற் றூக்கம் வருமோ-வெறுங்கெடுவீர் தன்னை யழித்தெழுந்த சச்சிதா நந்தத்தை யுன்னி லொளித்துவிடா தோ.

(உரை.) குறங்கு குத்திக்கொண்டு குரூரக்கை கத்திக் கூட்டை மறந்து அழைத்தால் தூக்கம் வருமோ — பாயில் படுத்துக்கொண்டு, தலையைக் குத்திக்கொண்டு, குரூரக்கை விட்டுக்கொண்டு, உடம்பை மறந்ததாகப் பாவித்துக்கொண்டு, தூக்கமே ! நீ வாராய் என்று அழைத்தால், அத் தூக்கம் அங்ஙனம் நினைத்துச் செய்யும் நினைவை அழித்தெழும் கேவலம் வந்தாலன்றி வருமோ ? அதுபோலும், உன் போதத்தால் பிராணவாயுவை மறித்து நீ செய்யும் யோகத்தால் ஆனந்த நித்திரையை வாச்சொன்றல், அந் நித்திரை அப்போதத்தை அழித்தெழுகின்ற அருட்கேவலம் வந்தாலன்றி வருமோ ? (அவ்வருட்கேவலம் எங்ஙனம் வரும் எனின்,)

வெறுங்கெடுவீர் தன்னை அழித்து எழுந்த சச்சிதானந்தத்தை உன்னில் ஒளித்துவிடாதோ — தந்தோ ! வெறுங் கெடுவீர் ! தற்போதத்தை ஒழித்துத் தானேயிருக்கும் சச்சிதானந்த வடிவாகிய சிவத்தை உன்போதத்தால் உன்னில், உன்னை யறியாது உனக்குள் ஒளித்துத் தன்னைவிட உன்னை ஒரு முதலாக்கிப் பிரித்துவிடும் ; ஆகலின், உனது உயிர்க்குள் இருந்து அறிவிக்கும் பூரணம் எனக் காண்டி.

(தறிப்பு.) சுபாவ நித்திரைபண்ணுவோன் செயலெல் லாங் காட்டி நித்திரைபண்ண திருந்தாவனைப்போல், எகாந் தத்து இருத்தல் ஆதனங்கட்டல் அசைவற இருத்தல் முத லிய ஞானிகள் கடையைக்காட்டி, அவரைப்போலும் ஆகந் நித்திரை பண்ணுது தற்போதத்தோடும் இருத்தலின், இங்ங னம் உவமை கூறினர்.

"உபதேசப் பித்தோ" என்னும் திருவெண்பா முதல இவை மூன்று திருவெண்பாவானும் திருவருள அறிதற் கும், தற்போதம் ஒழித்தற்கும் உபாயம் யாது கூறினும் தெளிந்து கொள்ளாத யோகியைப்பார்த்து வெறுத்துப் போதத்தை அறிந்து அடக்கிறலென்றிக் கருவிகள் அடங் காது என்பதும், அப் போதத்தைப் பின்னிட்டு அருள முன்னிட்டுச் செல்லவேண்டும் என்பதும், அவ்வருள முன் னிட்டு சென்றபோதும் அதனைத் தற்போதத்தால் எதிரிட் டுப் பார்க்கலாகாது என்பதும் அறிவித்தவாறு காண்க.

நீர் கூறியவாறே யோகியரும் சிவம் வாக்கு மனாதீத கோசரம் என்று கூற நீர் அவரை மறுப்பதென்னை எனின், மேற் கூறுகின்றார்.

மனவாக்குக் காயத்தான் மாய்ந்தளவை மாண்ட தெனவாய்ப்பறையறையிலென்று—நினைவதெலாஞ் சாக்கிரப்பொய் தாணுந் தனியனலன் றற்பரமு நீக்கமற்ற பூரணமென் னில்.

(உரை.) மனம் வாக்குக் காயத்தால் மாய்ந்து அளவை மாண்டது என வாய்ப்பறை அறையில் என் ஆம் நினைவது எலாம் சாக்கிரப்பொய்—மனம் வாக்குக் காயத்தால் வருந்தி யோகசமாதி கூடிச் சிவத்தைப் பெறுதல், அம்மனம் வாக்

குக் காயங்களால் உளவிடப்பட்ட உளவைகளை எல்லாங் கடந்தது அச்சிவம் எனப் பிறர்க்கு வாய்ப்பறை அறைந்து கூறிய தாற்றான், அவர்க்குப் பயனென்னை உண்டாம்? அவர் பாவிப்பதெல்லாம் சாக்கிரப் பொய்யாகலின்,

தானும் தனியன் அவன் தற்பரமும் தீக்கம் அற்றபூ ணம் என்னில்—தன்மாவும் சிவத்தைவிட ஓர் தனி முதல் வன் அல்லன் என்றும், அச்சிவமும் தன்மாவைவிட்டு நீங் காது உட்புறம்பாய் நிறைந்துள்ள பரிபூரணம் என்றும் சைவசமயக்கள் கூறும் எனின்.

(தீர்ப்பு.) கூடாம் எனின், பொய்யாகலின், பய னென்னை உண்டாம் என முடித்துக்கொள்க.

மனத்தால் வருந்துவது வாயுவை உள்மறித்தல்; வாக் கால் வருந்துவது சாத்திரம் பார்த்தல்; காயத்தால் வருந் துவது அதீனங்கட்டல் ஒளடதம் புசித்தல் முதலியன.

அளவை என்பது காட்சி அநுமானம் ஆகமம் முதலி யன. அவ்வளவை மான்டது தன்மாவும் சிவமும் இரண் டுற்றிருந்த இடம். அதனை அறியாது மானதக்காட்சியில் நின்று அளவை மான்டது என்றலையால் "வாய்ப்பறை யறையிலென்னும்" என்றார்.

இத் திருவெண்பாவால் அவர் அங்ஙனம் கூறினாயி னும் மறுதிருவாக் கடந்தநின்ற பூரணத்தை உணர்ந்தவர் அலர் என்று அறிவித்தவாறு காண்க. (கக)

வாயுமனங் கண்ணனையா வாறடக்கி மக்கினமாய் நீயுனைதந் தோய்க்கூட னீதியோ — காயத்துக் குட்புறம்பாய் நீதானே யுண்டிலீலை யாயதற்கு மப்புறமாய்த் தாக்கற் றனை.

(உரை.) காயத்துக்கு உள் புறம்பு ஆய் நீ தான் ஆய் ண்டு இல்லை ஆய் அதற்கும் அப்புறம் ஆய் தாக்கு அற் றை—(வெறுங் கடத்திருந்த ஆகாயம் போன்று) இக் காயத்திற்கு உள்ளும் புறம்புமாய், நீ அருள் தாலுகிய காலத்து உண்டென்றும் இல்லையென்றும் சொல்லப்பட்ட அநுபவமாய் அதற்கும் அப்பாலாய் ஒன்றேறும் தாக்கற் றிருந்த சிவத்தை,

வாயு மனம் கண் அசையா தூறு அடக்கி மக்கினம் தூய் நீ புகைந்து போய்க்கூடல் நீதியோ—வாயுவும் மனமும் கண் ணும் சிறிதும் அசையாவாறு அடக்கி, அங்ஙனம் அடக்கிய போதமும் தோன்றாது அவற்றுள் மறைந்து, நீ சென்று அடையத் தொடங்குதல் முறைமையோ?

(குறிப்பு.) ஆன்மா அருள் வயப் பட்டபோதெல்லாம் அவ்வருள் வடிவாய்த் தோற்றலான், "உண்டு" என்றும் அங்ஙனந் தோற்றிய அருளை இன்னபிரகாரமாய் இருக்கின் றது என்று சொல்லக் கூடாமையான், "இல்லையாய்" என் றும், அதனையுங் கழன்று சுகாதீதப்படுதலின், "அதற்கும் அப்புறமாய்" என்றும் கூறினர்.

இத் திருவெண்பாவால் பூரணத்தை அடைதற்கு உற்ற உபாயம் அன்றென்று அறிவித்தவாறு காண்க. (கஉ)

ஓட்டா திருக்கவென்று லொட்டா துறக்கமாஞ் சுட்டா திருக்கிற் சுடர்க்கொழுந்தாந்—துட்ட மனத்தோடு வாயுவைநீர் மண்ணையிலே வைக்கு நினைப்பீ ரிதென்ன நிலை.

(உரை.) ஓட்டாது இருக்க என்றால் ஓட்டாது உறக் கம் ஆம் சுட்டாது இருக்கின் சுடர்க்கொழுந்து ஆம்—

உமது யோகத்தால் கருவிகள் ஒன்றும் தாக்காது ஒழிந் திருப்போம் என்று நீர் கருதினால், அக்கருவிகள் ஒழிந்தபடி நிற்கவொட்டாது கேவலம் வந்து சாரும், அக்கருவிகள் ஒன்றையும் எதிரிடாது பார்த்திருப்போம் எனில் ஆண்டு ஓர் ஒளி தோற்றும், (மனத்தால் வாயுவை அடக்கி நிற்பின் அங்ஙனமாம் எனின்,)

தட்ட மனத்தோடு வாயுவை நீர் மண்டையிலே வைக்க வினைப்பீர் இது என்ன நிலை—அக்கொடிய மனத்துடனே வாயுவையும் பிரமரந்திரத்தில் நிறுத்துதலே மூத்தி என்று அப் பிரமரந்திரத்தில் அவற்றை நிறுத்தக் கருதுவீர்! அஃதென்ன உன்மைநிலை.

(தறிப்பு) மனத்தையும் வாயுவையும் பிரமரந்திரத்தில் நிறுத்திலல் கருவிகளெல்லாம் ஒழியும்; அவை ஒழியவே கேவலம் மூடும்; அது மூடவே தம்மோடு தமக்குள் இருந்து அறிவிக்கும் திருவருளும் தெரியாது; ஆகலின், அந்நிலையை "ஈதென்ன நிலை" என்றார்.

இத் திருவெண்பாவால் யோகியர்தங் கருத்தை எடுத் துக்காட்டி, இங்ஙனம் நிற்பின் அங்ஙனம் சாற்றும் எனின் எங்ஙனம் நிலையைப் பெறுவீர் என்று அவரை மறுத்தவாறு காண்க. (கந)

வாயுவைவிட்டு மனத்தை மாத்திரம் நிறுத்திலல் சிவத் தைப் பெறலாமோ எனின், மேற்கூறுகின்றார்.

கூட்டிற் குரங்கைகிழற் கோரணிக்கூத் தாமனத்தை
யாட்டிப் பிடித்தா ரடக்குவார்—காட்சியறச்
சும்மா விருக்கி லசையாது சுற்றுவிறி
சம்மாவே பம்பரங்கா ணும்.

(உரை.) காட்சி அற சும்மா இருக்கில் அசையாது சுற்று விறிசு அம்மானை பம்பரம்—போதம் ஒன்றையும் எதிரிட்டு கூடாது சும்மா இருப்பினும்; ஒருவர் பிடித்து அசைக்காது தானே சுற்றுகின்ற விறிசுபோலும், ஒருவர் எறிந்து பிடியாது தானே சுழலும் அம்மானைப்போலும், ஒருவர் ஆட்டாது ஆடும் பம்பரம்போலும் (தானே விரைந்து எழுந்து அசைவது எனின்,)

கூட்டில் குரங்கை நிழல் கோணிக்கூத்து ஆம் மனத்தை ஆட்டிப் பிடித்து ஆர் அடக்குவார்—கூட்டில் அடைத்து வைத்த குரங்கைப்போலும், நிழற்பாவைக்கோணிக் கூத்துப்போலும், ஒருவர் பிடியாதிருக்கவும் தானே சேட்டிக்கும் மனத்தினைப் போதத்தால் பற்றிப்பிடித்து ஆட்டியவர், அடக்கிக்கொள்வார்?

(குறிப்பு.) உடம்பில் நின்று சேட்டித்தலின், "கூட்டுற் குரங்கை" என்றும், நிழற்கோணிக் கூத்தைக் காண்டல் மாத்திரம் அன்றிப் பிடிக்கக் கூடாததுபோல் மனத்தினது போக்குவாத்து அறிவதே அன்றி அதனை அறிந்து பற்றக்கூடாமையின், "நிழற்கோணிக்கூத்து" என்றும், டன்மூகமாய்ச் சிதறி எழலின், "விறிசு" என்றும், குதித்துக் குதித்து எழலின், "அம்மானை" என்றும், ஓர் கணத்தில் அநேகஞ் சுழலாச் சுழல்வதலால், "பம்பரம்" என்றுங் கூறினர்.

கூட்டிற் குரங்கசைவும் நிழற்கூத்தசைவும் தூலமாகவின், போதம் அசைந்தவிடத்து அதனது அசைவிற்கு உவமையும், விறிசு அம்மானை பம்பரத்தசையும் சூக்குமம் ஆகவின், போதம் சிறிதடங்கிய இடத்து அம்மனத்தின் அசைவிற்கு உவமையுமாகக் கொள்க.

காணும் - அனை. (க

டற்றுத போதும் பதறும் பழக்கமதைத்
கற்று லென்றுகத் கலக்கா து—சற்றே நீ
திண்டிவிடிற் றுன்காண் சென்ன மரணமது
மாண்டுவிடி னிசிவமா லை.

(உரை.) பற்றுதபோதும் பதறும் பழக்கமனைதக் கற்றுல் என்றுகக் கலக்காது—ஓர் பொருளையும் போதங் கருதாது அனைவற் றிருந்தபோதும் றுன்னர் அனைந்த அம் போதத்தோதங் கூடிய பழக்கத்தான் விரைந்தெழும் மனத்தைப் போதத்தால் பிடித்துச் சாதித்து அடக்குவென் எனின், உன்னை எங்ஙனம் மயங்கக் கலக்காது?

சற்றே நீ திண்டிவிடின் தான் சென்னமரணம் அது மாண்டுவிடின் நீ சிவமாலை—நீ உன் போதத்தால் அம் மனத்தினைக் கணப்போதாயினும் பிடித்து விடுத்தி எனின், அது தானே பிறப்பும் இறப்பும் ஆம், அங்ஙனம் பிடித்து விடுக்கும் போதம் இறக்கும் உபாயம் அறிந்து இறத்தி எனின், அம்மனமும் இறக்கும் நீயும் சிவமாலை.

(குறிப்பு.) பிடித்தபோது நினைப்பும் விடுத்தபோது மறப்பும் வருதலின், "சென்னமரணம்" என்றார்.

காண் - அனை.

இவை யிரண்டு திருவெண்பாவாலும் தற்போதத்தால் மனத்தை அடக்கக் கூடாதென்று அறிவித்தவாறு காண்க.

அறிவா யிரீர்மயக்க மாகா தசையில்
விறிசாய் விடாதோ விகற்பம்—பிறியாத்

தராகி னுனிபோற் சமாதிவரின் ஞான
விராசனுமக் கொப்பா ரெவர்.

(உரை.) அறிவு ஆய் இரீர் மயக்கம் ஆகாது அசையில் விகற்பம் விறிசு ஆய்விடாதோ—கருவிகளை எல்லாம் நீக்கி நின்ற உயிரறிவை விட்டு நீங்காத அருளறிவா யிருங்கோள். அங்ஙனம் இருப்பீர் எனின், மயக்கம் வந்தடாது ; அவ்வுயிரறிவைப் பிரியா அறிவைத் தற்போதத்தால் எதிரிட்டுப் பார்ப்பதால் அசையில் விகற்பஞ் சுழல் விறிசுபோலாய்ச் சுழலும் ; (ஆகலின் அங்ஙனம் பார்த்து அசையாது,)

பிறியாத் தாகின் நுனிபோல் சமாதிவரில் ஞான இராசன் உமக்கு ஒப்பார் எவர்—இரண்டு தட்டிலும் இட்ட பொன்னும் கல்லும் சரியானபோது கீழ்நின்றமுள் ஓர்பால் சாயாது மேல்நின்ற முள்ளைப் பிரியாதிருந்த அத்தாகின் முள்நுனிபோல், மயக்கமும் விகற்பமும் அடாது அவ்வறிவின் கேரே உமது போதம் அசைவற்று இருக்கும் சமாதி வருமாயின், அப்போது நீர் ஞானராசன் ஆவீர்—அஃதன்றி இவ்வுலகத்து உமக்கொப்பாரும் யாவர் ?

(குறிப்பு.) கல்போலும் கேவலம், பொன் போலும் சகலம் அக்கல் மிகுந்தபோது கல் தட்டுப் புறத்தும் பொன் மிகுந்தபோது பொன்தட்டுப் புறத்தும் சாயும் கீழ்நின்ற முள்போல் ஆன்மா. இம்முள் சாய்ந்தபோதுஞ் சாயாது அசைவற கேரே நின்றபோதும் அசைவற்று மேல்நின்ற முள்போல் அருள் என அறிக. மேல்நின்ற முள்போல் கீழ்நின்ற முள்ளும் அசைவற கேரே நிற்றல்போல், ஆன்மா அருளில் அசைவற நிற்கவேண்டுமாகலின், " தாகுநுனி போல் " என்றார். இங்ஙனம் நிற்கின்ற சமாதி வருதல் அரிதாகலின், " வரின் " என்றார்.

இத் திருவெண்பாவால் கேவல சகலங்கள் தாக்காது திருவருட்கண் நிற்றற்கு உபாயங் கூறியவாறு காண்க. (கசு)

இங்ஙணம் கேவல சகலங்களை நீக்கித் திருவருளில் அசைவற நிற்கக் கூடாசாயினும், அந்தக்காணங்களை அடக்குதற்கு உபாயம் மேற் கூறுகின்றார்.

நீர்க்குப் பதமு நெருப்புச் சுடுந்தொழிலுங்
காற்றைறச் சலிக்கவுமார் கற்பித்தா—ரார்க்குமித து
போகா மலுதி புதைக்குநிழல் போலாநீ
யாகாயம் போற்பா ரறும்.

(உரை) நீர்க்குப்பதமும் நெருப்புச் சுடும் தொழிலும் காற்றைறச் சலிக்கவும் ஆர் கற்பித்தார் ஆர்க்கும் இது மலுதி போகா—நீர்க்குக் குளிர்ந்து பதஞ்செய்யும் குணமும், நெருப்பிற்குச் சுட்டு ஒன்றுவிக்கும் குணமும், காற்றிற்குச் சலித்தற் திரட்டும் குணமும் கற்பித்தார் யாவர்? அவற்றிற்கு இக்குணங்கள் இயல்பான வாறுபோல் மனத்திற்கு ஓர் பொருளைப் பற்றும் குணமும், புத்திக்கு அது பற்றிய பொருளை நிச்சயிக்கும் குணமும், அகங்காரத்திற்கு அது நிச்சயித்த பொருளை அபிமானிக்கும் குணமும், சித்தத்துக்கு அஃது அபிமானித்த பொருளைச் சிந்திக்கும் குணமும் இயல்பாம். ஆகலின், யாவர்க்கும் இம்மனமாதி அந்தக் காணங்கள் நீங்கா. (ஆயின் நீர் இங்ஙனங் கூறிய ஆற்றின் அக்காணங்கள் அங்ஙனம் இருப்பன அன்றி அவற்றை நீக்க வேண்டாவோ எனின்,)

புதைக்கும் நிழல்போல் ஆம் நீ ஆகாயம்போல் பா
அறும்—தன்னைப் புதைக்க மன்ன போதுந்தோறும் அம் மண்
மீது மேன்மேல் எழுப்பட்ட புதைக்கும் நிழல்போலும் அ

காணக்களை உன் போதத்தால் அடக்குந் தோறும் இப் போதத்தின்மீது மேன்மேல் எழுவதாம்; ஆகவின், உனது உயிருள் பிரிவற்றிருந்த அருளை, உட்புறஞ்ய் ஒன்றுடும் தாக்கற்றிருந்த ஆகாயம்போல், அவ்வருள்ஞானக் கண்ணால் தேகாதி பிரபஞ்சங்களை எல்லாம் உட்புறஞ்ய் நிரந்தாமாய்ப் பார்; இங்ஙனம் பார்த்தபோது அக் காணங்கள் அறும்.

(குறிப்பு.) இதனல் அந்தக்காணம் பொறிவழிச் சென்று பிரபஞ்சத்தை காடும்பொழுதும், அங்ஙனம் செல்லாவிடத்து அவ்வாசனையால் உள்ளே அசையும் போதும், தற்போதத்தால் அடக்கின் அடங்காது மேன் மேல் எழும். ஆகலின், புறம்பும் உள்ளும் திருவருளைப் பரிபூரணமாய்க் காணின் அக்காணங்கள் அடங்கும் என்ப தாயிற்று.

நீராதி இயற்கைக் குணங்களைப் போதத்தால் அடக்கக் கூடாததுபோல் மறுதி இயற்கைக் குணங்களையும் இதனல் அடக்கக்கூடாதென்பது காண்க.

இத் திருவெண்பாவால் திருவருள உள்ளும் புறனும் பரிபூரணமாய் பாவித்தாற் காணம் அடங்குமென்று அறி (கஎ) வித்தவாறு காண்க.

இங்ஙனம் உள்ளும் புறனும் பரிபூரணமாய்ப் பாவிப் பது அருளன்றே எனின், மேற் கூறுகின்றார்.

மன்னுண மலையை மறிகடலை வானகத்தை
யெண்ணி லளந்தறிய வெய்துமோ—வுண்மையைநீ
யுண்டென்னிலோர் வார்த்தையுண்டல்லாதுன் னை
கண்டறியி லென்னியமாங் காண்.
[முனைவக்

(உரை.) மண்ணை மலையை மறிகடலை வானகத்தை எண்ணில் அளந்து அறிய எப்தலோ——மண்ணக முழுதையும் வானக முழுதையும் கீட்டல் அளவையாலும், மலையை எடுத்தல் அளவையாலும், மறிகடலை முகத்தல் அளவையாலும் எண்ணலளவிடத்து ஒருவரால் இவ்வளவென்று அளவிட்டு அறியக் கூடுமோ? அதுபோல்,

உண்மையை நீ உண்டு என்னில் ஓர் வார்த்தை உண்டு அல்லாது உன் தெரிவைக் கண்டு அறியில் அன்னியம் ஆம்——இருநாற் றிருபதத்தாகாது புவனக்கட்கும் அவற்றுள் இருக்க சர அசர உயிர்கட்கும் உள்ளும் புறம்புமாய் நிறைந்துள்ள திருவருளை நீ உண்டென்று சொற்றி எனின், அவ்வோர் சொல்லும் உண்டாவது அன்றி இச் சொல்லுக்குப் பொருள் இது என்று உன் போதத்தால் இதனது காசத்தில் தோற்றும் அவ்வருளைக் கண்டு அளவிட்டு அறியக் கூடுமோ? அங்ஙனம் என்று அளவிட்டறிவென் எனில், உனக்கு அந்நியமாய் இருந்த அவ்வருள் அந்நியமாய் நீங்கும்.

(குறிப்பு.) இதனால் போதத்தாற் சிறிது அளவிடப் படும் மண்ணுறுதி பொருட்பொருளையே முற்றும் அளவிடக் கூடாது எனின், அப்போதக் காசத்திருந்த மெய்ப்பொருளை எங்ஙனம் அளவிடக் கூடும் என்பதாயிற்று.

அருள் அந்நியமாயிருந்துள்ளதாயினும், போதத்தடித்த போது மலவாசனை தோன்றும், இம் மலவாசனையோடுங் கூடிய போதத்திற்கு மலரறிதமாயிருந்துள்ள அவ்வருள் தோற்றுதல் ஆகலின், "அன்னியமாங்காண்" என்றார்.

காண்மா - அணை.

இத் திருவெண்பாவால் அருளை எதிரிட்டு அறியின் அந்நியமாம் என்று அறிவித்தவாறு காண்க. (கஅ)

உதித்தொடுங்கும் பொய்க்கா ருபாதான மென்னு
துதிப்பை யுதிப்பா லொடுக்கிற்—பதைத்தெழுந்த
பந்தன்ரு சாட்சியைப்போற் பார்வேர் பறித்தமரங்
கொந்தலர்ந்து காயாதொக் கும்.

(உரை.) உதித்து ஓடுங்கும் பொய் கார் உபாதானம் என்னுது உதிப்பை உதிப்பால் ஓடுக்கின் பதைத்து எழுந்து பந்து அன்ரு சாட்சியைப்போல் பார்—ஆகாயத்தில் தோன்றி மறையும் கார்போல், மாயையில் தோன்றி ஓடுங் கும் பொய்யாகிய காரணங்களையும் அம்மாயை என்று அருளால் கண்டு நீக்காது, அதனை மெய்போல் கருதி அக் காரணங்களைப் போதத்தால் அடக்கில். அவை காத்தால் அறையுண்தோறும் விரைந்தெழுந்த பந்துபோல் ஆகாவோ? அப் பந்தைக் காத்தால் அறையாது விடுத்தால் நிலத்திற்கிடக்கு மாகவின், இதன் சாட்சியைப்போல் உன் போதத்தால் அவற்றை அடக்கின் மென்மேலெழும் என்பதையும் பார்த் தறி தி ; (அஃதன்றியும்,)

வேர் பறித்த மரம் கொந்து அலர்ந்து காயாது ஒக் கும்—நிலத்தில் ஊன்றிய முதல்வேர் பறித்தமரம் பூத்துக் காயாது, அதுபோலும் உன்போதம் அற்றபோது காண இந்திரியங்கள் ஒன்றும் தோன்ரு தறும்.

(குறிப்பு.) உபாதானம் என்றது மாயையை ; அது காரியத்தைக் காரணமாகக் கூறியது.

காணம்போல் தோன்றி மறைதலின், போதத்தையும் "உதிப்பு" என்ரூர்.

காணைங்கள் போதம் இருந்தபோது இருந்தும் இழந்தபோது இறந்தும் வருதலின், போதத்தை வெர்க்கு உவமையாகக் கூறினர்.

இத் திரு வெண்பாவால் அருளால் கருவிகளினது உண்மையை அறிந்து நீக்கிலுல் நீங்கும் என்பதும், போதத்தால் அடக்கின் மேன்மேலும் எழும் என்பதும், கருவிகளை நியதிகளைந்து தற்போதத்தையும் அடக்கிலுல் மீட்டும் கருவிகள் தோற்ரு என்பதும் அறிவித்தவாறு காண்க. (கக)

இங்ஙனம் கருவிகளும் போதமும் இறந்து நின்ற இடத்து வரும் இலாபம் என்னை எனின், மேற்கூறுகின்ரூர்.

சுட்டுப்போ தங்கழன்ற சுத்தமறை மாத்திரையில்
மட்டுத்தானற்றநிட்டை வாய்க்குமேற்-கெட்டேன்
றூலைச்செய்யு மாநந்தஞ் சற்ரே பால்வாரி
மூலைக்கண்ணிற் ரூன்று மூறை.

(உரை.) சுட்டுப்போதம் சுழன்ற சுத்தம் அரைமாத்திரையில் மட்டு அற்ற நிட்டை வாய்க்குமேல் கெட்டேன் தூலைச்செய்யும் ஆநந்தம் சற்ரே—அரைக்கணப்போது ஆயினும் இது அது என்று சுட்டி அறியும் தற்போதம் ஒழிந்து ஓர் வரம்பின்றிய சுத்தமாகிய நிட்டை வாய்க்கும் ஆயின், கெட்டேன்! ஆண்டுப் பிரவேகிக்கும் போநாநந்தம் அற்பமோ?

மூலைக்கண்ணில் பால்வாரி தோன்றும் மூறை—மூலையினது சிறியகண் துவாரத்தில் பெரிய பாற்கடல் உதயமானமூறைமைபோல் பரிபூரணமாய்த் தோற்றும்.

(குறிப்பு.) சுட்டுச் சுத்தம் என்பது பரையோகம். இப் பரையோகத்தில் ஆன்மபோதம் மிகவும் தேய்ந்திருத்தலின்,

அதனை "முலைக்கண்" என்றும், இங்ஙனம் இருந்தபோது அணைக்கணைத்தில் அப் பரையோகம் நீங்கிப் பரிபூரணைக்தம் அநுபவமாய்த் தோற்றலின், அதனை "பால்வாரி" என்றுங் கூறினர், தான் - ஆல் - அசை.

இத் திருவெண்பாவால் கருவிகளும் போதமும் இறந்த சுத்த நிலையில் நின்றூல் ஆநந்தலாபம் உண்டென்று அறிவித்த வாறு காண்க. (20)

ஆகாயத் தேபலவுந் தோன்றி யடங்காதோ
நீகாயத் தோடழுந்தி நீங்கியரு—ளாகாதோ
வென்றுசலிப் பானே னெதிரற்ற பூரணத்தே
யொன்று மிலைகா ணுனக்கு

(உரை.) நீ காயத்தோடு அழுந்தி நீங்கி அருள் ஆகாதே என்று சலிப்பான் என்—நீ காயத்தோடு பொருந்தி இருப்பு தாய்க் கருதி இக்காயம் நீங்கி எனக்கு ஓர் காலம் திருவருள் வடிவம் ஆகாதோ என்று சலித்துத் துயர் உறுவானேன்?

ஆகாயத்தே பலவும் தோன்றி அடங்காதோ எதிர் அற்ற பூரணத்தே உனக்கு ஒன்றும் இலை—ஆகாயத்தினிடமாய்ச் சர அசர தேகங்கள் பற்பலவும் தோன்றி நின்று அழியாவோ? அதுபோல், உன்போதம் ஓர் பொருளையும் எதிரிடாது அற்ற போது உன்னை விழுங்கிநின்ற அருட்பூரணத்தில் உனக்கு அத் தேகாதி பிரபஞ்சங்கள் ஒன்றும் இல்லை.

(குறிப்பு.) ஆகாயத்தினிடமாய்த் தோன்றி ஒடுங்கும் காயங்கள் அவ்வாகாயத்திற்கு அந்நியமானதுபோல், மூன்று தேகாதிகளை யான் எனது என்று பற்றிநின்ற போதம் திருவருளில் அழுந்திப் பூரணமாய்ப்போகத் தேகாதி பிரபஞ்சங்கள் அந்நியமாய்த் தோற்றும் ஆகலின், "ஆகாயத்தே

பலவுந் தோன்றி யடங்காதோ" என்றும், பொய்யாய்த் தோற்றலின், "ஒன்றுமிலகாண்" என்றுங் கூறினர்.

காண் - அசை.

இத் திருவெண்பாவால் அருள்வடிவமாய் என்றைக் கிருப்பன் என்கிற மாணைக்கலுக்கு அவ்வருள் பூரணமென் றும், உன் சுட்டுப்போதம் அவற்றுல் அதனைவிட நீ ஒரு றுதல் அன்று என்றும் அறிவித்து; அவனது தூயரை மாற்றிய வாறு காண்க. (2க)

அவன் யோகப்பழக்கம் நீங்கற் பொருட்டுப் பழக்க இலக்கணம் எடுத்து மேற்கூறுகின்றுர்.

பழக்கங் கொடியதுபார் பாறையினுங் கோழி
கிழிக்கும் பொலியைக் கிளறும்—விழித்துங்
குருடர்க் கொளிபகையாய்க் கூசிக்கோல் போடா
ருருளைப் பகுக்குமான் மா.

(உரை) பழக்கம் கொடியது பார் பாறையினும் கோழி கிழிக்கும் பொலியைக் கிளறும்—யாவர்க்கும் பன்னுள் நோன்றுதொட்டு வரும் பழக்கம் நீக்கக் கூடாமையின் மிகவும் கொடியது, அதனை நீ பார்த்தறிதி, அஃது எங்ஙனம் எனின், பன்னுள் குப்பைகித்த பழக்கத்தால் கோழி கற்பாறையா யினும் கிக்கும், * நெற்பொலிமேல் விடுப்பினும் கீக்கும்; (அஃதன்றி,)

விழித்தும் குருடர்க்கு ஒளி பகை ஆய்க் கூசிக் கோல் போடார் அருளை ஆன்மா பகுக்கும்—காசநோய் படர்ந்த குருடர் கண்ணேணய் தீர்ந்து விழித்தபோதும் கதிரொளி

* தூற்றுமெல்.

ட்பகை போலாய்க் கூசி முன்பிடித்த கோலக் கை
டார், அவர்போல் அருளை அடையா முன்னர் அது இது
று நாலுவாய்ப் பழுத்த பழக்கத்தால் இப்போது பகுத்
து இடம் இன்றி எக்குந் தாயிருந்த அவ்வருளை அடைந்
ம், ஆன்மா அதனைப் பகுத்துகாடும்.

(தெளிப்பு.) சீக்கக்கூடாத பாறையைச் சீத்தல்போல், தக்கக்கூடாத அருளைப் பகுத்தலாலும்; கிளற வேண்டுவதின்றி நின்று நின்றது பொலியைக் கிளறுதல்போல், தக்க வேண்டுவதின்றி பிருந்து அருளாகந்தத்தை அநுபவி தது அவ்வருளைப் பகுத்தலாலும்; காசமிருந்தபோது கூசிப் டித்த கோலை அக் காசம் நீக்கிக் கதிரொளி கண்டும், இவ் வொளி முன் தோன்றிய இருளாய்க் கூசிக் கைவிடாற் போலும், முன்னர் ஆணவமறைப்பான் அது இது என்றுத் குத்த போதத்தை இப்போது அவ் வாணவம் நீங்கி அரு ளொளி கண்டும், இவ்வருளொளியை முன்னர் ஆணவ இருள்போல் பாவித்து விடாராகலிலும், இங்ஙனம் உவமை கூறினர்.

சகாதி பிரபஞ்சங்களை யெல்லாந் திருவருள் வடி வாய்க்காண்பதே அன்றி, அவற்றை காலுவாய்ப் பகுப்பி லும் இவ்வருளைப் பகுப்பதாமென்பது காண்க. (உஉ)

கட்டியநாண் விட்டாலுங் கந்தகலாக் கன்றுகளைத் தட்டிப்புறப்படுத்துந் தன்மைபோ—லொட்டொழித் நின்றுற்போ னீசிவமாய் நில்லென்று நீக்கமறுத் தது தொன்றுக்கி லொன்றிரண்டா தும்.

(உரை.) கட்டிய நாண் விட்டாலும் கந்து அகலாக் கன்றுகளைத் தட்டிப் புறப்படுத்தும் தன்மைபோல்—தம்

யோடுங் கட்டிய தும்மையைத் * தெறித்து விடுப்பினும் முன் கட்டியிருந்ததுபோல் கருதி, அத்தறியை விட்டு நீங்காது, கன்றுகளைக் காத்தல் கட்டி ஓட்டி வெளியில் புறப்படுத்தும் முறைமைபோல,

ஓட்டு ஒழித்த நின்ஞர்போல் நீ நிலம் ஆய் நில் என்று நீக்கம் அறுத்த ஒன்று ஆக்கில் ஒன்று இரண்டு ஆகும்— முன் பங்கமாயிருந்தவள்ள முப்பத்தாறு கருவிகளையும் விடுத்து தற் தன்னையும் திருவருளையும் அறிவித்து அவ்வருளோடும் சேர்த்து, அவ்வருள் அணைவற நின்ஞற்போல் நீ உன் போதம் அணைவற்றுச் சிவமயமாய் நில்லென்று கூறிச் சிவத்தைவிடத் தாயினுரு முதல் என்று கருதும் தனிதபாவனையை மாற்றி அச் சிவத்தோடு ஒன்ஞயிருத்தியும், போதஒழியால் அதனேடு ஒன்ஞன ஆன்ம போத அணைவால் இரண்டாகும் ஆகலின், அதன் போதம் இருந்தவாறு என்னை ?

(குறிப்பு.) தும்புவெதறித்து விடுத்தபோதே தாயைச் சென்று கூடிப் பால் உண்ணும் கன்றுபோல், ஓட்டை ழித்தபோதே நற்போதம் ஒழிந்து அருள்வழிச்சென்று சிவத்தை அடைந்து போயின்பத்தைத்தெறும் பக்குவர்போ லாகாது, கட்டிய கான்ன விட்டாலும் கற்று அகலாது நின்ற கன்றுகளைக் காத்தல் கட்டி வெளியில் புறப்படுத்திக் காலையோடுற்று சேர்த்து முலையைப் பிடித்து உண்ண விடுப் பினும் அணை உண்ணுது பிரமாறுபோல், ஓட்டொழித் தலையன்றி அருளோடுற்று சேர்த்தத் தனிதபாவனையை மாற் றிச் சிவத்தோடு ஒன்ஞயினும் அச்சிவத்தோடு இரண்டற் றிருந்து ஆகம்பற்ற உடையது நற்போத அணைவால்

* அறிந்து.

ண்டாகலான், இவர்க்கு அக்கன்றுகளை உவமை
(உக)
திறுள்.

ங்கை நினையா திருவென்று கூறத்
நம்பி யதுவே தியானம்—வருங்கதைபோல்
வமாய் நில்லென்று னீங்கியது வாய்னைந்து
ய்வையது வன்றே மலம்.

(உரை.) குரங்கை நினையாது இரு என்று கூறத்
நம்பி அதுவே தியானம் வரும் கதை போல்—ஓர் புரு
ன் ஓர் பேயைக்குக் குரங்கினை நினையாதிருத்தி யென்று
ற அவன் அங்ஙனங் கூறிய மாத்திரத்தில் மீண்டு அக்
ங்குத் தியானமே அவனுக்கு மனத்தில் குடியாயிருந்தது
ன்று உலகத்தில் வழங்கும் கதைபோல்,

நீ சிவம் ஆய்நில் என்றால் நீங்கி அது ஆய் நினைந்து
ய்வை அது அன்றே மலம்—நீ ஒன்றையும் எதிரிடாது
வமயமாய் நில்லென்று கூறினால், அங்ஙனம் எதிரிடும்
பாதம் ஒழிவதே அச்சிவமயமாய் நிற்பது என்று அறி
து, போதத்தால் சிவத்தை எதிரிட்டுப் பார்த்து யான்
வமயமாயினேன் ஆயினேன் என்று கருதி வருந்துவாய்;
ங்ஙனம் கருதி வருந்தப்பண்ணுவது அன்றே மலமாவது;

(தெளிப்பு.) கூறியபுத்தி உடையோனுக்கு நீ குரங்கை
னையாதிரு என்று கூறினால், அக்கணமே அந்நினைவை
ழித்திருப்பன். அதுபோல், தீவிரதர பக்குவனுக்கு நீ
வமாய் நில்லென்றால் அக்கணமே சிவம் என்றுந் தான்
என்றும் கருதம் துவிதபோதம் ஒழிந்து சிவமாய் நிற்பன்
என்று அதற்கு எதிர்மறையும் வருவித்துக் காண்க. (உச)

மணிப்பாம் பிருளின் மறைந்திருக்கத் தேடுங்
கணைக்சாந்தற் போதத்தைக் காட்டி—யுணர்த்துகிறு
நீரிற் கிணறு நிழலுயுத்த மும்போலா
மாரித்தை நீக்கியிருப் பார்.

(உரை.) மணிப்பாம்பு இருளில் மறைந்து இருக்கத் தேடும் சுணக்கு ஆம் தற்போதத்தைக் காட்டி உணர்த்து கிறும்—சென்னியின்மீது மணியையுடைய பாம்பு தான் இருளிடத்து மறைந்திருப்ப இருளைத்தேடும் முறைமை போலாகும் நீ உன் போதத்தை முன்னிட்டு அருளிடத்து மறைந்திருப்ப அருளைத்தேடு முறைமை, என்று போதஞ் சீவிப்பதைக் காட்டி, அருளையும் உன்னைவிட்டு நீங்காத பரிபூரணம் என்று அறிவிப்பிறும் தெரிந்து கொள்ளாது,

நீரில் கிணறும் நிழல் உயுத்தரும் போல் ஆம் ஆர் இத்தை நீக்கி இருப்பார்—பிரளயமாகக் கோத்தின்ற சுத்த சலத்தில் கிணறுதொட்டு நீர் தேடும் ஒருவனைப்போலும், தன நிழலை எதிராய்க் கருதி அதனிறு யுத்தஞ்செய்யும் ஒருவனைப்போலும், பின்னரும் உன்போதஞ் சீவியாதிற் கும்; ஆகவின், இப்போதத்தை நீக்கிச் சிவமாயிருப்பார் யாவர்?

(குறிப்பு.) சென்னியின்மீது மணிச்சுடரை உடைய பாம்பு இருளைத்தேடுந் தோறும் அவ்விருள் நீங்குவதன்றி நில்லாது, அதுபோல, தற்போதத்தை முன்னிட்டு அருளைத் தேடுந்தோறும் இவ்வருள் நீங்குவதன்றி நில்லாது என்பதும்; அப்பாம்பு சென்னிமணியைப் புணர்வழிக் கொணர்ந்து வாய்க் குள் அடக்கின் இருள் தேட வேண்டுவது இன்று, அது போல், முன்னிட்ட போதத்தைப் பின்னிட்டால் அருள்

தேடவேண்டுவது இன்று என்பதும், அவ்விருள் நிறைந்தாற் போல் இவ்விருள் நிறைந்திருப்பது என்பதும், நீர் வெள்ளமாயிருக்கவும் அந்நீரில் கிணறு தொட்டு நீர் சம்பாதிக்கத் தொடங்கினவனைப்போல், அருள் எங்கும் பிரிவற்ற பூரணமாயிருக்கவும், அவ்வருள் தேடி அருளைச் சம்பாதிக்கத் தொடங்கினேன் என்பதும்; தன்தேக அசைவால் நிழல் அசைவது என்று அறியாது அதற்கு ஓர் அசைவு வேறுளது என்று கருதி அதனோடு யுத்தஞ் செய்வானைப்போல், தன் போத அசைவால் கருவிகள் அசைவது என்று அறியாது அவற்றிற்கு ஓர் அசைவுவேறுளது என்று கருதி அவற்றை அடக்கத் தொடங்கினேன் என்பதும், இவ்வுவமைக் குறிப்புகளாற் காண்க.

இங்ஙனம் எழும் போதம் ஒழிப்பார் அறியார் ஆகலின் "ஆரித்தை நீக்கியிருப்பார்" என்றார்.

"மணிப்பாம்பிரு" வென்பது தற்போதத்தை முனிட்டு அருளை நாடுதற்கு உவமை, "நீர்நிற்கிணறு" என்பது அருளை யகண்டசமாக நாடுதற்கு உவமை, "நிழலுயுத்தம்" என்பது தன்னை அருளுக்கு ஊனைகக்கொடுத்து நிற்கவே கருவிகள் ஒழியும் என்று அறியாது, தற்போதத்தால் அவற்றை அடக்கத் தொடங்குவதற்கு உவமை எனக் கொள்க.

"பழக்கங்கொடியதுபார்" என்னும் திருவண்டமுதல் இவை நான்கு திருவண்பாவானும் அளவில்காலம் தற்போதத்தால் அத் துவித நாட்டத்தில் பழகிவருதலின் அப்போத மொழித்துச் சிவத்தோடு இரண்டற்று இருத்தற்கு உபாயம் யாது கூறினும், பழக்க மிகுதியால் ஆன்மாக்கள்

அம் குலிக காட்டம் ஒழிக்கு நிற்றல் மிகவும் அரிதன்று
உழியிழ்கவாறு காண்க. (உக)

ஆயின் இப்படிக்கும் நிக்குமாறு எங்ஙனம் எனின்
மேற்கூறுகின்றார்.

கூப்புறம்படாம் டுசனையு மியோக சமாதிகளுந்
தூட்டறிவு கெட்டவர்போற் றூங்குவதும்-விட்டுப்
பகலினைக்கு முய்திப் படிகறும்போற் பாச
மகலவிற்பாய்ந் தாரியபொட் பார்.

(ஒளை.) கூவ் புறம்படும் டுசனையும் யோக சமாதி
களும் கூட்டி அறிவு கெட்டவர்போல் தூங்குவதும் விட்டு—
அந்தரியாகம் பகிரியாகமாய்ச் செய்யும் டுணைசகளுந், தூரதார
பாவனை யோக சமாதி களுமென்று, இது அதுவ என்று சுட்டி
அறியும் தற்போதங்கள் கெட்டுப் பரமாகந்து கித்திலை பண்ணும்
மெய்ந்தானிகோப்போல் மனத்தால் பிராணவாயுவை உள்
வாங்கிவும் பிரமரந்திரத்தில் அதனால் மலமறந்து தூங்குவதும்,
ஆகிய இவற்றை யெல்லாம் பொய்யென்று விட்டு நீக்கி,

பகல் விளக்கும் உச்சிப் படிகறும்போல் பாசம் அகல
அற்பார்க்கு அரிதி ஒப்பார்—பகற்காலத்து எற்றிய தீபம்
போலும் உச்சிக் காலத்துப் படிகம்போலும், கருவிகள் மூப்
பதனாலும் அகன்றறிதற்கு திருவருளில் அணைவற நிற்
போர்க்கு இவை ஒப்பார் யாவர்?

(கருத்து.) இருளில் தோன்றியது போலன்றிச் சூரியப்
பிரகாசத்தால் முதல்வெடாது வெளிவெட்ட பகல் விளக்குப்
போல், முன்னர் அநுபவ அந்தகாரத்தில் தோன்றியதுபோ
லன்றி அநுபவப்பிரகாசத்தால் முதல்வெடாது போதங்கெட்டு
நிற்றலின், "பகல் விளக்குப்போல்" என்றதும் பொழு

தறுங் காலத்தும் சாயங்காலத்து மன்றி உச்சிக்காலத்தில்
ஞ்ச வண்ணங்களையும் கவராத படிகம்போல், சகல கேவ
த்தன்றிச் சுத்தமாகிய அருள் நேரே கருவிகள் ஒன்றேறும்
ாக்கற்று நிற்றலின், "உச்சிப்படிகம்போல்" என்றும்,
பாசமகல நிற்பார்" என்றுங் கூறினர்.

பகல்விளக்கென்றது தற்போதம் சீவியாது அருளில்
நிற்றற்கு உவமையும், உச்சிப்படிகமென்றது கருவிகள் ஒன்
றேறும் தாக்கற்று நிற்றற்கு உவமையுமாகக் கொள்க.

இத் திருவெண்பாவால் நீ இந்நாட் பழகிய யோகப்பழக்
கத்தைவிட்டு ஞானயோகத்தில் பழகுதி எனின் சிவத்தைப்
பெறலாம் என்று அறிவித்தவாறு காண்க. (உசு)

ஆயின் ஒன்றையும் கருதாது சும்மாநிற்பின் சிவத்தை
அடைவது எங்ஙனம் எனின், மேற் கூறுகின்றார்.

இருட்கே வலத்தின் றெழுப்பியெதி ரிட்ட
மருட்கே வலசகல மாற்றித்—திரிச்சுடர்போற்
றன்னறிவுதின்னிக்குத் தானுணவாய்ப் போவதல்லா
லுன்னுதலே யோட்டுதல்கா ணுபம்.

(உஅ) இருள் கேவலத்து இன்று எழுப்பி எதிரிட்ட
மருள் கேவல சகலம் மாற்றி—கருவிகள் மூப்பத்தாறும்
இறந்து ஆன்மபோதமும் இறந்து அந்தகாரமா யிருந்த கேவ
லத்தினின்றும் இப்போது நனது அருட்சத்தியால் கருவி
களைக் கூடப்பண்ணித் தற்போதத்தை எழுப்பிச் சுருதிகரு
வாகிய படர்க்கை முன்னிலையாய்நின்று ஞானசமாதி கூடப்
பண்ணி அத்தற்போதத்திற்கு எதிரிட்ட மருளாகிய கேவல
சகலங்களைப் பூரணமாகிய தன்மையாய் நின்று மாற்றி,

திரிச்சுடர்போல் தன் அறிவு தின்னிக்குத் தான் உணவாய்ப் போவது அல்லால் உன்னுதலே ஓட்டுதல்—விளக்குத் திரிமேலேறிய சுடர் சிறுகச் சிறுகத் தின்று வந்து முடிவில் அத் திரிமுழுதையும் விழுங்குதல்போல, தன்னை அருளால் அறிவித்தபோது தான் இவ்வருள் வழி வாவாச் சிறுகச் சிறுகத் தின்று முடிவில் தனது போதமெல்லாம் விழுங்கித் தானேயிருக்கும் சிவத்திற்குத் தான் புசிப்பாய் போவதன்றித் தான் வேறொரு முதலாய் நின்று அச்சிவத்தை எதிரிட்டு காடுதலே அதனை நீக்குதல்.

(குறிப்பு.) கருவிகளும் போதமும் இறந்து கேவல இருளிற் கிடந்த நீ கிருஞ்சிக்கியனுகலின், அவ்விருளை நீக்கிக் கருவிகளைக் கூடமாட்டாய், கருவிகள் சடமாகலின் உன்னை அணுவ வந்து கூடி எழுப்பமாட்டா. ஆகலின், சுதந்திரமாயுள்ள அருட்சத்தி கருவிகளைக் கூட்டி உன்னை எழுப்பி இக் கருவிகளோடுங்கூடி நீ சுகிர்தனுவை. இங்ஙனம் உனக்குப் பெத்த திசையில் சுதந்திரம் இன்மைபோல் முத்தி திசையிலும் இன்றுகலின், நீ உன் போதத்தால் ஒன்றையும் எதிரிடாது அணைவற நிற்றி எனின், அச்சிவம் தானே உன்னை விழுங்கிக்கொண்டு நிற்கும் என்று அறிவிக்க வேண்டி, "இருட்கேவலத்தின் றெழுப்பி" என்றும், "தன்னறிவு தின்னி" என்றுங் கூறினர்.

"இன்றெழுப்பி" என்றதனுல் அகாதியில் எழுப்பியதும் இவ்வாறனைக் கொள்க. காணும் - அனை.

இத் திருவெண்பாவால் சுட்டற்றிருந்தாலன்றிச் சிவத்தைப் பெறக்கூடாது என்பதும், அங்ஙனம் நிற்பின் சிவம் தானே விழுங்கிக்கொள்ளும் என்பதும், அறிவித்தவாறு காண்க.

ஆயின் நீர் இங்ஙனங் கூறியவாற்றுன் வேதாந்தி நிலையே
கன்று என்ற மாணாக்கனை நோக்கி மேற் கூறுகின்றுர்.

அறிந்ததெல்லாம் பொய்யென்ற வத்துவிதி யார்க்கு
வெறும்பாழி லூன்றல் விடாது—பிறந்திறப்பை [ம்
யாஅ லுனதொழிவு மாநந்த மாமுதிப்பும்
போஅற்கா னுன்பிறப்பும் போம்.

(உரை.) அறிந்தது எல்லாம் பொய் என்ற அத்து
வியார்க்கும் வெறும்பாழில் ஊன்றல் விடாது பிறந்து
இறப்பை ஆஅல்—கண்ணினுல் அறிந்த காட்சி எல்லாம்
கண்ணுகாத வாறும்போல், எம்மால் எதிரிட்டு அறிந்த
வெவ்லாம் யாம் அல்லோம், இவை மித்தியாரூபம் என்று
அவற்றை நீக்கி நின்ற வேதாந்தியாருக்கும், அங்ஙனம் எதி
ரீடாய்த் தோற்றுவன யாவும் இன்றிச் சர்வ சூனியமாயிருந்த
பிரமம் நாம் என்று இச் சூனியத்தில் தற்போதம் ஊன்றி
நிற்றல் விடாது; ஆகலினுல், நீ அவர்போல் நிற்றியாயினும்
சனன மாணப்படுவை; இங்ஙனம் நிற்பினும் உற்பத்தி நாசம்
உளவென்றீர், இனி உற்பத்தி நாசம் இன்றுய முத்தி யாது
எனின்,

உனது ஒழிவும் ஆநந்தம் ஆம் உதிப்பும் போஅல் உன்
பிறப்பும் போம்—உனது போத ஒழிவாகிய பராயோகமும்
இப்பராயோகத்தில் மேலிடும் ஆநந்தாதயமும் போஅல்
அப்போது உன் பிறப்பும் போம்.

(குறிப்பு.) பராயோகமும் ஆநந்தப்பேறும் ஆன்மா
விற்கு அநுபவமாய்த் தோற்றலானும், அவ்விடங்களில்
ஆன்மாவிற்குச் சிவத்தோடு அத்துவிதம் இன்றுகலானும்

"போலைற்கா ணைன்பிறப்பும் போம்" என்றார். அவை போனவிடஞ் சுகாதீதம். கான்ன - அசை.

இத் திருவெண்பாவால் வேதாந்தியர் இங்ஙனம் நிற்றலின் அவர்க்கும் பிறப்பு நீங்காதென்பதும், பிறப்பும் இறப்பும் நீங்கும் இடம் இவ்விடம் என்பதும், அறிவித்தவாறு காண்க. (உஅ)

அறிவுக் கறிவா யகன்டமாய் நின்ற
றிறனைவக் குறைய நினைந்து—மறனைவயுமாய்த்
தாமே சிவத்தைதப் படைத்தழிப்பார் தற்றோடம்
போமா றிலேபிறப்போன் போம்.

(உனை.) அறிவுக்கு அறிவ ஆய் அகண்டம் ஆய் நின்ற நிறனைவக் குறைய நினைந்து மறனையயும் ஆய்—உயிர்க்கு உயிராய் நின்று அறிவிக்கும் அறிவாய், கண்டிதமெல்லாங் கடந்ததாய், தினிவ இன்றி ஒளியல்புற்றாய் எக்காலமும் விளங்கநின்ற பரிபூரண சிவத்தை வகதேச வடிவாய்த் தற் போதத்தால் தியானித்து, அங்ஙனம் தியானித்த வடிவை மறந்தபோம் கன்மை யுடையருமாகி,

தாமே சிவத்தைதப் படைத்து அழிப்பார் தன் தோடம் போம் ஆறு இலே பிறப்பு என்போம்—தம்மைப் படைத்தழிக்கும் சிவத்தைதத் தாமே படைத்தழிப்பார் ஆகலின், இவர் இங்ஙனஞ் செய்தலான் வரும் தமது பாவமே நீங்கு மாறு இல்லை எனின், பிறப்பு என்னை நீக்கும்?

(அரிப்பு.) தியானித்தபோது வடிவு தோன்றியும், விதித்தபோது அவ்வடிவு நீங்கியும் வருதலின், "படைத் தழிப்பார்" என்றும், சிவத்தைதப் படைத்தழிப்பது தோஷமாக லின், "தோடம்" என்றும் கூறினார்.

இத் திருவெண்பாவால் யோகியினது கருத்தை எதிர்க்காட்டி, இங்ஙணம் ஞானபக்குவன் செய்வது பாவம் என்று அறிவித்தவாறு காண்க. (உக)

மறப்பு நினைப்பு மயக்கும் விகற்பம்
வெறுப்பும் விருப்பும் விடாமல்—விறப்பேனைப்
பாஞவும் வேதியும்போற் பார்த்தும் பரிசித்தும்
ஞானபந்தன் ருணக்கி னன்.

(உரை.) மறப்பும் நினைப்பும் மயக்கும் விகற்பம் வெறுப்பும் விருப்பும் விடாமல் விறப்பேனை—மறப்பும் நினைப்புமாயுள்ள கேவலமும் சகலமும் மாறிமாறி வாலாஞ் சேதகாதி பிரபஞ்சங்கள்மேல் விருப்பும் வெறுப்பும் சனனங் கள்தோறும் விட்டு நீங்காமல் துன்பத்தை அநுபவிக்லுகையி லும் அதனை ஆணவத்தான் இன்பமெனக் கருதி இறுமாத்து கொண்டிருப்பேனை,

பாஞவும் வேதியும்போல் பார்த்தும் பரிசித்தும் ஞான பந்தன் தான் ஆக்கினன்—பூதவிருளை நீக்கும் பாஞவையும் தன்னைச் சேர்ந்த செம்பைப் பொன்லுக்கும் பரிசன வேதி யையும் போன்று, தமது ஞானப்பிரகாச நோக்கத்தால் பார்த்தும், கரசரணங்களால் பரிசித்தும், மும்மலங்களையும் நீக்கித் திருவருளால் எடுத்துத் திருஞானசம்பந்தப் பிள்ளை யாஸ் தமது திருவடியில் ஒன்றுக்கினர்.

(குறிப்பு.) தான் அல்லாத தேகத்தை யானென்றும், தனது அல்லாத போகத்தை எனதென்றும் கருதப்பண்ணு வது மயக்கம். அத்தேக போகங்களில் வெறுப்பும் விருப் பும் வாச்செய்வது விகற்பம், ஆகலின், இவற்றைத் தொடர்ந்து நின்று இருவினைகளும், இவ்விருவினைகளால்

பிறப்பிறப்பும் விடாக" வாலால், "மயக்கும் விகற்பும் வெறுப்பும் விருப்பும் விடாமல்" என்று இம்முறை வைத்துக் கூறினர்.

ஞானதீக்கை பண்ணுவோரது திருபாதோக்கம் வைத்துத் திருவடிசூட்ட வேண்டுமாகலின், "பார்த்தும் பரிசித்தும் என்றார். அங்ஙனம் பண்ணுந் தீக்கையில் பாவனையும் இருத்தலின், அதை கூறாயினர். அப்பாவனையால் தம் மோடு ஐக்கம் பண்ணலைக் கோடலின், "தாழக்கிழன்" என்றார்.

இத் திருவென்னாயால் சமயாசாரியர் தீக்கையில் தம்மைத் திருவடிக்கன்ன ஆக்கியமாகிய முறைமை அறிவித்து, நீயும் ஞானதீக்கை பண்ணலைக்கொருதற்கு என்று அறிவித்த வாறு காண்க. (கூ0)

மூன்றாம் அத்தியாயம். யோகக் கழற்றி

முற்றும்.

நான்காம் அதிகாரம்

நிலையக்கழற்றி

தத்துவத்தை யெல்லாஞ் சடமென்று தள்ளற்றுச் செத்தசத்தின் கண்போற் றிரியாது-வைத்தெடுத்தும் பூரணமே யென்றழைத்துந் தேடிப் புரண்டழுதுங் கோரணிகாட்டு நும்பேய்க் குவால்.

(உரை.) தத்துவத்தை எல்லாம் சடம் என்று தள்ளு அற்றுச் செத்த அசத்தின் கண்போல் திரியாது—தத்துவங் கள் எல்லாம் இது இது என்று தன்னால் அறியப்படலானும், தன்னை அவை அறியாமையானும், அவற்றைச் சடமென்று அறிந்து அவைகள் ஒன்றேனும் தள்ளற்றுச் செய்த ஆட்டுக் கண்போல் சுட்டறிவு கெட்டுச் சும்மா திரியாமல்,

வைத்து எடுத்தும் பூரணமே என்று அழைத்தும் தேடிப் புரண்டு அழுது கோரணி காட்டும் பேய்க்குவால்— தற்போத நாசத்து இருந்த பூரணசிவத்தை அப்போதத்தால் ஓர் வடிவில் ஆவாகனம் பண்ணி, அதனை மீட்டும் தியானம் பண்ணி, இங்ஙனம் பூசனை புரிந்தும், அவ்வடிவைப் பரிபூரண சொரூபமே என்று ஓலமிட்டழைத்தும், அச்சிவம் எங்களும் இல்லை மகா தலங்களில் உண்டென்று கருதி அத்தலங்களில் தேடிச்சென்றும், நிலத்தில் வீழ்ந்து புரண்டழுதும், இங்ஙனம் கிரியையாளனென்னும் பேய்க் கூட்டங்கள் கோரணிக் கூத்தாடிக்காட்டும்.

(குறிப்பு.) செத்தசத்தின் கண் உயிரசத்தின் கண் போல் இருப்பினும் இதனது சுட்டறிவு அதற்கு இன்மை

போல், மெய்ஞ்ஞானிகள் பிரபஞ்சிகள்போல் இருப்பினும், இவரது சுட்டறிவு அவர்க்கு இன்றி இருப்பர், அவர்போல் நீரும் இராது என்னை செய்கின்றீர் என்று அவரது கடையை இவர்க்கு அறிவிக்கவேண்டி, அந் நடையின்றிய இவரைப் பார்த்து, " செத்தசத்தின் கண்போற் றிரியாது " என்றார்.

சுட்டறிவு தெடுத்து நிற்பது அருள், சுட்டச்செய்வது மருள் ஆகலின், இவரைப் " பேய்க்குவால் " என்றும், இவர் தொழிலைக் " கோணிக்கூத்து " என்றும், இவர்க்கு ஆன்ம லாபம் இன்மையால். பிறர்க்குக் " காட்டும் " என்றுங் கூறினர்.

இத் திருவெண்பாவால் திரியையானவரைப் பார்த்து ஞானிகள் கடையை எடுத்துக்காட்டி, இவரைப்போல் நீரும் செய்யாது என் செய்கின்றீர் என்று இகழ்ந்து கூறியவாறு காண்க. (க)

திரையைத் திரளத்துவந்து தேட்டவர்க்கு சும்மா
திரியச் சகசம்விளைந்த சீமான்—குருவன்றிச்
சற்றே டணைத்படித் தரிணைந் சகம்படைக்கக்
கற்றோ டணைந்தகாலை நாமாங் காண்.

(உரை.) திரியைக்கு இளைத்துவந்து தேட்டவர்க்குச் சும்மா திரியச் சகம் விளைந்த சீமான் குரு அன்றி—மனத்தால் பாவிக்கும் தொழிலும், வாக்கால் தோத்திரம் பண்ணும் தொழிலும், காயத்தால் அருச்சனையாதி செய்யும் தொழிலும் ஆகிய இக்கிரியைகளால் மிகவும் மெலிந்து இவற்றை வெறுத்து, ஞானத்தை விரும்பி வந்தடைந்து தேட்ட அதிபக்குவர்க்கு, இம் மன வாக்குக் காயங்கள் அடைதற்கு எதுவாய கற்போதை அடையை ஒழித்து அருள் வடிவாக்கி எனக்கு இன்னது வேண்டும் என்பது ஒன்றும் இன்றி

சும்மா சஞ்சரிக்க வைத்துப் போன்பத்தை உண்டாக்கிய இவ்வாகந்தச் செல்வனே ஞானகுரு வன்று.

சற்றே பதைப்பத் தரிணும் சகம் படைக்கக் கற்ருணும் காலனும் ஆம் காண் — அப்பக்குவர்க்கு ஓரணுவளவேனும் தற்போதம் அணைதற்கு ஏதுவாய உபதேசங்களைக் கொடுப்பி னும், அக்குரு சகத்தைப் படைத்தற்குக் கற்றுள்ள பிரம னும், இவரால் படைத்துள்ள சகத்தில் உண்டாகிய உடல் களை அழிக்கும் காலனும் ஆவனன்றி ஞானகுரு அவன் என்று அறிதி.

(குறிப்பு.) போதம் பதைத்தற்கு ஏதுவாகிய உப தேசங்களைக் கூறவின், சகல கேவலங்கள் நீங்கா; இவை நீங்காமையால் பிறப்பு இறப்பு உண்டாகும்; ஆகவின், "சகம் படைக்கக் கற்ருணுங் காலனுமாங் காண்" என்ருர்.

சிவன் முத்தரைய் நிலத்திற் சஞ்சரித்தலின், "திரிய" என்ருர்.

இத் திருவெண்பாவால் ஞானபக்குவனுக்கு முன்னி ருந்த சரியையாதி வாதனைகளை எல்லாம் போக்கி, தற் போதம் பதையாது மௌனமா யிருக்கும்படி போதிப்பவனே ஞானகுரு என்றும், போதஞ் சிறிதேனும் பதைப்பக் கூறு மவன் அலன் என்றும் அறிவித்தவாறு காண்க. (உ)

அக்கினி தேவற் கசீர்த்தியென்று சுக்கரைத்து
வைக்கோலான் மூடி மலையடுப்பின்—றுக்கியாய்
நீரைக் கழுவி நிழலைப் புதைத்தளப்பா
ராரைப்போல் வாரென்ன லாம்.

(உரை.) அக்கினிதேவற்கு அசீர்த்தி என்று சுக்கு அரைத்து வைக்கோலால் மூடி மலை அடுப்பின் தூக்கி ஆய்—

அக்கினிதேவனுக்கு அதிரணம் பிறந்ததென்று கருதி, அது தேமோதற்குச் சுக்கரைத்துக் கொடுத்து, சீதளம் பிறந்ததென்று அவனை வைக்கோலால் மூடி அவனுக்கு முன்னோ இங்ஙனம் செய்யாதிருந்தோம் என்று மேலே வந்து தம்மேல் அடித்துக் கோபமும் தூக்கத்தை உடையவராகி,

நீரைக் கழுவி நிழலைப் புணர்த்து அளப்பார் ஆரைப் போல்வார் என்னல் ஆம்—நீரை நீரால் கழுவித் தமது நிழலை மன்ன ஒருட்புணர்த்து அந்நிழலைத் தம் மடியால் அளந்து இவ்வளவு என்று அளவிடுவானை யாவரைப் போல்வார் என்று கூறலாம் ?

(குறிப்பு.) எவரெவர் புரிந்த புணர்ப்புக்களையெல்லாம் அவரவர் வயிற்றோடிருந்து சீரணிக்கப்பண்ணும் அக்கினி தேவனுக்கு அதிரணம் பிறந்ததென்று உபசரிக்கும் முறைமை தேவனுக்கு இங்ஙனமும் அளவும் தூணை வைதேகியை உபசாரங் கூற

போல் பாவித்து ஆவாகனம் பண்ணலின், "நிழலைப் புணர்த்து" என்றும், தனது நிழலை அளந்து செல்லுங் தோறும் அந்நிழல் கடந்து கடந்து சேறல்போல், இங்ஙனம் இருக்கும் என்று சிவத்தைத் தியானிக்குந்தோறும் அது அத் தியானங்களுக்கு அப்பால் அப்பால் சேறலின், "நிழலைப் பார்" என்னுங் கூறினர். சிவத்தினது உண்மையைக் கேட்டிருந்தும் இங்ஙனம் செய்தலான், "ஆரைப்போல்வ ரென்னலாம்" என்றார்.

இத் திருவெண்பாவால் மலரிதமாய் ஆநந்தவடிவா யிருந்த சிவத்திற்கு மாயாகாரியமாகிய நீராதி உபசாரங்களால் சுத்தமும் சுகமும் உண்டாகா என்பதும், அதனைப் போதத் தால் அளவிட் டறியக் கூடாதென்பதும், அறிவித்தவாறு காண்க. (நே)

நீர்க்கும் வழிக்குந் துயரில்லை நீந்திநடந்
தார்க்குத் துயரென் றறிவுறியா—மூர்க்கருரை
யாற்றுக்கு வாய்கட்டி யம்பரத்துக் கேணியிட்டுக்
காற்றுக்குக் கால்பிடித்தல் காண்.

(உரை.) நீர்க்கும் வழிக்கும் துயர் இல்லை நீந்தி நடந் தார்க்குத் துயர் என்று அறிவு அறியா மூர்க்கர் உரை— வெள்ளமாய் நிறைந்துள்ள நீருக்கும் ஓரூர்க்கும் செல்லும் வழிக்கும் தண்பம் ஏதும் இல்லை, அவ் வெள்ளத்தை நீந்திச் செல்வோர்க்கும் அவ்வழி நடந்து செல்வோர்க்கும் தண்ப மென்று அறிவதுபோல, பூரணமாய் மௌனமாய் ஆநந்தமா யிருந்த சிவத்திற்கு ஓர் தண்பமும் இன்று, அதற்கு ஓர் தண்பம் உளதுபோற் கருதி, பூசை நைவேத்திய உபசாரம் களைச் செய்யத்தொடங்கும் எமக்கே தண்பமென்று அறிந்து, இங்ஙனம் செய்யும் பூசையாதிகளை விட்டு நீங்கி, அச்சிவத்தை

அறிவித்தற்கு ஏதுவாய ஞானாசாரியனை அடைந்து, திரு வருள் ஞானத்தை அறியாத கிரியாகுருவாகிய தீக்ஷனர் பிறர்க்கு உபதேசம்போற் கூறும் உரை,

யாழ்முக்கு வாய் கட்டி அம்பாத்துக்கு எனி இட்டுக் காற்றுக்குக் கால் பிடித்தல்—பிரளயமாய்ச் செல்லும் ஆற் றுக்கு வாய்கட்டி அதனை அடக்கச் சொல்லுதல்போலும், ஆகாயத்தின்கண் எனி நாட்டி இதன்மேல் ஏறி அதனைப் பிடிக்கச் சொல்லுதல்போலும், காற்றுக்குக் கால் பிடித்தல் முதலிய உபசாரங்களைச் செய்யச் சொல்லுதல்போலும் ஆம்.

(குறிப்பு.) மலைக்கண் நின்று கடலளவும் ஊடுருவிக் கோத்து நின்ற ஆற்றுக்கு வாய்கட்டி அடக்கச்சொன்னது போல், பிருதிவிமுதல் மூப்பத்தாறு கருவிகளையும் ஊடுரு விப் போகாதபடி நிறைந்திருந்த சிவத்தை ஓர் வடி வத்து ஆவாகனம் பண்ணச் சொல்வதனால், "ஆற்றுக்கு வாய்கட்டி" என்றும், எனி நிற்றற்கும் அதன்மேல் ஏறிச் செல்லாவாறுக்கும் இடங் கொடுத்துநின்ற ஆகாயத்தை அவ் வெனிமேல் எறிப்பிடிக்கச் சொன்னதுபோல், அந்தரியாக பூசைக்குத் தான் சொல்லுந் தானத்திற்கும் அத்தான திருந்து பூசனை செய்யாவாறுக்கும் உட்புறம்பாய் நிறை துள்ள சிவத்தை இங்ஙனம் இருப்பதென்று அறியாது, அ பூசனையால் அறி என்று சொல்வதனால், "அம்பாத்துக் கெனியிட்டு" என்றும், அருவமாயிருந்த காற்றிற்குக் காலே இன்று, அஃது அங்ஙனம் இருப்பவும் அதற்குக் கால்பிடித்தல் முதலிய உபசாரங்களைச் செய்யச் சொல்வது போல், உருவம் அருவம் உருவருவங்களை எல்லாம் கடந்து நின்ற சிவத்திற்கு வடிவேயில்லை. இஃது இங்ஙனம் இருப் பவும் இதற்குச் சோடச உபசாரங்களைச் செய்யச் சொல்வது

னல், "காற்றுக்குக் கால்பிடித்தல்" என்றுங் கூறினர். உபசாரஞ் செய்தலை இருவகைப் பூசைக்கும் பொதுவாகக் கொள்க. காண் - அசை.

இத் திருவெண்பாவால் கிரியாகுரு உபதேசத்தால் ஆன்மலாபம் இன்றென்று அறிவித்தவாறு காண்க. (உ)

ஆயின் ஞானிக்குக் கிரியை செய்ய வேண்டாவோ எனின், மேற் கூறுகின்றார்.

ஆகாயம் போவார்க்கு மாவிகையோ வாழ்கடலோ
மீகாமன் போற்றிரிய வேண்டுமோ—யோகிக்கும்
கன்மமோ பூரணன்காண் காலமுமா காயமும்போய்
என்ன தொழிலையியற் றும்.

(உரை.) ஆகாயம் போவார்க்கு மாவிகையோ ஆழ் கடலோ மீகாமன் போல் திரிய வேண்டுமோ—ஆகாயகமனம் பண்ணுவோர்க்கும் ஓர் பற்றுக்கோடோ? அவ்வாகாயம் ஆழ்கடலோ? இவ்வாழ் கடலிற் செல்லும் மீகாமனைப் போல் பற்றுக்கோடு பற்றி ஓர் தூறை சார்தற் பொருட்டுத் திசைநாடி இங்ஙனம் சுழல அவர்க்கு வேண்டுமோ? (அதுபோல,)

யோகிக்கும் கன்மமோ பூரணன் காலமும் ஆகாயமும் போய் என்ன தொழிலை இயற்றும்—சிவயோகி ஆகந்த பூரணன் ஆகலின், தேகாந்தரை பிருந்துள்ள கிரியையாள னைப்போல் அவனுக்கும் கிரியைசெய்ய வேண்டுமோ? அஃதன்றி, காலமும் ஆகாயமும் தாம் இருந்தபடி இருப்ப, தம்மிடத்தில் பிறபொருள்கள் தொழிற்படுவன அன்றி, தாம், சென்று யாது தொழிலைச் செய்யும்? அதுபோல், பூரண

ருகிய அச்சிவயோகி சந்திரனைத்தில் கருவிகள் தொழிற் படுவனை அன்றி, தான் ஒரு கருவிகளாகவும் கூடித் தொழில் செய்யான்.

(குறிப்பு.) ஆகய கமனம் பண்ணுவோன் தான் நினைத்த தானத்தில் வாயுவினால் சென்றிருத்தல்போல, சிவ யோகி தான் கருதிய வீட்டை அருளால் அடைந்திருத்தலின், "ஆகாயம் போலார்க்கு மாலைகளே" என்றும்; ஆழ்கட லிற் செல்லும் மீகாமனுக்குக் கப்பலாகிய பற்றுக்கோடுபற்றி நூல் தகைறக்கண் சார்தற் பொருட்டுத் திசை காடிச் செல்வ தேயன்றியும், அதுபோல, சிரியாசாரனுக்கு ஓர் வடிவைச் சிவ லாய்ப் பாவித்து ஓர் பதமினை அடைதற்பொருட்டு அதற்கு விதிமார்க்கமாய் அருச்சனையாதிகளைச் செய்யவேண்டும். அவர்க்குச் செய்யலேயன்றியும் இன்றுகலின், "மீகாமன் போற்றினிய வேண்டுமோ" என்றதனாற் கூறினார்.

சிவயோகி தான் அறிவாயும் ஆகும் சிவமாயும் கண்டு, அறிவாகிய தான் ஆகுதமாகிய சிவத்தில் கலந்திருப்பன். சிரியாசாரன் தான் தேகமாயும் சிவம் சிலையாதிகளாற் செய் யும் ஓர் வடிவாயும் கண்டு, அதன்மேல் நிரதாரணங்களால் வழி பட்டு இனிமேல் ஓர் பதமினை அடையக் கருதி இருப்பன். ஆகலின் இவர் இருவரும் ஒன்றாம் உவமை கூறினர்.

மொருட்டின் விழுகுதியா வெய்யிற்படா தோன்று
வருக்க னிருனா யடைத்தாற்போ லன்—மருட்கெடுத்த
ஞானத்தின் போதினிலை நாடுமெனின் ஞானிகளு
மூனத் தொழிலுளைமடியா ரோ.

(உரை.) மொருட்பில் விழுகு உதியா வெய்யில் பால் தோன்று அருக்கன் இருளை அடைத்தற்போல் மருள

கெடுத்த ஞானத்தின் பேர் கிரியை காசம் எனின்—கெருப் பின்கண் விறகு தோன்றுதது போலும், நெய்யில் பால் தோன்றுதது போலும், ஆதித்தன் பூதவிருளை அழித்து எழுந்தாற்போல் மும்மலமாகிய இருளை அழித்து எழுந்த ஞானம் அவற்றினது காரியமாகிய கிரியையையும் தோன்றுது அழிக்கும் ஆகலின், இந்த ஞானத்தின்பேர் கிரியா காசம் என்று வேதாகமங்கள் கூறும் எனின்,

ஞானிகளும் உளனத்தொழில் உழைப்பாரோ—இந்த ஞானத்தைப்பெற்று இதுவே வடிவாயிருந்துள்ள மெய்ஞ் ஞானிகளும் குற்றம் பொருந்திய கிரியைத்தொழிலைச் செய் வாரோ? (செய்யார்.)

(குறிப்பு.) விறகைக் அழித்து எழுந்த நெருப்பில் விறகும், பாலை அழித்து எழுந்த நெய்யில் பாலும் தோன்று; அது போல, கிரியையை அழித்து எழுந்த ஞானத்தில் கிரியை தோன்றுது; ஆகலின், இங்ஙனம் உவமை கூறினர்.

கிரியை பிறவித்துன்பத்துக்கு ஏது ஆகலானும், அது ஞல் ஆன்மலாபமாகிய ஆநந்தம் இன்மையானும், "உளனத் தொழில்" என்றும், "உழைப்பாரோ" என்றும் கூறினர்.

இவை யிரண்டு திரு வெண்பாவானும் ஞானிக்குக் கிரியை செய்யவேண்டுவது இன்று என்று அறிவித்தவாறு காண்க. (கூ)

கிரியையான் ஞானங் கிடைத்தாலுங் கேடு
கருவால் வருவதுபோற் காணு—மொருகோடி
சூரியனைச் சூரிருளா லேசருட்டு னீரகில்
காரணனைத் தீண்டுகினைக் னை.

(உரை.) கிரிணையால் ஞானம் கிடைத்தாலும் கருவால் வருவதுபோல் கேடு காணும்—கிரிணைத் தொழிலால் ஞானங் கிடைத்ததாயினும், அந்த ஞானத்திற்குக் கர்பத்தின்கண் உற்பத்தியாய் வரும் பொருள்கள்போல் கேடுண்டாம்; (அஃதன்றி,)

நீர் அகிலகாரணனைத் தீண்ட நினைக்கை ஒருகோடி சூரியரைக் கூர் இருளாலே சுருட்டல்—சடசித்துக்களாயுள்ள பிரபஞ்சங்களெல்லாங் கடந்து நின்றும் அவற்றை யடத்தும் காரணனாகியிருந்த சிவனை நீர் உமது கிரிணையால் தொடர்ந்து பற்றக் கருதுவது ஒருகோடி சூரியரை மிகுந்த இருளினால் சுருட்டிப் பிடித்தல் போலும்.

(குறிப்பு.) சரியை கிரியை யோகங்கள் ஞானசாரியரை அடைதற்குப் பக்குவம் ஆக்குவன அன்றி, ஞானத்தைக் கொடா; ஆயினும், முன்விட்ட குறையால் கிரியை அநுட்டிக்குங் காலை ஓர்கால் ஞானம் தோன்றிற்றாயினும், அந்த ஞானம் ஞானசாரியரால் பெருமையாலும், தான் செய்யும் கிரியை மேலிட்டாலும் நிலைபெறாது மறையும். ஆகலின், "கிரியையான் ஞானங்கிடைத்தாலும்" என்றும், "கருவால் வருவது போற்கேடு" என்றும் கூறினர்.

ஞானத்தால் சிவத்தைப் பெறவேண்டும் என்பது அறியாது, மாயாகாரியமாகிய கிரிணையால் அதனைப் பெறத் தொடங்கலின், "ஒரு கோடியசூரியரைக் கூரிருளாலே சுருட்டல்" என்று உவமை கூறினர்.

கிரிணைய தெதுவால் ஞானம் வந்தாயினும் கண்டு இப்பி மூதலிய தமது கருவால் காசுமாவனைபோல் அந்த ஞானை மேலிட்டால் கிரிணை கெடும் என்பதாம் ஆம்.

இத் திருவெண்பாவால் கிரியை அநுட்டிக்குங்காலத் தெய்வகதியாய் ஞானம் தோன்றிற்றாயினும், அக்கிரியை மேலீட்டால் அந்த ஞானம் நிலைபெற்று நில்லாது மறையும் என்று அறிவித்தவாறு காண்க. (எ)

சுகாதீதம் வேண்டிடற் றொழில்செய்வோ மென்ரு
னகாரோ துயில்வார் நடந்தோ—விகார மெனச்
சாத்திரமும் பூசைச் சமாதிகளுஞ் சார்போதக்
கோத்திரங்கான் மாயைக் குழாம்.

(உரை.) சுகாதீதம் வேண்டின் தொழில்செய்வோம் என்றால் நகாரோ நடந்தோ துயில்வார்—ஆநந்தாதீதமாகிய வீடடைய விரும்பின், அதனை அறிவிக்கும் ஞானாசாரியரை அடைந்து அருள்ஞானம் பெற்று, இவ்வருள் ஞானத்தால் அவ் வீடடையாது விடுத்து, கிரியைத் தொழிலான் அவ் வீடடையலாம் என்று கருதி அக் கிரியைகளைச் செய்வோம் எனின், மெய்ஞ்ஞானிகள் நகைசெய்யாரோ? அஃதென் னெனின், நித்திரை பண்ணவேண்டினோர் ஓரிடத்துப் படுத்துக்கொண்டு நித்திரை பண்ணுவதன்றி, ஓரூர்வழி நடந்து சென்றோ நித்திரை பண்ணுவார்? (அஃதன்றி,)

விகாரம் எனச் சாத்திரமும் பூசை சமாதிகளும் சார் போதக் கோத்திரம் மாயைக் குழாம்—ஞானிகளோடும் மாறுபட்டதுபோன்று நீர் ஓதும் சாத்திரமும், அந்தரியாக பூசையில் ஓர் வடிவைத் தியானித்து நீர் சமாதி கூடுதலும், உமது சார்போதத்தின் கூட்டமும், மாயைக் கூட்டமும் அவை.

(குறிப்பு.) போத ஒழிவில் நின்ற சுகாதீதத்தை விரும்பினோர் கருவிகள் ஒழிந்தபோதும் அசைவறுத

போதும், அவைகளோடு கூடித் தொழில் செய்தால், நெய் சொரி தழல்போல் மேன்மேல் வளர்தலின், "சுகாதீதம் வேண்டற்றொழில் செய்கோமென்றல்" என்றும், இத் தொழிலால் அச்சுகாதீதம் பெறுதல் அரிதென்பதும் ஞானிகளறிவார் ஆகலின், "ககாரோ" என்றுங் கூறினர்.

தேகம் அசைந்து செல்லும்போது நித்திரைவரினும், அவ் வசைவு அந் நித்திரையை வரவொட்டாது தடுத்தல் போல, கருவிகள் அசைந்து தொழில் செய்யும்போது தெய்வ கதியால் ஆகந்த நித்திரை வரினும், இத் தொழில் அந் நித்திரையை வரவொட்டாது தடுக்கும் ஆகலினும், தேகம் அசைவற ஓரிடத்தைக் கிடந்தபோது நித்திரை கன்றுய் வருவதுபோல, கருவிகள் தொழில் செய்யாது அடங்கியபோது ஆகந்த நித்திரை கன்றுய் வருமாகலினும், "துயில்வார் கடந்தோ" என்றார்.

போதம் ஒன்றுயினும் அடுத்த கருவிகள்தோறும் அதனதன் மயமாய்ச் சென்றிருத்தலின், "சார்போதக் கோத்திரம்" என்று பன்மையாகக் கூறினர். "மாயைக் குழாம்" என்றதனு கருவிகளை போதமும் கருவிகளும் கூடிச் செய்தலான் இரண்டையுங் கூட்டிக் கூறினர். பாசஞானம் பசுஞானம் என்றும் ஆம்.

கான்ம - அசை.

இத் திருவெண்பாவால் கருவிகளோயும் போதத்தையும் கடந்துநின்ற சுகாதீத முக்தியை அவற்றுற் செய்யும் கிரியைகளால் அடையக்கூடாதென்று அறிவித்தவாறு (அ) கான்க.

தொழிலிறுதி தானே சுகவுதய மென்றுற் [யிலும்
றுழிலுதயந் துக்கமெனச் சொல்லோந்-தொழில்செ
வந்திப்போ கம்போல வுண்டுடுத்தன் மாத்திரமாய்ச்
சிந்திப்பா ரைப்பேணிச் செய்.

(உரை.) தொழில் இறுதி தானே சுக உதயம் என்
றுல் தொழில் உதயம் துக்கம் எனச் சொல்வோம்—இம்
மையைக் குறித்துச் செய்யும் உழவாதி அறவகைத்
தொழில்களும், மறுமையைக் குறித்துச் செய்யும் சரியாதி
தொழில்களும், வீட்டைக் குறித்துச் செய்யுங் கருவிகளை
நியதிகளாகிய தொழில்களும், அதற்குமேல் ஞாதுரு
ஞான ஞேயமாய் நிற்கும் போதஅசைவுகளும் அற்ற இடத்
தானே சிவாநந்தோதயம் என்று வேதாகமங்கள் கூறும்;
எனின், அணுவளவேனுந் தொழில் உதயமான இடத்துத்
துன்பம் உண்டாம் என்று யாம் கூறுகிலோம், ஆண்டுத்
துன்பம் உண்டென்பது தொழிலிறுதிதானே சுகவுதயப்
என்ற மொழி தானே விளக்கலின்;

(ஆயின் நீரிங்ஙனங் கூறிய ஆற்றுன் தொழில் சிற
தேனும் செய்யவேண்டாவோ எனின்,)

தொழில் செயினும் வந்திப் போகம்போல உண்
உடுத்தல் மாத்திரம் ஆய்ச் சிந்திப்பானைப் பேணிச் செய்—
இன்றி யமையாத சிற்சில தொழில்களை நீ செய்யினு
இனி மேலைக்கு வேண்டும் என்று ஒன்றையும் கருதாத
உண்டு உடுக்கும் வந்திப் போகம்போல் இம்மை மறுமை
போகங்களில் ஒன்றையும் சிந்தியாது, காடி கூழுணு
கிடைத்ததை உண்டலும் கரித்துணி கந்தையேனு
கிடைத்ததை உடுத்தலும் ஆகிய இம் மாத்திரமே சிந்திக்கு
பெரியோனைப் பார்த்து அவனைப்போல நீயும் செய்தி.

(குறிப்பு.) ஓர் தொழிலும் செய்யாது நிழற்கண் இருப்பது சுகம் என்றால் எழுந்து வெய்யலிற் சென்று தொழில் செய்தல் துன்பம் என்பது சொல்லவேண்டுவது இன்றாகின், "தொழிலுதயத் தகுமெனச் சொல்லோம்" என்றார்.

வந்தி சுகத்தைச் சுதர் இன்மையால் மேலுக்கு ஒன்றையும் குறியாததுபோல், ஞானிகட்கு இகபரங்களெல்லாம் பொய்யாகலின், இனிவரும் ஒன்றினையும் குறியார் ஆகலினும், அவள் உண்டு உடுத்தல் மாத்திரமா யிருத்தலினும் இங்ஙனம் உவமை கூறினர்.

"சிந்திப்பானைப்போனிச் செய்" என்பது, நீ தொழில் செய்தி ஆயினும் ஞானிகள் கடையைப்பார்த்து அவர் செய்யும் தொழில் மாத்திரமே அன்றி அதிகஞ் செய்யற்க என்பதனைக் கொள்க.

இத் திருவெண்பாவால் ஞானக்கிரியை மாத்திரம் மேலெப்பயன் குறியாது செய்க என்று அறிவித்தவாறு காண்க. (கூ)

சும்மா திருக்கவைத்த சூத்திரமாஞ் சாத்திரத்தை
விம்மா கதறுவதும் வேலைகளுந்—தம்மறிவா
னீட்டிடப்பிடித்திருக்கு நிட்டைகளு ஞானிகண்முன்
காட்டும் பரியா சகம்.

(உரை.) சும்மாது இருக்க வைத்த சூத்திரம் ஆம் சாத்திரத்தை விம்மா கதறுவதுப் வேலைகளும் தம் அறிவால் நீட்டிப் பிடித்து இருக்கும் நிட்டைகளும்—தற்போதத்தை ஒழித்து ஆகந்த மௌனமாயிருக்க ஏதிலைவத்த உபாயமாகிய சாத்திரங்களை விம்மி அழுது ஓதலும் நீராடல் ஆதி கிரியைகளைச் செய்தலும், தமது போதத்தால் ஓர் வழிவைத்து நியா

னித்து உடலை நீட்டிப் பிடித்து ஆசனங் கட்டியிருக்கும் நிட்டைகளும் ஆகிய இவை எல்லாம்,

ஞானிகள் முன் காட்டும் பரியாசகம்—இவைகள் ஒன்றும் இன்றி மௌனஞ்தமாயிருக்கும் மெய்ஞ்ஞானிகளின் முன்னர்க் காட்டப்பட்ட பரியாசகமாம்.

(குறிப்பு.) வேதாகம வழிகூறும் ஞானசாத்திரங்களெல்லாம் தற்போதத்தை ஒழித்துச் சிவமாயிருத்தற்கு உபாயங் கூறும் ஆகலின், "சும்மாதிருக்கவைத்த சூத்திரமாஞ் சாத்திரத்தை" என்றும், ஞானசாத்திரத்தின் அருத்தங்களை நாடிக் கலுழ்தலான், "வீம்மா" என்றும் அவ்வருத்தப்படி நில்லாமையான், "கதறுவதும்" என்றும், கிரியைகள் யாவும் அறிவன்று ஆகலின், உலகர் வேலையோடு இதுவும் ஓர் வேலை ஆகலினும், "வேலைகள் என்றும் தற்போதத்தால் கூடும்நிட்டை ஞானநிட்டை அன்மையால், "நீட்டிப் பிடித்திருக்கு நிட்டை!" என்றும், இவையெல்லாம் ஞானிகட்குப் பரியாசகமா யிருத்தலின், "பரியாசகம்" என்றுங் கூறினர்.

"தம்மறிவா னீட்டிப் பிடித்திருக்கும்" என்றமையான், அருளறிவால் நிட்டைகூடுதல் நிட்டை என்பதாயிற்று.

இத் திருவெண்பாவால் போதம் இறந்து நிற்பதே நிட்டை என்றும், போதத்தோடுங்கூடிச் செய்வது நிட்டை அன்றென்றும் அறிவித்தவாறு காண்க. (கo)

குடையுஞ் செருப்புங் கொடுநடப்ப தல்லாற்
படியும் விசும்பும் பரப்பி—யிடையாடு
மாத்திரம்போ லேசமய வாதமனம் போதாத்
சாத்திரங்கற் றூர்வீடற் றூர்.

(உரை.) குடையும் செருப்பும் விசாகப்பெருமான் அலலால் படையும் விசும்பும் பாப்பி இடை ஆடும் மாத்திரம்போலே— ஒன் வலருக்குச் செல்லலேவன்மடிதேரன் உடம்பில் மழை வெயில் வாதிகள் படாது கையில் குடையும் பிடித்துக்கொண்டு, காலில் கல் முள் மண் தாக்காது செருப்பும் தொட்டுக் கொண்டு கடப்பதே அன்றி ஆகாயமெங்கும் குடை பரப்பிப் பூமியெங்கும் தோல்பாப்பி அலற்றிக்க இடையே செல்லு மாத்திரம்போலே,

சமயவாதம் மனம் போகாத சாத்திரம் கற்று வீடு உற் றார் ஆர்—சமயிகள் காலுவாக்குடனும் தருக்க வாதங்களை யும், அத் தருக்க வாதத்தால் அதக்க பேதமாய்த் தோற்றும் மீளு உத்திரவோயும் அளவு கடறியும் அவ்வளவு போதாத சாத்திரங்களைக் கற்று வீடைடுச்சார் யாவர்?

(தரிப்பு.) ஒன் மயனை ஆடையுக்குருதிரேன் மேலுக் கும் காலுக்கும் ஆங்காம் ஆகாயவலைக குடையும் செருப்பும் பிடித்திட்டுவெகாண்டு செல்ல அவ்வுலை அடைவதுபோல், வீடையடையுக்குருதிரேன் ஆசாரியர் கூடும் உபதேச மொழி குருவும் அவர் வெளிக்கும் ஒன் சாத்திரமும் கொண்டு, அவற் றின் அருத்தப்படி திருகாணைக்களால் ஒன்றையும் வருந்திச் செய்யாது கற்போதத்தையே தரித்து அவ் வீட்டை அடை யாது, அளவிடப்படாத ஆகாயத்திலும் பூமியிலும் குடையும் தோளும் பாப்பி காலிடைச்செல்லத் தொடங்குவானைப் போலும், தருக்க வாதங்களையும் அவ் வாதத்தாலெழும் மதிரையும் திகோயும் ஆளவிடப்படாத சாஸ்தி ரங்களைக் கற்று நீர் வீடையடையத் தொடங்குவது என்பதும், சில கற்பிலும் ஆசாரம் வீர கூடாதென்பதும் இதனுற் காண்க,

சாத்திரங்களை மிகவுங் கற்றோர்க்குத் தருக்க வாதி மும் மதுவுத்தியும் மிகவும் விரியும் ஆகலின், சாத்திரங் கட்கு அளவு கூறுவார் வேறு கூறாது அவற்றையே அளவு கூறினர்.

வாதம் என்பதும் மணம் என்பதும் ஆகுபெயர்.

இத் திருவெண்பாவால் அபாஞானத்தால் வீடடையக் கூடாது என்று அறிவித்தவாறு காண்க. (கக)

அறிவாலே பற்றி யனுபவித்து விட்ட
கிறியால் வருமோ கெடுவீ—ரறிவாய்நீர்
ஆம்போ தறிவிப்பான் ருரு யவையிரண்டும்
போம்போதும் வாராப் பொருள்.

(உரை.) அறிவாய் நீர் ஆம்போதும் அறிவிப்பான் தான் ஆய் அவை இரண்டும் போம்போதும் வாராப்பொருள்— கருவிகள் முப்பத்தாறையும் நீங்கி அவற்றின் முடிவில் நின்ற அறிவு யாம் என்று அவ்வறிவாய் நோகும்போதும் உம்மை யும் தன்னையும் அறிவிப்பான் தாளுகி, அந்த அறியும் அறி வும் அறிவிக்கும் அறிவும் ஆகிய இவை இரண்டும் நீங்கிய போதும் வாராத சிவனுகிய மெய்ப்பொருள்,

கெடுவீர் அறிவாலே பற்றி அனுபவித்து விட்ட கிறி யால் வருமோ—கெடுவீர்காள்! தற்போத அறிவால் ஒன் றைப் பாவித்துப்பற்றி, இஃது இங்ஙனம் இருப்பது என்று அப்போதத்தால் அநுபவித்து அறிந்து, மீட்டும் அப்பாவ னையை விடுத்த பொய்யினல் வருமோ?

(குறிப்பு.) பாவனையில் தோன்றும் வடிவு மாயை, அவ்வடிவில் இதம் பிறத்தல் கருமம், அவ்வடிவை மெய்யா

கக் கருதப்பண்ணுவது ஆணவம் ஆகலின், "கிரியாவ் வருமோ கெடுவீர்" என்றார்.

அருளும் ஆன்மபோதமும் நீக்கியபோது ஆன்மா சிவ மயமாயிருக்கும் ஆகலின், "அவை யிரண்டும் போம்போதும் வாராப்பொருள்" என்றார்.

இத் திருவெண்பாவால் அருளையும் போதத்தையும் கடந்துநின்ற சிவம் போதத்திற்கு அகப்படாதென்று அறி (கஉ) வித்தவாறு காண்க.

அழிப்பே யவனுக்கு மிச்சையது வாணை
ழிழப்பே யுனக்கிச்சை யென்னை—யிழப்பை
யறியா ததுகா ணறியாவவ் ஞானங்
கிறிகேளுன் போதங் கெடல்.

(உரை.) அழிப்பே அவனுக்கும் இச்சை அது ஆணவ இழப்பே உனக்கு இச்சை என்னுய்—உன் போதத்தை ஒழிப்பதே சிவனுக்கும் இச்சை, அவனது இச்சாசத்தி தொழிலும் அதுவாலுல், அவனது இச்சைபோல் உன் போதத்தை ஒழிப்பதே உனக்கும் இச்சையாகக் கருதுவாய், (நீ வீடடைய விரும்பினை எனின்;)

(ஆயின் நீர் இங்ஙனங் கூறியவாற்றுல் அஞ்ஞான கெடுதல் வீடு அன்றென்பதும், போதங் கெடுதல் வீடு என் பதும் ஆயிற்று. இனி அஞ்ஞானமாவது யாது எனின்,)

இழப்பை அறியாததுகாண் அறியா அஞ்ஞானம் கி உன்போதம் கெடல் கேள்—அப்போத இழப்பை அறியாத கினியையாதிகளை நீ செய்தலே அறியாமையாகிய அஞ்ஞா மென்று அறிதி. (ஆயின், அப்போத இழப்பை அறிதற்

உபாயம் எங்ஙனம் எனின்,) பொய்யனே! இனி உன் போதங் கெடுதற்கு உபாயம் சொல்லுதும் நீ கேட்டி.

(தறிப்பு.) சிவன் பெத்த திசையில் உடலை ஒழித்து மாயையில் வைத்து இளைப்பாற்றுதல்போல், முத்தி திசையில் போதத்தை ஒழித்து ஆனந்தக்கடலில் வைத்து இளைப்பாற்றுவனையினும், அவன் ஒழிக்கும் இச்சைபோல் தன்னை இழக்கும் இச்சைவைத்த ஆன்ம போதத்தை ஒழிப்பன் அன்றி, அப்போதத்தை ஒழிக்கும் இச்சையின்றிய ஆன்ம போதத்தை ஒழியாதலகின், "இழப்பே யுனக் கிச்சை யென்னாய்" என்றார்.

இத் திருவெண்பாவால் கற்போத காசத்தை விரும்பினோர்க்கு மெய்ப்பொருள் கிடைக்குமென்று அறிவித்த வாறு காண்க.

(கக)

மருந்து பிணியோடே மாண்டு புகைதீ
யெரிந்த விறகோ டிறக்கில்—விரிந்த
தொழின்மனத்தின் மட்டேநீ தோயுமதென் னுடி
நிழல்புதைத்தாற் போலெதிர்போய் நில்

(உரை.) மருந்து பிணியோடே மாண்டு புகை தீ எரிந்த விறகோடு இறக்கில்—பிணிமாண்டபோது அது நீங்கற்பொருட்டு உண்டமருந்தும் அப்பிணியோடு மாண்டு போம் எனில், எரிந்த விறகு இறந்தால் அவ்விறகோடு புகையும் தீயும் இறக்கும் எனில், அவைபோல், உன்போ தம் இறந்தால் அப்போதத்தோடு கிரியை இறக்கும் என்றும், கிரியை இறந்தால் அதனோடு கருவியும் போதமும் இறக்குமென்றும் அறியாது உன் போதத்தால் கிரியை செய்யாதின்றனை;

விரிந்த தொழில் மனத்தின் மட்டே காடி தோயுமது
சின் நீ நிழல் புதைத்தால்போல் எதிர்பொய் நில்—காலை
வாய் விரிந்த உனது கிரியைத் தொழில்கள் மனத்தினளவே
அன்றி வேறு இன்று ஆகலின், கருவிகள் மூப்பத்தாறை
யும் போதத்தையுங் கடந்துநின்ற சிவத்தைக் கிரியை எது
வாக்கொண்டு அப்போதத்தால் காடி, அச்சிவத்தை அடை
யத்தொடங்கும் உன் கருத்து என்னை? நீ அக்கருவிகளை
யெதிகளைந்து அவற்றின் மூடிவில் நின்ற உன்னை அருளால்
அறிந்து, பெரிய நிழலில் சிறிய நிழல் மறைந்தாற்போல் நீ
சுத்திருவருளில் மறைந்து எதிரிடல்லாம்போய் நிற்றி;
(இங்ஙனம் நிற்றி எனின், போதம் ஒழித்தற்கு உபாயமும்
சிவத்தைப் பெறுதற்கு உபாயமும் இதுவேயாம்.)

(தெளிப்பு) போதம் தோன்றியபோது கிரியைதோன்
றும், அப்போதம் சிவத்தில் இறந்தபோது அப்போதத
தோடும் கிரியை இறக்கும். ஆகலின் போதத்தைப் பிணி
யாகவும், கிரியையை மருந்தாகவும் வைத்துக் கூறினர்.

விறகு எவ்வளவு இருந்தது அவ்வளவும் புகையும் தீயும்
இறவா, அவ்விறகு இறந்தபோது அதனோடு புகையும் தீயும்
இறக்கும்; அதுபோல கிரியை எவ்வளவு இருந்தோ அவ்
வளவும் கருவிகளும் போதமும் இறவா, அக் கிரியை சிறிதும்
தோன்றுது இறப்பின் அதனோடு இக் கருவிகளும் போத
மும் இறக்கும் ஆகலின், "புகைதீ யெரிந்த விறகோடதக்
கில்" என்றார்.

கிரியை இறந்தபோது கருவிகளும் போதமும் இறக்கு
மென்றது எங்ஙனம் எனின்? கிரியை இருந்தபோது போதம்
வளர்வதே அன்றி இறவாது. அக்கிரியை இறந்தால் போதத்
திற்கு அவசியம் கெடும். இப்போதம் கெடவே

இதனைத் தொடர்ந்து நின்ற கருவிகளும் தெரிம். ஆகவின், இங்ஙனமென்று அறிந்தி.

பெரிய நிழலில் சிறிய நிழல் புறம்போகாது அடங்கின் மறையுமதுபோல் பூரணமாகிய சிவபோதத்தில் கிஞ்சிக்கிய மாகிய ஆன்மபோதம் எதிரிட்டணையாது அடக்கின் அதில் மறையும் ஆகலின், " நிழல் புணைத்தாற்போல் " என்றார்.

நீங்கின்ற கருவிகளையும் அடைந்தின்ற திருவருளை யும் எதிரிடாது நிற்கவேண்டி மாகலின், " எதிர்போய் நில்" என்றார்.

இத் திருவெண்பாவால் போதம் அடக்குதற் குபாயங் கூறியவாறு காண்க. (கச)

காணு மறிவுநீ காட்டறிவு நாமவற்றைக்
காணைக் கழலுங் கழற்றியிலே—நாணி
நமைத்திரும்பிப் பாராதே நான்றுனென் றுதே
யமிழ்த்துகர கம்போனிற் பாய்.

(உரை.) காணும் அறிவு நீ காட்டும் அறிவு நாம் அவற் றைக் காணைக் கழலும் கழற்றியிலே—கருவிகளை அது இது என்று காணும் அறிவு நீ, அவற்றை உனதுயிர்க்கு உயிரா யிருந்து உனக்குக் காட்டும் அறிவு நாம், அக் கருவிகளினது குணங்களை நீ காணைக் காண அவைகள் எவ்வாம் உனக்கு அன்னியமாய் நீக்கும் நீக்கத்தில் அவற்றின் முடிவில் நின்ற உன்னைக் கண்ட பின்னர்,

காணி நமைத் திரும்பிப் பாராதே நான் தான் என்றதே அமிழ்த்து காகம்போல் நிற்பாய்—யான் காணும் அறிவு ஆகவின், அக் கருவிகளை அறிந்து நீக்கவும் என்னை உள்ளபடி அறியவும் எனக்குச் சுதந்தரம் இன்று என்று நீ காணி எனக்

குக் காட்டும் அறிவு ஒன்று உளது என்று கம்மை எதிரிட்டுப் பாராதே; அங்ஙனம் காணு மறிவும் காட்டும் அறிவுமாய் இருந்தோம் ஆயினும், கண்ணொளியும் ஆதித்தன் ஒளியும் பிரிபடாததுபோல் பிரிபடாதிருப்போம் ஆகலின், அஃதன்றி இங்ஙனம் பிரிபடாதிருந்த பரிபூரணத்தை நான்தானென்று கருதாதே; கடலில் அமிழ்த்திய கரகம் சலத்தை உள்ளே மொண்டு அக் கடலில் மறைந்தாற்போல், நீயும் அப் பரிபூரணத்துக்குள்ளே அமிழ்ந்தி நீ தோன்றாது அதனுள் மறைந்து நிற்பாய்.

(குறிப்பு.) கருவிகளினது குணங்களை எதிரிட்டு அறியாதபோது அவைகள் ஆன்மாவிற்கு அன்னியமாய் நீங்காவாகலின், "காணக்கழலும்" என்றார்.

கருவிகளை எல்லாம் நீங்கி ஆன்மா அருள்வடிவாயபோது அவ்வருட் பூரணமெல்லாம் தாழ்ந்து தோற்றலாகலின், "நான்றானென்னுதே" என்றார்.

இத் திருவெண்பாவால் கருவிகள் நீங்குதற்கு உபாயமும் அவற்றை நீக்கித் தன்னை அருளால் உணர்ந்து அருட் பூரணம் விளங்கியபோது போதம் சிவியாது அருள்ளறைந்து நிற்றற்கு உபாயமும் அறிவித்தவாறு காண்க.

வதுவைச் சடங்கதனை மைதுனமாக் கொண்ட
புதுமைச் சிவானந்தம் போதும்—பதையா
விளக்கொளியி லெண்ணெய் வியாபியா லுற்போற்
கொளக் கொடுத்தல் சத்தியமாக் கொள்.

(உரை.) வதுவைச் சடங்கதனை மைதுனமாகக் கொண்ட புதுமைச் சிவானந்தம் போதும்—தன் புருடனைக் கூடி இன்புறுதற்கு வதுவாகச் செய்யும் கலியாணச் சடங்கினை அவளேறும் கூடி இன்புறுதலாகக் கருதிக்கொண்ட

ஐந்தாம் அதிகாரம்

சரியைக் கழற்றி

நடந்துங் குளித்துமிது நல்லாநா ளுனை
விடுந்தொழிலான் மெய்வருந்தி வீடென்-றடங்காதா
ரென்றுசுக மேயிருப்ப ரிப்போதே துக்கமிவர்க்
கென்றெதிர்போ யின்பமுதிக் கும்.

(உரை.) நடந்தும் குளித்தும் இது நல்ல நாள் உனை விடும் தொழிலால் மெய்வருந்தி வீடு என்று அடங்காதார்—பூப்பிரதக்கிணமாய் நடந்து சென்றும், கங்கை முதலிய தீர்த்தங்களாடியும், இது நல்ல நாள் என்ன உனை விடுத்தும், இவை முதலியன செய்யும் சரியைத் தொழிலால் மெய்வருந்தி, இங்ஙனம் செய்வனவே வீடென்று துணிந்து தற்போதம் அடங்காதார்,

என்று சுகமே இருப்பர் இப்போதே துக்கம் இவர்க்கு என்று எதிர்போய் இன்பம் உதிக்கும்—எக்காலம் ஓர் தொழிலையும் செய்யாது சுகமே இருப்பர்; இத்தொழில்கள் இவர்க்கு இம்மைக்கண்ணே துன்பம், இத் தொழில் வாசனை மறுமைக்கண்ணும் தொடரும் ஆகலின், எக்காலும் தான் என்றும் சிவம் என்றுஞ் எதிரிடும் போதம் ஒழிந்து ஆநந்தம் தோன்றும் ?

(குறிப்பு.) தாம் குறித்தது வீட்டின்பமா யிருந்தும் அதனைப் பெறுதற்கு எது அல்லாத சரியைத்தொழிலை மிகவும் மெய்வருந்திச் செய்தலான், அவ்வின்பத்தைப் பெறுதற்கு ஏதுவாய்த் தற்போதத்தையும் எளிதில் ஒழித்து,

அதனை எக்காலம் பெறவதோ என்னும் காருணியத்தால், "என்றெதிர்போ யின்பழுதிக்கும்" என்றார்.

இத் திருவெண்பாவால் வீடடையத் தொடங்கினர் அறியாமையான் இத்தொழிலைச் செய்து வருந்துகின்றார். அந்தோ என்று இரங்கிக் கூறியவாறு காண்க.

உடலா லுழைத்தா லுடலொழிபு மென்று
கெடுவீ ரிதையெங்கே கேட்டீ—ருடலே
நடையா டியபிணம்போ னன்போய்த் திரியக்
கிடையாதோ வென்றுகே ளீர்.

(உரை.) உடலே நடை ஆடிய பிணம்போல் கான் போய்த் திரியக் கிடையாதோ என்று கேளீர்—இந்த வுடல் தானே நடையாடிய பிணம்போலத் தற்போதம் கெட்டு நிலத் தின்கண் உலாவ எமக்கு உண்டாகாதோ என்று ஞாலசாரி யரைக் கேளாத நீங்கள்,

கெடுவீர் உடலால் உழைத்தால் உடல் ஒழியும் என்று இதை எங்கே கேட்டீர்—கெடுவீர்காள், உடலால் வருந்தி யாத்திரை சேறல் முதலிய இச்சரியையைத் தொழிலைச் செய்தால் பிறப்பு நீக்கும் என்று இந்த உபதேசத்தை எந்தக் குருவினிடத்துக் கேட்டீர்?

(குறிப்பு.) ஞாலசாரியரை அடைந்து அனுக்கிரகம் பெற்ற மெய்ஞ்ஞானிகட்குக் கருவிகள் மூப்பதாறும் தற் போதமும் கெடலான், அக்கருவிச் சேட்டையும் போதச் சேட்டையும் இன்றாம்; ஆகலின், அவரது திருமேனி உள் ளாம் புறவுலகம் வழங்கடத்து ஆகாயம்போல் சிவமே நிறைந் திருக்கும்; அவர் நிலத்தில் சரிக்கும்போதும் அக்கடம்

ஆகாயத்திற் செல்வதுபோல் தோற்றும்; ஆகலின், "கடை யாடிய பிணம்போனன் போய்த்திரிய" என்றார்.

கேளீர் எங்கே கேட்டீர் என முடிக்க.

வீடடையத் தொடங்கி இங்ஙனம் செய்தலால் "கெடுவீர்" என்றார்.

இத் திருவெண்பாவால் அவர் கேட்ட உபதேசத்தை மறுத்தவாறு காண்க. (உ)

எந்தவூர் நீரென்ற லிப்போ திருந்துநாம்
வந்தவூர் தன்னை மறந்தோமேல்—அந்தவூர்க்
கின்றுநாம் போம்வழியே தென்னிலுமக் கேழுலகு
மொன்றுபோ லொன்றுதோன் றும்.

(உரை.) நாம் எந்த ஊர் நீர் என்றால் இப்போது இருந்து வந்த ஊர் தன்னை மறந்தோமேல்—யாம் இந்த ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் சென்றபோது, அவ்வூரில் இருந்தான் ஒருவன் எந்த ஊர் நீர் என்று எம்மைக் கேட்டால், இப்போது இருந்துவந்த ஊர்தன்னை அவனுக்கு இன்ன ஊர் என்று சொல்ல மறந்தோம் எனின்,

அந்த ஊர்க்கு இன்று நாம் போம் வழி எது என்னின் உமக்கு ஏழுலகும் ஒன்றுபோல் ஒன்று தோன்றும்—முன்னிருந்து வந்த ஊருக்கு இப்போது நாம் போவதற்கு வழி யாதென்று நீர் நாடின், உமக்கு ஏழுலகும் ஒன்றுபோல் தோன்றி அந்த ஊருக்குச் செல்லும் வழிபோல் மற்றோர் ஊருக்குச் செல்லும்வழி தோன்றும் (எனின், இங்ஙனம் கேட்டோனுக்கு ஊர்ப்பெயரும் சொல்ல மறந்து அவ்வூருக் குச் செல்லும் வழியும் தெரியாது மயக்கிய இப்போதம்

கொண்டோ திரிகரணங்களையும் கடந்து நின்ற பூரண சிவத்தை நீர் அடையத் தொடங்கினீர்?)

(தெளிப்பு.) அவர்க்குத் தம்மைபோல் இவரும் தோற்றலான், அவரை இவர் தம்மோடுங் கூட்டி "மறந்தோமேல்" என்றார்.

ஊர்ப்பெயர் சொல்ல மறந்துபோயது தூலபுத்தியால் தெரியாது யாம் அங்ஙனம் மறப்பது இலம் என்று அவரைத் தம்மைவிடப் பிரித்து நோக்கி, உமக்கு எழுலகும் ஒன்று போல் ஒன்றுதோன்றும் எனத் தூலமாகிய வழித்திணைப்பை எடுத்துக்காட்டினர்.

நெறிக்கண் திசைதப்பியபோது மூன்போல் நான்கு திசையில் பிரிந்து தோன்றுது ஆகலின், "எழுலகுமொன்று போல்" என்றார்.

இத் திருவெண்பாவால் ஞானசாரியரால் அன்றி ஆன்மாக்கள் சுதந்திரத்தால் வீடடையக்கூடாதென்றும் சுதந்திரகீனம் மறிவித்தவாறு காண்க. (கூ)

வேட்டியுந்தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்
[லுங்
காட்டுவது ஞானக் களவுகாண்—தேட்டமற்றோன்
பூரணன்காண் சிற்றறிவன் பொய்ப்பாச மென்றறிந்
தோர்வடிவும் வார்த்தையுமூண் டோ. [தார்க்

(உரை) வேட்டியும் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லும் காட்டுவது ஞானக்களவு—காவிவேட்டியும், உருத்திராக்கத் தாழ்வடமும் மெய்ம்முழுதும் பூசும் வெண்ணீறும் அடைக்காய் தின்றுத வெண்பல்லும் இவை முதலிய சிவவேடங்களை மெய்யிற் காட்டுவது ஞானத்திருட்டு;

தேட்டம் அற்றோன் பூரணன் சிற்றறிவன் பாசம்பொய் என்று அறிந்தார்க்கு ஓர் வடிவும் வார்த்தையும் உண்டோ—ஓர் பொருட்கண்ணும் விருப்பம் அற்றோருகிய சிவன் பரிபூரணன், சீவன் சிற்றறிவன், பாசம் பொய் என்று அறிந்த ஞானிகட்கு ஓர் சமய வேடமும் சமயாபிமான வார்த்தையும் உளவோ? இல.

(குறிப்பு.) அகத்து ஞானம் இன்றிப் புறத்து வேடத்தானும் வசனத்தானும் ஞானிபோற் காட்டினமையால், "ஞானக் களவுகாண்" என்றார். அகத்து ஞானமும் புறத்து வேடமும் உள எனின், ஞானக்களவு அன்று என்றுயிற்று.

சிவம் அணுத்திரள் முதலிய பொருள்கட்கெல்லாம் உட்புறமுகிய பரிபூரண அறிவாகலின், அதற்கோர் சமயம் இல்லை. சிற்றறிவு பொய்யாகிய பாசத்தை விட்டுநீங்கி அப் பரிபூரண அறிவோடும் கலந்தபோது, அப்பரிபூரண அறிவாய் நிற்கும் அன்றி, அது இது என்னும் பகுப்பில்லை ஆகலின், "ஓர் வடிவும் வார்த்தையுமுண்டோ" என்றார்.

காண் - அசை.

இத் திருவெண்பாவால் வேடத்தால் மிகவும் சிறப்புள்ளாராயினும், அகத்து ஞானம் இலர் எனிற் சிறப்பிலர் என்பதும், வேடம் யாதும் இலாயினும் அகத்து ஞானம் உள்ளார் சிறப்புளர் என்பதும் அறிவித்தவாறு காண்க. (சு)

கல்வியாய்ப் புத்தகமாய்க் காவிகடுக் குட்கட்டாய்ப்
பல்லின் வெளுப்பொத்த பசுமார்க்க—மெல்லிய
கழுன்ற தியானத்திற் கண்சிமிட்டு மாங்காண்
கழுன்றபெரு மாயைத் தொழில்.

(உரை.) கல்வி ஆய்ப் புத்தகம் ஆய்க் காவி கடுக்குள் கட்டு ஆய்ப் பல்வின் வெளுப்பு ஒத்த பசுமார்க்கம்—தாம் கற்ற கல்விகளைப் பேசுவதாய்ப் புத்தகம் கையிற் கொள்வ தாய்க் காவிவேட்டி உடுப்பதாய்த் திருமேனிக் கடுக்கன் காதிலே இடுவதாய்க் கண்டகத்தில் கௌவடம் கட்டுவதாய்ப் பேச்சிற்கும் வேடத்திற்கும் எற்பப் பல் வெளுப்பும் ஒத் திருந்த பசுஞான கெறியினை உடையார்,

எல்லை கழன்ற தியானத்தில் கண்சிமிட்டும் ஆம் சுழன்ற பெருமாயைத் தொழில்—பிருதிவிமுதல் நாதம் ஈறு என்ற அளவு கூறப்பட்ட கருவிகள் முப்பத்தாறையும் கழன்ற சிவத்தியானத்தை உடையவரைப்போலக் கண்மேற் செருகி ஆசனங் கட்டிக்கொண்டு இருப்பர்; இவர் இங்ஙனம் இருப் பதாம் கறங்குபோல் சுழலாநின்ற பெரிய மாயையினது தொழிலாவது.

(குறிப்பு) ஞானம் இன்றி வேடங் கொண்டோர் வேடதாரிகளோடு ஒப்பு ஆகலின், "பசுமார்க்கம்" என்றார்.

அகத்துப் பரிபூரணஞானம் இன்றிக் கண்சிமிட்டிப் பத்திந்திரியங்களையும் அப்போதடக்கி ஆசனங்கட்டி இருப் போர்க்கு, முன்னர் ஞானேந்திரியங்களால் அறிந்து, கன் மேந்திரியங்களால் தொழில்செய்யும் மனம், அப் பத்திந்திரி யங்களும் அடங்களின் அவற்றின் வாசனையோடும் முன்னர் எறிய வாசனையோடும் உள்ளே சுழலும் அன்றி அடங்காது ஆகலின், "சுழன்ற பெருமாயைத்தொழில்" என்றார். கான் - அசை.

இத் திருவெண்பாவால் ஞானநிட்டை யின்மையான் அவாதது நிட்டையை மறுத்தவாறு காண்க. (நி)

ஞானக் கிரியை நடிப்பவர்க்கு நாடோறும்
போனத் தளவே புசிட்டன்றி—யேனந்
துறவா யவாவறுத்து மெய்யுணர்ந்த தூய
வறிவார்க் கறியாவின் டம்.

(உரை.) ஞானக்கிரியை நடிப்பவர்க்கு நாள்தோறும் போனத்து அளவே புசிப்பு அன்றி—அகத்து ஞானம் இன்றிப் புறத்து ஞாலசாரமாய் நடிப்பவர்க்கு எக்காலமும் அன்னபானத்தளவு வரும் விடயானந்தானுபவம் அன்றி,

துறவு ஆய் அவா அறத்து மெய் உணர்ந்த தூய அறிவார்க்கு அறியா இன்பம் என் ஆம்—துறவினை உடைய ராகித் துறந்த அப்பொருள்கள்மேல் மூன்னர் வாசனையால் எழும் அவாவினை அறத்து மெய்ப்பொருளை உணர்ந்த நிருமல ஞானிகட்கும் தோன்றுத சொரூபாநந்தானுபவம் என் உண்டாம் ?

(குறிப்பு.) இவர் செய்யும் ஆசாரத்தைப் பிறர் கண்டு பெரியர் எனப் போனகங் கொடுத்தலின், "போனத்தளவே புசிப்பன்றி" என்றார்.

பரின்பம் போதநாசத்தில் தோன்றுமல் தோன்றலான், "அறிவார்க் கறியா வின்பம்" என்றும், இவ்வின்பம் பெறுதற்கு ஏதுவாய் ஞானம் இன்மையால், "எனும்" என்றுங் கூறினர்.

துறவு - புறப்பற்று நீங்குதல். அவாவறுத்தல் - அகப்பற்று நீங்குதல். இவ்விருவகைப் பற்றும் நீங்கவே சகல கேவலங்களும் நீங்கும். இவை நீங்கவே மெய்யுணர்வு தோன்றும். ஆகலின், "துறவா யவாவறுத்து மெய்யுணர்ந்த தூயவறிவார்" என்றார்.

போனகம் என்பது போனம் என்றுயிற்று.

இத் திருவெண்பாவால் ஞானம் இன்றி ஞானசாதாரமாத்திரம் செய்வோர்க்குப் பிறப்பின்பமே அன்றி வீட்டின்பம் இன்றென்று அறிவித்தவாறு காண்க. (சு)

இந்த இன்பம் யாவராலறியக்கூடுமென்று இரங்கிக் கேட்ட மாணாக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.

இன்பே யறிவுக் கிடம்புள்ளி னேந்தது போற் [த்தாற்
றுன்பே யணுப்பொருப்பாய்த் துக்கிக்கும்-நன்குணர்
போரின்புக் கிச்சை பிறந்ததினிக் கேளுனக்குப்
போரின்பந் தேடிப் பெறுப்

(உரை.) இன்பே அறிவுக்கு இடம்—இந்தப் போரின்பம் பரிபூரணம் ஆகலின், இவ்வின்பமே ஆன்மா இருத்தற்கு இடம்;

(ஆனால் அவ்வின்பம் இங்ஙனம் இருக்கும் எனின், அதனை யான் இப்போது உணரவேண்டும், இனிப் பிறவித்துன்பஞ் சிறிதும் படமாட்டேன் என்ற மாணாக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.)

புள் இனைந்தது போல் துன்பே அணுப்பொருப்பாய்த் துக்கிக்கும் நன்குணத்தால் உனக்குப் போரின்புக்கு இச்சை பிறந்தது இனிக் கேள் போரின்பம் தேடிப் பெறுப்—உயிர்ப்பு ஒலி சிறிது தோன்றினும் அதனைப் பேரொலியாகக் கண்டு அசுணப்புள் வருந்தியதுபோல், சீ இத்தேகாதி பிரபஞ்சங்களான் வரும் துன்பம் அணுவளவாயினும் அதனைப் பொருப்பளவாகக் கண்டு துன்புறும் நற்குணத்தால் உனக்கு இப்போது போரின்பத்தின்மேல்

யுணர்ந்த தூயவறிவார்" என்றார்.

இச்சை சனித்தது ; ஆகலின், இனி அதனை அடைதற்கு உபாயம் சொல்லுதும் கேட்டி, அப் போன்பத்தை யாம் கூறிய உபாயப்படி தேடிப் பெறுதி.

(குறிப்பு.) விடயசுகத்தைத் துன்பம் எனக் கூறினர் ; இதனை அங்ஙனம் கண்டோர்க்குச் சொரூப சுகத்தின் மேல் இச்சை சனிக்கும் ஆகலின், "துன்பே யணுப்பொருப் போய்த் துதிக்கு நன்குணத்தாற் போன்புக் கிச்சை பிறந் தது" என்றார்.

இத் திருவெண்பாவால் போன்பத்தை விரும்பிக் கேட்ட மாணாக்கனுக்கு விடை கூறியவாறு காண்க. (எ)

போன்ப முன்னைப் பிரியாதுன் னுண்மையம்ம
தோன்ப மாய்விடயத் தூடுதிப்பும்—போன்
பழிவிலே தோன்று மறிவு மயலா
மொழியு மிரண்டின்ப மும்.

(உரை.) போன்பம் உன்னைப் பிரியாது அது உன் உண்மை—அந்தப் போன்பம் உன்னைவிட்டு எக்காலமும் ஓர் அணுவளவேனும் பிரியாதிருப்பது, அவ் வின்பமே உனக்கு உரித்தாய மெய்ம்மையாய் உள்ளது ;

(அங்ஙனம் என்னைவிட்டு நீங்காது எனக்கு உரித்தாய மெய்ம்மையாய் இருப்பது எனக்குத் தோன்றுது இருப்பானேன் எனின்,)

ஓர் இன்பம் ஆய் விடயத்தூடு உதிப்பும் போன்ப அழிவிலே தோன்றும்—உன்னல் அறியப்பட்டு ஓரின்பமாய் வனிதையர் விடயத்தூடு தோன்றுவதும் யாம் கூறிய அந்தப் போன்பமும் எதிரீடு அற்ற இடத்துத் தோன்றும் ;

அறிவும் அயல் ஆம் இரண்டு இன்பமும் ஒழியும்—ஆணறிவும் பெண்ணறிவும் எதிரிட்டபோது அவ் வறிவுகளும் அயலாம், (ஆண்குறியும் பெண்குறியும் எதிரிட்ட போது இக் குறிகளும் அயலாம், இவைகள் அயலாகவே இவ் விருவகைக் கூட்டுறவுகளால் வரும்) இரண்டின்பங்களும் அயலாய் ஒழியும்.

(குறிப்பு.) ஆண்குறியும் பெண்குறியும் கலந்து எதிரிட்டழிந்தபோதும், ஆணறிவும் பெண்ணறிவும் கலந்து எதிரிட்டழிந்தபோதும், அவ் வின்பமும் இவ் வின்பமும் தோன்றலான், "அறிவிலே தோன்றும்" என்று இருமைக்கும் பொதுவாகக் கூறினர்.

குறிகளும் அறிவுகளும் எதிரிட்டபோது இன்பம் இன்மையால், "ஒழியுமிரண்டின்பமும்" என்றார்.

இருவகைக் குறிகளும் கலந்தபோது அவை இருந்தும் தோன்றுது அழிதலானும், ஆண்குறி பெண்குறிக்கு உள்ளீடா யிருத்தலானும், இன்பம் தோற்றலானும் அவற்றினது கூட்டுறவை இவற்றினது கூட்டுறவிற்கு உவமையாகக் கூறினர்.

"அறிவும் அயலா" மென்ற உம்மையால் ஆண்குறி பெண்குறிகளும், "அறிவிலே தோன்று" மென்றமையான் அழியாது எதிரிட்டபோது என்பதும் வருவிக்கப்பட்டன.

விடயாகந்த மேலீட்டால் பாவசமாவதுபோல் சொரூபாகந்த மேலீட்டால் பாவசமாவதுங் கொள்க.

இத் திருவெண்பாவால் பேரின்பம் ஆன்மாவை விட்டு நீங்காது என்பதும், அதனைப் பெறுதற்கு உபாயமும் கூறியவாறு காண்க. (அ)

விடயாகந்தம் அறிதல்போல் அவ்வானந்தமும் அறியக் கூடாதோ எனின், மேற் கூறுகின்றார்.

விடய முதித்துநின் றுவிட்டவிடங் கீழ்மே
லிடைவிடா தேநிறைந்த வின்பந்—தொடுவரோ
தோன்றி யழிவதுவே துக்கசுக முன்னுண்மை
தோன்று வடங்காச் சுகம்.

(உரை.) விடயம் உதித்து நின்று விட்ட இடம் கீழ் மேல் இடைவிடாதே நிறைந்த இன்பம் மேல்தொடுவரோ—ஓர்விடயத்தின்கண் தோன்றிநின்று அழியப்பட்ட இன்பம் கீழாய இன்பம், வெவ்வேறு வகைப்பட்ட பொருள்களினும் இடையறாது பரிபூரணமாய் நிறைந்த இன்பம் மேலாய இன்பம்; ஆகலின், இவ்வின்பத்தைப் பெற்றுள்ளார் தற்போதத்தால் அதனைப் பற்றுவரோ? (அஃது எங்ஙனம் எனின்,)

தோன்றி அழிவதுவே துக்கசுகம் உன் உண்மை தோன்று அடங்காச் சுகம்—போதத்தால்பற்றி அறிந்து அனுபவிக்கும் அவ்வின்பம் தோன்றி அழிவது; அங்ஙனம் தோன்றி அழிவதுவே சுகமும் துக்கமும் ஆகலினும், உனதுள்ளே மெய்ம்மையா யிருந்த இன்பம் ஓர் காலங்களினும் உற்பத்தி நாசம் இன்றாய் வீட்டின்பம் ஆகலினும்.

(குறிப்பு.) அவ்வின்பம் ஓர் விடயத்தில் தோன்றி அழிதலால் பற்றி விடப்பட்டது. இவ்வின்பம் பூரணம் ஆகலானும் உற்பத்தி நாசம் இன்மையானும் பற்றுதல் விடுதல் இதற்கு இன்மை ஆயிற்று.

தோன்றியபோது சுகமும் மறைந்தபோது துக்கமும் வருதலின், "தோன்றி யழிவதுவே துக்கசுகம்" என்றார்.

இச்சுகத்துக்கங்களால் விழைவு வெகுளியும், இவ்விழைவு வெகுளிகளால் இருவினைகளும், இவ்விருவினைகளால் பிறப்பும் உண்டாம் என்பதுங் கொள்க.

அவ்வின்பம் பற்றியபோது தோன்றும், விடுத்தபோது மறையும்; இவ்வின்பம் பற்றியபோது மறையும், விடுத்தபோது தோன்றும் என்பதுங் காண்க. (அவ்வின்பம் - விடயவின்பம்; இவ்வின்பம் - வீட்டின்பம்.)

இத் திருவெண்பாவால் இவ்வின்பம்போல் அவ்வின்பம் போதத்தால் அறியக்கூடாதென்று அறிவித்தவாறு காண்க. (க)

ஆயின் அவ்வின்பம் இத்தலத்தில் தோன்றுவதில்லை ஆகலின், மற்றோர்தலத்தில் சென்றிருந்து தவத்தைப் பண்ணி அதனைப் பெறுகின்றேன் என்ற மாணாக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.

எங்கும் பரிபூ ரணமென்னி னீதல்ல
தங்கங்கா மென்னும்போ தங்கிலையோ—பங்காகே
ளாகாயந் தீண்டிவிடு மற்ப வழிவழிவி
லேகாண்பே ரின்பமுதிக் கும்.

(உரை) எங்கும் பரிபூரணம் என்னின் ஈது அல்லது அங்கு அங்கு ஆம் என்னும்போது அங்கு இலையோ பங்காகேள்—அப்பேரின்பம் இருநூற் றிருபத்தாகாலு புவனம் எங்கும் உட்புறமுய் நிறைந்துள்ள பரிபூரணமென்று வேதாகமங்கள் கூறும் எனின், அவ்வின்பம் பெறுதற்கு எது இத்தலம் அன்று காசி முதலிய அந்தந்தத் தலங்களில் பெறலாம் என்று நீ கூறும்பொழுது, நீ இருந்த அத்தலத்தில் அவ்வின்பம் இன்றுயதோ? பகுப்பறிவு நீங்காதவனே! கேட்டி,

ஆகாயம் தீண்டிவிடும் அற்ப அறிவு அழிவிலே பரின் பம் உதிக்கும் கான்—பரையோகமாகிய ஞானகாசத்தைப் பெற்றவிடத்து அதற்குமேல் தோன்றும் அநுபவத்தை காடித் தான் நின்ற நிலையைத் தழுவும் அற்பவறிவு அழிந்த விடத் திலே உனக்குப் பேரின்பம் தோன்றுமென்று அறிதி.

(குறிப்பு.) பரையோக நிட்டை பெற்ற காலே அதற்கு மேல் தோன்றும் சிவத்தை காடாது அவ்வருளையும் மறவா திருப்பின், சிவதரிசனம் தானே தோன்றும், அது தோன் றவே கிஞ்சிக்கியபோகம் அழியும், அஃதழியவே பேரின்பம் தோன்றும் ஆகலின், "ஆகாயந் தீண்டிவிடு மற்ப வழிவிலே கான்ட பேரின்ப முதிக்கும்" என்றார்.

* * * *

கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகில்
பிரியாத சிவன்றானே பிரிந்து தோன்றி
பிரபஞ்ச பேதமெல்லாந் தானுய்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவ னிராதாரா வுயே"

என்பது சித்தியார்.

† "இரைதேர் கொக்கொத் திரவுபக
லெசற் றிருந்தே வேசற்றென்
கரைசே ரடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்தன் னடியேன்பால்
பிரைசேர் பாலி னெய்போலப்
பேசா திருந்தா லெசாரோ"

என்பது திருவாசகம்.

---

* எட்டாஞ் சூத்திரம் - சி.போ.

† கோயின்மூத்த திருப்பதிகம் - ஞ.

இத் திருவெண்பாவால் பூரண இன்பம் உறுதற்குரு தலம் இடம் அன்றென்றும் போதகாசம் இடமென்றுமுத் அறிவித்தவாறு காண்க. (கoத்

அப் போரின்பம் அடைதற்கு இச் சிற்றின்பமாகிய விடயம் தடை ஆதலின், இதனை ஒழித்து அதனை அடைதவேன் என்ற மாணாக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.

உடம்புள்ள மட்டும் விடய மொடுங்கா
வொடுங்குகிலோ கேவலமாமும்ப—ரிடம்புட்
பறந்தாற் கலங்குமோ பாசத்தி னுண்மை
யறிந்தாற் சுடாத்தடைடோ லாம்.

உரை.) உடம்பு உள்ள மட்டும் விடயம் ஒடுங்கா ஒடுகுகிலோ கேவலம் ஆம்—விடயங்கள் அநுபவித்தற்கு ஏது வாய உடம்பிருக்கும் அளவும் அவ்விடயங்கள் ஒழியா, உடபோடு ஒற்றுமையாயிருந்த ஞானேந்திரியங்கள் ஐந்திற்கு எதிரீடாய் விடயங்கள் தோன்றுந்தோறும் அவற்றை ஒழிபேன் எனின், அங்ஙனம் ஒழிக்கில் கருவிகள் எல்லாம் ஒழியும், அவை ஒழியிலோ கேவலம் வந்து அடுக்கும். (ஆயின் அவற்றை ஒழிக்குமாறு எவ்வாறு எனின்,)

உம்பர் இடம் புள் பறந்தால் கலங்குமோ பாசத்தின் உண்மை அறிந்தால் சுடாத் தடைபோல் ஆம்—ஆகாயத்தி னிடமாய்ப் புள் பறந்தால் அவ்வாகாயம் அசையாதது போல நீ இம் மாயாவடிவத்தை யான் அலன் என்று நீங்கி அருள வடிவாய் இருத்தி எனின், அப்போது விடயங்கள் வந்து அடுப்பினும் நீ அசையாதிருப்பை; ஆயின், மாயாவடிவமா யிருந்தபோது வருத்திய விடயம் திருவருள் வடிவமாயிருந்தால் வருத்தாதிருப்பது எங்ஙனம் எனின், அசுத்த

விடயாகந்தம் அறிதல்போல் அவ்வானந்தமும் அறியக் கூடாதோ எனின், மேற் கூறுகின்றார்.

விட்ய முதித்துநின்று விட்டவிடங் கீழ்மே
விடைவிடா தேநிறைந்த வின்பந்—தொடுவரோ
தோன்றி யழிவதுவே துக்கசுக முன்னுண்மை
தோன்று வடங்காச் சுகம்.

(உரை.) விடயம் உதித்து நின்று விட்ட இடம் கீழ் மேல் இடைவிடாதே நிறைந்த இன்பம் மேல்தொடுவரோ—ஓர்விடயத்தின்கண் தோன்றிநின்று அழியப்பட்ட இன்பம் கீழாய இன்பம், வெவ்வேறு வகைப்பட்ட பொருள்களினும் இடையறாது பரிபூரணமாய் நிறைந்த இன்பம் மேலாய இன்பம்; ஆகலின், இவ்வின்பத்தைப் பெற்றுள்ளார் தற்போதத்தால் அதனைப் பற்றுவரோ? (அஃது எங்ஙனம் எனின்,)

தோன்றி அழிவதுவே துக்கசுகம் உன் உண்மை
தோன்று அடங்காச் சுகம்—போதத்தால்பற்றி அறிந்து அனுபவிக்கும் அவ்வின்பம் தோன்றி அழிவது; அங்ஙனம் தோன்றி அழிவதுவே சுகமும் துக்கமும் ஆகலினும், உனதுள்ளே மெய்ம்மையா யிருந்த இன்பம் ஓர் காலங்களினும் உற்பத்தி காசம் இன்றுய் வீட்டின்பம் ஆகலினும்.

(குறிப்பு.) அவ்வின்பம் ஓர் விடயத்தில் தோன்றி அழிதலால் பற்றி விடப்பட்டது. இவ்வின்பம் பூரணம் ஆகலானும் உற்பத்தி காசம் இன்மையானும் பற்றுதல் விடுதல் இதற்கு இன்மை ஆயிற்று.

தோன்றியபோது சுகமும் மறைந்தபோது துக்கமும் வருதலின், "தோன்றி யழிவதுவே துக்கசுகம்" என்றார்.

இச்சுகத்துக்கங்களால் விழைவு வெகுளியும், இவ்விழைவு வெகுளிகளால் இருவினைகளும், இவ்விருவினைகளால் பிறப்பும் உண்டாம் என்பதுங் கொள்க.

அவ்வின்பம் பற்றியபோது தோன்றும், விடுத்தபோது மறையும்; இவ்வின்பம் பற்றியபோது மறையும், விடுத்தபோது தோன்றும் என்பதுங் காண்க. (அவ்வின்பம் - விடயவின்பம்; இவ்வின்பம் - வீட்டின்பம்.)

இத் திருவெண்பாவால் இவ்வின்பம்போல் அவ்வின்பம் போதத்தால் அறியக்கூடாதென்று அறிவித்தவாறு காண்க. (கு)

ஆயின் அவ்வின்பம் இத்தலத்தில் தோன்றுவதில்லை ஆகலின், மற்றோர்தலத்தில் சென்றிருந்து தவத்தைப் பண்ணி அதனைப் பெறுகின்றேன் என்ற மாணாக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.

எங்கும் பரிபூ ரணமென்னி னீதல்ல
தங்கங்கா மென்னும்போ தங்கிலையோ—பங்காகே
ளாகாயந் தீண்டிவிடு மற்ப வழிவழிவி
லேகாண்பே ரின்பமுதிக் கும்.

(உரை) எங்கும் பரிபூரணம் என்னின் ஈது அல்லது அங்கு அங்கு ஆம் என்னும்போது அங்கு இலையோ பங்காகேள்—அப்பேரின்பம் இருநூற் றிருபத்துநாலு புவனம் எங்கும் உட்புறமுய் நிறைந்துள்ள பரிபூரணமென்று வேதாகமங்கள் கூறும் எனின், அவ்வின்பம் பெறுதற்கு எது இத்தலம் அன்று காசி முதலிய அந்தந்தத் தலங்களில் பெறலாம் என்று நீ கூறும்பொழுது, நீ இருந்த அத்தலத்தில் அவ்வின்பம் இன்றுயதோ? பகுப்பறிவு நீங்காதவனே! கேட்டி,

இத் திருவெண்பாவால் பூரண இன்பம் உறுதற்குத் தலம் இடம் அன்றென்றும் போதகாசம் இடமென்றும் அறிவித்தவாறு காண்க. (கo)

அப் போரின்பம் அடைதற்கு இச் சிற்றின்பமாகிய விடயம் தடை ஆதலின், இதனை ஒழித்து அதனை அடைவேன் என்ற மாணைக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.

உடம்புள்ள மட்டும் விடய மொடுங்கா
வொடுங்குகிலோ கேவலமாமும்ப—ரிடம்புட்
பறந்தாற் கலங்குமோ பாசத்தி னுண்மை
யறிந்தாற் சுடாத்தடையோ லாம்.

உரை.) உடம்பு உள்ள மட்டும் விடயம் ஒடுங்கா ஒடுங்குகிலோ கேவலம் ஆம்—விடயங்கள் அநுபவித்தற்கு ஏதுவாய உடம்பிருக்கும் அளவும் அவ்விடயங்கள் ஒழியா, உடம்போடு ஒற்றுமையாயிருந்த ஞானேந்திரியங்கள் ஐந்திற்கும் எதிரீடாய் விடயங்கள் தோன்றுந்தோறும் அவற்றை ஒழிப்பேன் எனின், அங்ஙனம் ஒழிக்கில் கருவிகள் எல்லாம் ஒழியும், அவை ஒழியிலோ கேவலம் வந்து அடுக்கும்; (ஆயின் அவற்றை ஒழிக்குமாறு எவ்வாறு எனின்,)

உம்பர் இடம் புள் பறந்தால் கலங்குமோ பாசத்தின் உண்மை அறிந்தால் சுடர்த் தடைபோல் ஆம்—ஆகாயத்தினிடமாய்ப் புள் பறந்தால் அவ்வாகாயம் அசையாதது போல நீ இம் மாயாவடிவத்தை யான் அலன் என்று நீங்கி அருள வடிவாய் இருத்தி எனின், அப்போது விடயங்கள் வந்து அடுப்பினும் நீ அசையாதிருப்பை; ஆயின், மாயாவடிவமா யிருந்தபோது வருத்திய விடயம் திருவருள் வடிவமா யிருந்தால் வருத்தாதிருப்பது எங்ஙனம் எனின், அசுத்தம்

தக்கம் அநித்தியம் அன்னியம் என்ற பாசத்தின் உண்மை யைத் திருவருளால் அறிந்தனையாயின், அக்கினிச் சூட்டைத் தடுக்கும் மந்திரம்போல், அவ்வறிவு கருவிச் சேட்டையைக் கெடுக்கும் ஆகலின், அக்கினியிருந்தும் சுடாததுபோல் கருவிகளிருந்தும் முன்போல வாதியா வாகும்.

(குறிப்பு.) தான் கருவிகட்கு அன்னியமாய்ப் பிரிந்து நின்ற அருளால் அடக்கானது, அக்கருவிகளோடுங் கூடி நின்ற போதத்தால் அடக்கினையையால், "கேவலமாம்" என்றார்.

அருள்வடிவா யிருந்தபோது கருவிகள் அசைவதே அன்றித் தான் அசையான் ஆகலின், "உம்பரிடம் புட்பறக் தாற் கலங்குமோ" என்றார்.

இத் திருவெண்பாவால் கருவிகளை உள்ளபடி அரு னால் அறிந்து நீக்கி, அவ் வருளில் மறைந்து நின்றால் மீட் டும் அனைவகள் வந்து வாதியா என்ற அறிவித்தவாறு காண்க.

விடயங்களோ இந்திரியங்களால் அறிந்து அநுபவித்தற்கு வசுவாய இவ்வுடலை ஒழித்து இவ்விச் பத்தைப் பெறுவீரன் எனின், மேற் கூறுகின்றார்.

உடலிருந்தென் போயென்ன றைருவுரு வோன்று
மடவார் தொழிலு மாதி— குடமுடைந்து
மன்னெனின்ன வேண்டுமோ மாயா வயிந்தவத்து
முன்னனின்று பார்த்தியிப்போ தும்

(உரை.) உடல் இருந்து என் போய் என் உரு அருவம் மூன்றும் அடவார் தொழிலும் ஆதி—இவ்வுடல் இருந்தது ரல் அவ்வின்பம் வருதற்குக் கடை என்ன? இது

போயதலுல் அவ்வின்பம் வருமாறு என்னை? அவ்வின்பம் வருதற்குத் தடை இவ்வுடலால் யாதும் இன்று; உருவமும் அருவமும் உருவருவமும் ஆகிய இம்மூன்று வடிவத்தினையும் உடைய ஸர்வஞ்ஞர் (அநாதியிலே ஆணவமலத்திற் கிடந்த என்னைக் காருணியத்தால் எடுத்து மாயையில் தநுகரண புவன போகங்களைக் கொடுத்து, இருவினை ஒப்பு மலபரிபாகம் வருவித்து, வீடளிக்கும் பொருட்டுச் செய்யும்) பஞ்ச கிருத்தியங்களும் அநாதி; (ஆகவின், நீ இக் காயத்தை ஒழிப்பலெனக் கருதற்க;)

கூடம் உடைத்து மண் என்ன வேண்டுமோ மாயா வயிந்தவந்தும் உள் நின்று பார்த்தி இப்போதும் — ஒரு வருக்குக் கடத்தை மண்ணென்று அறிவிப்பதே அன்றி அக்கடத்தை உடைத்து மண்ணென்று அறிவிக்க வேண்டுமோ? அதுபோல், உனக்கு அவ்வுடம்பை மலமென்று அறிவிப்பதே அன்றி, இதனை அழித்து மலமென்று அறிவிக்கவேண்டுமோ? ஆகவின், இதனுள் இருந்தே இவ்வுடம்பையும் மற்றும் உள்ளனவாய கருவிகளையும் மாயாமலமென்றும் உனக்கன்னியமென்றும் கண்டு நீக்கி, வயிந்தவ மாயையாகிய சுத்த தத்துவத்தின் முடிவில் நின்று, உன்னை அருளால் கண்டு அவ்வருளில் அசைவற இருத்தி, இப்போதும் அவ்வாகந்தம் உதயமாம்; (தேகமுடிந்த அப்போதும் அவ்வாகந்த மயமே அவை.)

(தறிப்பு.) பெத்த திசையில் பஞ்ச கிருத்தியத்தால் பஞ்சாவத்தைகளையும் உண்டாக்கி நடத்தா நின்ற ஸர்வஞ் ஞர் இப்போது முத்தி திசையினும் உனக்குப் பஞ்சாவத்தைகளையும் நீக்கித் தமது திருவடி யாகந்தத்தைக்

கொடுப்பர், நீ உடலை ஒழிக்கவேண்டுவது எதுக்கு என்றை அறிவித்தற்கு, "அடைவர் தொழிலு மாதி" என்றார்.

"இப்போதும்" என்றலுமையான், அப்போதும் என்பது வருவிக்கப்பட்டது.

இத் திருவெண்பாவால் அவ்வின்பம் பெறுதற்கு உடலொழித்தல் எதுவன்று, இவ்வுடலாதிகளை எல்லாம் தனக்கு அன்னியமென்று அருளாற் கண்டு நீங்கி, அவ்வருளில் நிற்றல் எதுவென்று அறிவித்தவாறு காண்க. ()

வேதாந்த முத்தியோ சித்தாந்த முத்தியோ உன்மை என்ற மாணாக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.

கயிற்றரவுங் கட்டையினிற் கள்ளனும் போன்மாயா மயக்கமற்ற வேதாந்த வாழ்வு—முயற்சிகெட்ட வானந்தா தீதத்தே யாணவரா மாகமமுந் தானந்தி னர்க்குச் சமன்.

(உரை.) கயிறு அரவும் கட்டையினில் கள்ளனும் போல் மாயா மயக்கம் அற்ற வேதாந்த வாழ்வும்—உள்ள கயிற்றினிடத்து இல்லாத பாம்பு கற்பிதமாகத் தோற்றுதல் போலும், உள்ள கட்டையினிடத்து இல்லாத கள்வன் கற்பிதமாகத் தோற்றுதல் போலும், உள்ள பிரமத்தினிடத்து இல்லாத மாயை கற்பிதமாகத் தோன்றுகிறதென்று அறிந்து, இம் மாயாமயக்கம் சிறிதும் தோன்றாது இறந்த இடம் வீடென்று கூறும் வேதாந்தச் செல்வமும்,

முயற்சி கெட்ட ஆனந்தாதீதத்தே ஆணவர் ஆம் ஆகமமும் தான் கந்திரர்க்குச் சமன்—கற்போத முயற்சி சிறிதும் தோன்றாது இறந்த ஆனந்தாதீதத்தில் பெற்ற திசையில்

ஆணவராகி இருப்பாரைப்போலும் இருப்பதே வீடென்று கூறும் ஆகமச் செல்வமும், தானென்று எதிரிட்டெழும் புல்லறிவு கெட்டார்க்குச் சமனும்.

(குறிப்பு.) * அவித்தியாகதமாய் இருந்த சீவனது புன்மை அறிவாய் இருந்து தான் என்று எதிரிடும் அவ் வறிவு கெட்டபோது அச் சீவசாட்சிபாய் இருந்த பிரமம் தான் ஆகலானும், ஆணவமயமாய் இருந்த ஆன்மாவினது புன்மை அறிவாய் இருந்து தான் என்று எதிரிடும் அப்போ தம் கெட்டபோது அவ்வான்மா தனக்கு முதலாகிய சிவ மயம் ஆதலானும், இங்ஙனம் ஆயபோது இருவர்க்கும் ஆநந்தானுபவம் இருத்தலானும், "தானந்திரர்க்குச் சமன்" என்றார். தான் நந்தாத அபரஞானிகட்குச் சமன் அன்றென் பது தானே ஆயிற்று.

இத் திருவெண்பாவால் வேதாந்த சித்தாந்த மூத்தி இரண்டும் கற்போதும் ஓதிந்தோர்க்குச் சமனென்று அறி வித்தவாறு காண்க. (கஉ)

என்னுணை யென்னுணை யென்னுணை யேகமிரண் டென்னுமற் சும்மா யிருவென்று—சொன்னுன் றிருஞான சம்பந்தன் சீகாழி நாட னருளாளன் ஞானவிநோ தன்.

(உரை) திருஞான சம்பந்தன் சீகாழி நாடன் அரு ளாளன் ஞான விநோதன்—திருஞான சம்பந்தப் பிள்ளையா ரென்னுந் திருநாமத்தை யுடையார், சீகாழி நாட்டிற்கு அதி பதியான அருளாட்சி யுடையார், ஞானத் திருவிளையாட் டினை யுடையார்,

---

* அஞ்ஞானமயம்.

என் ஆணை என் ஆணை என் ஆணை ஏகம் இரண்டு என்னுமல் சும்மாயிரு என்று சொன்னேன்—முக்காலும் தமது போரில் திருவாணைக்கூறி முத்தியில் வேதாந்தியைப் போல் ஏகம் என்றும், போதசித்தாந்த வாதியைப்போல் இரண்டென்றும் கூறுது, இங்ஙனம் கூறுதற்கு ஏதுவாய உன் போதத்தை ஒழித்து, நீ மௌனுநந்தமா யிருத்தி என்று அருளிச்செய்தார்.

(தற்பட.) ஒன்றெனில் பெறுயாதனும் பேறும் இன்றுமாகலினும், இரண்டெனில் பதமுத்தியே அன்றி ஐக்கிய முத்தி கூடாதாகலினும், போத அறிவில் இரண்டாயும் போத ஒழிவில் ஒன்றுயும் இருத்தலினும், "ஏகமிரண்டென்றுமற் சும்மா யிருவென்று சொன்னேன்" என்றார்.

இத் திருவெண்பாவால் முத்தி நிச்சயம் ஈதென்று அறிவித்தவாறு காண்க. (கச)

ஐந்தாம் அதிகாரம் சரியைக் கழற்றி

முற்றும்.

ஆறும் அதிகாரம்

விரத்தி விளக்கம்

இங்ஙனம் சரியாதிகளை நீக்துநின்றார் ஆயினும், உள் ளறவு இல்லார்க்கு ஞானம் விளங்காது ஆகலின், இவ் வதி காரத்தினுள் துறவி விளக்கங்கூறி உட்டுறவின் இலக்கணம் அறிவித்தார் ஆகலின், இவ் வதிகாரத்திற்கு விரத்தி விளக்கமென்று பெயராயிற்று. விரத்தி யெனினும் துறவி எனினும் ஒன்று.

அறிந்தவிடத் தின்பதுன்ப மாகா ததுவும்
மறந்தவிடத் தின்ப மயக்கு—மறிந்த
வலியறிவு நீயென்று னத்துவிதா நந்த
முலியமுத முண்ட முனி.

(உரை.) அத்துவித ஆனந்த மூல அமுதம் உண்ட முனி—இரண்டற்ற அத்துவிதத்தில் தோன்றும் போகநந்த மாகிய திருமூல அமுதத்தை அம்மைபொற்கிண்ணத்தோடும் கொடுப்ப வாங்கி உண்ட திருஞான சம்பந்தப் பிள்ளையார்,

அறிந்த இடத்து இன்ப துன்பம் ஆகாது மறந்த இடத்து அதுவும் இன்பம் மயக்கும் அறிந்த அலி அறிவு நீ என்றான்—கருவிகள் மூப்பத்தாறையும் கடந்து, அருளை அறிந்த விடத்து, ஆண்டு இன்பமும் துன்பமும் உண்டாகா; அவ்வருளை மறந்தவிடத்து முன்நீங்கி நின்ற கருவிகள் வந்து கூடலான், அத்துன்பமும் இன்பமும் வந்து ஈண்டு மயக்கும் ஆகலின், பதி அறிவோடுங்கூடி இன்பதுன்பம் இன்றிய அப்பதி அறிவாயும், பாச அறிவோடுங்கூடி இன்ப துன்ப

மாயும் கின்ற அதனையும் இவற்றையும் அறிந்த அலி அறிவு நீ என்ற எனக்கு அருளிச் செய்தார்.

(குறிப்பு.) பதி அறிவு - ஆணறிவு; பாச அறிவு - பெண்ணறிவு; இவ் விருவகை அறிவும்போலன்றிப் பதி அறிவோடுங் கூடிப் பதி அறிவாயும், பாச அறிவோடுங் கூடிப் பாச அறிவாயும், ஆண்வடிவும் பெண்வடிவும் தழுவின்ற அலி போலிருத்தலின், பசு அறிவை, "அலி யறிவு" என்றார்.

அம்மை ஆகந்த வடிவம் ஆகலின், அவளது திருமுலைப் பாலை "ஆகந்தவமுதம்" என்றார்.

அதுவும் என்பதனை அத் துன்பமும் இன்பமும் மயக்கும் எனக் கூட்டுக.

இத் திருவெண்பாவால் ஆன்மா ஒன்று உண்டென்பது அறிவித்தவாறு காண்க. (க)

அறுசமயத் தோர்க்கு மறுதியிட்ட கூடற்
றுறவா யாவாவறுத்த றாய்மை—பிறவா
முடிகுளச முத்தி முயற்சி யெல்லா முத்த
கடைகருமம் நாசமித்து காண்ன.

(உரை.) அறு சமயத்தோர்க்கு அறுதி இட்ட கூடல் துறவு ஆய் அவா அறுத்தல் தாய்மை—அறுவகைச் சமயத் தோர்க்கும் வீடடைதற்கு மட்டிட்டிட வைத்த பொதுவெற்றி யாதெனின், கூடற் கண் சங்கப்பலகையில் ஏறி இருந்து உட்பற்றுப் புறப்பற்று என்னும் இருவகைப் பற்றினையும் துறப்பதாய் இத் துறவுகளான் மெய்ப்பொருளை உணர்வதாய்ப் பிராரத்த வாசனையான் ஒரோர் காலையில் உள்ளத் தெழும் அவாவினையும் அறுத்தல் தாய்மையாய்க் கூறிய

இம் மூவகை அதிகாரத்களின் நெறிகளே யாம்; (அஃது அன்றியும்,)

பிறவா * முடிகளச முத்தி முயற்சி எல்லாம் மூத்த கடை கருமகாசம் இது—பிறவாமைக்கு ஏது கூறிய பல வாற்றுள்ளும், சிரசாய கருவிகள் மூப்பத்தாறையும் போக்கப்பட்ட வீடும், தற்போத முயற்சி எல்லாம் முதிர்ந்த கடையாகிய கருமகாசமும், இம் மூவகை அதிகாரத்திற் கூறிய நெறியாம்.

(குறிப்பு.) சமயிகள் அறுவகும் வீடடைதற்கு மட்டு வேறு வேறு கூறினர் ஆயினும், ஒருவர் கூறியது ஒருவர்க்குச் சம்மதம் அன்று, துறவாய்மெய்யுணர்ந்து அவாவறுத்தல் அனைவர்க்கும் சம்மதமாம்; ஆகலின், "அறுசமயத்தோர்க்கு மறுதியிட்ட கூடற்றுறவா யவாவறுத்தல்" என்றார்.

துறவும் அவாவறுத்தலும் கூறினமையான், இடையில் மெய்யுணர்வு வருவிக்கப்பட்டது.

இங்ஙனம் சங்கப்பலகையின்மேல் எறிக் கூறிய மூன்று திகாரங்கள் என்றது திருக்குறளுள் துறவாதி மூன்றதிகாரங்களையுமாம் என்றறிக.

இம் மூவகை அதிகாரங்களின் நெறிகளில் ஒழுகுதல் உயிர்ச்சுத்தி; இங்ஙனம் உயிர்ச்சுத்தி பண்ணுவோருக்கு உடற்சுத்தி பண்ணவேண்டுவது இன்மையால், "கடைகருமகாசமிதுகாண்" என்றார்.

கர்ண - அனை.

* முடி - சிரசு. களசம் - நீக்கம். முத்தி - வீடு.

இத் திருவெண்பாவால் உட்டுறவு புறத்துறவு உடை யாரைச் சமயிகள் எல்லாரும் ஞானிகளென்று அங்கீகரிப்ப தென்று அறிவித்தவாறு காண்க. (உ)

வாசிக்குச் சாவீரர் வைதாற் பொருததுபோ
லாசைக்கே டர்க்கிதுவா மட்டதென—நேசித்த
வொட்டையைப்போல் வார்க்கா முடம்பார வுண்
பெட்டருக்கி தாகாப் பிழை. [டழகும்

(உரை.) வாசிக்குச் சாவீரர் வைதால் பொருததுபோல் ஆசைக் கேடர்க்கு இது ஆம்—* வாசி என்ற வார்த்தைக்கு மனம்பொருது இறந்துவிடத் துணிந்த வீரரை வைதால் மனம் பொருததுபோல், பெண்ணுரை ஆகாதென்று ஓர் வார்த்தை கூறிய மாத்திரத்தில் அவ்வாசை மனத்தின்கண் மீட்டும் எழாது அடக்கும் அவ்வாசை காசர்க்கே இவ்வதி காரத்தின் அருத்தம் சம்மதமாம். (அஃதன்றி,)

அட்டது என நேசித்த ஒட்டையைப் போல்வார்க்கு ஆம் உடம்பு ஆர உளுண் பழகும் பெட்டருக்கு ஈது ஆகாப் பிழை—அறுசுவை அடிசில்போல் வெப்பந்தணியாதி கைப் பின்ன இச்சித்த ஒட்டகத்தைப்போல், காடி கூழ் களி முதலிய வற்றைச் சுவையாய் விரும்புவோர்க்கும் சம்மதமாம்; உடல் பருக்கும்படி அறுசுவை அடிசில்களை கன்று தீதென்று பகுத்து உளுண்பழகும் பேடிகளுக்கும் காமிகளுக்கும் இதன் அருத்தம் சம்மதம் ஆகாத குற்றமாம்,

(குறிப்பு.) மற்ற நூலின்கண் ஓரிடத்துப் பெண்ணுரை ஆகாதென்று கூறக்கண்டு அதனை விடுத்தோர்க்கே அவ்

* இது செய்க விடுகவென்று நியாயமாகக் கூறும் வார்த்தை.

வானை உடையோனை மிகவும் இகழ்ந்து கூறும் இதன் அருத்தம் சம்மதமாம் ஆகவின், "வாசிக்குச் சாவீர் வைதாற் பொறுத்துபோ லாணைக்கேடர்க் கிதுவாம்" என்றார்.

அருந்தல் ஆணை வைத்துக் கூறினமையால், "ஆணைக் கேடர்க்" கென்றதை பொருந்தல் ஆணையாகக் கொள்க.

இத் திருவெண்பாவால் அருந்தல் பொருந்தல்களில் ஆணையற்றோர்க்கே இந்நூல் ஆமென்று அறிவித்தவாறு காண்க. (கூ)

• நீர் இங்ஙனம் கூறிய ஆற்றான் ஆணையறுதலோ மூத்தி எனின், மேற் கூறுகின்றார்.

பாசங் கழன்றுற் பசுவுக் கிடம்பதியா
மூசல் வடங்கழன்ற தொவ்வாதோ—நேசித்த
பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் பாட்டுமக்தோ
மற்றைச் சமயமெங்கு மாம்.

(உரை.) பாசம் கழன்றால் பசுவுக்கு இடம் பதி ஆம் ஊசல் வடம் கழன்றது ஒவ்வாதோ—(உயிர்ச்சார்பு பொருட் சார்பு ஆகிய இருவகைச் சார்பும், இச் சார்புகளை நீங்கியபோதும் இவற்றின்மேல் எழாநின்ற அவாவும், இவ் வவா நீங்கியபோதும் கண்ட பொருள்கள்மேற் சென்று பற்றும் இந்திரியங்களும், இவ் விந்திரியங்கள் அடங்கிய போதும் மூன் றெறியிருந்த வாசனையால் உள்ளெழும் மன நிகழ்வுகளும், இவை முதலிய) பாசக்களெல்லாம் கழன்ற போது இவற்றினின்ற பசுவுக்குப் பதியே இடமாம்; அஃது எங்ஙனம் எனின், அந்தரமாய் நின்ற ஊசற்கயிற்றில் இருந் தோலுக்கு அவ் வூசற்கயிறு அற்றபோது நிலம் இடமாம்—

அதுபோல், அஃது ஒவ்வாதோ? (அதனை நீ அறிதி, அஃதன்றி,)

கேசித்த பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும் பாட்டு உமக்கோ மற்றைச் சமயம் எங்கும் ஆம்—தம்மால் இச்சிக்கப்பட்ட பற்றுக்கள் எல்லாம் அற்றபோதே அப் பற்றறுதி பிறப்பினை அறுக்கு மென்று திருவள்ளுவ நாயனார் கூறிய) * குறள் வெண்பாப்பாட்டு உமக்கு மாத்திரமோ சம்மதம், மற்றைய சமயங்களுக்கெல்லாம் சம்மதமாம்.

(தெளிப்பு.) ஊசல் இருந்தபோதும் ஒழிந்தபோதும் அதனுள் இருந்தோனுக்கு ஆசையும் அசைவின்மையும் உண்டாவதுபோல், பாசம் இருந்தபோதும் ஒழிந்தபோதும் அசைவும் அசைவின்மையும் ஆன்மாவிற்கு உண்டாமென்பதும் காண்க.

இத் திருவெண்பாவால் ஆன்மாவிற்குப் பாச மூழுதும் நீக்கின் பதியைத் தேடவேண்டுவது இன்றென்று அறிவித்தவாறு காண்க. (சு)

உனக்குமெய்யாத்தோன்றி யொழித்துவிடும்பாசம்
வினைச்சடமேமெயென்னில் விடம்போ-லுனைச்சுழற்று
மாணலுந் தன்னை யறியாது துன்னறிவு
தானுகு ஞானத் தடை.

(உரை.) உனக்கு மெய்யாய்த் தோன்றி ஒழித்துவிடும் பாசம் வினைச்சடமே என்னில் விடம்போல் உனைச் சுழற்றும் ஆணவமும்—உனக்குத் தோன்றும்போது யான் எனது

* "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்"—உசாக.

என்று கருதும்படி மெய்யாகத் தோன்றி நீங்கும்போது உன்னைப் புறம்பாய் ஒதித்து நீங்கிவிடும் தேகபோகங்களாகிய பாசம் வினைக்கீடாய் வரும் மாயாகாரியமாகிய சடமென்று அறிவிப்பினும், நீ இங்ஙனம் அறியாமையான், நின்னைவிடம் புசித்தவனை மயக்குதல்போல் மயக்கும் எனினும், (அப்பாசம் ஞானத் தடை அன்று; இனி ஞானத்தடையாவது யாதெனின்,)

தன்னை அறியாதது உன் அறிவுதான் ஆகும் ஞானத் தடை—தனுவாதிகளை யெல்லாம் இது இது என்று காலை வாய்ப் பகுத்தறிந்தும், அவற்றை அறிந்த தன்னை அறியாதது உனது புல்லறிவாகலின், இவ்வறிவே ஞானத்திற்குத் தடையாகும்.

(குறிப்பு.) ஆணவத்தால் மறைப்பட்டிருந்த ஆன்மாவிற்குச் சிவன் மாயையில் தனுகரண புவனபோகங்களைக் கொடுத்து இச்சா ஞானக்கிரியைகளை விளக்குவித்தலானும், இத்தனுவாதிகளால் சுருதி குரு சுவானுபூதிகளை அறிந்து வீடடைதற்கு ஏதுவாகலானும், இவற்றைச் சடமென்றும் தனக்கு அந்நியமென்றும் அறிந்தபோது மயக்காமையானும், "உன்னைச்சுழற்றும் ஆணவம்" இவை ஞானத்தடை அல்லவென்றும், காணென்றும் தனதென்றும் தன்னால் அறியப்பட்ட தேகபோகங்களைத் தானும் தனதும் அல்லவென்றும் அவற்றைத் தனக்கந்நியமாகக் கண்டு தன்னை உள்ளபடி அறியமாட்டாத தனது அறிவே ஞானத் தடை ஆகவின், "உன்னறிவு தானுகு ஞானத்தடை" என்றுங் கூறினர்.

தனுவாதி கான்கிலுள் தனுவேயாடு காணமும் போகத் தோடு புவனமும் ஒற்றுமையா யிருத்தலின், தேகபோக மென்று இரண்டாகக் கூறப்பட்டன.

இத் திருவெண்பாவால் தனுவாதிகளைத் தனக் கந்திய மாகக் காணின், திருவருள் தோற்றம் என்று அறிவித்த வாறு காண்க. (5)

ஆன்மாவிற்கு இவை உருவம் அன்றாயின், இவற்றின் மயமாயிருப்பதென்னை யெனின், மேற் கூறுகின்றார்.

சிற்றறிவுமறைப்பைச் சேர்ந்தவடிவொண்படிகம்
பற்றுகிலு மொன்றுகாப் பான்மைபோ—லுற்ற [ம்
வுருவ சொரூப சுபாவ முனக்கு
வருமடைவு சொன்மே லை மதி.

(உரை.) சிற்றறிவன் ஆய மறைப்பைச் சேர்ந்தவடிவு ஒண்படிகம் பற்றுகிலும் ஒன்று ஆகாப் பான்மைபோல்—கிஞ்சிக்கிய அறிவுருப்பச் செம்பில் களிம்புபோன்ற ஆணவ மறைப்பைச் சேர்ந்த வடிவு ஆன்மாவினது சுபாவம்; படிகம் அடுத்த வண்ணமயமா யிருப்பிலும் தன் நிறம் அந் நிறத்தோடு ஒன்றுகாத முறைமைபோல, தான் அடுத்த கருவிமயமா யிருப்பிலும் தன் அறிவு அக் கருவி அறிவோடு ஒன்றுகா திருப்பது ஆன்மாவினது உருவம்; ஒன்றையும் பற்றுதிருந்த படிகம் நிருமலமா யிருத்தல்போல, ஆன்மா மும்மலங்களையும் நீங்கி நிற்றல் அதனது சொரூபம்;

உற்ற உருவ சொரூப சுபாவம் உனக்குவரும் அடைவு சொன்மேலும் மதி—இங்ஙனம் உனக்கு உற்ற சுபாவ உருவ சொரூபங்கள் வரும் முறையைச் சொன்மேலும், இவற்றை அறிந்துகொள்ளுதி.

(குறிப்பு.) "படிகம் பற்றுகினு மொன்றுகா" எனவே ஒன்றையும் பற்றுத படிகம் நிருமலமா யிருக்குமென்பது ஆயிற்று.

ஆணவம் சகசமலம் ஆகவின், அதனைச்சேர்ந்த வடிவு சுபாவம் என்றும்; படிகத்திற்குச் சிவப்புவன்ன முதலிய செயற்கையாய் வந்ததுபோல், ஆன்மாவிற்குக் கருவிகள் செயற்கையாய் வந்து பொருந்துதலின், இதனை உருவம் என்றும்; படிகம் வன்னங்களை நீங்கியபோது தனது சுய சொரூபத்தோடு இருத்தல்போல், ஆன்மா கருவிகளையெல் லாம் நீங்கியபோது தனது சுய சொரூபத்தோடு இருத்தலின், இதனைச் சொரூபம் என்றுங் கூறினர்.

இத் திருவெண்பாவால் ஆன்மாவினது உருவ சொரூப சுபாவம் அறிவித்தவாறு காண்க.

நினைப்புமறப் பற்று நிறைந்த வறிவா
யனைத்துடனு நின்றம் பரமாய்த்—தனக்கருளித்
தன்னுநந் தத்தைதத் தனக்களித்த சர்க்கரையே
யன்னனுக் கின்னனைவமூன் றும்.

(உரை.) நினைப்பு மறப்பு அற்று நிறைந்த அறிவு ஆய் அனைத்துடனும் நின்று அம்பரம் ஆய்த் தனக்கு அருளி— நினைப்பு மறப்பாகிய சகல கேவலங்களை அநாதியிலே நீக்கி, எங்கும் பரிபூரண அறிவாய், எல்லாவற்றோடும் கூடிநின்றும், ஆகாயம்போல் ஒன்றோடும் தாக்கற் றிருப்பதாய் ஆன்மா விற்கு அருள்செய்து மும்மலங்களையும் நீக்கி,

தன் ஆகந்தத்தை தனக்கு அளித்த சர்க்கரையே அன்னனுக்கு இன்னனைவ மூன்று ஆம்—தனது போகாகந்தத்தை அவ்வான்மாத் தனக்குக் கொடுத்தருளிச் செய்த காவிற்குச்

சர்க்கரையே அன்ன சிவஞக்கும் இன்ன உருவ சொரூப சுபாவம் மூன்றும் உண்டாம்.

(தெறிப்பு.) "நினைப்பு மறப்பற்று நிறைந்த வறிவாய்" எனவே சிவனது சுபாவம் ஆகாதியிலே நின்மலமாயிருத்தல் எனவும், "அனைத்துடனு நின்றம் பாமாய்" எனவே இங் ஙனம் இருப்பது அருளாகலின், அவனது உருவம் இச்சா ஞானக் கிரியைகள் எனவும், "தன்னுருகந்தத்தைத் தனக் கனித்த" எனவே, ஆநந்தம் அவனது சொரூபம் எனவுங் காண்க.

இத் திருவெண்பாவால் சிவனது உருவ சொரூப சுபாவம் அறிவித்தவாறு காண்க. (எ)

அறிந்துபற்றி நின்றழுந்து மற்ப வறிவை
அறிந்துசுத்தி யேபே ரறிவாய்—நிறைந்துசிவந்
தோயாமை னின்றதுபோற் ரூற்றமுத லீந்துடனுந்
தோயாமற் சுத்தத் துறவு.

(உரை.) அறிந்து பற்றி நின்று அழுந்தும் அற்ப அறிவை அறிந்து சுத்தியே பேர் அறிவு ஆய்—பஞ்ச விட யங்களையும் ஞானேந்திரியங்களால் அறிந்து, கன்மேந்திரி யங்களாற் பற்றி, அந்தக்கரணங்களால் அவற்றுள் அழுந் தும் கிருசிக்கிய போதத்தை (ஆன்மாவினது இயற்கைக் ஞானம் அன்றென்றும், மதுபானங் கொண்டோனுக்கு வெறியதுபோல் அவ்விருவகை இந்திரியங்களையும் காரணங்களையும் கூடியவிடத்துத் தோன்றிய விடயபோதம் எனறும்) அறிந்து, (அவ்விந்திரிய காரணங்களோடும் அப்போதத்தை நீத்து, தன்னை உள்ளபடி அறிந்து, அங்ஙனம் தன்னை அறிந்தபோது தனக்கு இந்திரிய காரணங்களையும்

வேறுக்கித் தன்னையும் அறிவித்தது அருளைனக்கண்டு, அவ் வருளே வடிவாகி இருந்து, தான் மலமும் ஆகாமல் சிவமும் ஆகாமல் சிவானுபோகத்தில் இாண்டற அழுந்தி நிற்பது ஆன்மசுத்தி, (இந்த ஆன்மசுத்தியே)(சிவத்தில் வியாபகமாகிய போறிவு ஆகலின்) இப்போறிவாகி,

சிவம் நிறைந்து தோயாமல் நின்றதுபோல் தோற்றம் முதல் ஐந்தடனும் தோயாமல் சுத்தத் துறவு—தனக்கு வியாத்தியாயிருந்த சிவம் எல்லாவற்றிலும் பூரணமாய் நிறைந்திருந்தும், ஒன்றிலும் தோய்வற்று நின்றுற்போல, ருஷ்டியால் ஐந்தொழில்களோடும் தோயாமல் (நிற்பதே) பரிசுத்தமான துறவு.

(குறிப்பு.) இச்சா ஞானக் கிரியைகள் சிவதத்துவங்களைச் செலுத்த, சிவதத்துவங்கள் கலாதிகளைச் செலுத்த, கலாதிகள் ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகளை எழுப்ப, ஆன்மாவின் இச்சை அந்தக்காணங்களிடத்தும், ஞானம் ஞானேந்திரியங்க ளிடத்தும், கிரியை கன்மேந்திரியங்க ரிடத்தும் நின்று, விடயங்களை அறிந்து பற்றி அழித்தும் ஆகலின், இவ்விருவகை இந்திரியங்களும் காணங்களும் நீங்கவே ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியை நீங்கும், இவை நீங்கவே கலாதிகள் நீங்கும், இவை நீங்கவே சிவத்துவம் நீங்கும், இவை நீங்கவே ஆன்மா தன்னை அறியும், ஆகலின், "அறிந்து பற்றி நின்றழுந்து மற்பவறிவை அறிந்து" என்றார்.

அவன் அவள் அது முன்னிலையாய் இதாகிதங்கள் வருகலையும், அவற்றைத் தான் பெறுதலையும், திருவருட்கண்

* கலக்கப்படுவது.

வேறுக்கித் தன்னையும் அறிவித்தது அருளைனக்கண்டு, அவ் வருளே வடிவாகி இருந்து, தான் மலமும் ஆகாமல் சிவமும் ஆகாமல் சிவானுபோகத்தில் இாண்டற அழுந்தி நிற்பது ஆன்மசுத்தி, (இந்த ஆன்மசுத்தியே)(சிவத்தில் வியாபகமாகிய போறிவு ஆகலின்) இப்போறிவாகி,

சிவம் நிறைந்து தோயாமல் நின்றதுபோல் தோற்றம் முதல் ஐந்தடனும் தோயாமல் சுத்தத் துறவு—தனக்கு வியாத்தியாயிருந்த சிவம் எல்லாவற்றிலும் பூரணமாய் நிறைந்திருந்தும், ஒன்றிலும் தோய்வற்று நின்றுற்போல, ருஷ்டியால் ஐந்தொழில்களோடும் தோயாமல் (நிற்பதே) பரிசுத்தமான துறவு.

(குறிப்பு.) இச்சா ஞானக் கிரியைகள் சிவதத்துவங்களைச் செலுத்த, சிவதத்துவங்கள் கலாதிகளைச் செலுத்த, கலாதிகள் ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகளை எழுப்ப, ஆன்மாவின் இச்சை அந்தக்காணங்களிடத்தும், ஞானம் ஞானேந்திரியங்க ளிடத்தும், கிரியை கன்மேந்திரியங்க ரிடத்தும் நின்று, விடயங்களை அறிந்து பற்றி அழித்தும் ஆகலின், இவ்விருவகை இந்திரியங்களும் காணங்களும் நீங்கவே ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியை நீங்கும், இவை நீங்கவே கலாதிகள் நீங்கும், இவை நீங்கவே சிவத்துவம் நீங்கும், இவை நீங்கவே ஆன்மா தன்னை அறியும், ஆகலின், "அறிந்து பற்றி நின்றழுந்து மற்பவறிவை அறிந்து" என்றார்.

அவன் அவள் அது முன்னிலையாய் இதாகிதங்கள் வருகலையும், அவற்றைத் தான் பெறுதலையும், திருவருட்கண்

* கலக்கப்படுவது.

ணல் பார்த்து அழித்துப் பேய் பிடியுண்டவனைப் போல் சிவத்துள் மறைந்து நின்றமையால், 'தான் மலமும் ஆகாமல்' என்றும், அங்ஙனம் நின்று அழியாத ஆகந்த போதம் பெறுதலால், 'தான் சிவமும் ஆகாமல்' என்றும் இங்ஙனம் கூறப்படும்; இங்ஙனம் இருப்பது ஆன்மசுத்தியாகலின், "சுத்தி" என்றார்.

ஒன்றையும் பகுத்துக் காணுது வியாத்தியாய் நின்ற சூரியன் ஒளியில் வியாபகமாகிய கண்ணொளியும் ஒன்றையும் பகுத்துக்காணுது நிற்பதுபோல், ஒன்றையும் பகுத்தறியாது நின்ற சிவவியாத்தியில் வியாபகமாகிய ஆன்மாவும் பஞ்சகிருத்தியங்களால் விளங்கும் பிரபஞ்சங்களுள் ஒன்றையும் பகுத்தறியாது நிற்கவேண்டும் ஆகலின், "சிவத் தோயாமனிம்ற துதுபோற் றோற்ற முதலெந்துடனும் தோயாமற் சுத்தத் துறவு" என்றார்.

பஞ்ச கிருத்தியங்களாவன : ஓர் இந்திரியத்தில் பிரவேதித்தல் சிருஷ்டி, அவ்விந்திரியத்தில் நின்று ஓர் விடயத்தைப் பற்றுதல் திதி, பற்றிய விடயத்து இரண்டற அழுந்துதல் சங்காரம், அதில் இதம் பிறத்தல் திரோபவம், அதனைத் தெளிந்து கோடல் அநுக்கிரகம். இங்ஙனம் ஓர் இந்திரியத்தில் பஞ்சகிருத்தியங்களும் வாலால் ஐந் திந்திரியங்களிலும் தோயாமல் நிற்பதே ஐந்தொழிலும் தோயாமல் நிற்பதென அறிக.

அறிந்து பற்றி நின்று அழுந்துதலே விடயபோதமென்று அறிதல் ஆன்மநாபம், அவற்றை நீங்கித் தன்னை அருளால் கண்ட விடம் ஆன்மதரிசனம், தான் மலமும் ஆகாமல் சிவமும் ஆகாமல் சிவத்தோடு இரண்டறக்கலந்து நிற்பது ஆன்மசுத்தி எனக் கொள்க.

இத் திருவெண்பாவால் பரிசுத்தமாகிய தறவு இது வென்று அறிவித்தவாறு காண்க. (அ)

ஞானிகள் இங்ஙனம் பிரபஞ்சத்தில் தோயாமல் நிற் பரோ எனின், மேற் கூறகின்றார்.

கூரிருளின் மின்மினியின் கூட்டம்போல் வாழ்சகத் யாரறிவா ரந்த வறிவுதயம்—சூரியன்கா [தை ணுன்னீழ லேக்கெடுத்த வுச்சியிலே ஞனமறச் சொன்ன ரவத்தைகளேந் துபம்.

(உரை.) கூர் இருளில் மின்மினியின் கூட்டம்போல் வாழ் சகத்ணையார் அறிவார் அந்த அறிவு உதயம் சூரியன்—மழைக்காலத்து அரையிருளில் மின்மினிப் புழுக் கூட்டம் போன்ற, ஆணவாந்தகாரத்தில் ஆன்மாக்கள் கிஞ்சிக்கிய போதத்தோடும் கூடிப் பொய்ம்மையாய் வாழாநின்ற இப்பிர பஞ்சத்தை ஞானிகளாயினோர் யாவர் அறிவார்? (அவ் சகத்தோடுங்கூடி இருக்கையினும் அதனை அறியாென்று நீர் கூறியது என்னை எனின்,) அவர்க்கு அந்த ஞானுதயம் சூரியோதயம்போல் தோற்றும் (ஆகலின், அச்சகத்தை அறியார், ஆயின் இந்த ஞானத்தை அடியேன் பெறுமாறு எங்ஙனம் எனின்,)

உன் நீழலேக்கெடுத்த உச்சியிலே ஞனம் அற அவத் ணைகள் ஐந்தும் சொன்னர்—காலையினும் மாலையினும் நீளும் உனது நிழலேக்கெடுத்தஉச்சிக்காலத்தைப்போல், சகல கேவ லங்களில் செல்லும் உன்பேதம் அடங்கிய நடுவிடத்து உனது ஆணவக்குற்றம் அறவும் ஞானச்செல்வம் வரவும் எதுவாகச் சுத்தாவத்தைகள் ஐந்தினையும் சொன்னர் (பெரியர்; அவற் ணை யாம் சொல்லக்கேட்டு நீ அறிதி.)

(குறிப்பு.) இருளைப்போல் ஆணவம், மின்மினிபோல் கருவிப்போதத்தோடுங்கூடிய ஆன்மாக்கள், மின்மினி மின்னியவாறே தோன்றுது மறைந்து மறைந்து மின்னல்போல், ஆன்மாக்களினது மறப்பு நினைப்புகள், ஆகலின், "கூரிருளின் மின்மினியன் கூட்டம்போல் வாழ்சகம்" என்றார்.

சூரியோதயத்தில் பூதவிருளும் மின்மினி ஒளியும் தோற்று; அதுபோல், ஞானோதயத்தில் ஆணவ இருளும் கருவிப்போதமும் தோற்று ஆகலின், "அறிவுதயஞ் சூரியன்காண்" என்றார்.

இந்திரியங்கள் பத்தும் பஞ்ச பூதங்களிடமாய் நின்று, விடயங்களை நேரே அபகரித்து * விசர்க்கரிக்கப் பொருந்திய போதம் இறக்க இருந்த இடம் நிர்மலசாக்கிரம்; அவ்விந்திரியங்களிடமாய் விடயங்களைப் பகுத்தறியப்பட்ட ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகளுக்கு இடமாகிய மனம் புத்தி யகங்காரங்களின் வியாத்தி அறும் இடம் நிர்மல சோப்பனம்; ஆன்ம ஐசதன்னியத்திற்கு அதிட்டான மான சித்த விகற்பம் ஒடுங்கின இடம் நிர்மல சுழுத்தி; அச்சைதன்னிய வாகனமான பிராணவாயு தீங்கின இடம் நிர்மல துரியம்; ஊசல் வடம் அற்றபோது அதற்குரிய இடம் ஆதாரம். ஆறற்போல் இங்ஙனம் கருவிப்போதம் எல்லாம் கழிந்த இடத்து ஆன்மா அருள் ஆதாரமாய் நின்ற சுத்தாவத்தை நிர்மலாதீதம்.

இக் கருவிப்போதங் கழன்ற சுத்தாவத்தையில், சுடர் காட்டக் கண்ட கண்போல், அருளால் தன்னை அறிவது நிர்மல சாக்கிரம்; இங்ஙனம் தன்னை அறிந்த இடத்

* விட

துத் தனக்கொரு சேட்டை அற்று அந்த அருளே தனக்கு ஆதாரமாய் அவ்வருளில் தான் அசைவறநின்ற இடம் அவ் வருள் தரிசனம், இங்ஙனம் இவ்வருளைத் தரிசிப்பது நீன் மல சொப்பானம்; இச்சாஞானக்கிரியை தோன்றுது நின்ற இடம் பரை, இந்தப் பரையினது நின்மலமெல்லாம் தனது இச்சாஞானக்கிரியை தோன்றுது தனதாகி எதிரீடு சிறி தும் இன்றி இப் பரையே தானாகி இருந்த இடம் நின்மல சூழந்தி : தான் இப் பரையாகிய இடத்துக் கதிரொளி தோன்ற நின்ற கண் அக் கதிரிடத்து அதீதப்படுந் தறுவாயில் இக்கண்ணுக்கு அந்தக் கதிரினது வட்டப் பளபளப்புமாத் திரந் தோற்றுவதுபோல், பரையை நீங்கி ஆநந்தசத்தி தோன் றின்று தான் சிவத்தில் அதீதப்படுந் தறுவாயில் ஆநந்தா நுபவம் பெறுவது நின்மல துரியம்; அக் கதிரினது வட்டம் பளபளப்பாகிய சோடையைக் கண்ட கண் அக் கதிரைக் திருக்கையிலும், தன்பார்வையும் இழந்து தன்னில் காணப் பட்ட முதலையும் இழந்து அக் கதிர் தானும் மிகவும் அதீதப் பட்டாற்போல், அங்ஙனம் ஆநந்தாநுபவம் பெற்ற ஆன்மா அந்த ஆநந்தமாகா திருக்கையிலும், அவ்வாநந்தாநுபவத்தைத் துறந்த தானும் இன்றி ஆநந்தமாய் நின்ற முதலும் இன்றி அவ்வாநந்தமே தானாய் அதீதப்பட்ட இடம் நின்மலாத்தம்.

முன்சொன்ன ஐந்தும் கருவிகள் முப்பத்தாறும் நீங்கு தற்கு எது, பின்சொன்ன ஐந்தும் தற்போதங்கெட்டுச் சிவத்தில் அதீதப்படுதற்கு எது. "சொன்ன ராவத்தைக ளைந்தும்" என்றது இவையெனக் கொள்க.

"உச்சியிலே சொன்ன ராவத்தைக ளைந்தும்" என்ற மையான், அவ்வுச்சி சேர்படுதற்கு எதுவாகிய அவத்தைகள் ஐந்தும் சொல்லப்பட்டன.

இருளைப்போல் கேவலம்; உடுக்களைப்போல் சகலம் உடுஇன்றி இருளைமாத்திரம் காணும் கண்போலவும், இருளிடத்து உடுவாற் காணுங் கண்போலவும், கேவல சகலங்களை அறியும் ஆன்மா; சூரிய உதயத்தில் இருளும் உடுவும் இன்றிச் சூரியப் பிரகாசமாத்திரங் கண்ட கண்போல், அருள் தோற்றியகாலத்து முன் தோன்றிய கேவல இருளும் கருவிக் கூட்டங்களும் தோன்றுது, அவ்வருளை மாத்திரம் கண்டுகொண் டிருப்பது அருள் தரிசனம்; சூரியப் பிரகாசத்தைக் கண்ட கண் புடைபெயர்ந்து நோக்காது அச் சூரியப் பிரகாசத்தில் ஏகீபாவமாய் நிற்பதுபோல், அருள் என்றும் தான் என்றும் சிறிதும் தோன்றுது அவ்வருளை தாளைய் நிற்பது பரைதரிசனம்; சூரியப் பிரகாசத்தை விட்டு அச்சூரியனது வட்டப் பளபளப்பைப் பார்த்த கண் தன் பார்வையையும் இழந்து, அப் பளபளப்பாகிய காட்சியையும் இழந்து, அச்சூரியனுள் அதீதப்பட்டதுபோல், ஆநந்தபோதத்தைப் பெற்ற ஆன்மா அதனைப் பெற்றதான் என்பதும் இவ்வாநந்தம் என்பதும் இன்றி அவ் வாநந்தந் தானைய் அதனுள் அதீதப்படுவது, ஈண்டு இரு வகையாய்க் கூறிய அவத்தைகட்கு உவமை இதனைனுங் காண்க.

இத் திருவெண்பாவால் ஞானிகள் உலகத்தை அறியார் என்றும், ஞானம் நின்மலாவத்தையில் நின்றால் பெறலாம் என்றும் அறிவித்தவாறு காண்க. (கூ)

அந்த ஞானத்தை நீர் கூறிய நின்மலாவத்தையில் நின்று பெறுவதே அன்றி, துறவின்கண் நின்று தவத்தைப் பண்ணிப் பெறக்கூடாதோ எனின், மேற்கூறுகின்றார்.

மெய்யாகத் தோன்றிவிடும் பொய்யை விசாரிக்கிற்
பொய்யாய்ச் சுவர்ப்பாம்பாய்ப் போமன்றி—யையா
தாழிலைச் செயிற்றூணுச்சோ ரனைப்போற் றூன்
ழலப் பறையறைதல் காண்.

(உரை.) மெய் ஆகத் தோன்றிவிடும் பொய்யை விசா
க்கில் பொய் ஆய் சுவர்ப்பாம்பு ஆய்ப் போம் அன்றி ஐயா
தாழிலைச் செயில்—விசாரியாதபடியிலே மெய்யாகத்
தான்றும் பொய்யாகிய கருவிக் கூட்டங்களது உண்மையை
ன்மலாவத்தையில் நின்று விசாரித்து அறியின், சுவரில்
ழுதிய பாம்புபோலாய்ப் பொய்யாய்த் தோன்றும்; அஃ
ன்றி, அவற்றை அங்ஙனம் விசாரித்தறிந்து நீக்காது வைத்
க்கொண்டு, அவை போம்படிக்கு, மாணக்கனே ! நீ தவத்
தாழில்களைச் செய்தி யெனின்; (அதுதான்.)

தானு சோரனைப்போல் தோன்றிக் கழலப் பறை
றைதல்—சடமாகிய கட்டைடையைத் தீபத்தால் பாராதபடி
னல் கள்வனைப்போல் தோன்றக்கண்டு வெருண்டு அக்
ள்வன் நீங்கும்படிக்குப் பறை அறைதலோடு ஒக்கும்.

(குறிப்பு) சுவரில் எழுதிய பாம்பிற்குத் தோற்றாவு
ாத்திரமே அன்றிச் சேட்டை இன்மையதுபோல், கருவி
ள எதிரிட்டறிந்தபோது பிரபஞ்சம் தோற்றாவு மாத்தி
மே அன்றி முன்போல் சேட்டியாது ஆகலின், அங்ஙனம்
வமை கூறினர்.

நின்மலாவத்தையில் நின்று அருட்கண்ணால் எதிரிட்
ப் பார்க்கும்போது சடமாய் நீங்கும் கருவிகளை மெய்யாகக்
ருதிக்கொண்டு, அவை நீங்கும்படிக்குத் தவத் தொழிலைச்

ண்ணிப் பெறக்கூடாதோ எனின், மேற்கூறுகின்றார்.

செய்யத் தொடங்கினமையால் இங்ஙனம் உவமை கூறினர். காண் - அசை.

இத் திருவெண்பாவால் கருவிகளினது உண்மையைக் காணின் எல்லாம் பொய்யாய் விட்டு ஞானம் தோன்றும் அன்றி, தவத்தான் அங்ஙனம் விடுதலும் ஞானம் தோற்றலும் இன்றென்று அறிவித்தவாறு காண்க. (கo)

கருவிகளது உண்மையை அறிந்தால் எல்லாம் பொய்யாய்ப் போம் என்றீர். அப் பிரபஞ்சமும் தேகமும் பரிச்சேதம் இன்றாய்ப் போமோ எனின், மேற் கூறுகின்றார்.

உலகத்தை மாயா வுடலைப்பொய் யென்று
லலைகத்தேர் தோலறிவ தல்லால்—விலகித்
துடைத்தொழித்த லாகுமோ வெளப்பனத்திற் சூழ்ந்
கடக்கவிடுந் சாக்கிரம்போற் காண்.

(உரை.) உலகத்தை மாயா உடலைப் பொய் என்றல் அலைகைத் தேர்போல் அறிவது அல்லால் விலகித்துடைத்து ஒழித்தல் ஆகுமோ—மாயாகாரியமாகிய இப் பிரபஞ்சத்தினையும் உடம்பினையும் பொய் என்று அறிவித்தால், பேய்த் தேர்போல் பொய்யாகக் கண்டு அறிவது அன்றி அத்தேகாதி பிரபஞ்சங்களைப் பரிச்சேதமாய் நீங்கித் தள்ளி ஒழிக்கக் கூடுமோ? (நீர் இங்ஙனம் கூறியவற்றால் ஞானமும் அஞ்ஞானமும் கூடியிருக்குமோ எனின்,)

வெளப்பனத் திற் சூழ்ந்தால் கடக்கவிடும் சாக்கிரம்போல் காண்—வெளப்பனவத்தையில் ஒருவனைக் கடக்கும் வழி இன்றி அக்கினி சூழ்ந்துகொண்டால் அவ் வக்கினியைக் கடக்கவிடும் சாக்கிராவத்தைபோல், உன்னைச் சூழ்ந்துகொண்டு நின்ற தேகாதி பிரபஞ்சங்களை ஞானசூரியன்

வந்து தோன்றில் உனக்குப் பொய்யாகக் காட்டிவிடும் என்றும் அறிதி.

(குறிப்பு.) பேய்த்தேர் நீரைப் பொய் என்று கண்டபோது நீர்போல் தோற்றமும் முன்னர் மெய் என்று கண்ட வாசனையும் இருக்கும்; சொப்பனத்தினைக் கடக்கவிட்ட சாக்கிரத்தில் இத் தோற்றமு இன்றி முன் கண்ட வாசனை மாத்திரம் இருக்கும். அங்ஙனம்போல், சுத்தாவத்தையில் நிற்போர்க்கும் சுத்தத்தில் நிற்போர்க்கும் பிரபஞ்சத் தோற்றமும் ஆகலின், அவ் விரண்டு உவமையுங் கூறினர்.

இத் திருவெண்பாவால் கருவிகளது உண்மை அறிந்த விடத்துத் தேகாதி பிரபஞ்சங்கள் முன்போல் மயக்குதலின்றிக் காட்சிவாதனை மாத்திரையாய் நிற்கும் என்று அறிவித்தவாறு காண்க. (கக)

கருவிகள் முப்பத்தாறையும் பொய்யாகக் கண்டு நீக்குதல் அந்த ஞானம் தோன்றுமோ எனின், மேற் கூறுகின்றார்.

பொய்யென்ற வார்த்தை புரையற்று மெய்யாலுல்
மெய்யென் பதுதேட வேண்டுமோ—மையிருளைத்
தீர்த்த வெயிலைத் திரும்பி யசைத்திமைத்துப்
பார்த்ததிலென் சந்தையம்மைப் பார்.

(உரை.) பொய் என்ற வார்த்தை புரை அற்று மெய் ஆதலால் மெய் என்பது தேடவேண்டுமோ—கருவிகள் எல்லாம் பொய் என்று நீ சொன்ன வார்த்தைபோல், குற்றமற்று, உனது அறிவிற்கு அவை பொய் என்பது உண்மையாய்த் தோற்றும் எனின், மெய்யாகிய ஞானம் என்பது வேறு தேடவேண்டுமோ? (அவத்தையைப் பொய்யாய்த்

தோற்றுவித்ததுதானே) ஞானம் அன்றே? ஆயின், இங்ஙனம் தோற்றுவித்த ஞானத்தை யான் கண்டுகொண்டிருக்க வேண்டாவோ எனின்,

மை இருளைத் தீர்த்த வெயிலைத் திரும்பி அணைத்து இணைத்துப் பார்த்து அதில் என் சந்தையும் வைப்பாய்—மயக்கமாகிய ஆணவ இருளைத் தீர்த்த ஞானப்பிரகாசத்தை உன் போதத்தால் எதிரிட்டு அணைத்துப் பார்த்தும் அங்ஙனம் பாராது ஒழிந்தும், அந்த ஞானப்பிரகாசத்தை நீ அஃதாமோ அன்றே என்று நீ என்னை ஐயுறுகின்றாய்? (அங்ஙனம் ஐயுறுது அதனுள் அசைவற நிற்றி,)

(குறிப்பு.) சூரியப் பிரகாசத்தால் இருள் நீங்கி, அப் பிரகாசத்தைக் கண்ட கண் நீது அப் பிரகாசமோ அன்றே என்று அதன்மேல் ஐயுறுது, அவ்வெளியில் ஏகீபாவமாய் நிற்பதுபோல், அருளில் அசைவற நிற்கவேண்டும் ஆகலின், அங்ஙனம் உவமை கூறினர்.

இத் திருவெண்பாவால் கருவிகள் அனைத்தும் பொய்யாக உள்ளபடி அறிதலே ஞானம் என்று அறிவித்தவாறு காண்க. (கஉ)

தேகாதி பிரபஞ்சமெல்லாம் பொய் என்றும், பிறவித் துன்பம் நீது ஆகாதென்றும், ஞானிகளும் ஞானிகள் அல்லாரும் கூறுகின்றார். இவற்றுள் ஞானிகளை அறிவது எங்ஙனம் எனின், மேற் கூறுகின்றார்.

வேண்டாபிறப்பென்ற வார்த்தையினின்மெய்விடய
தீண்டா ததிலே தெரியாதோ—காண்டீ [ந்
நுடம்பு மிகையொன்றி லாமையே நோன்பென்
றடங்க வடங்கிற ரை.

(உரை.) பிறப்பு வேண்டா என்ற வார்த்தையினில்— பிரபஞ்சம் பொய் என்றும், பிறவி ஆகாது என்றும், மெய்ஞ்ஞானிகளும் பொய்ஞ்ஞானிகளும் கூறிய வார்த்தையிலுல், (அவர்களைப் பிரித்துக் காணக்கூடாதாயினும்,)

* உடம்பு மிகை ஒன்று இலாமையே நோன்பு என்றும் அடங்க அடங்கிலுரை மெய்யிடம் தீண்டாது அதிலே- தெரியாதோ காண்பீர்—உடம்பைச் சுத்துரு என்றும், ஓர்ந விடயங்களினும் பற்று இலாமையே நோன்பு என்றும் அறிந்து அத்தேக போகங்களை யான் எனது என்று கருதும் புறத்து நின்ற போதம், அடங்க உள் நின்ற போதம் அடங் கிய மெய்ஞ்ஞானிகளை அவரது உடம்பு விடயங்களைப் பற்றுத னுல் தெரியும் ஆகலின், இக் குறிப்பால் கண்டுகொள்வீர்.

(குறிப்பு.) மெய்யால் காண்பீர் என்றமையால், வார்த்தையிலே காணக்கூடாதாயினும் என்பது வருவிக்கப்பட்டது.

மெய்யோடு இந்திரியங்கள் ஒற்றுமையா யிருத்தலின், "மெய் விடயந் தீண்டா" தென்று ஆகுபெயராகக் கூறினர்.

என்று என்பதனை "உடம்புமிகை" என்றதனோடுங் கூட்டுக.

இத் திருவெண்பாவால் வாசக ஞானிகளையும் அநுபவ ஞானிகளையும் அறிதற்கு எது கூறியவாறு காண்க. (கஉ)

ஆறும் அதிகாரம் விரித்தி விளக்கம் முற்றும்.

---

* "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க லுற்றார்க் குடம்பு மிகை" —குறள், கூசுந.

"இயல்பாகு நோன்பிற்கொன் றின்மையுடைமை மயலாகு மற்றும் பெயர்த்து" —குறள், கூகசு.

துறவு.

எத்தனை உள் துறவு உடையார். ஆயினும் புறப்பற்றோடு இருப்பின் இப்பற்று ஒரோர் காலை அறிவை மயக்கும் ஆகலின், புறத்துறவும் வேண்டும் என்று இதனுள் புறத்துற விலக்கணம் கூறினர். ஆகலின், இவ்வதிகாரத்திற்குத் துறவு என்று பெயராயிற்று.

தேடப் படும்பொருளைச் சிக்கனவா கட்டுரைத்துக் கோடிக் கொருருநிமிடங் கொள்ளுநிறுங்—கூடாத வாணாளை வீண்கழிக்கு மானிடரைப் போன்மயக்கம் பூணார்பொய் கண்டுதுறப் போர்.

(உரை.) தேடப்படும் பொருளைச் சிக்கனவாகப் புரைதீர்த்துக் கோடிக்கு ஒருநிமிடம் கொள்ளுகிறும் கூடாத வாழ்நாளை வீண்கழிக்கும்—தம்மால் தேடப்பட்ட திரவியங்களையெல்லாம் செலவழியாது பத்திரமாகச் சேமஞ் செய்துவைத்துக்கொண்டு, தாம் உடலைவிட்டுப் போங்காலை ஒரு நிமிட காலம் அவ்வுடலில் இருக்கக் கோடி திரவியத்துக்குப் பிறர் கையில் ஆயுள்வாங்கிக் கொள்ளுதலாம் எனிறும் கூடாத இவ்வுடலோடு உயிர் வாழ் நாளைத் தவத்திற் கழியாது அவத்திற் கழிக்கும்,

மானிடரைப் போல் மயக்கம் பூணார் பொய் கண்டு துறப்போர்—பேதை மானிடரைப்போல் தேகாதி பிரபஞ்சங்களை மெய்யாகக் கண்டு, இவற்றில் மயக்கம் பூணார்கள் இவற்றைப் பொய்யாகக் கண்டு துறப்போர்.

(தறிப்பு.) கடவுளர் ஆயினும் அங்ஙனம் ஆயுள் கொடுக்கவும் கொள்ளவும் கூடாது ஆகலின், "கூடாத" என்றார்.

இத் திருவெண்பாவால் இளமைக்கண்ணே வனிதாதி போகங்களைத் துறந்து, ஞானசாரியரை அடைந்து, வீடடைய வேண்டும் என்று கூறியவாறு காண்க. (க)

ஊர்க்குருவி யும்வளர்த்த குஞ்சு மொருமனையிற்
பாக்கனையும் பார்த்திதுநம் பற்றென்றே—மூர்க்க
ரரிபிரம ரிந்திரர்கள் வாழ்வகித்த நம்வாழ்
வொருபொருளோ வென்றிருழிவா ரோ.

(உரை.) ஒரு மனையில் ஊர்க்குருவியும் வளர்த்த குஞ்சும் பாக்கனையும் பார்த்து நம்பற்று இது என்றே மூர்க்கர்—ஓர் மனையில் வாழ்கின்ற ஊர்க்குருவியும், அது வளர்த்த குஞ்சுகளும், அம் மனையில் பூனையும், அப் பூனையினது குட்டிகளும், இளமையில் கல்வினைக்கீடாய்த் தம்முள் உறவாய்க்கூடி இருப்பதையும், முதிர்ந்தபோது தீவினைக்கீடாய் உறவாயிருந்த காமே தம்முட் பகையாய்ப் பிரிந்து போவதையும், அம் மனையுள் இருந்து நாம் பார்த்திருந்தும் அங்ஙனம் வினைக்கீடாய் வரும் மனைவிமக்கள் முதலிய இப் பிரபஞ்சத்தினைத் துறவாது இதன்மேல் மனதுபற்றி இருத்தல் இது என்னைகொலோ? (ஆயின், அவற்றைப் பார்த்திருந்தும் எல்லோரும் இல் வாழ்க்கையோடும் இருக்க இல்லையோ, நீர் இங்ஙனம் கூறியதென்னை எனின், அம் மனைவி மக்கள் முதலிய இப்பிரபஞ்சம் வினைக்கீடாய் வந்ததென்று அறியாது அப் பிரபஞ்சத்தோடு கூடி வாழ்பவர்) மூர்க்கர்.

அரி பிரமர் இந்திரர்கள் வாழ்வு அநித்தம் நம் வாழ்வு ஒரு பொருளோ என்று ஒழிவாரோ—அப் பிரபஞ்சம் இருவினைக்

கேடாய் வந்ததென்று அறிந்த உத்தமாயினர் யாவர்க்கும் மேலாய அரி பிரமர் இந்திரர் முதலிய தேவர்கள் வாழ்வும் அநித்தியமென்று வேதாகமங்கள் கூறுதலான், நமது அற்ப வாழ்வு இஃது ஓர் பொருளோ என்று கருதி, அப் பிரபஞ் சத்தைத் துறவாது ஒழிவாரோ?

(குறிப்பு.) ஒருவன் கல்வினை அநுபவிக்குங் காலத்துத் தாய் தந்தை மனைவி மக்கள் சுற்றம் கட்பு இவர் முதலியோர் உறவாயிருந்து இசைந்துசெய்வர், அவன் தீவினை அநுபவிக்குங் காலத்து அங்ஙனம் உறவா யிருந்தவர் தாமே பகையாய் அதி தஞ் செய்வர் ஆகலின், இவர் இருவினைக்கேடாய் வந்த வென்று அறிந்து துறக்கும்படிக்கு அவைகளை உவமை கூறினர்.

இத் திருவெண்பாவால் மனைவியாதி குடும்பம் வினைக் கேடாய் வந்ததன்றித் தமக்கு உறவு அன்றென்பதும், அநித் தியம் என்பதும் அறிவித்தவாறு காண்க. (உ)

இங்ஙனம் எல்லாவற்றையும் துறந்தவர் யாவர் எனின், மேற்கூறுகின்றார்.

பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யைப்பரவி
விட்டுவிட மாட்டார் வெறுவீடர்—வெட்ட
வெறுவெலும்பை நாய்கறண்ட வேந்தர்வர நாய்பா
துறுமுவதை காட்டுவோ மோ. [ர்த்

(உரை.) பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரியைப் பரவி விட்டுவிடமாட்டார் * வெறு வீடர்—அளவற்ற செல்வரா யிருந்தும் அச் செல்வங்கள் எல்லாம் துரிசறத்

* அநுபவிப்பதற் கில்லாமையால் விட்டோர் போன்றிருப்பர்.

துறந்த பட்டினத்துப்பிள்ளை காயஞரையும், பத்திரகிரி காயஞரையும் தோத்திரம்பண்ணி, மனைவியாதிய பற்றுக்களை விட்டுத் துறக்கமாட்டார்கள் மிகுந்த மிடியரா யிருந்தார்; (ஆயினும் மனைவி மக்கள் முதலாயினோரை யாம் விடுத்துத் துறந்தோமேல் அவரை அயலார் கைக்கொண்டு போகாரோ எனின்,)

வெட்ட வெறு எலும்பை நாய் கறண்ட* வேந்தர் வர நாய் பார்த்து உறுமுவதைக் காட்டுவோமோ—ஊண் சிறிதும் இன்றிய வெள்ளெலும்பை ஓர் நாய் தனது பற்கொடு கறண்ட, அந்நாய் முன்னர் அரையர் எதிர்வர, அவ்வெலும்பை அவர் கவர்ந்துகொள்வர் என்று கருதி அவரைப் பார்த்து உறுமுவதைப்போல், யாமும் காட்டுவோமோ?

(குறிப்பு.) அளகேசனைப் போன்ற செல்வத்தினையும், அருந்ததி போன்ற கற்பினையுடைய மனைவியையும், காமனைப் போலும் கட்டழகினையும் துறந்தோர் பட்டினத்துப் பிள்ளை நாயனரும், பத்திரகிரி நாயனரும் ஆகலின், அவரைத் துறந்தோர் என்று எடுத்துக்காட்டி, அம்மூவகையுள் ஒன்றேனும் இல்லாரும் அவரைப்போல் துறக்கமாட்டாமையால், "விட்டு விட மாட்டார் வெறுவீடர்" என்றார்.

எலும்பு கறண்டும் நாய்க்குத் தனது வயிற்றில் அதுதைத்த துன்பந் தெரியாது இன்பமாத் தோற்றல்போல வனிதாதி போகங்களாகிய துன்பத்தை ஆணவம் இன்பம் போல் மாறுபடுத்திக் காட்ட இன்பமாகக் கருதலான், "வெறுவெலும்பை நாய்கறண்ட" என்றார்.

---

* பற்களால் நெருக்கிப் பறண்ட.

ஒழிவிலொடுக்கம்

தான் பற்றிய எலும்பை அரையர் கவர்வரெனக் கருதி, அவரைப்பார்த்து உறுமுவதுபோல, தாம் பற்றிய குடும்பத்தைப் பிறர் கவர்வரெனக் கருதிக் கூறலான், "உறுமுவதைக் காட்டுவோமோ" என்றார்.

இத் திருவெண்பாவால் செல்வம் இளமை அழகு முதலனவற்றுள் சிறந்திருந்தும், அவற்றில் பற்று ஓரளவளவும் இன்றி, அவற்றை யெல்லாம் துன்பமென்று துரிசறக் கைவிட்ட பட்டினத்துப்பிள்ளை நாயனார் பத்திரகிரி நாயனார் போன்று துறந்தோரே எல்லாவற்றையும் துறந்தோராவர் என்பதும், அச்செல்வம் முதலியவற்றுள் ஒன்றேனும் இன்றுகவும், துன்பந் தருதற்கு இடமாகிய மனைவியாதி குடும்பத்தை இன்பமெனக் கருதிக் கைவிடற்கு அஞ்சுபவரே ஆனவத்தால் மறைப்புண்டவராவர் என்பதும் அறிவித்தவாறு காண்க. (நே)

நீர் இங்ஙனங் கூறியவாறே துறந்தோர் பிறப்பு நீங்குவரோ எனின், மேற் கூறுகின்றார்.

நாடுநகர் வீடுடையா டாய்தந்தை நட்புக்கள்
மாடுகுலம் பொன்னுடம்பின் வாதனைகள்—கூடத்
தொடுத்தவலைக் கண்ணிழந் தொடக்கிலனே யிப்போ
விடப்பெறுவா ரென்பிறப்பார் மேல்

(உரை.) நாடு நகர் வீடு உடையாள் தாய் தந்தை நட்பு மக்கள் மாடு குலம் பொன் உடம்பின் வாதனைகள்—நாடும் நகரும் வீடும் மனைவியும் தாயும் தந்தையும் நட்பும் மக்களும் மாடும் சாதியும் திரவியமும் இவை முதலிய உடம்பு வாதனைகளும்,

கூடத்தொடுத்த வலைக்கண்ணித்தொடக்கு இதனை இப்போ விடப்பெறுவார் மேல் என் பிறப்பார்—தாம் அகப்படப் பிணித்த வலையும் கண்ணியும் ஆகிய தொக்தனை என்றறிந்து, இத் தொக்தனையை இப்போது விடப்பெறுவார் இனிமேல் என் பிறப்பார்?

(தறிப்பு.) உடம்பின் வாதனைகள் என்றமையால் ஆடை ஆபாணம் யானை குதிரை கவிகை சிவிகை சாமரை முதலியவும் கொள்க.

இங்ஙனம் கூறிய எனதென்னும் போகப்பற்றை நீத்தத் தவஞ் செய்வோர்க்கு யானென்னும் தேகப்பற்றும் அறும், இத்தேகப்பற்று அறவே இவற்றை யான் எனதென்று புறத்து நின்ற போதம் அறும், இப்போதம் அறவே உள்நின்ற போதம் அசுத்தவாசனை பண்ணை சுத்தவாசனை பண்ணும், இவ்வாசனையால் ஞானம் கிடைக்கும், இந் ஞானத்தால் வீடுளதாம்; ஆகலின், "என் பிறப்பார் மேல்" என்றார்.

இத் திருவெண்பாவால் போகவாதனைகள் எல்லாம் பற்றறத் துறந்தோர் தேகவாதனையாதிகள் அற்று ஞானத்தால் வீடடைவது மெய்ம்மை ஆகலின், அவர்க்கு இனி என்றும் பிறப்பு இன்று என்பது அறிவித்தவாறு காண்க.

நீர் கூறிய மனை ஆதிய பற்றுக்களை எல்லாம் துறந்து பொன்னை மாத்திரம் பிடித்துக்கொண்டு தவஞ்செய்யலாகாதோ எனின், மேற் கூறுகின்றார்.

தின்னிற் நிமிரில் விடம்பிடித்துத் தீர்ந்துவிடும்
பொன்னை நினைக்கப் பொருதுகாண்—பின்னை

மருந்தாலு மந்திரத்தி னலுந் தவிராப்
பெரும்பாவம் பெண்ணிற் பொரிது.

(உரை.) தின்னில் திமிரில் விடம் பிடித்துத் தீர்த்து விடும் பொன்னை நினைக்கப் பொருது பின்னை மருந்தாலும் மந்திரத்தினலும் தவிராப் பெரும்பாவம்—கோபாதிகளாகிய திமிரினால் விடம் உண்டால், அவ்விடம் சிறிதுபோது தாழ்த்துத் தலைமீக்கொண்டு, பின்னர் மணிமந்திர ஔடதங்களால் தீர்த்துபோம், பொன்னைக் காத்தானும் பற்றுதவாக்கானும் கூறுது மனத்தால் நினைக்கவே, அப் பொன்னையாகிய விடம் அரைக்கணைமேனும் தாழாது, அந் நினைவினும் விரைந்து தலைமீக்கொண்டு, பின்னர் மணியாலும் மருந்தாலும் மந்திரத்தாலும் தீராத பெரும்பாவம் ஆகலின்,

பெண்ணில் பொரிது—நீ விடுக்கின்றேன் என்ற பெண்ணையவிடத்தைப் பற்ற இப்பொன்னையை விடம் மிகவும் பொரிது; (இதனை மனத்தானும் நினையாது விடவேண்டும்.)

(குறிப்பு.) குறந்தோர் பொன் பிடித்தால் அதனைப் போதுகாத்தற்கு இடம் பிடிக்கவேண்டும்; அஃதன்றி, அப் பொன்னை வளர்த்தற்கு அவாத் தோன்றி, அபக்குவர்க்கு ஞான சாத்திரங்களைக் கூறி, பொன் கொடுத்தார்மேல் விழைவும், கொடாதார்மேல் வெகுளியும் தோன்றும்; இவை தோன்றவே குறவால் வரும் கவப்பயனும் இன்றி, முன் பெண்ணேனுங் கூடிச் செய்த இல்லறப்பயனும் இன்றிக் கேடுவரும்; ஆகலின், "பெரும்பாவம் பெண்ணிற்பொரிது" என்றார்.

கான் - அரை.

இத் திருவெண்பாவால் பொன் மனத்தால் நினைப்பி
றும் மாறுமயக்கம் தருதலானும், ஈட்டல் ஆதியான் விழைவு
வகுளியாதிகள் அடுத்துத் தவப்பயன் அன்றி இல்லறப் பய
னும் அழிதலானும், பெண்ணாசையினும் பெரும்பாவம் தரு
வது ஆகலின், அதனைப் பற்றலாகாது என்பது அறிவித்த
வாறு காண்க. (சி)

இங்ஙனந் தேகாதி பிரபஞ்சம் எல்லாம் பொய் என்று
ர் சொல்லக்கேட்டதே அன்றி மற்றியாவரும் சொல்லக்
கேட்டிலேன் என்ற மாணாக்கனை நோக்கி, மேற் கூறு
கின்றார்.

செல்வ மிளமை புடம்புபேய்த் தேரென்று [லே
சொல்லுவதென் காணீரோ சுட்டதுபோல்-யொல்
விடுவோர் பிறப்பிறப்பின் மீளார்கண் மீண்டாற்
றொடுமோ சிவனைத் தொடா.

(உரை.) செல்வம் இளமை உடம்பு பேய்த்தேர் என்று
சொல்லுவது என் காணீரோ—செல்வமும் இளமையும் உடம்
பும் இவை முதலிய பிரபஞ்சங்களும் கானற் சலம்போலப்
பொய்யென்று யாம் கூறவேண்டுவது என்னை? இவை மெய்
போலத் தோன்றி அழிவனவற்றைத் தாம் காட்சிப் பிரமாண
மாகக் காணார் கொல்லோ? (ஆயின், எல்லோரும் ஞானத்
தால் பிறப்பு அறுமென்று கூற, நீர் துறவால் பிறப்பறும்
என்றும் கூறியது என்னை எனின்,)

சுட்டு அது போய் ஒல்லை விடுவோர் பிறப்பு இறப்பில்
மீளார்கள் மீண்டால் தொடுமோ சிவனைத்தொடா—தேகாதி
பிரபஞ்சங்களை யான் எனது என்று சுட்டி அறியும் இச்சுட்
டுப் போதம் போய், அப் பிரபஞ்சத்தைச் சிக்கிரத்தில் விட்

டுத் துறப்போர் பிறப்பிறப்பில் மீண்டு வாராரர்கள், ஞானக் குறைவினால் மீண்டார்களேனும், (மூன்றுறந்து தவம்பண்ணிய வாசனையால் அப் பற்றுகளைக் கடந்து நிற்பரே அன்றி, அவரைப் பற்றித் தீண்டுமோ? தீண்டாது; ஆயினும், பிறப்பில் மீண்டோரைத் தீண்டாதோ எனின், அவர்) சிவனைப் போலும் ஒன்றேனும் பற்றுதலுடையார் ஆகலின், தீண்டாது.

(குறிப்பு.) அநித்திய விவேகந்தோன்றிய அக்கணமே தாழ்த்திராது எல்லாவற்றையும் விடவேண்டும் ஆகலின், "ஒல்லைவிடுவோர்" என்றார்.

மூற்பிறப்பில் அவர் உடையார்க்கு இப் பிறப்பினும் அது தொடர்தல்போல், மூற்பிறப்பில் அவா அறுதி உடையார்க்கு இப் பிறப்பினும் அவ் அவா அறுதியே தோற்றம் ஆகலின், "சிவனைத்தொடா" என்றார்.

இத் திருவெண்பாவால் உடம்பு முதலிய பிரபஞ்சந் தோன்றி அழிவது பிரத்தியகூமாக இருத்தலின், காணற் சலம்போன்று அழிவதென்று ஒருவர் கூறக் கேட்க வேண்டுவது இன்றென்பதும், இங்ஙனம் பிரத்தியகூமாயிருப்பினும் அறியார் அஞ்ஞானிகள் என்பதும், சுட்டறிவு போய்ப் பிரபஞ்சத்தை அநித்தியமென்று அறிந்து விரைந்து விட்டுத் துறப்பதே ஞானமென்பதும், இத் துறவுடையோர் ஈண்டு மீண்டும் பிறவார் என்பதும், தவக்குறைவால் மீண்டோர் ஆயினும் ஒன்றினும் பற்றுதல் அற்றிருப்பர் என்பதும் அறிவித்தவாறு காண்க. (சு)

இந்த அவா அறுதியில்லை வரப்பட்ட இன்பம் என்னை என்ற மாணாக்கனை நோக்கி, மேற் கூறுகின்றார்.

ஆசையினை லற்பசுக மாயழிந்தாற் போரின்ப
மாசையின் போக்கென்ற றிய லாகாதோ—வாசை
ளிகைக் கழுக்குவந்த நாசமென நாடித்
தெளியப்போ மற்றிவையைந் தும்.

(உரை.) ஆசையினல் அற்பசுகம் ஆய் அழிந்தால்
போரின்பம் ஆசையின் போக்கு என்று அறியல் ஆகாதோ—
ஆசையினலே போதம் சகமுகமாய்ச் சென்று விடயங்களில்
அழுந்த, தமக்கு அவற்றுள் அற்பமாய் சுகந்தோன்றி அழி
யும் ஆனல், இவ்வாசை நாசமே சிவத்தில் தோன்றும்
போரின்பம் பெறுதற்கு எது என்று அறியலாகாதோ?
ஆயின், அவ்வாசை போமாறு எங்ஙனம் எனின்,)

ஆசை களிகைக்கு அழுக்கு வந்த நாசம் என நாடித்
தெளிய மற்று இவை ஐந்தும் போம் — அவ்வாசை போதத்
தின்கண் எறுவது செய்யாதி வார்த்து அடைக்கும் மூங்கிற்
குழாய்க்கு அழுக்கு வந்த நாசம்போல, தமக்கு நாசமாம்
என விசாரித்தறிய, அவ்வாசையின் போதமாய் அவ் விட
யங்களிற் பிரிந்து செல்லும் இவ்வைந்து அவாவும் நீங்கும்.

(குறிப்பு.) ஆன்மா ஆசையினல் விடயத்தில் அழுந்திச்
சிற்றின்பம் பெறுதல்போல், அவ்வாசை நாசத்தால் சிவத்தில்
அழுந்திப் போரின்பம்பெறும் ஆகவின், "போரின்ப மாசை
யின் போக்கென் றறிய லாகாதோ" என்றார்.

தேன் நெய் எண்ணெயாதி வார்க்கும் மூங்கிற்குழாய்ச்
சிறு துவாரத்தின்கண் மரவட்டை முதலிய நுழைந்தால்
அதில் சுழல்வதே அன்றி, அழுக்கினல் மீளமாட்டா; ஆக
வின், முன்போல் தேனெதி வார்த்த அங்கீகரியாது அந
னைப் புறம்பாய் விடப்படும். அதுபோல், ஆசை போதத்

தில் எறி மிகுந்தபோது எவ்விதத்தாலும் மீளாது; அதனால், அப்போதத்தில் வீட்டின்பத்திற்கு எதுவாய துறவு மெய் யுணர்வு முதலிய நற்குணங்கள் எரு, இக் குணங்கள் எரு மையின் முன்போல் பிறவித் தன்பத்தையே பெறும். ஆக வின், அங்ஙனம் உவமை கூறினர்,

நளிகையில் நவட்டையாதி நுழையும்போது இன்பம் போல் எளிதில் நுழைந்து மீளமாட்டா. அதுபோல் போதத் தின்கண் ஆசை ஏறும்போது இன்பம்போல் தோன்றி, எளிதில் ஏறி மீளாமைக்குங் கொள்க. நளிகை என்பது மூங்கிற் குழாய், அது திரைச்சொல்.

இத் திருவெண்பாவால் அவாவினால் அற்ப இன்பம் பெறுதல் போல், அவா அறுதியால் போன்பம் வரும் என் பதும், அவாவினால் தமக்கு நேரிடும் அநர்த்தத்தை உண்மை யாய் விசாரித் தறியின் அவ்வவா அறுதி வரும் என்பதும் அறிவித்தவாறு காண்க. (எ)

இனித் துறவினது முடியும், துறந்து செய்யும் தவத் தினது முடிவும், அடியேற்கு அருளிச்செய்ய வேண்டும் என்ற மாணைக்கனை நோக்கி மேற் கூறுகின்றார்.

உதயந் தொழப்போவார்க் குள்ளும் புறம்பும்
புதையவொளி வீசுமா போலே—பதிமோகி
தீக்காட்டி லேகொடுக்கச் சென்றவா கண்டக்காற்
றூக்காத தன்றே தவம்.

(உரை.) உதயம் தொழப் போவார்க்கு உள்ளும் புறம்பும் புதைய ஒளி வீசுமா போலே — சூரிய உதயம் தொழச் செல்வோர்க்கு உள்ளும் புறம்பும் இருள் மறைய ஒளி வீசுமாறு போலே, (மனை சுதர் முதலிய பற்றுக்கள்

எல்லாவற்றையும் விட்டு, அவற்றின்மேல் உள்ளத்தெழும் அவாவினையும் அறுத்து, கண்ட விடயங்கள்மேற் சென்று பற்றும் இந்திரியங்களையும் அடக்கி, உள்ளும் புறம்பும் ஆசையாகிய இருளற நிராசையாகிய ஒளி வீச நிற்றலே துறவினது முடிவு.)

பதி மோகி கொடுக்கத் தீக்காட்டிலே சென்ற ஆறு கண்டக்கால் தாக்காதது அன்றே தவம்—தனது புருடன் மேல் அதி மோகியா யிருந்தாளாள் அவன் மரித்தகாலே அவனுக்குத் தன்னைக் கொடுக்கச் சுடுகாட்டிற் சென்றவாறு கண்டு (அவனைப்போலும் தற்போதத்தைச் சிவனுக்கு ஊணாகக் கொடுத்துத் தாம் ஒன்றேறும்) தாக்கற்றிருத்தல் அன்றே தவத்தினது முடிவு?

(துறிப்பு.) உதயந் தொழுவார்க்குக் கண் விழித்த போதும் இமைத்தபோதும் ஒளிவீசுதல் போலும், துறந் தோர்க்குப் பொறிகளால் விடயங்களைக் கண்டபோதும் காணாதிருந்தபோதும் உள்ளும் புறம்பும் நிராசையோடு இருக்கவேண்டும் ஆகலின், அங்ஙனம் உவமை கூறினர்.

தவமென்றமையால் துறவு வருவிக்கப்பட்டது.

இத் திருவெண்பாவால் உள்ளும் புறம்பும் நிராசையோடிருப்பது துறவினது முடிவென்பதும், போதம் ஒழிந்து ஒன்றேறும் தாக்கற்றிருப்பது தவமுடிவென்பதும் அறிவித்தவாறு காண்க.

இங்ஙனம் நிராசையோடிருந்தோர்க்குத் தற்போதம் அறுமோ என்ற மாணாக்கனை நோக்கி, மேற் கூறுகின்றார்:

ஊனைமமணி யாட்டுகினு மோசையழிந் தாற்போல
வாமதுபோ னிற்க வரிதுகா—ணுமாய்

வளர்ந்த வசத்தையெலா மாளமரக் காலா
லளந்தெறிந்து போட்டதுபோ லாம்.

(உரை.) உலைமை மணி ஆட்டுகிலும் ஓசை அழிந்தால் போல ஆம்—நாவிழந்த மணியைப் பிடித்து அசைப்பினும் ஓசை ஒழிந்து நின்றாற்போல, (பஞ்சவிடயங்களும் வலியவந்து ஊடுப்பினும் அதிதீவிர பக்குவர்க்குப் போதங் கலங்காது நிராசையே) உண்டாம்;

அதுபோல் நிற்க அரிது ஆம் ஆய் வளர்ந்த அசத்தை எலாம் மான மரக்காலால் அளந்து எறிந்து போட்டதுபோல் ஆம்—அவர் அங்ஙனம் நிற்குமதுபோல் நிற்க மற்றைய பக்குவர்க்கு மிகவும் அரிது, (நாலு உபாயத்தானும் அங்ஙனம்) நிற்க வருமாயின் ஆசையால் முன்னர்ப் போதம் மேலிட்டு மேன்மேல் வளர்ந்த அதனது சேட்டை எல்லாம் இறந்துபோம்படி அறிவாகிய மரக்காலால் இவ்வள வென்று அளந்து புறம்பாய் எறிந்துபோட்டதுபோல் ஆம்.

கான் - அசை.

(குறிப்பு.) நிராசையோ டிருப்போரைக் கருவிகள் * சேட்டியாது நீங்கும், அக் கருவிகள் நீங்கவே திருவருள் தோன்றும், அத் திருவருளால் போதத்தை ஈதென்று அளவிட் டறிந்து ஒழிக்கலாம் ஆகலின், இங்ஙனம் உவமை கூறினர்.

இத் திருவெண்பாவால் நிராசை உடையோனை வலித்து விடயங்கள் அடுக்கினும் போதம் அசையாது ஆகலின்,

---

* தொழிற்படுத்தாது அல்லது குணக்கேடான தொழில்விளைக்காது.

நிராணை வின் போத ஒழிவு தானேவரும் என்பதும், இங்ஙனம் இருத்தல் மற்றைய பக்குவர்க்கு அரிதென்பதும், அங்ஙனம் ஆயினும் அவர்க்கும் உபாயத்தான் அவாவறுதி வருமாயின் அப்போதச் சேட்டை அளவிட் டெறியப்படும் என்பதும் அறிவித்தவாறு காண்க.

தநுகரணபுவன போகங்களில் சிறிதேனும் பற்றின்றி நிற்றற்கு உபாயம் எங்ஙனம் என்ற மாணாக்கனை நோக்கி, மேற் கூறுகின்றார்.

தனுவாதி நான்கினுக்குஞ் சார்வழிந்து சற்றும்
நினையா திளைப்பாறி நின்றூல்—மனையாமோ
காந்தக் கடத்தூசி காற்றற்ற தீபமென
ஆந்தத் துவங்களய லாம்.

(உரை.) தனு ஆதி நான்கினுக்கும் சார்வு அழிந்து சற்றும் நினையாது இளைப்பு ஆறி நின்றூல் மன ஆமோ—போகமும் நானன்று புவனமும் நானன்று தநுவும் நானன்று கரணமும் நானன்று என்று உள்ளபடி அறிந்து, நியதிகளாந்து, அத்தநுவாதி நான்கினிடத்தும் யான் என தென்று சார்ந்துநின்ற போதச்சார்வு கெட்டு, அவற்றை மீட்டுச் சற்றும் பற்றுது அருளில் இளைப்பாறி அசைவற நின்றூல், மனையாகிய புவனத்தினிடத்தும், அம் மனையைப் பற்றியிருந்த வனிதாதி போகத்தினிடத்தும், முன்போல பற்றுண்டாமோ ? (ஆயின், புவனபோகங்களில் பற்றின்றி நிற்பதும் தநுகரணங்களிற் பற்றின்றி நிற்பது எங்ஙனம் எனின்,)

காந்தக் கடத்து ஊசி காற்று அற்ற தீபம் என ஆந்தத்துவங்கள் அயல் ஆம்—காந்தக் கடத்திற்கு எதிர்ந்த

மையோடை பற்றியும், அகலாட் டிடங்கோடை பற்றுகமும் றிருந்த காக்கைடன் வரிகோடையும், காற்றில் றிருந்த கோடை யலைக்கும் காற்றின் றியகோடை யலையாகும் றிருந்த காற்றற்ற தீபம்போலும், (அத் தகைகளைக்கோக் தணைக்கரியமாய்க் களை நிற்பினர், அலற்கோறும் காக் கற்பை நிற்பதை உள்ளடங்கும், (அலற்கோறும் தகைக்கற்பை நிற்கவே மற்றைய) தகுதிகளைக்கும் அடங்காய் நிற்கும்.

(குறிப்பு :-) தகுவாதிரைக்கும் கறைக்குகோடை சுழன்ற கள்ளமை திருவைகுட்கள்ள நின்றகோடை றென்னையால், "றென்னைப்பாறி" என்றார்.

காக்கைக் கடைத் திற்று வரிச் முகமாயகோடை பற்றிய வரைசி அகலாட் டிடங்கோடை பற்று நிருந்தகோடை. சகமுகமாய் நின்ற கோகுவிளை யாலனைன்ற பற்றிய கோடையும் அகமுகமாய் நின்ற திருவைகுள்ள வகைக்கோடை அகக் காலைக்கை யாலனைன்ற பற்றுக வகலி, "காக்கைக்கடைக் காகி" என்றும், அப் பாலனை கோக தகலாலைக்கோடை கோடையும் பற்றுக நின்றகோடை காலையும் அற்கோடையும் காலைக்கோடை கோடை நின்ற கோடைக்காய் நின்றும், "காற்றற்ற தீபம்" என்றும், காலைக்கை வற்கோடை அக் காலைக்காலினை கோட்டைடக்கு வகுவாய் காலைநிக்கும், அக் காலைதிகலைப் பிகோகம் பன்னிறும் சுத்த தகுவாய்களாரும் கீர்குப்; ஆகலின், "தகுவாய்க் காயலாம்" என்றார் கூறினார்.

இக் திருவைன்பாலைக் பாலனை கோகங்காகோக் காண் றென்னைப்பாறி வரைக்கு, அலற்றிற்கட் காக்கு நின்ற கோகத்தாய் கிடப்ப, அருட்காகி னிற்பாரும்

புவனை போகப் பற்றறும் என்பதும், தருகரணங்களைத் தனைக்கு அந்நியமென்று அருளாய் நிற்பின் அத் தருகரணப் பற்றறும் என்பதும், இங்ஙனம் அறவே மற்றைத் தத்துவங்கள் தாமே அறுமென்பதும் அறிவித்தவாறு காண்க. ()

உத்தமராயினோர் கற்புடைய மனைவியைத் துறப்போ என்ற மாணாக்கனை நோக்கி, மேற் கூறுகின்றார்.

நாயலனை நெய்விரும்பி நக்குவது நஞ்சிட்ட
பாயசமு மெய்ப்பரிசம் பாலைவமிகச்—சாயாநீர்
வேட்கை யசணமிடம் விட்டுன்மீன் வண்டிலைவயி
சாட்சியைக்கண் டோர்துறவா தார். [ன்

(உரை) நாய் தலைக நெய் விரும்பி நக்குவதும் நஞ்ச இட்ட பாயசமும் பாலை மெய்ப் பரிசம் மிகச் சாயா நீர் வேட்கை—நாயானது வாள்வாயில் தடவிய நெய்யை விரும்பி அவ்வாள் வாயை நக்குவதேபோலும், விடங்கலந்த பாயசத்தை ஒருவன் சுவையென விரும்புவது போலுமாகும், பாலையாதல் மெய்ப்பரிசத்தை இன்பமாய் விரும்புதல் ஆகலினும், பொய்யாகிய அப்பாலையாதல் மெய்ப்பரிசத்தை மெய்யாகக் கண்டு அநுபவிக்க விழைதல் மிகவும் பொய்யாகிய கானல்நீரை மெய்யாகக் கண்டு தாகத்திற்கு உண்ண விரும்புதல் போலாம் ஆகலினும்,

அசுணம் இடம் விட்டில் மீன் வண்டு இவையின் சாட்சியைக் கண்டு துறவாதார் ஆர்—அசுணப்புள் சத்தத்தானும், யானை பரிசத்தானும், விட்டிற்பூச்சி உருவத்தானும், மீன் இரதத்தானும், வண்டு கந்தத்தானும் கெடுமென இவைகளைச் சாட்சியாகக் கண்டுறலானும், இவ்வைவர்க்கு விடயக் கழகம் உளவாகிய அப் பாலையரைத் துறவாதார் யாவர்?

(குறிப்பு.) வாள்வாயின் மெய்யை நக்கின காய்க்கும், நஞ்சிட்ட பாயசம் உண்டோரை நக்கும், முன்னர் அணுவள வின்பம்போல் தோன்றி, பின்னர் அதனல் மலையளவு துன் பம் வருவதுபோல் அநுபவிக்கும்போது சிறிது இன்பம் போல் தோன்றிப் பின்னைத் துன்பம் வரும் என்பதும், பொய்யாய்த் தோன்றும் கானல் நீரை மெய்யாய்க் கருதி உண்ணத் தொடங்கினாற்போல், பொய்யாய்த் தோன் றும் பாவையரை மெய்யாய்க்கருதி அநுபவிக்கத் தொடங் குவ தென்பதும், ஓரோர் விடயத்தை விழைந்து ஒவ் வொன்று கெடுமெனில் ஐந்து விடயங்களும் உளவாகிய பாவையரை விழைந்தால், அவரால் வருங் கேட்டிற்கு அள வின்றென்பதும் இதனுற் காண்க.

இத் திருவெண்பாவால் பெண்கள் இன்பம் மிகச் சிறிதென்பதும், அதனல் வருந் துன்பம் மிகப் பெரிதென் பதும், அவர் கூட்டுறவு மாயை யென்பதும், அவர்கள் செய்யும் ஐம்புல நுகர்ச்சி பெருங்கேட்டைத் தருமென் பதும், இங்ஙனம் அறிந்தோர் தம் மனைவி அருந்ததிக் கற்பி னள் ஆயினும் துறப்பரென்பதும், அறிவித்தவாறு காண்க.

எல்லோரும் மனைவி முதிய குடும்பத்தோ டிருந்து, இன்பங்களை அநுபவித்துக்கொண்டு பூரிப்போடும் இருக்க அக் குடும்பத்தை நீ துன்பமென்றீர், இஃதென்ன எனின் மேற் கூறுகின்றார்.

இடும்பைக்கே கொள்கலமா யேழ்நரகுக் கீடாங் குடும்பத்தைக் குற்ற மறைக்கி—னடுங்காரோ வைவர்க் கொருவ னறுதொழிலைச் செய்தலாம் மெய்யைப்பொய் யாக்கி விடும்.

(உரை.) இடும்பைக்கே கொள்கலம் ஆய் எழ் காகுக்கு சுக ஆம் குடும்பத்தைக் குற்றம் மறைக்கின் கடுங்காதோ— அஞ்ஞானிகள் இம்மைக்கண்ணே துன்பங்களை எல்லாம் தாம் அநுபவித்தற்கு எற்றுக்கொள்வதாய் கப்பலாய், மறுமைக்கண்ணே எழுவகைப் பிறவியாகிய எழுவகை காகத்தையும் உண்டாக்கும் கணவதையினையுடைய மனை சுதர் முதலிய குடும்பத்தை இங்ஙனம் இகபாங்களினும் துக்கத்தைத் தருவதென்று அறியார்; இங்ஙனம் அறியவொட்டாது ஆணவமாகிய குற்றம் அவரை மறைத்தலால், இவ்வாணவக் குற்றம் நீங்கினோர் குடும்பக் குழாத்தைக் கண்டாலும் உளம் வெறுவி கடுக்கம் உறார்! கொலோ? (ஆயின், நீர் மெய்யென்று கூறிய சிவம் ஒருவர்க்கும் தோன்றாதிருப்பானேன் என்னின்,)

ஐவர்க்கு ஒருவன் அறுதொழிலைச் செய்தலால் மெய்யைப் பொய்யாக்கிவிடும்—ஐந்து இந்திரியங்கட்கும் ஓர் முதல்வனாகிய ஆன்மா தன் விந்திரியங்களால் அறிந்து அநுபவிக்கும் விடய சுகத்தின் பொருட்டு உழவு முதலிய அறுவகைத் தொழிலில் முயற்சிப்படலால் இம் முயற்சி அச் சிவத்தைத் தெரியவொட்டாது பொய்யாக்கிவிடும்; (இதனை நீ அறிதி.)

(குறிப்பு.) குடும்பத்தால் இம்மைக்கண் தீதகதக்கம் மறுமைத்துக்கங்கள் இடையறாது வருதலின், "இடும்பைக்கே கொள்கலமாய்" என்றும், இக் குடும்ப வாசனையால் மறுமைக்கண் பிறவிகள் தொன்றுதொட்டு வருமாகலின், "எழ்காகுக்கிடாம்" என்றுங் கூறினர்.

"அறுதொழிலைச் செய்தலால் மெய்யைப் பொய்யாக்கிவிடும்" எனவே குடும்பத்தின் பொருட்டுச் செய்யும் ஆறுவகைத் தொழில்களின் முயற்சியை விட்டுச் சிவயோக

முயற்சியில் தொடங்கின் மெய்ப்பொருள் தோற்று மென்பதாயிற்று. அறுவகைத் தொழில்களாவன—உழவு, தொழில், வாணிகம், எழுத்து, சிற்பம், பாதம் இவை ஆறு மெனக் கொள்க. (கூ)

உத்தம பக்குவாராயினோர் குடும்பத்தோடும் கூடியிராள் என்று இன்னுஞ் சூறுகின்றார்.

குரங்கிற் றுனிச்சி குடும்பக் குழாமும்
பெருங்குப்பை யிற்கரடிப் பெண்ணும்—பொருந்துவ
காலனுந் தீயுங் கடலுமிருங் கல்லுமாய்
மேலு நரகாய் விடும்.

(உரை.) குரங்கின் துனிச்சி குடும்பக் குழாமும் பெருக் குப்பையில் கரடிப் பெண்ணும் பொருந்துவரோ—ஓர் குரங் கைப் பல குரங்கு வந்து சேட்டித்தல்போல, தாய் தந்தை சுதர் சுற்றம் முதலியோர் தம்மை வந்து வாதிக்கும் குடும்பக் கூட்டத்தையும், அக் குடும்பக் கூட்டமாகிய பெரிய மலைக் குப்பைக்கண் கரடிபோலும் பற்றப்பட்ட பெண்டிரது கூட்ட றவினையையும், பொருந்தியிருப்பரோ உத்தமராயினோர்? (ஆயின், எல்லோருடனும் அவரோடுங் கூடியிருக்க இல்லையோ? இவரென்ன அங்ஙனம் இராதுபோவது எனின்,)

காலனும் தீயும் கடலும் இருங்கல்லும் ஆய் மேலும் நரகாய்விடும்—அக் குடும்பக் கூட்டம் காலனைப்போலும், தீயைப்போலும், கடலைப்போலும், பெரிய மலையைப் போலும், இம்மைக்கண்ணே தன்பால் தருவதாய் மறுமைக் கண்ணும் அதனோடுங் கூடியிருக்க வாசனையால் பிறப் பாகிய நரகத்தையும் தருவதாய்விடும். (எனை அறிந்து அதனோடுங் கூடியிராள்.)

(குறிப்பு.) சோறு கூறை முதலியன கொடுக்கும் போதும் கொடாதபோதும் வரும் பிணக்கானும், அவற்றிற் கேதுவாகிய திரவியந் தேடுதலானும், அதனைப் பாதுகாத்தலானும், அவர்க்கு வியாதி ஆதி துன்பம் அபிமானபங்கம் வந்த காலையினும், அரையர் கலகம் அற்பகாலம் வந்த காலையினும், அவரிறந்த காலையினும், இவை முதலியவற்றால் அக்குடும்பத்தால் தேசுதுக்க மரணதுக்கங்கள் இடையறாது வருதலின், "குரங்கிற்றுனிச்சீ குடும்பக்குழாம்" என்றார்.

இத் துன்பக் குழுவில் காடிபோலும் குணத்தானும் செய்கையானும் இழிவாய பெண்டிரைக் கூடுவரோ என்பதனை, "பெருங்குப்பையிற் காடிப்பெண்டும் பொருந்துவரோ" என்று குறிப்பாற் கூறினர்.

காலன் உயிர்களைப் பாசத்தால் பிணித்துக்கொண்டு சென்று நிரையத்துள் வீழ்த்தி வருத்துதல்போல், துறந்து செல்கிறவனென்று இரண்டடிச் சென்றோனை மனை சுதர் முதலியோர் கயசாணங்களைப் பற்றிக்கொண்டு ஓவிட்டழுது அவனுள்ளம் இளகப்பண்ணி மீட்டுக் கொடுவந்து குடும்பமாகிய துன்பத்துள் அகப்படுத்தி வருத்துதலின், காலன் என்றும், ஒருவனைத் தீச் சூழ்ந்துகொண்டதுபோல் சூழ்ந்து கோடலின், தீ என்றும், கடுக்கடலில் வீழ்ந்தோனுக்குக் கரைகண்டு ஏறக் கூடாததுபோல், அக்குடும்ப சாகரத்தில் வீழ்ந்தோனுக்கு இக்கரைகண்டேறக்கூடாது ஆகலின், கடல் என்றும், மலை யிருத்திக்கொண்டதுபோல் குடும்பபாரந் தன் தலைச்சுமையா யிருத்துதலின், இருங்கல் என்றும், இறக்கும்போது உயிர்க்கு எந்த வாசனை இருந்தது அந்த வாசனையோடும் சென்று பிறத்தலின், மேலும் நரகம் என்றுங் கூறினர்.

இவை இரண்டு திருவெண்பாவானும் மனைவியாகிய குடும்பம் தன்பங்கட்கும் பிறவி வாதனைகட்கும் உறைவிட மென்பதும், இதனை இங்ஙனமென்று ஆணவமறைப்பான் அந்ஞானிகள் அறிந்திலரென்பதும், ஞானிகள் இதனைக் ஞானியினும் கேட்கினும் கடுங்குவ ரென்பதும், இக் குடும்ப யற்சி சிவத்தை அறியவொட்டாது மறைக்குமென்பதும், த்தமபக்குவர் விடாது சூழ்ந்து வாதிக்கும் இக் குடும்ப வாதனையான் வரும் கட்டங்களை முற்றும் அறிந்து அதனை க்கணத்தே விடுவரென்பதும், அறிவித்தவாறு காண்க. ()

இங்ஙனந் தன்பமென்று அறிந்து, துறந்து செல்வோர் ம்மை நம்பியிருந்த குடும்பத்தைப் பாதுகாத்தற்குச் சகோத ர் முதலாயினருள் ஒருவரைத் துணையாகவைத்து, பின் துறந்து சேறலாகாதோ எனின், மேற் கூறுகின்றார்.

தன்னனைப்போற் றன்னை யறிவதனை காக்கையுடன்
மன்னு குயில்போன வாறுபோ—லந்தியமாய்ப்
பேசாது போன துறவி பிறப்பறுப்பார்க்
காசாறு மென்றே யறி.

(உரை) கன்னனைப் போல் தன்னை அறிவதனை காக் கையுடன் மன்னு குயில் போன ஆறு போல் அந்தியம் ஆய்ப் பேசாது போன துறவி—யான் இன்ன சாதி இன்ன குலம் தாய் தந்தை இன்னரென்று தனது குல குடும்பங்களை அறி யாது கன்னனைப்போலும், உத்தம பக்குவன் யான் இன்ன சாதி இன்ன குலம் இன்னர் தாய் தந்தை யென்று தனது குல குடும்பங்களைப் பகுத்தறிவதனை? இங்ஙனம் ஒற்றையும் பாகுபாடுந்தறியாது காக்கையுடன் பருவம் வருமளவும் தனது னம்போல் கூடிச் சென்று, பருவம் வந்த காலை அதற்கு

அந்தியமாய்ப் பேசாது சென்ற நிலைபெற்ற குயில்போலும், அறித்திய விவேகம் வருமளவும் அவனிணம் போல் கூடியிருந்து, அந்த விவேகம் வந்த காலை அவர்க்கு அந்தியமாய்ப் பிரிந்து அவரோடுஞ் சொல்லாது சென்ற துறவியே மெய்த் துறவி;

பிறப்பு அறுப்பார்க்கு ஆசானும் என்று அறி—அத் துறவி பிறப்பறுக்கும் பொருட்டுத் துறந்தார்க்கு ஆசானியு ளும் ஆவன் என்று நீ அறிதி.

(குறிப்பு.) தருமன் முதலிய தினைவனையும் குந்தி யாகிய தாயையும் கண்டிருந்தும் கன்னன் அறியாதது போல், இவன் குடும்பத்தாரைக் கண்டிருந்தும் அறித்திய விவேகத்தால் பொய்யாய்க் கண்டான் ஆதலின், "கன்ன னைப்போற் றன்னை யறிவதே" என்றும், குயில் காக்கை யோடு கூடியிருந்தபோதும் தன் குரலைக் காட்டினல் கொத்துமென்று அடங்கியிருந்து, செல்லும்போதும் கூவாது சென்றதுபோல், குடும்பத்தோடு கூடியிருந்த போதும் தான் துறந்து சேறலை அவரோடும் சொன்னற் பற்றுவனென்பது அறிந்து, சொல்லா தடங்கியிருந்து, செல் லும்போதும் சொல்லாது சென்றமையால், 'குயில்போன வாயுபோற் பேசாது போன துறவி" என்றுங் கூறினர்.

அறிவும் துறவும் உள்ள ஞானி சிறப்புளன் ஆகலின், இவனை "ஆசானும்" என்றார். ஏ - அசை,

இத் திருவெண்பாவால் குல முதலியவற்றின் அபி மானம் இன்றி, அறித்தியவிவேகம் வருமளவும் அவற்றோடு உண்டோணைக்குதல் அற்றக் கூடினின்று, அந்த விவேகம் வரின் ஒருவரோடும் விடைபெறுது சென்றவனே துறவிகளுட் சிறந்தவன் என்றும் அறிவித்தவாறு காண்க. (கச)

இங்ஙனம் துறந்து செல்வானை மாதா பிதாக்கள் வந்து தடுத்தால் எங்ஙனம் செல்வார் எனின், மேற் கூறு கின்றார்.

நித்திரைசெய் வீட்டி னெருப்பும் பெரும்பழையு
மூற்றிப் புறப்பட்டார் மூற்றத்தே—பித்தரைப்போ
னில்லென்று சொன்னுலு நிற்பரோ வப்படிதான்
இல்லறத்தை நீத்தா ரியல்பு.

(உரை.) நித்திரை செய் வீட்டில் நெருப்பும் பெரும் பழையும் மூற்றி மூற்றத்தே புறப்பட்டார் நில் என்று சொன்னுலும் பித்தனைப்போல் நிற்பரோ—தாம் நித்திரை பண்ணை நின்ற வீட்டினுள்ளே நெருப்பும் பெரும்பழையும் செறிந்து வர (விழித்து, அவற்றைக்கண்டு வெருண்டு அவ் வீட்டின் வாயில் கடந்து) மூன்றிலில் புறப்பட்டார் தமக்கு அனுகூலாயினும், அவற்றின் நடு நிற்பீரென்று அறியாது கூறினும், பித்தரைப்போலும் அவர் மொழியை உட் கொண்டு கணப்போதாயினும் நிற்பரோ ?

அப்படி இல் அறத்தை நீத்தார் இயல்பு—(அவர் எப் படி நில்லாது ஓடிச் செல்வரோ) அப்படியே மாதா பிதாக் கள் வந்து தடுப்பினும் நில்லாது இல்வாழ்க்கையைத் துக்க மாகக் கண்டு துறந்து செல்வாரது முறைமையும் ஆம்.

(குறிப்பு.) குடும்பம் துக்கமென்றும் அறியாதபோது அதனேடுங் கூடியிருப்பார் என்பதும், துக்கமென்று அறிந்தபோது அதனைத் துறந்து செல்வார் என்பதும், துறந்து செல்லும்போது யாவர் தடுப்பினும் நில்லார் என்ப தும் இவ்வுவமைக் குறிப்புகளாற் காண்க.

கான் - அணை. (கஇ)

இங்ஙனம் துறந்து செல்வோர் இயல்பு இன்ஙனம் கூறுகின்றார்.

கட்டு நெகித்துவிட்ட கள்ளினைப்போற் கங்குலிற்பே
வெட்டு களத்தின் வெருவினர்போல்—முட்டத் [ய்
தொடர்ந்த படைபிழைத்துத் தோன்றப்போ வார்
லடங்கத் துறந்தேகு வார். [போ

(உரை.) கட்டு நெகித்துவிட்ட கள்ளினைப்போல் கங்குலில் பேய் வெட்டு களத்தின் வெருவினர்போல் முட்டத் தொடர்ந்த படை பிழைத்துத் தோன்றப்போவார்போல்—பொருள் திருடிய கள்வனைச் சிலர் வந்து பற்றிப் பிணித்து வருத்த அவருள் அருள் உளத்தொருவன் வந்து அப் பிணையை அவிழ்த்துவிட்ட காலையில் விரைந்து செல்லும் அக் கள்வனைப்போலவும், அரை யிரவில் பெரும் பேயைக்கண்டு வெருவினர் விரைந்து சேறல்போலும், யுத்தகளத்தின் வெருவினர் விரைந்து சேறல்போலும், தம்மைமப் பிடிக்கப் பின்தொடர்ந்த படைக்குத் தப்பி மிகவும் கைகடந்து சொல்வார்போலும்,

அடங்கத் துறந்து எகுவார்—தாய்தந்தை மனை சுற்றம் முதலிய குடும்பக் கூட்டங்களை எல்லாம் ஒருங்கே துறந்து செல்வார்; (அன்றி, அவர்க்கு ஓர் தடையும் இன்று.)

(குறிப்பு.) மலபரிபாகம் வாராமுன் தாம் செய்த இருவினைக்கிடையாய்க் குடும்ப பாசத்தால் பிணிப்புண்டு வருந்துவர் என்பதும், அப்பரிபாகம் வந்தகாலத் தோன்றுன்ற அருட்சக்தி அக் குடும்பபாசந் தக்கமென்று அறிவிக்க அறிந்து துறந்து செல்வார் என்பதும், அப்போது இரவில் தோன்றும் பேய்போலும் யுத்தகளம்போலும் குடும்பம் அவர்க்குத்

தோற்றுமென்பதும், அக் குடும்பக் குழாங்கள் பின் தொடர்வதொன்று அறிந்து தூதேதசத்திற் செல்வா ரென்பதும், இவ்வுவமைக் குறிப்புகளாற் காண்க.

பண்டை - சேரனை.

இனைவ பிரண்டு திருவெண்பாவானும் குடும்பபாரம் பொறுத்தற்கு ஆற்றாது வருந்தி இழித்துவிட்டு விரைந்து செல்வோர் தாய்தந்தையர் ஆதியர் தடுத்தற்குச் சிறிதும் உட்படாதொன்று அறிவித்தவாறு காண்க. (கசு)

தாம் துறந்து போதற்குக் குடும்பத்தார் சம்மதித்தால், அப் பதியிலிருந்து தவம்பண்ணலாகாதோ வெனின், மேற் கூறுகின்றார்.

உடுக்கை மறந்தவருக் கூர்காடென் றுண்டோ
வடுத்தயலா ருண்டோவே யாரல்—சுடப்போட்
டெதிரிட்ட தெல்லா மிழந்தார்க் கிருந்த
பதியைக்கொண் டுண்டோ பயன்.

(உரை.) உடுக்கை மறந்தவருக்கு ஊர் காடு என்று உண்டோ பேய் ஆனல் அடுத்தயலார் உண்டோ—(குடும்பக் கூட்டங்களை எல்லாம் தானிசறத் துறந்து தேகத்தையும் சத்துருவாகக் கண்டு அத் தேகத்தில் கான்குழுழுஞ் சுற்றும்) உடுக்கையும் மறந்து திரிவோர்க்கு இது ஊர் என்றும், இது காடென்றும் பகுத்துக் காணும் நினைப்பும் உண்டுகொலோ? (அஃதன்றி,) பூரணப்பேய் வயமாகையினல் அவர்க்கு அடுத்தாரும் அயலாரும் உண்டுகொலோ? (இங்ஙனம் உடுக்கை மறந்து அடுத்தார் அயலாரென்பதும் தோன்ற திருப்பதும் அன்றி,)

சுடப் போட்டு எதிரிட்டது எல்லாம் இழந்தார்க்கு இருந்த பதியைக் கொண்டு பயன் உண்டோ—கரத்தில் எடுத்த பொருள் மிகவுஞ்சுட வீணாந்துபோட்டு பின்னும் போல், தமதறிவிற்கு எதிரிட்ட கருவிகளை எல்லாம் தின்ப மாகக் கண்டு ஞானக்கினியினல் எரித்து இவற்றையும் இழந் தார்க்குத் தாம் முன்னிருந்த பதியில் இப்போது இருந்தது கொண்டு பயன் என்னை உண்டுகொல்?

இத் திருவெண்பாவால் தேகாபிமானம் விடுத்து அந னைப் பாகையாகவும், எதிரிட்டவைகளைத் தின்பமாகவும் கண்டு, அனைத்தையும் இழந்து, பூரண மருள் கொண்டோன் இது நாடு இது காடென்றும் இவர் அடுத்தார் இவர் அயலா ரென்றும் பகுத்தறிதல் இன்றுகலின், முன்னிருந்த பதியில் இப்போது இருப்பதனல் அவர்க்கு வரும் பயன் ஒன்றும் இன்றென்று அறிவித்தவாறு காண்க. உடுக்கை = வஸ்திரம்.

முன்னிருந்த பதியைவிட்டு, மற்றோர் சிவதலத்தில் ஓரிடம் பற்றியிருந்து, ஒருவர் முன்னிலையாய் உதராக்கினிக்கு அன்னமாத்திரம் வாங்கியுண்டு தவத்தைப் பண்ணலாகாதோ எனின், மேற் கூறுகின்றுர்.

துக்கஞ் சுகமான சுட்டறிவு கெட்டவர்க்குத்
திக்குண்டோ வெங்குஞ் சிவாலயமா—மக்கினிக்குப்
பிச்சைப் பொதுநிழனீர் பேரிதுவே பேசார்தம்
இச்சையிருப் பேகாந்தத் தே

(உரை.) துக்கம் சுகம் ஆன சுட்டு அறிவு கெட்டவர்க் குத் திக்கு உண்டோ எங்கும் சிவாலயம் ஆம்—முன் கண்ட பிரபஞ்ச துக்கம் எல்லாம் இப்போது ஆநந்தமாகக் கண்ட அச்சுட்டுப்போதம் கெட்டோர்க்கு இன்ன திசை என்றும்

இன்னே இடம் என்றும் பகுப்புண்டாமோ? அவர்க்கு எத் திசையும் எவ்விடமும் சிவாலயமே ஆகும்; (அஃதன்றி,)

அக்கினிக்குப் பிச்சைப் பொதுநிடல் நீர் பேரிதுவே பேசார் எகாந்தத்து இருப்பு தம் இச்சை—உதாக்கினி அவித்தற்கு வாரின்கண் பிச்சையும் இருத்தற்கு இடம் பொதுச்சாவடி மாநிழலும், தாகந் தணிக்கற்கு எளியாதிநீர் ஆரும் உளவாகலின் அன்னம் இடம் நீர் என்னும் இவற்றினை தது பெயரையே சொல்வார்; (ஆயின், அவர்க்கு இச்சை தான் வது எனின், ஒருவரோடும் கூடியிராது பேசாது) வாளாத்திருப்பதே இச்சையாம்.

(குறிப்பு.) சிவத்தை உணர்ந்தோர்க்கு எங்கும் பரி பூரணமாய்த் தோற்றும் ஆகலின், "எங்குந் சிவாலயமாம்" என்றார்.

இத் திருவெண்பாவால் பிரபஞ்சங்களை யெல்லாம் ஏதந்த மயமாக் கண்ட குறுமினர்க்குத் திசையாதி எவ்விடத்தும் சிவாலயமாகும் என்பதும், பிச்சையாதி உளவாகலின் அன்னபானாதி தரிடத்தில் குறியார் என்பதும், ஒருவரோடும் கூடாது எகாந்த மௌனத் திருப்பதே அவர்க்கு இச்சை என்பதும் அறிவித்தவாறு காண்க. (கஅ)

ஒருவரோடு கூடியிருந்து பேசுதலும் ஆகாதோ எனின், மேற் கூறுகின்றார்.

அங்கக்கா ரன்றுதிப்பு நாவிசனை யானதுவுஞ்
சிங்கி குளிர்ந்ததுவும் போற்செகத்தோர்-சங்கத்தைத்
தீண்டுமன மேபனைகையாய்ச் சேரா துடலோடே
மாண்டுதிரி வார்துறவா வார்.

(உரை.) அங்கக்காரன் துதிப்பும் காவி சுவையானது வம் சிங்கி குளிர்ந்ததுவும் போல்வசகத்தோர்—நாலு வேடங் கொண்டு கடக்கும் வேடதாரி அவ் வேடங்கட்கு ஏற்ற பாலை பேசுதல்போலவும், கொல்லா நின்ற வற்ச காபி ஓருவர்க்குச் சுவையானது போலவும், தன் காவிற் பூண்ட விலங்கு ஒருவற்கு இதமானது போலவும், (தந்தம் சாதிகட் கும் தொழில்கட்கும் ஏற்ற சொற்களைச்சொல்லியும், துன்ப மாயுள்ள விடயங்களை இன்பமாகக் கருதிக்கொண்டும், மனைவி முதலிய பாச விலங்கை இதமாகக் கைக்கொண்டும் மயங்கிச் சுழலா நிற்பர், இச் சகத்தோர்,

சங்கத்தைதத் தீண்டும் மனமே பகை ஆய்ச் சோரது உடலோடே மாண்டு திரிவார் துறவு ஆவார்—இங்ஙனம் சுழலா நின்ரூர் கூட்டத்தைக் கூடவேண்டு மென்று கரு தும் மனநினைவே தம் பகையாகி அந்நினைவோடுங் கூடாது, உடலோடுங் கூடியிருந்தும் கூடாது, அவ் வுடல் வாதனை மாண்டு திரிவாரே துறவினை உடையாரவர் (என்றறிதி.)

(குறிப்பு.) "உடலோடே மாண்டு திரிவார்" எனவே, போகவாதனை, தேகவாதனை, போதவாதனை ஆகிய இம் மூன்று வாதனையும் தீர்ந்தார் என்பதாயிற்று.

இத் திருவெண்பாவால் பிரபஞ்சிகள் ஒருவரோடொரு வர் கூடலும், நாலுவிதமாய் வார்த்தை யாடலுமே இன்ப மாய்க் கருதி மயங்குவர் என்பதும், துறவோர் அங்ஙனஞ் செய்வது துன்பமென்று விடுப்பதுமன்றி, தம்முடலோடுங் கூடியுங் கூடாதிருப்ப தென்பதும் அறிவித்தவாறு காண்க.

பொன்மலைமேலாகாயம்போவார்க்குப் பூமிபுள்ளா
ரென்னவே நாதாந்த மெய்தினரை—யென்னருகே

வாவென்று பாற்கடலில் வாழ்வினை மண்டுகங்
கூவுந் தகைமையதொக்கும்.

(உரை) பொன் மலைமேல் ஆகாயம் போவார்க்கும் பூமி உள்ளோர் என்னவே—பொன்மலை முடிமேல் ஆகாசகமனம் பண்ணுவோர்க்கு இந்நிலத்தின்கண் உள்ளார் மிகவும் தாழ்ச்சியானதுபோல், ஞானிகட்கும் பிரபஞ்சிகட்கும் உயர்ச்சி தாழ்ச்சி இருப்பவும்,

காதாந்தம் எய்தினரை என் அருகே வா என்று பால் கடலில் வாழ் அரியை மண்டுகம் கூவும் தகைமையது ஒக்கும்—காத சத்துவத்தின் முடிவாயிருந்த திருவருளை அடைந்த ஞானிகளைப் பஞ்சபூத காரியந் தாங்கிய தேகந் தாங்கி இந்திரியவழி நடைந்து செல்லும் பிரபஞ்சி ஒருவன் என் மனைக்கு நீர் வருக என்றழைத்தல் பாற்கடல் காப்பண் அரவணையில் பள்ளிகொள்ளாநின்ற பெருமாளைப் பார்த்து, ஓர் தவளைநீரும் இக்கடல்மிசை மிதந்து துயில்கின்றீர், யாமும் இக்கடல் மிசை மிதந்து துயில்கின்றேமன், உமக்கும் அரி யென்றும் பெயர், எனக்கும் அரியென்னும் பெயர், ஆகலின், எனதருகே நீர் வருக என்றழைக்கும் முறைமையது ஒக்கும்.

(குறிப்பு.) பொன்மலை முடியை காதாந்தத்திற்கும், அம்மலைமுடிமேல் தோன்றும் ஆகாயத்தை இக் காதாந்தத்தில் தோன்றும் திருவருளுக்கும் அவ் வாகாயத்தில் கமனம் பண்ணுவோனை இத் திருவருளையும் கடந்து செல்லும் ஞானிகள் அறிவிற்கும் உவமித்துக் கூறியவாறு காண்க.

ஞானிகள் சத்துவங்கட் கெல்லாம் முடிவாய் நின்ற பரிபூரணத்தை அடைந்தவர். பிரபஞ்சிகள் சத்துவங்கட்

கெல்லாம் அடியா யுள்ள பஞ்ச பூதகாரியம் தானுயுள்ள தேதகத்தை யடைந்தவர். ஆகவின், "பொன்மலேமே லாகா பம் போவார்க்குப் பூமியுளா ரென்னவே" என்று அந்ண ணம் உவமை கூறினர்.

ஞானிகளது மகிமையை அறியாததால், அவரும் உல கத்தின்கண் இருக்கின்றார், யாணும் உலகத்தின்கண் இருக் கின்றேன், அவரும் மனிதர், யாணும் மனிதனென்று கருதி அழைத்தான் ஆகவின், "பாற்கடலின் வாழ்நினை மண்டுகத் கூவுந் தகைமைய தொக்கும்" என்று இங்ணம் உவமை கூறினர்.

இத் திருவெண்பாவால் ஞானிகட்கும் அஞ்ஞானிகட் கும் சாதம்மியமும், அவரை இவரென்ணுமல் அழைப்ப தும், இங்ணம் என்று அறிவித்தவாறு காண்க. (20)

ஆயின், பத்தியோடு மனமொழி மெய்களால் அவரை வணங்கி என் மனைக்குத் தேவரீர் எழுந்தருளுக என்று ஒரு வன் அழைத்தால் செல்வரோ எனின், மேற் கூறுகின்றார்.

கும்பிட்டுங் கீர்த்தித்துங் கோடி யுபசாரம்
வம்பிட்ட பத்தி வலைவழியை—நம்புவரோ
வூணுதி வாதனைக ளொன்றுத வப்பெருமை
வீணை விளக்கு மெனின்.

(உரை.) கும்பிட்டும் கீர்த்தித்தும் கோடி உபசாரம் வம்பு இட்ட பத்தி வலைவழியை நம்புவரோ — ஒருவன் வந்து அஷ்டாங்க பஞ்சாங்கத்தோடு வணங்கியும், அநேக தோத்திரங்களைப் பண்ணியும், சுவாமிகள் அடியேன் மனைக் கெழுந்தருளுக என்றும் கோடி பேதங்களாய் உபசாரங்களைச் செய்தும், இங்ணம் அழைக்கும் புதுமையொருக்கிய பத்தி

ஆகிய வலேதநிலைய ஞானிகளாயினர் ஓர் பொருளாகக் கருதிச் செல்வதோ ? (ஆயின், அன்போடு வணங்கி அன்னங் கொடுக்கிறேன் என்றழைத்தால் அவ்வன்ன மாத்திரஞ் சென்று வாங்கிக்கொள்ள லாகாதோ எனின்,)

ஊன் ஆதி வாதனைகள் ஒன்றுக அப் பெருமை வீணை விளைக்கும் எனின்—ஊன்ன உடுக்ணை முதலிய வாதனைகளை யும் விரும்பாத அந்த அவா அடியறு ஆகிய பெருமை அவனிருக்குமிடத்து அவர் வேண்டா என்றது தள்ளாவும் வீணைய் அவ்வுதவிகளைக் கொடுப்பிக்கும் ஆயின்.

(குறிப்பு) உபசாரமிகுதியை, "கோடி" என்றும், ஒருவரும் அங்ஙனஞ் செய்யக்கண்ட தின்மையால், "வம்மின்" என்றுங் கூறினர்.

"ஊணுதி வாதனைகள்" எனவே கோய் குளிர்கட்கு மருந்தும் உணறயுளும் வேண்டார் என்பதாயிற்று. (உக)

தாம் ஊணுதிகளை விரும்பி ஒருவரைப் பின் சேறலாகாதன்றி, ஒருவர் அன்போடும் வணங்கி ஊணுதி கொடுத்தற்குத் தம் மனைக்கு அழைத்தாலும் செல்லாதிருப்பது வதுகாரணம் எனின், மேற் கூறுகின்றார்.

கருமந் தினவிதத்திற் கட்டழிதுங் காலை
மருவுந் தவனையும்போ லாகி—யிருதலையிற்
கொள்ளியெறும் பாயுடம்பே கூற்றுதித் தோற்று
ளுள்ளினரு மூருமென்னை கும். [மெனி

(உரை.) தினவிதத்தில் கருமம் கட்டு அவிழும் காலம் அரவும் தவனையும்போல் ஆகி இருதலையில் கொள்ளி எறும்பு ஆய் உடம்பே கூற்று ஆகித் தோற்றும் எனில்—ஞாலசாரி

யர் திருபாகோக்கத்தானும், கர சாண பரிசத்தானும், திரு வாக்காலும், அவாது ஆணவம் மாயை கன்மங்களாகிய கட்டு விடுதலையாகாதின்ற காலம் ஆகலின், தம் உடம்பே பாம்பும் தாம் ஓர் தவளையும்போலாகி, அவ்வுடம்பே இருதலையும் எரி சூழ்ந்த கொள்ளியாகி, தாம் அக் கொள்ளிக் குழலுட் சுழலும் எறும்பாகி, அவ்வுடம்பே தம்மைப் பிணித்துச் செல்லுங் கூற்றுருகித் தோற்றும் எனின்,

உள்ளினரும் ஊருரும் என் ஆகும்—இங்ஙனம் பகை யாய்த் தோற்றும் உடம்பிற்கு உபசாரஞ் செய்யக் கருதி னோரும், அவர் அழைத்துச் செல்லும் ஊரும், அவர்க்கு என்ன பயனைத் தரும்?

(குறிப்பு.) பாம்பு தவளையைப் பற்றி நிற்றல்போல் உடம்பு அவரைப் பற்றி நிற்றலாலும், நெருப்பு அவியுமளவும் சூழற்கண் வருந்திச் சுழலும் எறும்புபோல் ஊழ்வினை அறு மளவும் உடம்புள் வருந்தி இருத்தலாலும், கூற்று உயிரைப் பிணித்துச் சேறல்போல் அவரைப் பற்றிநின்று பிச்சை யாதிக்குச் செல்லப் பண்ணுதலாலும், அங்ஙனம் உவமை கூறினர்.

ஒருவன் தனக்குப் பகையாயினர்மேல் வெறுப்புண்டா வதுமன்றி, அப் பகைவர்க்கு இதஞ் செய்வார் மேலும் வெறுப்புண்டாவதுபோல், அவர்க்குப் பகையாகிய உடம்பின் மேல் வெறுப்புண்டாவதும் அன்றி, அவ்வுடம்பிற்கு இதஞ் செய்வார் மேலும் வெறுப்புண்டாம் ஆகலின், "உள்ளினரு மூரு மென்னுகும்" என்றார்.

"திரிவிதத்திற் கட்டவிழும்" என்றமையால், இரண்டு மலமும் வருவிக்கப்பட்டன. (உஉ)

ஞாஞைசாரியனை அடைந்தோரும் ஓரூரின்கண் ஒருவன் செய்யும் உபசாரத்தை அங்கீகரிக்க இல்லையோ ? இவர் என்னை அங்ஙனம் அங்கீகரியா திருப்பது எனின், மேற் கூறுகின்றார்.

பிறவாத யோனி பிறந்துபிறந் தெல்லா
மறிவாறு ளரென் றறியா—வறிவை
யறிந்துமீ ணண்ட வழிபருந்திற் குஞ்சாய்ப்
பிறந்தவர்க ளென்பார்ப்பார் பின்.

(உரை.) பிறவாத யோனி பிறந்து பிறந்து எல்லாம் அறிவால் நான் ஆர் என்று அறியா அறிவை அறிந்து—(தெய்வ மாலுடைப் பிறப்பன்றி, மற்றைப்) பிறவாத யோனி பேதங்கள் எல்லாவற்றுள்ளும் அளவில் காலம் சென்று பிறந்து எய்த்து, (பின்னர்த் தெய்வகதியாய்ப் பிறவிகட்கு எல்லாம் தப்பி, தன்னை அறிதற்கு ஏதுவாய இம் மாலுடப் பிறவியிற் பிறந்தும், இத் தேகத்துள் இருந்து) எல்லாவற் றையும் அறிவாலுகிய யான் டாரென்று அறிதற்கு அரிதாய அறிவை இம் மாலுட தேகம் அதேகத்தாற் செய்த சிவபுண் ணிய மேலீட்டால் இப்போது அறிந்து,

மீன் அண்டவழி பருந்தில் குஞ்சு ஆய்ப் பிறந்தவர் கள் பின் எவ் பார்ப்பார்—நீரில் நுழைந்துசெல்லும் மீன் முட்டை வழித்தோன்றும் குஞ்சு ஆகாயத்திற் செல்லும் பருந்தின் முட்டை வழித்தோன்றும் குஞ்சாய்ப் பிறந்தது போல், பிறப்பிற்கு ஏதுவாய்ப் பிறந்த பிறப்புக்கள் நீங்கி, வீட்டிற்கு ஏதுவாய்ப் பிறந்தோர்கள் இப்போது மற்றைய ரைப் போலும் ஊர் உறவு என்று என் பார்ப்பார் ?

(குறிப்பு.) முட்டைவழித் தோன்றுமல் இரண்டிற்கும் ஒத்ததாயினும், முன் நீருட் சென்றதும், பின் ஆகாயத்திற் செல்வதும் ஒவ்வாததுபோல், முன்னரும் இப்போதும் பிறந்த மானுடப்பிறப்பு ஒத்ததாயினும், முன் பிறப்பிற் சென்றதும், இப்போது வீட்டிற் செல்வதும் ஒவ்வாது. ஆகலின், இங்ஙனம் உவமை கூறினர்.

முற்பிறப்பில் சிவபுண்ணிய மேலீட்டால் இப்பிறப்பில் எளிதில் தன்னை அறிந்தமையால், "அறிந்து * * * பிறந்தவர்கள்" என்றார்.

தன்னை அறிந்தால் தலைவனையும் அறியலாம் ஆகலின், "நாஞ்சென்றறியா வறிவையறிந்து" என்றார். (உக)

இங்ஙனம் ஊர் உறவாதி ஒன்றும் வேண்டார்க்குப் பெருமை தான் யாது எனின், மேற் கூறுகின்றார்.

அரசர்க் குடைமை யளவற்ற பேறே
பெருமையா னற்போலப் பெற்ற—வரிபிரமர்க்
கப்பாலாம் வாழ்வு மணுவாகி யாதுமற
லிப்போ பெருமை யிவர்க்கு.

(உரை.) அளவு அற்ற உடைமை பேறே அரசர்க்குப் பெருமை ஆனல் போல—அளவற்ற திரவியம் ஆடை பூஷணுதிகளைப் பெறும் பேறே அரசர்க்குப் பெருமையானற் போல,

பெற்ற அரிபிரமர்க்கு அப்பால் ஆம் வாழ்வும் அணு ஆகி யாதும் அறல் இவர்க்கு இப்போ பெருமை—அவ்வரசர் முதலியோர் வாழ்விற்கு மேலாய வாழ்வினைப் பெற்ற அரி பிரமர் வாழ்விற்கும் அப்பாலாகிய பதமுத்தி வாழ்வகளும் அணுமாத்திரம் இன்பமாய் அழியும் எனக் கண்

டிருந்த இகபர வாழ்வுகளில் யாதொன்றிலும் பற்றற்ற இப் பற்றுதியே இவர்க்கு இப்போத வெருணமையாம்.

(குறிப்பு.) "அரசர்க்குடணம" என்று பொதுப்படக் கூறினமையான், கால்வணைக் சேனை கால்வணை அரண் காவு சேகசங்கள் முதலியனவும் கொள்க.

அவர்க்கு அப் பேறு மேன்மேலும் பெறுவது வெருணம யாறுற்போல், இவர்க்கு அப் பேறு மேன்மேல் விடுவது வெருணம என்பதும்; அவர்க்கு அப் பேறின்மை சிறுணம யாவதுபோல், இவர்க்கு அப்பேறு பெறுவது சிறுணம என் பதும்; பேற்றின்மேல் பற்றுப் பிறவிக்கேது, அப் பேற் றின்மேற் பற்றறுதி வீட்டிற்கேது என்பதும்; பிறப்பை யுடைதல் சிறுணம, வீட்டை யடைதல்வெருணம என்பதும் இதனாற் கானக்க. (உக)

இங்ஙனம் இருந்த ஞானிகள் வீட்டிற்கு வகையாகிய சரி யாகிகளாத்தான் செய்யார்களோ எனின்; அவர் செய்யுந் சரியாகிகள் இவை என்றும் மேற் கூறுகின்றார்.

சரியை யுடல்வெறுத்த றன்மை யுறுதல்
கிரியையோகங் கூடாணம தோளாத்—திருநோனம்
வேறின்மை போரின்பம் விட்டுதியா மேல்டு
பேறின்மை தானோ டெறல்.

(உனை.) சரியை உடல் வெறுத்தல் கிரியை தன்மை யறிதல் யோகம் கூடாணம—அவர்க்குச் சரியையாவது (மலச்சணம, நீக்கம் விழைக்கும் குரம்பை, அகித்திய விருது எனக் கண்டு, உண்டி சுருக்குதல் முதலியவற்றான்) உட லத்தை வெறுத்தல், கிரியையாவது 'தக்கவம் முப்பதக்காறை யும் நியதிகளைக்கு அவற்றின் முடிவினின்ற) தம்மை உள்ள

படி அறிதல், யோகமாவது (அங்ஙனம் தம்மை அறிந்த விடத்துத் தமக்கு உயிர்க்குயிராயிருந்த திருவருளைக்கண்டு அவ்வருளே வடிவாகியிருந்து முன் நீக்கி நின்ற கருவிகளோடுங்) கூடாமை;

கேளாத் திருஞானம் வேறு இன்மை போன்பம்விட்டு உதியாமலே ஈடு பேறு இன்மை பெறல் தானே—அம்மூவகையாலும் உண்டாம் கேட்டறியலாகாத அழகிய ஞானமாவது (அவ்வருளே வடிவாயிருந்த தாம் சிறிதும் தோன்றுதற்பாலே ஆகிய) வேறின்மையினையும், அதன்மேல் போன்பம் விட்டுத் தோன்றுத மேலீட்டினையும், இவ் வின்பத்தைத்தம் பெற்றே மென்னும் போன்மையினையும் பெறுதல் தானேயாம்.

(குறிப்பு) ஞானாசாரியர் மௌனமொழியால் அறிவிக்க அறிதலான், "கேளாத் திருஞானம்" என்றும், இன்ப மேலிடாமுன் விட்டுத்தோன்றலான் "விட்டுதியாமலீடு" என்றுங் கூறினர். பேறின்மை - இன்பாதீதம்.

"கும்பிட்" டென்னும் திருவெண்பா முதல் இரண்டையுந் திருவெண்பாவானும் ஞானிகளினது இயற்கை நெறிகளினது முறைமை அறிவித்தவாறு காண்க. (உரு)

ஏழாம் அதிகாரம் துறவு

முற்றிற்று.

எட்டாம் அதிகாரம்

அருளவத்தைத் தன்மை

இங்ஙனம் சரியாதிகளை நீத்து உள்துறவு புறத்துற வுடையராய், பிருதிவிமுதல் காதகதத்துவம் ஈறுகச் சொல்லப் பட்ட தத்துவம் முப்பதினாறையும் கடந்து, ஆணவ இருளை யுங் கடந்து, ஆன்ம தரிசன முதலிய சுத்தாவத்தையில் நிற்போரது தன்மை கூறினமையால், இவ்வதிகாரத்திற்கு அருளவத்தைத் தன்மை என்று பெயராயிற்று.

உண்டொழித்துத் தேடு முடம்பரா யொன்றுமுத
லண்டர்பதத் தட்பாலு மைம்புலத்து—மூண்டு
மழுங்கினர்க்குப் போகம் வருத்தமாய்த் தோன்ற
வெழுந்தவருள் கெட்டே னிதென்.

(உரை.) உண்டு ஒழித்துத்தேடும் உடம்பர் ஆய் ஒன்று முதல் அண்டர் பதத்து அப்பாலும் ஐம்புலத்தும் உண்டு மழுங்கினர்க்கு—ஓருடம்பில் பிராரத்தத்தை உண்டொழித்து அவ்வுடம்பில் அவ் வினையை உண்டொழித்தற்கு இடையே, இதாகிதங்களாகிய தொடர்பால் தேடும் ஆகாமியத்தால் இதான்றுதொட்டு வரும் உடம்புகளை உடையராய், இப் பூலோகமாகிய ஒன்று முதல் தேவர் பதவிக்கு அப்பாலும் ஆண்டாண்டுச் சென்றிருந்து ஐம்பொறிகளாலும் அவ்வவ் வுடம்புகட்கு ஏற்ற விடயபோகங்களை இன்பமாகக் கண்டு உண்டு அளவில் காலந் தழும்பேறினர்க்கு,

போகம் வருத்தமாய்த் தோன்ற எழுந்த அருள் கெட் டென் இது என்—அப்போது இன்பமாய்த் தோன்றிய

போகம் இப்போது தன்பமாய்த் தோன்ற உதயமாகிய திருவருள், கெட்டேன் ஈது என்கொல்!

(குறிப்பு.) ஓர் பிரகாரம் இன்றிச் செய்த வினையின் பேதப்படியே நாநு கரண புவன போகங்களும் பேதித்துத் தோன்றலான், "தேடுமுடம்பா யண்டர்பதத் தப்பாலு மைம்புலத்து முண்டு மழுங்கினர்க்கு" என்றார்.

நாநுவாதிகள் பேதிப்பதாவன, நல்ல தேசத்து நல் லோர்கள் அங்கீகரித்த போகத்தை புசித்தலானும், நல்ல வினைவோடும் நல்ல சொல்லோடும் நற்றொழிலைச் செய்த லானும், பொல்லாத தேசத்துப் புன்போகங்களைப் புசித்த லானும், பொல்லாத வினைவோடும் பொல்லாத சொல்லோடும் புன்றொழிலைச் செய்தலானும், இவற்றுள் ஒன்று நன்றும் ஒன்று தீதுமாய் மாறிமாறி வருதலானும், இவை முதலாய வற்றால் பேதிப்பதெனக் கொள்க.

இத் திருவெண்பாவால் சுத்தாவத்தையில் நின்று அருளைத் தரிசித்தோர்க்கு விடயந் தன்பமாய்த் தோற்றும் என்று அறிவித்தவாறு காண்க. (க)

வாசகத்துங் கோவையினு மாணிக்க மாகவழுங்
காசைத் துறையநந்த மாமதிலே—யாசை
யிருதலைப்பா லேக மெனவிரண்டா மித்தி
லொருதலைக்கா மந்துறவன் றே.

(உரை.) மாணிக்கம் ஆக வழங்கு வாசகத்தும் கோவை யினும் ஆசைத்துறை அகந்தம் ஆம்—மாணிக்க மணிமேய லாகப் புலவரான் எடுத்து வழங்கா நின்ற சங்கத்தார் முதலி யோர் கூறிய ஆரியப் பாக்களினும், மாணிக்கவாசக

சுவாமிகள் அருளிச்செய்த திருச்சிற்றம்பலக் கோவையார் முதலிய கோவைகளிலும், காமத்திணை இலக்கணமாகக் கூறப்பட்ட கிளவித்துணைறகள் அகந்தம் ஆகும்;

அதிலே ஆலை இருதலைப்பால் எகம் என இரண்டாம் இதில் ஒருதலைக்காமம் தூறவு அன்றே—அக் கிளவித் துறை கருஞள் காமம், தலைவனும் தலைவியும் ஆகிய இருவர் பாலும் சமனிலைத்துக் கூடுவதாகிய இருதலைக் காமம் எனவும், ஒருவர் பால் மிகுந்தும் ஒருவர்பால் குறைந்தும் காமம் ஒவ்வாது கூடுவதாகிய ஒருதலைக்காமம் எனவும், இரண்டுள் அடங்குவ தாம்; இவற்றுள் தலைவன் விழையா திருப்பத் தலைவி விழைந்து பற்றும் ஒருதலைக்காமம்போல விடையாகந்தத்தைத் தூறந்து சொரூபாகந்தத்தைப் பெறும்பொருட்டுச் சுத்தாவத்தையில் நின்றோர்க்கு இச் சொரூபாகந்தம் கிடைத்திலது ஆயினும் இவ்வாகந்தத்தையே பெற விரும்பித் தொடர்ந்து நிற்பது அன்றே தூறவாவது?

(தூறிப்பு.) தலைவன் கூடி இன்பம் கொடாதிருப்பினும் தலைவி தனது கற்பால் பிறரை விழையாது அத் தலைவனையே விழைந்து நிற்றல்போல், சொரூபாகந்தம் தனக்குக் கிடைத் திலது ஆயினும் தனது தவக் கற்பால் விடையாகந்தத்தை விழையாது சொரூபாகந்தத்தையே விழைந்து நிற்கவேண்டு மென்பதும், தலைவி கற்பினைக் கண்டு தலைவன் காருணியத் தால் அவட்கு இன்பங் கொடுத்தல்போல், இவன் தவக் கற்பினைக்கண்டு சிவம் காருணியத்தால் தனதானந்தத்தை இவனுக்குக் கொடுக்குமென்பதும், இவ்வுவமைக் குறிப்பு களாற் காண்க.

வாசகம்போல் இருத்தலின் ஆசிரியப்பாவை "வாசகம்" என்றார்.

(உ

இத் திருவெண்பாவால் சொரூபாநந்தத்தை விரும்பிச் சுத்தாவத்தையில் நிற்போர்க்கு இச் சொரூபாநந்தம் கிடைத்திலது. ஆயினும், இவ்வானந்தத்தையே விரும்புவது அன்றி அசுத்தாவத்தையில் திரும்பி அவ்விடயாநந்தத்தை விரும்பல் ஆகாதென்று கூறியவாறு காண்க.

சாத்துவிக மெட்டாய்த் தசவவத்தை யாய்த்தன்னை
நீத்தவுலுய்த் தாளுய்ப்பின் னேயமாய்க்-கூர்த்ததெல்
சுத்த வவத்தைத் துவட்சித் துகளற்ற [லாஞ்
வத்துவிதர்க் கேதுமுதி யா.

(உரை.) சாத்துவிகம் எட்டு ஆய்த் தச அவத்தை ஆய்த்தன்னை நீத்தவன் ஆய்த் தான் ஆய்ப் பின் நேயம் ஆய்க் கூர்த்தது எல்லாம் சுத்த அவத்தைத் துவட்சி—இராசத தாமத காரியங்களை யெல்லாம் நீக்கிச் சாத்துவிக காரியமாகிய நிராசை முதலிய எண் குணங்களையும் உடையவனுகி, அருகிய நோக்க முதலிய பத்தவத்தைகளையும் உடையவனுகி, இந்த நற்குணங்களால் தத்துவ முப்பத்தாறையும் கடந்து தன்னை அறிந்து அநுபூதி தரிசித்துத் தற்போதம் அடங்கினவனுகி, பின்னர்ப் பரையே தானுகி, பின்னர் நேயத் தழுந்தினை னுகி, இங்ஙனம் ஒருவன் நுண்ணிதாய் அறிந்து சென்ற தெல்லாம் சுத்தாவத்தை அநுபவங்களாகும்;

துகள் அற்ற அத்துவிதர்க்கும் எது உதியா—இந்தச் சுத்தாவத்தைகளை அறிந்து சென்ற போகம் அற்றச் சிவத் தோடும் இரண்டறக்கலந்த அத்துவிதத்தை உடையோர்க்கு மூற்கூறிய அநுபவங்களுள் யாதொன்றேனும் தோன்றுது; (இவர் மௌனாநந்தமா யிருப்பர்.)

(குறிப்பு.) சாத்துவிகம் எட்டாவன : ஈராணை, தவம், பொறுமை, கிருமை, சந்தோஷம், வாய்மை, அறிவுடைமை, அடக்கம் உடைமை இவை எண்வகையும் எனக் கொள்க.

தச அவத்தையாவன : பிரபஞ்சத்தை மாயாவடிவமாய்க் காணுது அருள்வடிவாய்க் காணும் அருகிய சோக்கமும், கருவிகளை நியதிகளையும் சிந்தனையும், மூற்பிறவியிற்பட்ட தண்பங்களை நினைத்து மெட்டுயிர்ப் பெறிதலும், திருவருள் மேலீட்டால் உடம்பில் இளஞ்சூடெழுதலும், ஊணுதிகளைத் துறத்தலும், ஒருவரோடு உரையாடற்கு மானமுறுதலும், மௌனமா யிருத்தலும், பிச்சேதறிணும் போலப் பிரபஞ்சப் பகுப்புத் தோன்றுதிருத்தலும், பிராணவாயு இறந்து மூர்ச் சித்திருத்தலும், போதம் இறந்து நிற்றலும் ஆகிய இவை பத்துமெனக்கொள்க.

சுத்தாவத்தைகளோடுங் கூடி அவற்றில் தோன்றும் அநுபவங்களைப் போதம் சுருங்கி நின்று அறிதலானும், அப் போதம் தெய்தல் வளர்தற்குத் தக்கதாய் ஓர்கால் உயர்ந்த அநுபவமாயும், ஓர்கால் தாழ்ந்த அநுபவமாயும், மாறித் தோன்றலானும், " துவட்சி " என்றார்.

கேவலாவத்தையோடு ஆணவம் நீங்கிற்று ஆயினும், அதனது காரணம் போத மிறக்குமளவும் இருத்தலின், போதத்தைத் ' தகள் " என்றார்.

இத் திருவெண்பாவால் ஞானசாதகர் இலக்கணமும் சாத்தியாது இலக்கணமுங் கூறியவாறு காண்க. (ங)

அவ்வநுபவங்களை அறிந்து சொல்வது வாக்கு ஆகலின், இவ்வாக்கினை மௌனமாக்குவது முத்தி அன்றே எனின், மேற் கூறுகின்றார்.

உரையொடுங்கற் போத முதிக்கு மொழியே
யருளா மதன்போக் கசையாப்—பரையோகம்
போறற் சுகாதீதம் புண்ணியர்க்குப் பொய்யுதியா
தேறேர்க்குப் பல்விதமா கும்.

(உரை.) உரையொடுக்கின் போதம் உதிக்கும் ஒழியே அருள் ஆம் அதன்போக்கு அசையாப் பரையோகம்போலுல் சுகாதீதம்—வாக்கினை மௌனமாக்கின் உள்ளே போதம் தோன்றும் (ஆகலின், அவ்வாக்கு மௌனம் முத்தி அன்று; ஆயின், போதமடக்கின் முத்தியோ எனின்) போதம் அடக்கின் அருள் தரிசனம் (ஆகலின், அப்போதம் அடக்கல் முத்தியன்று; ஆயின், அருள் தரிசனம் நீங்குதல் முத்தியோ எனின்) அவ்வருள் தரிசனம் நீங்கின் போதஞ் சிறிதும் அசையாத பரையோகம் (ஆகலின், அவ்வருள் தரிசனம் நீங்குதல் முத்தி அன்று; ஆயின், பரையோக நீக்குதல் முத்தியோ எனின், பரையோகம் நீங்கின் சுகப்பேறும்; ஆகலின், அப்பரையோகம் நீங்குதல் முத்தி அன்று; ஆயின், அச் சுகப்பேறு நீங்குதல் முத்தியோ எனின்) அச்சுகப்பேறு நீங்குதலே சுகாதீதம் (இச் சுகாதீதமே முத்திநிலை.)

புண்ணியர்க்குப் பொய் உதியாது ஏனோர்க்குப் பல்விதம் ஆகும்—இச் சுகாதீத முத்தியை அடைந்த புண்ணியர்க்கு மேற்கூறிய சுத்தாவத்தையில் தோன்றும் பொய்கள் யாவும் தோன்ற, இம் முத்தியைப் பெறாது அச் சுத்தாவத்தையில் நிற்போர்க்கு அநுபவம் பலவிதமாய்த் தோற்றும்.

(குறிப்பு.) பரையோகம் கூறி அதற்கப்பால் சுகாதீதக் கூறினமையால், இவற்றிற்கு இடையில் தோன்றும் சுகப்பேறு வருவிக்கப்பட்டது.

பரிபூரண சிவத்திற்குத் தம்மைக் கொடுத்தலால் மெய்ஞ்ஞானிகளைப் "புண்ணியர்" என்றார்.

சுகாதீதத்திற்குச் சுத்தாவத்தைக் காட்சி பொய்யாகலின் "பொய்யுதியாது" என்றார்.

இத் திருவெண்பாவால் முத்திநிலை ஈதென்று அறிவித்தவாறு காண்க.

அச் சுகாதீத முத்தியை அடைதற்கு ஏதுவாகிய சுத்தாவத்தையில் நிற்போரது குணங்கள் யாவை எனின், மேற் கூறுகின்றார்.

சுருவி கழுல வரைநோக்காஞ் சிந்தை
பெருமூச்சாம் போதம் பிறியி—லருளாய்
வெதும்பி யுடல்வெறுக்கு மின்பாய் விகளம்
முதிர்ந்துறையு நாணுமொடுங் கும்.

(உரை.) கருவி கழுல வரை நோக்கு ஆம் போதம் பிறியில் சிந்தை பெருமூச்சு ஆம்—கருவிகள் நீங்கவே மலமேலின்று நோக்குவோர்க்கு நிலத்தின்கண் உள்ள பொருள்கள் அருகித் தோன்றுமாப்போல, (பிரபஞ்சம் எல்லாம் பொய்யாய்த் தோன்றுவதாம்) அக் கருவிகளுள் அதோமுகமாய் நின்ற போதம் அவற்றைப் பிறியில் (ஊர்த்துவமுகமாய் நின்று தன்னை அறியும், அங்ஙனந் தன்னை அறியும்போது இங்ஙனம் இருக்கின்ற யான் எறும்புகளால் * காங்கூழ் அரிப்புண்டதுபோல், அளவில் காலம் அக்கருவிகளால் அரிப்புண்டோனே என்னும்) சிந்தனையால் கெட்டுயிர்ப்புளதாம்;

அருள் ஆய் உடல் வெதும்பி வெறுக்கும் இன்பு ஆய் விகளம் முதிர்ந்து உறையும் நாணும் ஒடுங்கும்—(தன்னை

* காகப்பூச்சி யென்னும் ஓர் கிருமி.

அறிந்த பின்னர்) அருள்தரிசனம் உண்டாய், (பின்னர் அவ் வருளே தமக்கு வடிவாகி) இம் மாயா உடலம் வெதும்பி (இதனை) வெறுப்பன்; (பின்னர்) ஆநந்தமுண்டாய், (இவ் வாநந்த மேலீடாகிய) உன்மத்தந் தலைமீக்கொண்டு மௌனமா யிருப்பன், (அஃதன்றி, பிரபஞ்சத்தார்க்கு நாணுவதாய) நாணமும் நீங்கும்.

(குறிப்பு.) "போதம்பிறியில்" என்றதனால் தன்னை அறிந்தென்பது வருவிக்கப்பட்டது.

"அருளாய்" என்றதனால் அருள் தரிசனம் வருவிக் கப்பட்டது.

நாணம் ஒடுங்கலாவது நீராடல் பூசனையாதி செய்திலன் என்று உலகத்தார் பழிப்பது குறித்து வரும் நாணம் எனக் கொள்க.

இத் திருவெண்பாவால் கருவிகள் நீக்கியவிடத்துவருங் குணமும், தன்னை அறிந்தவிடத்து வருங் குணமும், திரு வருள் தோன்றியவிடத்து வருங் குணமும், ஆநந்தந் தோன் றியவிடத்து வருங் குணமுங் கூறியவாறு காண்க.

வேர்க்கும் விழிததும்பும் பொய்யறியின் மெய்வெது யார்க்கும் விறைக்கு மருளுதிப்பின்-வாக்குமன [ம்பி நின்றுபரி பூரணமாய் நேயத்தே கார்க்கதமாய்க் கன்றிப் புளகிதமாங் காண்.

(உரை.) வேர்க்கும் விழிததும்பும் பொய் அறியின் மெய்வெதும்பி ஆர்க்கும் விறைக்கும்—(பொய்யாகிய கருவி களை உள்ளபடி பொய்யாய் அறியின், மெய்யில்) வெயர்வை அரும்பும், விழியில் நீர்ததும்பும், எல்லாம் பொய்யென்

றறிந்தகொண்டேடன் என்று உடலத்துள் இளஞ்சூடெழ ஆரவாரிப்பன், (பின்னர்த் தன்னை உள்ளபடி கண்டு ஒன்றினையும் நாடாது) உடலம் அசைவற இருப்பன்;

அருள் உதிப்பின் வாக்கு மனம் நின்று பரிபூரணம் ஆய்நேயத்தே கார்க்கதம் ஆய்க் கன்றிப் புளகிதம் ஆம்—(பின்னர் அருள் தோன்றுமிடத்து வாக்குமனங்களில் நின்று அவ்வருள்) பரிபூரணமாய்த் தோன்ற இதற்கு முதலாய நேயத்தை (என்றைக்கு அடைவேன் என்று அந்நேயத்தை நாடி) மேகங் குழுறுவதுபோலாய் உள்ளே குழுறி உள்ளம் வெதும்பி உடலம் உரோமாஞ்சலியாம்.

(குறிப்பு.) வாக்கு மனங்களில் நின்று அருள் பூரணமாய்த் தோன்றுவதாவது, மனத்தால் நினைந்த நினைவு நினைந்த தில்லையாயும், வாக்காற் சொன்ன சொற்கள் சொன்ன தில்லையாயும், தனக் கநுபவமாய்த் தோன்றுவதாம் எனக் கொள்க.

இத் திருவெண்பாவால் கருவிகளைப் பொய்யென்று அறிந்தவிடத்து வருங்குணமும், திருவருள் உதித்தவிடத்து வருங் குணமும், அறிவித்தவாறு காண்க. (சு)

பேயைப் பெண்ணென்றிருந்தும் பித்தளைக்குப் பொன்றோற்று, மாயத்தூணுண்டு மனமாண்டு மயல்-போயத், திடுக்கமே பித்தாய்த் தெளிமயலா ணற்போ, னடக்குமருண் மேலிட்ட நாள்.

(உரை.) பெண்ணை பேய் என்று இருந்தும் பித்தளைக்குப் பொன் தோன்றும் மாயத்து உளன் உண்டு மயல் போய் மனம் மாண்டு—பெண்களைப் பேய்களைப் போலும் பிடித்து

வாதிப்பவனொன்று கண்டிருப்பதாயும், பித்தளைக்குப் பொன் தோற்றுப்போவதாய்க் காண்பதாயும், உதார எரிவாய்த் தோன்றும் மாயத்திற்குக் காடி கூழ் முதலிய ஊண் யாதுகிடைப்பினும் வாங்கி உண்டு (அவைகள்மேல் வைத்த) மயலும் போய் (அவற்றை மெய்ப்பொருளாகக் காணும்) மனமும் இறந்து;

அத் திடுக்கமே பித்து ஆய்த் தெளிமயல் ஆறற் போல் அருள் மேவிட்ட ஞாள் கடக்கும்—அப் பொருந்தல் அருந்தல் களையும் அவற்றிற்கு ஏதுவாய பொன்னையும் விழைந்து தெடி ஞாள் பிறவித் துன்பத்தால் வருந்தினேமே என்னும் அந்தத் திடுக்கந்தானே விடாப் பிராந்தியாய் அறிவு பயித்தியக் கொண்டோனைப் போலவும் திருவருள் மேவிட்டகாலத்து விளங்கும்.

(குறிப்பு.) பேய் பிடியுண்டு விடுபட்டோனுக்கு அப் காலத்து அதனைக் கண்டபோது பயந்தோற்றல்போல், முன் பெண்களால் வருந்திய வருத்தத்தை கோக்கி அவளைக் கண்டபோது பயந்தோற்றலான் அங்ஙனம் உவமை கூறினர்.

"பித்தளைக்குப் பொன் ரூற்றும்" என்று அதனினும் இழிவாய்க் கூறினமையால் ஓட்டுச் சின்னக்களையும் சிறு கற்களையும்போல் காண்பர் என்பதாயிற்று.

எங்கும் பரிபூரணமாய் அருள்வடிவா யிருத்தலானும், பொன் பெண் மண் ஊண் உடல் என்னும் ஐவகையும் வெறுத்து உலகத்தாரோடு மாறுபட்டிருத்தலானும், "தெனி மய லாறற்போல்" என்றார்.

இத் திருவிளையாடலால் அருள் மேலிட்டதாள் நடக்கும் குணாங் கூறியவாறு காண்க. (எ)

மலட்டுமகன் கீங்கி வரக்கண்ட தாய்தால்
அலத்தி மகிழு மதுபோ—லுலப்பிலாக்
காலங் கழிந்தனையுங் காணுந்தைக் கண்டகளிப்
பாலு மழுந்துமிப் பார்.

(உரை.) மலட்டு மகன் நீங்கி வரக்கண்ட தாய் தால் அலத்தி மகிழும் அதுபோல்—(எதிராள்) மலடருந்து (பின்னர் அரிதாய்ப்பெற்ற புதல்வன் (தன் மனைவிட்டு) நீங்கி (ஆயல் மனையிற்சென்ற பின்னர்) வர எதிர்கண்ட தாய் (சென்ற எதிர்ந்து மார்போடு அணைத்து முன்னர் அவனைப் பெறுத காலத்தைதயும் இப்போது அவனைப் பெற்றுக் கண்ட காட்சியையும் நினைந்து) தாலாட்டுதலோடு அழுது அவ்வழுகையோடும் சிரிக்கும்; அதுபோல,

உலப்பு இலாக் காலம் தீர்த்தனையும் காணுத்தைதி கண்ட களிப்பாலும் அழுது சிரிப்பார்—(திருவருளோம் பெறுத அனாதிறக்காலம் (பிறவியில்) வீணாளாய்க் கழிந்தனைதக் கருதியவதனாலும், (அக் காலங்களுள் ஓர் காலமாயினும்) காணுத அத்திருவருளோ (இப்போது கண்ட) களிப்பாலும், அவ்வருளோத் தோத்திரம் பண்ணலோடு அழுதல் அவ்வழுகையோடும் சிரிப்பார் (திருவருள் மேலிட்டைபெற்றோர்.)

(குறிப்பு.) "தாலாத்தி" என்ற உவமை கூறினையால் அருளோத் தோத்திரம் பண்ணுதல் வருவிக்கப்பட்டது. அருள் தம்பிடத்துத் தோற்றலான் அதனை மகவாக உவமித்து கூறினர். தால் - தாலாட்டுதல், அலத்தல் - அழுதல்.

இத் திருவெண்பாவால் கழிக்தகாட் கிரங்குதல் கூறிய வாறு காண்க. (அ)

சுகாதீத முத்தியைப் பெறுது, இங்ஙனந் திருவருள் மேலீட்டைப் பெற்றோர்க்குப் பிறப்பு உண்டாகாதோ ? எனின் மேற் கூறுகின்றார்.

நடைதளர்ந்து மெய்ம்மறந்து நாண மழிந்தே [ய்ச்
யுடறளர்ந்து கீழ்க்குரலிட் டுண்போய்-மடலெடுப்பா
சத்தாதி கெட்டுமனந் தாக்கற்றுச் சந்தழிந்த
பித்தர்க்கு மாகா பிணி.

(உரை.) கடை தளர்ந்து மெய் மறந்து நாணம் அழிந்து உடல் தளர்ந்து கீழ்க்குரல் இட்டு ஊண்போய்—(கருவிச் சேட்டைக ளடங்குதலின்) கடை தளர்ந்து, (அருளே வடிவா யிருத்தலின்) உடம்பு மறந்து, (உடம்பு மறத்தலின்) பிரபஞ்சங்கள் பழிப்பார் என்பது குறித்து வரும் நாணம் அழிந்து, (உண்டிமேல் விருப்பின்மையான்) உடல் தளர்ந்து, (மன மெனனியா யிருத்தலின்) கீழ்க்குரற் பேச்சாய், (அருளுருசம் புசித்தலின்) சிற்றூண் உண்பதாய்,

மடல் எடுப்பு ஆய்ச் சத்தாதி கெட்டு மனம் தாக்கு அற்றுச் சந்து அழிந்த பித்தர்க்கும் பிணி ஆகா—(அருளேயே அன்றி மற்றொன்றையும் காடாமையின்)* மடலெடுப் பான் போலாய், (ஐந்தவாவும் அற்றமையால்) சத்தாதி விடயங்களும் இறந்து, (இச்சத்தாதி விடயங்கள் இறந்தமையால்) மனம் ஒன்றேறுடும் தாக்கற்று, (மனம் ஒன்றேறுடுந் தாக்கற்றமையால்) அருளென்றும் தானென்றும் இன்றி இரண்டற்ற

* பின மடலாற் குதிரை செய்தேறுதல்.

(இவ்வருள் கலைமீக்கொண்ட) பித்தர்க்கும் சுகாதீத முத்திணை அடைந்தோனைப்போல்) பிறவிநோய்கள் உண்டாகா.

(குறிப்பு.) அருள் மேலீட்டையும், பிரபஞ்சப் பற்றொழிவையும் உடையோர் தேகாந்தத்து அறிவோடுஞ் சென்று சுகாதீதமுத்திணை அடைவர். ஆகலின், "பித்தர்க்கு மாகா பிணி" என்றார்.

இத் திருவெண்பாவால் அருள்மேலீட்டை உடையோர்க்கும் பிறப்பு இன்றென்று அறிவித்தவாறு காண்க.

குறும்பாட்டும் புன்சிரிப்புங் கூர்த்திணைமையா நோக்கு
வெறும்போகஞ் சாய்ந்த விழிணை—மறந்த [ம்
திகைப்பும் விதிர்ப்புந் திமிர்ப்பும் விணைப்பும்
உகைப்புந் தெளிந்தறித லும்.

(உரை.) குறும்பாட்டும் புன்சிரிப்பும் கூர்த்த இணையா நோக்கும்—தாம் அறிந்த பாட்டுகளுள் சில பாட்டான் அருளைத் தோத்திரம் பண்ணுவதாய) குறும்பாட்டும், (அதந்த மகிழ்ச்சியால் தோன்றும்) புன்சிரிப்பும், (உட்புறவும் அவ்வாறந்த பூரணத்தை நுண்ணியதாய்ப் பார்த்துக்கொண்டிருப்பதாய) இணையா நாட்டமும்,

வெறும் போகம் சாய்ந்த விழிணையும் மறந்த திகைப்பும் விதிர்ப்பும் திமிர்ப்பும் விணைப்பும் உகைப்பும் தெளிந்து அறிதலும்—(தாம் ஒன்றையும் விழையாது இருப்பினும் தமது சந்நிதியில்) பொய்ப் போகங்கள் மிகவுஞ் சாய்ந்து வந்து கிடப்பினும் (இத் தன்பங்கள் சண்டி என் வந்தன என்று அவற்றை) சிறிதும் நினையாத திகைப்பும், (அவற்றைக் கண்டபோது) உடல் நடுக்குறுதலும், (பஞ்சேந்திரியங்கட்கு உரிய விடயங்கள் சேர்படின் அவ் விடயச்சுவை

தோன்றுத) திமிர்ப்பும், (பூதம் பேய் புலி காடி முதலிய வந்தகாலத்துக் கற்றாண்போலத் தேகம் அசைவற்றிருக்கும்) விறைப்பும், (ஆநந்தம் மிகவும் வந்து தாக்குதலான் எழுந்து குதித்தாடும்) உலைப்பும், (அங்ஙனம் ஆடிய ஆநந்த மேலீட்டால் தோன்றுது அவ்வாநந்த மேலீடு சிறிது நீங்கிய போது இப்போது யாம் என் செய்தோம் என்று) தெளிந்து தறிந்து கோடலும், (ஆகிய இக் குணங்கள் எல்லாம் பரா யோக நீங்கி ஆநந்தம் பெற்றோர்க்குத் தோன்றுவனவாம்.)

(குறிப்பு) இங்ஙனம் அறிவும் துறவும் உடைய ஞானி களைப் பத்தராய் உள்ளார் எல்லாரும் அன்னபானம் காய் பழம் ஆடை முதலிய கொண்டுவந்து வைத்து வணங்குவர் ஆகலின், "வெறும்போகஞ் சாய்ந்துவிழினும்" என்றார். வெறும் போகம் - பொய்ப்போகம். சாய்ந்தென்பது மிகுதி மேல் எறிற்று.

இத் திருவெண்பாவால் ஆநந்தம் பெற்றோர் குணம் அறிவித்தவாறு காண்க. (கo)

இங்ஙனம் பூரணாநந்தம் பெற்றோர்க்கு ஆடலும் பாட லும் உண்டாவது என்னை எனின், மேற் கூறுகின்றார்.

கால்வந்த வர்க்காட்டங் கைவந்த வர்க்காட்ட
மால்முந்தி வந்தவர் வாய்ப்பாட்டு—மேல்கொண்ட
வானந்த வுல்லாசத் தாச்சரிய மாரறிவா
ரூனம்போற் காணு முலகு.

(உரை.) கால் வந்தவர்க்கு ஆட்டம் கை வந்தவர்க்கு ஆட்டம் மால் முந்தி வந்தவர் வாய்ப்பாட்டும்—(பிரமி முட வாயிருந்து இடையில் தெய்வகதியால்) கால் தடக்க வந்த வர்க்கு ஆட்ட முண்டாவது போலும், (கைவராதிருந்து

இடையில் அங்ஙனம்) கைவந்தோர்க்கு ஆட்ட மூண்டாவது போலும், (தாங் கூடி அநுபவித்த பெண்மேல்) ஆசை தலை மீக்கொண்டு வந்தவர் வாய்ப்பாட்டுப்போலும்,

மேல்கொண்ட ஆநந்த உல்லாசத்து ஆச்சரியம் ஆர் அறிவார் ஊணம்போல் காணும் உலகு—(தம்மை மறைத்து) மேற்கொண்டடைந்த ஆநந்த உல்லாச அதிசயத்தால் (அவர்க்கு ஆடலும் பாடலும் உண்டாம்,) அவ்வாநந்தாதி சயத்தை (அதனைப்பெற்ற ஞானிகள் அறிவது அன்றி) மற்றை யாரறிவார்? (அவர்க்கு ஆடல் பாடல்களை) பயித்திய மிகுதியால் உண்டாவனபோல் காண்பார் உலகத்தார்.

(குறிப்பு.) நெடுநாள் காலுங்கையும் வாதிருந்து இடையில் அவை வந்தோர்க்கு ஆட்டம் உண்டாவதுபோல், அளவிறந்தகாலம் மும்மலச்சிறையிற் கிடந்தோர்க்கு இப் போது அச்சிறை விடுதலையாய்ப் பரிபூரண வடிவைப் பெற்ற மையான் ஆடலும், தாம் அநுபவித்தபெண் இன்பவாசனை உளத்திருத்தலான் அவர்க்குப் பாடல் உண்டாவதுபோல், தன்பப் போகத்தையே அளவில்காலம் புசித்தோர்க்கு இப் போது நிராதிசயாநந்தங் கிடைத்தமையால் பாடலும், உண் டென்பது இவ்வுவமைகளாற் காண்க.

"ஊணம்போல்" என்றமையால் ஊணம் இன்றென்ப தாயிற்று.

உலகென்பது ஆகுபெயர்.

"கைவந்த வர்க்காட்டம்" என்பதற்கு அருத்தம் ஓர் வித்தையாதி முன் கைவராதிருந்து பின் கைவந்தபோது ஆட்டம் உண்டாவதுபோலும் என்கிலுமாம்.

இத் திருவெண்பாவால் ஞானிகட்குப் பூரணவடிவம் பெற்றமையால் ஆடலும், ஆநந்தம் பெற்றமையால் பாடலும் உண்டாம் என்று அறிவித்தவாறு காண்க. (கக)

ஆநந்த மௌனமதனை அடைந்த ஞானிகள் போதம் இழந்தோராகவின், இங்ஙனம் நிர்விகாரிகளா யிருந்தோர்க்கு அந்த விகாரிகள் போலும் ஆடல் பாடல் எங்ஙனம்? உண்டாம் எனின், மேற் கூறுகின்றார்.

அறிவு பறிகொடுத்திவ் வாக்கையற மாறிப்
பெறுதி யிழப்புதியாப் பித்தி—னறிசென்
றலையற்ற நீத்தமோ ராளற்ற கப்ப
லுலைவுற்ற தோநிற்ப தோ.

(உரை.) அறிவு பறிகொடுத்து இவ்வாக்கை அற மாறிப் பெறுதி இழப்பு உதியாப் பித்தின் சென்று அறி—(முன்னர் விடயாகந்தத்திற்குத் தமது அறிவைப் பறிகொடுத்ததுபோல், இப்போது மாறிச் சொரூபாகந்தத்திற்கு) அவ்வறிவைப் பறி கொடுத்து, (முன்னர்க் கூடியிருந்த) இம் மாயாவடிவ மறந்து போக, (இப்போது அருள் வடிவாய்) மாறிப்பெற்று, (அவ் வருளே வடிவாகவின் ஓர் பொருளைப் பெற்றோமென்னும்) பெறுதியும், (ஓர் பொருளை இழந்தோ மென்னும்) இழப்பும் (இவற்றுன் வரும் இதாகிதங்களும்) தோன்றுத ஆநந்தம் பயித்திய மீக்கொண்டு, (ஓரிடத்துச் சிறிதேனும் விகாரமுண்டாகாது இதனை அறிவில்) சென்று பார்த்தறிந்த (இஃதன்றி,)

அலை அற்ற நீத்தம் ஓர் ஆள் அற்ற கப்பல் உலைவு உற்றதோ நிற்பதோ — அலையின்றிய சாகரத்தில் நிற்கும் ஓராளும் இன்றிய கப்பல் அசைவுறுகின்றதோ? அசை

வும்து நிற்கின்றதோ? (அஃது எங்ஙனம் அசைவற்று நிற்கின்றது, அதுபோலும், மௌனநந்த சாகரத்தில் மூப்பத் தாறு தத்துவங்களும் கற்போதமும் இறந்து நின்ற ஞானி யாரும் அசைகிலர் என்று இத் திட்டாந்தத்தாலும் கண்டு கொள்க,) (கஉ)

(குறிப்பு.) அலையற்ற நீத்தத்தை மௌனநந்தத்திற் கும், ஆளற்றிருத்தலைக் கருவிகளிறந்து நிற்றற்கும். அசை வற்ற கப்பலைப் போதமிறந்த ஞானிகளது அறிவிற்கும், உவ மித்தார். அறிவு பறிகொடுத்தல் - ஆநந்தமயமாய் அழுந்தல்.

செகுஞ்சிரிக்கத் தாஞ்சிரித்துச் சீபேயென் றோட்டி லகம்புறங்கா டேச்சுக்குற் றற்றுத்-திகம்பரியாய்த் தானந்தம் பாடிவின்னிற் றட்டத் துணங்கையடித் தானந்தக் கூத்துருடிப் பார்.

(உரை.) செகம் சிரிக்கத் தாம் சிரித்துச் சீபேய் என்று ஓட்டில் புறங்காடு அகம் எச்சுக் குற்றற்றுத் திகம்பரி ஆய்— (உலகமனை தெரியாத பேயொன்று) சகத்தோர் தம்மைப் பார்த்துச் சிரிப்ப, (ஞானநெறி தெரியாத மலப் பேயொன்று) தாமும் அவரைப் பார்த்துச் சிரித்து, (புறந்திண்ணை யோதுச்சாவடிகளில் நாம் இருந்தவிடத்து அவர் வந்து) சீ பேயரே போம் என்று (ஓட்டிலில் யாதொன்றும் கூறுது அவ்விடம் விட்டு நீங்கி) புறங்காட்டை நண்மனைபோற் கண்டு, அசுத்தமென்னும் அருவருப்புச் சிறிதும் அற்றுத் திகம்பரிகளாய் (அவ்விடத்திருந்து,)

தான் அந்தம் பாடி வின்னில் தட்டத் துணங்கை அடித்து ஆனந்தக்கூத்து நடிப்பார்,—தமது போதாகாசமான இடத்துப் பாடிச் சிதாகாசவெளியில் பொருந்தி நின்று

தணைங்ஙைகக் கூத்திற்கு உரித்தாம்படி கையடித்து ஆகந்த டனம் பண்ணுவர் (அவ்வாகந்த பூரண ராயினர்.)

(குறிப்பு) உலகர்க்கு ஞானிகள் மாறுபாடா யிருத்த லானும், ஞானிகட்கு உலகர் மாறுபாடா யிருத்தலானும், "செகஞ் சிரிக்கத்தாஞ் சிரித்து" என்றார். உலகத்திற்கு ஞானம் பேய் ஞானத்திற்கு உலகம் பேய் என்னும் உலக வழக்கமும் அது.

பிரபஞ்சமெல்லாம் ஆகந்த பூரணமாய்த் தோற்றலின் சுடுகாட் டசுத்தம் அவர்க்குத் தோற்றாது என்பதறிக.

"தாணைந்தம்பாடி" என்றதனால் போதம் இறந்து நின்று பாடினர் என்பதும் "விண்ணிற்றட்ட ** கடிப்பார்" என்றதனால் பரிபூரணாகந்தம் மாறாது கடிப்பா ரென்பதுக் காண்க.

இவை யிரண்டு திருவெண்பாவானும் ஞானிகள் நிருவி காரிகளா யிருந்தே ஆடுவர் பாடுவரென்று அறிவித்தவாறு காண்க. (கந

நீர் கூறியவாறே எல்லாவற்றையும் துறந்து, சிவவேடம் பூண்டுகொண்டு, தவங்களைச்செய்து, சிவாலயங்கடோறும் ஆடிப்பாடி அழுது சிரிக்கின்றீர் நிருவிகாரிகள் அலரோ! எனின், மேற் கூறுகின்றார்.

விபரீதப் பூணு முடையும் விளியா
லயிமா னமுமவரா லாட்டுந்—தபசுபோற்
செய்யுஞ் சடங்குந் திகைப்புஞ் சிதம்பரத்தி
லையன் றனக்கறிய லாம்.

(உரை.) விபரீதப் பூணும் உடையும் வினியால் அபி மானமும் அவரால் ஆட்டும் தபசுபோல் செய்யும் சடங் கும்—(பார்த்தபேருக்கு) விபரீதமாய்த் தோன்றும்படி (சிரம் செவி களம் கரம் மார்புகளில் மிகவும் பூண்டுகொள்ளும்) உருத்திராக்கப் பூண்களும், (உத்தூளனமும்,) ஓட்டுவேட்டி உடையும், வார்த்தையிலுல் யாம் சிவமதம் என்று பிடித்துப் பேசும் அபிமானமும், அவரிடத் தண்டாம் ஆடல் பாடல் களும், தவசுபோற் செய்யும் ஞாலசாரங்களும்,

திகைப்பும் சிதம்பாத்தில் ஐயன் தனக்கு அறியல் ஆம்—(அவ் வேடத்திற்கும் கடைக்கும் உரிய பரிபூரண ஞானம் அகத்து இன்றி) திகைத்திருத்தலும், (ஆகிய இவை உடையாரது கருத்தினை) சிதாகாசத்தில் பஞ்சகிருத்திய கடனம்பண்ணுகின்ற பரமசிவனது திருவுளத்திற்கே அறிய லாம் (அன்றி மற்றையர்க்கு அறியலாகாது.)

(குறிப்பு.) ஆபரணம்போல் பூண்டு கோடலின், உரு த்திராக்கத்தை, "பூண்" என்றார். உருத்திராக்கங் கூறின மையால் உத்தூளனம் வருவிக்கப்பட்டது.

அகத்து ஞானம் இன்றி, புறத்து இங்ஙனங் காட்டுவன எல்லாம் தற்போதத்தா லுண்டாவன ஆகலின், இவர் நிருவி காணிகள் அலரென்பதுங் காண்க. இவர்களும் ஞானிகள் போல் பிறர்க்குத் தோற்றலின், "சிதம்பரத்தி லையன் றனக் கறியலாம்" என்றார்.

இத் திருவெண்பாவால் ஞானிகள்போல் கடிக்கின்றே னைப் பொய்ஞ்ஞானிகளென்று அறிவித்தவாறு காண்க.

மெய்ஞ்ஞானிகள் கடை இன்னுங் கூறுகின்றார்.

மெய்யடை [illegible]

மாலயனு யிந்திரனுய் வாழுவதாய் மாளுவதாஞ்
சாலமயல் பார்த்துத் தலையசைப்பர்—ஞாலமயங்
தன்மத்தக் கோரணிபார்த் தோகோ வெனச்சிரிப்பர்
தன்னைப்பார்த் தாடுவர்தாந் தாம்.

(உரை.) மால் (ஆய்) அயன் ஆய் இந்திரன் ஆய் வாழு
வது ஆய் மாளுவது ஆம் சால மயல்பார்த்துத் தலை அசைப்
பர் ஞாலம் மயங்கு உன்மத்தக் கோரணிபார்த்து ஓகோ
ணைச் சிரிப்பர்—(தேவர்கட் கெல்லாம் மேலாய) மால் என்
றும் பெயரை உடையனுகியும், அயன் என்னும் பெயரை
டையனுகியும், இந்திரன் என்னும் பெயரை உடை
னுகியும் சிறந்துள்ளார் (தத்தம் பதவிகளில்) அறிவின்றி
வாழ்வதாய்க் கருதிக்கொண்டிருந்து, பன்னளில் மாண்டு
போவதாகும் அவரது மிகுந்த ஆணவ மயக்கத்தைப் பார்
த்து, (இவ்வாணவம் அவர்களையும் பொய்யாகிய தேகாதிகளை
யும் மெய்யாக் கருதப்பண்ணி மயக்கிற்று, கண்டீர்கொலோ
என்று உள்ளத்து காடி) சிரக்கம்பங் கொள்வர், (அவ்
வாணவத்தான்) இவ்வுலகத்தார் மயங்காநின்ற பயித்தியக்
கோரணிக் கூத்தைப் பார்த்து ஓகோ எனப் பிறர்க்குக்
கேட்கச் சிரிப்பர்,

தன்னைப் பார்த்து ஆடுவர் தாம்தாம்—(அஃதன்றி)
தம்மைப் பார்த்து, தம்மைச் சிவபூரணம் விழுங்கிக் கோட
லால் காணுது, தாம் அச் சிவபூரணம் தாம் என நடனம்
புரிவார்.

(குறிப்பு.) மால் அயன் இந்திரன் முதலியோர் இறந்து
போவது ஆகமப் பிரமாணத்தால் அறிவதாகலின், அவரது
'மயல் பார்த்துத் தலையசைப்பர்" என்றார்.

பித்தமேறினோன் தன்னுடம்பு தெரியாது உலகர் கடைக்கு மாறுபாடாய்த் திரிவதுபோல், ஆணவ மேலீட்டால் தம்மைத் தெரியாது ஞானிகள் கடைக்கு மாறுபாடாய்த் தேகபோகங்களை விலைஞர்துகொண்டு, அறுவகைத் தொழில்களில் காலுபேதமாய் முயற்சிப்படலான், "உன்மத்தக் கோணி" என்றார்.

அவர் மருளால் மயங்கி கடிக்கின்றார், இவர் அருளால் தெளிந்து கடிக்கின்றார் என்பதுக் காண்க.

தாந்தாம் என்பது அந் கடைத்திற்கு ஓர் தானமும் ஆமெனக் கொள்க. (கரு

ஆசைமுத லான வனைத்தும்போய் நானதுவாம்
வாசனையு மாண்டு மறந்தறியா—நேசத்
துறும்போக வுல்லாச வூமைக்கூத் தாடிக்
குறும்போக்கு வந்துகடப் பார்.

(உரை.) ஆசை முதல் ஆன அனைத்தும் போய் நான் அது ஆம் வாசனையும் மாண்டு மறந்து அறியா நேசத்து உறு போக உல்லாச ஊமைக் கூத்தாடி—ஐந்து அவா முதலி கருவிகள் அனைத்தும் இறந்து, நான் அச்சிவத்தோடு அத் விதமானேன் என்பதாகிய வாசனையும் இறந்து, (க தரிசனம் திருவருள் தரிசனங்களில் நின்றோர் ஓர் கா அவற்றை மறந்து மீண்டும் அறிவதுபோல்) மறந்து அறியா நேயத்துத் தோன்றும் பரிபூரணாநந்த போக உல்லாசத்தோ மௌனக் கூத்தாடி;

குறும் போக்கு வந்தும் கடப்பார்—பின்னர்ச் சிறிதிட சென்று மீண்டு வந்தும் உலாவுவார் (அவ்வத்துவிதாகந்த பெற்றோர்.)

(தறிப்பு.) விடயங்களில் செல்லும் ஐந்து அவாவும் நீங்கவே, அவ்விடயங்களை அறிந்து பற்றி அவற்றுள் அழுந்துவதாய இருவகை இந்திரியங்களும் அந்தக்காரணங்களைத் நீங்கும். இவைகள் நீங்கவே, ஒழிந்த கருவிகளைத் நீங்கும். ஆகலின், "ஆசை முதலான வினைத்தும்போய்" என்று ஆசையை முன்வைத்துக் கூறினர்.

தேயத் தழுந்தியபோது போதம் இறத்தலின், "மற் தறியா தேசம்" என்றார்.

சிறு பிள்ளைகள்போ லுலாவி விளையாடுவ தாகலின், "குறும்போக்கு வந்து தடைப்பார்" என்றார்

இவை யிரண்டு திருவெண்பாவானும் மெய்ஞ்ஞானிகள் அஞ்ஞானிகளது பொய்யுலகாசாரத்தைக் கண்டு சிரக்கம்ப முதிகளும், தம்முண்மையும் ஆநந்தாநுபவமும் கண்டுதடை களும் செய்வதென்று அறிவித்தவாறு காண்க. (கசு)

கருவிகளும் போதமும் இறந்து தேயத் தழுந்திலம் அக்கருவிகளும் போதமும் உடையோரது மயக்கமும் தமது தெளிவும் எங்ஙன மறிவார்? எனின், மேற் கூறுகின்றார்.

கேடுஞ் சுகமு முதலெல்லாங் கீழ்ப்படுத்திக்
கூடுஞ் சுகம்போலக் கொள்ளாதே—நாடுநதும்
பூனைக்கண் ணோரி பொருப்பேறி போலுச்சிப்
பானைப்போ னீயவரைப் பார்.

(உரை.) கேடும் சுகமும் முதல் எல்லாம் கீழ்ப்படுத்திக் கூடும் சுகம்போலக் கொள்ளாதே—துக்கமும் சுகமும் இவற்றிற்கு முதலாய் உள்ள தேகாதி பிரபஞ்சமெல்லாமும் கீழ்ப்படுத்தி நீக்கி, தேயத்தைக் கூடும் பாமுத்தர் ஞானம்

போலச் சீவன் முத்தர் குணத்தை நீ கருதிக்கொள்ளாதே; (அஃது எங்ஙனம் எனின்,)

காடு நகும் பூனைக்கண் எரி பொருப்பு எறிபோல் உச்சிப் பானுபோல் நீ அவரைப்பார்—நாட்டின்கண் உள்ளார் வாழ்த்து கையாகின்ற இருட்டைச் சிறிதேனும் இன்றி இரவிலும் பகலிலும் அறியும் பூனையினது கண்ணைப்போலும், எரிகணைமேல் எறிஞனைப்போலும், மலைமேல் எறிஞனைப்போலும், மத்தியானத்துச் சூரியனைப் போலும் நீ அச் சீவன்முத்தர் அறிவையும் பார்த்தறிந்து.

(குறிப்பு.) பூனைக் கண்ணிற்கு இரவிலும் பகலிலும் பொருள்கள் தோன்றுவனபோலும், எரிகணைமேல் எறிக்கு இருபாலும் தோன்றுவன போலும், பொருப்பேறிக்குத்திற் பொருளும் பொருப்பிற் பொருளும் தோற்றுமாபோலும், உச்சிப் பானுவிற்கு உதயமாகுந் தானமும் அத்தமிக்குந் தானமும் தோற்றுமாபோலும், பிறட்பில் தன்பமும் வீட்டில் இன்பமும் அவர்க்குத் தோற்றும். ஆகலின் இங்ஙனம் உவமை கூறினர்.

இருளான் அறியுங் கண்ணிற்கு ஒளியிற் பொருள் தோற்றுததுபோல் பெத்தர்க ளென்பதும், ஒளியான் அறியுங் கண்ணிற்கு இருளிற் பொருள் தோற்றுததுபோல் பரமுத்தரென்பதும், இருளினும் ஒளியினும் அறியுங் கண்ணைப்போல் சீவன்முத்தரென்பதும், "பூனைக்கண்" என்னு உவமைக் குறிப்பார் காண்க.

பரமுத்தர் தநுவாதிகளை நீக்கி நேயத்தழுந்தினை சீவன்முத்தர் தநுவாதிகளோடு கூடியுங் கூடாமல் நின்று நேயத்தழுந்தினர். ஆகலின், இச் சீவன்முத்த ராவா இவரென்று இதனுட் பகுத்தறிவித்தார்.

ஏறி யென்பதனைக் கரைமேலேறி யென்பதனேடுங் ட்டுக.

"நாடுநகும்" என்பது பூனைக் கண்ணிற்கு அடை.

இத் திருவெண்பாவால் சிவன் முத்தாய மெய்ஞ்ஞானி ள் சகமுகமும் அகமுகமும் தோன்றப் பற்றுத பார்த்து றிவொன்று அறிவித்தவாறு காண்க. (எ)

ஞானிகளாயினேர் மௌனமா யிருப்பதன்றி இவர் டலாதிகளைச் செய்வது என்னை? என்று சரியாதியி ற்போர்சொல்லார்களோ? எனின், மேற் கூறுகின்றார்.

சூலையும் பேயும் பிடித்துழல்வார் சும்மாநம்
போலறிவீ ரென்றுரைத்த புத்திபோல்—மூல
விருளான் மறந்தறிவா ரீதென்று னென்பா
ருளா லறிந்தறிவா ரை.

(உரை.) சூலையும் பேயும் பிடித்து உழல்வார் சும்மா ம்போல் அறிவீர் என்று உரைத்த புத்திபோல்—(பொது மாதர் கூட்டாவான் வரும்) சூலேநோயும் (நற்குணத்தை மாறுபடுத்தும்) பேயும் பிடித்து (அவற்றான் வருந்தி) சுழல் வார் (இச் சூலையும் பேயுங்கொண்டு) சும்மா எமதறிவைப் போல் (நீரும்) அறிவீர் என்று (நற்குணத்தோர்க்கு) சொன்ன புத்திபோல்,

மூல அருளால் மறந்து அறிவர் அருளால் அறிந்து அறிவாரை ஈது என் என்பார்—மூல மலவிருளால் (தம்மை) மறந்து (மாயா காரியமாகிய தநுவாதிகளை யான் எனதென்று) அறிவார் அருளால் (அத்தநுவாதிகளைப் பொய்யென் றறிந்து நீங்கி) தம்மையும் தமக்குரிய பேரின்பத்தையும் அறிந்து

ளாரைப் பார்த்து (பித்தரைப்போல் நீர் செய்யும் ஆடல் பாடல்கள்) இதென்னை என்று சொல்வர் ; (அதுகொண்டு இவர்க்கோர் இகழ்ச்சியும் இன்று.)

(தறிப்பு.) சூலையும் பேயும் பிடித்துளோர் புத்தியை அவை பிடியாத கற்குணத்தோர் கேளாததுபோல், சகல கேவலத்தில் நிற்போர் சொற்களை அவற்றை நீங்கிச்சுத்தத் தில் நிற்போர் கேளாரென்பது இவ் வுவமையான் அறிக.

சூலையும் பேயும் என்றது எகதார விராதியாய் இலிங்க விராதியா யிருப்போர்க்குப் பொதுமாதர் கூட்டாரவும் ஐவாராசர் முதலிய மருளேற்றிக் கொள்வதும் கன்றென்று பிறர் கூறு வனபோல் என்பதும் ஆம்.

இத் திருவெண்பாவால் மெய்ஞ்ஞானிகளது ஆடலாதி களைக் கண்டு கருமிகள் பழிப்பிலும் அது பழிப்பின் பாற் பட்டது அன்றென்று அறிவித்தவாறு காண்க. (கஅ)

ஞானிகள் மகிமையை உலகத்தாரும் சரியையாதியி னிற்போரும் அறியாதிருத்தல் என்? எனின், மேற் கூறு கின்றார்.

மருண்மூகர் வாக்கறிய வல்லரோ மாயா
விருளே யொளியா யிருப்ப—ரருளருத்த
பேயரைப்பே யென்னரோ பித்தநாப் பாலிருட்கண்
பார்வைக்குப் பாலு பகை.

(உரை.) மருள் மூகர் வாக்கு அறிய வல்லரோ மாயா இருளே ஒளி ஆய் இருப்பர்—பித்தமேறிய ஊமர்கள் (கல்லறிவாளர் கூறும் அறகெறி) வாக்கினை (உட்கொண்டு) அறியவல்லரோ ? (அதுபோல், உலகத்தார் ஞானிகள்

றுந் திருவாக்கான் ஆயினும் அவர்களை ஞானிகளென்ற
நியவல்லரோ ? அஃதன்றி, தாம் கற்ற தலைநிலைப்
ணையாதிகளுமாகிய) மாயா விருளைத் தானே ஞானப்
ரகாசமாக் கருதிக்கொண்டிருப்போர்,

உருத்த அருள் பேயரைப்பேய் என்னுரோ பால்பாலை
ித்த கா இருள்கண் பார்வைக்குப் பகை—(மூம் மலக்களை
ும் தற்போதத்தையும்) கோபித்த அருளாகிய பூரணப்
பேய் பிடித்த பெயரைப் பேயென்று சொல்லார்களோ ?
அங்ஙனம் இருந்தோர் இக்ஙனம் இருந்தோரைப் பேய
ன்று இகழ்வான் என் எனின்) மதாமாகிய பால் பீக்க
மேறிய காவிற்குப் பகையானது போலும், பேராணிப்
ிரகாசமா யிருந்த பானு யிருளை ஒளியாகக்காணும் இருட்
கண் பார்வைக்குப் பகையானது போலும் (ஆக்கமும் நிரு
வருளும் மலமேலிட்டால் அவர்க்குப் பகையாமாகலின்,
இவற்றைப் பெற்ற ஞானிகளும் பகையாத் தோற்றலர்
இஃதே அவரிகழ்தற்குக் காரணம் என்று அறிந்து)

(குறிப்பு.) "மருண்மூகர் வாக்கிய வல்லரோ" என்
றது உலகத்தார்க்கு உவமை.

நூலுணர்ச்சியோடும் சரியையாதிகளி னிற்போர் இக
வாறென்றது பாஞானம் இன்மையால் எனக் கொள்க.

பகை என்பதனைப் பால் என்றதனோடுங் கூட்டுக
கைப்பாயும் இருளாயும் மாறுபடத் தோற்றலின் "பகை"
என்றார்.

இத் திருவெண்பாவால் ஞானிகளது மகிமையை உ
கத்தாரும் சரியையாதிகளி னிற்போரும் மெய் யுணர்ச்
யின்மையான் அறியார்களென்று அறிவித்தவாறு காண்க.

ஞானிகள் மகிமையை மானிட ரறியாராயின், அறிவார் ஆர்? எனின், மேற் கூறுகின்றார்.

அடைப்புள்ளா யாளடர்ந்த வாமையாய்த் திக்கே
யுடுப்பதா யோர்ந்துழல்வார்க்கூரார்-நடைப்பிணமே
யூமைப்பே யாரெனினு மோலமிடுந் தேவர்குழாஞ்
சேமக்கோ லாளிந் திரர்.

(உரை.) அடைப்புள் ஆய் ஆள் அடர்ந்த ஆமை ஆய்த் திக்கே உடுப்பது ஆய் ஓர்ந்து உழல்வார்க்கு ஊர் ஆர்— (கேய நிட்டை யாருந்திருத்தலின் மூட்டைகளை வைத்து அவையங் காக்கும்) அடைப்படட் போலாய், (காமிருந்த இடந் தேடிச் சிலர் அன்னதிகளைக் கொடுவந்து கோரை வைத்து வணங்கி உபசாரங்களைக் கூறினும் இந்திரியங்கள் ஐந்தையும் அவற்றிற் செல்லவொட்டாது உள்ளடக்கிக்கொண்டிருத்தலின் ஆள் அடர்ந்த ஆமைபோலாய், (இவ்வுடையைத் துறந்து திக்கெல்லாம் பரிபூரணமாயுள்ள உடையைத் தம்மைத் தெரியாது சூழவுடுத்திக்கொண்டிருத்தலின்) திக்கையே உடுப்பதாய், (இங்ஙனந் தேர்ந்து உலாவுவார்க்கு) ஊரின்கண் உள்ளார் (நன்று கூறினுந் தீது கூறினும் உறவோரா பகைவரோரா இவர்) யாவர்?

நடைப்பிணமே ஊமைப்பேயார் எனினும் ஓலம் இடும் தேவர் குழாம் சேமக்கோல் ஆள் இந்திரர்—(அஃதன்றி) நடையாடிய பிணம்போல் திரிந்தார் எனினும் ஊமைப் பேயரைப்போல் இருந்தார் எனினும், (அவரது மான்மியத்தை) தேவர் கூட்டங்களெல்லாம் அறிந்து சூழ்ந்துகொண்டு தோத்திரம் பண்ணுநிற்பர், இந்திரர்கள் (அவர்க்கு எவற்பணிவிடை செய்யும், சேமக்கோ லாள்களாய்த் திரிவர்.

(தறிப்பு.) அடைப்புள் மூட்டையைச் செட்டையால் டக்கிக்கோடல் போல், அண்டங்களை எல்லாம் தமது ரணத்தால் மறைத்துக்கொண்டிருப்பர் என்பதும் ஆம்.

ஆன் அடர்ந்தபோது ஆமை ஐந்துறுப்பையும் அடக்கிக் கோடல்போல், விடயங்கள் சேர்படின் அவர் ஐக்கையும் டக்கலின், இங்ஙனம் உவமை கூறினர்.

உளர் என்பது உளரின்கண் உள்ளார்மேல் நின்றது. ர்ந்துழல்வார்க் கூரிலுள்ளா ரியாவரெனக் கூட்டுக.

கருவிச்சேட்டைகள் இறந்து நிற்றலின், "கடைப்பி ணம்" என்றும், "மௌனாநந்தமா யிருத்தலின், "ஊமைப் பேயர்" என்றும், ஒன்றிலும் அவாவற்ற மெய்ஞ்ஞானி தேவருலகத்தும் இன்மையால், "ஞாலமிடைத் தேவர்குழாம்" என்றும், "சேமக்கோலாளிக்கிரர்" என்றுங் கூறினர்.

அந்த ஞானிகட்கு எவல் செய்வது மிகவும் சிறப்பாக லின், அவர் பிடிக்குங்கோலை "சேமக்கோல்" என்றார்.

உபேந்திரர் உளர் ஆகலின், இந்திரனொன்று பன்மை யாகக் கூறினர்.

இத் திருவெண்பாவால் ஞானிகள் மகிமையை மானி டர்கள் அறியார் எனினும், தேவர்கள் அறிந்து எவல் பு வார் என்று அறிவித்தவாறு காண்க. (உ0)

இங்ஙனம் மகிமையுடைய ஞானிகள் எத் தேசத்திற் செல்வர் எவ்விடத் திருப்பர் எனின், மேற் கூறுகின்றார்.

செத்தவரைப் போலத் திரும்டாமற் போகலுமா
மெத்தினையு மொன்றென் றிருக்கலுமா-முத்தர்தமச்

கண்டமணுச் சிற்றி லாடரங்கந் தேகமலாற்
கண்டிடுகைக் கேதுமிலை காண்.

(உரை.) முத்தர் தமக்குச் செத்தவரைப்போலத் திரும்பாமல் போகலும் ஆம் எத் திசையும் ஒன்று என்று இருக்கலும் ஆம்—முத்தர் தமக்குச் செத்தவரைப்போலத் (தாம் இருந்து நீங்கிய பதியில் மீட்டும்) திரும்பாமல் சோலும் ஆகும், (அஃதன்றி எல்லாம் பரிபூரணமாய்த் தோற்றலின் எமக்கு) எல்லாத்திக்கும் ஒன்றுதானே என்று ஓரிடத்திருத்தலும் ஆகும்;

தேகம் அணுச் சிற்றில் அண்டம் ஆடு அரங்கம் அலால் கண்டிடுகைக்கு ஏதும் இலை—(அஃதன்றி) தேகங்கள் ஆன்மாக்கட்குச் சிற்றில் இழைத்தற்கு இடமெனவும். அண்டம் (அவ் வான்மாக்கட்கு மாயாகாரணக் கூத்தாடற்கு) ஓராடரங் கெனவும், காண்பது அல்லாமல் (அம் முத்தர் தமக்கு) வேறு காண்கைக்கு யாதொரு பொருளும் இல்லை.

(குறிப்பு.) உடற்கண் ணிருந்து நீங்கிய உயிர் மீண்டும் வந்து அதனுள் புகாததுபோல், தாமிருந்து நீங்கிய பதியில் மீட்டும் வந்து புகாமையின், "செத்தாரைப்போலத் திரும்பாமற் போகலுமாம்" என்றார்.

அணு என்பது ஆன்மா.

தேகம் சிற்றிலெனவும், அண்டம் ஆடரங்கெனவும் மாறிக் கூட்டுக.

பிரபஞ்ச மெல்லாம் அண்டபிண்டங்களுள் அடங்கும் ஆகலின், "கண்டிடுகைக் கேதுமிலைக்காண்" என்றார்.

மூத்தர் தமக்கென்பது கடின்று இருபாலுக்கொண்டு மூடுதலின், தாப்பிணைப் பொருள்கோளரும் கடிலைத் தீபக மும் ஆதல் காண்க.

காஅ - அசை.

இத் திருவெண்பாவால் ஞானிகள் செல்வதற்கும் இருப்பதற்கும் தேசமும் இடமும் குறியீடு இன்றென்று அறிவித்தவாறு காண்க. (உக)

அந்த ஞானிகள் போகாத ஊர் ஒன்றும் இன்மை எனின், மேற் கூறுகின்றார்.

உடற்போகம் போக வுயிர்ப்பகைபோய்ப் பேறுங், கெடத்தானுந் தன்னறிவுங் கெட்டோர்— நடக்கும்போ தாகாயஞ் சாணிடல்போ லாவதல் லாற் பூரணர்க்குப், போகாவூ ருண்டோ புகல்.

(உரை.) உடல் போகம் போக உயிர்ப்பகை போய்ப் பேறும் கெடத் தானும் தன் அறிவும் கெட்டோர்—உடம் பான் அநுபவிக்கும் விடயபோகம் போக (அப் போகமாகிய தின்பத்தை இன்பம்போல் மாறுபாடாய்த் தோற்றுவிக்கும்) உயிர்ப்பகையாகிய ஆணவம் போய், (பேரின்பத்தைப் பெற்றேமென்னும்) பேறும் போக, தன்னையும் தனக் கறி விப்பதாய அநுளையும் இழந்துள்ளோர்,

நடக்கும்போது ஆகாயம் சாண் இடல்போல் பூரணர்க்கு ஆவது அல்லால் போகா ஊர் உண்டோ புகல்—(ஒரு திசை யில்) செல்லும்போது ஆகாயத்தைச் சாணிட்டளப்பதுபோல் (பரிபூரணர்க்குத் தமது பூரணத்தில் தாம் செல்வதுபோல்) தோன்றும் அல்லாமல் (இது தீதென்று பகுத்துப்பார்த்து) போகாது தவிரும் ஊரும் உண்டு கொல்? நீ புகலுதி.

(குறிப்பு.) ஆணவத்தால் இன்பமாய்த் தோன்றிய போகம் துன்பமாய்த் தோன்றியபோது அவ்வாணவங் கெடும். அவ்வாணவம் கெடவே தன் தாசனமும் திரு வருள் தாசனமும் பராயோகமும் ஆநந்தப்பேறும் உண் டாம். ஆநந்தப்பேறு இழந்த இடத்துத் தாவுந் தனக்கறி வித்த அருளும் இன்றும். ஆகலின், உண்டாம் அவைக்கும் இன்றும் இவைக்கும் காரணம் இவையென்று உடர்போக இழப்பையும் உயிர்ப்போக இழப்பையும் எடுத்தறிவித்தார்.

ஆகாயத்தைச் சாணிட் டளக்கும்போது அளப்பது போல் தோன்றி, விடுத்தபோது அளந்ததும் இன்றாய் விடுத் ததும் இன்றாய் இருத்தல்போல், பூரணர்க்கு கடக்கும் போதும் அப்பூரணம் மாறுது அதனுள் நடப்பதுபோல் தோன்றி, ஓர் தானத் திருந்தவிடத்து மூன் நடந்தோம் என் பதும் இப்போ திருந்தோம் என்பதும் தோன்றுதாகவின், "ஆகாயஞ் சாணிடல் போல்" என்று உவமை கூறினர்.

இத் திருவெண்பாவால் ஞானிகட்கு நிற்குநிலையும், கடக்கும்போது உள்ள குணமும், ஓரூர் நிற்கை ஓரூர் தவிர் கையும் ஆகிய நியதி இன்றென்பதும், அறிவித்தவாறு காண்க. (உஉ)

ஆயின் அவர்க்கு நற்றானமும் தீதாயதானமும் சரியோ? எனின், மேற் கூறுகின்றார்.

தருவனமென் றண்டுதுடை சாமரையாய் வாழும்
நரவனமென் மேல்கீழ் நடுவென்—பரமசிவன்
ருக்கற் றதுபோ லருள்சிவனைச் சாராதோற்
ருக்கற்றார்க் கெங்குஞ் சமன்.

(உரை.) தருவனம் என் தண்டு தலை சாமரை—ஆட் வாழும் நாவனம் என்மேல் நடு நீழ் என்—தருக்கள் கொருக் கிய சோலையாயின் என்னை, முள் செறிந்தவனம் ஆயின் என்னை, சிவிகை கவிகை சாமரை முதலியன உடையராய் வாழும் நாராகிய அடவி ஆயின் என்னை, உத்தம மத்திம அதமமாயுள்ள தலங்களாயின் என்னை ;

பரமசிவன் தாக்கு அற்றதுபோல் அருள் சிவஞ்ஞ சாராபோல் தாக்கு அற்றார்க்கு எங்கும் சயன்—பரமசிவன் (எல்லாவற்றோடுங் கூடியிருந்தும் அவற்றுள்) தாக்கற்றிருக் கது போலும், திருவருளானது (கிரித்தியக்கள் ஐந்தும் தன்னுல் கடக்கவும் சிவத்தைவிட்டு நீக்காதிருப்பதே அன்றி இக் கிருத்தியங்கள் ஐந்தையும் ஒதித்து) அச்சிவத்தைச் சார்வோம் என்று சாராதவாறுபோலும் (ஒன்றோடும்) தாக்கற்ற ஞானிகட்கு (முற்கூறிய) இடமெல்லாஞ் சரியாம்.

(குறிப்பு.) கருவிகள் எல்லாவற்றோடும் கூடியிருந்தும் அவற்றுள் தாக்கற்று நிற்றலால், "பரமசிவன் தாக்கற்றது போல்" என்றும், தேக இந்திரிய அந்தக்கரணாக்கள் தம் மால் தொழிற்படினும் தாம் சிவத்தைவிட்டு நீக்காதிருப்பதே அன்றி இத் தேக இந்திரியாதிகளினது தொழில்களை ஒதித்து அச் சிவத்தை அடைவோம் என்பதின்றிப் பரி பூரணமா யிருத்தலின், "அருள் சிவனைச் சாராபோல்" என்றும் கூறினர்.

இத் திருவெண்பாவால் ஞானிகட்கு எவ்விடமும் சம மென்று அறிவித்தவாறு காண்க. (உக)

ஆயின் அவர்கட்கு இடந்தான் யாது? எனின், மேற் கூறுகின்றார்.

தம்மையருளாலறிந்து தாமறிந்த தெல்லாம்போ
யிம்மைமப் பெருவாழ்வை யெய்தினர்க்கு—முன்னே
நடந்தறிந்த போத நசிப்பே யிருக்கு
மிடம்புறங்கா டென்ப திலை.

(உரை.) தம்மை அருளால் அறிந்து தாம் அறிந்தது எல்லாம் போய் இம்மைமப் பெருவாழ்வை எய்தினர்க்கு—(கருவிகள் முப்பத்தாறையுங் கடந்து) தம்மை அருளால் அறிந்து (அங்ஙனந் தம்மை யறிந்த பின்னர்த் தம்மை அறிந்த அருள் ஞானசனை முதலாய்) தாமறிந்தவை எல்லாம் நீங்கி இம்மைமக் கண்ணே சுகாதீதமாகிய பெருவாழ்வை அடைந்தோர்க்கு,

முன்னே கடந்து அறிந்த போதம் நசிப்பே இருக்கும் இடம் புறங்காடு என்பது இலை—(கருவிகளையும் தன் ஞானசனை முதலியவற்றையும் இது இது என்று அறிந்து) அவற்றை நீங்கிச்சென்று (சிவத்தை) அறிந்து அதனுள் இறந்த போதம் (மீண்டு எழாது அதனைக்) கெடுப்பதே இருக்கும் இடமன்றி இது சுத்தமாகிய இடம் என்பதும் இது புறங்காடென்பதும் இன்று.

(குறிப்பு.) தற் ஞானசனை முதலியவற்றுள் உறுதியாய் நின்றோர் மும்மைமக்கண் அடையும் சுகாதீத முத்தியை இவர் இம்மைமக்கண்ணே அடைந்தாராகலின், "இம்மைப் பெரு வாழ்வை யெய்தினர்" என்றார்.

எல்லாவற்றையும் நீங்கிச் சென்றமையால், "கடந்து" என்றார்.

இத் திருவெண்பாவால் ஞானிகட்குப் போதம் இறந் திருக்கும் இடமே கருத்தன்றி மற்றொன்றும் இன்றென்று அறிவித்தவாறு காண்க. (உச)

இங்ஙனம் இருந்த ஞானிக்கட்குச் சாதிகடை சமய கடை இன்றே எனின், மேற் கூறுகின்றார்.

காமாதி விட்டுக் கரமே கலமாகிப்
பூமீதே கைகாலைப் போர்த்துறங்கி—நாமகுணம்
சாதி கருமமெனும் வாதனையிற் றூக்கற்றூர்க்
கேது சமயமென லாம்.

(உரை.) காமம் ஆதி விட்டுக்காமே கலம் ஆகிப்பூமீதே கைகாலைப் போர்த்து உறங்கி—காமக் குரோத லோப மோக மத மாற்சரியங்களை யெல்லாம் விட்டு நீக்கி, காமே உண்கலனாகி (மனோசாறும் பிச்சை எற்றுண்டு பொதுச் சாவடி புறந்திண்ணை பாழ்ங்கோயில் முதலியவற்றுள்) பூமி யாகிய மலாணைமீது கரங்களையும் கால்களையும் போர்வை யாகப் போர்த்துக்கொண்டு ஆகந்த நித்திரை பண்ணி,

காமம் குணம் சாதி கருமம் எனும் வாதனையில் தாக்கு அற்றூர்க்கு எது சமயம் எனல் ஆம்—பெயர் குணம் சாதி கிரியை என்னும் இவற்றின் வாசனையோடும் தாக்கற்ற மெய்ஞ்ஞானிகட்குச் சாதி யாதென்று கூறலாம்? சமயம் யாதென்று கூறலாம்? (ஆகலின், இவற்றின் கடைகளும் அவர்க்கின்று.)

(குறிப்பு.) "காமாதி விட்டு" என்றமையான், மாயை குணம் ஒன்றும் இலர் என்பதாயிற்று.

நாமாதிகளில் தாக்கற்றொன்றுது அவற்றின் வாசனையிற் றுக்கற்றார் என்றலையான், அவற்றை மறந்து போயினர் என்பதாயிற்று.

"சாதி கருமம்" என்றலையான் சாதி யெதனலாம் என்பது வருவிக்கப்பட்டது.

இத் திருவெண்பாவால் ஞானிகள் நடை சாதி சமயங்களோடு ஒவ்வாதென்று அறிவித்தவாறு காண்க. (உரு)

ஞானிநடை சாதிநடை சமயநடைகளோடு ஒவ்வாது இங்ஙனம் இருப்பது என்னை எனின், மேற் கூறுகின்றார்.

ஞானிக் குலகநடை யென்றுநாம் பார்க்கின்
தீனக்கண் ணுடியொடு தீபமுமா—மேனோக்கும்
விப்பிரட்டை மேபோல வேறும் விகாரியோ
வப்பராக் கன்றியறி யான்.

(உரை.) ஞானிக்கு உலகநடை என்று நாம் பார்க்கின் தீனக் கண்ணுடியோடு தீபமும் ஆம்—ஞானியினது நடையை உலகரது சாதிநடைபோ லென்று யாம் பார்ப்போம் எனின், (அவரது நடை இருளில்) தீபத்தைக் கொண்டு பொருள் காண்பதுபோலுமாம். (இவரது நடை அவ்விருளில்) தீனக் கண்ணுடிகொண்டு பொருள் காண்பது போலுமாம்; ஆகலின், (இவரது நடையோடு அவரது நடை ஒவ்வாதாலுல் சமயிகள் நடையோடு ஒவ்வாதிருப்பது எங்ஙனம் எனின்,)

மேனோக்கும் விப்பிரட்டமே போல வேறு ஆம் விகாரியோ அப் பாராக்கு அன்றி அறியான்—(சமயிகள் தத்தம் கடவுளரைத் தமக்குரிய நூல் கூறியவாறே வழிபடுபவர்; அவர் அக்கடவுளரை எல்லாம் கடந்துநின்ற பரிபூரண சிவத்தை அடைந்தவர் ஆகலின்) அச் சமயிகள் நடைக்கும்

இவர் கடை சுத்தப் பிரட்டேமேபோல் ஒவ்வாது வேறும்; (இங்ஙனஞ் சாதிகடை சமயகடை ஒவ்வாதாயின் இவ் விரு வகை கடையும் இல்லாத பாமரர்போலும் அவர்) விகாரியோ எனின், அவர் சிவனேட்போலும் நிருவிகாரி அவர் நிருவி காரியேயாலல் விகாரமற்று இருக்கவேண்டுமே அன்றிக் காபிச்சைவாங்கி உண்டல் முதலிய கடை கிகழ்வானேன் எனின், (அங்ஙனம் காயத்தின் கிகழ்ந்தாயினும் அவர் நிருவிகாரமாகிய) பராக்கே அன்றி (இவ் விகாரமாகிய பராக்கினுள் ஒன்றியும்) அறியார்.

(தறிப்பு.) உலகடை என்றதனல், ஞானிகடை வருவிக்கப்பட்டது.

ஞானிநலடை தீபம்போலவனவும், உலகடை கினைக் கண்ணழி போலவனவும் மாறிப் பொருள் கொள்க.

இருளில் தீபத்தால் பொய்ப்பொருள் தோன்றுவதேபோல் ஞான தீப கடையால் மெய்ப்பொருள் தோன்றும் என்பதும், அவ் விருளில் கினைக்கண்ணழியால் பொய்ப்பொருள் சிறிதும் தோன்றுதுபோல், மாயாத்தகாதத்தோடும் செய்யும் சாதி தோன்றுதுபோல், கடையான் மெய்ப்பொருள் சிறிதும் தோன்று தென்பதும் இவ் வுவமைகளாற் காண்க.

"விகாரியோ" என்றமையாலும், "அப் பராக்கன்றி யறியான்" என்றமையாலும், அவற்றிற் கிடையில் வேண்டி வன வருவிக்கப்பட்டன.

இத் திருவெண்பாவால் ஞானிகள் மாயாதீதமான சிவஞானம் உடையர் ஆகலின், சாதிசமய கடையாகிய மாயைக் குட்படாரென்று அறிவித்தவாறு காண்க. (உச)

ஞானியினது நடை முதலியவற்றை அறியக் கூடாதே எனின், மேற் கூறுகின்றார்.

மூர்க்க னநாசாரி மூடனெனப் பண்டிதனும்
மேற்குலமா மாசார வித்தகனெப்—பார்க்கி
லளவைக்க ளவாகி யப்பாலா ஞானி
தெளிவைத் தெளியாத தென்.

(உரை.) மூர்க்கன் அநாசாரி மூடன் எனப் பண்டிதன் ஆம் மேல் குலம் ஆம் ஆசார வித்தகன் என—(உலகநடை சமய நடைகளில் நிற்போர் ஞானிநடையைப் பார்த்து, தமது நடையோடு ஒவ்வாமையான் இவர் பிறட்டு நடையையுடைய) மூர்க்கரெனவும், ஆசார ஈனரெனவும், (ஒன்றும் அறியாத) மூடரெனவுங் கூற (விவேகிகளாயிலர்) அவர் நடையைப் பார்த்து (எல்லாவற்றையுந் தெளிந்த) பண்டிதரா மெனவும், மேலாய ஞான குலமாமெனவும், ஆசாரத்திற்கெல்லாம் ஓர் வித்தாமெனவுங் கூற,

பார்க்கில் அளவைக்கு அளவு ஆகி அப்பால் ஆம் ஞானி தெளிவைத் தெளியாதது என்—(அவர் நடையை) விசாரிக்கு மிடத்து, (இவரால் இவ்வளவென்று) அளவிடுதற்கு அளவிடு வதாய்ப் (இவ்வளவையுங் கடந்து) அப்பாலுமாகிய அந்த ஞானியினது (நடையினையும்) தெளிவினையும் (இவ்வள வென்று ஒருவராலும்) அறியக்கூடாதிருந்தது என் கொலோ?

(குறிப்பு.) உலகநூல் சமயநூல்களை உணர்ந்தோர்கள் அந் நூல்களின் நடை இன்னையான் இகழ்ந்து கூறினர். ஞானநூல் உணர்ந்தோர் ஞானநடை என்றறிந்து புகழ்ந்து கூறினராகலின், "அளவைக் களவாகி" என்றும், இங்ங

னஞ் செய்வோமென்று செய்யாதவனிடத்தில் ஞானகயே இயல்பாய் நிகழ்தலின் ஞானநூ லுணர்ச்சியால் புகழ்ந்து கூறினர். அளவையுங் கடந்து நின்றாகலின், இம்மூவன வைக்கும் பொதுப்பட "அப்பாலா ஞானிதெளிவைத் தெளி யாததென்" என்றுங் கூறினர்.

இத் திருவெண்பாவால் ஞானியினது கடையுந் தெளி வும் யாவராலும் அறிந்து அளவிடக்கூடாதென்று அறிவித்த வாறு காண்க.

சுகாதீதத்தில் நிற்போர்க்கு அந் கடைகள் இலவாயி னும் அருள்தரிசன முதலியவற்றில் நிற்போர்க்கு அக் கடை கள் இலவாயின் அது பிரட்டன்றே எனின், மேற் கூறு கின்றார்.

அஞ்சனக்கண்ணாளர்க் கருநிதியந் தோன்றுவதே னஞ்சலகை மாற்றினது ணுணுவர்போல்-வெஞ்சாப் வீடுபோற்றோன்றுமருண் மேலீட்டால்விப்பிரட்டா மோடையின்மண் டுகமொப்போர்க் கு.

(உரை.) அருள் மேல் ஈட்டால் அஞ்சனக்கண் ணாளர்க்கு அருநிதியம் தோன்றுவதுபோல் நஞ்சு அலகை மாற்றின் அதில் நாணுவர்போல் வெஞ்சாப வீடுபோல் தோன்றும்— திருவருள் மேலிட்டகாலத்து, பாதாள அஞ்சனம் போட்டுப் பார்க்கும் கண்ணினை யுடையார்க்கு அரிய பெருநிதி தோன்று வது போலும், தம்மேல் ஏறியிருந்த விடத்தையும் பேயையும் மாற்றின் அதனால் (தெளிவு பிறந்து முன்னர் என்செய்து கொண்டோம் என்று அவற்றால் மயங்கிச்செய்த செயல்களை நாடி) நாணுவானைப் போலும், கொடிய சாபத்தினால் வருத் தினோர்க்கு அச் சாபம் விடுதலை யாளற்போலும் தோன்றும்;

ஞாடையில் மண்டுகம் ஒப்போர்க்கு விப்பிரட்டு ஆம்— (அந்திருவருள் மேலிட்டைடப்பெற்ற ஞானிகடை) ஓடையில் மூழ்கிக்கிடக்கும் தவளோபோல் (மாயா சமுத்திரத்தில்) மூழ்கிக் கிடப்போர்க்குப் பிரட்டு கடைபோல் தோன்றும்.

(குறிப்பு.) மன்ன மறைப்பால் தெரியாதிருந்த நிதி அஞ்சனம் போட்டுப்பார்த்த கண்ணுளார்க்கு அம் மண் ஊடுருவித் தோன்றுவதுபோல், மலமறைப்பால் தெரியாதிருந்த அருள் அவ்வருட் கண்ணுல் பார்த்தபோது அம்மலமறைப்பு நீக்கி னங்கும் தானுய்த் தோன்றுமாகலின், "அஞ்சனக் கண்ணு னர்க் கருநிதியங் தோன்றுவபோல்" என்றும்; விடமும் பேயும் நீங்கியவிடத்தைத் தெளிவு வந்து முன்னர் அவற்றல் மயங்கிச் செய்த செயல்களோ நாடி நாணுவானைப்போல், சகல தேகலங்களை நீங்கி அருளோக் கண்டவிடத்து முன்னர் அவற் றல் மயங்கிச் செய்த செயல்களை நாடி நாணம் வருமாகலின்; "நஞ்சலைகமாற்றி னதிரை ணுவர்போல்" என்றும், தேவரை யிருந்துளான் சாபத்தால் விலங்காதிகளா யிருந்து பின்னர் அச் சாபம் விடுதலையானபோது தேவத்தவத்தை அடைந் தாற்போல, அளவிறந்த காலம் மலதேகம் தாலுயிருந்தவர் இப்போது அத் தேகம் நீங்கித் தன்னை அறிவென்று உள்ள படி அறிந்தமையால், "வெஞ்சாப வீடுபோல்" என்றுங் கூறினர்.

"ஓடையில் மண்டுக மொப்போர்க்கு" என்றது இணைத் துத்தவளை காட்டுவளப்ப மறியுமோ என்னும் உலக வழக்கக் குறிப்பால் மாயையில் மூழ்கிக் கிடப்போர்க்கு ஞானிகடை தெளியுமோ என் றறிவித்தது.

இத் திருவெண்பாவால் திருவருள் மேலிட்டவிடத்து வரும் அநுபவமுறையும், அதனை உடையோரும் ஞானிகள் என்ப

தும், அவாது நடையை மாயை யுடையோர் அறியார் என்ப தும், அறிவித்தவாறு காண்க. (உசு)

நீர் ஈண்டுக் கூறியவாறே துறவும் ஞானநடையுடையோரை ஞானிகளென்பது அன்றி இவை இல்லாரையும் ஞானிகள் என்பது என்னை எனில், மேலும் கூறுகின்றார்.

அவரவரைப் போலிருப்பர் தாமவரா கார்போ
லிவரவர்க்கொப்பில்லை யெனினு—மூவமைசொலின்
வேசிபணம் வெய்யோன் வீணை வெளிவிசிறி
யாசியர்போ லென்கிளவா வர்.

(உரை.) அவர் அவரைப்போல் இருப்பர் தாம் அவர் ஆகார்போல் இவர் அவர்க்கு ஒப்பு இல்லை எனினும் உவமை சொலின்—'குடும்பத்தோடு கூடியிருந்தும்) ஞானி களா யிருப்போர் (அறிவினல் அக் குடும்ப நிவர்த்தியா யிருந்த) ஞானிகளைப்போலே யிருப்பர், (இக் குடும்பத் தோடும் இருந்த) ஞானிகள் தாம் (நடையினல் அக் குடும்ப நிவர்த்தியா யிருந்த) ஞானிகளைப்போல் ஆகார், அதுபோல, இந்தக் குடும்பிகள் அந்தக் குடும்பத்தோடும் இருந்த ஞானி களுக்கு (நடையினல் ஒப்பர், அறிவினல் இந்தக் குடும்பி கள் அந்தக் குடும்பத்தோடும் இருந்த ஞானிகட்கு) ஒப்பிலர் எனினும் ; (இன்னும் அந்த ஞானிகட்கு) உவமை கூறு மிடத்து,

வேசி பணம் வெய்யோன் வீணை வெளி விறகி யாசி யர்போல் என்கிளவும் ஆவர்—வேசிபோல் என்று கூறினும், பணம்போல் என்று கூறினும், வெய்யோன் போல் என்று கூறினும், வீணைபோல் என்று கூறினும், வெளிபோல் கூறினும், விறகுபோல் என்று கூறினும்,

என்று கூறினும், விசிறிபோல் என்று கூறினும், யாசியர் போல் என்று கூறினுஞ் சரியாவார், அன்று.

(குறிப்பு.) வேசி தன்மேல் கணைகொண்டு வந்தார் மேல் தானும் அவர்மேல் கணைகொண்டாற்போலும் வாக்குக்காயங் களிற் காட்டி. மனதில் அவர்மேல் கணையின்றிப் பொருள் மேல் கணைகொண்டிருப்பதுபோல், மனைவி முதலிய குடும் பத்தார் தம்மேல் கணையுற் றிருப்பத் தானும் அவர்மேல் கணையுற்றார் போலும் வாக்குக் காயங்களிற் காட்டி, மனத் தில் அவர்மேல் கணையின்றி மெய்ப்பொருள்மேல் கணையுற் றிருத்தலின், வேசி என்றும் ;

பணம் எவர் எவர் எமதெம தென்று அபிமானிப்பி னும் தான் அவர்மேல் அபிமானம் அற்றிருத்தல்போல், சுற்றத்தார்நட்பு முதலியோர் எம்மவர் எம்மவர் என்று அபி மானிப்பினும் தாம் அவர்மேல் அபிமானம் அற்று, நிர்விகாரி களாய் இருத்தலின், பணமே என்றும் ;

வெய்யோனுல் உலகத்தார் தொழிற்படினும் இவர் செய்யும் நன்று தீது அவனுக்கின்றுபோல், தமது வாக்குக் காயங்களில் யாது நிகழினும் இவற்றான் வரும் இதாகிதங்களில் தாம் சாராதிருத்தலின், வெய்யோன் என்றும் ;

வீணை வாசியாதிருக்கும்போதும் வாசித்து விடுக் கும்போதும் சும்மா இருந்து வாசிக்கும்போது அவன் பாடும் பாட்டின்படிதான் செல்வதே அன்றி மற்றொன்றும் செல் லாது ஓவியர்போல், ஒருவர் ஓர் காரியம் வந்து பேசா முன் னரும் பேசி ஒழிந்த பின்னரும் தாம் ஓர் காரிய விசாரணை பண்ணாது சும்மா இருந்து, காரியக்காரர் வந்து பேசும்போது

அவர் பேசும்காரியப் பேச்சுமாத்திரம் பேதி மற்றொன்றும் சொல்லாது ஒழிதலின், வீணை என்றும்;

வெளி எல்லாவற்றிற்கும் இடங்கொடுத் திருத்தம் அவற்றுள் தாக்கற்று நிற்றல்போல், குடும்பத்திற்கெல்லாம் தாம் பிரதானமா யிருந்தும் அவற்றோடும் தாக்கற் றிருத்தலின், வெள்' என்றும்;

விசிறி தன்னை எடுத்து விசிறிக் கொள்வார்க்குப் பயன்கொடுப்பதன்றி அவரால் தனக்குப் பயன் வேண்டா திருத்தல்போல், தம்மைக் கொண்டு பிறர் பயன்படுவதே அன்றி அவரால் தனக்குப் பயன் வேண்டா திருத்தலின், விசிறி என்றும்;

யாசியர் குற்றமுடையாரையும் குணமுடையாரையும் குணமாகப் புகழ்தல்போல், இவர் குற்றம் உடையாரையும் குணம் உடையாரையும் சமமெகக் கண்டு நன்மொழி கூறலின் யாசியர் என்றும் கூறினர்.

'போலென்கிளவும்' என்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக.

இத் திருவெண்பாவால் துறந்தள ஞானிகளது வாக்குக் காயங்களில் நிகழும் ஞான கடைக்கு அவர் அநீதமா யிருந்தது போல், இந்நனம் குடும்ப சகிதரா யிருந்த ஞானிகளது வாக்குக் காயங்களில் நிகழும் உலக கடைக்கும் இவர் அநீதமா யிருப்பொன்று அறிவித்தவாறு காண்க. (உக)

இந்நனங் குடும்பத்தோடு கூடியிருந்தும் பந்தப் பிரபஞ்சத்தை ஞானிகளென்பது சுபாவம், சிவிகை கவிகை முதலியவற்றோடும் அரசர்போல வாழ்கின்றோரையும் எட்ட னம் ஞானியென்று சொல்வது எனின், மேற் கூறுகின்றாம்

தண்டுகுடை யாளராய்ச் சாதுரங்கப் போர சாய்த்த, தொண்டீர்குழாம் போற்றச் சுகித்தாலு— மூண்டுசுத்தர், போகத்தா ரோசுடர்போற் பொய்ப் போக மெய்ப்பெருக்காய்ச், சாகப்போ வார்கடன் நீர்த் தல்

(உரை.) சாதுரங்கம் தண்ட குடை ஆளர் ஆய்ப் பேர் ரரசு ஆய்த் தொண்டீர் குழாம் போற்றச் சுகித்தாலும் சுத் தர் உண்ட போகத்தாரோ—நல்வகைச் சோனையும் சிவிகை கவிகை முதலியவும் உடையவராய் வாழும் போராசரைப் போல (சிவிகை கவிகை முதலிய வுடையராய்) அடிமைக் கூட்டங்கள் சூழ்ந்து நின்று உபசரிப்ப மகா போகங்களை) அநுபவித்தார் எனினும், (அவற்றிற்கு தாக்கற்று நின்று) சுத்தநிலை பெற்றதும் உண்டு, (அவர் இப்பிரபஞ்சிகள் போலும்) போகமயமாய் அழுந்தினவரோ? (அழுந்தார், அஃது எங்ஙனம் எனின்,)

சுடர்போல் பொய்ப்போகம் மெய்ப்பெருக்கு ஆய்ச் சாகப் போவார் கடன் தீர்த்தல்— என்னெனய் வார்க்குந் தோறும் கன்னெடித்தில் வாங்கிக்கொண்டு தான் மிகவும் பிரகாசிக்கும்) தீபம்போல், பொய்ப்போகம் (வருந்தோறும் அதனைத் தற்போகத்தால் பற்றி அநுபவியாது அருட்கண் ணால் பார்த்துத் தாம் அற்று அநுபவித்தலின் அது மெய்ப் பொருட்காய்ப் பொய்ப் போகத்தான்) மெய்ப்பொருள் மிக வும் பிரகாசமாய்த் (தோன்றும் ஆகலின், இங்ஙனம் என்று அறிந்தி ; ஆயின், மெய்ப்பொருளை உணர்ந்தோர் பொய்ப் போகத்தோடும் கூடி யிருந்து அநுபவிப்பது என்னை எனின், அக்கினியில் வீழ்ந்து) இறக்கப்போவார் (தமக்குரியராய்

உள்ளார் கொடுக்கும் போகமாகிய) கடனை (வாங்கி அதனுள் விருப்பற்று உண்டு தீர்த்துக்கோடல் போல் அவரும் இத் தேகத்தை எப்போது ஒழிவோம் என்னும் கருத்தாய் இதற் கமைத்த பிராரத்தகடனை விருப்பற்று அநுபவித்துத் தீர்த் துக்கொள்வார், ஆகவின், அவர் (அதனைநீங்கூடி இருத்தல் இம் முறைமை என்று அறிதி.)

(குறிப்பு.) போகம் வருந்தோறும் தமக்கென்று தற் போதத்தால் பற்றி அநுபவியாது அப் போதம் அற்று அருள்வடிவாயிருந்து அப் போகத்தை காம் அநுபவிப்பது போல் சிவத்திற்கு ஆக்குவதே மெய்ப்பத்தி, இப் பத்தியினல் அச் சிவமானது போதம் சிறிது எழினும் அதனை விழுக்கிக் கொண்டு நின்று பிரகாசிக்கும் ஆகவின், "பொய்ப்போக மெய்ப்பெருக்காம்" என்றார்.

சாகப்போவார் போதத்தை விரும்பாதிருக்கவும் சற்றத் தாராயுள்ளார் அவரை வேண்டிக் கொடுவந்து புசிப்பித்தல் போல், ஞானிகள் போகத்தை விரும்பா திருக்கவும் பிரா ரத்தம் வலியக் கொடுவந்து புசிப்பித்தலின், இன்னம் உவமை கூறினர்.

இத் திருவெண்பாவால் பிராரத்தத்தால் வந்த பெரு வாழ்வின்கண் பற்றின்றி அவ் வாழ்வு அநுபவிப்பைப் போகத்தால் காமநுபவியாது சிவத்துக்கு அர்ப்பிதஞ் செய் கின்றோரும் ஞானிகளே என்று அறிவித்தவாறு காண்க.

ஞானிகள் அநுபவிப்பதும் பிராரத்தம், மற்றையர் அநுபவிப்பதும் பிராரத்தம், ஆயின் அவர்க்கும் இவர்க்கும் பேதம் என்னை எனின், மேற் கூறுகின்றார்.

பெருநோவுக் கேயென்னம் பெற்ற துடற்போகம்
நரகேழு மூட்டுமிது நாஞ்செத்—துருவத்துத்
தாமல்லாற் போகிப்ப தல்லவது வன்பர்பதங்
காவலாட் கைத்தலைபோற் காண்.

(உரை.) உடல் பெரு நோவுக்கே என்னப் போகம் பெற்றது நரகேழும் ஊட்டும் இது காம் செத்து உருவத் துத் தாம் அல்லால் போகிப்பது அல்ல—உடலாகிய பெரு நோவுக் கென்னைக் கருதிப் போகத்தை அநுபவிப்பது தானே பிறவியாகிய நரகமேழிலும் கொடு சென்று (அவற் றில் உண்டாகிய துன்பங்களை) புசிப்பிக்கும் (இஃது எங்ங னம் எனின், இவர் அநுபவிக்கும்) இப் பிராரத்தம் தற் போதம் மாண்டு இத் தேகத்துத் தாம் இருப்பது அல்லாமல் (அருள்வடிவாயிருந்து) அநுபவிப்பதல்ல (ஆகலின்,)

பதம் அன்பர் அது காவல் ஆள் கைத்தலைபோல் காண்—திருவடியைப் (பிரியாது நின்ற அம்) மெய்யன்பர் தம் பிராரத்தம் தற்போதம் மாண்டு தேகம் தாம் அல்லாது திருவருள் தாமாயிருந்து அநுபவிப்பது ஆகலின், (அப் பிராரத்தம் தேகமிருக்குமளவும், காவலாள் போலும் கைத் தலை போலும் (இருந்து தேகம் நீங்கும்போது அதனோடு தானும் நீங்கும் ஆகலின், அவர்க்கு மறுபிறவி உளவாகா என்று) அறிதி.

(குறிப்பு.) தேகம் தானையும் போகம் தனதாயும் கருதிக்கொண்டு தற்போதத்தால் அப்போகத்தைப்பற்றி அநுபவித்தலின் இதாகிதங்களும், இவ்விதாகிதங்களால் இருவினைகளும், இவ்விருவினைகளால் மறுபிறவியும், இங்

வணம் தொன்றுதொட்டு வரும் ஆகலின், "காதேழு மூட்டும்" என்றார்.

போதம் இறந்திருத்தலாலும், பூரணவடிவா யிருத்தலாலும், வினைசார்தற்கு இடமின்மையால், அவர்க்கு மறு பிறவி இன்றென்பது காண்க.

உடம்பு மூப்புப் பிணிக்கு இடம் ஆகலின், தீதினை 'பெருநோவுக்கு" என்றார். "நாஞ் செத்துருவத்துத் தாமல் லாற் போகிப்பதல்ல" என்று அவர்க்கு உண்மையாய குணங் களை இவர்க்கு இன்மை என்று எடுத்துக் கூறினமையால், அவர்க்கு அவை வருவிக்கப்பட்டன.

'இது' என்பது இவர் பிராரத்தமேல் நின்றது. 'அது' என்பது அவர் பிராரத்தமேல் நின்றது.

பதம் - திருவடி; பதத்தினை உடைய அன்பனெனப் பொருள் கொள்க.

போகமாய் வந்து சூழ்ந்து கோடலானும், பரமுத்தரை வொட்டாது தேகத்தில் அவரைத் தடுத்து நிற்றலானும், பிராரத்தத்தைக் 'காவலாள்' என்றும், 'கைத்தலை' என்றும் கூறினர்.

இத் திருவெண்பாவால் ஞானிகள் தேகபோகங்களில் பற்றிலர் ஆகலின், அவர் பிராரத்தம் அத் தேகத்தோடு கழியும் என்றும், அஞ்ஞானிகள் பற்றுளர் ஆகலின், அவர் பிராரத்தம் இதாகிதங்கள் வருவித்துப் பிறப்புக் கேதுவாகும் என்றும் அறிவித்தவாறு காண்க. (உக)

ஒருவர் செய்தவினை மற்றொருவனைச் சாராமையான், அவர் செய்தவினை அவரைச் சாராதிருப்பது எங்ஙனம் எனின், மேற் கூறுகின்றார்.

சுகிக்கில்லை துக்கஞ் சுடுகாடு சொர்க்க
மகத்துக்குரு சொர்க்கநர காய்ந்தார்—சுகிட்டபதுவு
மத்துவி தாநந்தர்க் காகார மற்றது
பத்திசெய்வார்க் கேற்கும் பயன்.

(உரை.) சுகிக்குத் துக்கம் இல்லைச் சுடுகாடு சொர்க்கம் அகத்துக்கும் சொர்க்கம் நரகு ஆய்ந்தார் சுகிப்பதுவும் அத்து விதம் ஆகந்தர்க்கு ஆகாரம் அற்றது—பாயசகேம வடிவா யிருப்போர்க்குத் துக்கம் என்பதில்லை; (துக்கம் இன்மை யால் சுகமும் இன்று; இது சுத்தமாகிய இடம் என்னும் கருத்துச் சிறிது எழினும் அதுவே நரகமாய்த் தோற்றலின், அசுத்தமாயுள்ள) சுடுகாடே அவர்க்குச் சுவர்க்கம், (அஃதன் றித் தாம் ஆனந்தவடிவா யிருத்தலே சுவர்க்கம் எனவும், தேகம் தாம் என்று சிறிது எழும் கருத்தே நரகம் எனவும், புறத்திற்குச் சொர்க்க நரகு ஆய்ந்தாற்போல) அகத்திற்கும் சொர்க்க நரகாய்ந்தார், (அஃதன்றி அவர்) அநுபவிப்பதும் (அத்துவிதாகந்தர்க்கு மேயாம். இங்ஙனம் இருந்த) அத்துவிதா கந்தர்க்கு அவ் வாகாதிய வினை புசிப்பற்று நின்றது; (இங் ஙனம் அவர்க்குப் புசிப்பற்று நின்றால் அவ் வினைதான் எவ் விடத்துச் செல்லும் எனின்,)

பத்தி செய்வார்க்குப் பயன் ஏற்கும்—அவர்மேல் அன்பாய் இதஞ்செய்வோர்க்கும் (வெறுப்பாய் அகிதஞ் செய்வோர்க்கும்) அவ் வினைப் பயன்களுஞ் சாரும் (என்று அறிந்து.)

(குறிப்பு.) ஆனந்தமே வடிவா யிருத்தலின் துன்பில்லை, அவ் வடிவில் தற்போதமின்மையால் காணமில்லை, சுடுகாடே சுவர்க்கமாய்க் கண்டலான் புவனமில்லை, அவ்வாகந்தத்

தையே அநுபவித்தலால் போகமில்லை, இங்ஙனந் தற்காண் புவன போகங்களை எல்லாம் கடந்து நின்றமையை அவ்வினை சாரமாட்டாமையின் "அகாரமற்றது" என்றார்.

தேகத்தை உடையவனைத் 'தேகி' என்றாற்போலச் சுகவடிவா யிருந்தோரைச் 'சுகி' என்றார்.

இத் திருவெண்பாவால் ஞானிகள் சிவாநந்தாநுபவத் தாகலின், அவரை வினைகள் சாரா என்றும், அவர்க்கு இந்திரிதங்களைச் செய்வோரிடத்தே அவை சாருமென்றும் அறிவித்தவாறு காண்க. (கூ)

இங்ஙனம் இருந்த ஞானி அடைந்த பேரின்பத்துக்கு உவமை யாது எனின், மேற் கூறுகின்றார்.

அரிபிரம ரிந்திரர்க ளாதிகளார் தானச்
சரிவிரத்த னின்பத்தைச் சாற்றிற்—பரமசிவன்
றானே சரிமீட்டுச் சாற்றுகிற்றான் றன்சரிவே
றானை வேதமறி யா.

(உரை.) அவ் விராத்தன் இன்பத்தைச் சாற்றின், அரி பிரமன் இந்திரர்கள் ஆதிகளார் சரி—அவ் விராத்தன் இன்பத்திற் கூவமை சொல்லுமிடத்து, அரி பிரமர் இந்திரர் முதலிய தேவர்களது இன்பமெல்லாம் ஒன்றாகக் கூட்டின் சரி;

பரமசிவன் தானே சரி மீட்டுச் சாற்றுகின் தான் தான் சரி வேறு ஆனை வேதம் அறியா—(அஃதன்றி) பரமசிவனது பரிபூரணாநந்தந் தானே சரி, பின்னுஞ் சொல்லுமிடத்தத் தன் இன்பத்திற்குத் தன் இன்பமே சரி, (இங்ஙனம் எப்பொருள்கட்கும்) வேறாய் நின்றறைந்தார் (இன்பத்தை) வேதங்களும் இவ்வளவென்று அளவிட் டறிய மாட்டா.

(குறிப்பு.) பரமசிவனது பரிபூரணாநந்த மெல்லாம் தாமாகின்று அநுபவித்தலின், "பரமசிவன் தானே சரி" என்றும், தன் இன்பம்போல் மற்றியாவர்க்கும் இன்பமை

யால், "தான் தான் சரி" என்றும், அவ்வின்பமும் தாமா காது, அதனை அநுபவிப்போரா யிருத்தலின், "வேறுளனை" என்றுங் கூறினர்.

இன்பத்திற் குவமை கூறினமையான் அவர் சரி என் றமை அவாதின்பஞ் சரியென்று கூறப்பட்டது. அஃது ஆகு பெயர். தான் - அசை. (நாநா)

இத் திருவெண்பாவால் ஞானிகளது இன்பப் பெருமை கூறியவாறு காண்க.

சாலோக மாதி தருஞ்சைவ சித்தாந்தி
யாலேகம் பார்க்கப் பணியுமவன்—மேலே
யுருகித் திருவுளத்துக் குற்றபணி செய்வார்
பெருமைக்கே துண்டோ பிற.

(இஃ.) சாலோகம் ஆதி தரும் சைவ சித்தாந்திபால் கம் பார்க்கப் பணியும் அவன் மேலே—(தன்னை வந்து அடைந்தோராது பத்தி பணிவிடைக் கேற்ப அவர்க்குச்) சாலோக சாமீப சாரூப மாகிய பதமுத்திகளையுங் கொடுக் கும், சித்தாந்த ஞானியால் ஏகமா யிருந்த மெய்ப் பொருளை அறியும்பொருட்டு (வந்து மனமொழி மெய்களான் வணங் கும்) அதிபக்குவன்மேல்;

உருகித் திருவுளத்துக்கு உற்ற பணி செய்வார் பெருமைக்குப் பிற ஏது உண்டோ—(போன்பு வைத்து) உள்ளுருகி அவனது திருவுளத்துக்கு ஏற்ற பணிவிடை செய்வோராது பெருமைக்கு (மேலாய பெருமை) பிறிது யாதுண்டு?

(குறிப்பு.) வந்தடைந்தோர் பக்குவ பக்குவங்களை அறிந்து சரியையாதிகளை வருவித்து, சாலோகாதி பத மூத்திகளைக் கொடுப்பதும், அதிதீவிர பக்குவனுய் வந்தோ னுக்குத் தற்போதத்தைக் கொடுத்து நிராதிசய வின்ப தைக் கொடுப்பதும், மற்றைச் சமயங்களில் இன்மையால்

சாலோகமாதி தருஞ் சைவசித்தாந்தி பாலேகம் பார்க்கப்
பணியுமவன்" என்றார்.

இங்ஙனம் இருந்த சித்தாந்தியைப் பணியுமவனைப்
பணிவோர்க்கும் அம் முத்தியின்பம் உண்டாமாகலின்,
உற்றபணி செய்வோர் பெருமைக்கே தூண்டோபிற"
என்றார்.

இத் திருவெண்பாவால் சித்தாந்த ஞானம்போலே
வேறு ஞானம் இன்றென்பதும், இந்த ஞானம் பெற்
றோரை வழிபடுவோர் பெருமையே பெருமை யென்றும்
அறிவித்தவாறு காண்க. (கூ)

கால மூடன்றேசந் திக்குக் கருமமூடல்
கோலஞ் சமயங் குறிப்பறிதல்—சீலந்
தலையோடு போனவுயிர் தான்போலத் தன்றே
டலையாஞ் சிவனே யிவன்.

(உரை.) காலமூடன் தேசம் திக்குக் கருமம் உடல்
கோலம் சமயம் குறிப்பு அறிதல் சீலம்—இன்னகாலத்து
இன்னவிதஞ் செய்வதென்னும் காலமும், (காசி முதலியன
கல்லன மற்றையன தீயன என்னும்) தேசமும், (இன்ன
திக்கு நன்று இன்ன திக்குத் தீது என்னும்) திக்கும்,
(இன்ன கருமஞ் செய்வது இன்னகருமந் தவிர்வது என்
னும்) கருமமும், உடலில் (சமைந்த) வேடங்களும், (அவ்
வேடங்கட்குரிய சமயங்களும்,) (அச் சமயங்கட்குரிய கடவு
ளரை இங்ஙனம் இருப்பரெனக் குறிப்போடு தியானிப்பதாய)
குறிப்பறிதலும், (இன்னசாதிக்கு இன்னது ஆசாரமென்று
செய்யும்) சீலமும், (ஆகிய இவையெல்லாம்,)

தலையோடு போன உயிர்போலத் தன்றேறு இல ஆம்
சிவனே இவன் - தலைபோனவிடத்து (அதேறுடும்) போன
உயிர்போல, (தற்போதம் இறந்தவிடத்து) அதேறுடும் நீங்
கும், (ஆகலின் மௌனாகந்தமாயிருந்த) சிவனே இவனும்.

(தறிப்பு.) கை கால் முதலிய உறுப்புக்கள் போனவிடத்தும் இருந்த உயிர் தலையோடும் போனதுபோல, போதம் சிறிது இறந்தவிடத்தும் இருந்த கிரியைத் தொழில்கள் அது முற்றும் இறந்தவிடத்து அதனோடும் நீங்கும் ஆகலின், அங்ஙனம் உவமை கூறினர். அவற்றைச் செய்தவன் இறந்தமையால் இவனுற் செய்யப்படுஞ் அவையும் இல என்பதற்கான்க.

மௌனாகந்தமாயுள்ள சிவனை அடைந்தவன் மௌனாகந்தி யாகலின் "சிவனே யிவன்" என்றார்.

தான் - அசை. நடு

இங்ஙனம் அவர்க்கு விதிவிருத்தங்கள் இல்லையென்றுணர்ந்து கூறியது என்னை எனின், மேற் கூறுகின்றார்.

சாவே பெருநோன்பாய்ச் சந்தற்ற சத்தியர்க்குத்
தேவாரங் காலந் தியானமறம்—பாவம்
விதிவிருத்தம் பேசுனைக்கு வேதா கமங்க
ளதிசயிக்கு மேலுரைப்பா ரார்.

(உரை.) சாவே பெருநோன்பு ஆய்ச் சந்த அற்ற சத்தியர்க்குத் தேவாரம் காலம் தியானம் அறம் பாவம் விதிவிருத்தம் பேசுனைக்கு—(தற்போதம்) இறப்பதே பெருந்தவமாய்க் கொண்டு (அதனைக் கெடுத்துச் சிவத்தோடும்) இரண்டறக் கலந்த சத்திய ஞானிகட்குத் தேவார முதலிய தோத்திரங்களை ஓதலும், காலா காலங்கள் (அறிந்து சிவாலயங்களிற் சென்று பணிதலும்) (ஓதோர் பாவனையைக் கருதித்) தியானித்தலும், (சிவபூசையாதி) புண்ணியங்களைச் செய்தலும், (இவர் அன்றி) பாவங்களைச் செய்தலும் ஆகிய இவ்விதி விருத்தங்களுள என்று சொல்வதற்கு,

வேத ஆகமங்கள் அதிசயிக்குமேல் ஆர் உரைப்பார்—வேதங்களும் ஆகமங்களும் அதிசயிக்கும் எனின் அவற்றிற்கு மேல் மற்றியாவர் சொல்வார்?

(குறிப்பு.) போதம் சிறிது எழினும் அதனைக் கெடுத்துச் சிவத்தோடும் கலந்திருப்பதே அவர்க்குச் சகல கோண்டி களும் ஆகலின், "சாவே பெருகோன்பாய்ச் சந்தற்ற சத்தியர்" என்றார். அங்ஙனம் செய்வதே கோன்பாய்க் கொண்டோர்க்கு அதற்குமேல் மற்ற கோன்பென்னும் இன்மையான் அவர்க்கு விதிவிருத்தம் இலவாயின.

"வேதாகமங்க ளதிசயிக்கும்" என்றதனால் அவற்றான் விதிவிருத்தம் அறிவோர்க்கு வேறு சொல்வதற்கு இடமின்மையான், "மேலுரைப்பாரார்" என்றார்.

விதியாவது வேதாகமக்கள் சிவபூசாதிகளைச் செய்க என்று கூறுவது. விருத்தமாவது மதுபாதிகளை விடுக என்று கூறுவது.

இவை யிரண்டு திருவெண்பாவாலும் ஞானிகட்கு விதிவிருத்தங்கள் இல என்று அறிவித்தவாறு காண்க.

மோனிகளைப் பார்த்திணையா மோகமும் வெண்டிங்
மேனி யழகெழுதா மேற்பத்தி—யான [கள்
பதுமா தனன்கண்ணும் பாலுவும்போற் றூல
யெதிராகுஞ் சொப்பனத்தி லும்.

(உரை.) மோனிகளை இணையா பார்த்து மோகமும் வெள் திங்கள் அழகு எழுதா மேனி—(அந்த ஞானிகள் தம்மைப்போல் சுகாதீத முத்திணையப் பெறும்பொருட்டுப் புறத்துநின்ற போதத்தை உள்ளடக்கி இதனைக் கொடுப்பதே விரதமாய்க் கொண்ட) மௌனிகளை இணையா காட்டதத்தோடும் பார்த்து (இவர்மேல் வைத்த) மோகமும், (உத்தாளனத்தால்) வெண்டிங்கள் போலும் விளங்காநின்ற அழகெழுதக் கூடாத (அவாது) திருமேனியும்;

மேல் பத்தி ஆன பதபாதனன் கண்ணும் பாலுவும் போல் தான் ஆய்ச் சொப்பனத்திலும் எதிர் ஆகும்—பிரமனது கான் முகங்களிலும் மேன்மைபெறு பந்திபோல

விளங்குவதான என் கண்களும், (அக் கண்கட் கெதிர் தோன்றும்) பாணுவும்போல், (யான் கருதா திருப்பினும்,) அவை தாமாவாய் வந்து, சொப்பனத்திலும், சாக்கிரத்திலும், (என தாளக் கண்ணிற்கும் முகக்கண்ணிற்கும்) எதிரே விளங்குவதாம்.

(குறிப்பு.) சுகாதீத முத்தியை அடைந்த ஞானிகட்கு ஞானசாதகரைக் கண்டால் பாசங்களை எல்லாம் கடந்து இவ்வளவு வந்தாரென்று, அவர்மேற் சந்தோஷமும் பிறக்குமாகலின், "மோனிகளைப்பார்த் தீமையாமோகமும்" என்னூர். "யான் பெற்றபேறு பெறுக இவ் வையக" மென்பதும் அது.

பதுமாசனன் இமையா நாட்டத்தையும், அதற் கெதிர் தோன்றும் பாணுவையும், உவமை கூற்னமையான், அவர் மேல் வைத்த மோகத்தையும், அவரது திருமேனியையும் தமதுளம் மறவா தென்பதாயிற்று.

எனவெனும் பெயர் எஞ்சி நின்றது.

சொப்பனத்திலும் என்ற உம்மையால் சாக்கிரத்தும் என்று வருவிக்கப்பட்டது.

இத் திருவெண்பாவால் எமக்கும் இங்ஙனம் இருக்கும் என்று ஞானிக ளருமை அறிவித்தவாறு காண்க. (நூல)

உருகு பரமசுக வுல்லாச நோக்குந்
திருமுகமும் புன்முறுவற் றேசுந்—திருநீறும்
தற்பாவ மாண்ட சரீரத்தி லோர்சாத்து
மற்றே வெறுமனழ காம்.

(உரை.) உருகு பரமசுக உல்லாச நோக்கும் திருமுகமும் புன்முறுவல் தேசும் திருநீறும்—உள்ள முருகப்பண்ணு நின்ற பரமசுக உல்லாசத்தோடுங் கூடிய திருநோக்கமும், (அவ் வின்பக் களிப்பால் தெய்வத்தாமரை மலர்ந்ததுபோல விளங்கா நின்ற திருமுகமும், (அவ் வின்பம் பொங்கி

மேன்மே லெழுலால் தோன்றும்) மந்தகாசப் பிரகாசமும், திருமேனி முழுதும் பூசுவதாகிய, திருவெண்ணீற் றழகும்,

தற்பாவ மாண்ட சரீரத்தில் ஓர் சாத்தும் அற்றே வெறு மன் அழகு ஆம்—(பஞ்சபூத குணங்களாகிய) தற்பாவம் இறந்துநின்ற திருமேனியில் கூடியும் கூடாதிருந்த ஞானிகளது திருமேனியில் தோற்றும். அவை அங்ஙனந் தோற்றுவன அன்றி, அவற்றுன் அவர்க்கு) யாது சிறப்பும் இன்று. அவை வாளா தோற்றம் அழகுகளாம்.

(குறிப்பு.) ஆநந்தம் தோற்றம்போது உள்ளம் ஈசக் குருகத் தோன்றும் ஆகலின், "உருகுபரமசுகம்" என்றும், சடசித்துக்களாயுள்ள பொருள்களெல்லாம் அவர்க்குச் சுக சொரூபமாய்த் தோற்றும் ஆகலின், அவர் நோக்கை "பரம சுகவுல்லாச நோக்கு" என்றுங் கூறினர்.

* * * விஜையேன் மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னிலையு மழுதத்தையுமொத்
தூனையு மென்பினையு முருக்காநின்ற வொண்மையனே*

என்பதும் அது.

"பூகாளந்தலைசுமப்ப" என்றதுபோல் தோற்றும் என்பதைச் சாத்தும் என்று அருமை தோன்றக் கூறினர்.

உல்லாசநோக்கு முதலியன அவர் கருத்தாய்த் தோற்றுது இயல்பாய்த் தோற்றலின், "அற்றே வெறுமனழகம்" என்றார்.

வெறுமன் என்பது கிராமியச்சொல்.

இத் திருவெண்பாவால் ஞானிகளைப் புகழ்ந்து கூறிய வாறு காண்க. (சுத்)

வாடன் மணம்போல் வருந்தா வயிராக்யத்
தோடு மெலிந்த வுடம்புடனே—கூடார்

---

* திருவாசகம் : நீத்தல் விண்ணப்பம்—உக.

திருவிடையா நந்தசுக நீங்காத நோக்குந்
திருமுகமுமென்னவிடா தே.

(உரை.) வாடல் மணம்போல் வருந்தா வயிராக்யத் தோடு மெலிந்த உடம்புடனே கூடார்—வாடற்பூவின் மணம் சிறிது தான்றுதல்போல் (சிறிது தோன்றும் பிராரத்த வாசனையோடும் போகத்தால்) வருந்திச்செய்யாத பாச வயிராக்யத்தோடும் தளராநின்ற திருமேனியுடனே கூடியிருந்து கூடாராகிய ஞானிகளது,

திருவிடைய ஆநந்தசுகம் நீங்காத நோக்கும் திருமுகமும் என்னவிடாது—திருவிடையமாய்த் தோற்றும் ஆநந்தமாகிய சுகம் (உட்போல் புறத்தும்) நீங்காத (அவ்வாநந்தத்) திருநோக்கும், திருமுகமும், என தன்னளத்தை எப்போதும் விட்டு நீங்கா.

(குறிப்பு.) "வாடன்மணம்போல்" என்ற உவமையால் சிறிது பிராரத்த வாசனையோடும் என்பது வருவிக்கப்பட்டது.

வருந்திச் செய்யும் போகம் உடையாதது வயிராக்கியம் போல் அன்று இவர்க்கு இயல்பாய்த் தோற்றலின், "வருந்தா வயிராக்கியம்" என்றார்.

விடையாகந்தம்போல் எதிரீடற்ற இடத்தில் தோற்றலின், "திருவிடையாகந்தம்" என்றார். ஏ - அசை.

இத் திருவெண்பாவால் அவரது அருமை கூறியவாறு காண்க (நக)

ஆயின், இந்த ஞானிகட்குப் பெயர்? யாது எனின், மேற் கூறுகின்றார்.

தந்துவந்தின் போர்வை சரிந்த திகம்பரிபே
ரந்துவிதி யேகாந்தி யாநந்தி—சுந்தன்
றுரியனவ தூதன் றுறவிசிவ யோகி
நிருவாணி யென்விரத்த னென்.

(உரை.) தத்துவத்தின் போர்வை சரிந்த திகம்பரிபேர் மூப்பத்தாறு தத்துவங்களாகிய போர்வை சரிந்த அதனால் திகம்பரியா யிருந்த ஞானியினது பெயர் (சொல்லுயிடத்து,)

அத்துவிதி எகாந்தி ஆநந்தி சுத்தன் தூரியன் அவ தூதன் துறவி சிவயோகி திருவாணி என் வித்தன் என்— (சிவத்தோடு அத்துவிதமா யிருத்தலின்) அத்துவித் தியென் றும், (அங்ஙனம் அத்துவிதமா யிருப்பினும் தான் அச் சிவ மாகாமையான்) ஏகாந்தி யென்றும், (பூரணதத்த மெல்லாம் தானுய்ந் நின்று அநுபவித்தலின்) ஆநந்தி யென்றும், (மலத் திரவியங்களை நீக்கி நிற்றலால்) சுத்தனென்றும், (மேலாய பொருளை அடைந்தோ ருகலின்) தூரியனென்றும், (வர்ணச் சிரமங்களைக் கடந்து நிற்றலான்) அவதூத னென்றும், (தேகாதி பிரபஞ்சங்களெல்லாம் துறந்து நிற்றலால்) துறவி யென்றும், (மற்றொன்றோடுங் கூட்டுறவின்றிச் சிவத்தோடும் கூட்டுறவா யிருத்தலின்) சிவயோகி யென்றும், (அத்துவா வாறையுங் கடந்து நிற்றலான்) நிருவாணி யென்றும், அச் சிவத்தோடு அத்துவிதமாக இருக்கின்றே னென்னும் வாச னையும் இறந்துபோ யிருத்தலின்) வித்த னென்றும் நீ சொல்லுதி.

(குறிப்பு.) உடம்பைப்போர்த்து நின்று நீக்கிய போர் வைபோல் உயிரைப் போர்த்து நின்று நீக்கினமையால் "தத் துவத்தின் போர்வைசரிந்த" என்றார். அஃதன்றிப் பூதகஞ் சுகம் - பிரகிருதிகஞ்சுகம்-கலாதிகஞ்சுகம்-வித்தியாகஞ்சுகம்-சத்திகஞ்சுகம் என்னும் இப்பஞ்ச கஞ்சுகங்களையும் நீக்கி நின்ற வெனினுமாம்.

அத்துவிதி யென்றதாதி இக் குணங்களெல்லா மூடை யாளுகலின் இப் பெயர்களெல்லா மவற்குரித்தாயின. (சு0)

இங்ஙனம் அகத்து ளாசையற்றுத் துறந்தோரையும் அகத்து ளாசை யிருக்கத் துறந்தோரையும் எங்ஙன மறியலா மெனின், மேற் கூறுகின்றார்.

சாதிக்கலவாடன், விடையங்கோ யாதே, அதற்தால் மோன்னர்ச் சிவிட்ட பற்றுக்க வொல்லாம் முப்பிபாகும் வந்து பற்றும், முலை உள்ளோப் பற்றுமு அருவறுமிடை அற்றை யின்கண்) உயர்நிப்பட கற்றி.

(முற்போ.) கலை அடாது கடலின் கலிக்கின்ற கப்பலை புலை அலையாகுதேபோல, விடையங்கோ அடாது குறுவின்கண் கிள்ளேமுலை விடையேபாதம் அலையாலெதன்படு நுவ்வுவணைமைக் குறிப்பாற் காண்க.

விருதிலேமுலையுக் மாய் விதக்காலாம் தன் பணைவலைச் சயிலெனவ்வோடு விரு, கடாகாயிறும் அவலேணுடும் வொருகு நுறுத்தில விருதேபால், குறவிலேணுக் குச் தன் பலை மாய்றும் மலையப் பலைடகளாகிய ழேப்பத் தலையையும் கடக்கு விடையேதலை குறை, அங்ஙனம் கடக் கண் கூடாகாயிறும் அதலேனக் கடக்குற் கொகுவாய சுக்க வாசலேனேயாவ கிள்ள நுறுத்தில குறை ஆகலின், "விரு நினையன்" போல், வன்பாயம்,

வெற்றிக்கு அடையதழக் குறை காலைத் தொடங்கிலேனன் அடையுத் தேனாகாவி. காலிறுன்ற வாசிள்ள அடி வெற்றி. அதை கையிள்ள வெற்றியும் நுறுக்க அத்த காலிறும் வீழ்வன்; அதுபோல, விடையங்கோக் குறக்கத் தொடங்கிலேனன் அவ்விடையங்கோயும் குறுக்க தற்போதத்தையும் குறப்பதே குறை, அங்ஙனம் செய்யாத அவ் விடையங்கோச் சாரின் அதக் குறவிறன்ற யாரும் வெருவுமையும் நுறுக்க பிறப்பிறும் வீழ்வன். ஆகலின், "வெற்றிக் குதிகுத்திக்கான்போல்" வன்பாயம் கூறினார்.

"தத்தாலைத்தின் போர்ணை" வன்பாயக் திருவெண்பா றுதல் நும் பூன்ற நிருவெண்பாவாலும் ஞானிகளது வெயரும் தாமும் குறக்குணைக் சாதியாகு விட்டும் சாலாகா தென்பதும் அறிவித்தலாகு காண்க. (உ)

எட்டாம் அதிகாரம் அருளாலாந்தன்மை

முதற் முடம்.

ஒன்பதாம் அதிகாரம்

வாதனைமாண்டார் தன்மை

குடும்பத்தோடுங் கூடியிருந்து ஞானம்பெற்று அக் குடும்பவாதனை மாண்டு நின்றார் தன்மை கூறினமையால் இவ் வதிகாரத்திற்கு வாதனைமாண்டார் தன்மை என்று பெயராயிற்று. துறவிகளா யிருந்து ஞானம் பெற்றோரும், குன்று, குடும்பிகளா யிருந்து ஞானம் பெற்றோரும் உளராகலின், அவ்வதிகாரத்தின்பின் இவ்வதிகாரம் வைக்கப் பட்டது.

ஞானம் இல்லாவிடினும் வைராக்கியத்தால் வீட்டுநெறி யடையலாகாதோ எனின் மேற்கூறுகின்றார்.

ஞான மில்லாத வைராக்கி யன்றல்ல
தானவர்க்கு நோயினர்க்குங் கள்ளர்க்கு-மானதுவெ
னைந்நிலைக்கே நின்றுலை னெவ்விடையத் தேய்ந்தா
றன்னிழற்பே யின்பார்ந் தலம் [லென்

(உரை.) ஞானம் இல்லாத வைராக்கி யன்று அல்ல தானவர்க்கும் நோயினர்க்கும் கள்ளர்க்கும் ஆனது என்— (அகத்துப் பரிபூரண ஞானம் இல்லாதார் (புறத்துச் செய்யும்) வயிராக்கியம் நன்றல்லவாகும், அஃது எங்ஙனம் எனின், (மலை கானில் சஞ்சரிக்கும்) வேடர்களுக்கும், விடா நோயினர்க்கும் (பொருள் திருடும்) கள்வர்க்கும் (வைராக் கியம்) உண்டாவது என்னை? (ஆகலின், இவர்க வைராக்கி யத்தோடு அவரது வைராக்கியம் ஒக்கும்;)

என் நிலைக்கே நின்றுல் என் எவ் விடையத்து எய்தால் என் தன் இழப்பே இன்பு ஆம் தலம்—(அகத்துப் பரிபூரண ஞானம் உடையார் அரசுரிமை முதலியன உலக வியாபாரங் களில்) யாது நிலையில் நிற்பினும் என்னை? (வனிதாதி விட யங்களில்) யாது விடயங்களோடு கூடியிருந்தாலும் என்னை?

அக் நிலையும் அவ் விடையங்களும் இவர்க்கிடமும் அன்று இன்பமும் அன்று கற்போக இழப்பே இடமும் இப்போக இழப்பில் தோன்றும் இன்பமே இன்பமும் ஆம்.

(குறிப்பு.) கணை உடுத்தல், மூலபலங்களைப் புசித்தல், இராப்பகல் கானிற் சஞ்சரித்தல், பனிமழை வெய்யில் காற்றுகளைப் பொறுத்தல் முதலியன கானவர் வைராக்கியம்; வனிதாதி விடயபோகங்களைத் துறந்திருத்தல், விடாநோயினர் வைராக்கியம்; பகைவர்க்கு அச்சம் இன்றித்தம் உடலை இகழ்ந்து இருளிற்சரல் முதலியன கள்வர் வைராக்கியம்; இவரது வைராக்கியங்களால் போக இழப்பும் இன்பமும் இன்மையினைபோல், அவரது வைராக்கியத்தாலும் போகவிழப்பும் இன்பமும் இன்மையின், அவரது வைராக்கியத்தை இவரது வைராக்கியத்திற்கு உவமை கூறினர்.

அகத்துப் பரிபூரண ஞானம் உடையார்க்கு யாதுநிலையில் நிற்பினும் யாது விடயங்களைப் புசிப்பினும், அவற்றை அத்தப் பரிபூரண ஞானத்தால் பார்த்தறிதலின், அவற்றை நோக்கும் தாக்கற்று நிற்பதும், இங்ஙனந் தாக்கற்று நிற்றலால் போக இழப்பும் இப்போக இழப்பால் போன்பமும் உண்டாம் ஆகலின், "சந்நிலைக்கே யின்மையென் எவ்விடயத் தேய்ந்தாலென் றன்னிழப்பே யின்பாந்தலம்" என்றார். அஃது அன்றி, விடய இன்பத்திற்கு எதுவாய் உலக வியாபாரங்களைச் செய்வார்போல், இவர் யாது நிலையில் நின்றும் எனினும் அதனுள் தாக்கற்று நின்று சொரூப இன்பத்திற்கு எதுவாய கற்போக இழப்பைச் செய்வரென்பதும், அவ்விடய இன்பங்களைத் தாம் அற்று அநுபவித்தால் அவற்றை அநுபவிக்குந்தோறும் தாம் அற்ற விடத்து உண்டாம் போன்பம் மேலிடுமே அன்றி, அவ்வின்பம் ஓர் பொருளாய் அவர்க்குத் தோற்று தென்பதுங் காண்க.

"தன்னிழப்பே யின்பாந்தலம்" என்றமையான், அந் நிலையும் அவ் விடயமும் இடமும் இன்பமும் அன்றென்பது வருவிக்கப்பட்டது.

"வைராக்கியமென்பது" வைராக்கி என்று கடை குறைத்து நின்றது. (க)

ஞானம் பெறுவோர்க்கு இல்வாழ்க்கையைத் துறக்க வேண்டாவோ எனின், மேற் கூறுகின்றார்.

எல்லாச் சமயங்க ளுந்துதிக்கு மில்லறத்தி
னில்லாட மீத்தாரென் மீத்தாலென்—புல்லறிவைத்
தீரத் தெளிந்து சிவத்தோடும் பற்றற்று
ராகிற் பிறட்டறுக்க லாம்.

(உரை.) எல்லாச் சமயங்களும் துதிக்கும் இல் அறத்தில் நில்லாமல் நீத்தார் என் நீத்தால் என் — சமயக்கணல்லாம் இது கன்று என்று புகழ்ந்து கூறுகின்ற இல்வாழ்க்கையில் நில்லாமல் இதனைத் துறந்தார் (இத் துறவிற்குத் தகுமெனை) மற்றியாது துறந்தாலும் என்னை, இத் துறவி னேற் பிறப்பறுக்கக் கூடுமோ?)

புல் அறிவைத் தீரத் தெளிந்து சிவத்தோடும் பற்று அற்றார் ஆகில் பிறப்பு அறுக்கல் ஆம்—சற்போதம் கருவிப் போதங்கள் ஆய) புல்லறிவை (ஞானகுருவால்) கன்றாய் விசாரித்தறிந்து (சதனைக்கெடுத்து) சிவத்தோடும் இரண்டறக் கலந்து, (அச் சிவத்தோடுங் கலந்திருக்கின்றோம் என்னும்) வாசனைப்பற்றம் அற்றார் எனின் (அவர்க்கே) பிறப்பறுக்கலாம், (மற்றையர்க்குக் கூடாது.)

(குறிப்பு.) சமய நூல்களெல்லாம் இல்லறத்தையே மேம்பாடாகக் கூறுதலின், "எல்லாச் சமயங்களும் துதிக்கு மில்லறத்தை" என்றார்.

* "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று."

என்பதும் அது.

---

* திருக்குறள் - சக.

"நீத்தாரென்னீத்தாவலென்" என்றது அவ்வில்வாழ்க்கையைத் துறந்த பின்னரும், உடலொறுத்தல், ஊண் வெறுத்தல், உடை துறத்தல், ஊரொடுக்கந் துறத்தல் முதலியன துறந்து நிற்றலெனக் கொள்க.

"புல்லறிவைத் தீரத்தெளிந்து சிவத்தோடும் பற்றற்று நாகிற் பிறப்பறுக்கலாம்" என்றமையால், இங்ஙனந் தெளிந்து பற்றறுதி உடையார் இல்லறந் துறவறங்களில் நின்றாலும் பிறப்பறுப்பார் என்பதும், இலைவயில்லார் யாது துறந்தாராயினும் பிறப்பரார் என்பதுங் காண்க. சற்போதம் கருவிப்போதம் இரண்டும் புல்லறிவு ஆகலின், பொதுப்படப் "புல்லறிவு" என்றார். தீரத்தெளிதல் அவற்றை உள்ளபடி அறிந்து கெடுத்தல். (உ)

மனையிழக்கி லோமனது மாறுது மாய்த்த
தனையிழக்கி லோசிவனைச் சார்ந்தங்—கனையவிக்கை
போதா தறுதோகிற் பூரணமாம் பூரணைந்தா
ரெகா திருப்படெதவர்க் காம்.

(உரை.) மனை இழக்கிலோ மனது மாறுது மாய்த்த தனை இழக்கிலோ சிவனைச் சார்ந்து அங்கு அநுபவிக்கை போகாது அதுபோகில் பூரணம் ஆம்—(நீர் இங்ஙனம் கூறிய ஆற்றான் இல் வாழ்க்கையைத் துறப்பது துற வன்றோ எனின்,) அவ் வில்வாழ்க்கையைத் துறக்கின் (அதன்கண் நின்று அநுபவித்த விடயவாசனை மனத்தின் கண் மாறுது எழும் ஆகலின், அது துறவு அன்று; ஆயின், மனத்தை மாய்ப்பது துறவோ எனின், மனக்கை) மாய்த்த (தற்போதம் எழும் ஆகலின், அது துறவு அன்றாயின்) தற்போதம் இழப்பதோ (துறவு எனின், அத் தற்போதம் இழக்கில்) சிவத்தை அடைந்து ஆன்றுச் சுகத்தை அநு பவிக்கை போகாது ஆகலின், அது துறவு அன்று; ஆயின், சுகப்போ தழிப்பது துறவோ எனின்,) அச் சுகப்போ (தழிதில் சிவபரனைச் சாரும். (அப்போது இங்ஙனம் சிவ

பூரணங் கான் ஆனேன் என்னும் வாதனை தோன்றும் ஆகலின், அது துறவு அன்று ; ஆயின் இனித் துறவு தான் யாது எனின்,)

பூரணம் தான் ஆகாது இருப்பது எவர்க்கும் ஆம்—அச் சிவபூரணங் தான் ஆனேன் என்னும் வாதனை மறந்து நிற்பது துறவு, (இங்ஙனம் சிவபூரணக் தான் ஆகாதிருப்பதாய துறவு) யாவர்க் குண்டாம் ?

(குறிப்பு.) ‘ மாய்த்த ’ என்பதற்கும் ‘ தனையிழக்கில் ’ என்பதற்கும் இடையில் தற்போதம் எழும் என்பது வருவிக்கப்பட்டது.

இம் மூன்று திருவெண்பாவாலும் மெய்த் துறவாவது இதுவென்று அறிவித்தவாறு காண்க. (உ)

இவ்வாழ்க்கையோடு கூடியிருந்தும், இத் துற வெய்தினோரைத் துறவிகளென்று சொல்லப்படுமோ எனின், மேற் கூறுகின்றார்.

மாயாபோ கத்தரசாய் வாழ்ந்தாலு மாமணிபோற்
றோயா தவரே துறந்தோர்கள்—தோய்வாரேற்
சேரும் விதைபோலத் தீர்ந்தவிடத் தேதிரும்பும்
வேரொன் றதுவே வினை.

(உரை) மாயா போகத்து அரசு ஆய் வாழ்ந்தாலும் மாமணிபோல் தோயாதவரே துறந்தோர்கள்—மாயா போகத்தக்கெல்லாம் அரசாகி (அப் போகங்களை அநுபவித்து வாழ்ந்தார் ஆயினும், மகத்தாகிய மாணிக்கமணி (ஒன்றோடும் தோயாது நின்றதுபோல், அவற்றோடும்) தோயாது நின்றவரே துறந்தோரென்று சொல்லப்படுவர் ;

தோய்வாரால் சேரும் விதைபோலத் தீர்ந்த இடத்தே திரும்பும் வேர் ஒன்று அதுவே வினை—(படிகமணிபோல் யாதொன்றோடாயினும்) தோய்வாரெனின், நிலத்துச்சேரும்

வித்துப்போல (உடல்) இறந்த காலையில் (நின்று நீக்கிய பற்றின்கண் மீட்டும்) திரும்பும் ஓர் மூலமும் அப் பற்றுடை யனாதலே, வினையென்பதும் அப் பற்றுடைமையே யாம்.

(குறிப்பு.) மாமணி தன்னை அடுத்த வண்ணங்களைக் கவராது, தனது பிரகாசத்தை அவற்றின்மேல் வீசி நின்றுற் போலவும், யாதொ விடயங்கள் வந்தடுப்பினும் அதில் தோயாது, அவற்றை ஒளிப்பிரகாசத்தை அவற்றின் மேல் வீசி நிற்ற லான் "மாமணிபோற்றோயாதவர்" என்றும்; உட்பிற்குப் புறப்பாய பற்றுக்களை ஒழித்து, அவ் வுடம்பாய் நின் றோரைத் துறந்தோர்கள் என்று சொல்வதுபோல, உயிர்க் குப் புறம்பாய கருவிகள் முப்பத்தாறையும் ஒழித்து அறி வாய் நின்றோரைத் "துறந்தோர்கள்" என்றார்; நிலத்திற் சேரும் வித்துப்போல் உடல் இறந்தகாலை நின்ற பற்றின் கண் மீட்டும் உயிர்வந்து அடைந்து உற்பத்தியாகலின், "சேரும் விதைபோல்" என்றும்; உடல் நீக்கும் காலை உயிர்க்கு எந்த வாசனை யிருந்தது அந்த வாசனையோடும் பிறப்பின்கண் மீள்கலான், "தீர்ந்த விடத்தே திரும்பும் வேர்" என்றும் பற்றுள்ள விடத்து வினையும் உளவாகலின் "அதுவே வினை" என்றுங் கூறினர்.

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாவப் பிறப்பீனும் வித்து"

என்பதும் அது.

"அதுவே" என்பதனைப் பற்றுடைமை எனக் கொள்க.

இத் திருவெண்பாவால் எந் நிலையில் நின்றாலும், அதனைப் பற்றறுதி உடையோர்க்கே வீடென்று அறிவித்தவாறு காண்க. (க)

விடயங்களை அநுபவிப்பினும் அவற்றுட் கூடாரென் றீர் இவரென்னை எனின், மேற் கூறுகின்றார்.

---

* திருக்குறள் - ஈடசூக.

ஒருகுடைக்கீழ்வாழுலகத்தோர்க்குறும்பூருண்டோ
வருணிலத்திற்கீழ் வாழ்வா ரறிவு—கருவிகளிற்
போலென்சேற்றுத்தான் போலொ டருந்துகிழல்
போலற்போற் றோயாமற் போம்.

(உரை.) ஒரு குடைக்கீழ் வாழ் உலகத்தோர் குறும்பு ஊர் உண்டோ அருள் நிலத் தீழ் வாழ்வார் அறிவு கருவிகளில் போலல் என் சேற்றுத்தான் போலொ—(பூமியெல்லாம்) ஒரு குடைக்கீழ் ஆள்வோன் உலகத்து வாழ்வோர்க்குக் குறும்பூரால் துன்பம் உண்டாமோ? அதுபோல், (எங்கும் பரிபூரணமாய் நின்ற) திருவடி நிழற்கீழ் (அகக்கச் செல்வத்தோடும்) வாழ்வார் அறிவு விடயங்களிற் சென்றூலும் என்னை? (அவ்வறிவிற்கு அவ்விடயங்களான் வரும் மயக்கம் யாதும் இன்று, மாயைக்கீழ் வாழ்வார் அறிவு போல் அவ அறிவு) சேற்றுக்குள் தான்போல் அழுந்தாமோ?

பருந்துநிழல் போலல்போல் தோயாமல் போம்—பருந்தின் நிழல் ஒன்றில் தோய்த்தும் தோயாது போலற் போல் (அவ்வறிவு அவ் விடயங்களில்) தோய்த்தும் தோயாது நீங்கும் (என்று அறிந்து.)

(குறிப்பு.) ஒரு குடைக்கீழ் வாழ்வார் மற்று யாதோர் ஊருக்குச் செல்வினும், அவ்வரையனது ஆணையால் குறும்பு செய்வாரும், இலரான் வரும் துன்பமும், அவர்க்கு இன்றி யது போல், திருவடைக்கீழ் வாழ்வார் அறிவு விடயங்களிற் சென்றூலும், அத்திருவடிப் பரிபூரணமாய் நிற்றலின், இவ் விடயங்கள் மயக்குவதும், தான் மயங்குவதும், இவ்வறிவிற்கு இன்றும் ஆகலின், அங்ஙனம் உவமை கூறினர்.

பருந்தின் நிழல் தோய்த்தவாறே நில்லாது விரைவில் நீங்குதல்போல், அவ்வறிவு விடயங்களில் தோய்த்தவாறே மயங்காது விரைவில் நீங்கித் திருவடிக்கீழ் நிற்றலான், இங்ஙனம் உவமை கூறினர். பருந்தினை அவர்க்கும், அதன் நிழலை அவாது அறிவிற்கும் உவமையாகச் கூறியவாறு காண்க.

இத் திருவெண்பாவால் விடயங்கள் அவர் அறிவை மயக்காது என்பதும், அவ்விடயங்களில் அவாறிவு தோயாது என்பதும், அறிவித்தவாறு காண்க. (ந)

நெய்யுண்ட நாயென்ன நீரி னிழலென்ன
மையுண்ட கண்போன் மனைவாழ்வார்—தய்ய
விருளால் விலையேறு மாணிக்க மெல்லாப்
பொருள்போல வல்லாப் பொருள்.

(உரை.) நெய் உண்ட நாய் என்ன நீரில் நிழல் என்ன மை உண்ட கண்போல் மனைவாழ்வார்—நெய்யை உண்டு மீட்டும் கக்கானின்ற நாய்போலும் (தடாக தீரத்தில் நிற்கும் மாம் மேல்முகமாய் நிற்கவும் அத் தடாக) நீரில் கீழ்முகமாய்த் தோன்றும் அம் மாநிழல் போலும், (பிறர்க்கு அழகாய்த் தனக்குக் களிப்பாயிருக்கும்) மையுண்ட கண்போலும் (அந்த ஞானிகள்) இல் வாழ்க்கையோடுங் கூடியுங் கூடாதிருந்து வாழ்வார்; (இங்ஙனம் வாழ்வாராயின், ஞானிக்கும் அஞ் ஞானிக்கும் பேதம் என்னை எனின்,)

இருளால் விலை ஏறும் தய்ய மாணிக்கம் எல்லாப் பொருள்போல அல்லாப்பொருள் — இருளைத் தோற்று பிரகாசித்தலான்) இருளான் விலையேறும் நிருமலமாயுள்ள மாணிக்கமணி (அவ்விருளான் மறையும்) மற்றெல்லாம் பொருள்களைப்போலும் அல்லாதபொருள், (அதுபோல்) இல்வாழ்க்கை இருளால் தாம் மறைந் திருப்பானைப்போலு மன்றி, அவ்வில்வாழ்க்கை இருளைத் தமது ஞானப் பிரகாசத் தால் நீக்கிநின்று விளங்குவர் ஞானிகள் என்று அறிந்து.

(குறிப்பு.) நெய்யை உண்டபின் வயிற்றில் எட்டுணை யேனும் தங்காது மீட்டும் கக்கலான், அந் நெய்யினது சாரம் அதன் உடலிற் சாராததுபோல, விடயங்களைத் தாம் அற்று அநுபவித்துச் சிவத்திற்கு ஆக்கலான், அவ் விடய வாசனை இவரைச் சாராது ஆகலின், "நெய்யுண்ட நாயென்ன" என்றும்;

கரையின்கண் மரம் மேல்முகமாய் நிற்கவும் அதனது நிழல் கீழின்கண் கீழ்முகமாய்த் தோற்றுதல்போல், சகலத்தையும் கடந்த சிவத்தைத் தாம் பிரியாதிருக்கவும் மனைக்கண் இருத்தல்போல் தோற்றலின், "நீனிழலென்ன" என்றும்;

பிறர்க் கழுகாய்த் தனக்குக் காப்பதா யிருக்கும் மையுண்ட கண்போல், பிறர்க்கு மனைக்கண் வாழ்கின்றது போல் தோற்ற, தமக்கு இப் பிராரத்தவாசனை என்றைக்கு ஒழியும் என்று வெறுப்பாய்த் தோற்றலின், "மையுண்ட கண்போலும்" என்றுங் கூறினர்.

மாணிக்கம் பகலெப்பற்ற இரவில் மிகவும் பிரகாசிப்பது போல், மெய்ஞ்ஞானிகட்குத் துறவைப்பற்றி இல்வாழ்க்கையில் ஞானம் மிகவும் பிரகாசிக்கும் ஆகலின், "இருளால் விலையேறு மாணிக்க மெல்லாப் பொருள்போல வல்லாப் பொருள்" என்றுங் கூறினர் (சு)

ஞானியும் அஞ்ஞானியும் குடும்பத்தோடிருப்பதனால், அவர்க்குப் பிறப்பு இன்றுயது என்னை, இவர்க்குப் பிறப்பு உண்டாயது என்னை எனின், மேற் கூறுகின்றார்.

தொடைதட்ட லொன்றே துயிற்கும் விழிக்கும்
படிகத் திருண்மணிக்கேன் பற்று—மடிபார்த்துக்
கூடப்போங் கள்ளனைப்போற் கூடக் குடும்பக்கூத்
தாடிக்கேன் மேற்பிறப்புண் டாம்.

(உரை.) துயிற்றும் விழிக்கும் தொடைதட்டல் ஒன்றே படிகத்து இருள் மணிக்கு என் பற்றும்—துயிலும் பருவம் உடையோன் துயிறற்குத் தொடைதட்டலும், விழிக்கும் பருவம் உடையோன் விழித்தற்குத் தொடை தட்டலும் ஒன்றேயாம். (அதுபோல், ஞானி மனைவி முதலிய குடும்பத்தார் வந்து சருவுந்தோறும் அகமுகமாய்த் தற்போத ஒழிவில் நின்று ஆகந்த நித்திரைபண்ணுவான்.

அஞ்ஞானி தன் மனைவி முதலிய குடும்பத்தார் வந்து சருவந் தோறும் சகமுகமாய் நின்று மயக்கத்தில் அழுந்துவான் ஆயின் ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பேதம் இங்ஙனம் ஆயினும், அந்த ஞானிக்குக் குடும்பத்தில் இருக்கின்றேன் என்னும் வாசனையாயினும் தோன்றுதோ எனின்,) முகத்தில் 'பற்றம் பஞ்சவண்ணமாகிய) இரும் மாணிக்க மணிக்கு என் பற்றும்? (அதுபோல, அக் குடும்பந் தானுய் நின்ற அஞ்ஞானிக்கு ஏறும் வாசனை குடும்பத்திற் பற்றின்றி நிற்கும் ஞானிக்கு என் ஏறும்? இங்ஙனங் குடும்பவாசனையும் எழுதிருத்தலான்,)

அடிபார்த்துக் கூடப்போம் கள்ளனைப்போல் கூடாக் குடும்பக் கூத்தாடிக்கு மேல் பிறப்பு என் உண்டாம்— (பொருள்களைக் களவு கொடுத்தோர்கள்) அவன் அடி பார்த்துச் (செல்ல, அப்பொருள் களவுகொண்டோன் அவரோடுங் கலந்துகொண்டு அவ்வடிபார்த்துக்) கூடச்செல்லும் அக் கள்வனைப்போல், (குடும்பத்தார்க்குச் சுகதுக்கம் வந்தகாலை அவரைப்போல் தானும் அவர்க்குக் காயத்தால் பூரிப்பும் வாட்டமும் உடையவனைப்போற் காட்டி அவரோடுங் கூடி நின்றும் மனத்தான் அவரோடும்) கூடாத குடும்பக் கூத்தாடியாகிய அந்த ஞானிக்கு மறு பிறப்பு என் உண்டாம்?

(குறிப்பு.) தொடைதட்டலால் துயில்வதும் விழிப்பதும் அவர்க்கு இயல்பாயினபோல், குடும்பத்தால் சகமுகப்படுவதும் சகமுகப்படுவதும் இவர்க்கு இயல்பாயின என்பதுங் கொள்க.

பார்ப்பான் தோட்டிவேடம் போட்டு நடிப்பினும் தன்னை வேறுகண்டு நின்றாற்போல், இவன் குடும்பிபோல் இருப்பினும், தன்னை வேறுகண்டு நின்றான் ஆகலின் "குடும்பக்கூத்தாடி" என்றார். (எ

நீர் இங்ஙனங் கூறிய ஆற்றான் ஞானிக்கு இல்லறமுமே துறவறமும் சரியோ எனின், மேற் கூறுகின்றார்.

தொடும்போ சுழல்காற்றுத் தூளம்போற் றொட்டு
விடும்போது மங்ஙனே விட்டு—நடந்தாலு
மாகாய நீங்காம லாடியது போலடங்கு
மேகாந்திக் கெங்கிருந்தா லென்.

(உரை.) தொடும்போது சுழல்காற்றுத் தூளம்போல் தொட்டு விடும்போதும் அங்ஙனே விட்டு நடந்தாலும்—(விடயங்களைப்) பற்றும்போதும் சுழல்காற்றுத் தூளத்தைப் பற்றுவதுபோற் பற்றி, (அவ்விடயங்களை) விடுக்கும்போதும் அச் சுழல்காற்றுத் தூளத்தை விடுப்பதுபோல் விடுத்து, (அங்ஙனம் ஞானியின தறிவு விடயங்களைப் பற்றி விடுத்தாச்) சென்றாலும்,

ஆகாயம் நீங்காமல் ஆடி அடங்கும் அதுபோல் எகாந்திக்கு எங்கு இருந்தால் என்—(தூளத்தைப்பற்றும்போதும்) ஆகாயத்தைவிட்டு நீங்காமற் பற்றி, (சுழன்றாடும் போதும் அவ்வாகாயத்தை விட்டு நீங்காது) ஆடி, (அத்தூளத்தை விடுத்த அவ்வாகாயத்துள்) அடங்கும் அச் சுழல்காற்றைப் போல, (விடயங்களைப் பற்றும் போதுந் திருவருளை விட்டு நீங்காது பற்றி, அநுபவிக்கும்போதும் அவ்வருளை நீங்காது அநுபவித்து, அவ் விடயங்களை விடுத்து அவ்வருளில் அடங்கும்) எகாந்தியாகிய ஞானிக்கு (இருவகை அறங்களில்) எவ்வறத்திருந்தால் என்னை? (அவற்றோர் பற்றும் இன்று.—

(குறிப்பு) "ஆகாயநீங்காமலாடி" என்றதனால், தூளத்தைப் பற்றும்போதும் ஆகாயம் நீங்காமற்பற்றி என்பது வருவிக்கப்பட்டது.

"அதுபோலடங்கும்" என்றமையால், ஆடி என்றதன் பின்னர் அடங்குமென்பது வருவிக்கப்பட்டது.

இங்ஙனம் செய்தாலும் அவரிருக்கும் இடம் திருவருள் (அ)
ஆகலின், "எகாந்தி" என்றார்.

இங்ஙனம் குடும்பத்திருந்தும் அதன்கட் சார்பு ஒழிந்து நின்றார் யாவர் எனின், மேற் கூறுகின்றார்.

சுந்தரனுர் சேரர்கோன் சோழர் குறுமன்னர்
மைந்தருட றம்முடலை வாட்டினர்க—ளந்தமிலாப்
யத்தரொடு ஞான வயிராக் கியர்பலர்க்கு
மொத்ததுசார் போத வொழிவு

(உரை.) சுந்தரனுர் * * * போத ஒழிவு—சுந்தர மூர்த்தி நாயனுர், சோமான் பெருமான் நாயனுர், செங்கட் சோழ நாயனுர், புகழ்ச்சோழ நாயனுர் ஆகிய சோழராசாக்கள் மெய்ப்பொருள் நாயனுர் கழற்சிங்க நாயனுர் முதலிய குறுமன்னர், மைந்தருடலை வாட்டிய சிறுத்தொண்ட நாயனுர், தம்முடலைவாட்டிய கண்ணப்ப நாயனுர், அரிவாட்டாய நாயனுர் முதலியோர், நாசமில்லாத திருநீலகண்ட நாயனுர் அதிபத்தரோடு மற்றும் உண்டாகிய ஞானிகள் வைராக்கியமுள்ள இம் மெய்யடியார் பலருக்கும் குடும்பத்தில் கூடியிருந்தும் அதன்கட் சார்போதம் ஒழித்து நிற்றல் ஒன்றுமொத்திருந்தது, (ஆகலின், சார்போதம் ஒழிவோர் எவ்வறத்திருப்பினும் ஒழித்து நிற்பர், ஒழியாதார் எவ்வறத்திருப்பினும் ஒழியார் என்று அறிந்தி.)

"நெய்புண்டநா" யென்னுந் திருவெண்பா முதல் இரண்டு நான்கு திருவெண்பாவானும், பற்றற்ற ஞானிகட்கு இல்வாழ்க்கையில் ஞானவொளி விளங்கலின், இரவு விளக்குப்போன்று அந்த ஞானம் பயன்பட்டு அதிகமாம் என்பதும், அவர் அக் குடும்பத்தில் பற்றிலராகலின் பிறப்பு உண்டாகாது என்பதும். அவர் எவ்விடத்திருப்பினும் நிலையுயரார் என்பதும், இவ்வாறு குடும்பத்திலிருந்தும் ஞானிகளா யிருந்தோர் இவரிவரென்பதும், அறிவித்தவாறு காண்க. (கூ)

ஒன்பதாம் அதிகாரம் போதனுமாண்டார் தன்மை

முற்றும்.

பத்தாம் அதிகாரம்

நிலையியல்

இதனுட் கூறிய உண்மைநிலை தவறினும், மீட்டும் அதனைச் சென்றடைதற்கு உபாயங் கூறினமையான், இவ் வதிகாரத்திற்கு நிலையியல்என்று பெயராயிற்று.

அறியார் வழிகேட் டறிந்து நடக்க
வறிவா ரறிவென் றறியார்—மறையாக்
குடையிருக்கத் தாமே குதித்துங் கடந்து
மடர்மழைக்கே வாரவர்போல் வார்.

(உரை.) வழி அறியார் கேட்டு அறிந்து கடக்க அறி வார் அறிவு என்று அறியார்—(தாம் கருதிய ஊருக்குச் செல்லும்) வழி அறியார் (அவ் வழி யறிந்தோரைக்) கேட் டறிந்து கடக்கவும் (தம்மால் அறிந்து கடப்பதாய்க் கருதுவ தன்றி அவ்வழி) அறிவார் (அறிவித்த அறிவு தாம் அவ் வழி அறிந்த) அறிவென்று அறியார், (அதுபோல, தாம் முன்னர் அறியாத கருவிகள் மூப்பத்தாறையும் இப்போது அருள் அறிவிக்க, அவற்றை அறிந்து கடந்து செல்லவும், தம்மால் அவற்றை அறிந்து கடந்து சென்றதாய்க் கருதுவதன்றி, அவ்வருள் அறிவிக்க அறிந்த அறிவு தாம் அக் கருவிகளை அறிந்த அறிவென்று அறியார்;)

அடர் மழைக்கு எவர் அவர் மறையாக் குடை இருக் கத் தாமே குதித்தும் கடந்தும் போல்வார்—அடர் மழைக் கண் ஒருங்குச் செல்லத் தொடங்கினர் (மழை தம்மேல் தாக்காதபடி தமக்கு) மறைப்பாகக் குடை கைக்கண் இருக்க வும் (அக்குடையைத் தம்மேற் கொண்டு செல்லாது மழைத் திவலைகட்கு இடையே) தாமே குதித்துங் கடந்தும் (அவ் வடர் மழைக்கண் தினைத்து) செல்கின்றாரைப்போல், (தரு

களைக் கடந்து வீடடையக் கருதினோர் அக் கருவிகள் தம் முள் தாக்காதபடி அரண் தடைமைவிட்டு நீங்காதிருக்கவும், இவ் வருளை முன்னிட்டுக்கொண்டு செல்லாது, அக் கருவி களைத் தற்போதத்தால் அறிந்தும் கடந்தும் செல்வதாகக் கருதி அவற்றுள் நுழைவார் இதென்னை ?

(குறிப்பு) முன்னர் அறியாதிருந்த கருவிகளை இப் போது அறிய வந்தது திருவருளால் என்று அறியாது. தம்மால் அறிந்ததாகக் கருதினமையால், இங்ஙனம் உவமை கூறினர்.

கருவிகளை நீக்கத் தொடங்குவோர் திருவருளை முன் னிட்டுக்கொண்டு நீக்காது, தற்போதத்தை முன்னிட்டு நீக்கத் தொடங்கின், அக் கருவிகள் நீங்காது பண்ணடைப்படி மூடும்; ஆகலின், இங்ஙனம் உவமை கூறினர்.

இத் திருவெண்பாவால் கருவிகளை அறிந்து நீங்கி நின்ற அறிவு அருளறிவிக்க அறிந்த அறிவென்று அறிய வேண்டும் என்பதும், கருவிகளை நீக்கிச் செல்லும்போது தற்போதத்தைப் பின்னிட்டு அருட்போதத்தை முன்னிட்டு நீக்கிச் செல்லவேண்டும் என்பதும், அறிவித்தவாறு காண்க.

கருவிகளை இங்ஙனம் நீக்கித் திருவருளைக்கூடும் நிட்டை கூடாதாயினும், கேவல சகலங்கள் தாக்காது அருளே எவைக்கும் தாரகமென்று அறிந்து நிற்றற்கு உபாயம் யாது எனின், மேற் கூறுகின்றார்.

செத்துப் பிறவாமற் றேடித் திரிகையிலே
செத்துப் பிறந்து திரிவீரே—சுத்த
விருட்கே வலசகலம் போகவெதி ரிட்ட
வருட்போத ராய்த்திரியா மல்.

(உரை.) எதிரிட்ட இருள் கேவல சகலம் போகச் சுத்த அருட்போதர் ஆய்த் திரியாமல்—(உமது அறிவிற்கு) எதிரிட்ட மயக்க வடிவாகிய கேவலாவத்தையும் (விகற்ப

வடிவாகிய) சகலாவத்தையும் போக, இவைகள் தாக்காத சுத்தாவத்தையில் நின்று, அருளே எவைக்கும் தாரகம் என்று அறிந்து காடி அவ்வருட் போதராய்ச் சஞ்சரியாமல்—

செத்துப் பிறவாமல் தேடித் திரிகையிலே செத்துப் பிறந்து திரிவீரே—(இனிமேல்) இறந்து பிறவாமல் (இப்போது பிறப்பிறப்பைக் கடந்து நின்ற வீடு) தேடிப் (பாவனை முதலிய செய்து உள்ளே) சுழலுமிடத்தைத் தானே (கேவலாவத்தையில்) இறந்தும் (சகலாவத்தையில்) பிறந்துஞ் சுழல்வீர் (இது என்னை ?)

(குறிப்பு.) மயக்கமாய் வந்தடுப்பது கேவலம், விகற்பமாய் வந்தடுப்பது சகலம், மயக்கம் வந்தடுத்தபோது மயக்க வடிவாய் நின்றும், விகற்பம் வந்தடுத்தபோது விகற்ப வடிவாய் நின்றும் மயக்கம் நீங்கியபோது அம் மயக்கத்தை மயக்கம் என்றறிந்தும், விகற்பத்திற் சென்று மீண்டபோது அவ் விகற்பத்தை விகற்பம் என்றறிந்தும், இங்ஙனம் அவற்றில் மறைந்தும் சுழன்றும் அவற்றை இவை என்று அறிந்து நின்ற அறிவு தான் என்றறிந்து, அவற்றையும் தன்னையும் தனக் கறிவித்தது அருளென அறிந்து, அவ்வருள் தன்னை எப்போதும் விட்டு நீங்காதென்று அறிந்து, அவ்வருளை காடி நிற்கவே, தம் மயக்க விகற்பமாகிய கேவல சகலங்களில் நீக்கி, அருள் பூரணமாய்ப் பிரகாசிக்கும் ஆகலின், "இருட் கேவலசகலம் போகவெதிரிட்ட வருட்போதராய்த் திரியாமல்" என்றார்.

இத் திருவெண்பாவால் ஆன்ம போதஞ் சிவியாத அருட்போதத்தை நாடி நின்றால், அவ்வருள் அறியப்படும் என்று அறிவித்தவாறு காண்க. (உ)

இங்ஙனம் சகல கேவலங்கள் தன்னால் அறியப்படுதலின் அவற்றைத் தன்னால் நீக்கக்கூடாதோ எனின், மேல் கூறுகின்றார்.

சகலமுங் கேவலமுந் தாக்கறுப்பான் ரூலே
பகல்விளக்கோ டுச்சிப் படிகம்—தகவைத்தா
மூட்டி யுறக்குவது நாமேமம் முட்கலப்பு
நாட்டமொழி யென்றருளி ணன்.

(உரை.) தாலே சகலமும் கேவலமும் தாக்கு அறுப் பான் பகல் விளக்கோடு உச்சிப் படிகம் தக வைத்து ஊப் ஊட்டி உறக்குவ தும் நாமே—(நமதருளை முன்னிட்டு கொண்டு சகல கேவலங்களைத் தன்னுள் தாக்காது அறுப் பதே அன்றி) தாலே சகலத்தையும் கேவலத்தையும் தன் னுள் தாக்காது அறுப்பான்? ஆதித்தன் சந்நிதியில் தற் சேட்டை அற்றிருந்த விளக்குப்போலும், உச்சிக்காலத் தப் பஞ்சவன்னங்களையும் கவராதிருந்த படிகம்போலும், (எமது சந்நிதியில் உனது தற்போதம் சீவியா திருக்கவும் எமது சந்நிதியை நீ அங்ஙணம் நீங்கா திருத்தலின், கரு வி கள் உன்னைத் தாக்காதிருக்கவும்) தகைமை பெறவைத்து, உனது ஊழ்வினைப்படி உனக்கு ஊட்டி உறக்குவிப்பதும் நமதருளே (இங்ஙனம் வீட்டின்பல் கொடுப்பதும் நம தருளே) என்றறிந்து இவ்விருவகை இடத்தும் உன் போதஞ் சிறிதேனும் சீவியாது நிற்பின் நம்மிருவர்க்கும் நாமே இரண்டற்ற ஐக்கியங்கூடும்; இஃதன்றி,

நம்மூள் கலப்பு நாட்டம் ஒழி என்று அருளினன்—(யாம் உன்னை வந்து கூடுதலும் நீ நம்மை வந்தடைதலும் ஆகிய கருத்து உண்பால் எழின் ஐக்கியங்கூடாது ஆகலின், நாமிருவரும் வந்து நம்முட் கலப்பதாகிய நாட்டத்தை நீ ஒழி தி என்று (திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் எனக்கு) அருளிச்செய்தார், (இவ்வாறே நீயும் அறிதி எனின், அவரது திருவடிக்கண் ஐக்கியம் உனக்கும் கிடைக்கும்.)

(குறிப்பு.) எதிரிட்டுத் தடித்த போதம் எதிரிடாது அசைவற நின்று தேய்ந்தபோது ஆன்மாவிற்கும் சிவத்திற் கும் ஐக்கியம் தானே கூடும் ஆகலின், "நம்முட்கலப்பு நாட்டமொழி யென்றருளினன்" என்றார்.

தமதாசாரியர் தமக் கருளிச்செய்த மூறைமை சென்று மாணாக்கனுக்கு அறிவித்தவாறு காண்க.

இத் திருவெண்பாவால் சகல கேவலங்களை அருட் போதத்தாலன்றி ஆன்மபோதத்தால் நீக்கப்படாதென்று அறி விக்கவாறு காண்க. (க)

இங்ஙனம் கருதின்றூ திருவருளைக் கூடுதல் அரிதாயி னும் இன்னும் ஓருபாயம் மேற் கூறுகின்றார்.

சாக்கிரத்திற் போதச் சலனையெல்லாஞ் சொப்பனம் லாக்கு மருட்போத ராகுவோர்—நீக்கும் [போ பரையோகர் சுத்தர் பரமசுகா நந்தர் துரியகதி யின்புகடந் தோர்.

(உரை.) சாக்கிரத்தில் போதச்சலனை எல்லாம் சொப் பனம்போல் ஆக்கும் அருட்போதார் ஆகுவோர்—சாக்கிர வத்தையில் தோன்றும் போதச் சேட்டையும் (மற்றும் உண் டாகிய தேகாதி பிரபஞ்சங்கள்) எல்லாமும் (இவையாவை என்ன எதிரிட்டுப்பார்த்து, அப் போதச்சேட்டை விடயங் களைச் சார்ந்த இடத்துத் தோன்றிய விடயபோதம் என்றும், தேகாதி பிரபஞ்சங்க ளெல்லாவற்றையும் மாயையில் தோன்றி அழிவன வென்றும், இவற்றிற்கெல்லாம் காரண மாய் உட்புறம்பாய்ப் பரிபூரணமாய் நிற்பது அருளென்றும் கண்டு, பின்னர் இப் பரிபூரணமாகிய அருளே மெய்யென்று அதனை நாடிநின்று; இவ் விடய போதத்தையும் இப் பிரபஞ் சங்களையும்) சொப்பனம்போலப் பொய்யாக்கும் (அவர் இவற்றை உள்ளபடி நீக்கி) அவ்வருட் போதரே ஆகுவர்; (அஃதன்றி அவரே,)

நீக்கும் பரையோகர் சுத்தர் பரமசுகாநந்தர் துரிய கதி இன்புகடந்தோர்—(அவ்வருளையும்) கடந்து செல்லும் பரை யோகரும் (சற்சுதந்திரமற்ற) பரிசுத்தரும் அப் பரமசுகமாகிய ஆநந்தத்தை யுடையவரும் நின்மல துரியத்தில் தோன்றும் பரம சுகாநந்தாதீதரும் ஆவர்.

(தூறிப்பு.) இங்ஙனம் விடயபோகத்தையும் தேகாதி பிரபஞ்சத்தையும் பொய்யென்றும், சமஸ்கன்னியமென்றும், கண்டு, இவற்றிற் சூள்ளும் புறம்பும் பரிபூரணமாகிய திருவாருளையே காமுறின்போர் இப் பொய்களை நீங்கியும் மெய்யாகிய திருவருளை வழிவாஸர் ஆகலின், 'சொப்பனம்போலாக்கு மருட்போதகராகுவோர்" என்றும், அங்ஙனம் அருள்வழிவாய காலத்து அவ்வருளையுங் கடந்த பரயோக முதலியன அவர்க்கு எளிதில் உண்டாம் ஆகலின், அவைசய பரயோக முதலியன உடைய என்றுங் கூறினர்.

அவர் என்றதனுஞ் சுட்டுப்பெயர் எஞ்சி நின்றது.

இத் திருவெண்பாவால் காருகிகளை உள்ளபடி கண்டறியில் திருவருள்நிலை காணவருமென்றும், அங்ஙனம் வரின் பரயோகமுதலிய பேறுளவாமென்றும், அறிவித்தவாறு காண்க. (சு)

இங்ஙனம் விடயபோகத்தையும் தேகாதி பிரபஞ்சங்களையும் நீங்கி அருளைப் பெறுவதே அமையாதோ, அதற்கு மேல் நீர் பரயோக முதலியன கூறியது என்னை எனின், மேற் கூறுகின்றார்.

தத்துவம்போய்க் கேவலம்போய்த் தான்போ
யருள்கழன்று, சுத்தபரை யாய்த்தன் சுதந்திரம்
போய்ச்—சத்தி, யொழிவிலே போதம்போ யொன்
றுகா வொன்றி, னழிவிலே இன்பவதி தம்.

(உரை.) தத்துவம் போய்க் கேவலம் போய்த் தான் போய் அருள் கழன்று சுத்த பரை ஆய்த் தன் சுதந்திரம் போய்ச்சத்தி ஒழிவிலே போதம் போய் — நினைப்பாய் நின்ற) தத்துவம் மூப்பத்தாறையும் நீங்கி (அவற்றின்மேல் மறப்பாய் நின்ற) கேவலாவத்தையையும் நீங்கி (அத் தத்துவங்களையும் கேவலாவத்தையையும் இவை என்றறிந்து நீங்கி

கின்ற அறிவுதான் எனத் தன்னை அறிந்து அவைகளை அறிந்து நீங்கவும் தன்னை அறியவும் வந்தது திருவருள் அறிவிக்க அறியவந்த தென்று அறிந்து, தானறிந்தென் என்பதை நீங்கி, (தனக்கறிவித்த அவ்வருளைத் தரிசித்து) அவ்வருளையும் கழன்று, தன்மலமாய் உள்ள பரையே தானெனி, (அப் பரையை அறிந்த இடத்து இது அது என்று தான் காண்பானும் காட்சியுமாய் அறிந்து வந்த) தற்சதந்திர அறிவு நீங்கி, அப் பாசத்தி நீக்கத்திலே சற்போதம் ஒழிந்து (ஆநந்தாநுபவம் பெற்று, அதன்பின்னர்,)

ஒன்று ஆகா ஒன்றின் அழிவிலே இன்ப அதீதம்— (இங்ஙனம் கூறியவற்றுள்) ஒன்றும் தானாகாத ஒன்றாயிருந்த சிவத்தில் தான் இரண்டறக் கலந்து போதவாசனையும் இறந்த இடத்தில் சுகாதீதம், (இச் சுகாதீதமே உண்மைநிலை என்று அறிதி.)

(குறிப்பு.) பரையோகத்தில் ஆன்மாவினது சதசத் திர அறிவுகெடுங் காலின், "சுதந்திரம்போய்" என்றும், அப் பாசத்தி நீக்கத்தில் போதம் இறந்து ஆநந்தாநுபவம் உண்டாம் ஆகலின், "சத்தியொழிவிலே போதம்போம்" என்றும், ஆன்மா சிவத்தோடு இரண்டறக் கலந்த விடத்துப் போதவாசனை ஒழிதலானும், இவ்விடஞ் சுகாதீதம் ஆகலானும், "ஒன்றுகா வொன்றி னழிவிலே யின்ப வதீதம்" என்றுங் கூறினர்.

இன்பாதீதம் என்றமையால் இன்பப்பேறு வருவிக்கப் பட்டது.

தத்துவ முதலியன போக்கப்போவன ஆகலின், போயென்பது நீக்கி என்று கூறப்பட்டது.

இத் திருவெண்பாவால் உண்மைநிலை சதென்று அறி (த்) வித்தவாறு காண்க.

இவ்வாநந்தப்பேறு பெறுமாறு எங்ஙனம் எனின், மேற் கூறுகின்றார்.

போதப் புரவி புருட னதிலேந்து
வீதிப் பவனி விறிசாகும்—போதப்
புரவியருளேறிறைற் போக்குவர வற்ற
பரமசுக மாங்காணப் பா.

(உரை.) போதம் புருடன் புரவி அதில் ஐந்து வீதி விறிசு பவனி ஆகும்—போதமாகிய அரையன் புருடனாகிய புரவிமேல் ஏறிக்கொண்டு பஞ்சேந்திரியவீதிகளில் விடயங்களாகிய காட்சிகளைக் கண்டுகொண்டு சுழல்விறிசுபோலப் பவனி செல்வதாகும்;

போதம் புரவி அருள் ஏறினல் போக்கு வரவு அற்ற பரமசுகம் ஆம் அப்பா காண்—போதமாகிய புரவிமேல் அருளாகிய அரையன் ஏறினல் (அப்போது) போக்குவரவு அற்று நின்ற மௌனானந்தம் உண்டாம். இதனை மாணைக்கனை நீ அறிந்தி.

(குறிப்பு.) போதம் புருடனேறுக்கூடிப் பஞ்சேந்திரிய வழிச்சென்று விடயங்களைப்பற்றும், அங்ஙனம் பற்றுது அவற்றை நீங்கி அப்போதத்தை உள்ளே அடக்கித் திருவருளை நாடவே இவ்வருள் அப்போதத்தைக் கீழ்ப்படுத்தி தான்மேலீடாய்ப் பிரகாசிக்கும், அப்போது ஆனந்தோதயம் உண்டாம்; ஆகவின், அங்ஙனம் உவமை கூறினர்.

போத விடயாகந்தம் பெறுதற்கு ஏதுவாய் நின்றது புருடன் ஆகவின், இப் புருடனைப் புரவி யாக்கினர்.

சொரூபாகந்தம் பெறுதற்கு ஏதுவாய அருளைப் போதமுன்னிட்டுக்கொண்டு சேறலின், இப் போதத்தைப் புரவி யாக்கினர்.

இந்த நாட்டம் வைத்தால் அந்த நாட்டம் மறந்து சுழலும், அந்த நாட்டம் வைத்தால் இந்த நாட்டம் மறந்து அசைவற்றிருப்பதுங் காண்க.

ஒருவன் அட்டாவதானம் செய்தல் முதலியன இப் புருடனது வேகமெனக் கொள்க. இதற்கு,

* "ஐவகையா லுறுபயன்க ணுகாவருங் காலை
மதுபுருட தத்துவமென் றறைந்திடுவ ரறிஞ்சோர்."

என்னும் சிவப்பிரகாசத்தானும் மற்றும் வருவனவற்
றானுங் காண்க.

அறிவும் ஆகத்தும் பெறுதற்கு உபாயங் கூறினீர்,
தினித் துறவினது இலக்கணம் யாது? எனின், மேற்
கூறுகின்றார்.

அறிந்தழுந்தி யாராய்ந் தகம்புறமாய்த் தேடி
மறந்தவையுத் தாயுய் மயங்கிப்—பிறந்து
சுகதுக்க மாய்ப்பதறிச் சுட்டுத் தொழில்போய்ப்
பகைகெட்டது துறவப் பா.

(உரை.) அகம் புறம் ஆய் ஆராய்ந்து சேடு அறிந்த
அழுந்தி மறந்தவன் ஆய்த் தான் ஆய் மயங்கிப் பிறந்த
சுகதுக்கம் ஆய்ப் பதறி — (தற்போதத்தால் விடயங்கள்
எவ்விதத்தால் உண்டாம் என்று) உள்ளும் புறம்புமாய்
விசாரித்துத் தேடியும், (அவ்விடயங்கள் கிடைத்தகாலை
அவற்றை ஞானேந்திரியங்களான்) அறிந்து (கன்மேந்தி
யங்களாற் பற்றி அந்தக்கரணங்களால் அவற்றுள்) அழுந்
யும், (அவ் விடயங்களைக் கேவலத்தில்) மறந்தவையும்,
(சகலத்தில் அவ் விடயங்களே) தாயுய் மயக்கியும், (விடய
கள் தன்னைப் பிரியாது நின்றவிடத்து அவற்றில்) சகஜ
யாய்ச் (சென்று பற்றிப்) பதறியும், (அவை தன்னைப் பிரிந்து
நீங்கியவிடத்துத்) தாக்கியாய் நின்று பதறியும்,

சுட்டுத் தொழில் போய்ப் பகை கெட்டது துறவு
அப்பா—இங்ஙனம் மயங்கி நின்ற சுட்டுப் போதமுங்கெட்டு
அவ் விடயங்களாகிய உயிர்ப்பகையும் கெட்டதே துறவு
(என்று அறிந்து) மாணுக்கனே.

* சிவப்பிரகாசம் - உக.

(குரி.ம.) "அறிக்குறுக்கி யென்றதனால்" பற்
யன்படு நூலடியே யுருவிக்கப்பட்டது.

முறை கூறினையுடையால் எதிராக விடையம் வருவிக்க
பட்டது.

அதற்குத் தெய்யென்றது, அவ் விடையங் கிளைத்தற்
படையம் தருதலில்.

அதன் கூறினையுடையால் விடையம் பிரியாது நின்றவிடத்
யன்படு வருவிக்கப்பட்டது.

விடையம் பிரியாதநிலை அதன்மேல் வினைக்கு கே
லாதலும், பிரிக்கநிலை உளவும் பலதற்குலாதலும், நூலமை
தும் படாதவாய்ப் "பதறி" என்றார்.

பயங்கிழ் சுழல்வதுமும் நிலாதற்வதற்கு தொழில் என்ற

இம்மை மறுமைகளிலும் உயிர்க்குத் துன்பங்களுவது
துவலின், அவ் விடையங்களைப் "பகை" என்றார். (எ

அறிவும் குறையும் இலை என்றறிவித்தல், இனி
சிலேயாகமாவது யாது எனின், மேலும் கூறுகின்றார்.

கடந்து நிலையா நீயே நடைப்புணி யறிதி
விடுந்தினை யெரி புரிந்துறை வெயிலாளி—மடங்கின்
பயம்பி மலைமுழுந்து மாலையிரு வாரா
வயம்பிடருளா வாழ்நிலைபோ லும்.

(தெளி.) கடந்தது செல்லாம் நீயே கடைப்பு அறிய நின்
இடம் நீ சிலம் என்ற இருக்க என்னனில் அடங்கின் மல
யங்கி அழுத்தும்—(அருவிகளே இது இது என்ற அறிந்த
சென்றவெதல்லாம் உன் தற்சிலாதலேயாம். ஆகலின், இ
சிலேயாகம் அன்ற ; (அக் கருவிகளே அறிக்க) சென்ற
தறிய நின்ற இடத்தை நீ சிலேயாகம் என்ற இருக்க
கருதினை எனின், (அக் கருவிகள்) அடங்கின் (உன்னை
ஆனையடலும் மாபங்கித் தன்வயப்படுத்தும் ; (ஆகலின், அ

கருவிகள் ஒழிய நின்ற இடம் சிவயோகம் அன்று. ஆயின் சிவயோகம் யாதினால் உண்டாம் எனின்,)

மாயை அயர்ப்பு இது வாரா அருளால் சிவயோகம் ஆம்—(உன்னல் அறியப்படும் கருவிகள் எல்லாம்) மாயை, (அக்கருவிகள் ஒழிய நின்றவிடத்து) மறப்பாய் நின்றது ஆணவமலம் ஆகலின், (அம் மாயையும்) இவ் வாணவமும் வந்தடாத (சுத்தத்தின்கண் தோன்றும்) திருவருளால் சிவயோகம் உண்டாம் (என்றறிதி.) (அ)

இச் சகல கேவலங்கள் அற்றபோது தற்போதம் அறுதோ? இவற்றின்மேலும் போதம் உளதென்று நீர் கூறியது என்னை? எனின், மேற் கூறுகின்றார்.

அருளரும் பரையு மருக்கன்மதி போன்ற
விரவுபக லற்ற விடத்தே—பரமநிலை
சத்திக் கழற்றியிலே சச்சிதா நந்தமய
சுத்தநிலை நீயற்ற து

(உரை.) அருக்கன் மதிபோன்ற அருளரும் பரையும் பகல் இரவு அற்ற இடத்தே பரமநிலை—அருக்கனும் மதியும்போன்ற அருளரும் பரையும் ஆகிய பகலும் இரவும் அற்றவிடத்தே பரமாநந்தாநுபவநிலை ஆம்;

சத்திக் கழற்றியிலே சச்சிதாநந்தமய சுத்தநிலை நீ அற்றது—(அப் பரமாநந்தாநுபவமாகிய அநுபவ) சத்தி நீக்கத்தில் சச்சிதாநந்த வடிவாயிருந்த சிவமாகிய சுத்த நிலை (இச் சுத்தநிலையே) உன் தற்போதம் (சிறிதுந் தோன்றுது) அற்றநிலை (என்றறிதி.)

(குறிப்பு) அருள் ஆன்மாவிற்குப் புலப்படத்தோற்றலாலும், அப் பரையினுந் தடிப்பாகலானும், அவ்வருளை "அருக்க" னென்றும், அவ்வருளைக் கடந்தது பரையாகலானும், இப் பரை ஆன்மாவிற்குத் தோற்றுமல் தோற்றலாலும் இப் பரையை "மதி" யென்றும், பகலிரவு கண்ணிற்றும் இப் பரையை "மதி" யென்றும், பகலிரவு கண்ணிற்

குஞ் சோதற்றுதல் போல் அருளும் பரையும் ஆன்மாவிற்கு அநுபவமாய்த் தோற்றலான், "பகலிர" வென்றுங் கூறினர்.

பிரகாசம் உஷ்ணம் சோமை என்றும் இம் மூன்று குணத்தையும் உடைய சூரியசோமர்போல் அருள் பரை யுகந்தம் என்றும் இம் மூன்று இலக்கணத்தையும் உடை யது சிவம் ஆகலின், "சச்சிதாகந்தமய மத்துவிலை" என்றார். யுகந்தம் அளவும் ஆன்மாவால் அநுபவம் கூறப்படும்; அவ்வாகந்தாதீதத்தில் அநுபவம் கூறப்படாது; ஆகலின், "சுத்தநிலை யியற்றது" என்றார். (க)

இனிப் பஞ்சமலங்களும் அழிவதெனை? எனின், மேற் கூறுகின்றார்.

தாமருந்துஞ் சோமற்கு நிலைமைத்தினை நிலைக்
தாமருளா லுண்டுடலை நாமமிழ — நாமழிய
வெந்தெழுந்த வேர்ச்சிரித் நாயகமாய் வாழ்மைசெயின்
பஞ்சமலஞ் செகத்துறுபடா.

(உரை.) தாம் அருள்சோமற்கு நிலைமைத் தினைநிலைக்கு மலமன்ற அருளால் உண்டு (பரை தாம் அதிதாம் அருளால் உண்ட பரை தாம் அதிதாம் அரிய — தமக்கு உவமையிருக்க அருள் (பரை) தாம் அருள் சோமற்கு (சிற்சோமற்கு நிலை நிலைக்கு) தம்மைமை நிலைக்கு மலமன்ற (பற்ற விடயங்கள் நிலைக்கு மலமன்ற) உண்ணாக்கெனத்தக்கு. (பற்ற விடயங்கள் யுருத்திப்படினும் அவற்றைத் தற்சோமற்குத்தால் சென்ற பற்றி யுயிற்றில் அருட்தாமல் அருளோர் (பரை) என்னிடம்கொண்டு அவ் வருளும் தா வாங்கி உண்கின்றோம் என்றலும் நாபகம் மற வாமல்) அவ் வருளால் வாங்கி உண்ண, (இங்ஙனம் அவ்வரு ளால் அறிகின்றோம் என்றலும் சோதருக்கு சரஞ்சி) பரையே தாமாகி (தற்சுதந்திர அறிவு கெடப்பெற்ற நிலை ஆகந்தாது பவத்தில்) தாமழியவே,

பஞ்சமலங் கெடுத்து அறிவும் அருட்செருக்கால் அர்ச் சிக்க அடியார்க்கு அடிமை செயின் அப்பா — ஆணவம்

மாயை காமியம் திரோதை மாமாயை என்னும் பஞ்சமலக் கூட்டங்களும் அறும்; (அங்ஙனம் கிட்டைகூடி இப் பஞ்ச மலங்களை நீக்கக் கூடாதாயின்) சிவம் முன்னை விதிப்படி உச்சரிப்பதாய பஞ்சாக்கரத்தால் சிவன் திருவடியை அருச்சனைபண்ணி, (அத் திருவடியை அடைந்த) மெய்யடியார்க்கு அடிமை பூண்டு பணிவிடை செய்யின், (முற் கூறிய அநுபவங்கள் எல்லாம் கைகூடும், பஞ்சமலங்களும் அறும் என்று) மாணைக்கனை (நீ அறிதி.)

(குறிப்பு.) தனதுடல் அருந்தும் உணவு அவ் வுடலுக்கு உணவைக்கொடுத்து நிற்கவே, அதனை அவ் வுடல் சிறுகச் சிறுக உண்டு தான் பருத்தல்போல, தற்சேட்டை அற்றுத் தம்மைச் சிவனுக்கு உணவாகக் கொடுத்து நிற்கவே, அச் சிவம் தம்மைச் சிறுகச்சிறுக உண்டு தான் பூரணமாய் விளங்கும். ஆகவின், "தாமருந்தல்போலத் தமைச் சிவனுக் கூணைக்கி" என்றார்.

விடயங்கள் வந் தடுக்கும்போதும் தற்போதத்தைப் பின்னிட்டு அருட்போதத்தை முன்னிட்டு அவ் வருளால் அவ் விடயங்களை அறிந்து பற்றி, அவற்றை அநுபவிக்கும் போதும் அவ்வருளை முன்னிட்டு நின்று அநுபவித்து, அவற்றல் ஆன்மபசந்தோஷம் பிறக்கும்போதும் இச் சந்தோஷம் அவ்வருளால் உண்டாயதென்று அவ் வருளுக்காக்கி நிற்கவேண்டும்; ஆகவின், "தாமருவாலுண்டு" என்றார்.

சகல கேவலங்களை நீக்கிச் சுத்தாவத்தையில் நின்று தம்மைச் சிவத்திற்கு உணவாக்கி நிற்றலான், முன்னர் இதமாய்த் தோன்றிய விடயபோகமும் அதிதமாய்த்தோன்றும். ஆகலின், அதனை நிகழ்வித்து நின்ற திரோதை சத்தி நீங்கவே, இருவினைப் பயன்கமும், அத் திரோதை சத்தி நீங்கவே, இருவினைப் பயன்களும் சமமாய்த் தோன்றும். இவை சமமாய்த் தோன்றவே, இவ் விருவினைப் பயன்கட் தோய்ச் சிவன் சுத்தமாயையில் நின்று செய்யும் பஞ்ச கிருத்தியங்களும், அச் சுத்த மாயையி நின்று செய்யும் பஞ்ச கிருத்தியங்களும், அச் சுத்த மாயையையும் நீங்கும். அவன் அவள் அது என்னும் முன்னிலைச்

சுட்டொழிந்து, அவ் விருவினைப் பயன்களைத் தருவது அருவென்று நின்று அவ் வருளின் மறைந்து நின்று, அவ் விருவினைப் பயன்களையும் அவ்வருளால் தாமுண்ணுதலால் கன்மமல நீங்கும். இங்ஙனம் நீங்கவே பரமயோகம் உண்டாம். இப் பரமயோகத்தால் இவ் வுடம்பும் தாம் அன்றென்று நீங்க வரும். இவ் வுடம்பு நீங்கவே மாயை நீங்கும், ஆதலாலுபவத்தில் கற்போதங் கெடும். இத் கற்போதங் கெடவே இப் போதத்திற்குத் தான் அல்லாத உடம்பைத் தானென்றும், தனதல்லாத போகத்தைத் தனதென்றும் மாறுபாடாய்க் கருதப்பண்ணி நின்ற ஆணவங் கெடும். ஆகலின், "தாமதியப் பஞ்சமலக்கொத்தறும்" என்றார்.

இங்ஙனங் கூறியவாறு நிட்டைகளால் பஞ்சமலங்களையும் நீக்கக்கூடாதவர் ககாரமாகிய திரோதையையும் மகாரமாகிய மலத்தையும் பின்னிட்டு, சிகாரமாகிய சிவத்தையும் வகாரமாகிய அருளையும் முன்னிட்டு, யகாரமாகிய தான் ககார மகாரமாகிய பாசத்திற்கும், சிகார வகாரமாகிய பதிக்கும் கருநின்று, வகாரமாகிய அருளைக் கூடிச் சிகாரமாகிய சிவாநுபவத்தில் வகாரமாகிய அருளும் கழலாது, யகாரமாகிய கற்போதங் கழல, இங்ஙனம் அவ் வருளே காவாகச் செபியாமற் செபித்து, சிகாரமாகிய சிவத்தில் அதீதப்படுவதுபோந்தாக்கா தானம். இங்ஙனம் பஞ்சாக்கர தானமும் பண்ணி மெய்யடியார்க்குப் பணிவிடை செய்யின் முற்கூறிய நிட்டைகளும் ஐகூடிப் பஞ்சமலங்களும் அறும் ஆகலின், "அஞ்செழுத்தா லர்ச்சித் தடியார்க் கடிமை செயின். பஞ்சமலக் கொத்தறும்" என்றார். இங்ஙனம் பஞ்சாக்கர தானம் பண்ணுதல் சிவனுக் கருச்சனையாகலின், 'அஞ்செழுத்தா லர்ச்சித்து" என்றார். (க0)

தேவரீர் அருளிச்செய்த சுத்தத்தை அடியேன் பெறுவது எந்த காள் என்று இரங்கிய மாணாக்கனை நோக்கி மேல் அருளிச் செய்கின்றார்.

நாலாசிரியர் மாணாக்கனுக்கு உபதேசிக்குங்கால் தம்மைச் சிவமாகக் கூறவேண்டும் ஆகலின், "எமக்குப் பரம்" என்றார். (கக)

கருப்பை நிலத்தைதக் கறண்டுதிரி வார்க்குச்
சருக்கரையே வாயிற் சனித்தாங் — கிருத்திவிடு
மெந்தலைமை யென்பிரா ணீனர்வாக் கென்னவே
தந்தலைமை மாண்ட தலம்.

(உரை.) கருப்ப நிலத்தைக் கறண்டு திரிவார்க்குச் சருக்கரையே வாயில் சனித்தாங்கு இருத்திவிடும்— (சுவையை விரும்பிக் கரும்பறுத் தொழித்த) அக் கருப்ப நிலத்தை தமது பற்கொடு) கறண்டுகொண்டு திரிவோர்க்கு (தெய்வ கதியாய்) சருக்கரை தானேவந்து ஆவாதுவாயில் தோன்றிய முறைபோல, வீட்டின்பத்தை விரும்பித் தற் போதத்தைக் கொண்டு சரியாதிகளைச் செய்வோர் இந் நூலிற் கூறிய முறையே சரியாதிகளை விட்டு நீங்கி, தற் போதத்தைப் பின்னிட்டு அருட்போதத்தை முன்னிட்டுச் சென்றார் எனின், இவ்வருட்போதமே (அவரை அவ்வீட்டின் பதத்தின்கண்) அழுத்திவிடும்; (ஆகலின்,)

ஈனர்வாக்கு என்னவே எம் கீலைமை என்பீரால் தம் கீலைமை யாண்டதலம்— ஓர் காரியம் செய்யுமிடத்து எமது வலியிறற் செய்வோமென்று கூறும்) அதிவீனர் வாக்குப் போல (அவ் வீட்டின்பத்தை) எமது போதவலியாற் சென்று அடைவோம் என்று கருதிச் சொல்வீராலல் (அங்ஙனம் நீர் கருதிச் சொல்வதே) உமது ஞான மேம்பாட்டிற்ற இடம் என்று அறிந்து நீரும் இந் நூல் நெறி முறையே செய்வீர்.)

(தற்பி.) சரியாதிகளை விட்டு இந்நூல்நெறிச் சென்றால் போதகம் ஒழியும், இப்போதகம் ஒழியில் அநந்தந் தானே தோன்றும், ஆகலின், "கருப்ப நிலத்தைதக் கறண்டு திரிவார்க்குச் சருக்கரையே வாயிற் சனித்தாங்கு" என்று உவமை கூறினர்.

உந்தலைமை என்பது தந்தலைமை என்று முன்னிலைத் தன்மை தழீஇ வந்தது.

பன்னூல்களையும் விட்டு இந்நூல் நெறிச்சென்றுய்க்கே இன்பங் கிடைக்கும் என்பதும் ஆம்.

"போதப்புரவி" என்னும் திருவெண்பா முதல் இனை யேழு திருவெண்பாவானும் ஆகத அறிவுநிலையும், தூய நிலையும், சிவயோகநிலையும், சுத்தநிலையும், பஞ்சமலம் அறுக்கும் பஞ்சாக்காநிலையும், முத்திநிலையும், இந்நூல்நெறிச் சென்றுர்க்கே வீட்டின்பங் கிடைக்குமென்னும் முடிபு நிலையும் அறிவித்தவாறு காண்க. (கஉ)

கண்மணியி னுகாய நீழல் கலந்தாற்போ
லுண்மையையு நீ யுண்டென் றெனை
யுணர்த்தித்—துண்ணெனவே
பார்த்திருந்த சித்திரம்போற் பார்த்தானை நாம்பரவித்
தோத்திரஞ்செய் யாப்பிறவாச் சொல்.

இத் திருவெண்பாவின் அருத்தம் இந்நூலினை யன்னுணரும் நெறியினது நல்லறிவாளர்க்குத் தானே விளங்கும் எனக் கொள்க. (கக)

பத்தாம் அதிகாரம் நிலை யியல்பு முற்றும்.

அதிகாரம் க0-க்கு வெண்பா - 253.

ஒழிபிலொடுக்கம் முற்றிற்று.

உரை ஆசிரியர் கூற்று

சமாபுரி யாறுமுகன் ரூனெயென் ஜுள்ளத்
தமாவிருந் திந்நூற் கருத்தம்—திமிரமறக்
காட்டிஞன் பொல்லாக் கடையேனைச் சீர்வீட்ட
ஸட்டிஞன் போருளி ஸல்.

கையிலுணர பாவின்பங் காட்டுவிர லேகசிவ
மெய்யருளாம் பாதமிடு மென்பதனை—தய்ய
இருட்கே வலசகல மெக்ஸைசம் பத்தன்
றிருக்கோலங் கொண்ட சிறப்பு.

அரவுவிடந் தீர்க்கு மமணருடன் மாய்க்குச்
திகதியி லெண்ணிலனைச் சேர்க்கும்—புமியிலே
என்னைப்பெண் ரூக்கிவிடு மேழையே னேற்பிரவி
தன்பத்தை நீக்குவான் சொல்.

அதிகாரங்களின் பெயர் முறை செய்யுட்டொகை

தீராகு மாகமத்திற் செப்புமியற் சித்தாந்த
நீராகு மூப்பொருளி னேர்தெளிவி லேர்த்துய்ந்த
கொத்த பொதவி லுபதேச மேழான்பான்
சத்தினி பாதத்துத் தமரொழிவு காலே
ழருணமையோ கக்கழற்றி யாத்திடுமை யாருங்
கிரிணையக் கழற்றி கினத்துமீ ரெட்டாஞ்

சரியைக் கழற்றியதிற் சாற்றுமீ ரேழாம்
விரத்தி விளக்கத்தின் மேவும் பதின்மூன்
றுறுப்புறு கற்றுறவி னுற்றவையைந் தாகு
மருளவத்தைதத்தன் மைக்கு ளரிய வாறேழாம்
வாதனைமாண் டார்தன்மை வாய்த்தமும்மூன்றாகும்
கோதி னிலையியல்பிற் கூறல் பதிமூன்று
மொருபத்ததிகாரத் தோங்குதிரு வெண்பா
விருநூற்றைறம் பான்மூன் றிவைக ளிசையத்
தழுவியுரைத் திட்டான் றகைமைபுறு வள்ள
லொழிவி லொடுக்கத்தி னுள்.

பொதுவிலுப தேசத்தி லறுபான் மூன்று
புகழ்ச்சத்தி பதியொழிவி லிருபத்தெட்டு
கதியோகங் கருமஞ்ச ரியைக்க ழற்பி
கருதழுப்பான் பதிறை பதிறை லாகும்
திதிவிரத்தி விளக்கந்தூற வருளவத்தைதத் தன்மை
தொகைபதின்மூன் றிருபத்தைந் தாறை ழாகும்
மதிதருவா தனைமாண்டார் தன்மைநிலை யியல்பு
வழங்குமென்பான் பதின்மூன்றாய் வகுக்கும் பாலே.

பொற்புறுகற் போலூர்ப் பொலிந்த சிதம்பாத்தே
விற்பொலியும் வேலர் வியனருளால்—தற்போ
தொழிவிலுறு மானந்தத் தள்ளொடுங்கச் செய்த
ழிவிலொடுக் கத்துளாமுற் றும்.

பாட்டு முதற்குறிப்பு அகராதி

[எண் பக்கங்களைக் குறிக்கும்]

அக்கினிதேவற் 193
அங்கக்காரன் 280
அஞ்சனக்கண் 327
அஞ்சுதொழி 74
அடங்கத்துற 346
அடைப்புள் 316
அட்டமாசித்தி 154
அண்டமூத 126
அதிபக்குவத் 110
அரசர்க்குடை 287
அரியமரிந் 337
அருணனுத 142
அருளாலே 85
அருளும் 371
அரைகோட்டஞ் 129
அவாவணைப் 329
அழிப்பேயவ 208
அறிந்தழுங் 369
அறிந்தவாய் 150
அறிந்தெல்லா 187
அறிந்தவிடத் 233
அறிந்துபற்றி 242
அறியாமை 111
அறியார் 361
அறிவடங்கா 155
அறிவாலே 207
அறிவாயீர் 170
அறிவித்தா 90
அறிவுக்கறிவா 188
அறிவுக்கறிவெ 151
அறிவுபறி 305
அறிவுமறிவா 146
அறுசமயத் 234
அறைந்தபறை 53
ஆகாயத்தே 177
ஆகாயம் 197
ஆசைமுதலா 310
ஆசையினை 263
ஆலிங்கனத்தி 50
ஆனைக்கை 55
ஆனைமதப் 109
இதுவென்ற 89
இடும்பை 270
இருட்கேவல 185
இரும்பை 188
இருளிற்சுட 41
இன்பேயறிவு 221
உடம்புள்ள 227
உடலாலுழை 215
உடலிருக்கெ 228
உடல்பொறி 143
உடற்குயிர் 48
உடற்போகம் 319
உடுக்கைமற 278
உட்புறம்பா 184
உண்டொழித் 290
உதயத்தொழ 264
உதித்தொடுங் 175

உகியாதளாதா	63	காமாதிவிட்	323
உபதேசப்	161	காலமறை	132
உருகுபாம	342	காலமுடன்	339
உரைபொருங்	295	காலனுக்கு	103
உலகத்தை	251	கால்வந்த	303
உனக்குமெய்	238	கிளையக்கிளை	192
உனையுணர்த்	66	கிளையயான்	199
உளமமணி	265	கின்னாளை	115
உளர்க்குருவி	255	கணையுற்ற	205
உளன்றினி	82	குட்டித்தி	33
எங்குபரி	225	கும்பிட்டுங்	283
எட்டுருவணம	65	குரங்கிற்	272
எந்தவூர்நீ	216	குரங்கை	181
எல்லாச்சமய	851	குருட்டுளிப்ப	35
என்னுளிணை	231	குறங்குகுத்தி	164
ஏட்டாதிரு	167	குறும்பாட்டு	302
ஒருகுடைக்கீழ்	355	குன்றழுவி	59
கடல்சிவநீரா	72	கூட்டிற்சா	168
கட்டியகாண்	179	கூரிருளின்	245
கட்டுகெகிழ்	277	கூவிற்கொழி	32
கண்மணி	377	கேடுற்றகழு	311
கயிற்றால	230	கலலுமுங்	364
கருப்பங்கில	376	சக்காதிகக்	98
கருமங்கிரி	284	சத்தியனிர்	44
கருவிகழல	296	சரியாதி	114
கருவியுதி	375	சரியைகிரியை	153
கலாயடுக்க	347	சரியையுடல்	288
கல்லையுரு	137	சன்மார்க்க	105
கல்வியாய்	218	சாக்கிரத்திற்	365
கவிப்பயறை	157	சாக்கிரத்தே	160
கன்னைகொப்	274	சாத்துவிக	293
கன்னிக்கதலி	79	சாயாடுரூட	43
காணுமறிவு	211	சாலோகமா	338

சாதேவபெரு	340	தன்னையறியா	62
சிந்தைதய	101	தன்னையறிவார்	69
திற்றறிவலுய்	240	தன்னையிழப்	149
சுகாதீதம்	201	தாக்கற்ற	45
சுகிக்கில்லை	336	தாமருந்தல்	372
சுட்டுப்போத	176	தானல்லர்	107
சுந்தாளர்	360	தின்னிற்றிமி	259
சும்மாதிரு	204	துக்கஞ்சுகமா	279
சும்மாதே	116	தேடப்படும்	254
சுருதிகுரு	46	தேட்டந்தீரண்	130
தூலயும்	313	தேனுண்டு	40
தெகஞ்சிரிக்க	306	தொடும்போ	359
தெத்தவரைப்	317	தொடைதட்ட	357
தெத்தப்பிற	362	தொதிலிறுதி	203
தெல்வமிளமை	261	நடந்ததெல்லா	370
ஞானக்கிரியை	220	நடந்தட்குளி	214
ஞானமில்லாதவை	349	நடைதளர்ந்து	301
ஞானிக்குலக	324	நாடுதகர்	258
ணடுகுடை	332	நாயலைக	269
தத்துவத்தா	102	நாயேறிவீழ்ந்	104
ததத்துவத்தின்	344	நித்திரைசெய்	276
தத்துவத்தை	191	நினைப்புமறப்பது	97
தத்துவமூட்	158	நினைப்புமறப்பற்று	241
தத்துவம்	366	நீர்க்குப்பதமு	172
தத்துவாதீத	94	நீர்க்கும்வழி	195
தந்தாகலை	47	நெய்யினிழல்	159
தம்மாலறி	80	நெய்யுண்ட	156
தம்மையருளா	322	நெருப்பில்	198
தருவணமென்	320	பஞ்சமல	120
தணுவாதி	267	படிஞனத்தி	216
தன்னறிவு	31	பதியிறக்கக்	134
தன்மையுமுன்	86	பரிசித்தஞ்	131
தன்னிழற்பை	30		

பழக்கங்கொடி. 178
பழுனைதலையப் 77
பற்றுதலோபாது 170
பற்றியது 83
பாசங்கழன்ற 237
பிறவாதலோ 286
புனிதேச்பழ 140
பூரிழுடப்பன 108
பூரணவாகத்த 70
பொன்னணைவி 60
பெருகோனை 334
போலைப்பெ 298
போரின்பழுன் 222
பொய்போகப் 39
பொய்போல 148
பொய்பொல 251
பொய்யென்ற 251
பொன்மலை 281
போதுப்புரவி 368
போதுப்பனை 92
போதுவெளழி 54
மகவான்றன்ன 112
மனைப்பாம் 182
மன்னுதி 73
மன்னுனாமலை 173
மயலற்றார் 122
மாப்பாலை 138
மருன்னுலகர் 314
மருந்துபினி 209
மலட்டிமக 300
மல்மாலை 91
மலேயதிப் 87
மறப்புறினை 189
மறவாதகம்மை 81
மனவாக்குக் 165
மனையிழக்கி 352
மாயாவிகார 76
மாயாலோகத் 353
மலையரை 309
மாற்றப்பல 136
முலைமுதிர 118
முலையுன்னணி 57
முற்கணைகா 326
மெய்யாகத் 249
மேலைச்சகம் 127
மொலிகலை 341
வணங்காலை 51
வருனைவெச்சட 212
வாசகத்தால் 291
வாரிக்குச்சர 236
வாடன்மனம் 343
வாதிவடத்தினை 121
வாயுரணங் 166
வாலெழுகமாய் 163
விடாதவெற்றை 67
விடையழுதித் 224
விபரீதபடுதனை 307
வெண்ணெயுரை 139
வெற்றிவெறு 95
சேட்டியுற் 217
சேவண்டா 252
சேவதாகமப் 27
சேவதாங்கம் 93
சேவர்க்குங்கண் 128
சேவர்க்கும்விதி 297